COPIOUS ANNOTATIONS

ON THE

Matriculation Tamil Text for 1900

BY

V. M. SATAKOPARAMANUJACHARIAR,
Head Tamil Pandit, Ch. of Scot. Miss. College, Madras,

AND

S. KRISHNAMACHARIAR,
Head Tamil Pandit, Wesleyan Mission College, Madras;
Pupils of P. M. Srinivasachariar, Tamil Pandit, Presy. College, Madras,
and annotators of the F. A. and B. A. Tamil Texts for several years:

WITH

A complete English Translation

BY

T. E. VENKATACHARIAR,
Assistant Master, Hindu High School, Triplicane.

Price—Annas 8. Postage extra.

Madras:

PRINTED AT THE MEMORIAL PRESS.

1900.

ஸ்ரீ

முகவுரை.

அருந்தமிழறிந்த அன்பர்களே! மகாகனம் பொருந்திய சென்னை யூனிவர்
டியாரால் பி. ஏ, யப். ஏ பரீக்ஷைகளுக்குப் பாடமாக ஏற்படுத்தப்பட்ட
மிழ்நூல்களுக்குச் சென்ற பன்னிரண்டுவருஷமாக உரையெழுதிப் பதிப்பி
துப் பிரசுரஞ்செய்துவந்த யாம், சென்றவருஷங்களிற்போலவே இவ்வருஷ
திலும் அவற்றோடு மெட்ரிக்யுலேஷன் தமிழ்ப்பாடபுத்தகத்துக்கும் மாண
க்கர்களுக்குத் தெளிவாகப் பொருள்விளங்கும்படி மிகஎளியநடையில் ஓர்
உரைசெய்து இங்கிலிஷ்மொழிபெயர்ப்புடன் அச்சிட்டு வெளியிடலானோம்.

பெரியோரிடத்துக் கற்றுங் கேட்டும் உள்ளவற்றில் மறப்பெனும்பகை
வன்வாரிக்கொண்டதொழிய அவன்கையில் அகப்படாதபடி நெஞ்செனுந்
துணைவன் நிறுத்திவைத்தவற்றைக்கொண்டு, ஆங்காங்கு அவசியமான பதப்
பிரயோசனங்களையும் இன்றியமையாத இலக்கணக்குறிப்புக்களையும் முக்
கியமான புராணகதைகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருளும் கருத்தும்
விசேஷார்த்தங்களும் சொற்சுவை பொருட்சுவை முதலியனவும் அணியிலக்
கணமும் அங்கங்கே இனிதுவிளங்குமாறு, வைஷ்ணவ சைவ சம்பிரதாயங்
களுக்குப் பொருந்த, முதனூல்களோடு பெரும்பாலும் முரண்படாதபடி,
தெரிந்தவரையில் ஒருவாறு இவ்வுரை எழுதப்பட்டது.

பெருந்தேவனார்பாரதத்துக்கு, மனம்போனபடியன்றி, அவ்வாசிரியர்
பாடல்களின் இடையிடையே அமைத்துள்ள வசனத்தைப் பெரும்பாலுந்
தழுவியே பொருத்தமாகப் பொருள்எழுதப்பட்டது; அன்றியும், அவ்வசன
மும் இவ்வுரையில் ஆங்காங்குச் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது.

பலநூல்களினின்று தேர்ந்தெடுத்த பாடல்களையுடைய பன்னூற்றிரட்
டின் உரைத்தொடக்கத்தில், அத்திரட்டில் ஆளப்பட்டுள்ள நூல்களின் இயல்
பையும் அந்நூலாசிரியர்களைப்பற்றிய குறிப்புக்களையும் காட்டுகிற விவரண
மொன்று சேர்த்ததோடு, அந்தந்த நூலில் அந்தந்தப்பாடல் உள்ள இடத்தை
யும் கதாசந்தர்ப்பத்தையும் ஆங்காங்குக் காட்டியுமிருக்கிறோம்.

இவ்வுரை வெகுவிரைவாக எழுதப்பட்டதனாலும், சிற்றறிவுடைய சிறி
மாதலாலும், மனிதரியல்பிற்குத் தவறுகள்நேர்வது புதுமையன் றாதலா
, இதில் சிலபிழை இருக்கவுங்கூடும்; அவற்றைப் பெரியோர் தமது இய
கநற்குணத்தாற் பொறுத்தருள்வரென நம்புகிறோம்.

பரீக்ஷைக்குப் படிக்கும் மாணாக்கர்களுக்குப் போதுமான அளவு எம்
ால் இயன்றவரையிற் செய்த இவ்வுரையில் உள்ள குற்றங்குறைகளையாயி
ும், எமக்குப்புலப்படாத அரியபெரியவேறுபலவிஷயங்களையாயினும் எடுத்து
வராவது எமக்குத் தெரிவிப்பாரானால், அவரைப் பேருதவிசெய்தவராக
குமதித்து மகிழ்வோடு அவர்பக்கல் நன்றிபாராட்டுவதுடன், அவ்விஷயங்
ா அவர்பெயருடனே பிரசுரஞ்செய்து மாணாக்கர்களுக்குக் கொடுத்துப்
ன்படும்படிசெய்யச் சித்தராயுமிருக்கிறோம்.

எமதுநண்பரும், செங்கற்பட்டு நேடிவ்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரு
கிய பு-க-ஸ்ரீநிவாசாசாரியர் இப்புத்தகம் விரைவில் வெளிவரும்பொரு
மிக்கஊக்கத்தோடு உதவிபுரிந்ததை ஒருபொழுதும் மறவோம்.

எமது புத்தகங்களைத் தம்தம்கலாசாலைகளில் உபயோகித்தும் உபயோ
ப்பதாக உறுதிமொழியுரைத்தும் எமக்கு ஊக்கத்தை விளைத்துவருகிற
ான்கள்திறத்தில் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

விகாரிஹு தைமீ
நவல்லிக்கேணி, சென்னை. }

வை-மு-ச.
சே-கி.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

பெருந்தேவனார்பாரதம், நூலாசிரியர்வரலாறு முதலியன.

,, உரை.

வெண்பாவிலக்கணம்.

பன்னூற்றிரட்டு, நூலாசிரியர்வரலாறு முதலியன.

,, உரை.

இராமாயணம், அரும்பதவுரை.

சூளாமணி, ,,

அநுபந்தம்.

யாப்பிலக்கணச்சுருக்கம்.

அணியிலக்கணச்சுருக்கம்.

இராமாயணம், இங்கிலிஷ்மொழிபெயர்ப்பு.

சூளாமணி, ,,

பெருந்தேவனார்பாரதம், ,,

பன்னூற்றிரட்டு, ,,

19 பெ Feb. 1900. Kumbakona

ஸ்ரீ

கடவுள் துணை. 3724

பெருந்தேவனார் பாரதம்.

இது-பெருந்தேவனாரது பாரத மென விரியும். (கம்பராமாயணம், கபில ரகவல் என்பவற்றிற்போல) இதில் ஆறும்வேற்றுமைத்தொகை - செய்யுட் கிழமைப்பொருளது. [செய்யுட்கிழமை - பொருட்பிறிதின்கிழமையிலாவது, தொழிற்பண்புத்தற்கிழமையிலாவது அடங்கும்.] பெருந்தேவனாராற் செய்யப்பட்ட பாரத மென்பது பொருள். நிலைமொழி உயர்திணைப்பெய ராதலால், அதன்முன் வருமொழிமுதல்வலி இயல்பாயிற்று; [நன் - உயிர் - கூ.]

பெருந்தேவனா ரென்ற பெயரில், ஆர் விகுதி - சிறப்புப்பொருளது.

பாரதம் என்னுஞ் சொல்லுக்கு - பரதனது வம்சத்தவரைப் பற்றிய நூ லென்று பொருள். இங்குக்குறித்த பரத னென்பவன்- சந்திரவம்சத்தில் துஷ்யந்தமகாராசனுக்குச் சகுந்தலையினிடந்தோன்றிப் பிரசித்திபெற்ற ஓரரசன்; [இராமன்தம்பியான பரதனும், பரதகண்டமென்றற்குக் காரணனான சடபரதனும், பரதநாட்டியமென்றற்குக் காரணனான பரதனு மல்லன்.] பரதவம்சத்துத்தோன்றினவர், பாரதர்; அவராவார் - பாண்டவரும், துரியோதனாதியரும்: அவர்களது சரித்திரத்தை உணர்த்தும் நூல், பாரதமெனப்பட்டது; இது - வடமொழித் தத்திதாந்தநாமம்: [ஒரு வடசொல் சிறிதுமாறித் தன்னோடு இயைபுடைய பொருளையாவது, தன்பொருளையாவது உணர்த்துவது, தத்திதாந்தநாமம்.] இனி, வருணாசிரமதருமம் இராசதருமம் மோக்ஷதருமம் நீதி முதலிய சிறந்த உறுதிப்பொருள்களையெல்லாம் அறிவிப்பதனால் முனிவர்கள் சீர்தூக்கிப்பார்க்குமிடத்து மற்றையெல்லாநூல்களினும் மிகுந்த பாரம் [அதாவது மகிமை] உடைமைபற்றி, இந்நூலுக்குப் பாரத மென்னும் பெயர் இடப்பட்ட தென்றுங் கொள்ளலாம்; முன்னொரு காலத்தில் தேவர்யாவரும் நான்குவேதங்களையும் ஒருதட்டிலும் பாரதத்தை மற்றொருதட்டிலு மாகத் துலாக்கோலில் வைத்து நிறுக்க, வேதமனைத்தையும் வைத்த பக்கத்தினும் இந்நூலை வைத்த பக்கம் வலிதாயிருந்த தென வடநூற்பாரதத்தின் அநுக்ரமணிகையத்தியாயங் கூறும்.* [இனி, இந்தச் சொல்லை, பார் அதம் என இரண்டுசொல்லாகப் பிரித்து, அதம் என்பதை ஹதம் என்னும் வடமொழிப்பெயரின் திரிபாகக் கொண்டு, பூமியிலுள்ள பல துஷ்ட அசுரர்களும் கெட்ட அரசர்களும் முதலியோரது நாசத்தைக் கூறுவ தொரு நூ லென்று சிலர் பொருள் கூறுவர்; அது பொருந்தாது: ஏனெனில்;—**பாரதம்** என்னும் வடமொழி ஒருமொழி யாதலாலும், அதற்கு வடமொழிக்கு ஏற்பப் பொருள்கூறுவது தகுதியேயன்றித் தமிழ்மொழிக்கு ஏற்பப் பொருள்கூறுதல் தகாமையாலு மெனக் காண்க.]

யாவரும் மேற்கொண்டு பூசிக்கத்தக்க மேம்பாட்டை யுடைத்தாயிருத்தல்பற்றி, இந்த இதிகாசம் 'மகா' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டு மகாபாரதம் எனவும் வழங்கும். அம்மேம்பாடாவது - இருக்குமுதலிய நான்குவேதங்களோடு ஒப்ப ஐந்தாம்வேதமென்று சிறப்பித்துக்கூறப்படும் மகிமை; "பாரதஃ பஞ்சமோவேதஃ", "நீடாழியுலகத்து மறைநாலொடைந் தென்று நிலைநிற்கவே, வாடாததவ்வாய்மைமுனிராசன் மாபாரதஞ்சொன்ன

---

* 'முனிவர் ஏனையஇதிகாசபுராணங்களுக்கும் பாரதத்திற்கு முள்ள வேற்றுமை யறியக் கருதி அவற்றிற்கு ஒருமணியும் பாரதத்திற்கு ஒருமணியும் தராசில்வைத்துச் சீர்தூக்கி நோக்குங்கால் பாரதமணித்தட்டு பாரமுடைத்தாய்க் கீழ்இறங்கினமையின்' எனச் சிலர் உரைத்தது, வியாசபாரதத்தோடு முரணும்.

நாள்" என்பன காண்க. அன்றியும், மிகச்சிறந்த பகவத்கீதையைத் தன்னுள் (பீஷ்மபர்வத்தில்) அடக்கிக்கொண்டிருப்பது - இந்நூலுக்கு எல்லா நூல்களினுஞ் சிறந்த மேம்பாடாம்.

இந்நூலின் பயன்:—தீவினையை அகற்றி அறம் பொருள் இன்பம் வீடு என்னும் இம்மைமறுமைப்பேறுகளையெல்லாம் அளித்தல்.

இந்நூலை முதலில் வடமொழியிற் செய்தவர், ஸ்ரீவேதவியாசமகாமுனிவர்; இவர் - இக்கதாநாயகருக்குப் பாட்டனாராவர். இவரால்வைக்கப்பட்ட 'பாரதம்' என்கிற முதநூலின்பெயரே "முதனூல் கருத்தன் அளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே" என்னும் விதிப்படி வழிநூலாகிய இத்தமிழ்நூலுக்கும் பெயராயிற்று.

பாரதகதை நடந்தது - துவாபரயுகத்தி னிறுதியிலும், வியாசபாரதம் எழுதப்பட்டது- கலியுகத்தின் தொடக்கத்திலும் என அறிக; [இப்பொழுது நடக்கிற கலிவருஷம் - ரு௦௦க.]

பாரதத்துக்கு 'ஜயம்' என்றும் ஒருபெயர் உண்டு.

உபதேசபரம்பரையில்வந்த பழையசரித்திரமொன்றைப் பிரதானமாக எடுத்துப் பலகிளைக்கதைகளோடுபுணர்த்து விரித்துக்கூறும் நூல் - இதிகாசமென்றும் [இதிகாசம் - பழைய வரலாறு], உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள் அரசர்கள் மரபு, அவர்கள்சரித்திரங்கள், மநுவந்தரம் என்னும் ஐந்துவிஷயங்களை விரவிக்கூறும் நூல் - புராணமென்றும் [புராணம்- ஐந்துஇலக்கணங்களுடன் பழையவரலாறுகளை யுணர்த்தும் நூல்] வேறுபாடு உணரத்தக்கது. இதிகாசம் - ராமாயணமும், பாரதமும். புராணம் - பிராம்மம் முதலாகப் பதினெட்டுவகைப்படும்.[இந்த இதிகாச புராணங்கள்- வேதத்தின் கருத்து இன்ன தென்று நியாயப்பிரமாணங்களால் தேற்றி விளக்குவன. இவற்றுள், புராணங்களினும் இதிகாசம் பிரபலமான பிரமாண மென்றும், அதுபற்றியே 'இதிகாசபுராணம்' என இதனை முன்னர் வைத்துக்கூறுவ தென்றும் அறிக.]

நூலாசிரியர் வரலாறு.

இந்தப்பாரதஞ் செய்த **பெருந்தேவனாரென்பவர், தொண்டைநாட்டிற் பிறந்து பாண்டியநாட்டில் மதுரையில் வாழ்ந்தவர்.** இவர் பிறந்த நாடு தொண்டைநா டென்பது,

"சீருறும்பாடல்பன்னீராயிரமுஞ்செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ்சங்கப்பலகையிலேற்றியவித்தகனார்
பாரதம்பாடும்பெருந்தேவர்வாழும்பழம்பதிகாண்
மாருதம்பூவின்மணம்வீசிடுந்தொண்டைமண்டலமே"

எனத் தொண்டைமண்டலசதகத்தில் படிக்காசுப்புலவர் கூறியதனால் தெரிகிறது. இவர்வாழ்ந்தஇடம் மதுரை யென்பது, மதுரையில் சங்கப்பலகையில் இறையனாரோடு ஒப்ப வீற்றிருந்து தமிழாராய்ந்த மகிமைபொருந்திய நக்கீரர் முதலிய நல்லிசைப்புலவர்களுள் இவரும் ஒருவராதலால் விளங்கும். தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்றுவகைச் சங்கங்களுள், கடைச்சங்கத்துப்புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர் இவர். இதனையும், இவருடன் இருந்த கபிலர் பரணர் நக்கீரர் கல்லாடர் சீத்தலைச்சாத்தனார் முதலிய புலவர்களின் பெயர்வரிசையையும் திருவள்ளுவமாலையிற் காணலாம்.

இவர்காலம் - கடைச்சங்கத்தார்காலம்; அது இப்பொழுதைக்கு இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் என்று பலரும் கூறுவர்; ஆயிரத்திருநூறு வருஷத்திற் குறையாது. இவர் தாம்பாடிய பாரதத்தின் முதலிற் கூறிய "வண்மையாற் கல்வியால் மாபலத்தா லாள்வினையா, லுண்மையாற் பாராளுரிமையால் - திண்மையால், தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு, யார்வேந்த ரேற்பா ரெதிர்" என்ற பாடலினாலும், அதனையடுத்து இவர்தாமே கூறியுள்ள 'பல்லவர்கோமான் பண்டிதராலயனைப் பரவினேம்'என்ற கட்டுரையாலும், இவரைப் பல்லவராயனொருவன் ஆதரித்தனன் என்பது அறியப்படும்; இவ்வரசன், தொண்டைநாட்டைச் சேர்ந்தவன்.

இவர், பாரதம்தவிர வேறு பெரியநூல் எதுவும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. கடைச்சங்கப்புலவர் இயற்றிய எட்டுத்தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்றவற்றில் முதற்செய்யுளாகிய கடவுள்வாழ்த்து இவராற் பாடப்பட்டன. திருவள்ளுவமாலையில் "எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்,செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்—முப்பாற்குப், பாரதஞ் சீராமகதை மனுப் பண்டைமறை, நேர்வன மற் றில்லை நிகர்" என்ற பாடலும் இவர்பாடியதே. [திருக்குறளைச் சிறப்பிக்கவந்த இப்பாட்டின் மூன்றாமடியில் இராமாயணம், மநுதர்மசாஸ்திரம், வேதம் என்பவற்றின் முன் பாரதத்தை நிறுத்தியிருத்தலால், இவ்வாசிரியர் பாரதத்தினிடத்தில் மிக்கஆதரமுடையவ ரென்பது தெளிவாம்.]

மதம்:—இவர் தாம்பாடியபாரதத்தின்முதலினும்,அந்நூலின் ஒவ்வொரு பிரிவின் ஆதியினும் திருமால்விஷயமாகவே கடவுள்வாழ்த்துக் கூறியிருப்பதனால் வைஷ்ணவ ரெனத் தோன்றுகின்ற தாயினும், புறநானூறு அகநானூறு முதலியவற்றின் முதலில் இவர்பாடியகடவுள்வாழ்த்துச்செய்யுள் சிவபிரான்விஷயமாக இருத்தலால், இவர் அரனையும்அரியையும் ஒப்பநினைத்தற்கேற்ற அத்துவைதசமயத்தவ ரெனக் கூறிவிடுவதே பொருத்தம்.இவர்பாரதத்தின்முதலில் "ஓத வினையகலு மோங்கு புகழ்பெருகுங், காதற் பொருளனைத்துங் கைகூடும்—சீதப், பனிக்கோட்டு மால்வரைமேற் பாரதப்போர் தீட்டுந், தனிக்கோட்டு வாரணத்தின் றாள்" என்று சிவகுமாரராகிய விநாயகரைத் தோத்திரஞ்செய்ததுமாத்திரத்தைக்கொண்டு, இவரது மதம் சைவமென்றே துணியக்கூடவில்லை; ஏனெனில்:—வேதவியாசர் மகாபாரதத்தை இயற்றிவருகிறபொழுது, விநாயகர் அந்நூலை மகாமேருமலையிலே எழுத்தாணிகொண்டு எழுதிவந்ததும் இடையிலே அவ்வெழுதுகருவி ஒடிந்துபோனவிடத்து யானைமுகக்கடவுளாகிய தமது தந்தங்களில் ஒன்றைப் பறித்து அதனையே கருவியாகக்கொண்டு எழுதிமுடித்தருளியது மாகிய இந்த முக்கியமான காரணத்தைக்கொண்டு நோக்குமிடத்து, விநாயகர் ஏற்புடைக்கடவுளாக இந்நூலின் முதலில் வைத்தற்கு ஏற்ற இயைபுடையவராதலாலும்,வைஷ்ணவராகிய வில்லிபுத்தூராரும் தமது பாரதத்தின் தொடக்கத்தில் விநாயகர் துதி கூறுதலாலும், தம்மைவணங்கினவர்கள் தொடங்குந் தொழில்களுக்கு வருகிற விக்கினங்களைப் போக்குதல்பற்றியும் தம்மைவணங்காது அகங்கரிக்கிறவர்கள் ஆரம்பிக்கிற செய்கைகளுக்குப் பலஇடையூறுகளை உண்டாக்குதல்பற்றியும் விக்கிநேசுவரரென்று திருநாமம் பெற்றுள்ள ஸ்ரீவிநாயகமூர்த்தியைச் சைவர்கள் வழிபடுகடவுளாகக் கொள்வதே யன்றி, வைஷ்ணவர்களும் விஷ்வக்ஸேநர் என்கிற சேனைமுதலியாரது அம்ச மென்று கொண்டாடுவது சிறுபான்மை மரபாதலாலும் எனக் காண்க.

தமிழிற் பெருந்தேவனாரென்று பெயர்கொண்ட புலவர் மூவர் உளர்; அவர்களில் மற்றையிரண்டுபேரினும் வேறுபாடு விளங்கும்பொருட்டு, இவர் **'பாரதம்பாடிய பெருந்தேவனார்'** என்று பெயர்கூறப்படுவர். மற்றையொருவ

ருள், கவிசாகரப்பெருந்தேவனார் என்பவர், கடைச்சங்கத்தில் இவருடன் இருந்தவர்; மற்றொருவர், வீரசோழியத்துக்கு உரையெழுதிய பெருந்தேவனார்: இவர், பிற்காலத்தவர்.

பெருந்தேவனாரது சாதிமுதலியவரலாற்றுவிவரம் ஒன்றுந் தெரியவில்லை.

இவர்பாடியபாரதம் - வசனமும் பாடலு மாக விரவிவருகிற **சம்பு** என்கிற நடையிலே யுள்ளது. தொல்காப்பியத்துச் செய்யுளியலில் "தொன்மை தானே, யுரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என்ற சூத்திரத்தின் உரையில், 'தொன்மையென்பது - உரைவிராய்ப் பழமையவாகிய கதைபொருளாகச் செய்யப்படுவது; அவை - பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர்யாத்திரையும் போல்வன' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்ததும் காண்க. இதுபற்றி, இந்நூல் '**உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்**' என்றுங் கூறப்படும். இதனால், இந்நூலின் பாடல்களின் இடையே காணப்படுகிற வசனங்கள் இவர்செய்தன வென்றே நிச்சயிக்கத்தக்கன. *

இந்நூலின் இடையிடையே சிலசில அகவல்களும், ஓரோவிடத்து அருமையாக விருத்தங்களும் காணப்படுகின்றன வாயினும், பெரும்பாலும் வெண்பாவினாலே அமைந்ததுபற்றி, இந்நூலுக்குப் **பாரதவெண்பா** என்று பெயர் வழங்கும்.

இந்நூலினின்று பல செய்யுள்களைத் தொல்காப்பியவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் மேற்கோளாக எடுத்துக் காட்டியிருத்தலாலும், இந்நூலாசிரியரது 'பாரதம்பாடிய' என்ற அடைமொழியாலும், இந்நூலின்சிறப்பு நன்குவிளங்கும்.

இந்நூல் பன்னீராயிரம் பாடல்களை யுடைய தென்று தொண்டைமண்டலசதகத்திற் குறித்திருப்பினும், இந்நூல் இப்பொழுது முழுவதுங் கிடைப்பதில்லை. உத்தியோகபருவந் தொடங்கித் துரோணபருவம் வரையிலும் எண்ணூறுபாடல்களே கிடைக்கின்றன.

இந்நூலின் சொல்லையும் பொருளையும் ஆங்காங்கு வெகுவாகத்தழுவி நாலாயிரத்துமுந்நூற்றுச்சில்லரைபாடல்களால் பிற்காலத்தில் பாரதத்தை **வில்லிபுத்தூரார்** என்பவர் பாடினர்; இவர், இப்பொழுதைக்கு ஐந்நூறுவருஷத்துக்கு முன் இருந்தவர். வில்லிபுத்தூரார் தமதுபாரதத்திற் பாடியது, முதற்பத்துப்பருவமே; மற்றையெட்டும் அவராற் பாடப்படவில்லை. அவ் வில்லிபுத்தூரார்பாரதத்தில் சுருக்கமாகக் கதையைத்தொகுத்துக்கூறும் முந்நூறுநானூறு பாடல்கள் தவிர மற்றை நாலாயிரஞ்செய்யுட்களை எடுத்துக்கொண்டு,பின்பு **நல்லாப்பிள்ளை**யென்பவர் புதிதாகத் தாம் பதினோராயிரம் பாடல்பாடி இடையிடையிற் கோத்தும் இறுதியிற்சேர்த்தும் பாரதம்பதினெட்டுப்பருவங்களையும் பூர்த்திசெய்தார்; அது - 'நல்லாப்பிள்ளைபாரதம்' எனவழங்கும்: அவர்,இப்பொழுதைக்கு நூறுவருஷங்களின் முன் இருந்தவர். அந்தஇரண்டுநூல்களும், விருத்தப்பாடல்களாலே அமைந்தன. இவ்வாறு பின்பு தமிழில் வேறுபாரதம் ஏற்பட்டதனால், வேறுபாடு விளங்க, இந்நூலை, பெருந்தேவனார்பாரத மென்றாவது, பாரதவெண்பா வென்றாவது முன்னாகப் பின்னாக அடைமொழிகொடுத்துக் கூறவேண்டுவது, அவசியமாயிற்று. இதுவரையிற் கூறியதனால், சம்ஸ்கிருதத்தில் வியாசபாரதம்போல, தமிழில் பெருந்தேவனார்பாரதமே ஆதிபாரத மென அறிக.

---

* இவ்வசனங்கள் கதைத்தொடர்ச்சிக்குப் பலவிடங்களில் இன்றியமையாமலிருத்தலாலும்,இவ்வாசிரியரது வசனநடையின் தன்மையைத் தெரிவித்தலாலும், இவற்றை யாம் எமது உரையிற் காட்டியிருக்கிறோம்.

பெருங்காப்பியத்தின் இலக்கணம் பலவும் இந்நூலில் அமைந்திருப்பதை ஆங்காங்குக் காணலாம். பெருங்காப்பியமாவது - மங்களச்செய்யுளை முதலிற் பெற்று, அறம் பொருள் இன்பம் வீடு தருந் தன்மையதாய், சிறந்த வொருதலைவன்மேலதாய், நாடு நகரம் மலை கடல் காலம் சந்திரசூரியர்உதய அத்தமனம் விவாகம் முடிகவித்தல் பொழில்விளையாட்டு நீர்விளையாட்டு மதுபானம் மக்கட்பேறு கலவியிற்களித்தல் புலவியிற்புலத்தல் மந்திரம் தூது போர்ச்செலவு போரிடல் வெற்றி முதலிய பலவகைவருணனைகளையுடையதாய், சருக்கம் முதலிய பாகுபாடு பொருந்தி, வீரம்முதலிய சுவைகளும் அவற்றை விளக்குங் கருத்துக்களும் விளங்க இனிய ஒருதிறப்பாட்டாலேனும் பலதிறப்பாட்டாலேனும் கட்டுரையாலேனும் கற்றோரால் இயற்றப்பட்டுநிற்பது. இவ்விலக்கணத்திற் குறைந்தது, சிறுகாப்பியம் அல்லது காப்பியம் எனப்படும்.

பாரதம் - அந்தந்தப்பாகத்தின் விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களால் ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், பீஷ்மபருவம், துரோணபருவம், கர்ணபருவம், சல்லியபருவம், சௌப்திகபருவம், ஸ்த்ரீபருவம், சாந்திபருவம், அநுசாசநபருவம், அசுவமேதபருவம், ஆச்ரமவாசபருவம், மௌசலபருவம், மகாபிரஸ்தாநபருவம், ஸ்வர்க்காரோகணபருவம் எனப் பெயர்பெற்ற பதினெட்டுப்பருவங்கள் அடங்கியுள்ளது; அவற்றுள்,

---

ஐந்தாவது

உத்தியோகபருவம்.

உத்தியோகத்தினது விஷயமான பருவமென்று பொருள். இவ்வடமொழித்தொடர்மொழி - ஆறும்வேற்றுமைத்தொகை; விஷயமாகவுடைமை, வேற்றுமைப்பொருளாகிய சம்பந்தம். உத்யோகம் - முயற்சி; இங்கே, பாண்டவர்கள் இராச்சியத்தைப் பெறுதற்குச் செய்த பிரயத்தனம். பர்வம் - கணு: கரும்பு மூங்கில் முதலியவற்றிற்கு ஏகதேசமாகிய [ஏகதேசம் - ஒருபகுதி] கணுப்போல நூலுக்கு ஏகதேசமாகிய உறுப்பைப் பருவமென்பது - உவமவாகுபெயர். ஆகவே, பாண்டவர்கள் வனவாச அஜ்ஞாதவாசங் கழித்தபின் துரியோதனனிடத்தினின்றுந் தமது தாயபாகத்தை மீண்டும் பெறும்பொருட்டுச் செய்த முயற்சியின் விஷயமான பாகமென்பது கருத்து. இனி, இத்தொடர்மொழியை இரண்டனுருபும் பொருளும் உடன் தொக்க தொகையாகக் கொண்டு, பாண்டவர்களது முயற்சியைக் கூறும் நூற்கூறுபாடென்று பொருள்கொள்ளுதலுமொன்று. இது வடமொழிப் புணர்ச்சி யாதலால், வருமொழிமுதல்வலி இயல்பாயிற்று ; [நன் - மெய் - ௬௬.] "இணைந்தியல்காலை" [நன் - பத - ௨௨] என்ற சூத்திரவிதியால், உத்யோகம் - உத்தியோகம் என யகரத்துக்கு முன் இகரமும், பர்வம்- பருவம் என ரகரத்துக்குப்பின் உகரமும் வந்தன.

கதைத்தொடர்ச்சி.

[பாரதகதை பிரசித்தமான தாதலால், இந்தப்பாகத்துக்கு முன்கதைத் தொடர்ச்சி சுருக்கமாகவே எழுதப்படுகிறது.]

இப்பரதகண்டத்தில் அஸ்தினபுரியில் சந்திரகுலத்திலேயுதித்துச் செங்கோல்செலுத்திய சந்தனுவென்னும் அரசனுக்கு முதல்மனைவியாகிய கங்கையின் குமாரர் பீஷ்மரென்பவரும், இரண்டாம்மனைவியாகிய யோஜனகந்தியின் மகன் விசித்திரவீரியனென்பவனும் இருந்தார்கள். [முன்பு சத்தியவதியென்னும்பெயரோடு இருந்து பராசரமுனிவரோடு சேர்ந்து வியாசரைப் பெற்றுப் பின்பு அப்பராசரரருளாற் கன்னிப்பருவமடைந்த இந்தக்கந்தவதியினிடம் சந்தனுவுக்குப்பிறந்த முதற்குமாரனான சித்திராங்கதன், அப்பேருள்ள ஒரு கந்தருவனாற் கொல்லப்பட்டு இளமையிலேயே இறந்தான்.] முன்னைய விரதத்தின்படி வீடுமர் விசித்திரவீரியனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தார். விசித்திரவீரியனது பத்தினியாகிய அம்பிகையினிடத்துத் திருதராஷ்டிரனும், அம்பாலிகையினிடத்துப் பாண்டுவும் சந்ததிவிருத்தியின் பொருட்டுத்தாய்சொற்கடவாத வியாசபகவானது திருவருளாற் பிறந்தனர். அம்பிகையாலேவியனுப்பப்பட்ட சூத்திரப்பெண்ணினிடத்து வியாசரருளால் அவதரித்த விதுரனென்னுங் குமாரனும் இருந்தான். திருதராட்டிரன் பிறவிக்குருடனாதலால், விதுரனை மந்திரியாகவைத்துக்கொண்டு பாண்டு திருதராட்டிரனுக்கு முடிசூட்டித் தானே இராசாங்ககாரியம் பார்த்துவந்தான். பாண்டுவுக்கு மனைவியுடன் சேரக்கூடாதென்று சாபம் நேரிட்டதனால், அவனனுமதிப்படி, அவனது மூத்த மனைவியாகிய குந்தி, தனக்குஇளமையில் துருவாசமுனிவருபதேசித்திருந்தஐந்துமந்திரங்களில் ஒவ்வொன்றன்மகிமையால்வந்த யமதருமராசனால் யுதிஷ்டிரனையும், வாயுதேவனால் பீமசேனனையும், தேவேந்திரனால் அருச்சுனனையும் பெற்றாள். [முன்பு கன்னிப்பருவத்துச் சூரியனாற் குந்தியிடம் பிறந்தவன், கர்ணன்.] அவளுடைய சக்களத்தியான மாத்திரி, குந்தியால் அம்மந்திரமொன்றை உபதேசிக்கப்பெற்று அசுவினீதேவர்களால் நகுலன் சகதேவன் என்னும் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றாள். திருதராட்டிரனுக்குத் துரியோதனன் துச்சாசனன் முதலிய நூறு பிள்ளைகளும், துச்சளை யென்னும் ஒருபெண்ணும் காந்தாரியிடம் பிறந்தார்கள். [பஞ்ச பாண்டவர்களுள், தருமன் துரியோதனாதியர் நூற்றுவரினும் மூத்தவனென்றும், வீமன் முதலிய மற்றை நால்வரும் துரியோதனனுக்கு இளையவரென்றும் அறிக.] பாண்டு சிலகாலத்துக்குப்பின் இறந்துபோனான். அப்பொழுது மாத்திரி சககமனஞ்செய்தாள். பின்பு பாண்டவருந் துரியோதனாதியரும் கிருபாசாரியர்துரோணாசாரியரிடத்து வில்வித்தை கற்கும்போதே, துரியோதனாதியர் பொறாமையினால் பாண்டவரிடத்து ஞாதிப்பகைகொண்டு பலதீமைகள்செய்துவந்தார்கள். வருகையில், அரக்குமாளிகையிலிட்டுத் தங்களையெரிக்கும்படி துரியோதனாதியர் செய்த யத்தனத்தைப் பாண்டவர்கள் தங்கள்சிறியதந்தையாகிய விதுரனேவிய சிற்பியால் அறிந்து தப்பிப் பிராமணவேடம்பூண்டுதிரிந்து, திரௌபதியின்சுயம்வரத்துக்குச்சென்று அங்குக்கட்டியிருந்த யந்திரத்தை அறுத்து அருச்சுனன் திரௌபதியைக்கொண்டுவர, தாயார்சொற்படி அந்தஒருத்தியை ஐவரும் மணஞ்செய்துகொண்டு அஸ்திநபுரத்துக்கு வந்தார்கள். வந்தவுடனே, திருதராட்டிரன் இவர்களை இந்திரப்பிரஸ்தத்திலும், துரியோதனன் முதலியோரைஅஸ்தினபுரியிலும் இருந்து ஆளும்படி கூறி இராச்சியத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான்.

பின்பு தருமபுத்திரன் தனது தம்பிமார்நால்வரைக்கொண்டு திக்குவிசயஞ்செய்து ராசசூயயாகம்முடித்து வெகுமகிமையுடன் விளங்கினான். அது

கண்டு பொறாமைப்பட்டுத் துரியோதனன் யுதிட்டிரனைத்தந்திரமாகத்தன்னி டம்அழைப்பித்துத் தன்மாமனான சகுனியைக்கொண்டு அவனுடன் சூதாடு வித்து அவனது செல்வம்முழுவதையும் பறித்துக்கொண்டு, அவனையும் அவ னது தம்பிமாரையும் அவர்களதுமனைவியான பாஞ்சாலியையும் அடிமையாக் கி, அவளைத் தீண்டக்கூடாதகாலத்தில் துச்சாதனனைக்கொண்டு சபையிற் பலாத்காரமாகக் கொண்டுவந்து துகிலுரியச் செய்தான். அப்பொழுது, ஸ்ரீ கிருஷ்ணாநுக்கிரகத்தால், அவள் மேல்மேல் ஆடைவளரப்பெற்று மானங் காத்துக்கொண்டாள். பின்பு அவளது கற்பின் பெருமைக்கு அஞ்சித் திருத ராட்டிரன் அவர்களை அடிமைத்தன்மையினின்றும் நீக்கிச் செல்வத்தையுங் கொடுத்தனுப்ப, துரியோதனாதியர் அதனை மறுத்து அவற்றையெல்லாங் கவர்ந்துகொண்டு, மறுசூதாடி அடிமைநீங்கின அவர்களைப் பன்னிரண்டுவரு ஷம் வனவாசமும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசமும் [அஜ்ஞாதவாச மாவது- ஒருவரும் தம்மை இன்னாரென்று அறியவொண்ணாதபடி நாட்டில் மறைந்து வசித்தல்] செய்துவந்தால் அரசுபெறுமாறு ஏற்பாடுசெய்து அனுப்பினார்கள்.

அங்ஙனமே பாண்டவர்கள் திரௌபதியுடனே சென்று பன்னிரண்டு வருஷம் காமியவனம் முதலிய இடங்களில் வசித்து, பின்பு, தருமபுத்திரன் கங்கபட்டனென்னும் சந்நியாசியாகவும், வீமசேனன் பலாயனனென்னும் சமையற்காரனாகவும், அருச்சுனன் பரதநாட்டியம்பயிற்றுவிக்கும் பிருகந் நளையென்னும் பேடியாகவும், நகுலன் தாமக்கிரந்தியென்னும் குதிரைக்கார னாகவும்,சகதேவன் தந்திரிபாலனென்னும் இடையனாகவும்,திரௌபதி விரத சாரணியென்னும் வண்ணமகளாகவும், இவ்வாறு மாறுவேடம் பூண்டு, விராடநகரத்தில் ஒருவருஷகாலம் அஞ்ஞாதவாசஞ்செய்தனர். அந்தப்பதின் மூன்றாவதுவருடத்தி னிறுதியில், துரியோதனன்,பாண்டவர்கள் விராடநக ரத்தில் இருக்கலா மென ஒருவாறு ஊகித்துஉணர்ந்து, அவர்களைக் கண்டு பிடிக்கும்படி படையெடுத்துச்சென்று, அந்நாட்டை இருபுறத்தும் வளைத்துப் பசுக்கூட்டத்தைக் கவர்ந்துசெல்ல, அருச்சுனனொழிந்தநால்வரும் தென் புறத்தில் திரிகர்த்தரையும், விராடகுமாரனான உத்தரனுக்குத் தேரூர்ந்து சென்ற பேடிவடிவான அருச்சுனன் வடபுறத்தில் துரியோதனாதியரையும் வென்று, முன்னையஏற்பாட்டின்படி பதின்மூன்றுவருடமுங் கழிந்துவிட்ட தாதலால், அப்பொழுது பாண்டவர்களுந் திரௌபதியும் நிஜரூபத்தோடு வெளிப்பட்டனர்.

வெளிப்பட்டபின் பாண்டவர் தம்செய்தியைப் பத்திரிகைமூலமாக விராடனது தூதர்களைக்கொண்டு எல்லாஅரசர்க்குங் கண்ணனுக்குந் தெரி விக்க, கண்ணன் விராடனது மூத்தமகனான சுவேதனோடும் சுற்றத்தாரோ டும் பாண்டவரிருக்கிற உபப்பிலாவியநகரத்திற்கு வந்துசேர,விராடன் நெடு நாளாகப் பிரிந்த சுவேதனைக் கண்டு மகிழ்ந்து அவனது செய்தியைக் கண்ண னைக்கேட்டுஅறிந்து அளவளாவினான். இதுநிற்க: சல்லியன் பாண்டவர்க்கு உதவிசெய்தற்காகத் தன்நகரத்தினின்றுவரும்வழியில், துரியோதனன் அவ னுக்கு வஞ்சனையாக விருந்துசெய்வித்து அவனைத் தனக்கே படைத்துணையா க்கிக்கொண்டான். அப்பால் பலஅரசரும் வந்துகூடியபொழுது, விராடன் தன்மகள் உத்தரையை அருச்சுனனது குமாரன் அபிமந்யுவுக்கு மணஞ்செய் வித்தான். பின்பு சபையில் துருபதன் கண்ணனை நோக்கி 'பாண்டவர் மீண் டும் அரசுபெறும் உபாயம் சொல்வாய்' என்ன, கண்ணன் 'அரசுதரும்படி துரியோதனனுக்குத் தூதனுப்பினால், அதற்கு அவன் கொடாவிடில் போர் செய்து பெறலாமே' என்ன, பலராமன் அதனை மறுத்துப்பேச, சாத்தகி அவ னை இகழ்ந்துகூற, கண்ணனும் பலராமனைக் கண்டித்தான். பிறகு கண்ண னும்மற்றையோரும்தம்தம்ஊருக்குச்செல்ல,கண்ணன்கட்டளைப்படி பாண்

டவர் புரோகிதனைத் துரியோதனனிடந் தூதனுப்ப, அவன்சென்றுசொன்ன நீதியைக் கேளாமல் துரியோதனன் அரசுகொடேனென்று மறுத்திட்டான். விதுரன் வீடுமன் துரோணன் கிருபன் முதலானோர் எவ்வளவுசொல்லியும் பயன்படவில்லை. அப்பொழுது, கர்ணன் துரியோதனனுக்குச் சார்பாய் வீடுமனை யிகழ்ந்துபேசினதற்கு, வீடுமன் கண்டித்து மறுமொழிகூறினன். தூதுசென்ற முனிவன், மீண்டுவந்து எல்லாச்செய்தியையுந் தருமனுக்குத் தெரிவித்து, அதன்பின் அவன்விருப்பத்தின்படி அனைத்தையுங் கண்ணனுக்குச் சென்று கூறினான். அதுகேட்டு அப்பெருமான் போரிற் பகைவெல்வதாகக் கருதி, உடனே தன்னிடம் அருச்சுனனை வரும்படி சொல்லென்று அவ்வந்தணனையே அனுப்பினான். பின்பு அருச்சுனனும் துரியோதனனும் சென்று கண்ணனைத் தந்தமக்குப்படைத்துணையாகுமாறு சமகாலத்தில் வேண்ட, மாயவன், தந்திரமாக, துரியோதனனுக்கு யாதவசேனைமுழுவதையுந் துணையனுப்புவதாகச் சொல்லி, தான் பாண்டவர்க்கே துணைவனாயினான். அப்பால், துரியோதனன் பலராமனைக் கண்டு பேசிவிட்டு அத்தினபுரிக்கு மீண்டான். கண்ணன் அருச்சுனனோடுஉபப்பிலாவியஞ்சென்றுசேர,தருமன் மிகமகிழ்ந்து எதிர்கொண்டு விசேஷமாக உபசரித்தனன். அங்ஙனம் உபசரிக்கக் கண்ணன் தருமனரண்மனையையடைந்து அங்கு ஒருதனிமண்டபத்தில் தருமபுத்திராதிகளும் பாஞ்சாலராசனும் விராடராசனும் குந்திபோசராசனும் மற்றுமுள்ளிட்டாரும் புடைசூழ வீரசிங்காதனத்தில் வீற்றிருந்தான்.

இவ்வருஷத்துப்பாடத்தின் கதை.

பின்பு கண்ணன் பாண்டவரோடு கலந்து பேசி அவர்கள்கருத்தையெல்லாம்நன்றாகஅறிந்துகொண்டு தான்ஒருமுறை துரியோதனனிடம் தூது செல்வதென்ற முடிவுக்கு வந்து தேரேறிச் சேனையோடு புறப்பட்டு அத்தினாபுரிசேர்ந்திட்டான். அங்குக் கண்ணன்வருவது அறிந்து துரியோதனன் நகரத்தை அலங்கரிப்பித்துச் சேனைகளோடு எதிர்கொண்டுசென்று உபசரிக்கத் தொடங்க, அதனைச் சகுனி தடுத்தனன். வீடுமன்முதலியோர் வந்து எதிர்கொள்ளக் கண்ணன் விதுரன்வீட்டையடைந்து அவனுடன்அளவளாவி அவனால் நன்குஉபசரிக்கப்பெற்று அன்றிரவு அங்கு விருந்துண்டு கண்வளர்ந்தருளினான். மறுநாளுதயத்தில் கண்ணன் விதுரனாற் கொணரப்பட்ட தேரின்மீது ஏறித் துரியோதனன்சபையையடைந்து அவனைக்கண்டுபேசிப் பலநியாயங்கள் எடுத்துக்காட்டிப் பாண்டவர்களுக்காக அரசுகேட்க, அவன் விடாப்பிடியாக 'மயிர்முனைக்கும் மண்கொடேன்' என்று சொல்லி மறுத்திட்டதுமன்றி, கண்ணனைத்தூஷித்துப்பேசுதலுஞ்செய்தான். அதன்மேற் கண்ணன் அவ்விடத்தைவிட்டுநீங்க,துரியோதனன், கண்ணனுக்கு இடங்கொடுத்து உபசரித்ததற்காக விதுரனை நிந்திக்க,அவனுங் கோபங்கொண்டு சிலபேசித் தன் வில்லை யொடித்துப் போகட்டுவிட்டுத் தன்வீட்டுக்குச் சென்றான்.அப்பால் வீடுமன் 'இனிப் பாண்டவரை வெல்வார் இல்லையே' என்று விசாரப்படுகையில், துரியோதனனும் கர்ணனும் தாம்தாம் வெல்வதாகச் செருக்கிப்பேசினர். இது நிற்க, கண்ணன் குந்தியையடைந்து கர்ணனது பிறப்பு முதலிய வரலாற்றை அவளுக்கு எடுத்துக்கூறி அவனைப் பாண்டவரோடு சேர்த்தற்கும் அல்லது நாகாஸ்திரத்தை அவன் அருச்சுனன்மேல் இரண்டாம் முறைவிடாதபடி வரங்கேட்டற்குமாகக் கர்ணனிடஞ் செல்லும்படி அவளை உடன்படுத்திவிட்டு, விதுரன்வீட்டைச் சேர்ந்தான். அன்றுஇரவு துரியோதனன் சகுனிமுதலானோரோடு ஆலோசித்துத் தன்சபைநடுவே வஞ்சனையாகப் பிலவறையமைத்து அதன்மேற் பொய்யாசனமிட்டு மறுநாள் கண்ணனை வரவழைத்து அவ்வாசனத்தில் வீற்றிருக்கச்செய்து படுகுழிபாய்ச்சி விலங்கிடுவதாகத் துணிந்தனன்.

புரோக்தனைத் தூதுவிடுதலும், வாசுதேவனைப் படைத்துணையழைத்தலும் கீழ்நடந்தன; இனி நடப்பது,

ஸ்ரீகிருஷ்ணன்தூது.

* [இவ்வகை இருந்த ஸ்ரீவாசுதேவன் பாண்டவரை நோக்கி யாது அருளிச்செய்தான்:]

அங்குக் கண்ணன் பாண்டவரை நோக்கி வினவுதல்.

101.—(இதன்பொருள்.) நீர் - நீங்கள், போர் வீரர்தம்மோடும்-போர் செய்யவல்லவீரர்களைத் துணைக்கொண்டுஅவர்களுடனே, போந்து-(துரியோதனாதியரோடு யுத்தத்துக்குச்) சென்று, அரசு கொள்வீரோ-(வென்று)இராச்சியத்தைப் பெறுவீர்களோ? (அல்லது), பார் வீரர் என்று பரசியக்கால் - பூமியையாளுதற்குரிய பராக்கிரமசாலிகள் (நாங்களே) என்று (அத்துரியோதனாதியர் பெருமைபாராட்டிக்) கூறினால், ஓரீர் - (அதனைக்) கருதாதவர்களாய், உய்வீர் ஆய் - (யாதாயினும் ஒருவிதத்தில்) உயிர்வாழக் கருதுவீர்களாய், முன் அடைந்த வெம் கானம் போவீரோ - முன்னேசேர்ந்துவசித்த கொடியகாட்டுக்கே (மீண்டும்) சென்றிடுவீர்களோ? ஐவீரும் - நீங்கள் ஐந்து பேரும், (உங்கள்கருத்தை), அமர்ந்து சொல்வீர் - விரையாமற் பொறுத்துச் சொல்லுங்கள்; (என்றவாறு.)

மானத்தையே பிரதானமாகக் கொண்டு, போரில் ஒருகால் மரணம்நேரவுங்கூடுமென்ற சங்கையாற் சிறிதும் அச்சங்கொள்ளாமல், தைரியமாகத் துணைவீரர்களோடு சென்று துரியோதனாதியரை எதிர்த்துப் போர்செய்து வென்று இராச்சியத்தைப் பெறப் பிரியமா? அல்லது, அபாயகரமான போரைத் தொடங்காமல் ஏதாவது ஒருபாயத்தாற் சீவனஞ்செய்து காலங்கழிப்போமென்று கருதி மானத்தைவிட்டு முன்புபன்னிரண்டுவருஷம்வாசஞ்செய்துபழகியுள்ள வனத்திற்கே மீளவுஞ்சென்று ஆயுளளவும்அங்குவசிக்கப் பிரியமா? உங்கள்உத்தேசத்தை நன்றாக ஆலோசித்து நிச்சயித்துத் துணிவாகச் சொல்லுங்கள் என்று கண்ணபிரான் பஞ்சபாண்டவரை நோக்கிக் கேட்டருளினான்.

'பார்வீரரென்று பரசியக்கால் ஓரீர் உய்வீராய்' என்றது - அத்துரியோதனாதியர் உங்கள்பலபராக்கிரமங்களைப் பொருள்செய்யாமல் தங்கள்வீரத்தையே முக்கியமாகக்கருதிச் செருக்கிச் சமாதானத்தில் இராச்சியங்கொடாமல் "நற்றேர் விராட னகரத் திருந் தவற்குக், குற்றேவல்செய்து வெறுத்தாரேல் - மற்றினியோர், நன்னாடு மன்னவனு ளாருக போய்க் காலத்தா, லென்னாடு கைவிடேன் யான்," "எந்தைக் குரிய தெனதே யிடுகவற்றால், தந்தைக் குரியது முன் தான் தோற்றான்", "எமதேபார், தங்கள்கானகம் தமது" என்றவாறு கூறினால் அதற்காக ஆக்கிரகப்படாமல் சாந்தகுணத்தையே மேற்கொண்டு 'எது சொல்லினுஞ் சொல்லுக; நமக்கென்?' என்று உபேக்ஷித்து இம்மைக்கே உதவுவதான அரசாட்சிச்செல்வத்திற் பிரியமொழிந்து மறுமைப்பயனைப்பெறுதற்குஉரிய உயிரை விடத்துணியாமல் அதுகொண்டு வாழக்கருதி யென்றவாறு.

"செய்வராலினமுகளுந் திருநாடு பெற நினைவோ சென்றுமீளப், பைவரா யருங்கானிற் பயின்று திரிதர நினைவோ பகைத்த போரி, லுய்வராரென

---

* இப்புத்தகத்தில் பலபாடல்களின்உரையிலும் முன்னாவது பின்னாவது [ ] இக்குறியினுட் காணப்படுமவை, பெருந்தேவனார்பாரதத்து வசன நடை யென்று அறிக. இவை, கிடைத்தவொருபிரதியைக்கொண்டே ஒருவாறு பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டன.

விரைவி னுருத்தெழுந்து பொர நினைவோ வுண்மையாக, ஐவராமவனிபர்க்கு நினைவேதென் றருள்புரிந்தா னமரர்கோமான்" என்பர் வில்லிபுத்தூரார் பாரதத்திலும்.

வீரர் - வடசொல். அரசு - ராஜ்யம் என்னும் வடசொல்லின் சிதைவு. கானம் - காநநம் என்னும் வடசொல்லின் திரிபு; இது,கான்என்றும் விகாரப் பட்டுவழங்கும்.போர்-பொருஎன்னும்முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.தம்-சாரியை.உம்-இசைநிறை. போந்து-புகுந்து என்பதன் மரூஉ என்பர்; போ என்னும் பகுதிக்கே 'போய்' என்பதுபோல 'போந்து' என்றும் ஒரு வினைவடிவம் உண்டென்று கொண்டாலுங் குற்றமில்லை. ஓகாரம் இரண்டும் - வினாப் பொருளன. பார் - (யாவராலும்) பார்க்கப்படுவதென்றாவது, பருமையை யுடையதென்றாவது காரணப்பெயர். பரசியக்கால் - எதிர்காலவினையெச்சம்; பரசு - பகுதி, இ அ - சாரியைகள், கால் - காலங்காட்டும் எச்சவிகுதி, மற்றவை - சந்தி. ஓவீர்-முன்னிலைப்பன்மை யெதிர்மறை முற்றெச்சம். முன்- இடைச்சொல்; இங்கே, காலம். ஐவீர் - ஐந்து என்பத னடியாப் பிறந்த முன்னிலைப்பன்மைப்பெயர்; படர்க்கையில் 'ஐவர்' எனவும், தன்மையில் 'ஐவேம்' எனவும் நிற்கும். உம்மை - முற்றுப்பொருளது. சொல்லீர் - உடன்பாட்டு ஏவற்பன்மை.

வீரர்தம்மோடும் - வீரர்களான துரியோதனாதியருடனே யென்றுமாம். 'பார்வீரரென்றுபரசியக்கால்' என்பதை முதலடியோடுகூட்டி, உலகத்திற் பிரசித்தரான வீரர் தாங்களே யென்று (செருக்கித் துரியோதனாதியர்) பெருமைபாராட்டினால் (அதனையடக்கும்பொருட்டு) அவர்களுடன்போர்செய்து அரசுபெறுவீர்களா? என்றும் உரைக்கலாம். காரியங்களில் மிகவிரைவார்க்கு அவற்றின் நன்மைதீமைகள் தோன்றமாட்டா வாதலால் அங்ஙனம்விரைந்து ஒருமுடிவைச்சொல்லவேண்டா என்றற்கு, 'அமர்ந்துசொல்லீர்' என்றது.

போர்போந்து அரசுகொள்ளுதல், சிறந்ததாதலால், முன்வைக்கப்பட்டது; இதனால், கண்ணன்கருத்துப் போரின்மேலேயே நிற்றல் விளங்கும்: அடியில்வருகிற வசனத்தையுங் காண்க. (க)

[என்பது - துரியோதனனுடன் யுத்தம்பண்ணி இராச்சியங்கொள்வீரோ வென்றும் மற்று அது முடியாதாகில் முன்புதிரிந்த வனவாசம் போவீரோ வென்றும் அருளிச்செய்து, நீங்கள் அந்த மறமன்னன் துரியோதனனுடன் வெகுண்டெழுந்தகாலத்து மற்று அதற்கு யாம் செய்யத்தக்கனவும் விசாரித்து ஈண்டு நமக்கு உரைத்து யுத்தத்துக்கு ஆம்படி ஒருப்பட்டு மற்று அதற்குஉச்சாகமுடையாரையும் அழைத்து வேண்டுவன துணிவீராயின் என,கேட்டுத் தருமபுத்திரன்சொல்லுவான்:—ஸ்ரீபீஷ்மனும் விதுரனும் கன்னனும் ஈசுவரமூர்த்தி அசுவத்தாமாவும் முதலாகிய அதிரதர் மகாரதரான மற்றவரை நம்மால் வெல்லக்கூடுமோ? அதற்கு என்னோ காரண மெனில்:—]

அதற்குத் தருமன் 'விதுரனை வெல்வார் ஆர்' என்றல்.

102.—(இ - ள்.) பெற்றம் - பெருமையையுடைய, தனி - ஒப்பில்லாத, முரசம்-(வெற்றிக்குஅடையாளமாகப்)பேரிகைவாத்தியத்தின் வடிவ மெழுதியுள்ள (எனது) கொடியை, காத்து அருளும் - பாதுகாத்துக் கருணைசெய்கிற, தாமரையாள் கோனே - செந்தாமரைமலரில் வாழ்கிற இலக்குமியின் கணவனே! [திருமாலின்அம்சமானவனே!] வெற்றி-சயத்தையுடைய, விதுரன் - விதுரனது, கை - கையிலே, வில் இருக்க - (போர்செய்யும்பொருட்டு) வில் எடுக்கப்பட்டிருக்கையில், மேதினியில் - இந்நிலவுலகத்தில், அவனை-அவ்விதுரனை, வெற்றி கொள்ளும் ஆறு - சயிக்கிற வகை, உண்டோ - (யாருக்காயினும்) உளதோ? [இல்லையென்றபடி]; அவரை வெல்வாரை - (அவ்விதுரனைத்

தம்பக்கத்திலுடைய) துரியோதனாதியரைச் சயிக்கவல்ல (நம் பக்கத்து) வீரரை, இனி - இப்பொழுது, எண்ணு - ஆலோசித்து (இன்னாரென்று) சொல்வாய்; (எ - று.)

'வெற்றி விதுரன்' என்றது, அவனுக்குத்தோல்வியேயில்லையென்பதைக் குறிக்கின்றது. விதுரன்- பாண்டவர்க்குந்துரியோதனாதியர்க்குஞ் சிற்றப்பன் முறையாகிறவன்; வீமன் அருச்சுனன் முதலிய சிறந்தவீரர்பலரையும் ஒருங்கே எதிர்த்து வெல்லலாம்படி வில்முதலிய படைத்தொழில்களில் மற்றை யாவரினும் மிகவல்லவன்: இவனை யமதருமராசனது அம்ச மென்றும், பரமபாகவதர்களில் ஒருவ னென்றும் நூல்கள் கூறும். வெற்றியை வில்லுக்கும் அடைமொழியாக்கலாம்; அவனது வில் "கண்ணுதலான்தன் சிலைக்குங் காகுத்தன்தன் சிலைக்கும், எண்ணுங்கால் நேரா மெழிற்சிலை" என்னும்படி எல்லா விற்களினுஞ்சிறந்த சிவதநுசு விஷ்ணுதநுசு என்ற இரண்டுவிற்களுக்கும் ஒப்பானது. இப்படிப்பட்டவில்லைக் கையிலேந்திக்கொண்டு வல்லவனானவிதுரன் போருக்குவருகையில் அவனை வெல்வாரில்லையாதலால், அவனைத் துணைவனாக வுடையதுரியோதனாதியரையும் எங்ஙனம்வெல்வது எனத் தருமன் கூறினான்.

தனது வெற்றிக்கு அறிகுறியாகவும் மங்களகரமாகவும் தருமன் முரசத்தின்வடிவத்தைக்கொடியிற்கொண்டன னென்க. முரசங்காத்தருளுதல்-தருமனது பெருமைக்கு ஒருகுறைவும் வாராதபடி கண்ணன் அவனைப் பலசமயங்களிலும் பலவகையாலும் பாதுகாத்தல். தருமனது வெற்றிக்கெல்லாம் ஸ்ரீகிருஷ்ணசகாயமே காரண மாதலால், தருமன் கண்ணனை 'பெற்றத் தனிமுரசங் காத்தருளுந் தாமரையாள் கோனே' என விளித்தான்; "எங்கள் மானமுந் தொல்லாண்மையும் புகழும் நீயலால் யார் நிலையிடுவார், வெங்கண் மாசுணத்தோன் வஞ்சனைக்கடலின் வீழ்ந் தழுந்தாவகை யெடுத்தின்று, அங்கண்மாநிலமுந் தந்தனை" என மேல் பதினேழாம்போர்ச்சருக்கத்தில் தருமன் கண்ணனைத் துதிக்குமாறுங் காண்க.

கண்ணன் திருமாலின்அவதாரமென்பது, அக்காலத்திலேயேபிரசித்தம்.

இமயமலையில் மரகதப்பாறையில்பதுமையென்னுங்கயத்தில்தோன்றிய பொற்றாமரையில் திருமகள் தங்கின ளென்பது, ஜைநநூற்கொள்கை. திருமால் இராமனாகத் திருவவதரித்தபொழுது திருமகள் சீதையாகவும், அப்பிரான் கண்ணனாகத் திருவவதரித்தபொழுது அப்பிராட்டி உருக்குமிணியாகவும் இங்ஙனம் திருமாலின் ஒவ்வொரு அவதாரத்திலும் திருமகள் ஒவ்வொருவடிவங் கொள்ளுதல்பற்றி, இங்கே 'தாமரையாள்' என்றது - உருக்குமிணியை உணர்த்தும்.

மேதிநீ, முரஜம், தாமரஸம் என்ற வடசொற்கள், திரிந்தன. விதுரன் என்பதற்கு - ஞானமுடையவ னென்றும், மேதிநீ என்பதற்கு - (முன்பு ஒருகாலத்தில் திருமாலாற் கொல்லப்பட்ட மதுகைடப ரென்னும் அசுரர்களது) மேதசினால் நனைந்த தென்றும் அவயவப்பொருள்: (மேதஸ் - நிணம், உடற்கொழுப்பு.)

வெற்றி - தொழிற்பெயர்: வெல் - பகுதி, றி - விகுதி; இதனைப் பண்புப்பெயராகக் கொள்ளலாகாது: வினைப்பகுதியடியாகப் பிறந்ததனால். இருக்க என்ற செயவெனெச்சத்தில், கு- சாரியை; இது, இங்கே உடனிகழ்ச்சிப்பொருளதாதலால், நிகழ்காலங்குறிக்கும். மற்று - வினைமாற்று; அசையுமாம். உண்டு - இருதிணை யைம்பால் மூவிடத்துக்கும் பொதுவான குறிப்புமுற்று; (வேறு, இல்லைஎன்பனவும் இவ்வாறே;) இது, உள் டு எனப் பகுதி விகுதிகளாகப் பிரிக்கக்கூடியதாயினும், இதனைப் பகாப்பதமென்றலே மரபு. ஓ - எதிர்மறை. வெற்றி வெற்றம் என்பனபோல, பெற்றி பெற்றம் என இரண்டு

வடிவுமும் உள்ளன வென்க; அன்றி, "ஏ பெற்று ஆகும்" என்ற தொல்காப்பியத்தின்படி பெருக்கமுணர்த்துகிற 'பெற்று' என்னுஞ் சொல் அம்சாரியைபெற்று 'பெற்றம்' என நின்றதெனினுமாம். முரசமென்னும் பேரிகையின் பெயர், அதன் வடிவத்தை யெழுதிய கொடிக்கு இருமடியாகுபெயர். தாமரையாள்கோன் - உயர்திணைஈறு வலிவர இயல்பு; [நன் - உயிர் - கூ.] கோன், ன் - சாரியை; [நன் - உருபு - கூ.] ஆன், மான், (ஊன்) என்பவற்றிலும் இவ்வாறே. ஏகாரம் மிக்கது, விளியுருபு. 'இனி' என்பது - எதிர்காலங் குறிப்பதோர் இடைச்சொல்; சிறுபான்மை நிகழ்காலத்துக்கும் வரும். எண்ணு, உ - சாரியை: வினைப்பகுதியே ஓசைவேறுபாட்டால், ஏவலொருமைப் பொருளுணர்த்திற்று.

வெற்றிகொள்ளும் மாறு எனப்பிரித்து - சயங்கொள்ளும் பகைவனென்று உரைத்தலும் அமையும். 'பெற்றத்தனிமுரசம்' என்பதற்கு, பெற்றம் - எருதின்தோலாற் கட்டப்பட்ட, தனி - ஒப்பில்லாத, முரசம் - பேரிகை என்றும் பொருள் கொள்ளலாம். "ஏற்றுரி முரசம்" எனப் பலவிடங்களிலும் பழையநூல்களிற் பயில்கிறது. இப்பொருளில், பெற்றம் - திசைச்சொல்: இது, அதன் தோலுக்கு முதலாகுபெயர்.

(இங்ஙனம் தருமன் விதுரனையும் அவன்வில்லையும்பற்றி மிக அஞ்சினதைத் திருவுள்ளத்திற்கொண்டு, மேல் கண்ணன் பாண்டவதூதனாய்த் துரியோதனனிடஞ்செல்லும்பொழுது மற்றையோர்வீட்டிற் செல்லாமல் விதுரனது திருமாளிகையிற் போய் வசித்து அதனால் அவனுக்கும் துரியோதனனுக்கும் மாறுபாடு உண்டாய் அவன் வில்லையொடித்துப் போகட்டுவிட்டுப் போருக்கு வாராமற் போம்படி பேதஞ்செய்திடுமாறு காண்க.) (உ)

[அதுகேட்டு யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் 'விதுரனை நகுலன் வெல்வான்' என்றல்.

103.—(இ - ள்.) நகுலன் - (உன்னுடைய தம்பிகளில் ஒருவனான) நகுலன், பரி ஏறின் - குதிரையின்மேல் ஏறிப் போருக்குச்சென்றால், நால் ஒன்று மூன்று ஏழ் புவனங்களும் - நாலோடுகூடிய மூன்றும் ஏழுமாயிருக்கிற [பதினான்கு] உலகங்களும், புடை போய் - இடம்விட்டுப்பெயர்ந்துபோக,—இகலும் அவனுடைய வில்லும் - கடும்போர்செய்யவல்ல அவ்விதுரனுடைய வில்லும், அதிரதரும் - அதிரதவீரர்களும், எல்லாம் - (மற்றும்) எல்லோரும், ஈங்கு - இவ்வுலகத்தில், இவனுடைய முன் நில்லார் - இந்நகுலனுடைய எதிரில் நிற்கமாட்டார்; (எ - று.)

நகுலன் குதிரைமேலேறிப் போர்செய்கையில், அவ்வுக்கிரத்தால் சகலலோகத்தவரும் அஞ்சிவிலகுவராதலால், அவன்முன்னிலையில் விதுரன்முதலிய வீரரெவரும் நிற்கவும்மாட்டார் என்பதாம். நகுலன் குதிரைத்தொழிலில் மிகவல்லவனாதலை அஞ்ஞாதவாசகாலத்தில் அவன் தாமக்கிரந்தியென்னுங் குதிரைக்காரர்தலைவனாய் விராடநகரத்தில்வாழ்ந்ததுகொண்டும் அறிக. இகலும் அவனுடைய வில் நில்லாது என்றது - வலிமையாக விற்போர்செய்யவல்ல அவ்விதுரன் நிற்கமாட்டான் என்றவாறும்.

உலகங்கள் - மேலேழும் கீழேழுமென இருவகை: மேலேழுலகங்கள் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சநலோகம், மகர்லோகம், தபோலோகம், சத்தியலோகம் என்பன. கீழேழுலகங்கள் - அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதாலம் என்பன. ஏறினால் எனப் பதம்பிரித்தால், 'ஒன்று மூன்று புவனங்களேழும்' என்றது, (மேலுலகம் நடுவுலகம் கீழுலகம் = ஸ்வர்க்கமத்தியபாதாளங்கள் என்று) ஒரு மூன்றாகப் பகுக்கப்படுகிற ஏழுலகங்களும் எனப் பொருள்படுமாயினும், அது சிறப்பன்

றென்க. முந்தின உரைக்கு,நான்குளன்பது,ஈறுகெட்டு னகரம் லகரமாய் நால் என நின்றது; ஒன்றுமூன்று - வினைத்தொகை.பிந்தினவுரைக்கு, ஒன்றுமூன்று - பண்புத்தொகை; ஒன்று என்னும் எண்ணுப்பெயர்,சிறுபான்மை விகாரப்படாமல் இயல்பாய்நின்றது. ஏழும், உம்மை - முற்றும்மை.

அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் எனத் தேர்வீரர் நால்வகைப் படுவர். அதிரதர் - முழுத்தேரரசர்; அவராவார் - தாம் ஒருதேரில் ஏறிநின்று தமது தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவாராமற் காத்து வேறுதுணையில்லாமலே பலவாயிரந்தேர்வீரரோடு எதிர்த்துப் போர்செய்து வெல்லும் வல்லமையுடையார். அவரினும் சிறிது தாழ்ந்தவர் மகாரதர்; இவர் பதினோராயிரந் தேர்வீரரோடு பொருபவர். சமரதர்-ஒரு தேர்வீரனோடு தாமும் ஒருவராய் எதிர்க்கவல்லவர். அர்த்தரதர் - அவ்வாறு எதிர்க்குமளவில், தமது தேர்முதலியவற்றை இழந்துபோம்படியானவர்; இவர் இருவர் சேர்ந்தால், ஒரு சமரதனுக்கு ஒப்பாவர். தலைமைபற்றி, இங்கே அதிரதரை எடுத்துக் கூறினார்; அவர் முன்நிற்கமாட்டாமை கூறவே, மற்றையோர் முன்நிற்க மாட்டாமை தானே பெறப்படும்.

பரி - (பாரங்களைப்) பரிப்பது எனக் காரணப்பெயர்; பரித்தல் - சுமத்தல். புடைபோய் -புடைபோக என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு; [நன்-வினை - உஎ.] 'உடைய' என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - உடைமையென்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; பின்னது - ஆறும் வேற்றுமைச்சொல்லுருபு. உம்மைகள்- எண்ணுப்பொருளன. 'எல்லாம்' என்பது - இருதிணைக்கும் பொது. முன் - இடமுன்.

புவநம், அதிரதர்-வடசொற்கள். வில்லும்அதிரதரும் எல்லாம் நில்லார்-அஃறிணையும் உயர்திணையும் கலந்து எண்ணி, சிறப்பினால் உயர்திணைமுடிபை ஏற்றன. அஃறிணையினும் உயர்திணை மேலாதல், இங்கே சிறப்பு. ஈங்கு - சுட்டுப்பெயர் நீண்டது. (௩)

[அதுகேட்டு யாது சொன்னான் தருமபுத்திரன்:]

தருமன் 'அசுவத்தாமனை எதிரிகள் சேனாதிபதியாக்கினால் வெல்ல முடியுமோ' என்றல்.

104.—(இ - ள்.) ஆசாரியன் புதல்வன் -துரோணாசாரியனுடைய குமாரனை, அச்சுவத்து ஆர் கோமாற்கு - அசுவத்தாமனுக்கு ,சேனாபதி பட்டம் சேர்த்தினால் - சேனைக்குத்தலைவனாயிருத்தற்குரிய பட்டத்தைக் கட்டினால், மீது - அதன்மேல் [பின்பு], அவனை வெல்ல போர் செய் வகைக்கு - அவ்வசுவத்தாமனைச் சயிக்குமாறு யுத்தஞ்செய்யும் விதத்திற்கு, வெள் தலையில் ஊண் உகந்த செல்வற்கும் அரிதே -வெண்ணிறமான கபாலத்தில் உணவை விரும்பி இரந்த சிறப்பையுடைய சிவபிரானுக்கும் அருமையேயாமன்றோ? செப்பு - (நீ) சொல்; (எ - று.)—தான் - அசை.

அச்சுவத்து ஆர் கோமான் - அச்சுவம் என்னும் பெயரோடு பொருந்தின தலைவன். துரோணரதுமனைவியாகிய கிருபியின் வடிவழகைக் கண்டு மிகக் காமுற்ற சிவபிரானது அருளினால் ஒருகுதிரையினிடம் பிறந்தவன், இவன்; ஆதலால், 'அச்சுவத்து ஆர் கோமான்' என்பதற்கு - குதிரையினிடம் பொருந்திப்பிறந்த தலைவனென்றும் பொருள்கொள்ளலாம். அசுவத்தாமன் என்னும் பெயர்க்கு - குதிரையைப் பிறப்பிடமாகவுடையவனென்று பொருள்; அசுவம் - குதிரை, தாமம் - இடம். "பிதுச் சதகுணம் புத்ரஃ" [தந்தையினும் பலமடங்கு மேம்பட்டவன் மைந்தன்] என்றபடி இவன் தனதுஉற்பத்திக்குக்காரணனான உருத்திரமூர்த்தியினும் பலமடங்கு சிறந்தவனாதலால், அவனையெதிர்த்துப் போர்செய்து வெல்லுதல் அழித்தற்கடவுளான அச்சிவ

பிரானுக்கும் அருமையானதேயாமென்றான். இங்ஙனம் சிவகுமாரனவனை 'ஆசாரியன் புதல்வன்' என்றது, வளர்த்தமுறைமைபற்றி.

வெண்தலை - தசை தோல் முதலியன நீங்கி எலும்பு மாத்திரமாகவுள்ள தலை; மண்டையோடு. அதில் சிவபிரான் உணவு இரந்த விவரம்:— பரம சிவன் ஒருகாலத்தில் தன்னைப்போலவே பிரமனும் ஐந்துசிரமுடையனாயிருப்பது பலரும்பார்த்துமயங்குதற்கு ஏதுவாயிருக்கின்றதெனக் கருதி அவனது சிரமொன்றைக் கொய்துவிட, அக்கபாலம் அப்படியே அவன்கையில் ஒட்டிக்கொள்ளுதலும், 'இதற்கு என்செய்வது?' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறையுமோ, அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்' என்றுஉரைக்க, சிவபிரான் பலகாலம் பலதலங்களிலுஞ் சென்று பிச்சையேற்றுக்கொண்டு வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நீங்காதாக, ஒருநாள் பதரிகாச்சிரமத்திற் சென்று ஸ்ரீமகாவிஷ்ணுவை யடைந்து ஏற்றபோது அங்கு நாராயணமூர்த்தி 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டு ஒழிந்தது என்பதாம். இதற்குச் சைவபுராணங்களில் வேறு வரலாறு கூறப்படும்; அது வருமாறு:—ஒருகாலத்தில் பிரமன் தானேமுதற் கடவுளென்று கூறிச் செருக்குற்றிருக்கையில், சிவபிரான் தானே முதல்வனென்று தெரிவிக்குமாறு திவ்வியசொரூபத்தோடு எதிரில் தோன்ற, அப்பிரமனது ஐந்தாம்முகம் 'முன்பு ஒருகாலத்தில் எனது நெற்றியினின்றுந் தோன்றிய நீயோ முதல்வன்?' என்றுகூறிச் சிவனைப் பழித்தவளவில், அப்பெருமான் தனது அம்சமான வைரவனைநோக்கியருள,அவன் தனது இடக்கை விரலின் நகத்துநுனியால் அவ்வைந்தாந்தலையைக் கொய்துவிட, அக்கபாலம் அப்படியே அவன்கையில் ஒட்டிக்கொள்ளுதலும், உருத்திரமூர்த்தி தருமத்தை உலகத்தவர் அறிந்து அநுஷ்டிக்குமாறு தான்அனுஷ்டித்துக்காட்டும்படி வைரவனை நோக்கி 'இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்' என்று உரைக்க, அவன் அங்ஙனமே பலகாலம் பலதலங்களிலுஞ் சென்று கைக்கபாலத்தோடு பிக்ஷாடனஞ்செய்து திரிந்து பின்பு காசியிற் சேர்கையில் அந்தக்ஷேத்திரமகிமையால் உடனே கபாலம் கையைவிட்டு நீங்கிற்று.

செப்பு - அவ்வசுவத்தாமனை வெல்லவல்ல நமதுபக்கத்தாரைச் சொல்லு என்றுமாம். ஆசார்யன், அஸ்வம், ஸேநாபதி, பட்டம்-வடசொற்கள். செப்பு- தெலுங்கில் வழங்குந் திசைச்சொல்.

ஆசார்யன் - துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் அஸ்திரசஸ்திரங்களைக் கற்பித்தவன்; முதலில் சிறிதுகாலம் கிருபனும், பின்பு பிரதானமாகத் துரோணனும் கௌரவபாண்டவர்க்கு வில்வித்தைபயிற்றிவைத்தனரென அறிக. சாதாரணமான நிலைமையினும் சேனாபதிப்பட்டம்சேர்த்தின நிலைமையில் போரில் ஊக்கம் மிகுதியாகஉண்டாதல் இயல்பாதலால், 'சேனாபதிப்பட்டஞ் சேர்த்தினால்' என்றான். பட்டம் - நெற்றியிலணியும் பொற்பட்டம். சேனைத்தலைவனுக்குப் பட்டங்கட்டுதல் முறைமையாதலை "ஒளிகால், நன்பட்டமுந் தனதுகையா லணிந்து படைநாலுக்கு நாயகமெனா" என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தாலும் அறிக. செல்வன் - இம்மைமறுமைச் செல்வங்க ளெல்லாவற்றிற்கும் உரியவன்; அணிமா மகிமா முதலிய எட்டுச்சித்திகளுக்குந் தலைவன்.

ஆர்கோமான் - வினைத்தொகை. கோமான், மான் - ஆண்பாற் பெயர் விகுதி. வகைக்கு - நான்கனுருபு, கர்த்தாப்பொருளில் வந்தது. வெண்தலை- பண்புத்தொகை. ஊண்-உண்ணப்படுவது; செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதிமுதல்நீண்ட பெயர். உகந்து இரந்த என்னும் பொரு

ளில் 'உகந்த' என்றது, காரியத்தைக் காரணமாகக் கூறின உபசாரவழக்கு. உம் - உயர்வுசிறப்பு. அரிது-அருமையென்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று; பண்புப்பெயர், ஈறுபோய் இடைஉகரம் இஆயிற்று. ஏ - தேற்றம்.

(இங்ஙனம் அசுவத்தாமனைத் துரியோதனன் தன்பக்கத்துக்குச் சேனாபதியாக்கினால் வெல்லமுடியாதே யென்று தருமன் அஞ்சினதைத் திருவுள்ளத்திற்கொண்டு, மேல் கண்ணன் தூதுசெல்லும்பொழுது அசுவத்தாமனிடத்துத் துரியோதனன்முதலியோர்க்கு நம்பிக்கையொழியுமாறு வஞ்சனையாக மாறுபாடுசெய்தல் காண்க.) (ச)

[இவ்வகை ஈசுவரமூர்த்தி அசுவத்தாமாவைச் சேனாபதியங்கட்டினால் மற்று அவனை வெல்லுவது பரமேசுவரனுக்கும் அரிதாதலால், ஆங்கு அவனை வெல்லுமாறு அருளிச்செய்வாயாக என, கேட்டு யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் 'அசுவத்தாமனைச் சகதேவன் வெல்வான்' என்றல்.

105.—(இ - ள்.) சாதாரணம் செய்யும்- (உன்னால்) மற்றையோரைப் போலப் பொதுப்படஎளிமையாக நினைத்தல்செய்யப்படுகிற, சாதேவன்கோமானை - சகதேவனாகிய அரசனுக்கு, சேனாபதி பட்டம் சேர்த்தினால்-சேனைத் தலைவனுக்கு உரிய பட்டத்தைக் கட்டிவிட்டால்,—(அவன்), சித்திரம் தேர் ஓட்டி - அழகிய (தனது) தேரை விசையாகச்செலுத்தி, மீது ஓடி - அவ்வசுவத்தாமன்மேல் விரைவாக (எதிர்த்து)ச்சென்று, அடர்த்து - நெருங்கிப் போர்செய்து, அச்சுவத்தார் கோமான் வெம் போரை - அவ்வசுவத்தாமனது கொடியயுத்தத்தை, செயித்து - வென்று, வரும் - மீள்வான்; (எ - று.)

எதிரிகள் அசுவத்தாமனைச் சேனாபதியாக்கி அவனால் நம்மைவெல்விக்கத் தொடங்குங்காலத்து நாம் சகதேவனைச்சேனாபதியாக்கிவிட்டால், இவன் தனது திறமையால் உடனே அவனை யெதிர்த்துப் பொருது வெல்வான் என்பதாம்.

'சாதாரணம் செய்யும்' என்பதற்கு - சாமானியமாகவன்றி விசேஷமாக நினைக்கப்படாத என்று கருத்து. இனி, சேனாபதியாக்காத நிலைமையில் இலேசாகப் போர்செய்கிற எனப் பொருள்கொள்ளினும் அமையும். அன்றி, எப்படிப்பட்ட வீரரது போரையும் தனதுவீரத்தால் எளிமையாகச் செய்கிற என உரைத்தலும் அமையும். இனி, சாதா என்பதை - ஸதா என்னும் வடசொல்லின் நீட்டல்விகாரமாகக் கொண்டு, சாதா-எப்பொழுதும் [இடைவிடாமற் சோர்வின்றி],ரணம் செய்யும் - போர்செய்யுந்தன்மையுள்ள என்று உரைப்பாரும் உளர்.

சாதேவக் கோமான் - சகதேவனாகிய கோமான் என இருபெயரொட்டுப்பண்புத்தொகை; உயர்திணைப்பெயரீறு கெட்டு வலியிரட்டிற்று; "சில விகாரமா முயர்திணை" [நன் - உயிர் - கூ.] 'கோமானை' என்ற இரண்டனுருபு 'கோமாற்கு' என நான்கனுருபின்பொருளில் வந்ததனால், உருபுமயக்கம்; [நன் - பெயர் - சு0:] "செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்" என்ற இடத்துப்போல. இனி, சகதேவனைச் சேனாபதிப்பட்டத்தை அடைவித்தால் என இரண்டுசெயப்படுபொருள்வந்த வினையாகக் கொண்டாலுங் குற்றமில்லை. வரும் - செய்யும் என்னும் வினைமுற்று ஆண்பாலுக்கு வந்தது; [நன் - வினை - உக.]

ஸாதாரணம், ஸஹதேவன், சித்ரம் என்னும் வடசொற்கள், திரிந்தன. ஜயம் என்னும் வடசொல்லினடியாகப் பிறந்த சயித்து என்னும் வினையெச்சம், மோனைப்பொருத்தத்தை நோக்கி 'செயித்து' என விகாரப்பட்டது.

இனி, சாதேவக்கோமானைச்சேனைபதிப்பட்டஞ்சேர்த்தினால்—,(அவன்), சித்திரத்தேர் ஓட்டி மீது ஓடி—, அச்சுவத்தார்கோமான் அடர்த்து வரும் வெம்போரைச் செயித்து - அசுவத்தாமன்நெருங்கிவந்துசெய்யுங்கொடியபோரை வென்று, சாதாரணம் செய்யும் - (அவனை) எளிமையாகச் செய்துவிடுவான் என்று முடித்து உரைத்தலுமாம். (ரு)

[என, கேட்டு, யாதுசொன்னான் தருமபுத்திரன்:]

தருமன் 'கர்ணனது கவசகுண்டலங்களை அழிப்பார் ஆர்' என்றல்.

106.—(இ - ள்.) ஐயனே - தலைவனே! கன்னனுடன் செய்யும் செருவில்-கர்ணனோடுசெய்யும்போரில், உய்ய உடன் பிறந்த ஒள் கவசம் சிதைக்க வல்லான்- (அவன்என்றும்இறவாதுபிழைத்திருக்கும்படி அவன் பிறக்கையில்) அவனோடுகூடவே பிறந்த (அவனது) ஒளிபொருந்திய கவசத்தை அழிக்க வல்லவன், இந்திரனே அன்றி- (தேவராசனான)இந்திரனேயல்லாமல், வந்து போர் செய்வார்கள் - (இவ்வுலகத்தில் அவனை எதிர்த்து) வந்து போர் செய்பவர்களுள், மற்று யாரும் இணை இல்லையே - வேறு எவரும் (அவனுக்குச்) சமானமில்லையே; (எ - று.)

கர்ணனுடன் கூடவேபிறந்து அவனை விட்டுப் பிரியாமல் தாம்அழிபடாதவரையில்அவனுக்குஅழிவுஉண்டாகாதாதலால் அவனதுஉயிர்க்கு உறுதியைச் செய்கிற கவசகுண்டலங்களைப் போரில் அழித்தல் தேவராசனொருவனுக்கே யன்றி இந்நிலவுலகத்து அரசரெவர்க்கும் ஆகாதன்றோ என்பதாம்.

பாண்டவர்கள்தாயான குந்திதேவி, கன்னிகையாயிருக்கும்பொழுது, தனக்குத் துருவாசமுனிவன் உபதேசித்த மந்திரத்தைப் பரீட்சித்தறியும் பொருட்டுச் சூரியனைநினைத்து அம்மந்திரத்தை உச்சரிக்க, உடனே அத்தேவன் வந்து அவளுக்கு அனுக்கிரகித்ததனால், அவளிடம் பிறந்த புத்திரன், கர்ணன். இவனைப் பிறந்தபொழுதே குந்தி மானத்துக்கு அஞ்சி ஒருமிதக்கும் மரப்பெட்டியில் வைத்துப் பூட்டிக் கங்கையாற்றில் விட்டிட, அதனைத் திருதராட்டிரனது தேர்ப்பாகனான அதிரதனென்பவன் கண்டு எடுத்துத் திறந்து பார்த்துக் கொண்டுபோய்த் தன்மனைவியாகிய ராதையுந் தானுமாக வசுசேனனென்று பெயரிட்டு வளர்த்தான். இவனுக்கு 'கர்ணன்' என்ற பெயர் ஆகாசவாணி இட்டது. அப்பெயர், கர்ணகுண்டலங்களோடு பிறந்ததுபற்றினது. காதின்வழியேபிறந்ததனால் வந்த பெயரென்றுங் கூறுவர்; கர்ணம்-காது. இவன் பிராமணவேடம்பூண்டு பரசுராமனை யடுத்து அவனிடம் வில்வித்தைகற்று வல்லவனாய்ப் பின்பு துரியோதனனுக்குப்பிராணசிநேகிதனாகி அவனருளால் அங்கதேசத்துக்கு அரசனாயினான். "மண்டலத்தின் மன்னரெல்லாம் வந்து மலைந்தாலுங், குண்டல முண்டாகக் கொலப்படான்" என மேல் இந்நூலில் வருவதனாலும், "கவசங் கனக குண்டலமென்றிரண்டு புனையிற் கற்பாந்த, திவசம் பொரினுங் கன்னனுயிர் செகுப்பார் மண்ணிற் சிலருண்டோ" என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தாலும், கவசகுண்டலங்களின் சிறப்பை யறிக. அவற்றிற்கு இத்தன்மை, சூரியனது வரத்தினால் அமைந்தது. கவசம் - குண்டலத்துக்கும் உபலக்ஷணம்; உபலக்ஷணமாவது - ஒருமொழி, ஒழிந்த தன்இனத்தையுங் குறிப்பது: [நன் - பொது - எ.] மேலும் இந்நூலிற் பலவிடத்தும் இவ்வாசிரியர் கவசகுண்டலங்களை 'கவசம்' என்றாவது, 'குண்டலம்' என்றாவது ஒருசொல்லாலே குறிப்பர்.

உய்ய - செயவெனெச்சம் காரியப்பொருளதாதலால், எதிர்காலம். 'உடன்' என வந்த இரண்டனுள், முன்னது - பிரியாமைப்பொருளது; பின்னது - மூன்றாம்வேற்றுமைச்சொல்லுருபு. ஒண்கவசம் - ஒண்மை+கவசம்: ஒள்ளிய கவசம்; பண்புத்தொகை. கவசம் - உடம்பின்மேற்சட்டை. இங்

திரனே, ஏ - உயர்வுசிறப்போடு பிரிநிலை. இல்லையே, ஏ - தேற்றம். 'அன்றி'- எதிர்மறைக்குறிப்புவினையெச்சம்; றி - விகுதி. மற்று என்னும் இடைச்சொல்- இங்கே, பிறிது என்னும் பொருளது.

கர்ணன், இந்த்ரன் என்ற வடசொற்கள், திரிந்தன. கவசம் - வடசொல். 'ஆர்ய' என்னும் வடசொல், பிராகிருதபாஷையில் 'அய்ய' என்று ஆகித் தமிழில் 'ஐய' என நிற்கும்.

(இங்ஙனம் தருமன் கர்ணனது கவசகுண்டலங்களைப்பற்றிக் கவலைப்பட்டதைத் திருவுள்ளத்திற்கொண்டு மேல் கண்ணன் தூதுசெல்கையில் அவற்றை இந்திரனைக்கொண்டு தந்திரஞ்செய்து நீக்குவிக்குமாறு காண்க.) (சு)

[இவ்வகை தருமபுத்திரன் சொல்ல, கேட்டு யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் 'கர்ணனை அபிமன் வெல்வான்' என்றல்.

107.—(இ - ள்.) கொற்றம் - வெற்றியை விளக்குகிற, அரவு-பாம்பின் வடிவமெழுதிய கொடியை, உயர்த்த-உயரநாட்டியுள்ள, கோமான்-தலைவனான துரியோதனராசனது, தனி- ஒப்பில்லாத, துணைவன்- சிநேகிதனான கர்ணன், பெற்ற - (இயற்கையிற்) பெற்றுள்ள, கவசம் - கவச குண்டலங்களை, பிளப்பதற்கு—, வெற்றி கொள்ளும் இந்திரனே அன்றி- (பலபோர்களிலும்) சயத்தையடையுந்தன்மையுள்ள தேவேந்திரனே வல்லவனென்பதல்லாமல், இளையான் அபிமன் கை மந்திரம் வில்லே - இளம்பிராயமுடையவனான அபிமந்யுவினது கையிலுள்ள மந்திரசக்தியோடுகூடிய வில்லே, அதற்கு மாறு - அந்தக்கவசகுண்டலங்களை அழிப்பதற்கு ஏற்ற எதிர்; (எ - று.)

கர்ணனது கவசகுண்டலங்களைப் பிளப்பதற்கு நீசொன்ன இந்திரனேயல்லாமல் நான் சொல்லுகிற அபிமன் வில்திறத்தால் மிகவல்லான் என்பதாம். கர்ணனை இங்கே 'அரவுயர்த்தகோமான் தனித்துணைவன்' எனக் குறித்தது- இவனையழித்திட்டால், இவனதுஉதவியை முக்கியமாகக்கொண்டு அதனால் வெல்லக்கருதியிருக்கிற துரியோதனனையும் எளிதில் அழித்திடலாம் என்பதைக் குறிப்பித்தற்கு. தனது கொடுமைக்கு அடையாளமாகத் துரியோதனன் பாம்பைக் கொடியிற் கொண்டனன்போலும்; அதனால், அவனது நன்றியறிவின்மையும், எப்பொழுதும் வக்கிரகதியிற்செல்லுந்தன்மையும், நாவிரண்டுடைமையும் விளங்கும். 'மந்திரவில்' என்றது, மந்திரத்தோடு விடப்படுகிற அஸ்திரங்களுடன் கூடின வில் என்றபடி.

கொற்றம்-பகைவரைக் கொன்று பெறுவது என்ற காரணத்தால் வெற்றியைக் குறிக்கும்; தொழிற்பெயர்: கொல் - பகுதி, அம் - விகுதி, று - சாரியை, மற்றவை - சந்தி. அரா என்னுங் குறியதன்கீழ் ஆ, குறுகி உகரமேற்று 'அரவு' என நின்றது. கீழ் இரண்டாம்பாட்டில் 'மூரசம்' என்றது போல, இங்கே 'அரவு' என்றதும் இருமடியாகுபெயர். பிளப்பதற்கு, அன்- சாரியை. ஏகாரங்கள் - பிரிநிலை. இளையான் - போரில் இளைக்ாதவனென்றும் பொருள்கொள்ளலாம். முந்தினபொருளில், இளையான் என்பது - இளமையென்னும் பண்புப்பகுதியடியாப் பிறந்த உடன்பாட்டுக் குறிப்புவினையாலணையும்பெயர்; பண்புப்பெயர், ஈறுபோய் இடை அகரம் ஐயாயிற்று. பிந்தினபொருளில், இளையான் என்பது - இளை என்னும் வினைப்பகுதியடியாப் பிறந்த எதிர்மறைத்தெரிநிலைவினையாலணையும்பெயர். இப்படிப்பட்ட சொல்லில், இளை - பகுதி, ஆன் - ஆண்பால்விகுதி, எதிர்மறைஆகாரம் புணர்ந்து கெட்டது எனக் கூறுதல் மரபு: ஆ - எதிர்மறையிடைநிலை, ன் - ஆண்பால் விகுதி யெனக் கொண்டாலும் தவறாகாது. 'பிளப்பதற்கு', நான்கனுருபு- தகுதிப்பொருளது; 'அதற்கு' என்பதில் பகைப்பொருள்.

அபிமந்யு, மந்த்ரம் என்ற வடசொற்கள் திரிந்தன.

அபிமந்யு - அருச்சுனன் தீர்த்தயாத்திரைசென்றபொழுது அவனுக்குக் கண்ணன்தங்கையான சுபத்திரையினிடம் பிறந்தவன்: அருச்சுனனது புத்திரரிற் சிறந்தவன்; இவன், பன்னிரண்டுவருஷகாலம் பீஷ்மனிடத்தில் தநுர்வேதம்பயின்று வல்லவனாயினதேயன்றி, கண்ணனிடத்தும் அருச்சுனனிடத்தும் அநேகம் அஸ்திரசஸ்திரங்களையும் யுத்தரகசியங்களையும் அறிந்துள்ள திறமையுடையான். அபிமந்யு என்ற பெயர் - மிக்ககோபமுடையவனெனக் காரணப்பொருள்படும். (எ)

[அதுகேட்டு, பின்னை யாதுசொன்னான் தருமபுத்திரன்:]

தருமன் 'வீடுமனை வெல்வார் யார்?' என்றல்.

108.—(இ - ள்.) வேத அதிபனே-வேதங்களுக்குத் தலைவனே! மூதாதை-பாட்டனான வீடுமனது, கையின் - கையினின்று, முனிந்து வரும் - கோபித்துஎதிர்த்துவருகிற, சக்கரத்தை- சக்கராயுதத்தை, விலக்குதற்கு-தடுப்பதற்கு, இ மண் உலகில் - இந்தப் பூலோகத்தில், மற்றும் ஒரு வீரர் யார்தானும் உளரோ - வேறும் ஒரு வீரர் எவராயினும் உள்ளாரோ? வெற்றி கொள்வார்தம்மை- (அவ்வீடுமனைச்)சயங்கொள்ளத்தக்க நமதுபக்கத்தாரை, விளம்பு - (இன்னாரென்று) சொல்; (எ - று.)

போரிற்கோபங்கொண்டு வீடுமன் சக்கராயுதத்தை நம்மீது பிரயோகிப்பானானால், அதனைத் தடுக்கவல்லார் எவரும் இல்லையன்றோ? உளராயின் சொல்வாய் என்பதாம். இதனால், திருமால்கையில் சுதரிசனமென்னுஞ் சக்கரம் போல, வீடுமன்கையில் சிறந்ததொரு சக்கரம் உள்ளதென்று தெரிகிறது; அடியில் வருகிற வசனத்தையுங் காண்க. இனி, சக்கரமென்பதற்கு - சிறந்த ஆயுத மென்ற மாத்திரமாக, வில்லென்று பொருள் கொள்ளுதலும், மண்டலாகாரமாகவளைக்கப்பட்ட வில்லென்று பொருள் கொள்ளுதலும் ஒன்று. முனிந்து வருஞ் சக்கரம் என, ஆயுதமேந்தும் வீரனது சினம் ஆயுதத்தின்மேல் ஏற்றிக்கூறப்பட்டது; இது, ஒருவகை உபசாரவழக்கு. வேதாதிபன் என்ற வடமொழித் திருநாமத்துக்கு- வேதங்களை முதலில் வெளியிட்டவனென்றும், வேதங்களால் துதிக்கப்படும்பொருளாகவுள்ளவனென்றுங் கருத்து. 'மற்றும்' என்றதனால், 'உன்னையன்றி' என்பது ஒருவாறு குறிப்பிக்கப்படும்.

தாதை - தாத என்னும் வடசொல்லின் திரிபு. மூதாதை என்ற சொல்-வினைத்தொகையாய், மூத்த தந்தை யெனப் பொருள்படுவ தாயினும், தந்தைக்குத்தந்தையான பாட்டனுக்கே பெயராக வழங்கும். இத்தொடரை முதுமை+தாதை எனப் பிரித்துப் பண்புத்தொகையாகக் கொண்டு "ஈறுபோதல்" என்னுஞ் சூத்திர விதியாற் புணர்த்தல் முற்றிலும் சுற்றுவழி யென விடுக்க. திருதராட்டிரன் பாண்டு இவர்களது தந்தையான விசித்திரவீரியனுக்குத் தமையனாதலால், வீடுமன், கௌரவபாண்டவர்களுக்குப் பெரியபாட்டனாவன். கையின், இன்-ஐந்தனுருபு, நீக்கப்பொருளது. சக்கரம்- சக்ரம் என்னும் வடசொல்லின் திரிபு. வேத+அதிபன் = வேதாதிபன்; வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி: 'அஆமுன் அஆவரின் இரண்டுங்கெட ஓர்ஆகாரம் தோன்றும்': வேதம்என்பதற்கு - (நன்மைதீமைகளை விதிவிலக்குக்களால்) அறிவிக்கும் நூலென்று வடமொழியில் அவயவப்பொருள். அதிபன் - நன்றாகக்காப்பவன். விலக்குதற்கு- கு விகுதி காலங்காட்டும் எதிர்கால்வினையெச்சம்; து அல் இரண்டும் - சாரியை: இதனைத் தொழிற்பெயரின்மேல் வந்த நான்கனுருபாகக் கொள்ளுதலும் ஒன்று. யார்

தானும், உம் - இழிவுசிறப்பு. மற்றும், உம் - இசைநிறை. உளர், உள் - பண்படி: பகுதி. ஓ - எதிர்மறை.

மண், உலகு - ம்ருண், லோகம் என்னும் வடசொற்களின் திரிபுகள்; இவற்றைத் தனியே தமிழ்மொழி யென்பாரும் உளர்.

(இங்ஙனம் தருமன் வீடுமனைப்பற்றி அஞ்சினதனால், இவ்வச்சத்தை நீக்கும்பொருட்டாகவே, மேல் மூன்றும்போரில் கண்ணன் முன் தான் செய்த சபதத்தையும் மறந்து சக்கரமேந்தி வீடுமனுடன் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்குதலும், பத்தாம்போரில் சிகண்டியை வியாசமாக முன் நிறுத்தி அருச்சுனனைக்கொண்டு வீடுமனை யழித்திடுதலுங் காண்க; "வஞ்சின மறந்து நேமியுந் தரித்து வலம்புரி குறித்து மூதாதை, துஞ்சிட வமரிற் சிகண்டி செய் தவத்தின் தொடர்பயன் வழாவகை துரந்தாய்" என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தின் கருத்தையும் நோக்குக.) (அ)

[என்பது: ஆதிதேவன் அநந்தசயனன் லோகநாதன் காலசக்கிரம் ஸ்ரீவிஷ்மன்கையிற் சக்கிரம் வந்தால் யாவராலுந் தாங்கரிது: மற்று அதற்குச் செயற்பாலது என்கொலோ? என்று சொல்லக் கேட்டு யாதுஅருளிச் செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் 'வீடுமனை வெல்வது என்கடமை யன்றே' என்றல்.

109.—(இ - ள்.) மன்னவனே! - தருமராசனே! அது-அவ்வீடுமன்சக்கரம், வந்த ஆ- வரும்விதத்தை, காண்கும்-(அப்பொழுது நாம்) பார்ப்போம்: (அதற்காக), நீ—, சிந்தை மீது ஊர்ந்து - கவலை மேன்மேல் அதிகப்பட்டு, சிதையாதே - வருந்தாதே; உந்தை - உங்கள்பாட்டனான வீடுமன், பொரும் போது- போர்செய்யும்பொழுது, போர் களத்தில் - யுத்தகளத்திலே, போர் விசயன் தேரில்- போர்செய்யவல்ல அருச்சுனனது தேரில், இருந்தோமுக்கு அன்றோ - வீற்றிருக்கும் எமக்கன்றோ, இயல்பு - (அவ்வீடுமன்சக்கரத்தைத் தடுத்தலாகிய) கடமை (உள்ளது); (எ - று.)

அந்தவீடுமனது சக்கரம் வரும்பொழுது அதனைத் தடுத்தற்கு ஏற்ற பரிகாரத்தையும், அதனால் அது படும் பாட்டையும் பார்ப்போம்; அதனைப்பற்றி நீ இப்பொழுதுதொடங்கி மிகக்கவலைப்படவேண்டா: போர்க்களத்தில் அருச்சுனனதுதேரில் சாரதியாக வீற்றிருக்கப்போகிற நாம் விட்டிடுவோமா என்பதாம். 'வந்தவாகாண்குமது' என்பதற்கு - அது நம்மேல் வர மாட்டாது என்பதும் கருத்தாகலாம்.

ஆ - ஆறு என்பதன் விகாரம். வருமாறு என்னும் பொருளில் 'வந்தவாறு' என்றும், இருப்போமுக்கு என்ற பொருளில் 'இருந்தோமுக்கு' என்றுங் கூறியவை, இயல்புபற்றிய காலவழுவமைதி; அல்லது, விரைவுந் தெளிவும்பற்றியவை யென்னவுமாம். காண்கும்-தன்மைப்பன்மை யெதிர் கால வினைமுற்று; கும் - விகுதி: [நன் - வினை - கஉ.] அதுவே எதிர் காலங் காட்டும்: [நன் - பத - கஅ.] காண்கும், இருந்தோம் என்பன - உயர்வுபற்றி வந்த தனித்தன்மைப்பன்மை. மன் - பெருமை: உரிச்சொல்; அதனை யுடையவன், மன்னவன்: அ - சாரியை. மற்று - வினைமாற்று. சிந்தை - சிந்தா என்னும் வடசொல், ஈறுதிரிந்தது; "ஆவீறு ஐயும்." சிதையாதே - எதிர்மறையேவலொருமைவினைமுற்று; சிதை - பகுதி, ய் - சந்தி, ஆ - எதிர்மறையிடைநிலை, த் - எழுத்துப்பேறு: அல்லது, து - சாரியை, உகரம் கெட்டது; ஏ - ஏவலொருமைவிகுதி. உந்தை யென்பதில், நீர் என்னும் பகுதி உம் என விகாரப்பட்டது; தை - முறைமைவிளக்கும் விகுதி. உம் தந்தை என்பதன் மரூஉ என்பர் சிலர். பாட்டனைத் தந்தையென்றது, ஒரு மரபுவழுவமைதி. களம்-கலம் என்னும் வடசொல்லின் திரிபென்பர். போது-

பொழுது என்பதன் மரூஉ; போழ்து என்றும் வழங்கும். இருந்தோம் - வினையாலணையும்பெயர்; உ - சாரியை. அன்று, ஓ - தேற்றம். இயல்பு - இயல் என்னும் பகுதியின்மேல் வந்த தொழிற்பெயர்; பு - விகுதி.

விசயன், பார்த்தன், பற்குனன், கிரீடி, சுவேதவாகனன், பீபற்சு, கிருஷ்ணன், சவ்வியசாசி, (பாகசாசனி, நரன், ஜிஷ்ணு) என்பன - அருச்சுனனது மறுபெயர்களாம். விஜயன் என்ற வடசொல்லுக்கு - விசேஷமான வெற்றியையுடையவனென்று பொருள்; இராசசூயயாகத்திற்காக வடக்கிற்சென்று பலஅரசர்களை வென்றதனாலும், காண்டவதகனகாலத்துத் தேவர்களைச் சயித்ததனாலும், பாசுபதம் பெறுகையில் பரமசிவனை யெதிர்த்து விற்கழுந்தால் முடியில் அடித்ததனாலும், பின்பு தேவர்க்குப் பகைவரான நிவாதகவசகாலகேயர்களை வதைத்ததனாலும், மற்றும்பலவெற்றிகளாலும் இவனுக்கு இப்பெயர் அமைந்தது. இனி, இதற்கு - தன்னைச்சயிப்பார் எவரும் இல்லாதவனென்ற பொருளும் உண்டு. முன்னையபொருளில் வி - விசேஷமும், பின்னையபொருளில் வி - எதிர்மறையுங் குறிப்பன. (கூ)

[என, கேட்டு, தருமபுத்திரன் சொல்லுவான்: எம்பெருமானே! மகாரதரையெல்லாம்வெல்லுமாறு அருளிச்செய்தாலும் நின் திருவுள்ளக்கருத்தை யாவராலும் வெல்லவொண்ணாது என்று, பின்னும் யாதுசொன்னான் தருமபுத்திரன்:]

கண்ணனைநோக்கித் தருமன் 'உற்றாரைக்கோல்லுதல் தகுதியோ' என்றல்.

110.—(இ - ள்.) முந்து-முன்பு [இராமாவதாரகாலத்தில்], இலங்கை ஊர் - (இராவணனது) லங்காபுரியை, அறுத்த - அழித்த, எந்தை - எங்கள் தலைவனே! தந்தை ஆவானும் - (உலகத்துக்கெல்லாம்) தந்தையாகுபவனும், தருமம் வளர்ப்பானும் - தருமத்தை (அழியாமற்பாதுகாத்து) விருத்திசெய்பவனும், எந்தை ஆவானும் - (அன்புடைமையால்)எங்களுக்குத் தந்தைபோல்பவனும், நீ - நீயே; உரைத்தவர்கள்தம் உயிரை - கீழ்க்கூறப்பட்ட (விதுரன்முதலிய) உறவினர்களது உயிரை, வேர் அறக்கல் - (போரில்) ஒழித்தல், எங்களுக்கு—,ஆமோ - தகுதியாகுமோ? விளம்பு - சொல்லு; (எ - று.)

மூலகாரணமாய்நின்று படைத்தல்தொழில்செய்கையால் உலகமனைத்துக்குந் தந்தையாகிறவனும், எப்பொழுதும் அறத்தை நிலைநிறுத்துதலை மேற்கொண்டு நடப்பவனும், மக்களுக்குத் தந்தைபோல எங்களுக்கு ஆவனசெய்தருள்பவனும் ஆகிய உனக்கு ஆகாத காரியமும், தெரியாத செய்தியும் இல்லை. வீடுமன் பெரியபாட்டனும் விதுரன் சிற்றப்பனும் அசுவத்தாமன் குருபுத்திரனும் இங்ஙனமே மற்றையோரும் நெருங்கினஉறவினரும் அன்புவைக்கத்தக்கவருமாக உள்ளதனால், இவர்களையெல்லாம் போரிற்கொல்லுதல் அதருமமன்றோ? சொல்வாய் என்பதாம். ஆதலால், போருக்கு இடமில்லாமல் சாமதானபேதங்களில் ஒன்றால் துரியோதனனிடத்தினின்று அரசுபெறுமாறு மற்றுமொருகால் முயலவேண்டும் என்பது கருத்து; அது,அடுத்தகவியில் விளங்கும். "குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங் கொன்று போர்வென், றரவநெடுங் கடலாடை யவனியெலாந் தனியாளு மரசுதன்னின், கரவுறையு மனத்தாதை முனிக்குரைத்த மொழிப்படியே கானந்தோறும், இரவுபகற் பலமூல சாக நுகர்ந் துயிர்வாழ்த லினிதுநன்றே" என்பது வில்லிபுத்தூரார்பாரதம்.

முந்து - பழமைகுறிக்கும் ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணர்கின்ற இடைச்சொல். முந்து அறுத்த என இயையும்; முந்து இலங்கை என இயைத்தால், பழமையாகிய இலங்கை யென்க. லங்கா என்னும் வடமொழி, முதலில் லகரத்துக்குமுன்இகரம்பெற்று ஆவீறு ஐயாயிற்று; [நன் - பத - உக, உ0.]

இலங்கை - கடலிடைத்தீவு. இலங்கை ஊர் - இலங்கையாகிய ஊர் என இருபெயரொட்டு. 'ஊரறுத்த' என்றது, அவ்வூரிலுள்ள கொடியஅரக்கரை யெல்லாம் அடியோடு அழித்த என்றபடி. 'முந்திலங்கையூரறுத்த வெந்தை' என்றதனால், கொடியோரையழித்தலாகிய திருமாலின் இயல்பைக் குறித்தவாறு. எந்தை - அண்மைவிளி.

ஆவானும் வளர்ப்பானும் ஆவானும் நீ-முன்னிலையில் படர்க்கைவந்த வழுவமைதி; [நன் - பொது - உக.] தந்தை என்பதில், தாம் - பகுதி; அது முதல் குறுகிற்று: தை - முறைப்பெயர்விகுதி. இதனை 'தாத' என்னும் வடசொல்லின் திரிபாகக் கொள்ளுதலும், இதற்கு - தந்தவனென்றுகாரணப்பொருள் கூறுதலும் பொருந்தாவாம்; எந்தை உந்தை நுந்தை என்றவற்றோடும், தம்பி தமையன் தங்கை தமக்கை என்பவற்றோடும் இயையாவாதலால். எந்தை என்பதில், யாம் என்னும் பகுதி எம்என விகாரப்பட்டது; தை - முறைப்பொருள்விகுதி: இனி, எம்தந்தை யென்பது எந்தை என மருஉவாயிற்று என்பாருமுளர். தர்மம் - வடசொல். எங்களுக்கு - தம்பியரை உளப்படுத்திய தன்மைப்பன்மை. உரைத்தவர்கள்—உரைக்கப்பட்டவர்கள்; செய்வினை செயப்பாட்டுவினைப்பொருளில்வந்தது; கள் - விகுதிமேல்விகுதி. 'உரைத்தவர்கள்தம்உயிர்' என்பதில், தம் - சாரியை: ஆகவே, ஆறும்வேற்றுமைத்தொகையாம்; இனி, 'தம்' என்பதை ஆறனுருபென்பாரும் உளர். இவ்வாறும்வேற்றுமை - உடையதும் உடைமையும் வேறாகாத ஒற்றுமைக் கிழமைப்பொருளது. ஆம் - ஆகும் என்பதன் விகாரம்; [நன்-வினை - உஉ.]

இனி, இப்பாட்டுக்கு, கீழ்க்கூறப்பட்ட விதுரன் முதலியோரது உயிரை நிர்மூலஞ்செய்தல் முடியுமோ வென்று தருமன்வினவினதாகப் பொருள்கூறுதல், கூறியதுகூறல் என்னுங் குற்றத்திற்கு இடமாகுதலால், சிறிதும் பொருந்தாது; அன்றியும், அடுத்துவரும்பாடலோடும் இயைபில்லாததாம்: வில்லிபுத்தூரார்பாரதமும் அக்கருத்துக்கு இடங்கொடாது. உரைத்தவர்கள்-வனவாசஅஞ்ஞாதவாசங்களின்பின் நாடுதருவதாகக்கூறியவரென்றலுமொன்று.

[என்பது - தேவராசனே! முன்னம் நீ மூனிந்த இடங்கள் நின்னாற் செய்யப்பட்ட பராக்கிரமங்கள் எல்லாம் என்காயம்விட்டு நீங்காது; அதுவுமன்றி, நின்னோடு எதிர்மலைந்த மாபதியர் மாளும்படிக்கு மதிமயக்கிட்ட சர்வமாயைவல்லானே! இது ஒருதன்மங் கேட்பாயாக என்று ஸ்ரீவாசுதேவனை நோக்கி யாதுசொன்னான் தருமபுத்திரன்:]

தருமன் கண்ணனை 'நீ தூதுசெல்லவேண்டும்' என்றல்.

111.—(இ - ள்.) மாதவனே-திருமகள்கணவனே! மாயவனே-மாயையுடையவனே! மாலவனே - மாலென்னுந் திருநாமமுடையவனே! நின்னை - உன்னை, செல - செல்லும்படி, விட்டால் - (துரியோதனனிடம்) தூதனுப்பினால், சீர் நாடு தாரான் ஏல் - (நீ சென்றுகேட்கையிலும் அவன்) சீர்வளமுள்ள குருநாட்டின்பாகத்தைக் கொடுத்திடானாயின், பின்னை - அதன்பின்பு, பொருகை- (நாம் எதிர்த்துச்சென்று) போர்செய்தல், பிழை அன்றே - குற்றமாகாது; (ஆதலால்), உன்னை எமக்கு ஓர் தூதுவனா ஆக்க துணி- உன்னையே எங்களுக்கு ஒருதூதனாகச்செய்யும்படி நிச்சயித்தருள்வாய்; (எ-று.)—காண்-முன்னிலையசை; தேற்றமுமாம்.

முன்ஒருமுறை புரோகிதனைத் தூதனுப்பினதே யன்றி மீண்டும் ஒருமுறை எல்லாஉபாயங்களிலும் வல்லவனான உன்னையே தூதனுப்பினால், நீயே நேரிற்சென்று தந்திரமாகக்கேட்கவும் துரியோதனன் இராச்சியபாகங் கொடுத்திடாது மறுப்பானாயின் அதன்பின் நாம் அப்பக்கத்தாரைப் போரில் அழிப்பது தவறாகாது; ஆதலால், நீ எங்களுக்காக ஒருகால் தூதுசென்

றருளவேண்டுமென வேண்டினவாறு. முதல்மூன்றுஉபாயங்களில் வழிப்படாத எதிரிகளை முடிவில் தண்டோபாயத்தால் தொலைத்தல் இராசநீதியாதலால், அது பழிபாவங்களுக்கு இடமாகா தென்பது கருத்து. பொறுமையில்லாமல் இஷ்டபந்துக்களை அழிக்கத்தொடங்கிவிட்டோமென்று பின்பு ஒருவர் சொல்லுதற்கு இடமில்லாதபடி பகைவர்கள்கொள்கையை முழுவதுந் தெளிவாக முன்னமே அறிந்திடுதல் அவசிய மென்பதாம். "நீ தூதுநடந்தருளி யெமதுநினைவு அவர்க்கு உரைத்தால் நினைவின்வண்ணம், தாதூதி யளிமுரலுந் தண்பதியுந் தாயமுந் தான் தாரானாகில், மீதூது வளைக்குலமும் வலம்புரியும் மிகமுழங்க வெய்ய காலன், மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும் பெறுவன் இது வசையுமன்றே" என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தையும் நோக்குக.

செல - செல்ல என்பதன் தொகுத்தல். விட்டால் - எதிர்காலவினையெச்சம்; விடு - பகுதி, ஆல் - காலங்காட்டும் விகுதி, டகரத்தோற்றம் - விரித்தல்விகாரம். நிலவளம் முதலிய பலவளங்களுக்குங் காரணமான சலவளமுடைமையை விளக்குவார், 'நீர்நாடு' என்றார். தாரான் என்ற எதிர்மறைமுற்றில், ர் - விரித்தல் விகாரம். எல் - என்னில் என்பதன் மரூஉ. பின்னை, ஐ - சாரியை; இது - பிறசாரியைகளைப் பெற்று, பின்னர், பின்னால், பின்னே, பின்பு எனவும்நிற்கும்: முன் என்பதும் இவ்வாறே. பின் - இங்கே, காலம். பொருகை - கைவிகுதிபெற்ற தொழிற்பெயர். அன்றே - தேற்றம்.

மாதவன் - வடசொல். மாயவன் - மாயையையுடையவன்; மாயையாவது - கூடாததையுங் கூட்டுவிக்குந் திறம்; ஆச்சரியகரமான குணங்களுஞ் செயல்களு மாகலாம்: இனி, மாயவன் - மாயைபோலக் கருநிறமுடையானென்றுங் கொள்வர். 'மாலவன்' என்பதற்கு - பெருமையுடையவனென்றும், (அடியார்களிடத்து) மிக்கவிருப்பமுடையவனென்றும், (திருமகள் பக்கல்) ஆசைமிகுதியுடையானென்றும் பலவாறு காரணப்பொருள் உரைக்கப்படும். மற்று - வினைமாற்று. ஒன்று + தூதுவன் = ஓர்தூதுவன்; [நன் - உயிர் - ௫௮, ௬௬.] தூது + அன் = தூதுவன்; சிறுபான்மை குற்றியலுகரம் கெடவில்லை. ஏ - இழிவுசிறப்பு. ஆக்க, ஆக்கு - பகுதி; ஆ - தன்வினைப்பகுதி யென்றால் கு - பிறவினைவிகுதி யென்றும், ஆகு - தன்வினைப்பகுதி யென்றால் பகுதி ஒற்றிரட்டிப் பிறவினை குறித்த தென்றுங் கொள்க. இப்பாட்டில், மூன்றாம்அடி - முற்றுமோனை. (௧௧)

[என்பது: மற்றுங்கும் உரைத்து வாழ்கின்ற மன்னவனுள்ளிட்ட குருகுலத்தோரில் எங்கட்கு அன்னியமாவாரு மில்லை: தாய் தந்தை சுவாமி யாவாரும் மித்ரபாந்தவத்தொடக்கத்தாரும் அவரே கண்டாய்; ஆதலால், எத்தனையும் வெகுளியெய்தாது குருக்ஷேத்திரங்குன்றாமல் எங்கட்கு ஒருதூதாமாறு துணிந்து துரியோதனனளவும் எம்பெருமானே எழுந்தருளி அர்த்தராச்சியம்பெறினும் வேண்டிக்கொண்டு போதுவாயாக என்று ஸ்ரீவாசுதேவனை விடுக்கலுற்றபொழுது, தருமபுத்திரனை நோக்கி யாதுசொன்னான் வீமசேனன்:]

இதுவரையிற் பதினொருகவிகள் - தருமபுத்திரனுக்குங் கண்ணனுக்கும் நடந்த சம்பாஷணை; இனி, மூன்றுகவிகள் - வீமன்வார்த்தை.

வீமன் தருமனைநோக்கி 'உன்கருத்துச் சிறிதுஞ் சரியன்று' என்றல்.

112.—(இ - ள்.) மன் அவையுள் - (முன்பு) இராசசபையில், பட்ட - நடந்த செயல்களை, மறந்தனையோ - மறந்துவிட்டாயோ? மா தேவி - (நம்முடைய) சிறந்தமனைவியும், மின் அவிரும் - மின்னல்போல விளங்குகிற, நுண் இடையாள் - நுட்பமான இடையையுடையவளும் ஆகிய திரௌபதி, மெல் கூந்தல்

மின்னி இருக்க (எண்ணி) ஓ - மென்மையான (தனது) கூந்தலைப் பின்னி அலங்கரித்திருக்கும்படியாக நினைத்தோ? (அல்லது), மண் ஆள எண்ணியோ - (ஏதேனும் ஒருவிதத்தில்) பூமியை அரசாளும்படியாக நினைத்தோ? (நீ இவ்வாறுசொன்னது); குருக்கள் ஏறு அன்னார் குணம்-குருவம்சத்தாருள் ஆண் சிங்கம் போலச் சிறந்த நமக்குத் தகுதியாவது, சொல்லாய் - (இன்னதென்று) ஆராய்ந்துசொல்வாய்; (எ - று.)

'மன்னவையுட்பட்ட மறந்தனையோ' என்றது; இராசசபையில் துரியோதனன் சகுனியைக்கொண்டு வஞ்சகச்சூதாடுவித்து நமது அரசாட்சிச்செல்வத்தைக் கவர்ந்துகொண்டு அடிமையாக்கினதும், துரியோதனன் திரௌபதியைத் துச்சாசனனைக்கொண்டு கூந்தலைப்பிடித்துவலியஇழுத்துவந்து துகிலுரிந்ததும், திரௌபதியைத் துரியோதனன் தன்மடியின்மேல் உட்காரச்சொன்னதும் முதலிய அவமானச்செய்கைகளை மறந்துவிட்டாயோ? மறவாமல் ஞாபகத்திலே கொண்டிருப்பின், இவ்வாறு போரினும் சமாதானம் மேலென்று கொள்ளக் காரணமில்லை யென்றபடி. இங்ஙனம் துரியோதனன் தன்னைப்பங்கப்படுத்தினபொழுது திரௌபதி 'அத்தொடைவழியாகத் துரியோதனனுக்கு உயிர்நீங்குக' என்று சபித்து 'துரியோதனாதியர் நூற்றுவரையுங் கொன்று வெற்றிமுரசறையும்பொழுதே, இப்பொழுது துச்சாதனன் விரித்த கூந்தலை நான் எடுத்து முடித்து அலங்கரிப்பது' என்று சபதஞ்செய்துள்ளாளாதலால், அவளதுபிராணநாயகரான நாம் துரியோதனாதியரைப் போரில் தொலைத்து அவள்கூந்தலை முடிப்பித்து அவள்பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதுவே தகுதியாவ தன்றி அச்சபதம்நிறைவேறுதற்கு இடமில்லாமல் சமாதானவழியில் ஏதேனும் இராச்சியம்பெற்று அதனை ஆண்டு உயிர்வாழ்தல் பழியையொழித்துப் புகழைப்பெறுதற்கு உரிய உத்தமக்ஷத்திரிய வீரர்க்குத் தக்கதாகுமோ சொல்லுவாய் என்பது, பின்தினவாக்கியத்தின் கருத்து. 'குருக்களேறன்னார்' என்றது, தன்மையிற்படர்க்கைவந்த இடவழுவமைதி. கற்புமுதலிய உத்தமகுணங்களை யுடைமைபற்றி, 'மாதேவி' எனப்பட்டாள்.

மன் - பெருமை: அதனையுடைய மன்னர்க்குப் பண்பாகுபெயர். அவை, மாதேவி - ஸபா, மஹாதேவீ என்னும் வடசொற்களின் திரிபுகள். பட்ட - இறந்தகாலப்பலவின்பால் வினையாலணையும்பெயர். இடைக்கு மின்னல் உவமை, மெல்லியதாய்விளங்குதற்கு. மின்அவிரும் - உவமைத்தொகை. நுண்இடை, மென்கூந்தல் - பண்புத்தொகைகள். குரு என்பவன் - சந்திரகுலத்திற் பிரசித்திபெற்ற ஓரரசன்; அவனால் அக்குலம் குருகுலமென்றும், அந்நாடு குருக்ஷேத்திரம் குருநாடு என்றும், அக்குலத்தவர் கௌரவரென்றும் குருக்களென்றும் வழங்கப்படுதல் காண்க. குரு, குணம் - வடசொற்கள். அன்னார் - அன் என்னும் உவமவிடைச்சொல்லடியாப் பிறந்த பலர்பாற்பெயர். குருக்களேறன்னார் - மிருகங்களிற்சிங்கம்போல, குருகுலத்தாரிற் சிறந்தவர் என்றபடி. ஏறு - ஆண்பாற்பெயர்.

ஓகாரங்கள் மூன்றனுள், முன்னது - வினா; பின்னவை, ஐயம். சொல்லாய் - உடன்பாட்டு ஏவலொருமை; ஆய் - விகுதி. (கஉ)

[என்பது: துச்சாதனன் துரோபதியைச் சபையகத்துக் கேசக்கிரகணஞ்செய்தனென்று துரியோதனன்சொன்ன பருஷவாக்கியம் நின்சித்தபுத்தியில் வைக்கத்தக்கதில்லை; நின்முன்னாகப் படாதனபட்ட படைநெடுங்கட் பாஞ்சாலியும் சாந்துமணிப்பூணுந் துறந்து ஏகவேணியோடு அவள் இருப்ப, எம்பெருமானைத் தூதுவிடுவது கேட்டார்க்கு நகையன்றோ? என்று, பின்னுஞ் சொல்லும் வீமசேனன் :]

இதுவும் அது.

113.—(இ - ள்.) கொடு - வளைவான (அல்லது கொடுமையான), வில் - வில்லையும், வாள் - வாளையும், ஆள் - பயின்றுஉபயோகிக்கிற, தானை - சேனையையுடைய, கொற்றவனே - வெற்றியையுடைய தருமராசனே! பார் மேல் - நிலவுலகத்தில், வடு இலாள் - யாதொருபழிப்புமில்லாத திரௌபதி, பட்ட - (சபையில்) அடைந்த, வடு - அவமானம்,—ஈன்றார்க்கு - பெற்ற தந்தைதாயர்க்கு, ஓர் மா துன்பம் - ஒரு பெருந்துன்பத்தைத் தருவதும், இன்னார்க்கு - பகைவர்க்கு, ஓர் இன்னா சொல் - ஒரு கடுஞ்சொல்லைக் கூறுதற்குக் காரணமாவதும், சான்றோர்கட்கு எல்லாம் - பெரியோர்கள்யாவர்க்கும், தலை இறக்கம் - அவமதிப்பை விளைப்பதுமாக, தோன்றும் - பொருந்து மன்றோ? (எ - று.)

திரௌபதியையும் நம்மையும் பெற்று வளர்த்த குலத்தார்க்குப் பெருந் துன்பம் உண்டாகும்படியும், வேண்டாதபகைவர்கள் கண்டபடி பேசிப் பரிகசிக்கும்படியும், பெரியோர்கள் வெட்கித் தலைகவிழ்ந்து நிற்கும்படியும் துரியோதனன் திரௌபதியைச் சபையிற்படுத்திய பரிபவம் என்றும் அழியாமல் காலமுள்ளளவும் நிலைத்துநிற்கு மாதலால், அதற்குப் பிரதியாக அவர்களைப் போரில் தொலைத்துப் பழிக்குப்பழிவாங்குவதே கடமை யென்பதாம். எப்பொழுதும் ஆறாதுகிடத்தல் தோன்ற, 'வடு' எனப்பட்டது. வடு விலாள் - கற்புநிலையிற் குற்றமில்லாதவள்.

ஈன்றார், ஈன் - பகுதி. இன்னார் - இனியரல்லாதவர்; எனவே, பகைவராவர். இன்னாச் சொல் - இனியதல்லாத சொல்; இனிமை யென்னும் பண்புப்பெயர் இடையில் இகரம்கெட்டு எதிர்மறைஆகாரம்புணர்ந்து இன்னாமை யென நிற்கும். சான்றோர் - கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் நிறைந்தவர்; சால் - உரிச்சொல்: பகுதி. பெயரில் ரகரவீற்றயல் ஆ ஓவாயிற்று: [நன் - பொது - உ.] இறக்கம் - இறங்குதல்; தொழிற்பெயர்: இறங்கு - பகுதி, அம் - விகுதி, வலித்தல்-விகாரம். கொடுமை - வளைவாதலை, 'கொடுமரம்' என்னும் வில்லின்பெயரிலுங் காண்க. வில்லையும் வாளையுங் கூறினது, மற்றையாயுதங்களுக்கும் உபலக்ஷணம். வில் ஆள் வாள் தானை - வில்லை ஆளுகிற ஒளியையுடைய சேனை எனினுமாம். வாள் - ஆயுதத்தை யுணர்த்துகையில், வாளம் என்னும் வடசொல்லின் திரிபு; ஒளியை யுணர்த்துகையில், தமிழ்உரிச்சொல்: "வாளொளியாகும்" என்றார் தொல்காப்பியனார். துன்பமும் இன்னாச்சொல்லும் தலையிறக்கமுமாகத் தோன்று மெனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். தோன்றிற்று என இறந்தகாலத்தாற்கூறாமல் 'தோன்றும்' என எதிர்காலத்தாற் கூறினது, இப்பொழுது நாம் பகைதொலைத்துவிட்டால் அவ்வடுத் தீர்ந்துவிடு மென்பதை விளக்குதற்கு.

இதுவும் அது.

114.—[அன்றியும்,] (இ - ள்.) ஆற்றுவரேல் - வல்லவராயின், தோள் வலியால் - (தமது) தோள்களின் வலிமையால், கொள்வதுவும் - வெற்றி கொள்வதும், ஆற்றாரேல் - வல்லவரல்லரானால், தோற்பதுவும் - தோல்வியடைவதும், வேந்தர்க்கு - அரசர்களுக்கு, சொல்லியதே - (நூல்களிற்) கூறப்பட்ட முறைமையே; (அன்றி), மேல் - முன்காலத்தில் [இதுவரையிலும்], ஓர் மன்னவரை மண் இரந்தார் மன்னவர்கள் இல்லை காண் - ஓர் அரசரை இராச்சியமிரந்துபெற்றவர் அரசருள் எவரும் இல்லையன்றோ? இது என்ன அரசு ஆள்கை - (பராக்கிரமத்தா லன்றி யாசகத்தால் இராச்சியம் பெறும்) இது என்னஅரசாட்சி? (எ - று.)—தான் - அசை.

போரில் வெற்றிதோல்விகள் ஒருதலையல்ல வாதலால் வெற்றியைக்கருதிப் போர்தொடங்கி நடத்துமிடத்து ஒருகால் தோல்விநேரினும் அரசர்க்கு அது குற்றமாகாது; எத்தனையோ அரசர் போரில் வென்றதாகவும் தோற்றதாகவும் நூல்களினால் தெரிகிறது: எந்தஅரசரேனும் இரந்து அரசுபெற்று வாழ்ந்ததாகக் கண்டது மில்லை,கேட்டது மில்லை; இங்ஙனமிருக்க, உன்கருத்தின்படி இரந்துபெறும் அரசும் அரசாகுமோ? என்பதாம். வெல்வதானாலும் தோற்பதானாலும் போரிடுவது அரசர்க்கு மேன்மையேயல்லது யாசிப்பது மேன்மையாகாது என்பது, தேர்ந்தகருத்து.

தோள்வலி - புஜபலம். கொள்வது, தோற்பது - எதிர்காலத்தொழிற்பெயர்கள். தோற்பது, தோல் - பகுதி. கொள்வதுவும், தோற்பதுவும் - சிறுபான்மை குற்றியலுகரம் கெடாது பொதுவிதியால் வகரஉடம்படுமெய் பெற்றது. கொள்வதுவும் தோற்பதுவும், சொல்லியது - பன்மையொருமை மயக்கம்; வழுவமைதி: தனித்தனி, சொல்லியது என்பதனோடு முடிக்க. 'சொல்லியது' என்பது - இன் இடைநிலை ஈறுதொக்கது; தொகாமல்நின்றால் சொல்லினது என்றும், முதல்தொக்கால் சொன்னது என்றும் வரும். ஏ, காண் - தேற்றம். என்ன - எவன் என்னும் அஃறிணைப் பொதுக்குறிப்புமுற்றின் விகாரமாகிய என் என்பதன்மேல், அ - சாரியை. 'என்ன அரசாள்கை' என்றது, அதன் இழிவை விளக்கும். (கச)

[என்பது: நீ பிறந்த இராச்சியத்தினை மாயச்சூதினால் வஞ்சித்துக்கொண்டு விவஸ்தையழிந்து அர்த்தராச்சியம் வேண்டிவிடவுந் தாராதானை வாகுவீரியத்தினாற்கொள்வதன்றி, யுத்தத்தின்கண் பலவீனரைப்போல மற்று அவனிடைக்கு மண் இரந்து போகவிடுதல் க்ஷத்திரியதருமமன்று கண்டாய்: ஒரு நாழிகை நின்கருணையொழிந்து இராசதன்மந் தலைநின்று போர்க்களத்தில் என் உச்சிராயத்தினை நோக்கியருளப் பெறுவேனாகில், கன்னனென்னும் பெயர்கெடுத்துக் காந்தாரபதியைக் கட்டழித்துச் சல்லியனை அமர்தொலைத்துச் சயத்திரதனைத் தரைப்படுத்தி வெற்றிகொள்வே னென்ற வீமசேனனை நோக்கி யாதுசொன்னான் தருமபுத்திரன்:]

அதற்குத் தருமன் சமாதானஞ்சொல்லுதல்.

115.—(இ - ள்.) வெற்பு ஆர்-மலையை யொத்த, பனி மருவும் பூ தொங்கல்-(தேனினாற்)குளிர்ச்சி பொருந்திய மலர்களால் தொடுத்த மாலையைத் தரித்த, பாழி - வலிமையையுடைய, அம் - அழகிய, தோள் - தோள்களையுடைய, வீமா - வீமனே! உற்றாரை எல்லாம் உடன் கொண்டு - இஷ்ட பந்துக்களையெல்லாம் (ஒழிக்காமல்) கூடவேகொண்டு, அரசு ஆள பெற்றால் - இராச்சியம் ஆளும்படி நேர்ந்தால், அதின் மிக்க பேறு உண்டோ - அதைக்காட்டிலுஞ் சிறந்தவொரு பாக்கியம் உள்ளதோ? தனி மரமும் தோப்பு ஆமோ - (மற்றும்பலமரங்களுடன் சேராமல்) ஒன்றியாய்நிற்கிற மரமும் சோலையாகுமோ? [ஆகாது என்றபடி]; (எ - று.)

தான் - அசை. தனிமரம்தோப்பாகாதவாறுபோல உறவினர்கள் உடன் இல்லாதபடி வாழ்தல் ஒரு வாழ்வாகாது; அவர்களுடன் கூடிவாழும் வாழ்க்கையே மேல் என்பதாம். "பரிவுடன் மற்றிவைகூறும் பவனகுமாரனை மலர்க்கைபணித்து நோக்கிக், குருகுலத்தோர் போரேறே குற்றமது பார்க்குங்காற் சுற்றமில்லை, ஒருகுலத்திற் பிறந்தார்களுடன்வாழும் வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ, இருவருக்கும் வசையன்றோ இருநிலங் காரணமாக வெதிர்ப்ப தென்றான்" என்பது, வில்லிபுத்தூரார் பாரதம்.

'தனிமரமுந் தோப்பாமோ' என்ற உபமானம், தனிவாழ்க்கை குடிவாழ்க்கையாகாது என்ற உபமேயத்தைத் தெரிவித்தலால், இது பிறிதுமொழி

தல் என்னும் அணி; வடநூலார் 'அப்ரஸ்துதப்ரசம்ஸாலங்காரம்' என்பர். உபமேயத்தைக் கூறாமல் உபமானத்தாற் பெறவைத்தல், இவ்வணியின் ஓர் இலக்கணம். தோப்புக்கு உள்ள வலிமையும் பெருமையும் தனிமரத்துக்கு இல்லாமைபோல, உற்றாருடன்சேராத அரசுக்கு வலிமையும் பெருமையும் இல்லை என்றபடி.

உற்றார் - நெருங்கினவர். உறு என்னுங் குறிலிணைப்பகுதி ஒற்றிரட்டி இறந்தகாலங் காட்டிற்று: பெறு, அறு, தொடு.விடு, மிகு, தொகு என்பனவும் இவ்வாறே. 'அதின்' என்பதில், ஐந்தாம்வேற்றுமை - எல்லைப்பொருளது; அதனின் என்பது அதின் எனச் செய்யுள்விகாரப்பட்டதென்றும், அன்சாரியைபெறாது வாரா தென்றும் ஒருசாரார்கொள்கை. பெறப்படுவது, பேறு; செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதி நீண்ட பெயர். வெற்பார் தோள், பணிமருவும் பூந்தொங்கல் தோள், பாழித்தோள், அம்தோள் என இயையும். பூந்தொங்கல் - மூன்றாம்வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்க தொகை; அழகியமாலையென்னும் பொருளில், பண்புத்தொகையாம்: பூப்பெயர்முன் இனமென்மை தோன்றிற்று; [நன் - உயிர் - ௩௦.]தொங்கல்- தொங்குவதாகிய மாலைக்குத் தொழிலாகுபெயர்; இதில், அல் - கருத்தாப் பொருள்விகுதி யெனினுமாம். வீமன் - பீமன் என்னும் வடசொல்லின் திரிபு; (பகைவர்க்குப்) பயங்கரனானவ னென்று பொருள். மரமும், உம் - இழிவுசிறப்பு. தோப்பு - தொகுப்பு என்பதன் மரூஉ என்பர். (கரு)

[என்று இவ்வகை தருமபுத்திரன் சொல்ல,கேட்டு, பின்னும் யாதுசொன்னான் பீமசேனன்:]

வீமன் தருமனை வெறுத்தல்.

116.—(இ - ள்.) வாழி - வாழ்வாயாக, சூழ் சபையில் - (பலர்)சூழ்ந்துள்ள இராசசபையிலே, சூள் உற்ற - (யான்) பிரதிஜ்ஞைசெய்த, சூளுறவும்- சபதத்தையும், அ ஞான்று - அக்காலத்து, என் - என்னுடைய, பாழி அம் தோள் - வலிமையையுடைய அழகிய தோள்கள், பட்ட - அடைந்த, பரிபவமும் - அவமானத்தையும், ஆய்- ஆராய்வாயாக; நின்னோடே தோற்றுதற்கு- (இப்படிப்பட்ட பரிபவத்துக்குக் காரணமான) உன்னோடே (தம்பியாகப்) பிறத்தற்கு, பாவியேன் - பாவியாகிய யான், நோற்றேனே - தவஞ்செய்திருந்தேனே! இது - இங்ஙனம் உனக்குத்தம்பியாப்பிறந்து பரிபவப்படுதல், என் ஓடு எழுத்தோ - என்ன தலைவிதியோ? (எ - று.)

நான் சபையிற்செய்த சபதத்தையும், அங்கு எனது தோள்வலிமைக்கு நேர்ந்த அவமானத்தையும் நீ ஆராய்ந்தாயாயின், இங்ஙனம் போர்முயற்சியைக் கைவிட்டு இரந்து இராச்சியம்பெறுதற்குத் தொடங்கக் காரணமில்லை; அவற்றைச் சிறிதும் ஆராயாமலே தகுதியல்லாத எதனை நீ சொன்னாலும் உனக்கு நான் தம்பியாதலால் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியே வருகிறது; இவையெல்லாம் வலிய ஊழ்வினையே யன்றி வேறன்று என்று வீமன் தான்தருமனுக்குத்தம்பியாய்ப் பிறந்ததைப்பற்றி வெறுத்துப்பேசினான். இவ்வவமானத்துக்குக்காரணமான உன்னை நான்வெறுத்தலினும் உனக்குத் தம்பியாகப்பிறத்தற்கேற்ற வினையை முற்பிறப்பிற் செய்திருந்த என்னையே நான் வெறுத்துக்கொள்வதுவே தகுதி யென்பதும்இதிற் போதரும்:இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வீமன் தருமனை 'வாழி' என்று வாழ்த்தினது,, வெறுப்பினாலாகிய இகழ்ச்சிபற்றியது. "அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய் உனதருளுக் கஞ்சினேனே", "இப்படியே யார்முடித்தா ரிவனுடனே பிறப்பதே நான்" என்பன, வில்லிபுத்தூரார்பாரதம்.

திரௌபதியைத் துகிலுரிந்த காலத்தில் வீமன் துரியோதனாதியர் நூற்றுவரையும் யானேகொல்வே னென்றும், துச்சாதனனைக் கொன்று அவனு

டம்பினிரத்தத்தைக் குடிப்பதன்முன் யான் கையினால் நீரையெடுத்துக் குடிப்பதில்லை யென்றும், அதிகதாகமாகுமானால் எனதுகதாயுதத்தால் நீரையடித்து அங்குத்தெறிக்குந்துளிகளையே உண்டுஉயிர்வாழ்வே னென்றும் சபதஞ்செய்துபோந்ததையும், துரியோதனன் திரௌபதியைப் பரிபவப்படுத்தியதைப் பார்த்து மனம்பொறாமல் வீமசேனன் கதையெடுத்துப் போர்செய்யத் தொடங்கியபொழுது தருமன் காலவித்தியாசத்தை யெடுத்துக்காட்டி "முன்னெம் பொறுத்தீர் இன்னம் பொறும்" என்று வீமனை அடக்கவே, அவன் தந்தைக்குச்சமானமானவனென்று நூல்களிற் சொல்லப்படுகிற தமையனது சொல்லைக் கடக்கமாட்டாமல் அடங்கிவிட்டதையும் கீழ்ச் சபாபருவத்திற் காண்க.

சூழ்சபை - வினைத்தொகை. சூளுறவு - தொழிற்பெயர்; சூள் என்னும் பெயரோடு உறு என்னும் வினை சேர்ந்து ஒருசொல்தன்மைப்பட்ட சூளுறு - பகுதி, அ - சாரியை, வு - விகுதி; உ - விகுதி யென்றால், வ் - எழுத்துப்பேறு. ஞான்று - நான்று என்பதன் போலி. பரிபவம் - வடசொல். இகரச்சாரியையையும் யகரவிகுதியையும் பெற்ற வாழிய வென்னும் வியங்கோள், ஈற்றுயிர்மெய் கெட்டு, வாழி என நின்றது; [நன் - உயிர் - கஅ.] இது - அசையுமாம்; [நன் - இடை - உக.] தோற்றுதற்கு - தோன்றுதற்கு என்பதன் வலித்தல். நோற்றேன் என்றது, இகழ்ச்சிவிளக்க; இதில், நோல் - பகுதி. ஏகாரம் - இழிவுகுறிக்கும். பாவி - பாபீ என்னும் வடசொல்லின் திரிபு; இதன்மேல், ஏன் - தன்மையொருமைவிகுதி. ஓடு - மண்டையோடு; கபாலம். நான்காமடியில் 'எவன்' என்னும் வினாவினைக்குறிப்புமுற்று 'என்' என விகாரப்பட்டுநின்றது. இனி, என் ஓடு எழுத்தோ-எனதுதலையில் எழுதிய எழுத்தோ? என்றும் பொருள்கொள்ளலாம்; இப்பொருளுக்கு 'என்' என்பது - ஆறாம்வேற்றுமைத்தொகை. ஓடு+எழுத்து=ஓடெழுத்து: மூன்றாம்அடியில் 'நின்னோடே' என வந்ததன் எதுகை நயம்நோக்கி, டுகரவீற்றுநெடிற்றொடர், வேற்றுமையில் தன்னொற்றிரட்டாது நின்றது. இனி, 'ஓடு' என்பதை மூன்றாம்வேற்றுமையுருபாக்கி, என்னோடுதொடர்ந்தவினையோ எனினும்அமையும். 'என்னோடு' என்பது - என்னுடைய என்னும்பொருளில் உருபுமயக்கமென்றலும் ஒன்று. முற்பிறப்பிற்செய்த வினையின் பயனைத் தலையெழுத்தென்றல், மரபு. எழுத்து - எழுதப்படுவதென்னும் பொருளில் செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதிவிகாரப்பட்ட பெயர். (கசு

[என்பது - சத்துருக்களாற் செய்யப்பட்ட வஞ்சனை பழிபாவங்களை யுணராது நீ தருமமேவிரும்புகின்றாய்; நின்கருணை யொழிந்து நிற்பையாகில் என் வாகுபலன்களால் சத்துருநாசம்பண்ணி என்மனக்கருத்து முடிப்பேன்; அது இல்லையென அதிபலபராக்கிரமங்களுமுடைய ஆயுதசிக்ஷைகளும் மற்றுமதனுடனே விளங்கிநின்ற என்வாகுபலங்களும் அபசயப்பட்டு உலந்து அஸ்தியாகின்றது என்றுங் கருதுகின்றிலை; நின்னோடே சனித்தேனே மகாபாவியேன் எனக் கழறித் தான்பிடித்த தண்டாயுதத்தைப் பூமியின்மேல் எறிந்து வெகுளாநின்ற துங்கக்கருவிக் கடாக்களிற்றான் வீங்கெழில்தோள் வீமசேனன் அபிமானம் சினங்கன்றக் கண்டு மற்று அவனைக் கைகவித்து யாதுசொன்னான் தருமபுத்திரன்:]

தருமன் மீண்டும் வீமனுக்குச் சமாதானங்கூறல்.

117.—(இ - ள்.) தேன் மருவு தாரோய் - தேன்பொருந்தின பூமாலையையுடையவனே! தாம் மானம் கூற பெறுவரே-(உலகத்தில் உயர்ந்தோர்) தாம் (தமது) பெருமையைத் தாமே பாராட்டியெடுத்துச் சொல்லத்தகுவர்களோ? [தகார் என்றபடி]; (அன்றியும்), தம்பிமார் தீ மானம் செய்ததனால்-

தம்பியர் அவமானத்தைச் செய்ததனால், தீங்கு உண்டோ-ஒருகுறைவு உண்டாமோ? [உண்டாகாது என்றபடி]; ஆம் ஆகில் - கூடுமானால், ஆம் அளவும்-கூடியவரையிலும், நட்பு உகந்தால் - (அந்தப்பங்காளிகளோடு) சிநேகதருமத்தையே விரும்பிநடந்தால்,அன்று ஆகில் - (பின்பு அந்தநட்பு) நிறைவேறுவதன்றானால், (அப்பொழுது), செரு நின்றதே - போர் இருக்கவேயிருக்கிறது; (எ - று.)

தற்புகழ்ச்சிசெய்தல் தகுதியன் றாதலால், நீ அபிமானம்பேசவேண்டா; அயலாரால்நேர்ந்த தீமை அவமானந்தருவதே யன்றிக் குடும்பத்தினுட்பட்ட இளையோரால் நேர்ந்த தீமை பெரியதாகப் பாராட்டத்தக்க தன்று: ஆனது பற்றியே, எனது தம்பிமாரான துரியோதனாதியர் செய்த பிழைகளை யான் பொறுக்கின்றேன். நம்மாலாகுமளவும் சமாதானத்தையே நாடி நடந்தால் அது சாத்தியப்படாதபொழுது இறுதிஉபாயமாகிய தண்டோபாயம் செய்தற்கே தக்கது என்பதாம். "உரிமையுடன் தம்பிய ரன் றுணர்வறியாமையினவைக்க ணுரைத்த மாற்றம், பரிபவமோ கேட்டோர்க்குப் பரிபவமென்பது பிறராற்பட்டா லன்றே, கருதிலது மற்றெவர்க்கு மொவ்வாதோ கண்மலரிற் கைபடாதோ, பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததே யெனமொழிந்தான் புகழே பூண்பான்" என்றது வில்லிபுத்தூரார்பாரதம்.

மாநம் - வடசொல்; மானமாவது - எப்பொழுதும் தந்நிலையினின்று தாழாமையும், ஊழ்வினையால் தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையு மாம். பெறுவரே, ஏ - எதிர்மறை. தம்பி என்பதில், தாம் - பகுதி, முதல் குறுகிற்று; பி - முறைப்பெயர்விகுதி: இனி, தமக்குமுன்பிறந்தவ னென்ற பொருளில் 'தம்முன்' என்றதுபோல, தமக்குப்பின்பிறந்தவனென்றபொருளில்'தம்பின்' என வந்த காரணப்பெயர் தம்பியென விகாரப்பட்ட தென்பாரும் உளர். இதன்மேல், மார் - பலர்பால்விகுதி. தீமானம் - கெட்டமானம்; எனவே, மானக்கேடாம். தீங்கு - கு விகுதி பெற்ற பண்புப்பெயர். நட்பு-தொழிற்பெயர்; நள் - பகுதி, பு - விகுதி. ஏ - தேற்றம். தேன் + மருவு = தேமருவு; தேன்மொழி, மெலிவர இறுதியழிந்தது. தாரோய் - தாரான் என்பதன் ஈறுதிரிந்த விளியாகிய தாராய் என்பதில் யகரவீற்றயல் ஆகாரம் ஓ வாயிற்று. தம்பிமார்தாம் மானங்கூறப்பெறுவரே என இயைத்து உரைத்தல் சிறவாமை உணர்க. (கஎ)

[இவ்வகைசொல்லி ஸ்ரீவாசுதேவன் சாட்சியாகத் துரியோதனன்பாற் போய் அவன்மனக்கருத்து அறிந்துவருமளவும் அபிமானம் பேசவேண்டாமென்று பீமசேனனை விலக்கி ஸ்ரீவாசுதேவனை நோக்கி யாதுசொன்னான் தருமபுத்திரன்.]

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

தருமன் கண்ணனுக்குத் தூதுபேசும்விதங் கூறுதல்.

118.—(இ - ள்.) கார் தோற்று போக - (இடைவிடாது மழைபொழிகிற) கார்காலத்துமேகமும் தோல்வியடைந்து போகும்படி, தொடுக்கும் - (மிகுதியாக அம்பு) தொடுக்கவல்ல, கரத்தானே - திருக்கையையுடையவனே! (நீ தூதுசென்று), பார் வேண்டின் - இராச்சியபாகத்தை விரும்பிக் கேட்டால், (அப்பொழுது), பாம்பு உயர்த்தோன் தான் மறுத்தால்- பாம்புக்கொடியை உயரஎடுத்த துரியோதனன் தான் (கொடேனென்று) மறுத்துக் கூறினால், (ஐந்து) ஊர் வேண்டல் - (ஐந்து) ஊரை விரும்பிக்கேட்பாயாக; ஆங்கு - (கேட்கிற) அப்பொழுது, அவையும் தான் மறுத்தால்- அவற்றையும் தான் (கொடேனென்று அவன்) மறுத்துக்கூறினால், ஐந்து மனை தாம் வேண்டி - ஐந்து வீடுகளை விரும்பிக்கேட்டு, (அவற்றை அவன் கொடுக்க உடன்

படுவானானால்), பரிந்து - (நீ) அன்புகொண்டு, பாங்குடனே - சமாதானத்துடனே, போதாய் - மீண்டுவந்தருள்வாய்; (எ - று.)

இராச்சியபாகத்தைக் கேட்குமிடத்துக் கொடுக்கச்சம்மதிப்படானானால், எங்களைவர்க்கும் தலைக்கு ஒருஊராக ஐந்துஊரையாவது, அதுவுமில்லையானால் தலைக்குஒருவீடாக ஐந்துவீட்டையாவது சமாதானத்திற் பெற்றுவரவேண்டுமென வேண்டியபடி. மூன்றுமடியிலுள்ள 'ஐந்து' என்பது, எடுத்து இரண்டாமடியி லுள்ள 'ஊர்' என்பதனோடுங் கூட்டப்பட்டது.

கருமை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு இடைஉகரமுங்கெட்டு 'கார்' என நின்றது; [நன் - பத - கூ.] இப்பண்புப்பெயர் - அந்நிறத்தையுடைய மேகத்துக்கு, ஆகுபெயர். கரம் - வடசொல். ஊர், மனை - பால்பகா அஃறிணைப்பெயர்கள். வேண்டல் - 'அல்' விகுதி பெற்ற உடன்பாட்டுவியங்கோள். அவையும் என்ற உம்மை - இறந்ததுதழுவிய எச்சத்தோடு இழிவுசிறப்புப்பொருளது. 'பாங்குடன்' என்பதி லுள்ள உடன் என்னும் மூன்றும்வேற்றுமைச்சொல்லுருபு - அடைமொழிப்பொருளது; சமாதானமுடையவனாய் என்றபடி. போதாய், போது - பகுதி; போ என்னும் பகுதியே துகரச்சாரியைபெற்று வா என்னும்பொருளில் வந்ததென்றுமாம்.

இப்பாட்டின் முதலடியால், கண்ணபிரானது வில்வன்மை விளங்கும். அடுத்தபாட்டில் 'பொருபடைக்கைமால்' என்பதுங் காண்க. 'கொடுக்கும்' என்ற பாடத்துக்கு - கைம்மாறு கருதாது மழைபொழியுங் காளமேகமும் ஒப்பாகாதபடி மிகுதியாக வேண்டுவார்க்கு வேண்டியபொருள்களைச் சொரிகின்ற திருக்கைகளையுடைய வள்ளலே யென்க. 'கார்' என்பதன் இறுதியில் உயர்வுசிறப்புஉம்மை விகாரத்தால் தொக்கது. 'பாம்புயர்த்தோன்' என்ற பெயராற் குறித்தது, அவன்கொடுமையை விளக்க; அடுத்தபாட்டிலும் 'அரவுயர்த்தோன்' என்பர். இப்பாட்டினால், தருமபுத்திரனது அளவுக்குமிஞ்சிய சாந்தகுணம் அறியப்படும். (கஅ)

119.— [அன்றியும்,] (இ - ள்.) பொரு - போர்செய்கின்ற, படை - ஆயுதங்களை யேந்திய, கை - திருக்கைகளையுடைய, மாலே - திருமாலின்திருவவதாரமூர்த்தியானவனே! (நீ சென்று), மன்னவர்கள் எல்லாரும் தாம் அறிய - (சபையிலுள்ள) அரசர்களெல்லோரும் அறிய [வெளிப்படையாக], பார் வேண்டில் - (எங்களுக்காக யான் கீழ்ச்சொன்ன முறையில்) பூமியை வேண்டினால், (அப்பொழுது), அன்னவன் - அத்துரியோதனன், ஐந்து இல் உம் மறுத்தானேல் - ஐந்து வீடுகளையேனுந் தாராமல் மறுப்பானானால், பின்னை - பின்பு, நீ —, அரவு உயர்த்தோன்தன்பால் - அப்பாம்புக்கொடியோனிடத்து, போர் வேண்டி - யுத்தஞ்செய்யும் விருப்பத்தைத் தெரிவித்து, அகன்று போதாய் - (அவனைவிட்டு) நீங்கி மீண்டுவந்திடுவாய்; (எ-று.)

எங்களுக்காக நீதானே நேரிற்சென்று தாழ்ந்து யான்கூறியபடி இடங்கேட்கையில் அவன் ஐந்துவீடுதானுங் கொடுத்திடே னென்றால், அப்பொழுது நாம்போர்செய்யக்கடவோமாக முடிவுகூறிவருவா யென்பதாம். "முந்நூர்வெம்பணிக்கொடியோன் மூதூரி னடைந் துழவர்முன்றில்தோறும், நந்தூரும்புனல்நாட்டின்திறம் வேண்டு நாடொன்றுநல்காளுகில், ஐந்தூர் வேண்டு அவையில்லெனில் ஐந்திலம்வேண்டு அவைமறுத்தா லடுபோர்வேண்டு" என்பது, வில்லிபுத்தூரார் பாரதம். 'போர் வேண்டவேண்டும்' என்றது, முன்பு 'வனவாச அஞ்ஞாதவாசங்களின்பின் அரசுகொடுப்பேன்' என்று வாக்குத்தத்தஞ்செய்தவன் இப்பொழுது அவ்வுறுதிமொழியை நிறைவேற்றாமை போல, இப்பொழுது 'போர்செய்வேன்' என்கிறவன் பின்பு அதனையும் நிறைவேற்றாமற் போகாதபடி அதனையேனுந் தவறாமல் நடத்துமாறு உறுதிசெய்துவருவாய் என்றபடி.

அன்னவன் - சுட்டடியாப்பிறந்த பெயர்; அ - பகுதி, ன் - சாரியை, ன் - சந்தி, அ - சாரியை, வ் - சந்தி, அன் - ஆண்பால்விகுதி. 'அன்னவனும்' என்ற இழிவுசிறப்பும்மை பிரித்து 'இல்' என்பதனோடு கூட்டப்பட்டது. 'மறுத்தான்' என்னும் இறந்தகாலமுற்று 'ஏல்' என்னும் விகாரப்பட்டஎதிர்கால வினையெச்சத்தோடு சேர்ந்து எதிர்காலத்தையே காட்டிற்று; இனி, ஏல்-எதிர் காலவினையெச்சவிகுதி யென்றலும் ஒன்று. பொருபடை - வினைத்தொகை. படை - (பகைவரைப்) படுத்தற்குக் கருவியானதெனக் காரணப்பெயர்; படு- பகுதி, ஐ - கருவிப்பொருள்விகுதி. இச்சொல் சேனைக்கும் வழங்கும்; அப் பொழுது, ஐ - கருத்தாப்பொருள்விகுதி.

இங்கே, படை - சங்கம், சக்கரம், கதை, வாள், வில் என்பன; பாஞ்ச சன்னிய மென்னுஞ் சங்கமும், சுதர்சந மென்னுஞ் சக்கரமும், கௌமோதகி யென்னுங் கதையும், நந்தக மென்னும் வாளும், சார்ங்க மென்னும் வில்லும்- திருமாலுக்கு உரிய பஞ்சாயுதங்கள். இப்பாட்டில் 'பொருபடைக்கைமாலே' என்கிறதும், முற்பாட்டில் 'கார்தோற்றுப்போகத் தொடுக்குங் கரத்தானே' என்றதும், உன்வல்லமை பகைவர்அஞ்சத்தக்க தென்பதைக் குறிக்கின்றன. 'படைக்கை' என்பது ஒருசொற்போலக் கொள்ளப்பட்டதனால், "தனியைந் நொது முன் மெலி மிகலுமாம்" என்ற விதியின்படி 'கைம்மால்' எனப் புணரவில்லை. (கக)

[என்பது: துரியோதனன்பக்கல் போனால் ஊக்கமுடையானுடன் இருந்து நீதிமார்க்கங்களும் விவஸ்தையழியாமல் நின்றமையும் தெளியஉரைத் துப் பின்னும் இராச்சியம்வேண்டில் தாரானாகில் அர்த்தராச்சியந்தரினுங் கொண்டுபோதுக; அதுவுந்தாரானாகில் குசஸ்தலமும் மிருகஸ்தலமும் வருணை பதியும் வரசந்தியும் சயசந்தியும் என்பன பஞ்சகிராமந் தரினுங் கொண்டுபோ துக; அதுவுந்தாரானாகில் பஞ்சகிருகந்தரினுங் கொண்டுபோதுக: அதுவுந்தா ரானாகில் யுத்தஞ்செய்தாகிலுங் கொள்ளக்கடவது என்று மற்று அவனருகிரு ந்த வீஷ்மர் துரோணர் விதுரரையுஞ் சாட்சியாகவைத்து மற்று அவன்பிர திஜ்ஞையழிந்தமையும் அறிய வுரைத்து,பராஷ்டிரத்து ஸர்வக்ஷத்திரியரும் அறிய நாள்வரைந்து தூண்டுபேரித்தேர்மன்னு ஈண்டஎழுந்தருளிவருவாயாக என்ன, ஸ்ரீவாசுதேவனும் தூதாக உடன்பட்டவிடத்துத் தருமபுத்திரனையும் ஸ்ரீவாசுதேவனையும் நோக்கி யாதுசொன்னான் அருச்சுனன்:]

இதுமுதல் மூன்று கவிகள் - அருச்சுனன் வார்த்தை.

அருச்சுனன் தருமன்கருத்தை மறுத்துப் பேசுதல்.

120.—(இ - ள்.) பரமன் திரு அருளால் - சிறந்தவனான சிவபிரானது மேலான கருணையால், பாசுபதத்தோடு - பாசுபதாஸ்திரத்துடனே, விரவு தனு - (பெருமை)பொருந்தியதொரு வில்லையும், கொண்டு - பெற்று, யான் இருக்க - நான் சீவித்திருக்கையில், நாம்—,குருபதிக்கு இரந்து போனால் - குருநாட்டை யாசித்துச் சென்றால், (அதற்காக), அரசர் - (உலகத்தி லுள்ள) அரசர்கள், தாம் இருந்து வாழும் தலத்து - தாங்கள் அரசுவீற்றிரு ந்து வாழ்கிற நாடுகளிலெல்லாம், நகை செய்யாரோ - பரிகாசஞ்செய்யமாட் டார்களோ? [செய்யவேசெய்வர் என்றபடி]; (எ - று.)—இது, தருமனையும், கண்ணனையும் நோக்கிக் கூறியது.

பகைவரையழிக்கும்பொருட்டு வேதவியாசபகவான் உபாயமருளிச்செ ய்தபடி கைலாசத்துச்சென்று அருந்தவஞ்செய்து சிவபிரானருளாற்பெற்ற பாசுபதாஸ்திரத்தையும் அந்த அஸ்திரத்தைப் பிரயோகித்தற்கு ஏற்ற தெ ய்வத்தன்மையுள்ள தொரு வில்லையும் வைத்துக்கொண்டு யான் போரில் எதிர்ப்பவரையெல்லாம் அழித்தற்கு வல்லவனாயிருக்கையில், நாம் குருநா

ட்டைஇரந்துசெல்வது,தத்தம்பலபராக்கிரமங்களால் நாடுபெற்று அரசாண்டு வாழ்கிறக்ஷத்திரியவீரரெல்லோரும்இகழ்ந்துசிரிக்கத்தக்ககாரியம்என்பதாம்

அருச்சுனன் காண்டவதகனகாலத்தில் அக்கினிபகவானால் அளிக்கப்பட்ட காண்டீவ மென்னுந் தெய்வவில்லைப் பெற்றதுமாத்திரமே யன்றிப் பின்பு வனவாசகாலத்தில் பரமசிவனிடம் பாசுபதம் பெற்றபொழுதும் அதனோடுகூட அதற்குரிய வில் ஒன்றைப் பெற்றன னென்று தெரிகிறது; "ஐயனு மம்மையோ டருள்புரிந்து பின், வெய்யபொற் றூணியும் வில்லு மந்த்ரமும், துய்ய பாசுபதமெய்த் தொடையு முட்டியும், ஒய்யென நிலையுடன் உதவினு னரோ" என்ற வில்லிபுத்தூரார்பாரதமுங் காண்க. இதனால், இங்கே 'விரவுதனு' என்றது, காண்டீவத்தையன் றென்றே கொள்ளலாம். 'பரமன் திருவருளாற் பாசுபதத்தோடு விரவு தனுக் கொண்டு' என்ற சொற்போக்கும் காண்டீவத்தைக்குறிக்க இடந்தாராமை காண்க. இந்த அம்பும் வில்லும் பாரதயுத்தத்தில் வெற்றிகொள்ளுதற் கென்றே வேண்டிப் பெற்றவை. 'தாமிருந்து வாழுந் தலத்து' என்றது, தாக்ஷிணியத்தால் எதிரே சிரியாமற் போனாலும் தங்கள்தங்களிடத்தில் இகழ்ந்து சிரிப்பர்களே என்றபடி.

பரமன், பாசுபதம், குருபதி, தலம் - வடசொற்கள். தநு - தநுஸ் என்னும் வடசொல்லின் திரிபு. அரசர் - ராஜந் சப்த பவம்.

பரமன் - பரமசிவன். பாசுபதம் - பசுபதியின் சம்பந்தமானது என்று பொருள்; தத்திதாந்தநாமம்: பசுபதி - சிவபிரான்; பசு - உயிர்களுக்கு (அல்லது ருஷபத்துக்கு), பதி - தலைவன் எனக் காரணப்பெயர். விரவு தனு - வினைத்தொகை. கொண்டு+யான்=கொண்டியான்; குற்றிய லிகரம்: [நன் - உயிர் - கசு, எழுத்து-ந-அ.]பதி - ஊர். பதிக்கு-பதியை என உருபுமயக்கம்.

தங்கள் வேண்டுகோளின்படி கண்ணன்செல்வதையே, ஒற்றுமைபற்றி 'நாமிரந்துபோனால்'என்றது.'குரு பதிக்குப்போனால்'என்பதற்கு-குருநாட்டுக்குத் தலைவனான துரியோதனனிடத்துக்குச் சென்றால் என்றும், குருநாட்டுக்குச் சென்றால் என்றும் உரைக்கலாம். தற்காலத்தில் அரசாண்டுகொண்டு மேம்பட்டிருப்பவனாதலால், துரியோதனன் 'குருபதி' எனப்பட்டா னென்க. தாம் இருந்து வாழும் தலத்துப் போனால் என இயைத்து,அத்துரியோதனனுதியர் தாம் அரசுவீற்றிருந்து வாழ்கிற அஸ்தினபுரத்துச் சென்றால் என்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும். நகை - நகைத்தல்; முதனிலைத்தொழிற்பெயர்; நகு - பகுதி யென்றால், ஐ - தொழிற்பெயர்விகுதியாம். (உ0)

121.—[அன்றியும்], (இ - ள்.) ஆர் அமருள் - அருமையான போரில், ஆழி தேர்-(வலிய) சக்கரங்களையுடைய (எனது) தேரில், ஆர்த்து - (குதிரைகளைக்) கட்டி, போர் மருவு மாவின்மேல் - போருக்கு உரிய அக்குதிரைகளின் மேல்,வடி கயிறு பூட்டுவையேல்-கூர்மையான கசைக்கயிற்றை உபயோகிப்பாயானால் [நீ எனக்குத் தேர்செலுத்தியருள்வாயானால் என்றபடி], (அங்ஙனம் அருளுதலே), கூர் அம்பால் - எனது கூர்மையான அம்புகளால், கூடலார் மன்னவரை - பகைவர்களான அரசர்களை, கூற்றின் பகு வாயின் பாடியிலே உய்க்கும் - யமனது திறந்த வாயினிடத்திலே (நான்) கொன்று செலுத்துகிற, படி - விதமாம்;(எ - று.)—இது, கண்ணனை நோக்கிக் கூறியது.

நீ எனது தேரைச் செலுத்தல்மாத்திரமே, யான் பகைவரை யெல்லாம் அழித்தற்குக் காரணமாய்விடு மென்பான், உபசாரவழக்காய், அதுவே 'உய்க்கும் படி' என்றான்; காரணம் காரியமாகக் கூறப்பட்டது, ஒற்றுமைநயம்பற்றி. இப்பாட்டினால், நீ எனதுதேர்செலுத்தலே போதும், தூது சென்றுவருந்தவேண்டா என்று குறிப்பித்தவாறு. முன்பு கண்ணன் அருச்சுனனுக்குப் பாரதப்போரிற் சாரத்தியஞ்செய்ய உடன்பட்டிருத்தலால்,

இப்பொழுது கண்ணனைநோக்கி அருச்சுனன் 'நீ இப்பொழுது என்தேரைச் செலுத்தினால்,நான் பகைவர்களை ஒழித்துவிடுகிறேன்'என்று கூறினானென்க. ஆர்த்தல் - கட்டுதல்.

ஆர் அமர் - கிடைத்தற்கு அரிய போர்: அல்லது பொறுக்கவொண்ணாத போர்; பண்புத்தொகை: அருமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு இடைஉகரமும் கெட்டது; இனி, வினைத்தொகையாகக் கொண்டால், நெருங்கிய போரென்று பொருளாம்; ஆர்ந்த அமர் என விரிக்க. அமர் - ஸமர மென்னும் வடசொல்லின் சிதைவு; சமர், சமம் என்பனவும் இவ்வாறே. கூடலார் - கூடாதவரென்று பொருள்படும்; பகைவர்க்குக் காரணக்குறி: எதிர்மறை வினையாலணையும்பெயர்; கூடு-பகுதி, அல்-எதிர்மறையிடைநிலை, ஆர் - பலர்பால்விகுதி. பிராணிகளது உடலையும் உயிரையும் வேறுவேறுபிரித்துக் கூறுபடுத்துதலால், யமனுக்கு 'கூற்று' என்று பெயர். கூற்றின், வாயின் என்றவற்றில், இன் - சாரியை; ஆகவே, அவை - ஆறும்வேற்றுமைத் தொகையாம். பகு வாய் - வினைத்தொகை; பக்க, பகுகிற, பகும் வாய் என விரியும். கொல்லுதல் என்ற பொருளில் 'யமன்வாயிற்போகடுதல்' என்றல், மரபு. கொடியஜந்துக்கள் வாய்திறந்து கொண்டிருத்தல் பெரும்பாலும் இயல்பாதலால், 'பகுவாய்' என்றார்; விசாலமானவா யென்ற கருத்தில் வந்ததுமாம். வாயின் பாடியிலே-வாயாகிய ஊரிலே என உருவகமாகக் கொள்ளுதலும் ஒன்று. உய்க்கும் என்ற எதிர்காலப் பெயரெச்சத்தில், உய் - பகுதி, கு - சாரியை. இனி, பகு வாயின் - திறந்த பெரியவாசலையுடைய [வாய் - வாசல்], கூற்றின் பாடியிலே - யமனது ஊரிலே என்று பொருள்கொள்ளலுமாம். (உக)

[என்பது: ஸ்ரீவாசுதேவன் எம்பெருமான் தேர்மிசை நின்று வடிக்கயிறும் முட்கோலும் பிடித்துப் பாங்கினுடன் சுவேதாசுவங்களைத் தூண்டுமாகில், என்கையிற் காண்டிபம் நாணேற்றி ஆவநாழியிற் கைவைத்தவிடத்துத் துரியோதனனையும் பார்மன்னரையும் அவண எண்ணப்படாத சதுரங்கபலத்தோடும் சர்வக்ஷத்திரியரையும் நொடிவரையிற் படமலைந்து யமலோகங்குடியேற்றவல்ல நான் சிலையுடன் இருக்க, குருராச்சியபதி தருமபுத்திரனுக்கு இரந்துசென்றால் பரராஷ்டிரத்து க்ஷத்திரியர் நகையாரோ என்று, பின்னுஞ் சொல்லுவான் அருச்சுனன்.]

122.—(இ - ள்.) வாழும் வினை கொண்டாடி - (தாங்கள்) செல்வவாழ்க்கையோடிருக்குந் தொழிலையே முக்கியமாகப் பாராட்டி, எம்மை தீயில் அழுத்துவிக்கும் - எங்களை (அரக்குமாளிகையில்) நெருப்பிலே மூழ்குவிக்க முயன்ற, மன்னவரை - (துரியோதனாதி) அரசர்களை, ஊழி காலத்து முதல் உற்று எழுந்த தீ போல - கல்பாந்தகாலத்தின் முதலிலே பொங்கியெழுந்த நெருப்புப்போல, (யான்), ஆடு அமருள் வீழ்த்து - முயன்றுசெய்யும் போரிலே கொன்றுதள்ளி, செம் குருதிமுன் - சிவந்த இரத்தத்திலே, முழுக்குவிப்பன் - முழுகச்செய்வேன்; (எ - று.)—இது, அருச்சுனனது வீரவாதம்.

முன்பு அரக்குமாளிகையில் தீப்பற்றவைத்து அதில் அகப்படுத்தி எரித்து எங்களை வஞ்சனையாக அழிக்கத்தொடங்கியவர்களை நான் இப்பொழுது தருமயுத்தஞ் செய்து கொன்று தள்ளி இரத்தவெள்ளத்தில் அழுந்துவித்துப் பழிக்குப்பழிவாங்குவேன் என்பதாம்.

ஊழிமுதற்காலத்து உற்றெழுந்த தீ, அருச்சுனனுக்கு உவமை; தவறாதுஅழித்தல், பொதுத்தன்மை: இனி, அரக்குமாளிகைத்தீக்காயினும், இரத்தப்பெருக்குக்காயினும் உவமையாம்படி உரைக்கவும் இடமுண்டு. யுகா

ந்தகாலத்தில் ஒருபெருந்தீ எழுந்து உலகங்களை எரித்து அழிக்குமென்பது, புராணக்கொள்கை. அங்ஙனம் அழிக்கிற அக்கினிப்பிரளயம் ஜலப்பிரளயத்துக்கு முந்தியதாதலால், 'ஊழிமுதற்காலத்து' எனப்பட்டது. வாழும் வினை—ம் - மகரக்குறுக்கம்; [நன் - எழுத்து - சுக.] மற்று - வினைமாற்று. துரியோதனன் அரக்குமாளிகையில் புரோசனன்முதலிய சிலரைக்கொண்டு பாண்டவரைத் தீயில்மூழ்குவிக்க இருந்ததுபற்றி, 'அழுத்துவிக்கும்' என இரண்டு பிறவினை கூறியது. அழுத்து - அழுந்துஎன்பது மெலிவலியான பிறவினை. ஆடமர் - வினைத்தொகை. வீழ்த்து - வீழ்ந்து என்பதன் பிறவினை; வலிமிகுதலே, பிறவினைக்குறி. வீழ்-விழுஎன்பதன் மரூஉ. முழுக்கு - முழுகு என்பதன் ஒற்றிரட்டிய பிறவினை. குருதிக்குச் செம்மை, இனம்விலக்கவந்த தன்றி இயற்கைகுறிக்கும் அடைமொழி. குருதிமுன்,முன் - ஏழனுருபு;[நன்-பெயர் - சுஉ:]"கற்றோர்முன் தோன்றா கழிவிரக்கம்" என்றவிடத்துப்போல.

'வாழும்வினைகொண்டாடி' என்பதற்கு - நாங்கள் சுகமாகத் தனியே வாழவேண்டுமென்றதாகப் பாவனைகாட்டி யென்றும் பொருள்கொள்ளலாம். 'தீயில் அழுத்துவிக்கும் மன்னவரை' என்றதனால், நாம் தீயில் வேகாமல் உபாயத்தால் தப்பிப்பிழைத்தாலும் அவர் நம்மை அவ்வாறு செய்ய முயன்றதே போதுமான குற்றமாம் என்றபடி.

துரியோதனன்,வாரணாவதநகரத்தில் வஞ்சனையாக அழகியதோ ரரக்குமாளிகையை அமைப்பித்து,அதிற் பாண்டவரையுங்குந்தியையும் வசிக்கச்செய்து, புரோசனனென்னுந் துர்மந்திரியையுங் குற்றேவலாளர் ஆறுபேரையும் கூடவிருக்கநியமித்து,ஒருநாளிரவிற் பாண்டவருந் தாயும் கண்துயில்கையில் மற்றையோரைக்கொண்டு அம்மனையில் தீப்பற்றவைத்து இங்ஙனம் பங்காளிகளைத் தொலைத்துவிடுவதாகத் துணிந்திருக்க,அவ்வஞ்சகத்தை விதுரனேவிய ஒருசிற்பியால் அறிந்து அதனின்று தந்திரமாகத் தப்பிச்செல்லும் வழியையும் அவன்பா லுணர்ந்த வீமன், அத்துர்மந்திரிமுதலியோர் எரிபட்டழியும்படி தான் இரவில் தீக்கொளுவிவிட்டுத் தாயையும் உடன்பிறந்தாரையும் கைகளிலுந் தோள்களிலும் முதுகிலுமாக எடுத்துக்கொண்டு அவ்வீட்டில் இரகசியமாகஅமைத்துவைத்திருந்ததொரு தூணின்கீழுள்ள சுரங்கவழியால் தப்பிச் சென்று இடிம்பவனம்முதலியஇடங்களிற் சென்று பிழைத்து வாழ, துரியோதனாதியர் பாண்டவர்களே எரிபட்டழிந்ததாகக் கருதி அகமகிழ்ந்தன ரென்றது, கீழ் ஆதிபருவத்து வரலாறு. (உஉ)

[என்பது : வருணைபதியில் அரக்குமாளிகையில் அனலெழுப்பிய மன்னவனையும் பிராதாக்களையும் கடுங்கணைபாய்ச்சி நடுங்கமருள்வீழ்த்துக் குருதிப்புனலிற்குளிப்பித்துக் கன்னனையுங் காண்டிபத்துக்கிரையாக்கிப் பராராஷ்டிரத்து க்ஷத்திரியர் காணச் சத்துருசயம்முடிப்பே னென்று அருச்சுனன் பேசக் கேட்டு மற்று அவனைக் கைகவித்துப் போகின்ற ஸ்ரீவாசுதேவனை நோக்கி யாதுசொன்னான் நகுலன்:]

இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்.

நகுலன் தருமன்கருத்தை மறுத்துப் பேசுதல்.

123.—(இ - ள்.) இந்திரன் சேய் போக - இந்திரனது புத்திரனை அருச்சுனன் (இவ்வாறுசொல்லி) ஒழிய, இனிய இரட்டையரில் - நற்குணமுடைய இரட்டைப்பிள்ளைகளான நகுலசகதேவர்களுள், புந்தி நகுலன் - உலகவறிவையுடைய நகுலன், புகன்று எழுந்து - பேசவிரும்பி யெழுந்து நின்று, வந்தித்து - வணங்கி,—'அ நாள் முதல் ஆ - (நாம் துரியோதனாதியர்க்கு அடிமைப்பட்ட) அந்த நாள் முதற்கொண்டு, (இதுவரையிலும்), அரிவை குழல் கூடாமை - (நமது மனைவியான) திரௌபதியின் கூந்தல்

கூட்டிமுடிக்கப்படாமலிருத்தலை, மன்னா - தருமராசனே! மறந்தனையோ - மறந்துவிட்டாயோ; (எ - று.)—மற்று - அசை. இப்பாட்டில் 'வந்தித்து' என்ற வினையெச்சம், அடுத்தபாட்டில் 'என்று உரைத்தான்' என்ற வினைமுற்றைக் கொண்டு முடியும். இரண்டாமடியிறுதியில், ஏ - அசை.

அதனை மறந்திடாயாயின், இங்ஙனம்பேசக் காரணமில்லை யென்பதாம். சேய் - ஆண்பாற்சிறப்புப்பெயர்; செம்மை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு முன்னின்ற மகரமெய் யகரமாத் திரிந்து, 'சேய்' எனநின்றது: இந்த நிறத்தின் பெயர், முதலில் செந்நிறமுடைய முருகக்கடவுளுக்குப் பண்பாகுபெயராய், அது பின்பு அவன் போலப் பலபராக்கிரமங்களிற் சிறந்த இளவீரனுக்கு உவமையாகுபெயராய் வழங்கும்; இருமடியாகுபெயர். போக, போ அல்லது போகு - பகுதி. பேசுகிறத்தினதையே, 'போக' என்றது. இரண்டு என்னும் மென்றொடர் வன்றொடராய் ஐகாரச்சாரியை பெற்று 'இரட்டை' எனநின்றது; [நன் - உயிர் - ௯௪, ௯௫.] புந்தி - புத்தியென்னும் வடசொல்லின் மெலித்தல். புகன்று, புகல் - பகுதி. புகன்று என்பதைச் செயவெனெச்சத்திரிபாகக் கொண்டால், புகல எழுந்து - சொல்ல எழுந்து என்று பொருளாம். சான்றோர்சபையில் எழுந்துபேசுதல், மரபு. வந்தித்தல் - வணங்குதல்; வடமொழியடியாக வந்த வினை. அரிவை - பருவப்பெயராகாமல், இங்கே, பெண்ணென்னும்மாத்திரமாய்நின்றது; அப்பருவத்துக்கு வயதெல்லை, இருபதுமுதல் இருபத்தைந்தளவும்: [பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பன, பெண்களுக்குஉரிய ஏழுபருவமாம்.] கூடாமை - எதிர்மறைத்தொழிற்பெயர். மன்னா - ஈறுகெட்டு ஈற்றயல்நீண்ட விளி. (௨௩)

124.—[அன்றியும்], (இ - ள்.) தாது ஆடும் மார்பன் - (மாலையிலுள்ள மலர்களின்) மகரந்தப்பொடி அளையப்பெற்ற மார்பையுடைய நகுலன், தளர்ந்து - மனந்தளர்ந்து, (தருமனைநோக்கி), 'நல் வேந்தே-சாந்தகுணமுடைய அரசனே! வேண்டி விடுப்ப - (இராச்சியம்) வேண்டி (நாம் புரோகிதனை ஒருகால்) தூதனுப்ப, வெறுத்த - (அதற்கு இராச்சியங் கொடாமல்) அவமதித்துப்பேசின, வெகுளியர்பால் - தீராக்கோபமுடைய துரியோதனாதியரிடம், பூண்ட செரு வேண்டி போகாமல் - (அத்துரியோதனன் செய்ய) மேற்கொண்ட போரைச் செய்யவிரும்பி எதிர்த்துப்போதலை யொழிந்து, இனி - இனிமேல் [துரியோதனாதியர் சமாதானத்தில் அரசுகொடோமென்று ஒருமுறை கூறிவிட்டபின்பு], மீண்டும் - மறுபடியும் [சமாதானவழியால்], நாடு ஆள எண்ணுவதோ - இராச்சியம்பெற்று அரசாள நினைப்பது தகுதியோ? என்று உரைத்தான் - என்று சொன்னான்; (எ - று.)

உற்றாரையெல்லாம் உடன்கொன்று அரசாளப்பெற்றோ மென்று உலகத்தார் பழித்திடாமைக்கு முன் ஒருமுறை புரோகிதனைத் தூதனுப்பி அவனாற் பகைவர்கருத்தைஅறிந்ததுவே போதும்; மீண்டும் கண்ணனை அனுப்பி மேன்மேல் அவமானப்படவேண்டா என்பது கருத்து. பழையபகையை விடாமல் அரசுகொடோமென்று ஒருமுறைகூறினவர் எத்தனைமுறைகேட்டாலும் அங்ஙனமேகூறுவ ரென்பது, 'வேண்டி விடுப்ப வெறுத்த வெகுளியர்பால்' என்றதனால் விளங்கும். 'நல் வேந்தே' என விளித்தது, அளவுக்கு விஞ்சிய அவனது பொறுமையை இகழ்ந்தபடி.

விடுப்ப என்ற செயவெனெச்சத்தில், ப் - எழுத்துப்பேறு; எதிர்கால இடைநிலையன்று: செயவெனெச்சம் முக்காலத்துக்கும்பொது வாதலால். வெகுளி - தொழிற்பெயர்; வெகுள் - பகுதி, இ - விகுதி. (௨௪)

[என்றுஇவ்வகைசொல்லி வெகுண்டுஉரைத்த நகுலனைக் கைகவித்துப் போகஒருப்படுகின்ற ஸ்ரீவாசுதேவனை நோக்கி யாதுசொன்னான் சகதேவன்:]

இதுமுதல் ஒன்பது கவிகள் - சகதேவனுக்கும் கண்ணனுக்கும் நடந்த சம்பாஷணையையும், அங்குக் கண்ணன்மாயையைச் சகதேவன் கண்டறிந்த விதத்தையுங் கூறுகின்றன.

சகதேவன் கண்ணனை 'நீதூதுசெல்காரணம் எனக்குத்தெரியும்' என்றல்.

125.—(இ - ள்.) மாயா - விசித்திரசக்தியையுடையவனே! மணிவண்ணா - நீலமணிபோலுங் கரியதிருநிறமுடையவனே! மண் உலகும் - பூலோகத்துக்கும், விண் உலகும் - தேவலோகத்துக்கும், தாய் ஆகி நின்றது - தாய்போல உற்பத்திகாரணமாய் நின்ற, ஒரு-ஒப்பில்லாத, தற்பரமே-சிறந்த பரமாத்மாவே! கஞ்சம் மலர் - தாமரைப்பூக்களைக்கொண்டு உன்னைப் பூசித்துவந்த, வாரணம் - யானையை, காத்து - பாதுகாத்து, உய்த்தாய் - (நற்கதியிற்) செலுத்தினவனே! நீ—, மகிழ்ந்து ஏகும் - மகிழ்ச்சிகொண்டு தூதுசெல்லுதற்கான, காரணங்கள் எல்லாம் - காரணங்களையெல்லாம், அறிந்தேனே - (யான்) அறிந்துள்ளேன்; (எ - று.)—ஏ- தேற்றம்.

"ஒருவருக்குந் தெரியா திங்குன்மாயை யானறிவே னுண்மையாகத், திருவுளத்துக் கருத்தெதுவோ வதுவெனக்குங் கருத் தென்றான் தெய்வமன்னன்" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம். சகதேவன் முதிர்ந்த தத்துவஞானமுடையவனாதலால், இங்ஙனங் கூறினான்; அவதரித்த காரியத்துக்கு அநுகூலமான தாகையால், 'மகிழ்ந்தேகும்' என்றது. மகிழ்ந்து காத்து உய்த்தாய் எனக் கூட்டினும் குற்றமில்லை. வண்ணம், தற்பரம் - வர்ணம், தத்பரம் என்னும் வடசொற்களின் திரிபுகள். தத்பரமென்ற பெயருக்கு - அதனைக் காட்டிலும் மேலான தென்று பொருள்; இதில், 'அதனைக் காட்டிலும்' எனச் சுட்டுப்பெயராற் குறித்தது, ஜீவாத்மாவை யென்க. இப்பெயர் - தன் பரம் எனத் தமிழாகப் பிரிந்து, தன்னில் தானே மேலான தென்றும் பொருள்படும். 'கடவுளை இருதிணையாலுஞ் சொல்லலாம்' ஆதலால், 'நின்றதொருதற்பரம்' என அஃறிணையாலுங் குறித்தார். காரணம், கஞ்சம், வாரணம் - வடசொற்கள். கஞ்சம் என்பதற்கு - நீரிற் பிறப்ப தென்று காரணப்பொருள்; கம் - நீர், ஜம் - உண்டாவது: இது-காரணத்தைநோக்குமிடத்து, அல்லி ஆம்பல் குவளை நெய்தல் முதலிய நீர்ப் பூங்கொடிகளையெல்லாங் குறித்தற்கு ஏற்ற தாயினும், அங்ஙனங் குறியாமல் தாமரையொன்றையே சிறப்பாகக் குறித்தலால், காரணவிடுகுறிப்பெயர்.

மண்ணுலகையும் விண்ணுலகையும் எடுத்துக்கூறினது, மற்றையுலகத்துக்கும் உபலக்ஷணம். இனி, மண் உலகும் - பூலோகத்தையும், விண் உலகும் - தேவலோகத்தையும், தாய் - (திரிவிக்கிரமாவதாரத்தில்) அளவிட்டு, ஆகி நின்ற - (எப்பொழுதும் எங்கும்) பொருந்திநின்ற என்று பொருள் கொள்ளினுமாம். தாய் - தாவி; தா - பகுதி, ய் - இறந்தகாலவினையெச்சவிகுதி. திரிவிக்கிரமாவதாரகதை:—மகாபலியென்னும் அசுரராசன் தன்வல்லமையால் இந்திரன்முதலியயாவரையுஞ் சயித்து மூவுலகங்களையுந் தன்வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்தபொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து வேண்ட, அப்பெருமான், குள்ள வடிவமான வாமனாவதார மெடுத்துக் காசியபமுனிவனுக்கு அதிதிதேவியினிடந் தோன்றின பிராமணப்பிரமசாரியாகி, வேள்வியியற்றி யாவர்க்கும் வேண்டியஅனைத்தையுங் கொடுத்துவந்த அந்தப்பலியினிடஞ் சென்று, தவஞ் செய்தற்குத் தன்காலடியால் மூவடி மண் வேண்டி, அதுகொடுத்தற்கு இசைந்து அவன் தத்தஞ்செய்த நீரைக் கையில்ஏற்று உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தையளாவி வளர்ந்து, ஓரடியால் மண்ணையும் ஓரடியால்

விண்ணையும் அளந்து, மற்றோரடியால் அவனையும் பாதாளத்தி லழுத்தி அடக்கினான் என்பதாம். மண்ணுலகத்தையளந்ததில் அதன்கீழுள்ள பாதாளலோகமும் அடங்கிற்று; எனவே, மூவுலகத்தையும் அளந்ததாம். 'ஆகி நின்ற' என்பது, எல்லாப்பொருள்களிலும் நீங்காமல் அந்தர்யாமியாய் மறைந்து வசித்தலை.

வாரணங்காத்த கதை:—இந்திரத்யும்ந னென்னும் அரசன் மிக்க விஷ்ணுபக்தியுடையனாய் ஒருநாள் விஷ்ணுபூசைசெய்கையில், அகஸ்திய மகாமுனிவன் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் கருத்துமுழுவதையுந் திருமாலைப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின்வருகையை யறியாமல் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க, அம்முனிவன் தன்னை யலட்சியஞ்செய்தா னென்றுகருதிக் கோபித்து 'நீ யானைபோலச்செருக்குற்றிருந்ததனால், யானையாகக்கடவை' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத்தோன்றினானாயினும், முன்செய்தவிஷ்ணுபக்தியின்மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக் கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்துவருகையில், ஒருநாள் பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அருச்சனைக்காகப் பூப்பறித்தற்குப் போயிறங்கினபொழுது, அங்கே, (முன் நீர்நிலையில் நின்று தவஞ்செய்துகொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவனது சாபத்தால்) பெரியமுதலையாய்க் கிடந்த ஹூஹூஎன்னுங்கந்தருவன் அவ்யானையின்காலைக் கௌவிக்கொள்ள, அதனை விடுவித்துக்கொள்ள முடியாமல் கஜேந்திரன் ஆதிமூலமே யென்று கூவியழைக்க, உடனே திருமால் ஸ்ரீகருடவாகனாரூடனாய் அங்குஎழுந்தருளித் தனது சக்கரத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்றும் விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியை அருள்செய்தனன்.

உய்த்தல் - கரையேற்றுதல், ஈடேறச்செய்தல். ஏகும், ஏகு - பகுதி. மலர்வது மலர் எனக் காரணப்பெயர். (உரு)

[என்பது: தேவதேவனே! நீ அஸ்தினபுரத்துக்குப் போகின்ற காரணமும், காரணத்தின் குறிப்புக்களும், நீ செய்யத்தக்கனவும், செய்துமுடிக்கத் தக்கனவும், நின் மகாமாயையும், மாயத்தின் சூழ்ச்சிகளும், நின் திருக்குறிப்பும்,நின்திருவுள்ளத்தின் நினைவுகளும்,மற்றும் உள்ளிட்ட மகாவிஷ்ணுமாயையெல்லாம் எம்பெருமானே! என்னால் அறியப்பட்டதாதலால், இனி அதனாற் பிரயோசனம் என்? என்றும், நின்திருவுள்ளக்கருத்தே முற்றுவிப்பாயாக என்றுஞ் சொல்லுகின்ற சகதேவனை நோக்கி யாதருளிச்செய்தான் ஸ்ரீ வாசுதேவன்:]

கண்ணன் சகதேவனை நோக்கி 'நீ இவ்வாறு சொன்னது என்' என்றல்.

126.— (இ - ள்.) வேத அதிபனே - வேதங்களுக்குத் தலைவனே! மன்னற்கு நேர் இளைய மன்னவனே-தருமராசனதுதகுதிக்கு ஏற்ற இளையதம்பியான அரசனே! தூது ஆக போவேனை - (தருமனது விருப்பத்தின்படி) தூதனாகச்செல்லத்துணிந்த என்னைக்குறித்து, சொன்ன - (நீ) சொன்ன, தகவு இன்மை - தகுதியில்லாத வார்த்தையின் கருத்து, ஏதோ - யாதோ? விளம்பிக்காண் - உறுதியாகச்சொல்லு; என் நினைவை - எனது (தூதுசெல்லுங்) கருத்தை, இன்னதே என்று - இன்னதென்று, ஈங்கு - இப்பொழுது, உரையாய் - சொல்வாய்; (எ - று.)

உங்கள்காரியத்தை நல்வழியில் முடிக்கும்பொருட்டுத் தூதுசெல்லுதற்கு இசைந்த என்னை என்காரியமாகச் செல்பவனைப்போலப் பாவித்து 'நீ யேகுங்காரணங்களெல்லா மறிந்தேனே' என்று நீ சொன்னதன் விவரத்தை

யும், நான் செல்லுங் காரணத்தையும் சொல்லு பார்ப்போம் என்பதாம். கீழ்ச் சகதேவன் 'நீ யேகுங் காரணங்கள்' என்றதனால், 'தூதுபோவது நேரானஎண்ணத்தோடன்று; ஏதுவோ கபடமானஎண்ணம்பற்றி' என்று குறிப்பித்ததனால், 'தகவின்மை' என்று சொல்லியது. இங்கே, 'வேதாதிபன்' என்பதற்கு - வேதங்களின் உண்மைக்கருத்தை உள்ளபடியறிந்தவனென்பது.தேர்ந்தபொருள். (இது, கீழ் எட்டாம்பாட்டில் கண்ணனுக்குப் பெயராய் வந்தபொழுது கருத்துப்பட்டவிதத்திற்கும், இதற்கும் உள்ள வேறுபாட்டை உணர்க.) நேர் மன்னவன் என இயையும். 'மன்னற்கு நேர் இளைய மன்னவன்' என்று, தமையனது சாந்தகுணவமைதிக்கும் தம்பியினது தத்துவஞானவமைதிக்கும் உள்ள தகுதியை எடுத்துக்காட்டியபடி. இளைய மன்னவன் - இறுதித்தம்பி. 'நேரிளைய' என்று எடுத்துப் பொருள்கொள்ள இடமில்லை. விளம்பிக்காண் - ஒருசொல்தன்மைப்பட்டது; இனி, சொல்லி (அது சரியோ அன்றோ என்னும் முடிவைப்) பார் என்றுமாம். நினைவு - சங்கற்பம்.

தூது - தூத என்னும் வடசொல்லின் திரிபு. போவேன் - தன்மையொருமை வினையாலணையும்பெயர். தகவு - தொழிற்பெயர்; தகு - பகுதி, அ- சாரியை. தகவின்மை - தகுதியில்லாதவார்த்தைக்கு, பண்பாகுபெயர். இன்னது - இகரச்சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். ஏ - பிரிநிலை. மன்னற்கு என்ற நான்காம்வேற்றுமை-'நேர்' என்பதனோடு தொடர்கையில் தகுதிப்பொருளும், 'இளையமன்னவன்' என்பதனோடு தொடர்கையில் முறைப்பொருளும் உடையது. கீழ்த் தருமன்கருத்துக்கு உடன்படாதுபேசின வீம அருச்சுன நகுலர்போலன்றி அவன்கருத்துக்குக் குறுக்கின்றிப்பேசின நீ அவனுக்குஏற்ற தம்பி யென்பான், 'மன்னற்குநேரிளையமன்னவனே' என விளித்தான். (உகூ)

[என்பது: நான் உங்களுக்குத் தூதாளாகத் துரியோதனன்பக்கல் இராச்சியம்வேண்டிப்போவேனை ஈங்கொருதகவின்மையுரைத்தா யாதலால், மற்று அது ஏதோ வென்று ஸ்ரீவாசுதேவன் அருளிச்செய்ய, கேட்டு யாது சொன்னான் சகதேவன்:]

சகதேவன் கண்ணனை நோக்கி 'நீ செல்லுங்காரணம் இன்னது' என்றல்.

127.—(இ - ள்.) மறம் - கொடுமையையுடைய, அந்த மன்னவர்களோடே- அந்த (த் துரியோதனாதி) அரசர்களுடனே,அடியோமை-(உனது) அடியவராகிய எங்களையும், சிந்த - அழியும்படி, புடைத்து-(ஒருவரைக்கொண்டு ஒருவரை) அடித்து,—திசை எங்கும் வந்து படை பொருத - (எங்களிருதிறத்தாருக்குந் துணையாக) எல்லாத்திக்குக்களினின்றும் வந்து நாற்புறமுஞ் சூழ்ந்து ஆயுதங்களாற் போர்செய்த, மன்னரையும் - அரசர்களையும், பாரதத்தால் - பாரதப்போரினால், கொல்ல தான் - கொல்லும்படியாகவே,— அடைவுடனே - தொடர்ச்சியாக, நினைந்தாய் -(நீ) நினைத்துள்ளாய்; (எ-று.)— ஆங்கு - அசை; அவ்விடத்தில் அல்லது அப்பொழுது என்று உரைத்து, 'கொல்ல' என்பதனோடு கூட்டினுமாம். புடைத்துக் கொல்ல நினைந்தாய் என்க.

உன்னுடைய சங்கல்பம், போரில் இருதிறத்தாரையுந் தொலைத்துப் பூமிபாரத்தை நிவிருத்திசெய்து உன் திருவவதாரப்பயனை முடிக்கும்படியாகவே யுள்ளது என்பதாம்; "நீ பாரதவமரில் யாவரையும் நீறுக்கிப், பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம். அடைவுடனே நினைத்தல் - மேன்மேல் வெகுதூரம் ஆலோசித்துமுடித்தல். பாரதம் - பரதவம்சத்தாருள் நிகழும் போர்; பார் அதம் எனப்பிரித்து, பூலோகத்து உயிர்களுக்கு நாசத்தையுண்டாக்கும் போர் என்றுங்கொள்ளலாம். சிந்த - இரத்தம் சிந்த என்றும், படைபொருத-சேனைகளுடன் போர்செய்த என்றுங் கொள்ளலுமாம்.

அந்த - அகரச்சுட்டின் மரூஉ. அடியோம் - அடிமை யென்னும் பண்பி னடியாப் பிறந்த தன்மைப்பன்மைக் குறிப்புவினையாலணையும்பெயர். திசை-திசா என்னும் வடசொல் ஈறுதிரிந்தது. பொருத, பொரு - பகுதி. மன்னரையும், உம் - இறந்தது தழுவிய எச்சம். ஆங்கு - அங்கு என்பதன் நீட்டல். 'தான்'என்பது - 'கொல்ல' என்பதனோடு சேர்த்துப் பிரிநிலைப்பொருள்கொள்ளப்பட்டது. (உஎ)

[என்பது: மகாமாயம் வல்லானே! நின் திருவுள்ளக்கருத்து நினைவுகளை யான் சொல்லக் கேட்பாயாகில், துரியோதனன் இராச்சியந்தாராதபோது மற்று அவனுடனே யுத்தம்விளைந்தவிடத்து மற்று அவரையும் எங்களையும் மடிவித்து எங்களுக்காக யுத்தம்பண்ணவந்த க்ஷத்திரியரையும் மற்றுமுள்ள சதுரங்கபலத்தையும் தரைப்படுத்திப் பூமிதேவிக்குப் பொறைதீர்த்து நீயும் ஏகரூபியாக நிற்கவே எண்ணினாய் என்று சகதேவன் சொல்ல, கேட்டு அதிசயித்த திருவுள்ளத்தனாய் யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் சகதேவனை 'என்மாயை அறிவாயாயின் இது செய்' என்றல்.

128.—(இ - ள்.) யாம் - நாம், ஆயிரம் கால் தான் உடைய மண்டபத்தில் புகுந்து - ஆயிரந் தூண்களையுடைய இம்மண்டபத்திலே பிரவேசித்து, ஆயிரம் கால் தன்னில் அமருவேம் - அவ்வாயிரந்தூண்களிலும் மறைந்து தங்குவோம்; (அங்ஙனம் நிற்கும்பொழுது), நீ—, எம்தம் சத்திதான் நிற்கும் தனி தூண் அறிந்தாயேல் - (அவ்வாயிரந்தூண்களுள்) எமது விசேஷசக்தி பொருந்திநிற்பதொரு தூணை (இன்னதென்று) அறிந்தாயானால், தலத்து - இந்நிலவுலகத்தில், சத்தியவான் ஆக - உண்மைமொழியுடையவனாவாய்.

நாம் அருகிலுள்ள இம்மண்டபத்தில் ஆயிரந்தூண்களினுள்ளும் மறைந்துநிற்கையில் எமது விசேஷசக்தி இன்னதூணிலுள்ளதென்று அறிவாயானால், எமது சங்கல்பம் உன்னால் அறியப்பட்டதாம்; ஆகவே, நீ கீழ் எம்மைக் குறித்துக்கூறிய வார்த்தையும் உண்மையாகும் என்பதாம்.

சக்தி, ஸத்யவாந் என்னும் வடசொற்கள் திரிந்தன. தூண் - ஸ்தூணா என்னும் வடசொல்லின் சிதைவு. 'ஆயிரக்கால் தன்னில் அமருவேம்' என்றதற்கு - ஆயிரந்தூண்களுள் ஒன்றில் இருப்போம் என உரைத்தல் நூலாசிரியரது கருத் தல்லாமையை அடியில்வரும்வசனத்தாலும், "தனித்தனி தூணாயிரத்திற், போயறியத் தானொளித்தான் புக்கு" என்ற அடுத்தகவியாலும் அறிக. ஆகவே, 'ஆயிரக்கால்தம்மில்' என்னாது 'ஆயிரக்கால்தன்னில்' என்றது, சாதியொருமைபற்றி; 'ஆயிரக்கால்தானுடைய' என்றதும் இது. 'தன்னில்' என்றதன் இறுதியில் முற்றும்மை விகாரத்தால் தொக்கது; அடுத்தபாட்டில்'ஆயிரத்தில்' என்பதிலும் இப்படியே. தனித்தூண் - பண்புத்தொகை; தனிமையாகிய தூண் என விரியும்: வருமொழி வலி இரட்டியதனால், வினைத்தொகையாகாமை யுணர்க. (உஅ)

[என்பது: நாம் போகின்ற காரியங்களும், செய்துமுடிக்குஞ் செயல்களும் நீ 'அறிவோம்' என்று யாதலால், நீ அறிவையாகில், நாம் இந்த மண்டபத்திற் புகுந்து ஆயிரந்தூணிலும் மறைந்து நிற்போம்; நின்றக்கால், நம்முடைய சக்தி நிற்குந் தூணை யறிந்தாயாகில், நாம்விசாரித்திருக்கின்ற காரியங்களும் அறிவை என்றும், இந்தப்பூமண்டலத்துக்குச் சத்தியவானென்றும் ஸ்ரீவாசுதேவனும் அருளிச்செய்ய, கேட்டுச் சகதேவனும் உடன்பட, அப்பொழுது யாது அருளினான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் மண்டபத்திற் சென்று மறைதல்.

129.—(இ - ள்.) (கண்ணபிரான்), சாதேவனோடும் தருக்கித்தே-(இவ்வாறு) சகதேவனுடனே வாதஞ் செய்தபடியே, தான் எழுந்து - தான்

(இருந்தவிடத்தினின்று) எழுந்து, மா தேவ மண்டபத்திலே புகுந்து - சிறந்த தெய்வத்தன்மையையுடைய அந்தஆயிரக்கால்மண்டபத்திலே பிரவேசித்து, சாதேவன் தான் அறியா வண்ணம் - சகதேவன்தான் அறியக்கூடாதபடி, (தனதுசொரூபத்தை மறைத்துக்கொண்டு), தனி தனி தூண் ஆயிரத்தில் போய் புக்கு - தனித்தனியே தூண்களாயிரத்திலும் போய் உள்ளே பிரவேசித்து, அறிய - (சகதேவனது திறமையை) அறியும்பொருட்டு, ஒளித்தான் - மறைந்தான்; (எ - று.)

அறிய - (தனது விசேஷசக்தி உள்ள தூணைச் சகதேவன் இன்னதென்று) அறியும்பொருட்டு எனினும் அமையும்.

ஸஹதேவன் என்ற பெயர், திரிந்தது. தருக்கித்து - தர்க்க மென்னும் வடமொழிப்பெயரினடியாப் பிறந்த இறந்தகாலவினையெச்சம். மா - மஹா என்னும் வடமொழிச் சிதைவு. தேவமண்டபம் - வடமொழித்தொடர்; இங்கே, 'தேவ' என்பது - சிறப்பை யுணர்த்திற்று; 'திவ்யம்' என்பதுபோல. எம்பெருமான் எழுந்தருளுவதற்கு இடமாதலே மண்டபத்துக்குத் தெய்வத்தன்மை யெனவுமாம்; தேவசிற்பந்தவறாத மண்டபமுமாம். தான் - அசை. (உக)

[இவ்வகை சாதேவனுடன் தர்க்கித்து ஸ்ரீவாசுதேவனும் அந்தமணிமண்டபத்துட் புகுந்து மணித்தூண்களாயிரத்திலுந் தன்சுருபத்தைக் கரந்துகொண்டு எழுந்தருளிநின்றான்: அவ்விடத்துச் சாதேவனும் அந்தமண்டபத்திற்புகுந்து ஸ்ரீவாசுதேவன்சக்திவகை எழுந்தருளியிருக்குந் தூணைச்சேர்ந்து புட்பாஞ்சலிபண்ணி நமஸ்கரித்து யாதுவிண்ணப்பஞ்செய்தான் சகதேவன்:]

சகதேவன் ஆதிதேவனை வெளிப்படுமாறு துதித்தல்.

130.—(இ - ள்.) சாதேவன் - சகதேவன், ஆரும் தலத்து - (கண்ணனது விசேஷசக்தி) உள்ள தூணினிடத்தில், (அடுத்து நின்று),—'இரணியனை கொல்லவே - இரணியாசுரனைக் கொல்லும்பொருட்டாகவே, அ தூணில் நின்று - (அவனால் அறையப்பட்ட) அத்தூணிலிருந்து, அன்று - (அவனறைந்த) அப்பொழுது, அங்கு - (அவனறைந்த) அவ்விடத்தில், புறப்பட்ட - (நரசிங்கமூர்த்தியாய்) வெளித்தோன்றிய, நெடியோனே - பெருமையுடையவனே! நீ இன்று என்முன் போதாய் - (அப்பொழுது வெளிப்பட்டதுபோல) இப்பொழுது என்முன் வெளிப்பட்டு வந்தருள்வாய்,' என்று புகழ்ந்து ஏத்தி நின்றான் - என்றுசொல்லிப் புகழ்ந்து துதித்துநின்றான்; (எ - று.)—ஏ - ஈற்றசை.

மறைந்திருந்த தூணினின்று வெளிப்படவேண்டுமென வேண்டுவான், இச்சந்தருப்பத்திற்கு ஏற்ப, நரசிம்மாவதாரவிபவத்தை யெடுத்துப் புகழ்ந்தான். தூணினின்று புறப்பட்ட வரலாறு:—தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும் ஐம்பெரும்பூதங்களாலும் ஆயுதங்களாலும் தனக்குமரணமில்லாதபடி அளவற்றவரங்களைப் பெற்றுத் தேவர் முதலிய யாவர்க்குங் கொடுமைகளை யியற்றித் தன்னையே கடவுளாக வணங்கச்செய்து வந்தவனும், இரணியாக்கனது உடன்பிறந்தவனு மான இரணியன், தன்புத்திரனும் மகாவிஷ்ணுபக்தனு மான பிரகலாதாழ்வான் தன்பெயர்சொல்லிக் கல்விகற்காமல் நாராயணநாமஞ்சொல்லிவரவே, அவனைக்கொல்லுதற்கு என்னஉபாயஞ்செய்தும் அவன் பகவானருளால இறந்திலனாக, இரணியன் மகனைநோக்கி 'நீசொல்லும் நாராயணனென்பான் எங்கு உளன்? காட்டாய்' என்ன, அப்பிள்ளை "சாணினு முளனோர் தன்மை யணுவினைச் சதகூறிட்ட, கோணினு முளன் மாமேருக்குன்றினு முளன் இந்நின்ற, தூணினு முளன் நீசொன்ன சொல்லினு முளன் இத்தன்மை, காணுதி விரைவின்" என்றுசொல்ல, உடனே இரணியன், நன்று என்று சினந்து,

இங்கு உளனோ? என்றுசொல்லி, எதிரிலிருந்த தூணைப் புடைக்க, அதி னின்றும் பகவான், மனிதரூபமுஞ் சிங்கவடிவமுங் கலந்த நரசிங்கமூர்த்தி யாய்த் தோன்றித் திருக்கைநகங்களால் அவன்மார்பைப் பிளந்து அழி த்திட்டனன் என்பதாம். இரணியன் அறைந்த அப்பொழுதே பகவான் வெளித்தோன்றாமல் சிறிதுபொழுது கழித்துத் தோன்றினால் 'அப்பொ ழுது உளன் என்ற பிரகலாதனது பிரதிஜ்ஞை தவறி 'இல்லை' என்ற இரணியன்வார்த்தையே நிலைநிற்கு மாதலாலும், இரணியனறைந்தவிடத்தி னின் றன்றி வேறு இடத்தினின்று தோன்றினால் 'அங்கு உளன்' என்ற மைந்தனது மொழி பொய்யாய் 'இங்கு இல்லை' என்ற தந்தையின் சொ ல்லே மெய்ப்படு மாதலாலும், அன்று அங்குப் புறப்பட்டனன் என்று உண் மையை வெளியிட்டதாகவும், வேறொருதூணினின்று தோன்றினால் அத் தூணில் முன்னமே பிரகலாதன் நரசிங்கத்தை அடக்கிவைத்தானென்று இரணியன் எதிர்மறுக்கக்கூடு மாதலால் அங்ஙனமன்றி அவன்தானே தன் வீட்டில் அளர்த்துவைத்திருந்த அத்தூணினின்று புறப்பட்டன னென வேண் டிற் றென்றும், 'நெடியோன்' என்றது மிகப்பெரியவடிவமுடைய இரணி யனைக்காட்டிலும் பெரியவடிவமுடையவ னென்றவாறு மென்றும் பெரி யோர் விசேஷார்த்த முரைப்பர். "அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே, வளர்ந்திட்ட வாளுகிர்ச் சிங்கவுருவாய், உளந்தொட் டிரணிய னொண்மார் பகலம், பிளந்திட்ட கைகள்" என்றும், "எங்குமுளன் கண்ண னென்ற மகனைக் காய்ந்து, இங்கில்லை யா லென் றிரணியன் தூண் புடைப்ப, அங் கப்பொழுதே யவன் வியத் தோன்றிய வென், சிங்கப்பிரான் பெருமை யாரா யுஞ் சீர்மைத்தே" என்றும் உள்ள ஆழ்வார் அருளிச்செயல்களைக் காண்க.

அன்று, அங்கு, இங்கு - சுட்டடியாப்பிறந்து ஏழாம்வேற்றுமையிடப் பொருளுணரநின்ற இடைச்சொற்கள். இரணியன்=ஹிரண்யன்; இவ்வட சொல்லுக்கு - பொன்னிறமானவ னென்று பொருள்: இரணியம் - பொன். தூணினின்று - இல் என்ற ஐந்தனுருபின்மேல், நின்று - ஐந்தாம்வேற்றுமைச் சொல்லுருபு. (௩௰)

[என்று இவ்வகை விண்ணப்பஞ்செய்யக் கேட்டு ஸ்ரீவாசுதேவனும் பிரி யப்பட்ட திருவுளத்தனாய்த் தன்விசுவரூபத்தை வெளிப்படுத்திநின்றானைக் கண்டு பிரியப்பட்ட மனத்தனாகித் தண்டன்பண்ணி நமஸ்கரித்துப் பின்னும் யாதுவிண்ணப்பஞ்செய்தான் சகதேவன்:]

சகதேவன் துதித்தலும், கண்ணன் 'வரம்வேண்டுக' என்றலும்.

131.— (இ - ள்.) தொழுது - (சகதேவன் கண்ணனை) வணங்கி, (அப் பெருமானைநோக்கி), 'காற்றும்—,கனலும் - அக்கினியும், இடியும்—, கதி ரோனும் - சூரியனும், தோற்றும் சுடரும் - விளங்குகிற (சந்திரன் முதலிய மற்றை) ஒளிகளும், சுருதியும் - வேதங்களும், ஆய் - என்னும் இவற்றின் வடிவமாகியும், நால் திசையோடு - நான்குதிக்குக்களும், எல்லாம் உயிரும்- சகலசீவராசிகளும், ஆய் - என்னும்இவற்றின் வடிவமாகியும், நின்றாய் - நிலைபெற்ற முதற்கடவுளே!' என - என்று துதிக்க, (கண்ணன் அவனை நோ க்கி), குறிப்பை சொல்லாய் என்றான் - '(உனது) வேண்டுகோளைச் சொல்' என்று கூறினன்;(எ - று.)—ஏ - ஈற்றசை.

சகதேவன் எம்பெருமானது விசேஷசக்தி பொருந்தின தூணை யடுத்து, அவனது துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலநம் விசித்திரசக்தி முதலிய திருக் கலியாணகுணங்கள் தோன்றத் துதிசெய்தபொழுது, கண்ணன் அத்தூணி னின்று வெளிப்பட்டுத் தரிசனந்தந்திட, மீண்டும் சகதேவன் பகவானது அந்தர்யாமித்வம், ஜகச்சரீரகத்வம் முதலிய குணவிசேஷங்களை எடுத்துப்

புகழ, வாசுதேவன் திருவுள்ளமுவந்து 'உனக்கு வேண்டும் வரம் கேட்பாயாக, இப்பொழுது தந்திடுவோம்' என்று கூறியருளினன் என்பதாம்.

பிரபஞ்சமுழுவதும் பகவானது சொரூபமே யென்பது, 'காற்றும்...... நின்றாய்' என்றதன் கருத்து. சந்திரன் முதலிய ஒளிகளெல்லாவற்றினும் மிக்கவொளியையுடைமையால், சூரியனுக்கு 'கதிரோன்' என்று பெயர். கதிரோன் - (ஆயிரம்)கிரணங்களை யுடையவன். 'கதிரோன்' என முன்னர் வந்ததனால், 'சுடர்' என்றது, மற்றையொளிகளை உணர்த்திற்று. ச்ருதி என்னும் வடசொல்லுக்கு - (எழுதாக்கிளவியாய்க் குருசிஷியக்கிரமத்தில் கர்ணபரம்பரையிலே) கேட்கப்பட்டு வழங்குவதென்று பொருள். 'எல்லாவுயிருமாய்' என்றது, உயிரினுள்உயிராய் மறைந்துவசித்து அதனைக்கொண்டு தொழில்செய்தலையும்,பிராணிவர்க்கமாகக் காணப்படுதலையும் குறிக்கும். 'நின்றாய்' என்பதை விளியாகக்கொள்ளாமல் முன்னிலையொருமை வினையாலணையும்பெயராகக் கொண்டு, இங்ஙனம்நின்றவன் நீ யென்று பொருள்கூறினும் பொருந்தும். குறிப்பு - மனத்திற்குறிக்கப்படும் வரத்துக்கு, தொழிலாகுபெயர். (நக)

[என்பது: நீ சர்வலோகங்களுக்கும் சர்வகர்த்தாவாய்த் திரிகாலஞானியாய்ச் சர்வப்பிராணிகளுக்கும் சிட்டிதிதிசங்காரனும் நீயேயாய்ப் பின்னும் இரட்சிப்பானாய் மாயைபண்ணுகின்ற நீ நீதிமார்க்கங்களாற் சயத்தினை வேண்டினும் வேண்டுக; சந்தினை வேண்டினும் வேண்டுக; செயற்படு காலமும் விசயமும் வெகுளியுங் கூறவல்லார் யாவரோ? என்று நின் திருவுள்ளமல்லதில்லை யெனப் பேசிய சகதேவனைச் சந்தோஷித்து மகாப்பிரியஞ்செய்து மற்று அவனைத் திரிகாலஞானியெனக் குறித்துத் தன்அருகுஅணைத்து 'உனக்கு வேண்டுவன உளவாகில் வேண்டிக்கொள்வாயாக' என, கேட்டு யாதுவிண்ணப்பஞ்செய்தான் சகதேவன் :]

சகதேவன் கண்ணனை வரங்கேட்டல்.

132.—(இ - ள்.) அரவு அணை மேல் - ஆதிசேஷனாகிய படுக்கையின் மேல், கண்வளர்ந்தாய் - யோகநித்திரைசெய்தருளுபவனே! மண் அளந்தாய் - உலகத்தை அளவிட்டவனே! அரவு உயர்த்தோன்தன்னால் - துரியோதனனால், நாங்கள்—, அரு கானம் எய்தி - (செல்லுதற்கு) அரிய காட்டினை யடைந்து, மிக பட்ட - மிகுதியாக அடைந்த, துயர் - துன்பம், திர - நீங்கும்படியும், முரசு உயர்த்தோன் - தருமபுத்திரன், காசினியை ஆள்வதற்கு - பூமியை அரசாளும்படியும், வரம் நல்காய் - (நீ எங்களுக்கு) வரமளித்தருளுவாய்; (எ - று.)

பொருட்சிறப்புநோக்கி, இவ்வாறு கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது; இனி, நேரே யாற்றொழுக்காகப் பொருள்கொள்வது இத்துணைச்சிறப்பின்றாம். 'முரசுயர்த்தோன் காசினியையாள்வதற்கு' என்றதனால், சகதேவன் தமையனிடமிருந்தபரிவினால் இவ்வரம்வேண்டியதே யன்றித் தனக்குவேண்டுமென்றுஅன்று என வுணர்க. மிக ஆள்வதற்கு என இயைப்பின், துரியோதனனதியரினும் மேன்மைப்பட ஆளுதற்கு என்க. உலகத்துஉயிர்களை உய்விக்கும் உபாயத்தையே ஆலோசித்துக்கொண்டு சேஷசயநத்தில் யோகநித்திரைசெய்தருளுகிற நீயே நாங்கள் துன்பந்தீர்ந்து நாடாள வரமளிக்கவல்லா யென்பது தோன்ற 'அரவணைமேற்கண்வளர்ந்தாய்' என்றும், முன்பு இந்திரன்முதலிய தேவர்களிழந்த அரசாட்சியை வாமனனாய் மாவலியினிடஞ் சென்று மீட்டுவந்த நீயே இப்பொழுது நாங்களிழந்த அரசையும் சென்றுமீட்கவல்லா யென்பது தோன்ற 'மண்ணளந்தாய்' என்றும் விளித்தான்.

உயர்த்தோன் - தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொதுவாகிய உயர் என்னும்பகுதி வலிமிக்குப் பிறவினைகாட்டிற்று ; தன்வினையில் உயர்ந்தோன் என வலிமிகாதுவரும். அருங்கானம் - பண்புப்பெயர், ஈறுபோய் இனம் மிக்கது. எய்தி, நல்காய்—எய்து, நல்கு - பகுதிகள். கண்வளர்தல் - கண்மூடி யுறங்குவதுபோலிருத்தல். காசினி-காச்யபீ என்னும் வடசொல்லின் திரிபு; பரசுராமனால் கசியபமுனிவனுக்குத் தானஞ்செய்யப்பட்டதென்று பொருள். வரம் - வடசொல்; வேண்டுவனகொள்ளுதல். (நஉ)

[என்பது: துரியோதனன்மாயச்சூதாடி மண்தோற்று வனவாச மெய்தித் தருமபுத்திரன்பட்ட கிலேசங்களும் நாங்கள்பட்ட கிலேசங்களும் திரௌபதிபட்ட பரிசிரமமும் எல்லாம் எம்பெருமானே அறிந்தருளுமாதலால், அது ஒழிந்து முன்னம் பாலியகாலத்தில் நாங்கள் மாதாவோடு பட்ட அவஸ்தைகளும் அறிந்தருளுமாதலால், இங்குஇவையெல்லாம் துரியோதனனையும் பிராதாக்களையுங் கொன்று நாங்களுஞ் சிறிதுகாலம்இராச்சியம்ஆளும்படிக்குத் திருவுளம்பற்றியருளுவாயாக எனக் கேட்டுப் பிரியப்பட்ட • திருவுளத்தனாய் யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன் :]

கண்ணன் சகதேவனுக்கு வரமளித்தல்.

133.—(இ - ள்.) பார் ஆளும் மன்னவனை - பூமியை அரசாளுகிற துரியோதனராசனை, யானும் போய் சந்தித்தால் - (முன்பு உலூகன் சென்றதேயன்றி இப்பொழுது) நானும் சென்று கலந்துபேசினால், (அதன்பின்பும்), நேர் ஆக நாடு விடான் ஆகில் - (அவன்) கிரமமாக (உங்கள்) இராச்சியத்தை (உங்கள்வசத்தில்) விட்டிடானானால், சீர் ஆரும் - சிறப்பு மிக்க, கொற்றம் குடையும் - வெற்றிக்குஅறிகுறியான வெள்ளைக்குடையும், குரு நாடும் - குருக்ஷேத்திரமும், வெற்றியுடன் - சயத்துடனே, கூட - (உங்களுக்குச்) சேரும்படி, நாம் மிக்கு அருள் தருவோம் - நாம் மிகுதியாகக் கருணைசெய்வோம்.

நான் தூதுசென்றபின்பும் துரியோதனன் அரசுகொடானானால், அவ்வரசாட்சிச்செல்வமெல்லாம் உங்களுடையனவேயாம்படி செய்திடுவேனென்று கண்ணன் வரமளித்தான். 'மிக்கு அருள்தருவோம்' என்றதனால், உங்களுக்குஉரிய பாதியேயன்றி அவர்களுக்குஉரியபாதியுஞ் சேர்ந்து முழுவதும் உங்களுடையதாம்படி செய்வோம் என்றபடி. 'யான்' என்ற ஒருமையோடு 'நாம்தருவோம்' என்ற பன்மை விரவிவந்தது, ஒருமைப்பன்மை மயக்கம் ; வழுவமைதி : [நன் - பொது - உ௧.] 'நாம் தருவோம்' என்றது, ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்னை இங்கே தெய்வமாகக்காட்டி உயர்த்திக்கூறுகின்றமையால் வந்த தனித்தன்மைப்பன்மையாம். 'வெற்றியுடன்' என்றது, வஞ்சனையினாலன்றிச் சத்துருசயத்தோடு என்றபடி. சீர் - ஸ்ரீः என்னும் வடசொல்லின் சிதைவு என்பர். நீதிதவறாத அரசாட்சியை 'கொற்றக்குடை' என்றல், மரபு. தருவோம் என்பதில், தா என்னும் பகுதி குறுகி விரித்தல் விகாரம்பெற்று, தரு என நின்றது. (நங)

[என்பது : துரியோதனன்பக்கல் யான் போய் மற்று அவன் கருத்து அறிந்து உங்கள்உரிமைவேண்டத் தாரானாகில், யுத்தம்பண்ணியாயினும் உங்கட்கு இராச்சியந் தரக்கடவோம்; இதற்குச் சந்தேகமில்லையென்று சகதேவனுடன் ஸ்ரீவாசுதேவன் அருளிச்செய்யு மிடத்துத் துரௌபதி வந்து அருகு அணைந்து யாதுசொன்னாள் :]

திரௌபதி கண்ணனுக்குத் தன் தலைவிரிகோலத்தைக் காட்டுதல்.

134.—(இ - ள்.) பாஞ்சாலி - பாஞ்சாலதேசத்துஅரசனாகிய துருபதனது மகளான திரௌபதி,—பங்கயம் - (செந்) தாமரைமலர்போன்ற, கண் - திருக்கண்களையுடைய, மாயன் - கண்ணபிரானது, அடி - திருவடிகளை,

பணிந்து - வணங்கி,—செம் - சிவந்த, கயல் - கயல்மீன்போன்ற, கண் - (தன்னுடைய) கண்களினின்று, முத்தம் - முத்துப்போன்ற நீர்த்துளி, திகழ்ந்து - விளங்கி [வெளிப்பட்டு], அலைப்ப - அலையச்செய்ய [மிக்குப் பெருக],—சோர்ந்து - தளர்ச்சியடைந்து,—சங்கம் - சங்கினாலாகிய, வளை - வளையல்களினுடைய, நிரை - வரிசையை அணிந்த, கையால் - (தன்னுடைய) கைகளால், வாசம் குழலை - பரிமளத்தையுடைய (தனது) கூந்தலை, எடுத்து —, தூளை நிரை கை - (புள்ளாங்குழலின்) துளைவரிசையிற் பதிந்துபயிலுந் தன்மையுள்ள (கண்ணபிரானுடைய) கையிலே, காட்டினாள் - வைத்துக் காண்பித்தாள்; (எ - று.)

அப்பொழுது திரௌபதி கண்ணனை நமஸ்கரித்துக் கண்ணுங்கண்ணீருமாய் வாட்டத்தோடு வந்துநின்று தனது விரிந்துகிடக்கிறகுழலைத் தன்கையாலெடுத்து அப்பெருமான்கையிற்கொடுத்து இதன்நிலைமையைக்காணென்று காட்டினள் என்பதாம். இதுநடந்தது, கண்ணன் சகதேவனுக்கு வரங்கொடுத்தபின்பு இருவரும் ஆயிரக்கால்மண்டபத்தைவிட்டு மீண்டும்சபைக்கு வந்தபின்ன ரென அறிக. இங்ஙனங் காட்டியது, சர்வசக்தியையுடைய நீயே நேரில் தூதுசெல்லுமிடத்து நிறைவேறாத காரியம் எதுவுமில்லை யாதலால், போர்நிகழவொட்டாதபடி துரியோதனாதியரோடு பாண்டவர்க்குச் சமாதானமே கூடிவிடுமாயின் எனது ப்ரதிஜ்ஞை நிறைவேறாமல் எனதுகூந்தல் இப்படியேகிடக்குமே; அது தகுதியோ? என்று குறிப்பித்தபடி.

பங்கயம் - பங்கஜம் என்னும் வடசொல்லின் திரிபு: பங்கம் - சேற்றில், ஜம் - உண்டாவது என்று பொருள். கண்ணனது கண்களுக்கு, தாமரைமலர் உவமை, செம்மை மென்மை அழகுகளுக்கு என்க; இதுபற்றி, 'புண்டரீகாக்ஷன்' என்று திருமாலுக்கு ஒருபெய ரிருத்தல் காண்க. பாஞ்சாலி- வடமொழித்தத்திதாந்தநாமம்; ஈயீறு இகரமாயிற்று. பிறழ்ச்சிபற்றி, கண்ணுக்குக் கயல் உவமை. 'செங்கயற்கண்' என்றது, கண்களில் உத்தமஇலக்கணமாகப் பொருந்தியுள்ள சில சிவந்தரேகைகளைக் கருதி. முத்தம்-உவமவாகுபெயர்; முக்தா என்னும் வடமொழி 'முத்தம்' எனத் திரிந்தது: இதற்கு- (இப்பியினின்று) விடுபட்ட தென்று அவயவப்பொருள். சங்கம், வாஸம்- வடசொற்கள். வளை - வளைவான தென்று காரணப்பெயர். பதின்மூன்றுவருஷகாலமாக மலர்சூடுதலை ஒழிந்துள்ள கூந்தலை 'வாசக்குழல்' என்றது, உத்தமஸ்திரீகளது கூந்தலில் இயற்கைநறுமணமிருத்தலைக் கருதி. கண்ணன் இளமையில் கன்றுகளையும் பசுக்களையும் மேய்க்கும்பொழுது அவற்றை மகிழ்விக்கும்பொருட்டு மிக இனிய வேணுகானத்தை [குழலிசைபாடுதலை] ச் செய்துவந்ததுபற்றி, அவனது கைகள், 'துளைநிரைக்கை' எனப்பட்டன. இனி, 'துளைநிரைக்கை' என்பதை அன்மொழித்தொகையாகக் கொண்டு, துளைகளின்வரிசையிலே பயின்ற திருக்கைகளையுடைய கண்ணனுக்குக் காட்டினாள் என்றும் உரைக்கலாம். காட்டினாள், காண் என்பதன் பிறவினையான காட்டு - பகுதி. (நடச)

135.—[அன்றியும்], (இ - ள்.) வில் - விற்பயிற்சியில் வல்ல, தட - பெரிய, கை - திருக்கையையுடைய, மாலே - திருமாலின் அம்சமானவனே! ஆங்கு - அவ்விடத்துக்கு [அத்தினபுரத்துக்கு], தூதுக்கு - தூதுபேசும்பொருட்டு, எழுந்தருள்வாய் - கருணையோடு செல்பவன், நீயேயோ - (எல்லாம்வல்ல இறைவனான)நீயேதானோ? அவற்கு - அந்தத்துரியோதனனோடு, சந்து ஆய் - சந்தி பேசுபவனாய், நெறி நிற்பாய் - (சமாதான) வழியிலே நிற்பவன், நீயேயோ - நீயேதானோ? முற்றுவிப்பான் - (சந்தியை) நிறைவேற்றுபவன், நீ தானோ - நீயேதானோ? ஆகில் - அங்ஙனம் ஆகுமிடத்து, நஞ்சு இடுவான்

தந்தைதானே - (பெற்றமகவுக்கு) விஷங்கொடுப்பவன் தந்தையேதானே? விளம்பு - சொல்; (எ - று.)

கூடாததையுங் கூட்டுவிக்குந் திறமையை யுடையவனும், உன்னையன்றி வேறுகதியற்றவளான என்னைப் பலவிதத்திலுங் காத்தற்குஉரிமையுடையவனுமாகிய நீயே தூதுசென்று சந்திபேசிச் சாமோபாயத்திலேயே நின்று அச்சமாதானவழியை நிறைவேற்றி அதனால் எனதுசபதத்தை நிறைவேறவொட்டாதபடி செய்திடுவையானால், அது, பெற்ற மகவுக்குத் தந்தை கொல்ல விஷங்கொடுப்பதுபோலாகுமன்றோ என்பதாம். 'விளம்பு' என்றது, இது தகுதியோ? சொல் என்றபடி. போர்செய்தற்கு உதவவேண்டுமென்றாலும் உதவ வல்லமையுடையா யென்பாள்,'வில்தடக்கைமாலே' என விளித்தாள். 'நஞ்சிடுவான் தந்தையோ?' என்பதனால், மகவுக்குத் தந்தையே நஞ்சிடுவானானால் அதனைத் தடுத்துப் பாதுகாக்கவல்லார் பிறர்இல்லாமைபோல,"அத்தனாகி யன்னையாகி யாளும் எம்பிரானுமாய்" உள்ள நீயே உனக்கு அடிமையான என்னைக் கெடுக்கத்தொடங்கிவிட்டால் வேறுகாப்பார் ஆர்? என்றவாறு. முற்றுவிப்பான் நீதானே - நீயோ என் சபதத்தை நிறைவேற்றுவாய் என்றுமாம்.

'முற்றுவிப்பான் நீதானே' என்ற உபமேயவாக்கியத்தையும், 'நஞ்சிடுவான் தந்தைதானே' என்ற உபமானவாக்கியத்தையும், உவமவுருபின்றித் தனித்தனி கூறியுள்ளதனால், **எடுத்துக்காட்டுவமையணி**; வடநூலார் த்ருஷ்டாந்தாலங்கார மென்பர்.

ஏ - உயர்வுசிறப்பு. ஓ- வினா. அவற்கு - உருபுமயக்கம். தட - பெருமையுணர்த்தும் உரிச்சொல். எழுந்தருள்வாய், கிற்பாய் - முன்னிலையொருமை வினையாலணையும்பெயர்கள். முற்றுவிப்பான் நீதானே - முன்னிலையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. (௩௫)

[என்பது: பாஞ்சாலி பேசிய நீதிமார்க்கங்களும்,துரியோதனனிடையிற்பட்ட தீங்குகளினால் வீமன் பட்டுஉலர்கின்றவாறும், தனக்கும் குழல்நெருங்கிய வேணியுங் காட்டி நீலநெடுங்கண் நீரருவிசோர விம்மிவிம்மி வெய்துயிர்த்து நின்றமையும், தன் பிரதிக்கினையும் விண்ணப்பஞ்செய்துநின்றாளைக் கண்டு கைகவித்து யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் திரௌபதிக்கு உறுதிகூறல்.

136.—(இ - ள்.) ஒள் நுதலாய் - பிரகாசமான நெற்றியையுடையவளே! உன் கருத்தே-உனது எண்ணத்தையே, முற்றுவிப்பேன் - (நான்) நிறைவேறச்செய்வேன்; யான்—,சென்று—,ஒள் திறலான்தன் கருத்தை - பிரசித்தமான வலிமையையுடைய துரியோதனனது எண்ணத்தை, சந்தித்தால் - அறிந்துவந்தால், பின் - அதன்பின்பு, சடை ஆம் இ குழலை - சடையாகத்திரித்துவிடப்பட்டுள்ள இந்த (உனது) கூந்தலை, நீ முடிக்க - நீ முடித்துக்கொள்ள, ஆங்கு - அவ்விடத்தில் [அத்தினபுரியில்], ஏந்து எழிலான் தேவிமார் - மிக்க அழகையுடைய அத்துரியோதனனது மனைவியர்,தாம்—,அ குழல்கள் - அந்த [தங்கள்தங்களுடைய] கூந்தல்களை, விரிப்பார்-விரித்திடுவார்; (எ-று.)

நான் உன்விருப்பத்தின்படியேஉன்சபதத்தைநிறைவேற்றுவேன்;அதற்காக நீ கவலைப்படவேண்டுவதில்லை: உலகம் பழியாமைக்காகவே, யான் சந்திபேசத் தூதுசெல்வது; அவனோ அதற்கு இசையான்; ஆகவே, நிகழும் போரிற் பாண்டவர் துரியோதனாதியரைக் கொல்ல நீ குழலை முடிக்கலாம்; முன்பு அவர்கள் உன்குழலை விரிப்பித்ததற்கு ஈடாக,இனி அவர்மனைவிமாரது கூந்தல் விரிக்கப்படும்: அதாவது - அவர்கள், கணவர் இறந்ததற்காகத் தலைவிரிகோலமாய் அழுதிடுவர் என்பதாம்; "தொல்லாண்மைப் பாண்டவர்க்குத்

தூதுபோய் மீண்டதற்பின், நல்லாயுன்பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன், எல்லாருங் காண இனிவிரிப்பது எண்ணரிய, புல்லார்தம் அந்தட்புரமாதர் பூங்குழலே" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம்.

கருத்தே, ஏ - பிரிநிலையோடு, தேற்றம். நுதலாய் -நுதலாள் என்பதன் விளி. ஒண்டிறல் - விளக்கமான வலிமை. 'அடைதலென்னும் பொருளுணர்த்தும் வினைகள், அறிதலென்னும்பொருளையும்உணர்த்தும்'என்ற வடமொழி நியாயத்தால், சேர்ந்தால் என்கிற பொருளைத் தருகிற 'சந்தித்தால்' என்பதற்கு - அறிந்தாலென்று பொருள்கொள்ளப்பட்டது. சடை - ஜடா என்னும் வடமொழித் திரிபு. தேவீ என்னும் வடமொழி, ஈறுகுறுகிற்று. தேவிமார் - பாநுமதி, இலக்கணை முதலியோர். ஒருகூந்தலுக்கு நூறுகூந்தல் விரிபடுமென்பது, பின்னிரண்டடிகளாற் போதரும். 'ஏந்தெழிலாள்' என்ற பெயர், சுட்டுமாத்திரமாய் நிற்கும். (நகூ)

[என்பது: துரியோதனாதிகளைச் சென்று கண்டு அவன்மனக்கருத்து அறிந்து உன்குழல்முடிப்பித்து மற்று அந்தப்பார்வேந்தர்மகிழ்ந்த மதர்விழியார் கூந்தல்விரிப்பார் என்றும், உன்கருமமன்றோ முற்றுவிப்பேன் என்றும் இவ்வகை அருளிச்செய்துநின்றவிடத்து, ஸ்ரீவாசுதேவனை நோக்கி யாதுவிண்ணப்பஞ்செய்தான் தருமபுத்திரன்:]

தருமன் கண்ணனைத் தூதுசெல்லுமாறு மீண்டுந் தூண்டுதல்.

137.—(இ - ள்.) அண்டர் - தேவர்கள், தொழ - வணங்க, நின்று - (அவர்களுக்குத்தலைவனாக) நின்று, அருளும் - கருணைசெய்கிற, அச்சுதனே - அச்சுதனென்னுந் திருநாமமுடையவனே! பெண்டுகளும் - மகளிரும், பிள்ளைகளும் - சிறுவர்களும், பித்தர்களும் - பைத்தியக்காரர்களும், என் அறிவார் -(இராசாங்ககாரியம்) யாது அறிவார்கள்?[ஒன்றும்அறியார்கள் என்றபடி]; (நீ), மண்ட எழுந்த - உக்கிரமாகச் சீறியெழுகிற, இள நாகம் - இளமையான பாம்பின்வடிவத்தை யெழுதிய, கொடியோன்பால் - துவசத்தையுடைய துரியோதனனிடம், ஈண்ட - சேரும்பொருட்டு, எழுந்தருளாய் - சென்றருளுவாய், என்றான் எடுத்து - என்று எடுத்துச்சொன்னான்; (எ - று.)

வீமன்முதலிய தம்பியர் கருத்தையும் திரௌபதிகருத்தையுந் தழுவிக் கண்ணன் சந்திபேசுதற்காகத் தூதுசெல்லா தொழிவனோ வென்று எண்ணித் தருமன் இங்ஙனங் கூறினான். மகளிரும் இளையோரும் பித்தர்போலச் செய்வது தவிர்வது அறியர்தவ ராதலால், அவர்கள்பேச்சைக் கேட்க வேண்டா; இப்பொழுதே தூதுசென்றருள்க என வேண்டினான்.

இப்பாட்டின் முதலடி - **தீபகாலங்காரம்**; தமிழர் '**விளக்கணி**' என்பர். பெண்டுகள் பிள்ளைகள் என்ற உபமேயத்தையும், பித்தர் என்ற உபமானத்தையுங் கலந்து 'என்அறிவார்' என்ற ஒருவினையில் முடித்ததனால், இது ஒப்புமைக்கூட்டவணியாகாது. வர்ணியங்களையேனும் அவர்ணியங்களையேனும் தனியே ஒருதன்மையில்முடித்தல் - ஒப்புமைக்கூட்டமும், உபமானஉபமேயங்களை ஒருதன்மையில்முடித்தல் - தீபகமு மா மென நுண்ணிதாக வேறுபாடு அறிக.

பிள்ளை - இளமைப்பெயர். அச்யுதன் என்ற வடமொழித் திருநாமத்துக்கு - (தன்னைச்சரணமடைந்தவர்களை) நழுவவிடாதவ னென்றும், அழிவில்லாதவ னென்றும் காரணப்பொருள். நாகம் - வடசொல்; நகத்தில் வாழ்வ தென்று பொருள்படும்: நகம் [நடவாதது] - மலையும், மரமும். இதற்கு - (கால்களால்) நடவாத தென்று காரணப்பொருளுரைத்தலும் உண்டு. 'நாகக் கொடியோன்' என்ற தொடர், பாம்புபோலக் கொடுமையுடையவனென்ற பொருளையுந் தரும். '**ஈண்டன்**' என்ற பாடத்துக்கு- இப்பொழுதே

யென்று பொருள்; ஈண்டன் என்பது - இண்டன் என்ற சுட்டிடைச்சொல்லின் நீட்டல்: ஈது, ஈங்கு என்பனபோல: ஈண்டன், இண்டன் என்ற இரண்டும், இந்நூலிற் பலவிடத்தும் பயிலும். (௩௭)

[என்பது: தருமபுத்திரன் ஸ்ரீவாசுதேவனைக் கண்டு ஈண்டன் எழுந்தருளி மற்று அவன்கருத்து அறிந்து வருவாயாக என, கேட்டு அஸ்திநபுரம் நோக்கிப் போகின்ற ஸ்ரீவாசுதேவனை நோக்கிப் பின்னும்யாதுவிண்ணப்பஞ் செய்தாள் திரௌபதி:]

திரௌபதி கண்ணனுக்குத் தன்கூந்தலை மீண்டும் ஞாபித்தல்.

138.— (இ - ள்.) வெற்றி - சயத்தையும், புகழ் - கீர்த்தியையும் உடைய, தருமன் - யுதிஷ்டிரனும், வீமன் - வீமசேனனும், அருச்சுனற்கு ஆய் - அருச்சுனனும் என்னும் இவர்களுக்காக, அத்திப்பதிக்கே - அஸ்திநாபுரிக்கே, அருள் செய்வோய் - தூதஎழுந்தருளுபவனே! நீ—,(அங்கு), மெத்த அழல் புனையும் வாய்மை அரசனை - மிகவும் நெருப்பை யொத்த வாய்மொழியையுடைய துரியோதனராசனை, கண்டால் - பார்த்துப்பேசினால் [பேசும் பொழுது], குழல் - (எனது) கூந்தலின்நிலைமையை, நினைவாய் - நினைத்தருள்வாய், என்றாள் குறித்து - என்று குறிப்பிட்டுக்கூறினாள்; (எ - று.)

திரௌபதி, தான் கண்ணனை முதலில்வேண்டினபின்பு தருமன் "பெண்டுகளும் பிள்ளைகளும் பித்தர்களு மென்னறிவார்" என்று அதனைமறுத்துப் பேசிவிட்டதனால், கண்ணன் தனதுநிலைமையைக் கருதாமல் சந்திமுடித்து விடுவனோ வென்று கவலைப்பட்டு மீண்டும் இவ்வாறு வேண்டினாள். பஞ்சபாண்டவருள் நகுலசகதேவரினும் தருமன்முதலிய மூவரே சிறப்புப்பெற்றவ ராதலாலும், மாத்திரிமக்களான அவ்விருவரினும் குந்திகுமாரரான இம்மூவருமே கண்ணனுக்கு அத்தைபுத்திரராய் அந்த நெருங்கிய உறவுமுறைமையால் தவறாமல் அன்புவைத்தற்கு இடமாகின்றவ ராதலாலும், அம்மூவரையே எடுத்துக்கூறினது. அழல்மெத்தப் புனையும் வாய்மை - நெருப்பைப்போல மிகவருத்துங் கடுஞ்சொல். 'குழல் நினைவாய்' என்றது, சந்திமுடிக்காமல் போர்முடிப்பா யென்றபடி.

தருமத்தினின்றுந் தவறினவர்களுக்குத் தக்க தண்டனை செய்து தருமத்தைக்காத்தலால், தருமனென்று யமனுக்குப் பெயர்; 'தந்தையே மைந்தனாகிறான்' என்னும் நூல்வழக்குப்பற்றி, தருமபுத்திரனை 'தருமன்' என்றது. அருச்சுன னென்ற பெயர்க் காரணம்—அர்ஜுநன் - வடசொல்; இதற்கு-வெண்ணிறமுடையவ னென்று பொருள்: இது, முதலில்வெண்ணிறமுடைய கார்த்தவீரியமகாராசனுக்குப் பெயராயிருந்து பின்பு, அவனைப்போன்ற சௌரிய தைரியங்களையுடைய இப் பார்த்தனுக்கு இட்டுவழங்கப்பட்டது; இது, உவமவாகுபெயரின்பாற்படும். பார்த்தன் கருநிறமுடையவனாதலால், அவனுக்கு அருச்சுனனென்பது - நிறம்பற்றிவந்த பெயரன்றல், பொருந்தாது. இனி, அருச்சுநன் என்பதற்கு- பசுமைநிறமுடையவனென்று பொருள்கொள்ளுதலும் ஒன்று. அன்றியும், அருச்சுனன் முதலிற்பிறந்தபொழுது வெண்ணிறமுடையனாயிருந்து பின்பு கருநிறமடைந்தா னென்றுங் கூறுவர். சந்திரகுலத்தில் ஹஸ்தி என்று ஓரரசன்; அவனால் சீர்திருத்தப்பட்டது பற்றியும், யானைகளை மிகுதியாக வுடைமைபற்றியும், ஹஸ்திநாபுரியென்று பெய ராதலால், அவ்விருபொருளும் 'அத்திப்பதி' என்றதற்கும் பொருந்தும். அத்தி - வடசொல் திரிபு. ஹஸ்தம்- கை: இங்கே, துதிக்கை; அதனையுடையது ஹஸ்தீ என யானைக்குக் காரணக்குறியாம்.

'தருமன் வீமன் அருச்சுனற்கு' என்பது - 'சேரசோழபாண்டியர்க்கு' என்றதுபோல ஈறுகெட்டு ஒருதொடர்மொழியாகாது விட்டிசைத்

தலால், "உயர்திணையும்மைத்தொகை பலரீறே" என்றவிதிப்படி உயர்திணை யும்மைத்தொகைக்கு உரிய பலர்பாலீறு பெறவில்லை. 'அருச்சுனற்கு' என்பதிலுள்ள நான்காம்வேற்றுமையுருபை மற்றைப்பெயர்களுக்குங் கூட்டி, 'தருமற்கு வீமற்கு அருச்சுனற்கு' என்று பெயர்ச்செவ்வெண்ணாக்கி உம்மை விரித்துக்கொள்க. மெத்த - மெத்து என்னும் வினைப்பகுதியின் செயவென்னெச்சம். அழல்புனையும்-இத்தொடரில்வேற்றுமைத்தொகையில்வலி வரலகரம்இயல்பானது, இரண்டாம்வேற்றுமைச் சிறப்புவிதியால்; "லகார த்து இயல்பு": [நன் - உருபு - கஅ.]

புனையும் - உவமவுருபு. வாய்மைஎன்பதில், வாய் என்பது - வாயிலிருந்து வருஞ் சொல்லுக்கு, கருவியாகுபெயர். மை - வேறுபொருளுணர்த்தாமையால், பகுதிப்பொருள்விகுதி: தன்மைப்பொருளுணர்த்தும் விகுதியாயின், நெருப்பையொத்த வாய்ச்சொல்லின் தன்மையையுடைய என்று பொருள்கொள்ளவேண்டும். 'மெத்த அழல்புனையும்' என்பதற்கு - மிகவும் அனலின்தன்மையைக் கொண்ட என்றும் உரைக்கலாம். (நஅ)

[என்று இவ்வகை திரௌபதி விண்ணப்பஞ்செய்ய, கேட்டு மற்று அதுவே திருவுளத்திற்கொண்டு ஆங்கு அவர்களுக்கு விடைகொடுத்துப் பின்னை யாதுசெய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் அத்தினபுரிக்குச் செல்லுதல்.

139.—(இ - ள்.) கோன் - இராசகுலத்தில் அவதரித்தவனும், நாக அணை கிடந்த கோ - ஆதிசேஷசயநத்திற் பள்ளிகொண்டருளுந் தலைவனுமான கண்ணபிரான், தூதுக்கு உடன்பட்டு - தூதுசெல்லுதற்கு இசைந்து, சுற்றம் குழாத்தோடும் - சூழ்ந்துநின்ற பந்துவர்க்கத்துடனே, ஏதுக்கள் பேசி - (தான் தூதுசெல்லுதற்கு உரிய) காரணங்களை எடுத்துச்சொல்லி, ஏகினான் - சென்று [புறப்பட்டு], சேதித்து மால் நாகம் ஏந்தினான் மா நகர்க்கு வந்தான் - (பகைவர்களைத்) துணித்து (அவ்வெற்றிக்கு அறிகுறியாகப்) பெரிய பாம்புக்கொடியை உயரஎடுத்த துரியோதனனது பெரிய அத்தினபுரிக்கு வந்தான்; (எ - று.)—ஏ - ஈற்றசை; செய்யுளினிறுதியில் வருவதுமாத்திரமே யன்றி, செய்யுளடியின் இறுதியில் வருவதும், வாக்கியத்தினிறுதியில் வருவது மான இடைச்சொல்லும் பொருள்தாராதாயின் ஈற்றசையேயாம்.

'சுற்றக்குழாம்' என்றது, பாண்டவரைமாத்திரமே யன்றி, பாஞ்சாலன் விராடன் முதலியோரையும். சுற்றம் - (உரியகாலங்களில் வந்து) சுற்றிநிற்ப தென்று உறவினத்துக்குக் காரணப்பெயர்; அம் - கருத்தாப் பொருள்விகுதி. குழாம், ஏது, நகர் - குலம், ஹேது, நகரம் அல்லது நகரீ என்னும் வடசொற்களின் விகாரங்கள். குழாத்தோடும், உம் - அசை. சேதித்து - வடசொல்லினடியாகப்பிறந்த வினையெச்சம். சேதித்து ஏந்தினான் என இயையும். மால் நாகம் - விஷவேகத்தால் மயக்கந்தரும் பாம்புமாம். 'கோன்' என்றது, க்ஷத்திரியசாதியிற்பிறந்து சாமதானபேததண்டங்களாகிய க்ஷத்திரியதருமங்களின் முறைமையை அறிந்தவ னென்றபடி. கோல் எனப் பிரித்து, செங்கோலையுடைய என்றும் பொருள்கொள்ளலாம்; கோல்-கோணுதலில்லாத நீதிக்கு உவமையாகுபெயர்: வடநூலாரும் 'தண்டம்' என்றார். கோன் நாகம் என எடுத்து, கோன் என்பதை நாகத்துக்கே அடைமொழியாக்கின், (பாம்புகளுக்கு) அரசனான ஆதிசேஷ னென்க. நாகணை-நாகவணை யென்பதன் தொகுத்தல். சேதித்து என்பதற்கு-(சுற்றக் குழாத்தைவிடைகொடுத்துப்) பிரித்துவிட்டு என்றுஉரைத்தலும் பொருந்தும்.

இதுவும் அது.

140.—[அன்றியும்], (இ - ள்.) மண் முழுதும் உண்ட பிரான் - உலக முழுவதையும் (பிரளயகாலத்தில்) அமுதுசெய்தருளும் பிரபுவான கண்ணன்,—முரசு ஒலியும் - பேரிகைவாத்தியங்களின் ஓசையும், சங்கு ஒலியும் - சங்கவாத்தியத்தின் ஓசையும், (என்னும் இவற்றோடு), மூரி தேர் தானை - வலிமையையுடைய தேர்முதலிய சேனை, திரை செய் கருங் கடல் போல் - அலைகளை வீசுகிற கரிய சமுத்திரம் போல, செல்ல - உடன்வர,—மண் வேண்டி - (பாண்டவர்களுக்கு) இராச்சியம்வேண்டுதலைக் குறித்து,—புவிமேல் புரிந்து - பூமிதேவியின்மேல் அன்புகொண்டு,—வாடாமல் - வாட்டமில்லாமல்,—உரையோடும் - புகழுடனே,—போனான் - சென்றான்; (எ - று.)— 'புவிமேற்புரிந்து' என்றது, அவதாரத்தின்பயனாகக் கொடியோரைக்கொன்று ஒழித்துப் பூமிபாரத்தை நீக்கக் கருதி என்றபடி.

பிரான், செல்ல, வேண்டி, புரிந்து, வாடாமல், உரையோடும், போனான். கண்ணன் இங்கிருந்து அங்குத் தூதுசென்ற கருத்தையே கவி கீழ்ப் பாட்டுமுதல்ஐந்துபாடல்களால் வெவ்வேறுவகையாக விவரித்துக்கூறுகிறார்.

தேர் - மற்றை யானை குதிரை காலாள்களுக்கும் உபலக்ஷணம்; எனவே, சதுரங்கசேனையுஞ் சென்ற தென்க. சேனைக்குக் கடல் உவமை - அளவிறந்த பரப்புக்கும், ஆரவாரத்துக்கும், அணியணியாக வருதற்கும், அசைந்தருதற்கும் என்க. கருங் கடல் - பெரிய கடலுமாம். உண்ட - உட்கொண்ட. பிரான் - ப்ரபு என்னும் வடமொழியின் சிதைவு என்பர்;இதன் பெண்பால் - பிராட்டி.

மண்முழுதும் உண்ட கதை - பிரமன் முதலான சகலதேவர்களும் உட்பட யாவும் அழிந்துபோகின்ற யுகாந்தகாலத்தில் மகாப்பிரளயசமுத்திரத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன்வயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறுகுழந்தைவடிவமாய் ஆதிசேஷாம்சமானதோர் ஆலிலையின் மீது பள்ளிகொண்டருள்கின்றனன் என்பதாம்.

'உரையோடும் போனான்'என்றது,புகழ்பெறுபவனாய்ச் சென்றான் என்றவாறு. இங்கே, உரை - செல்லுங்காரியத்தின் சித்தியால் வரும் புகழும், தேவாதிதேவனானவன் அந்தத் தனதுமகிமையை மறந்து அடியவர்க்குஎளியனாய் இங்ஙனம்தூதுசென்றானென்று வருகிறசௌலப்யத்தாலாகிய கீர்த்தியும். 'வாடாமல்' என்றது, தூதனுக்குஉரிய ஊக்கமுடைமையை உணர்த்திற்று. புவிமேற் போனான் என்றுஇயைத்துப் பொருள்கொள்ளுதல் சிறப்பன்று. (சO)

இதுவும் அது.

141.—[அன்றியும்], (இ - ள்.) ஆங்கே - அப்பொழுதே [கண்ணன் தூதுசெல்லுமளவிலே],—இறை பொழுதும் தாழாது - சிறிதுபொழுதும் காலதாமதஞ்செய்யாமல் [உடனே என்றபடி],—வானம் - தேவலோகத்தார், மலர் பொழிய - (கற்பகவிருட்சத்தின்) பூக்களைச் சொரிய,—மன்னோர் - நிலவுலகத்தார், தொழுது ஏத்த - வணங்கித் துதிக்க,—ஏனை - மற்றும், ஞானம் முனிவர் எல்லாம் - தத்துவஞானமுடைய முனிவர்களெல்லோரும், நால் திசையும் - நான்கு பக்கங்களிலும், (வந்துசூழ்ந்துநின்று), நா ஆர - நாக்குநிரம்ப, மறை பொருளால் - வேதங்களின்பொருளைக்கொண்டு, எடுத்து வாழ்த்தினார் - எடுத்துச்சொல்லித் துதித்தார்கள்; (எ - று.)

இப்பாட்டு, கண்ணன் தூதுசெல்லுகையில் அதனையறிந்த தேவர்முதலியோர் வந்து தத்தமக்கு ஏற்றபடி கொண்டாடுதலைக் கூறியது. வானோர் மலர் பொழிதல் - தாம் முன்புவேண்டியபடி கண்ணன் இப்பொழுது பூமி

பாரநிவிருத்தி செய்ய முயன்றுவிட்டதைக் கருதியும், மன்னோர் தொழு தேத்துதல் - நிலவுலகத்தில் உத்தமகுணமுடையரான பாண்டவர்க்கு மிக வும்உபகரிக்கத்தொடங்கியதுபற்றியும், முனிவர் வாழ்த்துதல் - பக்தவற்சல னை எம்பெருமானது அடியவர்க்கெளிமையாகிய திருக்கலியாணகுணம் வெ ளியானதுபற்றியும் என்க.

வானம், அம் - சாரியை; இது - வானுலகத்திலுள்ள தேவர்க்கு இட வாகுபெயர். அலர் என்றும் பிரிக்கலாம். அலர்பொழிதல் - மழைபொழி தல்போல மலர்களை இடைவிடாமல் மேற்சொரிதல். பொழிய, ஏத்த என்ற வற்றில் எண்ணும்மை தொக்கது; வினைச்செவ்வெண். முன்னே 'வானம்' என் றும் 'மன்னோர்' என்றும் வந்ததனால், பின்னே 'முனிவர்' என்றது - மனித விருடிகள் தேவவிருடிகள் என்ற இருதிறத்தாரையும் சிறப்புப்பற்றித் தனி யே எடுத்துக்கூறியதென்க. ஞானம், முனிவர் - ஜ்ஞாநம், முநி என்னும் வடசொற்களின் திரிபுகள். தத்துவஞானமாவது - முத்தி கடவுள் சீவன் பிறப்பு கருமம் முதலியவற்றை உள்ளபடியறிதல். முநி என்னும் வடசொல் லுக்கு - (கடவுளை எப்பொழுதும்) தியானஞ்செய்பவன், அல்லது திரிகால ஞானமுடையவன் என்று பொருள்; இனி, (எல்லாப்பற்றுக்களையும்) முனிந்த வன் [வெறுத்துவிட்டவன்] ஆதலால் முனி என்று தமிழ்வகையாற் காரணப் பொருள் கூறலாகாது; வடசொல்லாதலின். நா ஆர - நாக்குத் திருப்திப்பட, நாக்குப்படைத்த பயன் பெற என்றபடி. பாண்டவதூதனைத் துதித்தலே நாப்படைத்தபயனாதலை "மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங், கடந் தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத், தொடர்ந் தாரண முழங் கப் பஞ்சவர்க்குத் தூது, நடந்தானை யேத்தாத நா வென்ன நாவே நாரா யணா வென்னா நா வென்ன நாவே" என்ற சிலப்பதிகாரத்தாலும் அறிக.

ஏனை யென்பதை அசையாகக்கொள்ளுதலு மாம். சிலசாதியார்க்கும் பெண்களுக்கும் மறுக்கப்படுதலாலும், மறைந்தபொருளை யுடைமையாலும், மறை யென்று வேதத்துக்குப் பெயர்; முந்தினபொருளில், மறு - பகுதி, ஐ - செயப்படுபொருள் விகுதி: பிந்தினபொருளில், மறை - பகுதி, செயப் படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டது. மறைப்பொருளால் வாழ்த்துதல் - வேதங்களிற் கூறியுள்ளவாறு துதித்தல். உம்மை இரண்டனுள், முந்தினது - முற்று; பிந்தினது - இழிவுசிறப்பு. தாழாது என்ற எதிர்மறைவினையெச்சத் தில், த் - எழுத்துப்பேறு, உ - விகுதி; து - விகுதி யென்றலும் ஒன்று. கட வுளை வாழ்த்துவது அடியார்க்கும், பெரியாரை வாழ்த்துவது சிறியார்க்கும் ஒரோவிடத்து இயல் பாதலால், முனிவர் கண்ணனை வாழ்த்தினர் என்க. வரையறைகடந்த கடவுளது பெருங்கருணைக்குக் கண்ணெச்சில்பட்டு ஏதே னுந் தீங்குவிளையுமோ வென்று தம்மனத்தில் திடுக்கென்று உண்டாகிற சங் கையால் அந்தத் திருஷ்டிதோஷம் உண்டாகாமலிருக்கவேண்டு மென்று கருதி வாழ்த்துதல், பொங்கும்பரிவையுடைய பெரிய பக்தர்களது மரபு. அதிக விருப்பத்தால் அவசியமில்லாதவிடத்திலும் பயசங்கையுண்டாதல், இதற்குக் காரணம். (சு௧)

இதுவும் அது.

142.—[அன்றியும்], (இ - ள்.) (கண்ணபிரான்),—மன்னர் - அரசர்கள், கழல் தொழுது - (தனது) திருவடிகளை வணங்கி, மீள - விடைகொண்டு திரும்ப,—தன் - தனது, மா பூண்ட மின்னும் மணி நெடு தேர் - குதிரைகள் பூட்டிய விளங்குகிற அழகிய பெரிய தேரின்மீது, மேற்கொண்டான் - ஏறி னான்; (அப்பொழுது), முன் நின்று - முன்பக்கத்திற் பொருந்தி, மா முரசம் - பெரிய பேரிகைகள், எழுந்தன - ஒலித்தன; சங்கம் - சங்கவாத்தியங்கள்,

ஆர்த்தன - ஆரவாரித்தன; பூ மாரி - புஷ்பவருஷங்கள், பொழிந்தன - (பலராலும்) சொரியப்பட்டன; (எ - று.)

மன்னர் என்றது, பாண்டவர் முதலியோரை; இவர்கள் சிறிதுதூரம் தொடர்ந்து வழிவிட்டுப் பின்பு வணங்கி மீண்டனரென்க. கண்ணனது தேர்க்குதிரைகள் - சைனியம், சுக்கிரீவம், மேகபுஷ்பம், வலாஹகம் எனப் பெயர்பெறுமென அறிக. மணித்தேர் - அடிக்கும்மணிகள் கட்டிய தேரும், இரத்தினம் பதித்த தேருமாம். அணி யென்றும் பதம்பிரிக்கலாம். முன் - இடமுன். எழுதல் - ஒலியெழுதல். ஏ, தான் - ஈற்றசைகள். (சஉ)

இதுவும் அது.

143. —[அன்றியும்], (இ - ள்.) வெண்ணெய் எலாம் - வெண்ணெய் முழுவதையும், உறி தேடி காணாமல் - (வைத்துப்போன இடைப்பெண்கள் தாம்வைத்த) உறியிலே தேடிக்காணவொண்ணாதபடி, உண்டு - அமுதுசெய்து, உமிழ்ந்து - (அருகிலுள்ள இளைய இடைப்பிள்ளைகளின்மேல்) உமிழ்ந்திட்டு, போதும் - செல்லுகிற, மற்றை மாணாத மா மலர்தாள் - (தனக்குத்தானேயன்றி) வேறு ஒப்புப்பெறாத சிறந்ததாமரைமலர்போன்ற திருவடிகளையுடைய, மால் - கண்ணபிரான்,—(இடைவழியிலுள்ள), காடும் - காடுகளையும், மலையும் - மலைகளையும், திசையும் - திக்குக்களையும், கடல் உடுத்த நாடும் - கடல்போன்ற நீர்வளத்தாற் சூழப்பட்ட நாடுகளையும், கடந்து போய் - தாண்டிச்சென்று, நண்ணினான் - அடைந்தான்; (எ - று.)

கண்ணன் இளம்பிராயத்தில் ஆய்ச்சியர் சிரமப்பட்டுக்கடைந்து உறியில் வைத்துப்போன வெண்ணெய் முழுவதையும் இருந்தஇடந் தெரியாதபடி அமுதுசெய்தலே யன்றி, அப்பொழுது அருகில் அவ்வீட்டுப்பிள்ளைகள் யாரேனும் வந்தால் அவர்கள்மேல் (ஆய்ச்சியர் இவர்தாம் வெண்ணெயுண்டவரென்று பழிசுமத்தும்படி) வெண்ணெயை உமிழ்ந்து செல்லுதலு மாகிய விளையாட்டுடையவ னென்று பிரசித்தம். 'எல்லாம்' என்றதனால், நெய்பால்தயிர்களுங் கொள்ளலாம். 'உறிதேடிக் காணாமல் வெண்ணெயெல்லாம் உண்டு' என்பதற்கு - வெண்ணெய்ப்பாத்திரங்கள் வைத்துள்ள உறியைத் தாம் தேடிச்சென்று பிறர்காணாதபடி வெண்ணெயையெல்லாம் உண்டு என்றும் உரைக்கலாம்.

காணாமல் - எதிர்மறைவினையெச்சம். மற்றை மாணாத - மற்றையவை மாட்சிமைப்படாத: என்றது - இத்திருவடிகளுக்கு ஒப்பாகமாட்டாத என்றபடி. மாணாத - மாண்பு என்னும் பண்பினடியாப் பிறந்த எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சம். எல்லாமலர்களுள்ளும் தாமரை சிறத்தல்பற்றி, 'மாமலர்' எனப்பட்டது. கடல் - உவமையாகுபெயர்; 'கடல்' என்றது, ஆற்றுவெள்ளம் முதலியவற்றா லாகும் நீர்மிகுதியை. மேல் - கசசு - ஆம்பாட்டில் "காடும் மலையுங் கடும்புனல்சே ராறுகளும், நாடும் பல்பொழிலு நண்ணிப் போய்" என வருதலுங் காண்க. இனி, 'கடலுடுத்த நாடு' என்பதற்கு - சமுத்திரஞ்சூழ்ந்த நாடு என்று உரைத்தல் பொருந்தாது; அவ்வழியிடையிலே கடலையடுத்த நாடு இல்லை யாதலால். காடு - முல்லை நிலம், மலை - குறிஞ்சிநிலம், நாடு - மருதநிலம், திசை - இவற்றில் வழிதிரும்புந் திக்கு. போதும் தாள், மாணாத தாள், மலர்த்தாள் என இயையும். 'காணாமல் வெண்ணெயுண்ணுதல்' என்பதற்கு - ஞானசாரமான அன்பை உடையவர்க்குந் தெரியாமல் திருவுளம்பற்றுத லென்பது உட்கருத்தென்று பெரியோர் கூறுவர். (சங)

[என்பது: தனது திவ்விய மணிநெடுந்தேர்மீது ஏறிச் சர்வாபரணபூஷிதனாய்த் தன் சுற்றக்குழாத்தோடும் சர்வஞானிகள் புடைசூழ உற்றவார்த்தையுரைத்துச் சர்வசிதங்கள் ஆர்ப்பெடுப்பச் சத்தசாகரமெனச் சங்கு பேரிகை

3724

முதலான இசைக்கலன்கள் பஞ்ச மகாசத்தம் முழங்க, கருடத்துவசம் விசும்பணுவ, சத்திரசாமரம் புடைதயங்க, எழில்மணிக்கவரி அருகு இரட்ட, தவளசத்திரம் மேல் நிழற்ற, ஆகாசத்திடையே அஷ்டவசுக்களும் அருகுஅணைந்துவர, வானோர்சேனையும் ஏகாந்தமாக வீரஸ்ரீபொலிந்து சேவைபண்ணிப் புஷ்பவர்ஷம் பொழிய, இனிது உடன்எழுந்தருளிப் பாண்டவர்க்குத் தூதாகிப் பார்வேண்டிப் பார்மிசைத் தூண்டு பரித்தேர் தாண்டத் துரியோதனன்பாற் போயினான் ஸ்ரீவாசுதேவனாகைக் கருதுவது; அப்பொழுது மற்று அவன் வரவு கேட்டு, யாதுசெய்தான் துரியோதனன்:]

கண்ணன்வரவுகேட்டுத் துரியோதனன் நகரத்தை அலங்கரிப்பித்தலும், கண்ணனுக்குத் தங்குமிடம் அமைத்தலும்.

144.—(இ-ள்.) பார் ஆளும் மன்னன் - பூமியை அரசாளுகிற துரியோதனராசன்,—(கண்ணனது வருகையை ஒற்றர்சொல்லக் கேட்டறிந்து), பரிந்து - (அப்பெருமான்பக்கல்) அன்புகொண்டு,—தன் நகரி கோடித்து - தனது (அஸ்தின)புரியை அலங்கரிப்பித்து,—தண்டலைகள் - சோலைகள், எண் திசையும் - எட்டுத்திக்குக்களிலும், பொலிந்து இலங்க - மிக்கு விளங்க, (அவற்றின்மத்தியில்), கொல் நவிலும் கூர் ஆழி வேந்தனுக்கு - (பகைவரைக்)கொல்லுதலைப்பயின்ற கூர்மையான சக்கராயுதத்தையுடைய தலைவனான கண்ணனுக்கு, பொன் நகரி போல கோயில் இடம் குறித்தான் - பொன்மயமான அமராவதிநகரம்போலச் சிறந்ததொரு தங்குமிடத்தையும் அமைப்பித்தான்; (எ - று.)

கண்ணன் பாண்டவபக்ஷபாதமுடையவனாயினும் அதனை இதுவரை நன்குவெளிக்காட்டாமையாலும், துரியோதனனும் அருச்சுனனும் ஒருங்கே வந்து படைத்துணையழைத்தபொழுது கண்ணன் அருச்சுனனுக்குத் தேர் செலுத்த உடன்பட்டுத் துரியோதனனுக்கு அவன்வேண்டினபடி ஆயுதமெடேனென்று வரங்கொடுத்ததோடு பெருஞ்சேனையைத் துணைசெலுத்தியதனாலும், துரியோதனன் கண்ணனைப் பொதுமனிதனாகவே பாவித்து இராசமரியாதைப்படி உபசரிக்கத்தொடங்கினன் என்க. இக்கருத்துத் துஷ்டசகவாசத்தால் உடனே மாறிவிடுதல், அடுத்த பாட்டால் விளங்கும்.

நகரீ என்னும் வடசொல், குறுகிற்று. கோடித்து=கோடிப்பித்து; இதற்குத் துரியோதனன் ஏவுதற்கருத்தாவும், நகரத்துச்சனங்கள் இயற்றுதற்கருத்தாவு மென்க. தண்டலை—தண் தலை எனப்பிரிந்து, குளிர்ந்த இடத்தையுடைய தென்று காரணப்பொருள்படும்; பண்புத்தொகையன்மொழி. எண்திசை - கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பன. பொன்னகரிபோலத் தன்னகரிகோடித்து என்று இயைத்தும் உரைக்கலாம். கொல் - முதனிலைத்தொழிற்பெயர். ஆழி - வட்டம்; அவ்வடிவமைந்த சக்கரத்துக்குப் பண்பாகுபெயர்; இனி, அழிப்பது ஆழி யென்றுங் காரணப்பொருளுரைக்கலாம். கோயில் என்பது - கோ இல் எனப் பிரிந்து, சிறந்த வீடென்றும், இராசகிருக மென்றும், தேவாலய மென்றும் பொருள்படும்; கோவில் எனப் பொதுவிதியால் வகரவுடம்படுமெய் பெற்று வரத்தக்கது கோயில் என யகரம்பெற்றுவழங்குவது, இலக்கணப்போலியால். (௪௪)

[என்பது: ஸ்ரீவாசுதேவன்எழுந்தருள்வதுகேட்டு மகாப்பிரியஸ்தனாய் வீடுகள்தோறும் பூவும் நீரும் பொழிந்து மாடமண்டபந்தோறும் வண்ணத்துகிலும் மணிமாலையும் அணிந்து கொண்டல்பொருந்தண்டலைகள் எண்டிசையும் நிறைத்துத் தீபதூபங்களால் அலங்கரித்து இரவிகிரணங்களை மறைத்த ஆடரங்கும் மாடவீதியும் பட்டுத்துகில்பொலிந்து ஆடலொலி

பரப்பிச் செப்பங்கூர்ந்த மண்டபத்தே தேவராசன் ஸ்ரீவாசுதேவனுக்கு ஆன கோயிலிடம் பண்ணி அஞ்சனத்தால் அழகுசெய்து பஞ்சணையும் மஞ்சனமும் பாரித்து மற்றும்வேண்டினவெல்லாம் விளைப்பித்துத் தானும் சர்வாபரணபூஷிதனாய்ப் பரராஷ்டிரத்துச் சர்வக்ஷத்திரியரும் புடைசூழ, ஆனை தேர் குதிரை கருவி காலாள்களோடு எம்மருங்கும் புடைசூழ எழில் மணிக்கவரிஅருகிரட்ட, தவளசத்திரம் மேல்கிழற்ற, தனிவெண்கவரி புடை தயங்க, நாகக்கொடி விசும்பணுவ, சர்வசாகரமெனச் சங்கு பேரிகை முதலாயுள்ள இசைக்கலன்கள் பஞ்ச மகாசத்தம்முழங்க, வீஷ்மர் துரோணர் விதுரர் கிருபர் கன்னன் அசுவத்தாமா உள்ளிட்ட குருகுலவேந்தர்கூட்டமுடன் போந்து தேவதேவன் ஸ்ரீவாசுதேவனை எதிர்கொண்டுவரப் போகாநின்ற இராசராசன் துரியோதனனைத் தகைந்து யாதுசொன்னான் சகுனி:]

கண்ணனை எதிர்கொண்டு உபசரிக்கத்தொடங்கிய துரியோதனனைச் சகுனி மறுத்தல்.

145.—(இ - ள்.) கோவே - அரசனே! நீ—, ஆயனை - இடையனான கண்ணனை, அறியார்போல் - தெரியாதவர்கள் (நம்புவது) போல, மால் என்று - திருமாலின்அம்சமென்று நம்பி,—தூய தருமன்தன் தூதுவன் ஆய்-சுத்தகுணமுடைய தருமபுத்திரனது தூதனாய், தாயம் கொடுப்பிக்க - இராச்சியபாகத்தை (உன்னைக்கொண்டு அவனுக்கு) க் கொடுப்பிக்கும்பொருட்டு, ஆங்கு - அவ்விடத்திலிருந்து, வந்தானும் - வந்தவனுமான, அவனை - அக்கண்ணனை, காண அடுக்குமோ - (எதிர்சென்று உபசரித்துப்) பார்க்கத்தகுவதோ? என்றான் அழித்து [என்று அழித்தான்] - என்று சொல்லி (அவன் கருத்தை) மாற்றிவிட்டான், (சகுனி); (எ - று.)

நமக்குத் தொன்றுதொட்டுப் பகைவராகவுள்ள பாண்டவர்க்குச் சகாயனாய் அவர்களுக்கே உதவிசெய்யும்பொருட்டு வருகிற கண்ணனை நீ எதிர்கொண்டு கௌரவித்தால், எதிரிகளுக்கு அஞ்சினதாகக் கருதப்படும்; ஆதலால், அதுதகுதியன்று என்று சொல்லித் தடுத்திட்டான் சகுனி யென்க. இங்ஙனம் துரியோதனனிடம் துர்க்குணம்மிகுதற்குச் சகுனியின் உபதேசம் முக்கியகாரண மென்பது, பாரதகதையில் ஆங்காங்குப் பிரசித்தம். கண்ணன் திருமாலின்அவதார மென்பது அக்காலத்திலேயே பிரசித்தமாயினும், சகுனி துரியோதனன் முதலியோர் அவ்விஷயத்தில் நம்பிக்கையில்லாதவராதலால், 'ஆயனை அறியார்போல் மாலென்று' என்றான். சிறந்த சந்திரகுலத்தில் வசுதேவகுமாரனாய்த் தேவகிவயிற்றிற் பிறந்திருந்தும், இடையர்குலத்தில் யசோதைமகனாய் நந்தகோபன்மனையில் வளர்ந்ததுமாத்திரத்தைக் கொண்டு, கண்ணனைச் சகுனி 'ஆயன்' என இகழ்ந்தது. வசுதேவனும் தேவகியும் கம்சனால் சிறையிலிருத்தப்பட்டுத் தளைபூண்டிருக்கையில், திருமால் தேவகியினிடம் எட்டாவதுகருப்பத்தில் கண்ணனாய் அவதரிக்க, அக்குழந்தையைக் கம்சன் முன்னையஏற்பாட்டின்படி கொன்றுவிடுவனோ யென்கிற அச்சத்தால் தாய்தந்தையர் அத்தெய்வக்குழந்தையின் அனுமதி பெற்று அந்தச்சிசுவை அதுபிறந்தநடுராத்திரியிலேயே நந்தகோபனது கிருகத்திலே இரகசியமாகக் கொண்டுசேர்த்துவிட்டு அங்கு அப்பொழுது யசோதைக்கு மாயையின்அம்சமாய்ப் பிறந்திருந்த தொரு பெண்குழந்தையை எடுத்துக் கொண்டுவந்துவிட, அதுமுதல் கம்சனைக் கொல்லுகிறவரையில் இளம் பருவத்திலெல்லாம் கண்ணபிரான் அவ்வாய்ப்பாடியிலேயே பலவகைத் திருவிளையாடல்கள் புரிந்து வளர்ந்தன னென்பது வரலாறு. சகுனி, தருமனுக்கு 'தூய' என்ற அடைமொழி கொடுத்தது, மிக்க சாந்தகுணமுடையனான தருமன் இயல்பில் மீண்டும்அரசுகேட்கமாட்டான்: மாயவ

னை இக்கண்ணனே அவனைத் தூண்டிவிட்டு இங்ஙனம் அரசுகேட்பிக்கிறா னென்ற கருத்தை விளக்கும்; 'தாயங்கொடுப்பிக்க வந்தான்' என்றதும் அதுபற்றியே. 'கோவே!' என விளித்தது, எல்லாஅரசர்க்கும் அரசனாய் ராஜராஜனென்று பிரசித்திபெற்று வணங்காமுடிமன்னனாகவுள்ள உனது பெருமைக்கு அவனை எதிர்கொள்ளுதல் தகுதியோ வென்றபடி. 'அவனும் .... வந்தானை' என்ற தொடரில், இடையனுச் சாதியில் இழிந்திருத்தல்மாத்திரத்தோடு பகைவர்க்கு அரசுகொடுப்பிக்கவந்தவனுமா யுள்ளானை என்ற கருத்து விளங்கும்; பிறப்புமுறையாலும் செயலாலும் உன்னால் நன்குமதிக்கத்தக்கவ னல்ல னென்றவாறு.

ஆயன் - பசுக்களையுடையவ னென இடையனுக்குக் காரணப்பெயர்; ஆ - பகுதி, பசு: அன் - விகுதி, ய் - எழுத்துப்பேறு. அவனும் வந்தானை என்பது-வந்தானும்அவனை யென்றும், என்றான் அழித்து என்பது - என்று அழித்தான் என்றும் உருபும் விகுதியும் பிரித்துக் கூட்டப்பட்டன. அவனும் என்ற உம்மை - இழிவுசிறப்புமாம். தூய - தூய்மைஎன்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். தாயம் - வடசொல். காண என்ற வினையெச்சம், தொழிற்பெயர்த்தன்மைப்பட்டு, 'அடுக்கும்' என்பதற்கு எழுவாயாய் நிற்கும். (௪௫)

[என்பது: பாண்டவர்க்குத் தூதனாகி உரிமைவேண்டுதற்குக் காரணனாய் வருகின்ற கோபாலனை நீ பரிவினாற் சென்று கண்டாயானால் பயத்தினாற் சென்று கண்டானென்று சதுரங்கபலத்தாரும் சர்வக்ஷத்திரியரும் கருதப்படுமாதலால், நீ ஸ்ரீவாசுதேவனை எதிர்கொள்ளக்கடவையல்ல வென்று சகுனி சொல்ல, கேட்டு மிகவும்அளவளாவி உடன்பட்டு வியாகுலத்தோடு கதுமென மீண்டுபோய்த் தன்கோயில்புக்கான் துரியோதனனைக் கருதுவது. அப்பொழுது, ஸ்ரீவாசுதேவனை எதிர்கொள்ளாமலிருப்பது யாவர்க்கும் இரட்சையல்ல எனக்கருதிப் பீஷ்மர் துரோணர் விதுரர் கிருபர் கன்னன் அசுவத்தாமா உள்ளிட்ட சர்வக்ஷத்திரியரும் தம்மொடுதாம்புலம்பி எதிர்கொள்வாராகப் போயினர். அப்பொழுது,]

கண்ணன் அத்தினபுரியை அடைதல்.

146.— (இ - ள்.) பீடு உடைய - பெருமையையுடைய, முத்து நகை செய்யும் - முத்துப்போன்ற (வெண்ணிறமான) புன்சிரிப்பைச் செய்கின்ற, முகில் வண்ணன் - மேகம்போலுங் கரியதிருநிறமுடைய கண்ணன்,—காடும் - காடுகளையும், மலையும் - மலைகளையும், கடு புனல் சேர் ஆறுகளும் - மிக்க நீர் பொருந்திய நதிகளையும், நாடும் - தேசங்களையும், பல பொழிலும் - பல சோலைகளையும், நண்ணி போய் - பொருந்திக் கடந்துசென்று,—மூன்று ஆம் நாள் - (புறப்பட்ட) மூன்றாவதுதினத்தில், அத்தி நகர் எய்தினன் - அஸ்திநாபுரியை அடைந்தான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

உபப்பிலாவியத்துக்கும், அத்தினபுரிக்கும் இடையிலுள்ள வழி இரண்டு நாளைப்பிரயாணத்துக்கு மேல் உள்ள தென்று தெரிகிறது; "கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமுங் கான்யாறும், நல்வரையு நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித், தொல்வரைய கோபுரமு நீள்மதிலுஞ் சூழ்ந்திலங்கும், மல்வரைய தோளான் வளமாநகர் கண்டான்" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம். 'கடும்புனல்' என்பதில், கடுமை - வேகமுமாம். 'பல' என்பதைக் காடுமுதலிய பிறவற்றிற்குங் கூட்டுக. தனது மேன்மை தோன்றப் புன்சிரிப்புக்கொண்டருளுபவ னென்பார், 'பீடுடைய முத்துநகைசெய்யும் முகில்வண்ணன்' என்றார். 'முத்துநகைசெய்யும்' என்றது, புன்சிரிப்புச்செய்யுங்காலத்துப் பற்களின் வெள்ளொளி சிறிதுவெளித்தோன்றுதலை. முகில் வண்ணன் - மேகம்

போன்ற [கைம்மாறு கருதாது கருணைமழைபொழிகிற] குணமுடையானு மாம்.

கீழ் கசசுடு - ஆம் பாட்டு - கண்ணன் அத்தினபுரியை நோக்கிச் செல்லு தலையும், இப்பாட்டு - கண்ணன் அத்தினபுரியை அடைந்ததையுங் கூறுமெனக் கொண்டு, அதனோடு இது கூறியதுகூறலென்னுங் குற்றத்துக்கு உரிய தாகா மையை உணர்க. (சகூ)

[இவ்வகை எழுந்தருளிக் காடும் நாடும் மலையும் கடந்து இரண்டுதிவசம் வழியில்தங்கி மூன்றாந்திவசம் அஸ்தினபுரம்புகுந்தான் ஸ்ரீவாசுதேவன் என்ற வாறு. அப்பொழுது,]

கண்ணன் எதிர்கொண்டவர்க்குவிடைகொடுத்து விதுரன்வீட்டைஅடைதல்.

147.—(இ - ள்.) காங்கேயன் உள்ளிட்ட - வீடுமன் முதலிய, காவலர்கள் - அரசர்கள், தன் சூழ - தன்னை(எதிர்கொண்டு வந்து) சூழ்ந்துகொள்ள, (கண்ணன்), ஆங்கு - அப்பொழுது [அல்லது அவ்விடத்தில்], எதிர்கொண்ட அரசர்களை - எதிர்கொண்டுவந்து சூழ்ந்த அவ்வரசர்களை (நோக்கி), 'தேங்கு ஒலி நீர் - நிறைந்த ஒலியையுடைய நீர்வளத்தையுடைய (இந்நாட்டுக்கு உரிய), மல் அமரும் தோளானை - வலிமை பொருந்திய தோள்களையுடைய துரியோதனனை, மன்னுவது - (யாம்) சந்திப்பது, நாளை - நாளைக்கு,' என்று - என்றுசொல்லி, வேறு - (யாவர்கருத்துக்கும்) வேறாக, வில் விதுரன் வீடு அணைந்தான் - வில்லில்வல்ல விதுரனது கிருகத்தை அடைந்தான்; (எ - று.)

கண்ணன் தன்னையெதிர்கொண்டவர் யாவர்க்கும் அவரவர்தகுதிக்கு ஏற்றபடி எதிர்செய்து பின்பு 'நாம் துரியோதனனை நாளைக்கு வந்து பார்ப்போம்' என்றுசொல்லி அனைவர்க்கும் விடைகொடுத்து அனுப்பிவிட்டு யார் வீட்டுக்குஞ் செல்லாமல் விதுரன்வீட்டுக்கு எழுந்தருளினன் என்பதாம். இராசகுலத்தாருட் பெரியோனான வீடுமனும், குருகுலத்தார்யாவர்க்குங் குருவாகிய துரோணனும், கிருபனும், வரையாதுஅளிக்கும்வள்ளலான கர்ணனும், இராசராசனான துரியோதனனும் கீழ்க்குறித்த அந்தந்தத் தமது கௌரவத்தைப் பாராட்டிக் கண்ணன் தம்தம்மாளிகைக்கு வரக்கூடு மென்று கருதியிருக்க, தாழ்ந்தசாதியனான விதுரன் அப்படி தனது குலமத வித்தியாமத தநமதங்களைப் பாராட்டிக் கண்ணன் தன்வீட்டுக்கு எழுந்தருளக்கூடுமென்று கருதாமலேயிருக்க, கண்ணன் யாவர்கருத்துக்கும் வேறாக எதிர்பாராதிருக்கையில் விதுரன்மனைக்குச் சென்று சேர்ந்ததை 'வேறு' என்ற சொல்லாற் குறிப்பித்தார். இனி, வேறு - தனியே யெனினுமாம். இங்ஙனம் அவன்வீட்டிக்குச் சென்றது, அவனது ஞானம் ஒழுக்கம் நடுவுநிலைமை பாண்டவர்களிடத்து அன்பு முதலிய நற்குணங்களால் மாத்திர மன்று; முன்பு "வெற்றி விதுரன்கை வில்லிருக்க மேதினியில், மற்றவனை வெற்றி கொள்ளுமா றுண்டோ" என்று தருமனால் அஞ்சப்பட்ட அவனதுவில் வன்மை துரியோதனனுக்கு உதவாதபடி செய்திடக் கருதியுமென்பார், 'வில் விதுரன்' என ஏற்றஅடைமொழிகொடுத்தார். 'காங்கேயனுள்ளிட்ட காவலர்கள்' என்றதில், விதுரன் துரோணன் கிருபன் என்றவரும் அடங்குவர்; இவர்கள் வேறுசாதியராயினும், அரசரையடுத்து அவரருளால் அவர்க்குஉரிய கிரீடம் குடை கொடி சாமரம் முதலிய சின்னங்களைப் பெற்று வாழ்ந்தனரென்க.

காங்கேயன் - வடமொழித் தத்திதாந்தநாமம்; கங்கையின் மகனென்று பொருள். அவ்விவரம் வருமாறு:—முன் ஒருகாலத்தில் தேவர்கள் யாவருங் கூடிய பிரமதேவனது சபையிற் சென்று கங்காநதியின் பெண்தெய்வம் வணங்கியபொழுது, அங்குவந்திருந்த வருணன், அவளழகை உற்றுநோக்கிக் காதல்கொண்டான்; கங்கையும், அவன்மீது காதல்கொண்டு எதிர்நோக்கி

ளுள்; அதனையறிந்த நான்முகக்கடவுள், வருணனைப் பூமியில் மானுடப்பிறப் பெடுக்கவும், கங்கையை மானுடமகளாய் அவனைச் சிலநாள் மணந்திருக்க வுஞ் சபித்திட்டான்; அங்ஙனமே வருணன் குருகுலத்திற் சந்தனுவாய்ப் பி றந்தான்; கங்கையும் ஓர்மனிதமகளாகி'யான் எந்தெந்தத்தீச்செயல் செயினும் மறுக்கலாகாது'என்னும் ஏற்பாட்டினோடு அவனைமணஞ்செய்துகொண்டாள். இது நிற்க, பிரபாச னென்னும் வசு தன்மனைவியின் சொல்லைக் கேட்டு வசிட்டனிடமுள்ள காமதேனுவைக் கொள்ளைகொள்ள எண்ணினன்; மற்றை யேழுவசுக்களும் அவனுக்கு உதவிசெய்யவே, எண்மரும் இரவிற்சென்று பசுவைக் கவர்ந்தனர்; அதனையறிந்த வசிஷ்டமகாமுனிவன், அஷ்டவசுக்களை யும் மானுடசன்மமெடுக்கவும்,அவர்களுள் மனைவிசொற்கேட்ட பிரதானனான பிரபாசனைப் பூமியிற் பலநாள்வாழ்ந்து பெண்ணின்பமற்றிருக்கவும் சாபங் கொடுத்தான்: எட்டுவசுக்களும் சந்தனுவுக்குக் கங்கையின்வயிற்றிற் பிறந் தனர். முதலிற் பிறந்த ஏழுகுழந்தைகளையும் தாய் பிறந்த அப்பொழுதே கங்காநதியில் எடுத்தெறிந்துவிட்டாள். எட்டாவதுபிள்ளை பிறந்தவுடனே தந் தை 'அக்குழந்தையைக் கொல்லலாகாது' என்றுமறுக்க, கங்கை கணவனை விட்டு நீங்கினள். அவ்வெட்டாவது மகனே, இவ்வீடுமன்.

காவலர்-காத்தல்தொழிலில் வல்லவரென்றும்,காத்தல் தொழிலையுடை யவரென்றும் பொருள்படும்; கா வலர் என்றும், காவல் அர் என்றும் பிரிக்க. காவலர் கடல் சூழ எனப்பிரித்து, அரசர்கள் சமுத்திரம்போலப் பெருந்தொ குதியாய்ச் சூழ்ந்துநிற்க என்று பொருள்கொள்ளலுமாம். தேங்கொலிநீர் - நாட்டுக்கு, அன்மொழித்தொகை. மல் - ஆயுதமில்லாமற் போர்செய்யுந் திற மையுமாம். மன்னுவது - எதிர்காலத்தொழிற்பெயர். (சுஎ)

[என்பது: தேவராசன் ஸ்ரீவாசுதேவனை யெதிர்கொண்டு பீஷ்மர் துரோ ணர் விதுரத்தொடக்கத்தாருள்ளிட்ட சர்வக்ஷத்திரியருஞ் சென்று எதிர் கொண்டு அடிபணிந்து எம்மருங்குஞ் சூழ்ந்து சேவைபண்ண, எழில்மணிக் கவரி அருகுஇரட்ட, தவளசத்திரம் மேல்நிழற்ற, கருடத்துவசம் விசும்பு அணுவ, சங்கு பேரிகை முதலாயுள்ள இசைக்கலன்கள் பஞ்சமகாசத்தம்முழ ங்க எழுந்தருளி அஸ்திநபுரம்புகுந்து பார்வேந்தனைக் காண்பதற்குத் திவசங் குறித்து நாடி விதுரன்கோயிலிடங்கொண்டான் ஸ்ரீவாசுதேவன் என்றவாறு. அப்பொழுது,]

கண்ணன்வரவினால் விதுரன் அளவிலானந்தமடைதல்.

148.—(இ - ள்.) 'தீ பிறக்கும் - (உக்கிரத்தன்மையால்) நெருப்புப் பொறி கிளம்பும்படியான, சக்கரம் - சக்கராயுதத்தையேந்திய, கை - திருக் கையையுடைய, செம் கண் மால் - சிவந்த திருக்கண்களையுடைய கண்ண பிரான்,என்னுடைய—, நாய் குடிலிலே-எளிமையையுடைய இச்சிறுகுடிசையி லே,நுழைந்தான் - புக்கருளினான்; (அதனால்), நான்—,உயர்ந்தேன் - மேன் மைபெற்றேன்; வாய்த்த- (ஊழ்வினைப்பயனால்) நேர்கிற, பிறப்பை - சன்மத் தை, கழித்தேன் - நீங்கப்பெற்றேன்; பெரு பதம் பெற்றேன் - (எல்லாப் பதவிகளினுஞ்) சிறந்த பரமபதத்தை அடைந்தேன்,' என்று- என்று (உபசார வார்த்தை) சொல்லி, எழுந்து - ஆனந்தம்மேலிட்டு, இறப்பை பிரித்தான் - கருமத்தை ஒழித்தான்; (எ - று.)

இங்கே, 'இறப்பு' என்றது - உவமையாகுபெயராய், வீட்டின்இறப்புப் போல (ஓருயிரை)க் கவிந்து புண்ணியம்பாபமென்னும் இருகூறுடையதான கருமத்தைக் குறித்தது; அழகரந்தாதியில் "பின்னிறப்பும் பிறப்பும் நரை மூப்பும் பிணியுமன, முன்னிறப்பும் பிரித்தான்" என்னுமிடத்தும் 'இறப் புப்பிரித்தான்' என்றதன்பொருள் இங்ஙனமாகுதல் காண்க. இனி, 'இறப்

புப்பிரித்தான்' என்பதற்கு - மரணத்தை நீக்கினான் என்று பொருள்கூறுதல் பொருந்தாது; முத்திபெறுமாறு கருமமொழிந்தார்க்கும் அப்பிறப்பில் மரணமுண்டன்றோ? "சரணமாகுந் தனதா ளடைந்தார்க் கெல்லாம், மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" என்றிறே ஆழ்வாரும் அருளிச் செய்தது. இனி, ஆநந்தாவேசத்தினால் மெய்ம்மறந்து வைகுந்தஞ்சேரமேற் போவதற்குத்தடையென்று தன்மாளிகையின் மேற்கூரையைப் பிரித்தான் என்று பொருள்கூறுதல், பொருத்தம்; அடுத்தகவியையும், அதனடியில்வருகிற வசனத்தையும் நோக்குக. கருமமொழிந்து முத்திபெற்றார்க்கு, காரணமான கரும மொழியவே காரியமான பிறப்பும் இல்லையாதலால், 'பிறப்பைக் கழித்தேன்' என்றான். 'பெரும்பதம் பெற்றேன்' என்று இறந்தகாலத்தாற் கூறினது, தெளிவுபற்றிய காலவழுவமைதி. கருமமொழிந்து முத்திக்கு ஒப்பான நிலையிலே நின்றேன் என்றவாறுமாம்; இந்நிலைமை, சீவன்முக்தியெனப்படும். "அற்றது பற்றெனி லுற்றது வீடு," "பசையற்றா லன்றே யப்போதே வீடு அதுவே வீடு வீடாமே" என்ற ஆழ்வாரருளிச்செயல்களை அறிக. 'நாய்க்குடில்' என்றதில், நாய் என்றது - இலக்கணையால் இழிவைக் குறித்தது. 'என்னுடையநாய்க்குடில்' என்றது - நாய்போலிழிவான எனது குடிசையென்றவாறு. 'நுழைந்தான்' என்றதனால், குடிசையின்சிறுமையை விளக்கிக்காட்டியபடி. (சஅ)

இதுவும் அது.

149.—[அன்றியும்], (இ - ள்.) பிரியா - நீங்காத [எப்பொழுதுந் தரித்த], மலர் தாரான் - பூமாலையையுடைய விதுரன்,—திரு மால் - திருமகள் கணவனான கண்ணபிரான், துரியோதனன் இடைக்கு - துரியோதனனிடத்துக்கு, தூது வரும் - தூதனாய் எழுந்தருள்கிற, ஆறு - விதத்தை, கண்டு - பார்த்து, மகிழ்ந்து - ஆநந்தமடைந்து, தன் உள்ளம் குளிர்ந்து - தனதுமனங் குளிர்ச்சிபெற்று, மெய் மறந்து - தேகம் பரவசமாய், தன்னுடைய கூரை பிரித்தான் - தன்னுடைய வீட்டுக்கூரையைப் பிரித்திட்டான்; (எ - று.)

"பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய, வித்தகன்" என்றபடி அமரர்கட்குஅரியவனும் அடியவர்க்குஎளியவனு மான எம்பெருமான் தனது பரத்துவத்தை இருந்ததுதெரியாதபடி விட்டுப் பாண்டவதூதனாய்த் துரியோதனனை நோக்கி வந்த சௌலப்பியகுணவிசேஷத்தின் மிகுதியிலே ஈடுபட்டு விதுரன் பேரானந்தங்கொண்டு அதனால் மெய்ம்மறந்து, தான் வைகுந்தத்தைநோக்கிமேற்போதற்குத்தடையாயுள்ளதென்று தன்வீட்டுக் கூரையைப் பிரித்தா னென்பதாம். இது, வரம்புகடந்த பக்திமிகுதியா லாகிய தோ ரருஞ்செயலாம். இனி, 'கூரைபிரித்தான்' என்பதற்கு - கீழ்ப்பாட்டில் 'இறப்பைப்பிரித்தான்' என்றதற்குப்போலவே, வீட்டின்மேற்கூரைபோல (உயிரை)க்கவிந்துள்ளதான கருமத்தை ஒழித்திட்டா னென்றலும் ஒன்று.

துர்யோதநன் என்னும் வடமொழிப்பெயர்க்கு - கொடிய போரையுடையவ னென்றுபொருள். நிலையில்லாமையாற் பொய்யாகிய உடலை 'மெய்' என்றது, மங்கலவழக்கு. உள்ளம் - அகத்துஉறுப்பு; அந்தஃகரணம்; இதில், அம் - சாரியை. (சகூ)

[என்பது: தேவதேவன் யாவர்க்குங் காண்டற்கரியான் ஸ்ரீவாசுதேவன் தருமபுத்திரன்பொருட்டுத் தூதாக மற்று இங்குஎழுந்தருளினது, அடியேன் நாய்க்கொட்டில் என்னபுண்ணியம் பண்ணிற்றோ? என்று, சன்மாந்தரத்துப் பண்ணினபாக்கியத்தினால் இப்பொழுது என்கொட்டில் கோயிலாகப்பெற்றதென்று, யான் இனித் திருவுள்ளத்தினால் இம்மைமறுமை இரண்டும் அறப் பெற்றேன் என்றும், இவ்வகை விண்ணப்பஞ்செய்து, திருவடிதொழுது செய்

வதொன்றறியாத பிரியஸ்தனாய் நவரத்தினங்களால்அணிந்த தன்இறப்பையும் பிறப்பையும் பிரித்து ஸ்ரீபாதங்களை நோக்கிப் புட்பார்ச்சனை பண்ணி மகாப்பிரியஞ்செய்தான் சர்வஞானி விதுரனாகக் கருதுவது; அதுகண்டு ஸ்ரீ வாசுதேவனும் திருப்புன்முறுவல்கொண்டு மற்று அவனை நோக்கி யாதுஅருளிச்செய்தான்:]

கண்ணன் விருப்பத்தோடு விதுரன்வீட்டில் விருந்துண்ணுதல்.

150.— (இ - ள்.) எம் பெருமாள் - நமது தலைவனான கண்ணபிரான், —பொய் வீடு - அசத்தியத்தை விடுதலை, இனிது செய்யும் - இனிமையாக [வெறுப்பில்லாமல் இஷ்டத்தோடு] செய்கின்ற, பாண்டவர்க்கு—, ஆய் - தூதனாய், போய்—, மெய் விதுரன் வீட்டில் - சத்தியந்தவறாத விதுரனது திருமாளிகையிலே, உண்ண - அமுதுசெய்யும்படி, மிக விரும்பி - மிகவும் விருப்பங்கொண்டு, உனது இ வீடு எனதே என்று அருளி - உன்னுடையதாகிய இந்தவீடு என்னுடையதே என்று (அபேதமாக) இன்சொற்கூறி, ஆங்கே - அவ்விடத்திலே, அமுதுசெய்து - புசித்து, ஆங்கு - அவ்விடத்தில், கண்வளர்ந்தான் - பள்ளிகொண்டருளினான்; (எ - று.)

உனது - ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர்; நீ-பகுதி. எனது- ஒன்றன்பாற்குறிப்புமுற்று; யான் - பகுதி இவற்றில், அ - சாரியை, து - விகுதி. இவை ஆறாம்வேற்றுமைவிரியன்று. மெய் மிகவிரும்பி என இயைத்து, உண்மையாக மிகவிருப்பங்கொண்டு என்று உரைப்பினுமாம். 'பொய் வீடு' என்னுமிடத்து, 'வீடு' என்பது - விடு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். இனிது - பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று; எச்சப்பொருள்பட்டு, இங்கே வினையுரியாய் நின்றது. பாண்டவர் - பாண்டு புத்திரர்; வடமொழித் தத்திதாந்தநாமம். 'எம்' என்ற பன்மை - எல்லாவுயிர்களையும் உளப்படுத்தியது. பெருமாள் - பெருமான் என்பதன் விகாரம்; ஆன் விகுதி ஆள்விகுதியாத் திரிந்ததென்றும், பெண்பாற்சொல் ஆண்பாற்கு வந்ததென்றும் இலக்கணங்கூறுவர்; இதற்கு, பெண்பால் - பெருமாட்டி. அமுதுசெய்தல் - அமிருதம்போலினிய உணவைப் புசித்தல். அமுது - வடமொழிச்சிதைவு. 'அமுது செய்து கண்வளர்ந்தான்' என்றதனால், கண்ணன் அத்தினாபுரிசேர்ந்து விதுரன்வீட்டையடைந்தது மாலைப் பொழுதிலென அறிக.

பாண்டவர்க்காய் ஆங்கே அமுதுசெய்து என்று இயைத்து, பாண்டவர்க்காக அவ்விதுரன்வீட்டிலே அமுதுசெய்து என்றும் உரைக்கலாம்; துரியோதனன் பாண்டவர்களுக்குப் பகைவனாதலால் அங்குத் தான் உண்பது தகுதியன்றென்று விதுரன்மாளிகையில் உண்டானென்பது கருத்து. மேல் துரியோதனன் கண்ணனை 'நீ ஏன் என்வீட்டில் வந்து தங்கி உண்ணவில்லை?' என்று வினாவும்போது, கண்ணன் 'பகைவர்சோறு உண்ணலாகாது: நீ பாண்டவரைப் பகைக்கிறாய்; பாண்டவர் எனக்கு உயிரன்றோ?' என்று விடைகூறுமாறுங் காண்க. இதனால், அன்பர்க்குத் தானும் அன்பனாவானென்பது விளங்கும். துரியோதனன்வீட்டிற்சென்று அவனுணவையுண்டு உபசரிக்கப்பெற்றால் "உயிர்க்குறுதியாக வொருவர்சோறுண்டார், பிறர்க்குரியராவரோ பேசு" என்றும், "சோற்றின் வலியால் துவக்குண்டான்" என்றும், "தஞ்சமென வொருவர்சோறுண்ட தாளாண்மை, வெஞ்சமரிலன்றி விளிவரோ" என்றுங் கீழ்க்கூறியபடி சல்லியன் பாண்டவரைக் கைவிட்டுத் துரியோதனனுக்கே துணையாய்விட்டதுபோலத் தானும் ஆகவேண்டிவருமென்பதை ஆலோசித்தும் கண்ணன் அவன்வீட்டிலுண்ணுதலை ஒழிக்கவேண்டிற்று. (ரு0)

மறுநாள் சூரியன் உதித்தல்.

151.—[அன்றியும்], (இ - ள்.) மாலோன் - கண்ணன், விருந்து அமுது செய்து - (அங்கு) விருந்துண்டு, விதுரனுடன் மேவி மதுரம் மொழி பயின் றான் - விதுரனுடன் மனங்கலந்து இனிய பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந் தான்; (பின்பு),—அதிபற்கு - தலைவனான தருமனுக்கு, எதிரோன் - பகைவ னான துரியோதனன், இருந்த - வீற்றிருக்கிற, இடம் - இடத்துக்கு, ஏந்து எழிலான் - மிக்கஅழகையுடைய கண்ணன், செல்ல - போகும்படி, கதிரோ னும் - சூரியனும், காய்ந்து - உஷ்ணகிரணங்களைப் பரப்பிக்கொண்டு, தோ ற்றினன் - உதித்தான்; (எ - று.)

கீழ்ப்பாட்டில் 'கண்வளர்ந்தான்' என்றவர், இப்பாட்டில் மீண்டும் 'மதுரமொழி பயின்றான்' என்றது, படுக்கையில் சயனித்தபின் தூக்கம்வரு மளவும் நெடுநேரம் உல்லாசமாகப் பேசிவந்ததைக் குறிக்கும். மூன் றாம் அடிக்கு, கண்ணன் "மல்லமருந் தோளானை மன்னுவது நாளை" என்று கீழ்க்கூறிய வார்த்தையை நிறைவேற்றுமாறு என்று கருத்து; இன் னும் அதனால், சூரியன்உதித்தது கண்ணன் துரியோதனனிடம் செல் லுதற்கு வெளிச்சங்காட்ட வந்தாற்போன்ற தென்ற வருணனையுந் தொ னிக்கும். புதுமைகுறிக்கும் 'விருந்து' என்னும் பண்புப்பெயர் - இருமடி யாகுபெயராய், புதிதாய் வந்தவர்க்குச் செய்யும் உபசாரத்தின்மேல் நின் றது. மநுநீதிமுறைமைப்படி மூத்தவனுக்கே அரசு உரிய தாதலால், தருமன் 'அதிபன்' எனப்பட்டான். மதுரம் - வடசொல்.

'விருந்தமுதுசெய்து மதுரமொழிபயின்றான்' என்பதை, மதுரமொழி பயின்று விருந்தமுதுசெய்தான் என விகுதிபிரித்துக்கூட்டி, விதுரனுடன் கலந்து பொருந்தி இனியசம்பாஷணைசெய்து விருந்துண்டான் எனப் பொ ருள்கொள்ளுதலும் ஒன்று; இங்ஙனம்பொருள்கொள்ளுதல் நூலாசிரியர் கருத்து என்று அடியில்வருகிற உரைநடையை நோக்கி அறிக. (ருக)

[இவ்வகை விதுரன்வீட்டி லெழுந்தருளி மதுரமொழிபயின்று மற்று அங்கு அமுதுசெய்து பள்ளிகொண்டருளி அர்த்தராத்திரியில் கண்ணகற்றி மற்றைநாள் துரியோதனனிடைக்குப் போவானாக நினைந்தருளு மெல்லைக் கண் குணதிசையில் ஆதித்தன் தோன்ற, கண்டு ஸ்ரீவாசுதேவன் எழுந் தருளுவானாக விதுரனை அழைத்துத் தேர்கொண்டுவா வென்ன, யாது செய்தான் விதுரன்:]

விதுரன் தேர்கொணர்ந்து நிறுத்திக் கண்ணனை 'ஏறுக' என்றல்.

152.—(இ - ள்.) ஒற்றை - ஒப்பில்லாத, மணி - அழகிய, துகில் ஒன்று- ஆடை ஒன்றை, உரிய - (துச்சாசனன்) அவிழ்க்க, ஒன்று உதவி - மற்றொ ராடையை மேன்மேற்கொடுத்து, (இவ்வாறு), கொற்றம் வேல் பாஞ்சாலன் கோ மகளை - வெற்றியைத்தரும் வேலையுடைய பாஞ்சாலதேசத்துஅரச னான துருபதனது சிறந்த மகளான திரௌபதியை, அற்றம் மறைத்த வனே - அவமானத்தையொழித்துப் பாதுகாத்தருளியவனே! மாவலி பால்- மகாபலிசக்கரவர்த்தியினிடத்தில், மண் எல்லாம் வாங்கி - உலகங்களையெல் லாம் தானம்வாங்கி, சிறைத்தவனே - (அவனைச்) சிறைப்படுத்தியவனே! தேர் போந்து ஏறு - தேரின்மீது வந்து ஏறியருள்வாய்; (எ - று.)—'என்றான் விதுரன்' என அடுத்தகவியோடு இயையும். எனவே, இதுவும், அடுத்த கவியும் - குளகமாம்; ஒருதொட ரெனப்படும். குளகமாவது - பலபாடல் தொடர்ந்து ஒருவினை கொண்டு முடிவது; "குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்". குளகமல்லாதது - முத்தகமெனப்படும்; அது, ஒருசெய்யுள் தனியேநின்றுமுடிவது; "முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்".

அடுத்தவரை அளிப்பதற்கும், செருக்கினவரை அடக்குதற்கும் எடுத்துக்காட்டாக, இரண்டுவிளி கூறப்பட்டன.

"உடுத்ததுகி லுணர்விலா னுரிந்திடவும் மாளாமல் ஒன்றுக்கொன்று ஆங்கு, அடுத்தநிறம் பற்பல பெற்று ஆயிரமாயிரங் கோடி யாடையாகக், கொடுத்தருள உரிந்தன பட்டு இருந்த பெருந்தனிக்கூடங் கொள்ளாது ஓடி, எடுத்தனர் பற்பல வீரர் உரிந்தோனும் சலித்து இருகை யிளைத்து நின்றான்" எனத் துரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தவாற்றை அறிக. ஒன்று என்னும் மென்றொடர் வன்றொடராய் ஐகாரச்சாரியை பெற்று ஒற்றையென நின்றது. வேல் - மற்றையாயுதங்களுக்கும் உபலட்சணம்; வெல்வது, வேல் எனக் காரணப்பெயர். பலபராக்கிரமங்களிற் சிறந்த சிவபிரானுக்கும் சுப்பிரமணியமூர்த்திக்கும் யமனுக்கும் வேல் ஆயுதமாதலால், அதுவே சிறப்பாகப் பலவிடத்துங் கூறப்படும். அற்றம் மறைத்தல் - இழிந்தஉறுப்பை மறைத்து அவமானத்தை இல்லையாக்கல்; ("அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயின், குற்றம் மறையா வழி," "அற்ற மறைக்கும் பெருமை" என்ற திருக்குறள்களைக் காண்க.) மாவலி - வடசொல் திரிபு.

இப்பாட்டின் மூன்றும்அடி-முற்றுமோனை. பகாபலியினிடத்தில் உலகங்களைத் தானம்வாங்கினபின் அவனைநோக்கி 'மூன்று அடி தருகிறேனென்றாய்; கொடுத்த இரண்டடி யொழிய மற்றையோரடிநிலத்தையுந் தாராய்' என்றுசொல்லித் திருமால் அப்பலியைக் கடன்காரர்க்குஉரிய சிறையிலே இட்டன னென்க;பாதாளத்தில் பலிசக்கரவர்த்தியுள்ள இடத்துக்கு விஷ்ணு காவலாக எப்பொழுதும் வாயிலில் இருக்கின்றா னென்பதுபற்றியும், சிறைவைத்தவனென்பர். "ஒருகுறளா யிருநிலம் மூவடிமண் வேண்டி யுலகனைத்து மீரடியாலொடுக்கி யொன்றுந், தருகவென மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்"என்ற பெரிய திருமொழியும்,"மாவலி சிறைப்பட வைத்த தாண்மலர்" என்ற வில்லிபுத்தூரார்பாரதமும் ஒப்புநோக்கத்தக்கன. சிறைத்தவன்- சிறையென்னும்பெயரினடியாப்பிறந்ததெரிநிலைவினையாலணையும்பெயர்.

'அற்றமறுத்தவனே' என்றும், 'மண்ணனைத்தும் வாங்கச், சிறுத்தவனே' என்றும் பாடமுண்டு. தான் - அசை. (௩௨)

[இவ்வகை விதுரன் விண்ணப்பஞ்செய்ய, கேட்டு யாதுசெய்தான் ஸ்ரீ வாசுதேவன்:]

கண்ணன் துரியோதனனரண்மனையைச் சமீபித்தலும், அவன் எதிர்கொள்ளாமையும்.

153.—(இ - ள்.) விதுரன்—,என்றான் - என்றுசொன்னான்; (உடனே கண்ணன்), எழில் தேரின்மீது ஏறி - அழகையுடைய அந்தத்தேரின்மேல் ஏறிக்கொண்டு, குன்று ஆங்கு கோயில் - மலையை யொத்த (துரியோதனனது) அரண்மனையை, குறுகினான் - போய்ச்சமீபித்தான்;(அப்பொழுது), நின்றார் போய் -(அரண்மனைவாயில்காவலராய்) நின்றவர்கள் (உள்ளே) சென்று, மன்று ஆர் தார் மன்னனுக்கு - சபாமண்டபத்திற் பொருந்திய (நஞ்சாவட்டைப்பூ)மாலையையுடைய துரியோதனராசனுக்கு, மாயன் வரவு உரைப்ப- கண்ணனெழுந்தருளுதலைச் சொல்ல, கோ - அத்துரியோதனராசன், குன்றாது - (தன் செருக்குக்) குறையாமல், அணை இருந்தான் - (தனது) சிங்காதனத்திலே வீற்றிருந்தான்; (எ - று.)

கீழ்ச் சகுனியின் உபதேசத்தால் துரியோதனனது மனம் மாறிவிட்டதனால் அவன் கண்ணன்வருகையைக்கேட்டவளவில் இருப்பிடம்விட்டு எழுதல் எதிர்செல்லுதல் முதலிய உபசாரமொன்றுஞ் செய்யத்தொடங்காமல் வணங்காமுடிமன்னனாய் அலட்சியமாகத் தனது சிங்காதனத்திற் டஞ்சணையின்

மீது வீற்றிருந்தனன் என்பதாம். முதலடிக்கு - என்றுசொன்ன விதுரனது அழகிய தேரின்மேல் ஏறிக்கொண்டு என்றும் உரைக்கலாம். ஆங்கு - உவம வுருபு; அசையாயின், குன்று கோயில் என்பது - உவமைத்தொகையாம்.

மன்று ஆர் தார் - பரிமளம் நிறைந்த பூமாலை யென்றலும் ஒன்று; இப்பொருளில், மன்று- மன்றல் என்பதன் விகாரம். எழில் - எழுச்சியுமாம்; தொழிற்பெயர்: எழு - பகுதி, இல் - விகுதி. (௫௩)

துரியோதனன் தன் சபையார்க்கு 'கண்ணனை உபசரியற்க' என்றல்.

154.—[அன்றியும்], (இ - ள்.) 'ஒளிர் வேலீர் - விளங்குகிற வேலாயுதத்தையுடைய அரசர்களே! வெற்றி பறவைக்கு அரசன் - (எல்லாப்பறவைகளுள்ளும்) மேன்மையையுடைய பறவையாகிய கருடனுக்குத் தலைவனான கண்ணன், விரைந்து - துரிதப்பட்டு, என்பால் உற்ற அளவில் - என்னிடம் வந்த சமயத்தில், (நீங்கள்), அவனை கைதொழுது வாழ்த்த கடவீரேல் - அவனைக் கைகூப்பி வணங்கித் துதிக்கத் தலைப்பட்டீரானால், காசினிமேல் - பூமியில், உழி - நம்மிடத்து, எய்தும் - (பழிப்பு) உண்டாம்' என்றான் எடுத்து - என்று எடுத்துச்சொன்னான்; (எ - று.)—மற்று - அசை.

கண்ணன் வரும்பொழுது உங்களில் யாரேனும் அவனைப் பெருமைப்படுத்தி உபசரிக்குங் கடமையைச் செலுத்தத்தொடங்கினால், அது அவனிடத்து அச்சத்தால் நான் செய்வித்ததாகத் தோன்றி எனக்குப்பழிப்புக்கிடமாமென்றனன் என்பதாம். என்றது, நீங்கள் அங்ஙனஞ் செய்யலாகாது என மறுத்து நியமித்தவாறு; அது, அடுத்தகவியில் நன்குவிளங்கும். சந்தருப்பம் நோக்கி, 'எய்தும்' என்ற முற்றுக்கு 'பழிப்பு' என்ற எழுவாய் வருவிக்கப்பட்டது; ௧௫௯ - ஆம்பாடலின் கீழ் வருகிற வசனத்தையுங் காண்க. இனி, 'உழி' என்பதை - ஊழி யென்பதன் குறுக்கலெனக்கொண்டால், நாசகாலமென்று பொருள்படும். "காவன்மன்னவர் முகங்கடோறு மிருகண்பரப்பி யமர் கருதுவோ, ரேவலின்கண்வரு தூதனு மிடைய னின்று நம்மவையி லெய்தினு, லோவலின்றி யெதிர்சென்று கண்டுதொழு துறவுகூறி லினி யுங்களூர், நீவலஞ்செய வடர்ப்ப னென்று நனிசீறினான் முறைமைமாறினான்" என்பது வில்லிபுத்தூரார்பாரதம். இராசதருமம் சிறிதுமில்லாத கொடுங்கோல்மன்னனாதலின், இங்ஙனங் கூறினான். பாண்டவர்மேலுள்ள கோபம், அவர்தூதனான கண்ணன்மேற் சென்றது.

கருடன் பறவைகளுக்கு அரசனாதலால், 'வெற்றிப்பறவை' எனப்பட்டது. வெற்றிப்பறவைக்கரசன்-பட்சிராசனான கருடனை வாகனமுங் கொடியுமாக வுடைய தலைவன். ஒளிர்வேல் - வினைத்தொகை. வேலீர் - வேலார் என்றதன் ஈற்றயல்திரிந்த விளி. கடவீர் - கடமையென்னும் பண்பினடியாப் பிறந்த முன்னிலைப்பன்மைக் குறிப்புமுற்று. என்றான் எடுத்து - அச்சந்தோன்ற உரத்தகுரலாகக் கூறினான் என்க. பறப்பது, பறவை எனக் காரணப்பெயர்; ஐ - கருத்தாப்பொருள்விகுதி: [பரவை - கடல்.] (௫௪)

இதுவும் அது.

155.—[அன்றியும்], (இ - ள்.) (துரியோதனன்), முகமது செம் ஆக-(தனது) முகம் சிவந்தநிறமாகும்படி, சிவந்து - கோபித்து, (சபையரசரை நோக்கி), 'பூ பாலீர் - அரசர்களே! கோபாலன் - இடையனான கண்ணன், இங்கு-இவ்விடத்து, குறுகி வருதலுமே - சமீபித்துவந்தவளவிலே, (நீங்கள்), மே பாலர்- அன்பின் உரிமையுடையவர்களாய், ஏத்தி - (அவனைத்) துதித்து, வினவுதிரேல் - (யோககேஷமம்) விசாரிப்பீரானால், உம்முடைய மா நிதியம் கொள்வேன் - உங்களுடைய மிக்க செல்வத்தை (யான் வலியக்) கவர்ந்து கொள்வேன்;' என சொன்னான் - என்று கூறினான்; (எ - று.)

இராசதருமமறியாத இடையர்சாதியன் என இகழ்ந்தவாறு; "ஏவலின் கண் வரு தூதனு மிடையனின்று நம்மவையி லெய்தினால்" என்பது,வில்லிபுத் தூரார்பாரதம். கோபாலன் - வடசொல்; கோ - பசுக்களை, பாலன் - காப்ப வன் எனப் பொருள்படும். ஏகாரம் - விரைவுகுறிக்கும். மே- அன்பை யுணர்த்துவதோர் உரிச்சொல்;"நம்பும் மேவும் நசையாகும்மே" என்ற தொல் காப்பியங்கொண்டு உணர்க. பாலர் - பான்மையை யுடையவர்; பான்மை யென்னும் பண்பினடியாப் பிறந்த பலர்பாற் குறிப்புமுற்றெச்சம். இனி, மே பாலர் - அன்பைக் காப்பவ ரென்றுங் கொள்ளலாம்; பாலர் - வடசொல். வினவுதிர் என்ற முன்னிலைப்பன்மைமுற்றில், த் - எழுத்துப்பேறு; இர்விகு தியே எதிர்காலங் காட்டிற்று. பூபாலீர் - பூபாலர் என்னும் வடமொழி ஈற் றயல்திரிந்த விளி. பூபாலர்-பூமியைக் காப்பவர். நிதி, முகம் - வடசொற் கள். நிதியம், அம் - சாரியை. முகமது என்பதில், அதுஎன்பது-பகுதிப்பொ ருள்விகுதி; முதல்வேற்றுமைச்சொல்லுருபெனினும்,அசையெனினும் ஒக்கும். சிவந்து என்பதில், செம்மை யென்னும் பண்பினடி விகாரப்பட்டு வினையா யிற்று; இது, கோப மென்னும் பொருளையும் உடையதாதலை "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. 'சின ந்து' என்ற பாடமுங் கொள்ளலாம். (௫௫)

துரியோதனனது நிர்ப்பந்தத்துக்கு யாவரும் உடன்படுதல்.

156.—[அன்றியும்], (இ - ள்.) ஒலி - ஒலிக்கின்ற, கடலும் - சமுத்திர மும், ஒவ்வா - ஒப்பாகமாட்டாத, உயர் முழக்கம் - மிக்க ஆரவாரத்தை, செய்யும் - செய்கிற, புலி திரண்ட மன்னர் - புலிகள்போலக் கூடியுள்ள (வீரர்களான) அரசர்கள், பொரும் - நெருங்கிய, கூடம் - சபையை, (துரி யோதனன்), இரும்பு இழுக்கும் காந்தம் என - இரும்பையிழுக்கிற காந்தம் போல, வலிய - பலவந்தமாகத் தன்வழிப்படுத்த, (அவ்வரசர்கள்), மனங்கள் எண்ணு - (தம்தம்) மனத்தில் ஆலோசித்து, விரைந்து - விரைவில், விரும்பு கைக்கு சென்றார் - (அவனது) விருப்பத்துக்கு இணங்கிநடப்பவரானார்கள்; (எ - று.)—விரும்புகைக்குச் செல்லுதல் - அவன்விருப்பத்துக்குத் தாம் இசைந்தொழுகுதல்.

இரும்பைக் காந்தம் தன்னிடத்தில் வலியஇழுப்பதுபோல, சபையா ரைத் துரியோதனன் வற்புறுத்தித் தன்வசப்படுத்தத் தொடங்கியவளவிலே, அவர்களும், தமக்கு அவன்தலைவனும் தாம் அவனுக்குக்கீழ்ப்பட்டவருமான தன்மையை நன்றாக ஆலோசித்து அவன்கருத்தின்படி நடவாவிட்டால் தம க்கு அவனாலுளதாகுந் தீமைக்கு அஞ்சி மனப்பூர்வமாகவல்லாவிடினும் வெளித்தோற்றத்தில் அவனது இஷ்டத்துக்கு மாறுபடாமல் இசைந்து நட ப்பாராயினர் என்பதாம்.

ஒலிகடலும் - கடலொலியும் என மாறுதல், நலம். உம் - உயர்வுசிறப்பு. ஒவ்வா - ஒ என்னும் வினைப்பகுதியடியாப் பிறந்த ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உயர்முழக்கம் - வினைத்தொகை; உயர்ந்த, உயர்கிற, உய ரும் என விரியும்: இத்தொடரை உயர்வாகிய முழக்கமெனப் பண்புத்தொ கையாகக் கொள்ளுதல் பொருளமைதிக்குப் பொருந்துமாயினும் சொல் லிலக்கணத்துக்குப் பொருந்தாது; வினைப்பகுதியாதலாலும், காலந்தோன்ற நிற்றலாலு மென்க. முழக்கம்-தொழிற்பெயர்;முழங்கு-பகுதி, அம் -விகுதி, வலித்தல் - விகாரம். மன்னர்க்குப் புலி உவமை, பலபராக்கிரமங்களுக்கு. பொரும் மன்னர் என இயைத்து, போர்செய்யவல்ல அரச ரெனினுமாம். காந்தம் - வடசொல். என - உவமஉருபு. எண்ணு - செய்யா என்னும் வாய் பாட்டு உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். மனம் - மநஸ்: வடசொல்.

[என்பது: ஸ்ரீவாசுதேவன் என்பக்கல் வந்தால் நீங்கள் அவனைக்கண்டு ஆசாரம்பண்ணுதல் தொழுதல் செய்வீராகில், பாண்டவர்க்குத் தூதனாய் வந்தானை என்அருகிருந்தார் அங்கீகாரம்பண்ணுவது பயபத்தியினாற் செய்வித்தேனென்று பரராஷ்டிரத்தார் கருதி இகழப்படுங் கண்டீரென்று பல பகர்ந்து மற்று அந்தஇராசசமூகத்தைக் கையமர்த்தி இவ்வகைபேசி இனிதிருந்தவிடத்து, ஸ்ரீவாசுதேவனை வரவிடச்சொல்லி வாசற்காவலரைப் போக விடுத்துத்தானும்இராசசமூகத்தாரும்யாங்ஙனம்வீற்றிருந்தாரோவெனில்:—]

அப்பொழுது துரியோதனன் சபையில் வீற்றிருந்த நிலைமை.

157.— (இ - ள்.) கள்ளம் - வஞ்சனைக்கிடமான, கவற்றால் - சூதாடு கருவியால், வென்று - (தருமனைச்) சயித்து, உள் நாடு -. (அவனுக்கு) உள்ள இராச்சியத்தை, கைக்கொண்டு - கவர்ந்துகொண்டு, பின்னும் - பின்பும், குவற்று ஆன் நிரை - குவியலாகவுள்ள (விராடநகரத்துப்)பசுக்கூட்டத்தை, கவர்ந்த - கவர்ந்துசெல்லத்தொடங்கிய, கோ - துரியோதனராசன்,—வெள்ளி குடை - ஒற்றைவெண்கொற்றக்குடை, நிழற்ற - நிழலைச்செய்யவும்,— வெள் சாமரம் - வெண்ணிறமான சாமரங்கள், இரட்ட - வீசப்படவும்,— வெள் இலை வேல் வேந்தருடன் - வெண்மையான அரசிலைவடிவமான (நுனியையுடைய) வேலாயுதத்தையுடைய அரசர்களுடன், வீற்றிருந்தான் - சிறப்பாக(ச்சிங்காதனத்தில்) உட்கார்ந்திருந்தான்; (எ - று.)

'வென்று' என்ற வினைக்கு, துரியோதனன் - ஏவுதற்கருத்தா; சகுனியைக் கொண்டு வெல்வித்து என்றபடி. பாண்டவரை இராச்சியத்தினின்று துரத்தின பின்பும் அவர்கள்மீது கொண்ட பகைமை தணியாமல் அவர்கள் விராடநகரத்தில் அஞ்ஞாதவாசஞ்செய்தல்கூடுமென்று ஒருவாறு ஊகித்தறிந்து அக்காலம்முடிவதற்குள்அவர்களைஇன்னாரென்றுகண்டுபிடித்துமுன்னைய சபதத்தின்படி மீண்டும் அவர்களைப் பதின்மூன்றுவருஷகாலம் வனவாச அஞ்ஞாதவாசங்களின்பொருட்டுத் துரத்திவிடவேண்டுமென்ற கெட்டஎண்ணத்தால் துரியோதனன் படையெடுத்துச் சென்று ஏககாலத்தில் அந்நாட்டை இருபுறத்தும் வளைத்து அங்குள்ள பசுக்கூட்டங்களைக் கவர்ந்து போர் செய்யத்தொடங்கிய சூழ்ச்சியை, 'பின்னுங் குவற்றானிரைகவர்ந்த' என்றதனாற் குறித்தார். அவர்கள் அந்நகரத்தினுள் இருந்தால் எப்படியும் போரில் வெளிவரக்கூடும்; அப்பொழுது அவர்களைக்கண்டுவிடலாமென்பது, உட்கருத்து.

வெள்ளி - பண்புப்பெயர்; இ - விகுதி. இனி, வெள்ளிமயமான குடையுமாம். நிழற்ற, இரட்ட - வினைச்செவ்வெண். நிழற்ற என்பதில், நிழல் என்பதன் பிறவினையான நிழற்று - பகுதி. சாமரம் - சமர மென்னும் மானின் சம்பந்தமானது எனப் பொருள்படும்;வடமொழித்தத்திதாந்தநாமம். அதன் வால்மயிரினாற் செய்யப்பட்டதோர் இராசசின்ன மென்க. வெள்வேல், இலைவேல் எனத் தனித்தனி இயையும். வீறு - வேறொருவர்க்கில்லாத சிறப்பு; அதனோடு இருத்தல், வீற்றிருத்தல். கள்ளம் - தொழிற்பெயர்; கள் - பகுதி, அம் - விகுதி. 'உள்நாடு' என்பதில், உள் என்பது - உண்மை யென்னும் பண்பின் அடி. குவற்று - குவால் என்பதன் குறுக்கலான, குவல் என்னும் பெயரினடியாப் பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர்; று - ஒன்றன்பால்விகுதி. ஒன்றன்கூட்டமும் பலவின்கூட்டமு மாகக் கூட்டங்கூட்டமாய்ப் பலதிரள்களிருத்தலைக் குறித்தற்கு, 'குவற்றானிரை' என்றார்.(௫௭)

[என்பது: ஸ்ரீவாசுதேவன் எழுந்தருளிவருகின்றமை அறிந்து, பரராஷ்டிரத்து க்ஷத்திரியரும் சூழ்ந்து சேவைபண்ண, வீஷ்மர் துரோணர் விதுரர் கிருபர் கன்னன் அசுவத்தாமா உள்ளிட்டாரும் சகுனியும் விருஷசேன

னும் பூரி பூரிசிரவாவும் சோமதத்தன் முதலாயுள்ள அதிரதரும், துச்சாதனன் முதலாயுள்ள தொண்ணூற்றொன்பது தம்பிமாரும் புடைசூழ, எம்மருங்கும் எழில்மணிக்கவரி அருகுஇரட்ட, தவளசத்திரம் மேல்நிழற்ற, வேல்வேந்தர் தொழுது இறைஞ்ச, தானும் சர்வாபரணபூஷிதனாய் நகைமுகமான வீரசிங்காதனத்துமிசை வீரசிங்கம்போலப் பொலிந்துதோன்றி வீற்றிருந்தான் இராசராசன் துரியோதனன் என்றவாறு; அது யாங்ஙனமோவெனில்:—]

அந்தணர்சூழாம் துரியோதனனுக்கு ஆசிகூறி அறுகிடுதல்.

158.—(இ - ள்.) அந்தணர்கள் உள்ளார்கள் - பிராமணர்களாகவுள்ளவர்கள், பை ஆடு அரவு உயர்த்தோன்பால் - படமெடுத்தாடுகின்ற பாம்பின் வடிவமெழுதிய கொடியை உயரஎடுத்தவனான துரியோதனனிடத்து, ஆசி சொல்லி - ஆசீர்வாதஞ்செய்து, கொடுத்த—,கந்தம் மலர் தாளிக்கு அறுகம் புல் - வாசனையையுடைய பூக்களோடும் தாளிப்புல்லோடுங் கூடிய அறுகம் புல்,—பந்தி நிலை - (அவனது) குதிரைச்சாலையில் நிலைபெற்ற, ஐயாயிரம் குதிரைக்கு - ஐயாயிரங்குதிரைகளுக்கு, அற்றை படி ஆகும் - அன்றைத்தினத்து உணவாதற்குப் போதும்; (எ - று.)

அறுகுஇடுதல், மங்களகரமான செய்கைகளுள் ஒன்று. மிகப்பலராகிய அந்தணர் வாழ்த்துக்கூறி இவன்மேல் மலர்களையும் தாளிப்புல்லையும் அறுகம்புல்லையும் இட்டன ரென்பார், வர்ணனைவகையால், அவை ஐயாயிரங்குதிரைகளுக்கு ஒருநாளையுணவுக்குப் போதும் என்றுகூறினர்; **உயர்வுநவிற்சியணி**; வடநூலார் 'அதிசயோக்தி' என்பர்.

அந்தணர் - அழகிய தண்மையை யுடையா ரெனக் காரணப்பொருள்படும்; தண்மை - குளிர்ச்சி: என்றது, குளிர்ந்தஅருளை: அம் தண் அர் எனப் பிரியும்; தண்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய்த் தண் என நின்றது. இனி, அந்த அணவு அர் எனப்பிரித்து, அந்தத்தை அணவுபவர், அதாவது - வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பவர் என்றும் காரணப்பொருளுரைக்கலாம். இது - குளிர்ந்த அருளையும் வேதாந்தஞானத்தையும் உடைய பிறசாதியாரைக் குறியாமல் பிராமணர்க்கே சிறப்பாகவழங்குவது, காரணவிடுகுறிப்பெயர். ஆசி, பந்தி - ஆசிஸ், பங்தி என்னும் வடசொற்களின் திரிபுகள். கந்தம் - வடசொல். தாளிக்கு - தாளியோடு என நான்கனுருபு மூன்றனுருபின் பொருளில் வந்ததனால், உருபுமயக்கம். அன்று+படி = அற்றைப்படி; [நன் - உயிர் - ருச, ருரு.] ஏ - அசை. (ருஅ)

[என்பது: நாள்தோறும் காலத்தே பிராமணர் வந்து மந்திராக்ஷதையிட்டுக் கொடுக்கும் தாளிப்புல்லு துரியோதனன் வாகனமாகிய நற்பரிகள் ஐயாயிரத்துக்கும் அற்றைப்படியாம்படி கொடுத்து விப்பிரசமுகம் விளங்கித்தோன்றத் துரியோதனனிருந்த சபையகத்துக் சென்று ஸ்ரீவாசுதேவனும் யாதுசெய்தானோவெனில்:—]

எழுந்தருளின கண்ணனுக்குத் துரியோதனன் ஆசனமளித்தல்.

159.—(இ - ள்.) விண்ணவர் கோன் தான் என்ன - தேவர்களுக்கு அரசனான இந்திரன் இவன்தா னென்று சொல்லும்படி [தேவேந்திரன் போல], வீற்றிருந்த - மிக்க சிறப்போடு உட்கார்ந்திருந்த, வேந்தன்பால் - துரியோதனராசனிடத்து, மாயவனும் - கண்ணனும், மண இரந்து - (பாண்டவர்களுக்காக) இராச்சியம் வேண்டக் கருதி, வந்து இருந்தான் - வந்து சேர்ந்தான்; ஆங்கு - அப்பொழுது, வண்ணம் கரியானை கண்டு - நிறம்கரு

மையாகவுள்ள கண்ணனைப் பார்த்து, கடன் கழியா வேந்தன் - (ஆசனம் விட்டெழுதல் எதிர்கொண்டுசெல்லுதல் முதலிய) கடமைகளைச் செய்து செலுத்தாத துரியோதனராசன், அரி ஆசனம் அளித்தான் - (கண்ணன் வீற்றிருத்தற்கு ஒரு) சிங்காதனத்தைமாத்திரங் கொடுத்திட்டான்; (எ - று.)

மாயவனும், உம் - உயர்வுசிறப்பு; கதைத்தொடர்ச்சிபற்றிவந்த இறந்ததுதழுவியஎச்சமுமாம். க்ருஷ்ண னென்ற வடசொல், கருநிறமுடையவனென்னும் பொருளதாதலால், அத்திருநாமத்தின் மொழிபெயர்ப்பாக 'வண்ணங்கரியான்' என்றார். கடன் - கடம் என்பதன் இறுதிப்போலி; [நன் - எழுத்து - கூஅ.] பெரியோர் வரும்பொழுது இருப்பிடம்விட்டு எழுதல் முதலியன நல்லோர்க்குக் கடமையாதலை "இருக்கையெழலும் எதிர்செலவும் ஏனை, விடுப்பவொழிதலோடு இன்ன—குடிப்பிறந்தார், குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோடு, ஒன்றா வுணரற்பாற் றன்று" என்னும் நாலடியாரினாலும் அறிக. அரியாசனம் - சிங்கத்தின்வடிவம் தோன்றச் சித்திரித்துச் செயப்பட்ட பீடம். ஹரி, ஆஸநம் - வடசொற்கள். அரி யென்பதற்கு- (யானைமுதலிய பெரியபிராணிகளையும்) அழிக்கவல்லது என்று அவயவப்பொருள்; அரித்தல் - அழித்தல். கடன்கழியா - அரசுகொடாத என்றுமாம். இனி, கடன்கழியா என்பதற்கு - கடன்கழித்து எனப் பொருள்கொண்டு, கடமையாகச் சிறிது உபசரித்தா னென்றலும் ஒன்று. (நுகூ)

[இவ்வகை * ஸ்ரீவாசுதேவன் எழுந்தருளிச் சபாமண்டபஞ்சென்றெய்தக் கண்டு துரியோதனனும் எதிர்கொள்ளாது திவ்வியமான சிங்காதனங் கொடுத்துச் சுவாகதஞ்சொல்ல, இன்சொலுடன் சபையகத்து வீற்றிருந்தான் தேவதேவன் ஸ்ரீவாசுதேவனைக் கருதுவது. அப்பொழுது பார்மன்னர் அருகிருப்ப, இராசசமூகம் ஸ்ரீவாசுதேவனைக் கண்டு யாதுசெய்தாரோ வெனில் :—]

கண்ணன் சபையில் எழுந்தருளுகையில் அங்குள்ளார் அடைந்த நிலைமை.

160.—(இ - ள்.) கங்கை மகனும் - கங்கையின் புத்திரனான வீடுமனும், கலச யோனியும் - குடத்தைப் பிறப்பிடமாகவுடைய துரோணனும், கை முகிழ்த்தார் - (கண்ணனைக்) கைகூப்பித் தொழுதார்கள்; அம் கை வேல் வேந்தர் - அழகிய கையில் வேலாயுதத்தையுடைய அரசர்கள்பலர், அடி தொழுதார் - (கண்ணனது) திருவடிகளில் விழுந்துவணங்கினார்கள்; பொங்கு குடை கன்னன் - விளங்குகிற வெண்கொற்றக்குடையையுடைய கர்ணன், கவிழ்ந்து இருந்தான் - (ஒன்றுந்தோன்றாது) தலையிறங்கி உட்கார்ந்திருந்தான்; கால் சகுனி - செல்வாக்கையுடைய சகுனி, கை மறித்தான் - (இன்னதுசெய்வதென்று தோன்றாமல்) கையைப் பிசைந்து கொண்டிருந்தான்; (இங்ஙனமாக), மால் - கண்ணன், மன்னனிடை புகுந்தான்- துரியோதனனிடஞ் சேர்ந்தான்; (எ - று.)

வீடுமனைக் கூறினது - விதுரனுக்கும், துரோணனைக் கூறினது - கிருப அசுவத்தாமர்க்கும் உபலக்ஷணம். யாதோ ருபசாரமுஞ் செய்யலாகாதென்று துரியோதனன் கட்டளையிட்டிருந்தும், சமயத்தில் தேகம் பரவசப்பட்டதனால், கண்ணனடக்கல்அன்புடையவர்யாவரும் கைகுவித்தும் அடிவிழுந்தும் நமஸ்கரிப்பாராயினர். துரியோதனனது கருத்துக்கு மாறுபாடாக எழுந்து உபசரிக்கவும் தன்மனச்சாட்சிக்கு மாறாக எழுந்து உபசரியாதிருக்கவும் மாட்டாது, கன்னன் தலைகவிழ்ந்திருந்தான்; அல்லது,

---

* 'ஸ்ரீ வாசுதேவன் எழுந்தருளக் கண்டு துரியோதனனும் எதிர்கொண்டு சபாமண்டபஞ்சென்றெய்தித் திவ்வியமான சிங்காதனங்கொடுத்து'என்று பிரதியிலுள்ளது.

தனதுஉயிர்த்தோழனது கட்டளை சிறிதும்பயன்படாதது நோக்கி நாணித் தலைகவிழ்ந்தா னென்றுங் கொள்ளலாம். சகுனி கைமறித்தற்குக் காரணம், தனதுஉபதேசத்தின்படி இட்ட கட்டளை நிறைவேறவில்லையே யென்ற துன்பம்; இனி, 'கைமறித்தான்' என்பதற்கு - உபசரிப்பவர்களை நோக்கி வேண்டாமென்று கையசைத்துக் குறிப்புக்காட்டினா னென்று உரைத்த லும் பொருந்தும். கண்ணனைக் கண்டமாத்திரத்தில் யாவரும் தம்வச மிழந்ததனால், துரியோதனனது கட்டளை சிறிதுஞ்செல்லாது பறந்தது; விநாசகாலம் சமீபித்ததனால், ஊழ்வினைபற்றிச் சிலர்மனம் நெகிழவில்லை. துரியோதனனது அக்கிரமங்களுக்கெல்லாம் சகுனி மூல மென்பதை 'கால் சகுனி' என்று அடைமொழிகொடுத்து விளக்கினார்; நாலடியாரில் "காலாடுபோழ்தில்" என்னுமிடத்துப் போல, 'கால்' என்றது - இங்கே, சலிகையை உணர்த்திற்று: 'சாய்கால்' என்னும் உலகவழக்கையுங் காண்க. இனி, கால் சகுனி - (துரியோதனனது தீங்குக்கெல்லாம்) வழியாகவுள்ள சகுனி யென்றுமாம்; கால் - வழி.

வைதிகவிரதாநுட்டானஞ் செய்கையில் தேவர்களால் ஏவியனுப்பப் பட்ட மேனகையின் கட்டழகைக் கண்டு காதல்கொண்ட பாரத்துவாச மகாமுனிவனது விருப்பத்தால் ஒரு துரோணகும்பத்திற் பிறந்தமைபற்றி, துரோணன் 'கலசயோனி' எனப்பட்டான். 'துரோணன்' என்ற பெயர், இதுபற்றியதே. துரோணகும்பம் - பதக்கு அளவு கொண்ட பாத்திரம். கலசயோநி - வடமொழி அன்மொழித்தொகை; இப்பெயர், அகத்தியருக்கும் வழங்கும். முகிழ்த்தல் - குவித்தல். கைமுகிழ்த்தார், கைமறித்தான் - இரண்டாம்வேற்றுமைத்தொகை யாதலால், பொதுவிதிப்படி தனிஐகாரத் தின்முன் வலி மிகவில்லை; "விகாரத்தியல்பு." பொங்குகன்னன் என இயைத் தால், சீற்றங்கொண்ட கர்ண னென்று ஆகும்.

"துன்னு கங்கைமகனுந் துரோணனொடு சுதனும் நீதிபுனை விதுர னும், மன்னர்மன்னனை யொழிந்த மன்னவரும் வந்து சேவடி வணங்கினர், கன்னனுந் தலைகவிழ்ந் திருந்தனன் அழன்று உளம் சகுனி கருகினான்" என் பது, வில்லிபுத்தூரார்பாரதம். (௲0)

[என்பது: ஸ்ரீவாசுதேவன் எழுந்தருளிப் புகுதக் கண்டு ஸ்ரீவீஷ்மன் துரோணாசாரியன்உள்ளிட்ட சர்வக்ஷத்திரியரும் நமஸ்காரம் பண்ண, சகு னியும் கன்னனும் துச்சாசனனுள்ளிட்ட தம்பிமாரும் கண்டும் காணாதா ரைப்போல உதாசீனம்பண்ணியிருந்தாராகக் கருதுவது. இவ்வகையிருந் தாரையும் ஸர்வஞானங்களாற் கழல்பணிந்தாரையும் கண்களாலும் மன ங்களாலும் நமஸ்காரம்பண்ணியிருந்தாரையும் அடைவுகுலையாமல் கண் டருளி மற்று அவர்செய்தியெல்லாம் தன்திருவுள்ளக்கருத்தேகொண்டு இனிதுஉரைத்திருந்தான் ஸ்ரீவாசுதேவன் என்றவாறு. இவ்வகையிருந்த விடத்து ஸ்ரீவாசுதேவனை நோக்கி யாதுசொன்னான் துரியோதனன்:]

துரியோதனன் கண்ணனை 'நீ நேற்று என்வீட்டுக்கு நேரில்வந்து விருந்து உண்ணாதது என்?'என்றல்.

161.—(இ - ள்.) இன் அகத்து - இனிமையான மனத்துடனே, வான் நகம் - ஆகாயத்தையளாவிய (கோவர்த்தன) கிரியை, கை கொண்ட - (குடையாக எடுத்துக்) கையிற் பிடித்த, வளர் ஒளியாய் - (மேன்மேல்) வளரும் ஒளியையுடையவனே! தொல் நகர்க்கு - தொன்றுதொட்டுவரு கிற பழமையான இவ்வஸ்திநாபுரிக்கு, நின் வரவு - நீ வருதலை, கேட்டு - (நான்) கேள்விப்பட்டு, (உனக்காக), என் அகத்திலே - எனது வீட்டிலே, சுவை அமுதம் - ருசியுள்ள உணவை, சமைக்க - சமைப்பித்துச் சித்தஞ்

செய்ய, (நீ இங்குவந்துஉண்ணாமல்),மற்று அகத்து - வேறுவீட்டில் [விதுரன் வீட்டில்],(சென்று),போனகம் கைக்கொண்ட - உணவை ஏற்றுக்கொண்ட, பொருள்-காரணம், என்கொலோ-யாதோ? (எ - று.)

வில்லிபுத்தூரார்பாரதத்தில் இந்தச்சந்தருப்பத்தில் "முன்னகங்குடை கவித்த காளமுகில்" என்று கூறியுள்ளதன் குறிப்பால், இங்கு 'இன்னகத்து வானகங்கைக்கொண்ட' என்றதற்கு - இங்ஙனம்பொருள்கொள்ளப்பட்டது. இன் அகம் - பசுக்களையும் கன்றுகளையும் இடையர்களையும் இடைச்சியரையும் பாதுகாக்கவேண்டு மென்ற நல்ல எண்ணம். நகம் - வடசொல்; செல்லாதது:அசலம்;மலை. மலைகைக்கொண்ட கதை:—திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங் கூடி மழையின்பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்கென்று சமைத்த சோற்றைக் கண்ணன் அவனுக்கு இடாதபடி விலக்கிக் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லித் தானே ஒரு தேவதாரூபமாய் அமுதுசெய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய மேகங்களையேவி, கண்ணன்விரும்பிமேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையருக்கும் இடைச்சியர்க்குந் தீங்குதரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையை யெடுத்துக் குடையாகப்பிடித்து மழையைத்தடுத்து எல்லாவுயிர்களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளினன் என்பதாம். இனி, 'இன்னகத்து வானகங் கைக்கொண்ட' என்ற தொடர்—இன் - இனிய [பேரின்பந்தருகிற], அகத்து - இடத்தையுடைய, வான் அகம் - வைகுந்த உலகத்தை, கைக்கொண்ட - சுவாதீனமாகவுடைய என்றும் பொருள்படும்.

கண்ணன் தேஜோமயமான திவ்யசரீர முடைமையால், 'வளரொளியாய்' என விளிக்கப்பட்டான். சமைக்க என்பதற்கு,துரியோதனன் - ஏவுதற்கருத்தா. சமைக்க என்பது - சமைப்பிக்க எனத் தன்வினை பிறவினைப் பொருளில் வந்ததுமாம். ஏ, கொல், ஓ - அசைகள். (௬௧)

[என்பது:எம்பெருமான்!நீஇங்கு எழுந்தருளுமது கேட்டு என்னகத்திலே நினக்கு ஆன போசனஞ் சமைக்க,என்கொலோ விதுரனகத்தில் அமுதுசெய்தது? என்று துரியோதனன்கேட்க, யாதுஅருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் அதற்கு ஏற்ற விடை கூறுதல்.

162.—(இ - ள்.) செரு முனையில் - போர்க்களத்தில், மன்ன - நிலையாக, போர் செய்யும் - யுத்தஞ்செய்யவல்ல, மழ களிற்றாய் - இளமையான ஆண்யானைபோன்றவனே! மா நிலத்து - பெரிய உலகத்தில், ஒருவர் அகத்து - ஒருத்தருடைய வீட்டில், ஒருவர் - மற்றொருத்தர், உண்டு - (உணவு) புசித்து, உடுத்து - (ஆடையேற்றுத்) தரித்து, (இவ்வாறுஅவ்விருவரும்), தம்மில் - தமக்குள் [ஒருவரோடொருவர்], மருவி - கலந்து, மனம் மகிழ்வார் ஆகில் - மனமகிழ்ச்சிகொண்டிருப்பாரானால், பின் - பின்பு, அ போர் - அவர்கள்ஒருவரோடுஒருவர் எதிர்த்துப் போர்செய்வது, தக்கதோ - தகுதியானதோ? [அன்று என்றபடி]; பேசு - (நீ) சொல்லு; (எ - று.)

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை', 'உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கலாகாது', 'அன்னமிட்டவீட்டிற் கன்னமிடலாமா' என இப்படிப்பட்ட நீதிக்கு மாறாக ஒருத்தர்வீட்டில் உண்டுபின் அவருடனே பகைமை பாராட்டி யெதிர்த்துப் போர்செய்யத் தொடங்குவது சிறிதுந்தகுதியன்றாதலால், நீ சமாதானத்தில் அரசுகொடாவிடின் உன்னுடன் போர்செய்யத் துணிந்த பாண்டவர்களது தூதனும் துணைவனு மான நான், உன்வீட்டில் வந்து தங்கி உண்டு உறவுகொண்டாடவில்லை என்பதாம்; "பஞ்சவ ருரைக்க

வந்த தொரு தூதன் யான், நின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன் மறுக்க வெண்ணுவது நீதியோ'', ''ஒருவர்வாழ்மனையி லுண்டு பின்னு மவருட னழ ன்று பொர வுன்னினும், இரவியுள்ளளவும் மதியமுள்ளளவு மிவர்களே நரகி லெய்துவார்'' என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தை யுணர்க.

பதினாறுவகையுபசாரங்களுள் அமுதமேந்தல்போல ஆடைசாத்தலும் ஒருபசார மாதலாலும், ஒருவரைக் கௌரவித்து விருந்துஉண்பிக்கையில் அவர்க்கு ஆடைதருதலும் மரபாதலாலும், உண்டலோடு உடுத்தலுங் கூறப் பட்டது. செருமுனை - போர்செய்யுமிடம். மன்னப் போர்செய்யும் - இடை விடாமல் நெடும்பொழுது சோர்வின்றிப் போர்செய்யவல்ல என்றபடி. பலத் திலும், மேன்மையான தோற்றத்திலும், கோக்கோபமுடைமையிலும், யானைஉவமை. களிற்றாய்-யானைச்சேனையுடையவனே யென்றுங்கொள்ளலாம்.

ஒருவர் என்பது - சொல்நிலையால் விகுதிக்குஏற்பப் பன்மையாயினும், பொருள்நிலையால் பகுதிக்குஏற்ப ஒருமையையே குறிக்கும். மழ - இளமை யுணர்த்தும் உரிச்சொல்; ''மழவுங் குழவும் இளமைப் பொருள'' என்பது தொல்காப்பியம். மழகளிறு - உரிச்சொற்புணர்ச்சியாதலால், வருமொழி முதல்வலி பொதுவிதிப்படி இரட்டாமல் இயல்பாயிற்று; [நன்-மெய்-௩௬.] களிறு - யானையின் ஆண்மைப்பெயர்; (இதன் பெண்பால் - பிடி.) களி - மதக்களிப்பு: அதனையுடையது, களிறு எனக் காரணக்குறியாம்; இதில், று - பெயர்விகுதி: ஒன்றன்பால்விகுதி யன்று; பால்பகாஅஃறிணையாதலால். ஒரு வர் மனம் மகிழ்வர் - ''உயர்திணைதொடர்ந்தபொருள்முதலாறும், அதனொடு சார்த்தின் அத்திணைமுடிபின'' என்பதனால் வந்த திணைவழுவமைதி. பின் னப்போர் என்பதை - பின்னம் போர் எனப் பிரித்து, மாறுபட்டுச்செய்யும் போ ரென்றலும் ஒன்று; அப்பொழுது, பிந்நம் - வடசொல். (௬௨)

இதுவும்அது.

163.— [அன்றியும்], (இ - ள்.) மல் ஆர் தோள் - வலிமை மிக்க தோள்களையுடைய, மன்ன - அரசனே! அன்பின் இடும் சோறும் - அன் போடு இடப்படுகிற உணவும், ஆபத்து இடும் சோறும் - ஆபத்துக்காலத் தில் இடப்படுகிற உணவும்,(என்று), இன்பமுடன் சோறு இரண்டே உண்டு - இன்பத்தோடு (உண்ணத்தக்க) உணவு இரண்டே உள்ளன; அன்பின் நிலை இல்லாத உன் அகத்து - அன்பின்நிலைமையில்லாத உனது வீட்டில், யான் - (ஆபத்துஒன்றுமில்லாத) நான், மதித்து - விரும்பி, உண்ணும் ஆறு - அமுது செய்யும்விதம், எங்ஙனே - எவ்வாறோ? (எ-று.)

ஒருவன் மற்றொருவனால் அன்போடுஇடப்பட்ட சோற்றை உண்ண லாம்; அங்ஙனம் அன்போடு இடப்படாததாயினும், தனக்கு வேறுவகையால் உணவுகிடைக்காத ஆபத்துக்காலமாயின் அப்பொழுது அதனைத் தன் உயிர் காத்தற்பொருட்டு உண்ணலாம். உனக்கு என்னிடம் அன்புமில்லை; எனக்கு அப்படிப்பட்ட ஆபத்துமில்லை. இங்ஙனமிருக்கையில், உன்வீட்டில் நான் உண் ணுவது எப்படி? என்பதாம். ஏ - ஈற்றசை.

அன்பின், இன் - ஐந்தனுருபு, ஏதுப்பொருளது. ஆபத் - வடசொல்; துன் பம். முதலிரண்டடிகளில் எண்ணும்மை, 'இரண்டு' என்னுந் தொகை பெற் றது. நிலை - நிலைமையென்னும் பண்பினடி யென்றுமாம்; நில் என்னும் பகுதி யின்மேல் ஐ - தொழிற்பெயர் விகுதி யென்றுமாம் கொள்க. இல்லாத என்ற எதிர்மறைப்பெயரெச்சத்தில், இல் - என்னும் பண்படிப்பகுதியே எதிர் மறைகாட்டியதனால், ஆ-சாரியை; செய்யாத, நடவாத முதலியவற்றிற்போல, ஆ - எதிர்மறையிடைநிலை யன்று. எங்ஙன் எங்ஙனம் என்பதன் விகாரம்.(௬௩)

[என்பது: நீங்கள் இராசதன்மமேவிரும்பி வெகுமதராய்ச் சாதுக்களை யும் சம்பந்திகளையும் இகழ்ந்துவாழ்கையாலும், முன்னாள் வஞ்சனையாய்ச் சூதாடிய ஞான்று தருமபுத்திரனுக்குப் பன்னிரண்டுவருஷங் காடுறைந்து ஒரு வருஷங்கரந்துறைந்து பதின்மூன்றுங் கழித்தால் உங்கள் இராச்சியம் வாங் கிக்கொள்ளக்கடவீரென்று பேசியபடியே தருமபுத்திரனும் பிராதாக்களும் அருங்கானமுறைந்து அதிகிலேசப்பட்டுச் சமயவிரோதஞ்செய்யாமலோட்டின நாள் கழிந்துவந்து வெளிப்பட்டுத் தங்களுரிமைவேண்டக் கொடாதுவிவ ஸ்தையொழிந்து நீதிமார்க்கங்கெடப் பேசுகையாலும், உங்களகத்துஉண்ணு மது தருமமன்றுகண்டாய்; ஆதலால், விதுரனுவான் ஸர்வஞானியுமாய்ச் சாதுமார்க்கம்வழுவாமல் சர்வப்பிராணிகளையும் இகழாமல் இல்வாழ்க்கையும் இராசதருமமும் உடையவனுயிருப்பானுகையாலும், தருமபுத்திராதிகளு க்குத் தூதாய் உள்பக்கல் பூமிவேண்டிவருகையாலும், வந்தகருமம் முற்று மையாலும், விதூரராசன் உங்கட்கும் மற்றவர்க்கும் சமனுனபிதாவாகை யாலும், அவன்கிருகத்திலே போனகங்கொள்ளுமது கேட்டார்க்கும் யோக் கியமாங்கண்டாயாதலால், அங்கும் உன்னைதன்றோ அடிசில் என்று இவ்வ கை ஸ்ரீவாசுதேவன் அருளிச்செய்ய, கேட்டுப் பின்னும் யாதுசொன்னான் துரி யோதனன்:]

துரியோதனன் கண்ணனை 'நீ வந்தகாரியம் என்?' என்றல்.

164.—(இ - ள்.) எழில் - அழகிய, உருவும் - ஊடுருவிச்செல்லுந்தன் மையுள்ள, மின் போந்த வேலான் - மின்னல்போன்றவொளி பொருந்திய வேலா யுதத்தையுடைய துரியோதனன், (கண்ணனைநோக்கி), 'ஆயனே - இடைச் சாதியில் வளர்ந்தவனே! அச்சுதனே - திருமாலின் அம்சமானவனே! அற்பு தனே - ஆச்சரியகரமான செய்கைகளையுடையவனே! தற்பரனே - எல்லாவ ற்றினும் மேலானவனே! மாயனே - மாயையுடையவனே! வையகத்து மன் உயிர்க்கு - உலகத்தில் நிலைபெற்ற பிராணிகளுக்கு, தாயனே - தாய்போன் றவனே! போந்த ஆறு - (நீ இங்கு) வந்த விதம், என் - என்ன?' என்று விரை ந்து உரைத்தான் - என்று துரிதமாகச்சொல்லி வினவினான்; (எ - று.)

அத்புதன், ரூபம் என்ற வடசொற்கள் திரிந்தன. வையகம் - (பொருள் களை) வைக்கும் இடமெனக் காரணப்பெயர். மன்உயிர் - வினைத்தொகை; உடம்பு அழிய உயிர் அழியாது நிலைபெறுதலால், 'மன்னுயிர்' எனப்பட்டது: பரமாத்மாபோலவே சீவாத்மாவும் நித்தியப்பொருளென்பது சித்தாந்தம்.

[என்று இவ்வகை துரியோதனன் சொல்ல, கேட்டு யாது அருளிச்செய் தான் ஸ்ரீவாசுதேவன்:]

அதற்குக் கண்ணன் விடைகூறுதல்.

165.—(இ - ள்.) கட்ட - உறுதியையுடைய, கரும்பு - கரும்புகள், அழி - நெருக்குண்பதனாலாகிய, சாறு - இரசம், ஆலை - ஆலைகளில், கமழ் - வாசனைவீசப்பெற்ற, நாடா - குருநாட்டையுடையவனே! ஒட்டிய காலம் - (முன்பு உங்களிடம் தருமன் கழிப்பதாகப்) பிரதிஜ்ஞைசெய்த பதின்மூன்று வருஷங்கள், கழிந்தன காண் - கழிந்துவிட்டனவன்றோ? (இனிமேலும்), காவலன்தன் ஒட்டிய வாட்டம் ஒழியீரேல் - தருமராசனுக்குப் பொருந் திய துன்பத்தை (அரசுகொடுத்து) ஒழித்திடீராகில், (அது), கேட்டால் பெரு பழி தான் ஆகாதோ - (நல்லோர்) கேட்குமிடத்துப் பெரியபழிப்புக்கு இடமாகாதோ? பேசு - (நீ) சொல்லு; (எ - று.)

காலம் - வடசொல்; இப்பொதுப்பெயர் - சிறப்பாய், இங்கே, வருஷத் தையுணர்த்திற்று: இது, பால்பகாவஃறிணைப்பெயராதலால், 'கழிந்தன' என் னும் பன்மைமுற்றைக் கொள்ளும். காண் - ஏவலொருமைவினை; இடைச்

சொல்தன்மைப்பட்டுத் தேற்றப்பொருளுணர்த்தியது. வாட்டம் - வாடு என்னும்பகுதி அம்விகுதிபெற்ற தொழிற்பெயர்;ட்- விரித்தல். இங்கே, கண்ணன் தருமனை'காவலன்' என்றசொல்லாற் குறித்தது, மூத்தவனும் வனவாச அஜ்ஞாதவாசங்கழித்தவனுமான அவன் அரசாட்சிக்குஉரியவ னென்பதைக் குறித்தற்கு. ஒழியீர் என்ற பன்மை, கர்ணன் சகுனி துச்சாதனன் முதலியோரையும் உளப்படுத்தும். ஒழியீர் -பிறவினை முன்னிலையெதிர்மறைமுற்று. கட்ட - கட்டு என்னும் பகுதியின்மேற் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். இதற்கு - சுமையாகவுள்ள என்றும், கணுக்களையுடைய என்றும் பொருள்கொள்ளலாம். பிடுங்கப்பட்ட என்று பொருள்கொள்ளுமிடத்து, கட்ட - தெரிநிலைப் பெயரெச்சம்: கள் - பகுதி, ட் - இறந்தகால இடைநிலை. அழிசாறு - வினைத்தொகை; காரணப்பொருளில் வந்தது. சாறு - ஸாரம் என்னும் வடசொல்லின் சிதைவு. கமழ்நாடு - வினைத்தொகை, இடப்பெயர்கொண்டது. இவ்வடைமொழி,நாட்டின் நிலவளத்தை உணர்த்தும். பழி - லோகநிந்தை. ஆகாதோ - இரண்டு எதிர்மறை உடன்பாட்டை யுணர்த்தி, ஆகுமே என வற்புறுத்தும். மொழியீரெனப் பிரித்து உரைத்தல்,மோனைக்குச் சிறவாது.(கூரு)

[என்பது: விவஸ்தைஒழியாமல் சமயவிரோதஞ்செய்யாமல் முன்னம் பேசியபரிசே ஆரணியமுறைந்து அதிகிலேசப்பட்டு வந்து தம்உரிமைவேண்டிய தருமபுத்திரனுக்கு இராச்சியங்கொடாமல் மறுத்துஉரைக்குமது கேட்டார்க்கு நீதிமார்க்கமாகாது; அதுநிற்க, அர்த்தராச்சிய மாயினுங் கொடுத்து உன்பிராதாக்களான தருமபுத்திராதியரை அழைத்துக்கொள்வாயாக என, கேட்டு உடன்படாது கதுமென யாதுசொன்னான் துரியோதனன்:]

துரியோதனன் கண்ணனைநோக்கி 'சிறிதும் அரசுதரமாட்டேன்'என்றல்.

166.—(இ - ள்.) செயிர் முனைக்கண் - போர்செய்யுமிடத்திலே [யுத்தகளத்திலே], நிற்பான் - (பின்னிடாது) நிற்பவனான துரியோதனன், செயிர்த்து - கோபங்கொண்டு, (கண்ணனை நோக்கி), 'மன்னவனே - அரசனே! ஆண்டு எல்லாம் கழிந்திடுக - (கழியவேண்டிய) வருஷங்களெல்லாம் கழிந்திடட்டும்; கட்டு அவதி - (முன்) உறுதியாகஏற்படுத்திய வரையறை, ஓட்ட ஒழிந்திடுக - முழுவதுந் தவறிவிடட்டும்; வாள் அமரே ஆக - ஆயுதங்களைக் கொண்டு செய்யும் போர் நேரினும் நேரட்டும்; ஒழிந்து - (நான் முன் புரோகிதனிடஞ் சொன்ன வார்த்தையை)மாறி, மயிர்முனைக்கும் மண் கொடேன்-மயிர் நுனியினளவுக்குங்கூட [ஒருமயிர்நாட்டுதற்கும் என்றபடி], இராச்சியத்தி லிடந்தரமாட்டேன்,' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

இது,துரியோதனனது அநீதிவிடாப்பிடியை நன்கு உணர்த்தும். அவதி-வடசொல். ஓட்ட - அடியோடு என்றபடி. இவ்வாறு கூறுதற்குக் காரணம் போர்வலிமைச்செருக் கென்பார், 'செயிர்முனைக்க ணிற்பான்' என்றார். இனி, 'செயிர் முனைக்கண் நிற்பான்' என்பதற்கு - துன்பமுடிவிலே நிற்பவனான துரியோதன னென்று உரைத்தல், மிகப்பொருத்தமாம்; "விநாசகாலே விபரீதபுத்தி:" என்றபடி, துன்புறவேண்டியிருத்தலால் இங்ஙனங்கூறினனென்க. வாள் - மற்றைஆயுதங்களுக்கும் உபலக்ஷணம்; சிறப்புப்பெயர் பொதுப்பொருளை உணர்த்திற் றென்னலாம். என்றான் என்ற சொல்லுக்கு - என்றுசொன்னான் என்று பொருள்கொள்ளுதலை, 'சொல்லெச்சம்' என்பர் இலக்கணநூலார். முனைக்கண், கண் - ஏழனுருபு. முனைக்கும், உம் - இழிவுசிறப்பு. செயிர்த்து - வைரம்பாராட்டி. (கூசு)

[என்று, பின்னுஞ் சொல்வான் துரியோதனன்.]

இதுவும் அது.

167.—(இ - ள்.) ஒரு குடைக்கீழ் - ஒற்றைவெண்கொற்றக்குடையின்கீழ் (இருந்து), பார் ஆளும் - பூமியை அரசாளுகிற, மன்னர் - அரசர்கள், பணிகின்ற - வணங்குகிற, பைங் கழலாய் - பசுமையான வீரக்கழலுடைய பாதத்தையுடையவனே! மருவலர்க்கு - பகைவர்களுக்கு, பொருள் கொடுப்பர் எனும் - செல்வங்கொடுப்பவருளராயினும், புகும் இடமது ஆக - வந்துதங்குமிடமாகும்படி, மண் கொடுப்பார் - (அவர்களுக்கு) இராச்சியங் கொடுப்பவர், இல்லை - (உலகத்தில் எவரும்) இல்லை; (அங்ஙனமிருக்க, நீ), உது - கீழ்வந்த (அரசுகொடுத்தலென்ற) வார்த்தையை, ஓராது சொன்னாய் - ஆலோசனையில்லாமற் கூறினாய்; (எ - று.)—சொன்னது தகுதியன்று என்றபடி.

உலகத்தில் அரசர் பகைவர்க்குப் பொருள்கொடுப்பாராயினும் பூமி கொடார் என்பது, முன்னிரண்டடியின் கருத்து. கொடுப்பரேனும், உம் - இழிவுசிறப்பு; அன்றியும், 'பொருள்கொடுப்பரேனும்' என்றதனால், பொருள் கொடுத்தலும் அரிது என்பது தோன்றும். இனி, இதற்கு - பகைவர் பொருளை விலையாகக் கொடுப்பராயினும் அவர்களுக்கு அரசர் வந்துதங்கி அரசாள நாட்டைக் கொடுத்திடார்[அங்ஙனமாக,சும்மா நாடுதருவர்களோ?] என்றும் பொருள்கொள்ளலாம். இங்ஙனம் பகைவர்க்கு அரசுகொடாத காரணம், அவர்களுக்கு ஆதாரம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் செழித்துப் பின்புஒருகால் நமதுஅரசையுங் கைப்பற்றிவிடக்கூடுமென்பது. பலஅரசர்களைக் கீழ்வைத்து ஆளுகிற உனக்கு இதுதெரியாதோ என்பான், 'ஒருகுடைக்கீழ்ப் பாராளு மன்னர் பணிகின்ற பைங்கழலாய்' என்றான். மருவலர் - சேராதவரென்று பொருள்; எதிர்மறை வினையாலணையும்பெயர்: மருவு - பகுதி, அல் - எதிர்மறையிடைநிலை, அர் - பலர்பால்விகுதி. (நண்ணலர், ஒன்னலர், துன்னலர், பொருந்தலர், சேரலர், கூடலர் என்பனவும் இத்தன்மையன.) 'பசும்பொற்கழல்' என்பார், 'பைங்கழல்' என்றார்; பண்புப்பெயர் ஈறுபோய் இடைநின்ற உயிர்மெய்யுங் கெட்டு அடிஅகரம் ஐகாரமாய் இன மெலி மிக்கது. கழல் - வீரர்கள் தமதுவீரத்துக்கு அறிகுறியாக வலக்காலிலணிவதோர் ஆபரணம். பைங்கழல் - பாதத்துக்கு, பண்புத்தொகையன்மொழி. உது - உகரச்சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற்பெயர்; இங்கே, உகரச்சுட்டு - கீழ்வந்ததைக் குறித்தது. (கூள)

[இவ்வகை வெகுளியெய்தி மற்று அவர்க்கு இராச்சியங்கொடுப்பதற்கு ஒன்றுங்கருதாது நீஉரைத்தமையால் யான் அவர்க்கு மயிர்முனைக்கும் மண் கொடேன் என்று பார்வேந்தன் சொல்ல, கேட்டு யாதுஅருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் துரியோதனனுக்கு நீதிகூறுதல்.

168.— (இ - ள்.) குரு குலத்தார் கோவே - குருவம்சத்தாருள் தலைவனாகவுள்ளவனே! தன் உரிமை எல்லாம் - தனக்குஉரிய அரசாட்சிச்செல்வம் முழுவதையும், தன் சிறு அவ்வை தான் பயந்த மன்னவனுக்கு-தனது சிறிய தாய் பெற்ற புத்திரனுக்கு, ஈந்தான்-கொடுத்தவனான, இ வாள் வேந்தன் - ஆயுதப்பயிற்சியில்வல்ல இந்த வீடுமராசன், நின்னோடு ஒரு குலத்தில் தோன்றினான் அல்லனோ - நீபிறந்தகுலத்திலேயே பிறந்தவனல்லனோ? சொல் ஆய் - (நீ முன்புசபையிற்சொன்ன) உறுதிமொழியை ஆராய்ந்துபார்; நீ—, கூறு - ஏற்றபடி சொல்லு; (எ - று.)

சிற்றவ்வை - பரிமளகந்தி. மன்னவன் - சித்திராங்கதன், விசித்திரவீரியன். முதல்மனைவியாகிய கங்கை வீடுமனைப்பெற்றுச் சந்தநுவை விட்டுநீங்

இனபின், சந்தநு செம்படவன்வளர்த்தமகளாகிய பரிமளகந்தியென்பவளைக் கண்டு காமுற்று மணம்பேச, அவள்தந்தை 'மநுநீதிமுறைமைப்படி மூத்த மனைவியின்குமாரன் அரசாள, என்மகளுக்குப்பிறக்கும்பிள்ளை அரசின்றிக் கீழ்மைப்பட்டுநிற்பா னாதலால், நான் உனக்கு மகளைக் கொடேன்' என்று சொல்ல, அதனையறிந்த பீஷ்மன், தந்தைக்கு மணஞ்செய்வித்தற்பொருட்டு, தான்மணஞ்செய்துகொள்வதில்லை யென்றும், மூத்தவனாய்ப் பட்டத்துக்கு உரிய தனது இராச்சியத்தையும் மற்றையெல்லாச் செல்வங்களையும் தனக்குச் சிறியதாயாக வருமவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கே கொடுப்பதாகவும், இங்ஙனம் ஒழித்தற்கரிய மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்னும் மூவகையாசையையும் இளமையிலேயே ஒழித்துக் கேட்போர்அஞ்சும்படியான சபதத்தைச் செய்து, அம்மகளைத் தந்தைக்கு மணஞ்செய்வித்து, பின்புஅவளுக்குப்பிறந்த சித்திராங்கதன் விசித்திரவீரியன் என்பவர்க்கே முன்னையவாக்குப்படி அரசாட்சியைக் கொடுத்தா னென வரலாறு அறிக. வீடுமன் தன் தம்பிய ரிருவருள் மூத்தவனான சித்திராங்கதனுக்கு முதலில் இராச்சியபட்டாபிஷேகஞ் செய்விக்க, அவன் அப்பெருள்ள ஒருகந்தருவனால் பகைமைகொண்டு வலியக் கொல்லப்பட்டு இளமையிலேயே இறந்திட, மீண்டும் வீடுமன் விசித்திரவீரியனுக்கு முடிசூட்டினனென்ற சரித்திரத்தின் உள்விவரத்தைக் குறித்து, 'மன்னவனுக்கு' என ஒருமையாற் குறித்தது. தமையனான தனக்கு உரிய செல்வங்களையெல்லாம் தன்தம்பியர்க்குக்கொடுத்து உறவுமுறைபாராட்டிய உத்தமகுணமுடையவன் உதித்த குலத்திற் பிறந்த நீ, உன்னிலும் மூத்தவனான தருமனது அரசை வலியக் கவர்ந்ததுமன்றி, முன் வாக்குத்தத்தஞ்செய்தபடி வனவாச அஞ்ஞாதவாசங்கழித்துத் தூதனுப்பிக் கேட்டபின்பும் கொடாதொழிவது, நீதியன்று என்பதாம். "தந்தை காதலுறு தன்மை கண் டிளையதாய்பயந்தவிருதம்பியர்க்கு, இந்தவாழ்வு மரசுங் கொடுத்தவனு நின்குலத்தொருவ னிங்குளான், முந்த மாநிலமனைத்தினுக்கு முயர்முறைமையா லுரிய வரசருக்கு, ஐந்துமாநகரு நீகொடா தொழியின் என்னதாகு முனதரசியல்" என்ற வில்லிபுத்தூரார் பாரதத்தை உணர்க. வீடுமன் விசித்திரவீரியனுக்கு அரசுகொடுத்தது, தனக்குப் பராக்கிரமமில்லாமையால் அவனுக்கு அஞ்சி யன்று, இஷ்டத்தினாலேயேகொடுத்தது என்பதை விளக்குவார், 'வாள்வேந்தன்' என்றார்.

உரிமை - உரியபொருளுக்கு, பண்பாகுபெயர். சிறுமை+அவ்வை= சிற்றவ்வை; பண்புப்பெயர் ஈறுபோய்த் தன் ஒற்று இரட்டிற்று. அவ்வை - ஔவை யென்பதன் முதற்போலி; [நன் - எழுத்து - ௧௨.] பயந்த, பய - பகுதி. இவ்வாள்வேந்தன் உரிமையெல்லாம் சிற்றவ்வைபயந்த மன்னவனுக்கு ஈந்தான்: (அங்ஙனமே தருமனும்) நின்னோடு ஒருகுலத்தில் தோன்றினவனல்லனோ? என்றுகருத்துப்பட வுரைத்தல், தருமனது பாத்தியதையை விளக்காமையால், சிறவாது. குருகுலத்தாருள் தற்காலத்தில் அரசாள்பவன் துரியோதனனே யாதலால், 'குருகுலத்தார்கோ' எனப்பட்டான். குரு+குலம்=குருகுலம்; "ஆவி ய ர முன் வன்மை மிகா" என்றதனால், உயிரீற்று உயர்திணைப்பெயர் முன் வலி இயல்பாயிற்று; இதற்கு, "இடை யுரி வடசொலி னியம்பிய கொளாதவும்" என்ற விதி கூறலாகாது: அப்புறனடைச்சூத்திரம் பொதுவிதிக்கு மாறுகப் புணருமிடத்துக்கே உரிய தாதலால்.

சொல் ஆய் குருகுலத்தார் கோவே என எடுத்து, சொற்களால் ஆராய்ந்துபுகழப்படுகிற குருகுலத்தாரது தலைவனே யெனினுமாம். இப்பாட்டுத் திருதராட்டிரனைநோக்கிச் சொன்னதென்றல், வசனத்தோடு பொருந்தும்.()

[என்பது: திருதராஷ்டிரனை நோக்கி ஸ்ரீவாசுதேவன் சொல்லுவான்: நின்வங்கிசத்து ஜ்யேஷ்டனாயினானதலால், அவனுரிமை முன்னம் பேசிய பரிசே மற்று அவன் உரிமைபெறுமாறு நின்புத்திரனுக்குச் சொல்லி நின் தம்பிமகன் தருமபுத்திராதிகள் நீயுமுண்டாயிருக்க இராச்சியம்பெறாது போகாமல் அவனுரிமைபெறுமாறு மன்னவனே! சொல்லுவாயாக என்றும், தன் சிறியதாய்மகனுக்குக் குருவங்கிசம் உல்லங்கியாமல் இராச்சியம்முழுவதுங் கொடுத்துப் பிரமசாரியாய் வாழ்கின்ற ஸ்ரீபீஷ்மவங்கிசத்து உள்ளாயிருந்து தருமபுத்திராதிகளுக்குத் தம்உரிமை கொடாது மறுத்துஉரைத்தால் உன்புத்திரர்களுக்கும் மித்திரபாந்தவத்தார்க்கும் நிச்சயமே வீமார்ச்சுனர்பிரதிக்கினையாலும் தருமபுத்திரன்பொறையினாலும் பழிபாவம்வினையுங் கண்டாய் என்றும், தேவராசன் அருளிச்செய்ய, கேட்டுப் பேசுவதொன்றில்லாதிருந்த திருதராஷ்டிரனையும் ஸ்ரீவாசுதேவனையும் நோக்கி யாதுசொன்னான் துரியோதனன்:]

துரியோதனன் 'வலியரானுற் போர்செய்து அரசுபெறுக' என்றல்.

169.—(இ-ள்.) ஒலி ஆர் - ஓசை மிக்க, நல் நாடன் - சிறந்த நாட்டையுடைய துரியோதனன், —உடன்று - கோபங்கொண்டு,—'உரிமை - (இவ்விராச்சியத்தில்) பாத்தியதை, இருவர்க்கும் ஒக்கும் - (எனக்கும் தருமனுக்குமாக) இரண்டுபேருக்கும் ஒத்திருக்கும்; (ஆயினும்), நாடு ஒன்றை இருவர் உடன் ஆண்டாரும் இல்லை - ஒருதேசத்தை இரண்டுபேர் சமமாக (ப்பாகித்து) அரசாண்டவர் யாரும் இல்லை; வலியார் - பலமுள்ளவர், செருவில் வலியார் ஆய் - போரில்வலிமைகாட்டியவராய் [மற்றையோரை வெற்றிகொண்டவராய்], மண் ஆள்வது - இராச்சியத்தை ஆளுவதே (மரபு),' என்றான் - என்று சொன்னான்; (எ-று.)

திருதராட்டிரன் பாண்டு என்ற இரண்டுஞாதிகளுள் மூத்தவனாதலால் இராச்சியத்துக்கு உரியவனான திருதராட்டிரனது புத்திரனாதல் பற்றியும், பதின்மூன்றுவருஷத்துக்கு முன் சூதுபோரில் தருமனை வென்று கொண்டதுபற்றியும் தனக்கும், அரசாண்ட பாண்டுவின் குமாரனாதலாலும், தன்னினும் பிராயத்தில் முதிர்ந்தவனாதலாலும் தருமனுக்கும் இராச்சியத்தில் பாத்தியதை உண்டென்பதை உடன்படுவான், 'உரிமையிருவர்க்கு மொக்கும்' என்றான். அன்றி, முன்பு திருதராஷ்டிரன் தனக்கும் தருமனுக்கும் இராச்சியபாகங் கொடுத்ததுபற்றிக் கூறினனுமாம். ஆயின், இரண்டுபேர்க்கும் உரிமையொத்த நாட்டைப் பாகஞ்செய்துகொண்டு அரசாளத் தடையென்ன வென்றால்,—க்ஷத்திரியரில் அரசாட்சியைப் பங்கிட்டுக்கொண்டு ஆளும் வழக்கம் இல்லை; வலியவர் வலிமையால் வென்று முழுவதையும் தனியே ஆளுதலே வழக்கம்: அந்தப்படியே நான் சூதில் தருமனை வென்று ஆண்டுவருகிறேன்; அவர்களுக்கு வலிமையுண்டானால், போரில் என்னை வென்று ஆளுக என்று முடிவுகூறினன். "பார் வீரரானவர தல்லவோ வுரிமைவேண்டுமோ வென விளம்பினன்" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம்.

ஒக்கும் என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு, நாட்டுக்கு அடைமொழியாக்கி முன்னிரண்டடியையும் ஒரேவாக்கியமாகவுரைத்தலும் ஒன்று. ஆள்வது - தொழிற்பெயரே வினைமுற்றின் தன்மைப்பட்டது; வியங்கோள் முற்றெனினுமாம். ஆண்டாரும், உம் - இழிவு சிறப்பு; எச்சப்பொருளுமாம். உடன்று, உடல் - வினைப்பகுதி. ஒவ்வோரிடத்தையும் வருணிக்கும்பொழுது, ஆங்காங்குப் பலவகையோசைகள் உள்ளன வென்று கூறுதல் கவிகளியல்பாதலால், 'ஒலியார் நன்னாடன்' என்றார். ஒலி - புகழுமாம். நாட்டுக்கு, நன்மை - நில்வள நீர்வளங்களை யுடைமை முதலியன. (சுகூ)

[என்பது: இரண்டுதிறத்தோர்க்கும் முன் உரிமை ஒக்கும்; அதனில் தருமபுத்திரன் உரிமை சூதாடித் தோற்றனனென்று தந்தான்; அதுவேண்டுமிடத்து யுத்தம்பண்ணிக் கொள்ளக் கடவது என்று துரியோதனன் சொல்ல, கேட்டு யாதுஅருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் 'ஐந்து ஊராயினுங் கோடு' என்றல்.

170.—(இ - ள்.) முழுது உடையான் - (மூத்தவனாதலால்) இராச்சியம்முழுவதுக்கும் உரிமையுடையவனான தருமன், பாகம் பெறான் ஆகில் - பாதிராச்சியத்தையேனும் பெறாதொழிவனானால்,—முற்றும் ஒழிய - (இராச்சியம்) முழுதும் (அவனுக்கு) இல்லாதபடி, உகந்தனையே ஆகில் - (நீ) விரும்பினையேயானால்,—பழுது இல் அடிப்பாடு - குற்றமில்லாத நல்லொழுக்க வழியையும், பைங் கழல் கால் - பசிய வீரக்கழலைத் தரித்த பாதத்தையுமுடைய, ஐவர்க்கும் - பாண்டவர்ஐந்துபேருக்கும், ஐந்து குடிக் காடும் நல்குதியோ - குடியிருத்தற்கு ஐந்து கிராமங்களையாயினும் கொடுப்பாயோ? கூறு - சொல்லு; (எ - று.)

தருமன் அரசுபெறாமல் முழுவதும் நீயே அரசாள விரும்புவையாயினும், பாண்டவரைவர்க்கும் வசித்தற்கு ஐந்து ஊர்களையாயினும் கொடுத்திடுவா யென்பதாம். அடிப்பாடு என்றசொல், நடப்பவரடிகள்படுதலையுடைய தென்ற காரணத்தால், முதனிலைதிரிந்த தொழிலாகுபெயராய் வழியை உணர்த்தும்; அது, இங்கே, ஒழுக்கத்தைக் குறித்தது: நல்வழி, நன்னெறி, சன்மார்க்கம் என்பனபோல. இனி, அடிப்படுதல்=அடிப்பாடு; அதாவது - தொன்றுதொட்டு வரும் முறைமை யென்றுங் கொள்ளலாம். ஐவர் - தொகைக்குறிப்பு. குடிக்காடு - மருதநிலத்து ஊரின் பெயர்; "பூக்கம் துடிக்காடு பூரியம் உறையுள், பாக்கம் அருப்பம் அகலுள் பதியே, கோட்டம் வசதி தாவளம் நியமம், வாழ்க்கை தண்ணடை மருதநிலத்து ஊர் பெயர்" என்ற திவாகரத்தை அறிக. குடிக்காடு - குடிகளின்தொகுதியையுடைய தென வேற்றுமைத்தொகை யன்மொழியாகிய காரணப்பெயர்; இதில், காடு-திரள்: 'தாமரைக்காடு' என்பதிற்போல. இனி, குடிகளையுடைய காடுபோன்ற எளிய கிராமம் என்றலும் ஒன்று. ஐந்து கிராமங்களின் பெயர், வசனத்தால் விளங்கும். (எ0)

[என்பது: இராச்சியம்முற்றும் ஆளஉரியவனுக்குத் தன்உரிமையிற் பாதி கொடாயாகில், **குசஸ்தலமும், மிருகஸ்தலமும், வருணபதியும், வரசந்தியும், சயசந்தியும் என்பன பஞ்சகிராம**மாயினுங் கொடுத்து மற்று உன்பிராதாக்களை யழைத்து நின்னாற் செய்யத்தக்கனவெல்லாம் பொறுத்தி யெனப் பேசி மனம்மகிழ்ந்துஉரைத்து மற்று அவரையும் உடன்கொண்டு சேவை பண்ணுங் கருத்து உண்டோ பார்வேந்தே! உனக்கு? என்று ஸ்ரீவாசுதேவன் அருளிச்செய்ய, கேட்டு உடன்படாது வேறுபேசிய துரியோதனனை நோக்கி யாதுஅருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

இதுவும்அது.

171.—(இ - ள்.) மன்னவனே - அரசனே! ஐவர்க்கும் - பாண்டவர் ஐந்துபேருக்கும், ஐந்து ஊர் கொடுத்து - (நீ) ஐந்து ஊரைக் கொடுக்க, ஆங்கு - அதனால், அவர் ஒருமை - (உனக்கு) அவர்களோடு ஒற்றுமை, மெய் பெற்றது ஆகின் - உண்மையாக நிலைபெறுமானால், வையகத்தில் - பூலோகத்தில், மிக இனிது ஆம் - (அது உனக்கு) மிகவும்இனியதாம்; (அங்ஙனங் கொடுத்துச் சமாதானப்படாமல்), மாறு ஆம் என கருதின் - (கொடுத்தல் உன் கருத்துக்கு) விரோதமா மென்று எண்ணி மறுத்தால், அவர் - அப்பாண்டவர், மற்று - (சமாதானத்தினும்) வேறாகிய போர்வழியால், உன் கூறு ஆள்

வார் - (உன்னை வென்று தங்கள்பாகத்தோடு) உனதுபாகத்தையும் பெற்று அரசாள்வார்கள்; (ஆதலால்), கொடு - (நீ சமாதானத்திற்) கொடுத்துவிடு; (எ - று.)—கண்டாய் என்பது - காலவழுவமைதியாய், காண்பா யெனப் பொருள்பட்டு, இடைச்சொல்தன்மைத்தாய், தேற்றத்தைக் குறிக்கும்.

கொடுத்து - கொடுக்க வென்னும் செயவெனெச்சத்தின் திரிபு. 'மாறுஆ மெனக் கருதின்' என்பதற்கு - நீ கீழ் "செருவில் வலியார் வலியராய் மணு ஞள்வது" என்றபடி பகைமையே தருவ தென்று கருதுவாயானல் என்றும் உரைக்கலாம். (எக)

[என்றுசொல்ல, கேட்டு யாதுசொன்னன் துரியோதனன் :]

துரியோதனன் தன்கோள்கையையே வற்புறுத்திக்கூறுதல்.

172.—(இ - ள்.) மாயவனே - மாயையுடையவனே! தூய - பரிசுத்தியையுடைய, மடல் அவிழும் - இதழ்கள் விரியப்பெற்ற, தாராய் - மாலையையுடையவனே! இன்று - இப்பொழுது, கேட்டருளாய் - (நான்சொல்வதைக்) கேட்டருள்வாய்; அவர்கள் - அப்பாண்டவர்கள், எம்மோடு தாயம் கொண்டாட - எங்களுடன் பங்காளியுரிமை பாராட்ட, தரம் அல்லர் - தகுதியுடையவரல்லர்; மறுத்து உரைக்கில் - மீட்டும் கூறப்புகுந்தால், அவர் - அவர்கள், என் அடல் அரசர் கண்டாய் - எனக்குப் பகையரசரேயன்றோ? (எ - று.)—மற்று - வினைமாற்று.

எமக்கு அவர்கள் ஞாதிக ளென்று யான் இதுவரையில் அங்கீகரித்ததனு லன்றோ, நீ மேன்மேல் நிர்ப்பந்தித்துப் பேசுகிறாய்? அவர்கள் எனக்குப் பங்காளிகளல்லர், பகையாளிகளே என்றான். 'அவர்கள் எம்மோடு தாயங் கொண்டாடத் தரமல்லர்' என்றது, எமதுசிறியதந்தையான பாண்டுவின் மனைவிமா ரிருவரிடத்து யமன்முதலிய வேறுஐந்துபுருஷர்க்குப் பிறந்த அவர்களை நான் சரியானதாயாதிகளாகப் பாவிக்கமாட்டேன்; அந்யபுருஷர்க்குப் பிறந்த அவர், குருகுலத்து உரிமைக்கு ஏற்றவரல்லர்; அவ்வைந்துபேரும் ஒரு பெண்ணை மணஞ்செய்துகொண்டு ஒழுக்கங்கெட்டதனுலும், அவர்களுரிமை ஒழிந்தது என்ற கருத்தைக் குறிப்பிக்கும்; இக்கருத்து, வில்லிபுத்தூரார்பாரதத்தில் "அன்னையானவரு மிருவராம் முதலளித்த தந்தையர்கள் ஐவராம், பின்னை யாசைகொடு குருகுலத்துரிமை பெறுவராம் ஒருபிறப்பி லோர், மின்னையாம் இவர்களைவரும் பரிவினேடு தனித்தனி விரும்புவார், என்னையாம் அவரொ டொருகுலத்தரச னென்பது அம்ம இவை என்கொலாம்" என்று விவரிக்கப்பட்டுள்ளமை காண்க. மூத்தவன் இளையவன் என்னும் முறைமையைப் பார்த்தல் முதலியன ஒருகுலத்திற்பிறந்தவர்களுக் கன்றோ? இவர்களுக்கும் குருகுலத்துக்கும் என்ன சம்பந்தம்? என முதலுக்கே சுழிவைக்கத் தொடங்குகிறு னென்க. 'தூய தார்' என்றது, திருத்துழாய்மாலையைக்குறிக்கும். மறுத்து உரைக்கில் என்பதற்கு - என்கருத்தை மறுத்துப்பேசினுல் என்றும், இன்று என்பதற்கு - இதுமுதல் என்றும் பொருள் கொள்ளுதலும் ஒன்று. தாயம், தரம் - வடசொற்கள். அடல் - தொழிற்பெயர்; கொல்லுதலென்று பொருள்: இலக்கணையால், பகைமையைக் குறிக்கும்; அடு - பகுதி.

[இவ்வகை மறுத்து உரைத்த துரியோதனனை நோக்கிப் பின்னும் யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன் :]

கண்ணன் துரியோதனனைத் தாழ்வுபடுத்திப் பேசுதல்.

173.—(இ - ள்.) மன்னர் சபையகத்து - அரசர்கள்கூடிய சபையிலே, அவர்க்கு - அப்பாண்டவர்களுக்காக, ஐந்து ஊர் வேண்ட - (யான்) ஐந்து ஊர்களை யாசிக்க, கொடாமை - (அவற்றைக்) கொடுத்திடாமையோடு, பின்னும் பல பேசினையேல் - மற்றும்பலஇழிமொழிகளைப் பேசுதலுஞ்செய்

தாயானால்,—நின் நிலைமை-உனதுதன்மை,—மைஅறவே செய்து மறுத்தமை யால் - குற்றங்களை மிகுதியாகவே செய்து அரசுமறுத்திட்டதாகுதலால், அமர்க்கண் கையறம்ஆம் கருத்து அன்றோ - கொடியபோரில் அழிவடைகிற எண்ணங்கொண்டதன்றோ? (எ - று.)—மற்று - வினைமாற்று.

“விநாசகாலே விபரீதபுத்தி:”என்றபடி பொருதுஅழிவதற்குஏற்றஅறிவு கொண்டே இங்ஙனம் பழிபாவங்களுக்குஅஞ்சாமல் பொய்வழியில் அரசு கொடாதுமறுத்து இகழ்ந்திட்டாய் என்றவாறு. அன்றோ - தேற்றம்.

கையறம் - கையறு என்னும் பகுதியின்மேல் வந்த தொழிற்பெயர்; அம் - விகுதி, கை - உபசர்க்கம், அறம் - அறுதல், அழிதல். இனி, வில்லி புத்தூரார்பாரதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, நின்நிலைமை மைஅற வே செய்து மறுத்தமையால் - உனதுதன்மை குற்றங்களைமிகுதியாகவே செய்து அரசுமறுத்த லானதனால், வாள் அமர்க்கண் - கொடியபோர்செய் யும் விஷயத்தில், கை - என்கையை அடித்துக்கொடுத்தல், அறம் ஆம் கருத் தன்றோ - நியாயமானகொள்கையன்றோ? எனப்பொருள்கொள்ளுதல் தகுதி யெனத் தோன்றுகின்றது; நீ முன்பு ‘அரசுகொடுப்பேன்’ என்றுசொல்லி அதனைப் பின்பு நிறைவேற்றாத பொய்ய னாதலால், ‘இப்பொழுது போர்செய் வேன்’ என்றுசொல்லி நாளைக்கு அதனையும் இல்லையென்று சாதிக்கக்கூடும்; ஆதலால், உன்வாய்மொழியை நம்பமாட்டேன்; உன்கையால் என்கையை யடித்துச் சத்தியஞ்செய்து தருவாயாயின் தகுதியாம் என்று கண்ணன் கூறின னென்று அறிக; “பொய்வளர்ந்த மொழி மன்னன் மற்றிவை புகன்ற பின்பு புயவலிமையா, லிவர்தங்க ளரசுங் கொடாமல் அடலாண்மைகொண் டெதிரடர்த்தியே, மெய்விளங்கவரு குருநிலத்தினிடை வந்து வெஞ்சமர் விளைக்கவே, கைவழங்குகென நின்ற தூணிடை அறைந் துரைக்கு மிவை காவலன்” என்ற வில்லிபுத்தூரார்பாரதத்தைக் காண்க.

சபையகத்து, அகம் - ஏழனுருபு: அத்து-சாரியை. கொடாமை - எதிர் மறைத்தொழிற்பெயர். ‘வேண்டப் பின்னுங் கொடாமை’ என்பதற்கு - நான் வேண்ட அதன்பின்புங் கொடுக்காமல் என்றும் உரைக்கலாம். பல - பலவின் பாற்பெயர். வாள் - இலக்கணையாய், கொடுமைகுறித்தது; வாள் அமர் - ஆயுதங்களாற் செய்யும் போருமாம். (எங)

[என்பது: நீதிமார்க்கம் வழுவ உரைத்தமையால் உனக்கும் உன்வாயி லுரை பொய்படுதலால் பாதகமாங்கண்டாய், உன்வங்கிசத்தார்க்கும் உனக் கும் நிச்சயமே பழிபாவம்விளையுங் கண்டாய் என்று ஸ்ரீவாசுதேவன் அருளி ச்செய்ய, கேட்டு யாதுசெய்தான் துரியோதனன்:]

துரியோதனன் மிகக்கோபித்து அருகிலுள்ள தூணைக் கையால் அறைதல்.

174.—(இ - ள்.) வெற்றிக்கு - சயத்துக்கு (அடையாளமாக), பூண் ஆர் அலங்கல் - அழகு மிக்க (வாகைப் பூ) மாலையை, புனையும் - தரிக்குந்தன் மையுள்ள, பெரு தேரில் முன் கோள் நாகம் உயர்த்த கோ - பெரிய தேரில் முன்பக்கத்தில் வலிய பாம்பின் வடிவமெழுதிய கொடியை உயரஎடுத்துள்ள துரியோதனராசன்,—கொற்றம் படை மன்னர் சூழ - வெற்றியைத்தருகிற ஆயுதங்களையுடைய அரசர்கள் சுற்றிலும் இருக்க,—[மத்தியில்], வெகுண்டு கொதித்து எழுந்து - கோபித்து உக்கிரங்கொண்டு (ஆசனம்விட்டு) எழுந்து, வெற்றி மணி தூணை- சிறந்த அழகிய (அருகிலுள்ளதொரு) கம்பத்தை,அடித் தான் - (கையால்) மோதினான்; (எ - று.)—இது, அதிககோபாவேசத்தால்.

தூணுக்கு, வெற்றி- தன்னினும் மேம்பட்டதொரு தூண் இல்லாதபடி தான் எல்லாத்தூணினும் மேம்பட்டிருத்தல். மணித் தூண் - இரத்தினத் தம்பமுமாம். ‘வெற்றிக்கு’ என்றதனால், அலங்கல்-வாகையாயிற்று. பூண் -

அணியப்படுந்தன்மை; எனவே, அழகாம். அலங்கல் - தொங்கியசைதல்; மாலைக்கு, தொழிலாகுபெயர். புனையும் கோ என இயையும். கோள்-உயிர்கொள்ளுந் தன்மையுமாம்; என்றது, கொலையைக் குறிக்கும். (எச)

துரியோதனன் கண்ணனை நிந்தித்தல்.

175.—[அன்றியும்], (இ - ள்.) கன்று ஆயன் - கன்றுகளை மேய்க்கும் இடையனான கண்ணன், தன்னை அறிந்திலான் - தனது வலிமைமுதலியவற்றை அறிந்தானில்லை; தன் பிறப்பு தான் அறியான் - தனதுபிறப்பின்வரலாற்றை அறிந்தானில்லை; என்னை அறிந்திலனே- எனது வல்லமையையும் அறிந்தானில்லையே; பின்னை - பின்பு [இங்ஙனமிருக்கையில் என்றபடி], தன் மெய் அறியாது - தனது நிலைமையை ஆலோசியாமல், மிகைத்து எழுந்து - செருக்குக்கொண்டு பேசத்தொடங்கி, என்னை - என்னை (நோக்கி), கையறம் ஆம் என்றான் - அழிவுண்டாகு மென்ற அக்கண்ணனது, கருத்து - எண்ணம், என்னோ - யாதோ? (எ - று.)—தன் மெய் அறியாது - தனது சத்தியத்தை ஆலோசியாமல், கையறமாம் என்றான் - கையறைந்துதருதல் முறைமையாமென்று கூறியவனென்றுங் கொள்ளலாம்.

'தன்பிறப்பு' என இகழ்ந்துகூறினது, கிரீடாதிபத்தியமில்லாதபடி தன் தந்தையாற் சாபம்பெற்ற யதுவினது குலத்திலே கம்சனது சிறைச்சாலையிற் பிறந்து இடைச்சேரியிலே மறைந்து வளர்ந்து பால் தயிர் வெண்ணெய் முதலியவற்றைக் களவுசெய்துஉண்டு 'நீயோ இதுசெய்தாய்?' என்று யாரேனுங் கேட்டால் இல்லையென்று பொய்சொல்லி அதன்மேல் இடைச்சியராற் கட்டப்பட்டும் அடிக்கப்பட்டும் இருந்த எளிமையை. கன்று + ஆயன் = கற்றாயன்; மென்றொடர், வேற்றுமையில் வன்றொடராயிற்று. இடையர்களிற் பெரியவர் பசுக்களை மேய்த்தலும், சிறியவர் கன்றுகளை மேய்த்தலும் இயல்பாதலால், கன்றுகளைமேய்க்கும் இடைப்பயலெனச் சிறுமைதோன்ற இகழ்ந்தபடி. தன்மெய் அறியாது - தன்உடம்பு தெரியாமல் என்றும், மிகைத்து - வரம்புகடந்து என்றுங் கொள்ளலாம். தான் - அசை.

"புன்பிறப்புடைய பொதுவர்தங்களொடு புறவி லானிரை புரந்திடும், உன்பிறப்பும் உரலோடு கோவிய ருனைப்பிணித்தது மறந்து நீ, மன்பிறப்பிலுயர் குருகுலத்தவர் தம் வாய்மைதானு மொருமாசிலா, என்பிறப்பு முணராமலோ சபையி லிந்தவாசக மியம்பினாய்" என வில்லிபுத்தூரார் விவரித்துக் கூறுதல் காண்க. (எரு)

[இவ்வகை தூஷித்துப்பேசுகின்றானை நோக்கி யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் துரியோதனனை இகழ்தல்.

176.—(இ - ள்.) தானே அரசு ஆள்வான்-(இத்துரியோதனன்) தானா அரசாட்சிசெய்யுந் தகுதியுடையவன்? தானே எனக்கு நேர் - இவனா எனக்கு எதிராகிறவன்? தானே என்னை பழிக்கும் தன்மையான் - இவன்தானா என்னை நிந்திக்குந்தன்மையுடையவன்? இனி - இனிமேல், (இவன்), மானம் - பெருமையையுடைய, கரைகள்வாய் மீன் உகளும் கங்கை திரு நாடு - கரைகளின்மேல் மீன்கள் பாய்ந்துபுரளப்பெற்ற கங்காநதி பாய்கிற அழகிய குருநாட்டின், இரு கரையும் - இரண்டு பாகத்தையும், ஆள்வான் - (தானே தனியரசு) ஆள்வான்? (எ - று.)

இராச்சியம் முழுவதையுந் தனியரசாளுமாறு பேராசைகொண்டவனும் எனக்குச் சிறிதும்நிகரல்லாதவனும், என்னைப்பழித்தவனு மான இத்துரியோதனன் இனி நாடு முழுவதையும் அரசாளுவதைப் பார்ப்போம் என்பதாம். என்றது, இவனைப் பாண்டவரைக்கொண்டு வென்று அழிக்க யானே முய

ற்செய்வேன் என்றவாறு. இகழ்ச்சிக்குறிப்பால் வந்த எதிர்மறையிலக்கணையால், 'எனக்கு நேர்' என்பது - எனக்கு நேரல்லனென்றும், 'இருகரையும் ஆள்வான்' என்றது - ஆளானென்றும் பொருள்தரும்; மற்றவையும் இவ்வாறே. 'இருகரையும்' என்றது, தனதுபாகம், தருமனதுபாகம் என்னும் இரண்டுபாகத்தையும் என்றபடி. 'கங்கைத்திருநாட்டிருகரையும்' என்பதற்கு - கங்காநதியின் இரண்டுகரைகளிலுமாக வுள்ள நாடுமுழுவதையும் என்று பொருளுரைத்தலும், ஒன்று. எனக்கு நேர்தானே யெனப் பழிக்குந்தன்மையான் என்று ஒன்றாக எடுத்து, என்எதிரில்தானே என்னைத் தூஷிக்கும் இயல்புடையவன் என்னவுமாம். கரைகள்வாய், வாய் - ஏழனுருபு. மீன் - மீந மென்னும் வடசொல்லின் திரிபு. கரைகளின்மேல் மீன்கள் புரளு மென மீன்களின் கொழுமை கூறியவாற்றால், நாட்டின் நீர்வளத்தை விளக்கியபடி. நேர் - நேர்வன் என்பதன் விகாரம்; விகுதிபுணர்ந்துகெட்டுப் பகுதியே வினைமுற்றுப்பொருளுணர்த்திற்றென்க. (எசு)

[இவ்வகையருளிச்செய்து, துரியோதனன் பேசிய உதாசீனமூர்க்கங் கண்டு மற்று அவனுடன் கோபித்துப் பின்னும்அருளிச்செய்வான்: உனக்கு இதுவே கருத்தாகில், எங்களுக்குக் குருக்ஷேத்திரவெளியிலே யுத்தம்ஒழியாமற் செய்யப்பெறும்; யுத்தங்களுக்கு வேண்டும் விவஸ்தை யெல்லாஞ் செய்து தருவாயாக என்று விவஸ்தையெல்லாஞ்செய்துகொண்டு சபாமண்டபம் விட்டு நீங்கி ஒருதனிமண்டபத்து வீற்றிருந்தான் ஸ்ரீவாசுதேவனைக் கருதுவது. அவ்விடத்து விதுரனைநோக்கி யாதுசொன்னான் துரியோதனன்: உன்சோற்றை இவன் உண்டு என்பகைவர்க்கே பக்ஷபாதஞ் செய்து சத்துருபக்ஷத்தார்தூதனுக்குத் தன்சோறுபோல இன்னடிசில்சமைத்து அவற்குஇனிமைசெய்து வஞ்சித்து வாழ்கின்றான் வேசியர்புத்திரனுவதற்கே தக்கான் என்று இராசசமுகத்தார்முன் பருஷவாக்கியஞ் சொல்லக் கேட்டு மிகவும் அபிமானஞ்சினங்கன்றிப் புகையெழ விம்மி விழித்து உருமேறென்ன உடன்று எழுந்து துரியோதனனைநோக்கியாதுசொன்னான்விதுரன்:]

விதுரன் கோபித்துப்பேசுதல்.

177.—(இ - ள்.) தேர் வேந்தே - ரதாதிபதியான அரசனே! மூத்தான் மகனை - தமையனது குமாரனை, இளையான் - தம்பி, முனிந்து - கோபங்கொண்டு, கொன்றான் - கொன்றுவிட்டான், என்று—, எத்தா வடுவுக்கு - புகழத்தகாமல்வருந் தீராப்பழிக்கு, (அஞ்சி), உலோவினேன் - பின்வாங்கினேன்; (இல்லாவிட்டால்), பூ தாமம் செய்த - பூமாலைகளால் அலங்கரிக்கப்பெற்ற, போர் வேந்து அவையுள் - போர்செய்யவல்ல அரசர்கள் கூடின சபையில், நீ என்னை வைதும் - நீ என்னை வசைகூறியும், மறித்து புகுமோ - மீண்டும் (உன்உயிர் உன்உடம்பில்) தங்குமோ? (எ - று.)

சிற்றப்பன் மகனைக்கொன்றானென்று வரும் நெடுங்காலம்நீங்காதபழிப்புக்கு அஞ்சுகிறேன்; இல்லாவிட்டால், என்னை நீ இவ்வாறு நிந்தித்ததற்கு உன்னை நான் கொல்லாமல்விடுவேனோ? என்பதாம். "இன்னவா றிவ னுரைத்தபோ தவனெழுந்திருந்து வசை யென்னை நீ, சொன்ன வாய் குருதிசோர வாள்கொடு துளைத்து நின்முடி துணிப்பன் யான், மன்னவா குருகுலத்திலே யொருவன் மைந்தனுருயிரை வௌவினு, னென்ன வானவர் நகைப்பரே யெனை யுரைத்த நாவுட னிருத்தியோ" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம். உலோவினேன் - லோபம் என்னும் வடசொல் உலோவ மெனவிகாரப்பட்டு அதினின்று வந்த வினை. லோபஞ்செய்தேனென்று பொருள்தரும் இது, இங்கு என்எண்ணத்தை நிறைவேற்றாதொழிந்தேன் என்ற கருத்தை விளக்கிற்று. மூத்தான் - திருதராட்டிரன். மக - இளமைகுறிப்பதோர் உரிச்

சொல்; அதனடியாய்ப் பிறந்த ஆண்பாற்பெயர் - மகன்; இதன் பெண்பால்-மகள். பழிப்பின் மாறாத தன்மை, 'வடு' என்ற சொல்லாற் குறிக்கப்பட்டது. தாமம் - வடசொல். வேந்து + அவை = வேத்தவை; [நன் - உயிர் - ௩௪.] வைதும், உம் - இழிவுசிறப்பு. 'நீ என்னை வைதும் புகுமோ மதித்து' என்பதற்கு - நீ என்னை நிந்தித்தபின்பும் என்மனம் உன்னிடம் மீண்டு தங்குமா? என்றும், என்உடம்பு மீண்டும் உன்னிடம் வருமா? என்றும் பொருள் கொள்ளலாம். (எஎ)

[என்பது: திருதராஷ்டிரன்மகனை விதுரன் கொன்றானென்றும், அவன் சோறுண்டு அவனை வெகுளியினாற் கொன்றானென்றும், பரராஷ்டிரத்துச் சர்வக்ஷத்திரியர்க்கும் கேட்டார்க்கும் நீதிமார்க்கமறுத்தமை யாதலால், அது தருமமன்று; அதுவுமன்றி, வீமார்ச்சுனர்க்குப் பிரதிக்கினைபங்கமாய் * அவர்க்குப் பழிகொடுக்க வழக்குடையேனாகே னென்று இவ்வகை வெகுண்டுஉரைத்து இராசசமூகத்தார்க்கும் பொருந்தவுரைத்து மற்று இவன் சபையின்கண் புகுதே னென்று பின்னும் தன்கடவுட்சிலையினை யாது செய்தான் விதுரன்:]

விதுரன் வில்லை முறித்துப்போகடுதல்.

178.—(இ - ள்.) விதுரன்—,—என்னும் கால் - ஆலோசிக்குமிடத்து, கண் நுதலான் தன் சிலைக்கும் - நெருப்புக்கண்ணை நெற்றியிலுடைய சிவபிரானுடைய (பினாகமென்னும்) வில்லுக்கும், காகுத்தன் தன் சிலைக்கும்- இராமபிரானது (கோதண்டமென்னும்) வில்லுக்கும், நேர் ஆம் - சமமான, எழில் சிலையை - அழகிய (தன்) வில்லை, நண்ணி - பொருந்தி [எடுத்து],— ஆங்கு - அப்பொழுது, வெறுத்து உரைத்தான் முன் - (தன்னை) நிந்தித்துப் பேசின துரியோதனனது எதிரில், வெவ் உரையே பேசி - (தானும்) கடுஞ் சொல்லையே சொல்லி, வில் - அவ்வில்லை, கை இறுத்தான் - (தன்) கையாலே ஒடித்திட்டான்; (எ-று.)—ஏ - பிரிநிலை.

கண்ணன் பாண்டவர்க்குத் தூதாய் வந்தமைபற்றி அவனையும், அவனுக்குத் தன்வீட்டில் இடங்கொடுத்து விருந்துசெய்து உபசரித்தமைபற்றி விதுரனையும் துரியோதனன் பலவாறு இராசசபையில் தூஷிக்க, விதுரன், கடுங்கோபங்கொண்டு, 'பாதகனாகிய உன்பொருட்டுப் போர்செய்யேன்; இத்தனைநாளாய் உன்சோற்றை யுண்டமைபற்றி, உனக்குஎதிராகப் பாண்டவரோடு சேர்ந்தும் பொரேன்' என்று சொல்லித் தனது வில்லை இரண்டுதுண்டாக முறித்துப்போகட்டுவிட்டனன் என்பதாம்.

சூரியன் வலக்கண்ணும், சந்திரன் இடக்கண்ணும், அக்கினி நெற்றிக் கண்ணு மாக இறைவனுக்குக் கண்மூன்றும் முச்சுடராம்.

காகுத்தன் - காகுஸ்தன் என்னும் வடசொல்லின் திரிபு; அதற்கு - ககுத்த னென்னும் அரசனது மரபில் தோன்றினவ னென்று பொருள்: தத்திதாந்தநாமம்; (ககுஸ்தன் என்பது - ககுத் ஸ்தன் எனப்பிரிந்து, எருதுமுசுப்பின்மேல் இருந்தவ னென்று பொருள்படும்; சூரியகுலத்திற் புரஞ்சய னென்னும் அரசன், எருதுவடிவமான இந்திரனை வாகனமாகக்கொண்டு அதன் முசுப்பின்மேல் ஏறி வீற்றிருந்து போர்செய்து அசுரரையொழித்துக் ககுஸ்தனென்னுங் காரணப்பெயர் பெற்றான்.) கால் - கால மென்னும் வடசொல்லின் விகாரம். என்னுங்கால் என்பதை எதிர்காலவினையெச்சமாகிய ஒருசொல்லென்று கொள்ள இடமில்லை.

"அச்சுதன்சந்தவில்லும் அரன்வில்லு மொப்பதொரு தாமவில்லினை முறிப்பதே" என்பர் வில்லிபுத்தூரார்பாரதத்திலும்.

* 'வாக்குப்பழிகொடுக்க' என்றும் படிக்கலாம்.

முன் ஒருகாலத்தில் தேவசிற்பியாகிய விசுவகர்மா இரண்டுசிறந்தவிற்களைச் செய்ய, அவற்றுள் ஒன்றைச் சிவபிரானும் மற்றொன்றைத் திருமாலும் எடுத்துக்கொள்ள, அவற்றில், சிவவில் சநகமகாராசனிடத்தும், விஷ்ணுவில் இராமபிரானிடத்தும் வந்துசேர்ந்தன வென்று இராமாயணத்தில் வரலாறு உள்ளதனால், 'கண்ணுதலான் தன் சிலை,' 'காகுத்தன் தன்சிலை' என இங்குக் குறித்தவை அவையே யெனக் கொள்ளினுமாம். (எஅ)

இதுவும் அது.

179.—[அன்றியும்], (இ-ள்.) இன்னா சொல் - (துரியோதனன்சொன்ன)இனிமையல்லாதகடுஞ்சொல், செவி வந்து சுடலும் - வந்து காதுகளிற் பட்டு வருத்தினவுடனே, (விதுரன்), வேர்த்து எழுந்து - கோபங்கொண்டெழுந்திருந்து,—'மன் நாட்டவர் - பெரிய நாட்டிலுள்ள அரசர்எவரும், எனக்கு மாறு இலார் - எனக்குப் பகையல்லர்,' என்னா - என்று சொல்லி, போர் களத்து தன் வில் பிடியேன் என்று - யுத்தகளத்தில்(யாருக்காகவும்)வில்லையேந்திப்போர்செய்யமாட்டேன் என்றுஞ்சொல்லி, ஆங்கு - அப்பொழுது, கார் குமுதம் தான் இடித்தால் போன்று-மேகத்தின் பேரொலியாகிய இடி இடித்தாற்போல [ஆரவாரமுண்டாக], இறுத்திட்டான் - (வில்லை) ஒடித்துப் போகட்டுவிட்டான்; (எ - று.)—தன், தான் - அசைகள். கீழ்ப்பாட்டில் 'வெவ்வுரையேபேசியிறுத்தான்' என்றதை விவரித்துக்கூறியதாதலால், இப்பாட்டு, கூறியதுகூற லென்னுங் குற்றத்துக்கு இடமாகாது; அன்றியும், ஒரு விஷயத்தைப் பலவாறுகூறி விளக்குதல்,இந்நூலாசிரியரது வழக்கம்: இதை இந்நூலிற் பலவிடத்துங் காணலாம்.

கோபத்தால் உடம்புவேர்த்தல் இயல்பாதலால், 'வேர்த்து' என்றது, காரணத்தைக் காரியமாகக் கூறிய உபசாரவழக்கு. இறுத்திட்டான், இடு - துணிவுப்பொருளைக் காட்டுந் துணைவினை. குமுதம் - பேரொலியாதலை, "குமுதமே பேரொலிப்பேர்" என்ற நிகண்டினால் அறிக. மாறு - ஒப்புமாம். கார்க் குமுதந்தானிடித்தாற்போன்று இன்னாச்சொல் வந்து செவிசுடலு மென்று அந்வயித்து உரைத்தலும் அமையும். கார்க் குமுதம் - கரிய மேகமுமாம்; கு முதம்-பூமிக்கு மகிழ்ச்சிசெய்வதுஎன மேகத்துக்குக் காரணக்குறியென்க.

[என்பது: இப்படிக்கொத்த திவ்வியமாயின சிலையினைத் துரியோதனன் முன்னிருந்த இராசாக்களனைவருங் காண வெகுளிபொங்கித் தன்கடவுட் சிலையினை முறித்து இரண்டுதுண்டப்பட வெட்டி 'யான் இனி யுத்தபூமியிற் புகுதேன்' என்று பிரதிக்கினைபண்ணி மற்று அவன் இருந்த சபாமண்டபம் விட்டு நீங்கித் தன்கோயில்நோக்கிப் போயினான் விதுரன் என்றவாறு; அப்பொழுது ஆங்கிருந்த ராசாக்களில் ஸ்ரீபீஷ்மன் துரியோதனனை நோக்கி யாதுசொன்னான்:]

வீடுமன் 'இனி அருச்சுனனை வெல்வார் ஆர்?' என்றல்.

180.—(இ-ள்.) நீதி மறுத்தாய் - நியாயத்தை மறுத்தவனே! விதுரன்—,வில்லை முறித்து போய் - வில்லையொடித்துப் போகட்டுவிட்டுச் சென்று, தன்னுடைய இல்லம் புக - தன்னுடைய வீட்டிற்குச் சேர, கண்டு இருந்ததனால் - (நீ தடுத்துச் சமாதானப்படுத்தாமல்) பார்த்துக்கொண்டிருந்ததனால், வில்லி வெறுத்தால் விசயனுடன் வெல்வாரை உரையாய் - வில்வன்மையிற்சிறந்த விதுரன் கோபித்துப்போய்விட்டால் (வேறு) அருச்சுனனுடன் போர்செய்து வெல்லவல்லாரைச் சொல்லு; (எ - று.)—மதி - முன்னிலையசை; [நன் - இடை - உக.] இனி, ஆலோசித்துப்பார் என்று வினைப்பகுதி மாத்திரமாய் நின்ற ஏவலொருமையாகக் கொள்ளினுமாம்.

இப்பக்கத்தில் இனி அருச்சுனனை வெல்வார் இல்லை யென்பதாம்; "முந்த வில்லியரி லெண்ணும் வில்லுடைய விசயன் வந்தமரின் முடுகினால், எந்த வில்லி யெதிர்நிற்கும் வில்லி யினி யென்று காவல ரிரங்கினார்" என்பர் வில்லி புத்தூராரும். இல்லம், அம் - சாரியை. 'நீதிமறுத்தாய்' என விளித்தது, கீழ் 'அரசுகொடேன்' என்றதோடு பாண்டவரையும் கண்ணனையும் விதுரனையும் பழித்திட்டமைபற்றி. (அ0)

[என, கேட்டு, ஸ்ரீபீஷ்மனைநோக்கி யாதுசொன்னான் துரியோதனன்:]

அதற்குத் துரியோதனன் 'யான் போர்செய்வேன்' என்றல்.

181.—(இ - ள்.) (துரியோதனன்), செயிர்த்து - கோபங்கொண்டு,—(வீடுமனை நோக்கி),—'கொல் நவிலும் - கொலைத்தொழிலைப் பயின்ற, கூர் வேல் - கூர்மையான வேலாயுதத்தையுடைய, குருநாடர் தம் பதிக்கு மன்னவனே - இக்குருநாட்டிலுள்ளாரது இராசதானியான அத்தினபுரிக்கு உரிய அரசனே! உன்னி - (பகைமையைக்) கருதி, உருத்து - உக்கிரங்கொண்டு, எழுந்து—, சீறும் - கோபிக்கிற, உயர் களிற்றாய் - உயர்ந்த ஆண்யானை போன்றவனே! இன்று என் மனம் கேட்கில் - இப்பொழுது எனது மனக்கருத்தை (நீ) கேட்பாயாயின், ஈண்டு என் செரு தருவேன் - இப்பொழுதே (அருச்சுனனை வெல்ல) என்வலிமையாற் போர்செய்வேன்,' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

வேல்மன்னவன் என இயையும். வீடுமனை 'குருநாடர்தம்பதிக்கு மன்னவன்' என்றது, சந்தனுமகாராசனது மூத்தமகனாை அவனே அரசாட்சிக்கு இயல்பில் உரியனாதலால். உயர்ந்திருத்தல், உத்தமயானைக்கு ஓரிலக்கணம்; இனி, உயர் களிறு - சிறந்த யானையுமாம். "யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" என்றபடி யானை பழைய பகைமையை என்றும் மனத்தில்மறவாத தன்மையை, 'உன்னி' எனக்குறித்தது. மனம் - அதன்கருத்துக்கு, ஆகுபெயர். (அக)

[என, கேட்டு, பார்வேந்தனைநோக்கி யாதுசொன்னான் ஸ்ரீபீஷ்மன்:]

வீடுமன் 'அருச்சுனனைவெல்ல விதுரனையன்றி எவராலும்ஆகாது'என்றல்.

182.—(இ - ள்.) நாகம் அரவு உயர்த்தோய் - நாகப்பாம்பின்வடிவத்தை யெழுதிய கொடியை உயர நிறுத்தியவனே! நன்று தீது எண்ணாதே - நல்லது (இன்னதென்றும்) கெட்டது (இன்னதென்றும்) ஆலோசியாமலே, கன்றி உரைக்க கடவையோ - கோபித்துப் பேசத் தகுவையோ? [அங்ஙனம் பேசுதல் தகுதியன்று என்றபடி]; வென்றி விதுரன் கை வில் இறுத்தான் - வெற்றியையுடைய விதுரன் தன் கைவில்லை ஒடித்துப்போகட்டுவிட்டான்; (ஆதலால், இனி), வெல் விசயன்தன்னோடு எதிர் அம்பு கோப்பார் எவர் - (பகைவரை) வெல்லவல்ல அருச்சுனனுடன் (போரில் எதிர்நின்று) அம்புதொடுக்கவல்லவர் யார் (உளர்)? [எவரும் இல்லை என்றபடி]; (எ - று.)

அருச்சுனனை வெல்ல உன்னாலும் ஆகாது; வேறு எவராலும் ஆகாது என்பதாம். நன்று, தீது - பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்கள்; முறையே, று, து - விகுதிகள். நாக வரவு - நாகமாகிய அரவு என இருபெயரொட்டுப்பண்புத்தொகை; நாகம் - சிறப்புப்பெயரும், அரவு - பொதுப்பெயருமாம். நாகம் - பாம்பின் ஓர் சிறந்தசாதி: நல்லபாம்பு. (அஉ)

[என்பது: அதிரதரில் முன்தோன்றலான் விதுரன் தன் திவ்வியமான வில்லை யிறுத்துப் பின்னையும் யுத்தபூமியிற் புகுதே னென்று பிரதிக்கினை பண்ணிப் போயினான்; இனி, அர்ச்சுனனை இன்று யுத்தபூமியில் வெற்றி

கொள்ள வல்லார் ஆர் ? என்று ஸ்ரீபீஷ்மன் சொல்ல, கேட்டு யாது சொன்னான் துரியோதனன் :]

துரியோதனன் 'விதுரனொழிய வீரரிலரோ?' என்றல்.

183.— (இ - ள்.) (துரியோதனன்), சுளித்து - கோபித்து, (வீடுமனை நோக்கி), 'விதுரன் அளவேயோ - விதுரன்மாத்திரந்தானோ? இங்கு - இப்பக்கத்தில், வில் ஆட்கள் - வில்வீரர்கள், அதிரதரும் மாரதரும் ஆவார் - அதிரதர்களும் மகாரதர்களும் ஆகுபவர்கள், (பலர் உளரன்றோ?) வேந்தர் சபை நடுங்க சொல் வலி- அரசர்களுடைய சபை நடுங்க (உன்னால்) சொல்லப்படுகிற வலிமை, விதுரன்தன் - விதுரனது, வில் வலியோ - வில் திறமையோ ? தோள் வலியோ - புஜபலமோ ? ஏது - எது? என்றான்-என்று கூறினான் ; (எ-று.)—மற்று- வினைமாற்று.

அருச்சுனனை வெல்லுமாறு எதிர்த்துப் போர்செய்தற்கு விதுரனொழிய வல்லார் இல்லையோ ? இங்குப் பலர் வில்வீரர் அதிரதரும் மகாரதருமாக இருக்கின்றனரே ; நீ இங்ஙனம் அச்சமுறுத்திக்கூறும்படி விதுரன் வில் வலிமையிலோ தோள்வலிமையிலோ எதிற் சிறந்தவன்? என்பதாம்.

எதிலும் அத்துணைச்சிறந்தவனல்லனென்பது கருத்து.

அளவேயோ, ஏ - பிரிநிலை, ஓ - வினா. ஆட்கள் - ஆளுந்தன்மையுடையவர். இங்கு - இவ்வுலகத்தில் என்றுமாம். 'ஆவார்'என்பதில், வகரஇடைநிலை-எதிர்கால முணர்த்தாது, தன்மை யுணர்த்திற்று. வேந்தர்சபைநடுங்கச் சொல் வலி - ராஜசபை நடுங்க (விதுரன் வெவ்வுரை) பேசின வலிமையென்றுமாம். (அ௩)

[இவ்வகை வேந்தன் உரைப்பக் கேட்டு யாதுசொன்னான் வீஷ்மன் :]

வீடுமன் 'விதுரனொழிய வீமார்ச்சுனரை வெல்வார் ஆர்' என்றல்.

184.—(இ - ள்.) தனி-ஒப்பில்லாத, வரை போல் - மலை போல, வீங்கும் - பருத்துள்ள, பொன் - அழகிய, தோளாய் - தோள்களையுடையவனே ! வெம் சமத்து - கொடிய போரில், சிலை தொழிலான் - வில்தொழில்வல்ல அருச்சுனன், செம் சரங்கள் - சிவந்த அம்புகளை, ஊன்றி - நன்றாகப் பிரயோகிக்க, வீமன்—, கொலை தண்டு - கொல்லுந்தன்மையையுடைய (தனது) கதாயுதத்தை, கை கொண்டால் - கையில் எடுத்துப் போர்செய்யத்தொடங்கினால், அவரை- அவ்விரண்டு பேரையும், மலைத்து-எதிர்த்துப்போர்செய்து, தாங்கு - தடுக்கவல்ல, கணை உடையார் - அம்புகளையுடையவர், யாரோ - (விதுரனொழிய வேறு) யாவரோதாம் ? விளம்பு - (நீ) சொல்லு ; (எ - று.)

வில்வலிமையிற் சிறந்த அருச்சுனனையும் வெல்லவல்ல வில்வன்மையும், தோள்வலிமையிற் சிறந்த வீமனையும் வெல்லவல்ல தோள்வன்மையும் ஆக இரண்டையு முடையான் விதுரனே என்பதாம். கீழ்த் துரியோதனன் "விதுரன், வில்வலியோ தோள்வலியோ வேந்தர் சபைநடுங்கச், சொல்வலியேது" என்று ஆக்ஷேபித்ததற்கு, வீடுமன் 'அவ்விதுரனிடத்து இரண்டுவலிமையும் உண்டு' என்று சமாதானங் கூறியபடி.

செம் சரம் - பகைவரிரத்தந்தோய்தலால் நுனிசிவந்த அம்பென்க ; சரம் - வடசொல். சரம் - பாசுபதம் முதலியன. ஊன்றி - ஊன்ற என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு ; இது, கைக்கொண்டால் என்ற வேறுகருத்தாவின் வினையைக் கொண்டு முடிந்தது காண்க. தண்டு - தண்டமென்னும் வடசொல்லின் விகாரம் ; வீமனது கதைக்கு 'சத்துருகாதிநீ' என்று பெயர்: அப்பெயர், பகைவரைக் கொல்வதென்று பொருள்படும் : அதனை

விளக்குதற்கு, 'கொலைத்தண்டு' எனப்பட்டது: வரை யென்னுங் கணு வின் பெயர், அதனையுடைய மூங்கிலுக்குச் சினையாகுபெயராய், அது பின்பு அம்மூங்கிலுடைய மலைக்குத் தானியாகுபெய ராதலால், இருமடியாகு பெயர். தோளுக்கு மலை உவமை - ஆயுதங்களால் அழிவடையாத வலி மைக்கும், பருமைக்கு மாம். பொன் தோள் - பொன்னாபரணங்களை யணி ந்த தோளுமாம் ; பொன் - கருவியாகுபெயர்.

இப்பாட்டைத் திருதராஷ்டிரன்வார்த்தையாகச் சொல்வதற்கு யா தோரியைபு மில்லாமையும், வசனத்தோடு மாறுபடுதலுங் காண்க. (அச)

[என்பது: வீமஅர்ச்சுனரென்கின்ற அதிரதர் வெகுண்டுவந்தகாலத்து மற்றுஅவரை யுத்தபூமியில் தடுக்கவல்லார் ஆரோ? என்று ஸ்ரீவீஷ்மன் உரைக்க, கேட்டு யாதுசொன்னான் துரியோதனன்:]

துரியோதனன் 'எதுவும் விதிவசப்படி நடக்கும்' என்றல்.

185.—(இ - ள்.) என் தாதாய் - எனது தந்தையே! ஒருவன் - (உல கத்தில்) ஒருத்தன், தன்னை நயந்து - (தன்முயற்சியினாலேயே எல்லாம்ஆகு மென்று) தன்னை மதித்து, செய் - செய்த, கருமங்கள் - தொழில்கள், என்ன பயந் தனவோ - என்னபயனைத் தருகின்றனவோ? [பயன்படா என்றபடி]; விதி ஆகில் - ஊழ்வினை உள்ளதானால், வினை - (வரவேண்டிய) தொழில், எய்தும் - (தானே) வரும்; (அங்ஙனமிருக்க), தன்னை மதியாதவரோடு வாழ் வது என் - (ஒருத்தன்) தன்னைக் கௌரவியாதவர்களோடு கலந்து வாழவேண் டுவது என்னை? கண்டாய் - ஆலோசித்துப்பார்; (எ - று.)—கண்டாய் - தேற் றமுமாம். தான் - அசை.

ஒருவன்செய்யும் முயற்சியினாலேயே அவன்விரும்பியபடி நன்மையும் தீமையும் வரு மென்ற நிச்சயமில்லை என்பது, முதல்வாக்கியத்துக்குக் கரு த்து; இதனால், நீசொல்லுகிறபடி விதுரன் தன்வில்தொழிலில் வீமார்ச்சு னரை வென்றேவிடுவ னென்னுந் துணிவு இல்லை யென்றபடி. முற்பிறப்பிற் செய்த கருமத்தின்படியே எல்லாத்தொழிலும்நிகழும் என்பது, இறுதிவாக்கி யத்தின் கருத்து: இதனால், எனக்கு வெற்றியோ தோல்வியோ விதியால் வரவேண்டுவது வந்தேவிடும் என்றவாறு. இப்படிஇருக்கையில், நான், என் னை லட்சியஞ்செய்யாமல் எனதுபகைவர்க்குத்தூதனாய்வந்தவனுக்கு இடங் கொடுத்து விருந்துசெய்து உபசரித்த விதுரனோடு மாறுபடாது உறவுகொண் டேயிருக்கவேண்டு மென்பது என்னகடமை? என்பது, நடுவாக்கியத்தின் கருத்து. இதனை "தம்மை யிகழ்வாரைத் தாமவரின்முன்னிகழ்க, என்னை யவரோடு பட்டது—புன்னை, விறற்பூங்கமழ்கானல் வீங்குநீர்ச்சேர்ப்ப, உறற் பால யார்க்கு முறும்" என்றாற்போலக் கொள்க.

தாதாய் - தாதையென்பதன் ஈறுதிரிந்த விளி; மூதாதையாகிய வீடு மனை 'தாதை' என்றது, அன்புபற்றிய மரபுவழுவமைதி; கீழ் கoக - ஆம் பாட்டில், உனதுபாட்டனென்றபொருளில் 'உந்தை' என உபயோகிக்கப் பட்டுள்ளமை காண்க. இதனால், இது, திருதராட்டிரனை நோக்கிய விளி யெனக் கொள்ளவேண்டுவதில்லை யென்க. கர்மம் - வடசொல். விதியா வது-இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி; விதி, ஊழ் என்பன - ஒருபொருட்சொற்கள். எய்தும், எய்து - பகுதி. (அரு)

[என்று இவ்வகை சொல்லிப் பின்னும் யாதுசொன்னான் துரியோதனன்:]

துரியோதனன் 'பஞ்சபாண்டவரைக் கன்னன் வெல்வான்' என்றல்.

186.—(இ - ள்.) மலை அஞ்ச - (அருகிலுள்ள) மலையும் அஞ்சும்படி, வரால் பாயும் - வரால்மீன் துள்ளியெழுந்து பாயப்பெற்ற, அணி வயல் - அழ

கிய கழனிகள், சூழ் - சூழ்ந்த, நல் நாடா - சிறந்த குருநாட்டுக்கு உரிய வீடு மனே! கார் புரியும் வண்மையான் - மேகமும் விரும்பும்படியான தானத்தை யுடையவனான, கன்னன் - கர்ணனது, தனி தேர் முன் - ஒப்பற்ற தேரின் முன்னிலையில், போர் புரியும் வெம் சிலைக்கு - (அவன்எடுத்துப்) போர்செய்கிற கொடிய வில்லின் வலிமைக்கு, பஞ்சவரால் ஆய பகை போதுமோ - பஞ்ச பாண்டவர்களாலாகிய பகைமை ஈடாகுமோ? [ஆகாது என்றபடி]; சேர்க- (அப்பகைமை) சேர்ந்துவருக; (எ - று.)

வீமார்ச்சுனர் இருவரும் ஒருங்கே யெதிர்த்துவந்தால் என்செய்வது? என்று நீ கலங்கவேண்டா; பாண்டவர்ஐவரும் ஒருங்கே படைகளோடு திரண்டுவந்தாலும் அவர்கள் கர்ணனொருவனதுஎதிரில் அவன்வில்வன்மைக்கு ஈடாகாது அழிவர்: ஆகையால், பாண்டவரைவரும் வருக; சிறிதும் அச்சமில்லை யென்பதாம்.

கைம்மாறுநோக்காது உதவுதற்கு மேகம் திருஷ்டாந்தமாதலை, "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என்னாற்றுங்கொல்லோ வுலகு" என்ற திருக்குறளாலும் அறிக; அப்படிப்பட்ட மேகமும், இவன் கைம்மாறுகருதாதஉதவுந்திறத்தை நோக்கித் தான் அங்ஙனமாக விரும்புகின்றதென இவனது ஈகைக்குணத்தை விளக்கியபடி. கன்னனது தேருக்கு உதவித்தேர் வேண்டுவதில்லை; அவன் அசகாயசூரன் என்பான், 'தனித்தேர்' என்றான். கர்ணனது வில்லுக்கு 'காலபிருஷ்டம்' என்று பெயர்; 'விசயம்' என்றும் அவனுக்கு ஒரு வில் உண்டு. 'மலையஞ்ச வரால் பாயும் அணி வயல்சூழ் நன்னாடு' என மீன்கொழுமையை விளக்கி, அதனால் அதற்குக் காரணமான நீர்வளத்தை விளக்கியபடி. துரியோதனன் வீடுமனை இவ்வடைமொழிகொடுத்து விளித்ததனால், பெரியமலை யஞ்சும்படி சிறியவரால் பாய்கிற இந்நாட்டிற் பிறந்த உனக்கு எப்படிப்பட்ட பகைவரையும் வெல்வோமென்ற தைரியமில்லாமல் பெரிய பகைக்கு அஞ்சுந்தன்மை உள்ளதே என இகழ்ந்தவாறு. கார், மலை என்றவற்றின் இறுதியில் உயர்வுசிறப்புஉம்மை விகாரத்தால் தொக்கது. வண்மை - பண்புப்பெயர்; வள் - பகுதி, மை - விகுதி. பஞ்சவர் - ஐந்து என்னும் பொருள் தரும் பஞ்ச என்னும் வடமொழிப்பெயரின்அடியாப் பிறந்த பெயர்; தொகைக்குறிப்பு. ஆய, ய் - இறந்தகாலஇடைநிலை. 'சேர்க' என்றது, தான்பகைக்குஅஞ்சாதஅலட்சியத்தைக் குறிக்கும்; இனி, சேர் கம் அலை எனப் பிரித்து, சேர்- பொருந்திய, கம் அலை- நீரலையிலே, அஞ்ச - (காண்பவர்) அஞ்சும்படி, வரால்மீன் பாய்கிற என்றும் உரைக்கலாம். வரால்அஞ்ச அலைபாயு மெனினுமாம்.

"விதுரனல்லது வில்வல்லவீரர் பிற ரில்லையோ, உதாரசீல னுய ரங்கர் கோன் வரிவி லொன்றுமே யமையு முற்றெழும், பதாதியோடமரி லைவரும் பட மலைந்திடப் பரணி பாடவே" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம். (அ௬)

[இவ்வகை கன்னன்கரத்தில் தனு விருக்க, காண்டீவத்துக்கும் அருச்சுனனுக்கும் வேறு மாறு தேடவேண்டுமோ வென்று பேசிய துரியோதனனையும் இருந்த இராசாக்களையும் ஸ்ரீவீஷ்மனையும் நோக்கி யாதுசொன்னான் கன்னன்:]

கர்ணன் வீடுமனைப் பழித்தல்.

187.—(இ - ள்.) மண் அரசர் எண்ண - பூமியிலுள்ள அரசர்கள் மதிக்கும்படி, வரி சிலையின் வட்டத்து - கட்டமைந்த வில்லின்வட்டத்தைக் கொண்டு, நண்ணி - (போர்க்களத்தை) அடைந்து, பொருது - போர்செய்து, அகலும் - (வென்றபின்பு அவ்விடத்தை) விட்டுநீங்குகிற, நல்லோரை - நற்குணமுடையவர்களை, எண்ணில் - ஆராயுமிடத்து, ஒருவர் சோறு உண்டு

அங்கு ஒருவர்க்கு ஆய் பேசி திரிகுவரோ - ஒருத்தரது சோற்றை உண்டு அவ்வுண்டவிடத்திலேயே வேறொருத்தருக்குச் சார்பாய்ப் பரிந்துபேசிக் கொண்டு திரிவார்களோ? தெளிந்து சொல்லாய் - ஆராய்ந்து சொல்வாய்; (எ - று.)—இது, வீடுமனைநோக்கிக்கூறினது.

உலகத்திற் சுத்தவீரராகவுள்ளார் தமக்கு அன்னமிட்டவர்க்கு உதவியாகப் போரிற்சென்று தம்வல்லமையைக் காட்டிப் பகைவெல்வரே யொழிய, உன்னைப்போல ஒருத்தர்சோற்றையுண்டு அவர்க்குவிரோதியாகவுள்ளாரைக் கொண்டாடிப் பேசித் திரியார் என்பதாம். கீழ் வீடுமன் வீமார்ச்சுனரைப்புகழ்ந்ததைப்பற்றிக் கர்ணன் இங்ஙனம் இகழ்ந்தான். இதனால், விதுரனையிகழ்தலும் பெறப்படும். சிலையின்வட்டத்து - அம்புகளை வேகமாக நன்குஎய்யும்பொருட்டு வட்டவடிவமாக நன்றாய் வளைக்கப்பட்ட வில்லால் என்றபடி. பொருது அகலும் - பொருதுமுடிந்தாலன்றி இடையிலே அகலாத என்க. சிலையின்வட்டத்து - வில்வீரர்கூட்டத்தி லென்றுமாம்.

வட்டம் - வ்ருத்த மென்னும் வடசொல்லின் திரிபு. திரிகுவர், கு - சாரியை. ஆய் - ஆக என எச்சத்திரிபுமாம்.

"அருகிருந் தமுதருந்து நீ யிவனுடன் சிலர் பகைக்கின் மற்றவர்த மிசையு மாண்மையு மியம்புவாய்" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம். (அஎ)

கர்ணன் தன் பராக்கிரமத்தை யெடுத்துக்கூறல்.

188.—(இ - ள்.) தேர் வேந்திர்-ரதாதிபதிகளான அரசர்களே! யான் ஒருவன் நிற்க - நான் ஒருத்தன் இருக்கையில், எழில் விசயன் தன்னொடு - அழகிய அருச்சுனனுடனே, மா நெடு போர் செய்து மலைவாரை - மிக்க பெரும்போரைச் செய்து எதிர்க்க வல்லாரை, இருந்து தேடும் ஆறு - அமைந்திருந்து தேடும் விதம், எங்ஙனே - யாதுகாரணத்தால்? (இனி நீங்கள் அருச்சுனனையெதிர்க்கவல்லாரைத் தேடுதலை விட்டு), அவனை நாடும் ஆறு நயந்து எண்ணீர் - (ஓடிப்போகாமல் என்முன்னின்று போர்செய்யும்படி) அவ்வருச்சுனனைத் தேடும் விதத்தை விரும்பி ஆலோசிப்பீராக; (எ - று.)—இது, வீடுமன் துரியோதனன் முதலியோரை நோக்கிக் கன்னன் கூறியது.

அருச்சுனனையழிக்கவல்லவன் நானே யென்பதும், அவன் என்முன் நிற்கவல்லனல்ல னென்பதும் கருத்து. கர்ணன் தன்னிடம் எவ்வளவுசாமர்த்தியமுண்டோ அவ்வளவினும் மிகஅதிக முள்ளதென்று கருதிச் செருக்குக்கொண்டவ னாதலால், இவ்வாறுபேசுபவனானான். பரசுராமனிடத்து வில்வித்தைகற்றுத் தேர்ந்தவனும், மிக்கசாமர்த்தியமுடையவனும், அருச்சுனனைக்கொல்வே னென்று சபதஞ்செய்துள்ளவனும், நாகாஸ்திரங்கைவரப் பெற்றவனு மான நான் இருக்கையில் என்பது, 'யானொருவனிற்க' என்ற எடுப்பினால் விளங்கும். தான் - அசை. மற்று - வினைமாற்று. 'அவனைநாடுமாறு எண்ணீர்' என்றது, அவனை எப்படியாவது போருக்குவரும்படி செய்யுங்கள் என்றபடி. 'போர்செய்துமலைவாரை' என்பதை, மலைந்துபோர் செய்வாரை என விகுதிபிரித்துக்கூட்டினுமாம். (அஅ)

[என்பது: துரியோதனனையும் ஸ்ரீவீஷ்மனையும் நோக்கி, கன்னனென்று யான் இருக்க, அருச்சுனனுக்கு மாறுதேடுவதேதோ? என்று நேனிருங்குமலர்த்தாரான் கன்னன் தன்கையோடு அங்கைதாக்கித் துங்கமாமுடிதூக்கி நகையரும்ப, கண்டு துரியோதனனுக்கு மகாப்பிரியஞ்செல்ல, கேட்டு யாதுசொன்னான் ஸ்ரீபீஷ்மன்:]

வீடுமன் கர்ணனை இகழ்தல்.

189.—(இ - ள்.) இயல் வேந்தீர் - நற்குணமுடைய அரசர்களே! தானே விசயன் எதிர் நிற்பான் - இக்கன்னனே அருச்சுனனெதிரில் (போரில்)

நிற்குந் தன்மையன்? தன் ஆண்மை - இவனது பராக்கிரமத்தை, யான் அறியேன்போல் - நான் அறியேன்போலும்; வான் போர் பொருது - பெரிய போரைச் செய்து, அவுணர் சேனை எல்லாம் - அசுரர்களுடைய சேனைகளை யெல்லாம், பொன்றுவித்தான் தன்னோடு - அழியச்செய்த அருச்சுனனுடனே, எதிர் பொருவாய் - எதிரிற் போர்செய்யவல்லவன், நீயோ - நீதானோ? இயம்பு - சொல்; (எ - று.)

இப்பாட்டின் முன்னிரண்டடி - வீடுமன் சபையோரைநோக்கிக் கர்ணனைப் படர்க்கையாகவைத்துக் கூறியது. பின்னிரண்டடி - கர்ணனை முன்னிலைப்படுத்திக்கூறியது; அருச்சுனனது முன்நிற்கவும் கர்ணனால் ஆகாதென்பது, இதன் கருத்து. ஆண்மை - பௌருஷம். போல் - ஒப்பில்போலி; அதாவது - உவமைப்பொருளுணர்த்தாத 'போல்' என்னுஞ் சொல்.

மூன்றாம் அடியிற் குறித்த கதை:—அருச்சுனன், வனவாசத்தொடக்கத்தில் கைலாசத்திற்சென்று தவமியற்றிப் பரமசிவனிடத்தில் பாசுபதம் முதலியன பெற்றபின்பு அங்குவந்து அழைத்துப்போன தந்தையாகிய இந்திரனுடனே தேவலோகஞ்சேர்ந்து, அங்குத் தேவர்களது வேண்டுகோளின்படி அவர்கட்குப் பகைவராய்ப் பலநாளாகப்பெருந்துன்பமியற்றிவந்த (கடலிடையிலுள்ள தோயமாபுரவாசிகளான) நிவாதகவசரென்னும் அசுரர் மூன்றுகோடிபேரையும், (அந்தரத்துள்ள இரணியபுரவாசிகளான) காலகேயரென்னும் அசுரர் அறுபதினாயிரவரையும் ஆங்காங்குச்சென்று போர்செய்து அழித்தொழித்தனன் என்பதாம்.

இதனால், அருச்சுனன் இந்திராதிதேவர்க்கும் அழித்தற்கு அரிய அநேக அசுரரைவென்ற சிறப்பை எடுத்துக்காட்டியபடி. இப்படிப்பட்டவனுக்கு இக்கர்ணன் ஒருபொருளோ வென்று குறிப்பித்தவாறு.

வான்போர் - வானத்திற்சென்றுசெய்த போரும், வானவர்க்காகச் செய்த போருமாம். ஓகாரங்கள்-இழிவையும், எதிர்மறையையுங் காட்டும். 'நான் அறியேன்போல்' என்றது, இக்கர்ணன் அருச்சுனன்முன் பலமுறை போர்களில் தோற்றுப் புறங்கொடுத்ததை நான் பிரதியக்ஷமாகப் பார்த்து அறிந்துள்ளேனே என்றவாறு. எதிர்மறையிலக்கணையாகிய இகழ்ச்சிக்குறிப்பு, இது. (அகூ)

[இவ்வகை கர்ணன் சொல்லிய கட்டாண்மையும் சாமர்த்தியமும் அது கண்டு துரியோதனன் மகிழ்ந்திருப்ப நீதிமார்க்கம் மறுத்துரைக்கின்றது கண்டு தரியாது சபாமண்டபம் விட்டு நீங்கித் தன்கோயில் நோக்கிப் போயினான் ஸ்ரீபீஷ்மன் என்றவாறு. இவ்வகை ஸ்ரீபீஷ்மன் உரைத்தது பொறாது போயினானையும் வில்லைமுறித்துப்போயினவிதுரனையுங் கண்டு மற்று இங்கு இனிப் பிரயோஜனமில்லை யென்று யாதுசெய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் குந்தியினிடஞ் செல்லுதல்.

190.—(இ - ள்.) அங்கர் கோன் - அங்கதேசத்தார்க்கு அரசனான கர்ணன், சொல்ல - (இவ்வாறு செருக்கிப்) பேச, (அதுகேட்டு), அரவு உயர்த்தோன் - துரியோதனன், உள் மகிழ்ந்து - மனம்மகிழ்ந்திருக்க, பொங்கு இரு தார் வேந்தர் - விளங்குகின்ற பெரிய பூமாலையையுடைய (பல) அரசர்கள், புடை சூழ - பக்கங்களிற் சூழ்ந்திருக்க,—செம் கண் மால் - சிவந்த திருக்கண்களையுடைய கண்ணன், தாதாவாய் உள்ள தருமன்தனை பெற்ற மாதாவின்பால் - கொடையாளியாகவுள்ள யுதிஷ்டிரனைப் பெற்ற தாயாகிய குந்தியினிடம், வந்து அணைந்தான் - வந்துசேர்ந்தான்; (எ - று.)

இனி, 'தாதாவாயுள்ள தருமன்தனைப் பெற்ற மாதா' என்றதற்கு - கொடையாளியாகவுள்ள தருமிஷ்டனான கர்ணனைப் பெற்ற தாயான குந்தி

யென்று இவ்விடத்துக்கு ஏற்பப் பொருள்கொள்ளுதலும் பொருத்தம். கீழ்க் கர்ணனைக்குறித்துத் தருமன் சிறிதுஅச்சங்கொண்டு தன்னிடம் பிரஸ்தாபித்திருந்ததைக் கருதிக் கண்ணன் அதற்குச் சிலபரிகாரஞ்செய்யும்பொருட்டு அவனைப்பெற்ற தாயான குந்தியின் இருப்பிடத்துக்குச் செல்கின்றனனாதலால், இங்கே, 'தருமன்' என்பதற்கு - கர்ணனென்று பொருள்கூறுதல் சிறப்பாம்; "அந்நகர்தன்னில் வண்மை யருளழ காண்மை பேசுங், கன்னனைப் பயந்த காதற் கன்னிதன் கோயில் புக்கான்" என வில்லிபுத்தூரார்பாரதத்தில் வருதலுங் காண்க. தாதாவாயுள்ள தருமன் - தானமொன்றையே எல்லாத்தருமங்களினுஞ்சிறந்ததாகக்கொண்டு நடப்பவன்என்றபடி.

தாதா, மாதா - வடசொற்கள். கவி, இனி, குந்திவீட்டில் நடந்த செய்தியைக் கூறத்தொடங்கிவிட்டா ராதலால், அதனைத் தனக்கு அருகாகக் கருதி, 'சென்று அணைந்தான்' என்னாது 'வந்து அணைந்தான்' என்றார்; அன்றி, வந்து போய் என்பன - இலக்கியங்களில் ஒன்றன்பொருளில் மற்றொன்று சிறுபான்மை வருதலும் உண்டு. இங்கு இப்படிநடக்க, அங்குக் கண்ணன் குந்தியினிடஞ் சென்றானென்பார், 'சொல்ல, மகிழ, சூழ, செங்கண்மால், மாதாவின்பால் அணைந்தான்' என்றார். வில்லிபுத்தூரார்பாரதத்தில் ஆரணியபருவத்தின் முதலில் "அன்னையைச் சுபலன்பாவையருகுற விருத்தி" என்றதனால், பாண்டவர் வனஞ்சென்றபின் காந்தாரிவீட்டையடுத்துக் குந்தியிருந்தனளெனத் தெரிகிறது.

மகிழ்ந்து - மகிழ என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு. 'தார்' என்றது, அவரவர்க்கு உரிய அடையாளப் பூமாலையையும், போர்மாலையையுங் குறிக்கும். பரமசிவனது நெற்றிக்கண்ணின் நெருப்புக்கு இரையாகி எரிபட்ட மன்மதனது அங்கம் [உடம்பு] விழுந்த இடத்திற்கு, அக்காரணத்தால், 'அங்கதேசம்' என்று பெயர். (கூ0)

[இவ்வகை தேவதேவனும் எழுந்தருளிக் குந்திதேவியிருந்த கோயிற் புகுந்தானாகக் கருதுவது. இப்பால் ஸ்ரீவாசுதேவன் குந்திதேவி கோயிற் புகுந்து, மற்று அவளை வேறுகொண்டிருந்து யாதுஅருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன் :]

கண்ணன் குந்திக்கு நடந்தசெய்திகளைக் கூறுதல்.

191.—(இ - ள்.) மல் - மல்லவீரர்களை, ஆடும் - வென்ற, தோளான் - தோள்களையுடைய கண்ணன்,—கொற்றம் அரவு உயர்த்தோன் கோயிற்கண் நின்று - வெற்றிக்குஅடையாளமாகப் பாம்புக்கொடியை உயரஎடுத்த துரியோதனனது அரண்மனையிடத்தினின்று, போய் - சென்று, வெற்றித் தேர் வேந்தன் மகளோடும் - சயத்தைத்தருகிற தேரையுடைய குந்திபோசராசனது பெண்ணான குந்தியுடனே, உற்ற எல்லாம் - நடந்த செய்கைகளையெல்லாம், எடுத்து - எடுத்துச்சொல்லி,—(பின்பு), அ மாதினுக்கு - அந்தக் குந்திதேவிக்கு, மற்றதனை எல்லாம் - மற்றொருசெய்திமுழுவதையும், உரைத்தான் - சொல்லவனானான்; (எ - று.)—அதனை அடுத்தகவியிற்காண்க.

'உற்றவெல்லாம்' என்றது, வனவாச அஜ்ஞாதவாசங்களின் பின்பு பாண்டவர்க்குத் தான் தூதனாய் வந்தது முதல் வீடுமன் துரியோதனன் சபையைவிட்டு நீங்கினதுவரையில் நடந்த செய்திகளை. 'மற்றதனையெல்லாம்' என்றது, கர்ணன் குந்திக்கு இளமையில் சூரியனால் இரகசியமாகப் பிறந்த புத்திரனாதல் முதலியவற்றை. வெற்றித்தேர்வேந்தன் - சூரராசனுமாம். குந்தி - யதுகுலத்துச் சூரராசனது மகள்; வசுதேவனுடன் பிறந்தவள்; ஆதலால், கண்ணனுக்கு அத்தை: இவளைத் தந்தை தனது நண்பனும் அபுத்திரனு மாகிய குந்திபோசதேசத்து அரசனை குந்தி

யென்பவனுக்குத் தத்துக்கொடுத்தான்; இவளுக்கு, இதுபற்றியே, குந்தி யென்று பெயர்: பிருதை யென்பது, இவளது இயற்பெயர்.

மல்லரை வென்ற கதை:—கம்சனால் அழைக்கப்பட்டுக் கிருஷ்ண பலராமர் அவனது சபையிற் செல்லுகையில், அவனாலேவப்பட்ட சாணூரன் முட்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்து எதிர்த்து உக்கிரமாகப் பெரும்போர்செய்ய, அவர்களையெல்லாம் இவ்யாதவவீரர் இருவரும் மற்போரினாலேயே கொன்று வென்றிட்டனர் என்பதாம்.

கண் - இடம். நின்று - ஐந்தாம்வேற்றுமைச்சொல்லுருபு, நீக்கப்பொருளது. உற்ற - இறந்தகாலப் பலவின்பால் வினையாலணையும்பெயர்; பெயரெச்சமாகவுங் கொள்ளலாம். மாது - விருப்பத்தை யுணர்த்தும் மாதர் என்னும் உரிச்சொல்லின் விகாரம்; விரும்பப்படும்அழகையுடைய பெண்ணுக்கு, ஆகுபெயர்; இன், உ - சாரியைகள். மற்றதனையெல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். (கக)

[என்பது: துரியோதனனிடைக்குத் தான் தூதனாய்வந்தபடியும், தருமபுத்திரன்சொற்படி வழுவாமல் பாதிநாடு வேண்டிப் பெறுதவாறும் பஞ்சகிராமம்வேண்டத் தாராததும், மயிர்முனைகுத்தமண்கொடே னென்றவாறும், அவன் வன்மையினாற் சிறுதாதையைப் பரிபவம்பண்ணி மூண்டுபோய் அவன் மூரிவில்லை முறித்தவாறும், கன்னன் பேசிய கட்டாண்மையும், மற்றும் உற்றவார்த்தையெல்லாம் உரைத்துப் பின்னும் யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் குந்திக்குக் கர்ணன்வரலாற்றைக் கூறல்.

192.—(இ - ள்.) எரி கதிரோன் - விளங்குகிற கிரணங்களையுடைய சூரியன், நல்கும் - பெற்ற, இளை காதல் - இளம்பிள்ளை, நின்னால் - உன்னால், பொரு புனலால் - அலைமோதுகின்ற ஆற்றுநீரின்மூலமாக, போக்குண்டான் கண்டாய் - செலுத்தப்பட்டா னன்றோ? (அம்மகன், பின்பு), தெரிந்து - (ஆயுதவித்தைகளை) அறிந்து, குரு பதிக்கு - குருகுலத்துக்குத் தலைவனை துரியோதனனுக்கு, தோழனும் ஆய் - சிநேகிதனுமாய், வெற்றியும் ஆய் - (அவனுக்குச்) சயத்தைத் தருபவனுமாய், வீமற்கும் பார்த்தற்கும் தெற்றியும் ஆய் - வீமனுக்கும் அருச்சுனனுக்கும் (போரில் வெல்லத்) தடையுமாய், நின்றான்—; (எ - று.)

இதிற்குறித்த கதை:—துருவாசமகாமுனிவர் ஒருகாலத்தில் குந்திபோசராசனது அரண்மனைக்கு எழுந்தருள, அங்கு அவ்வரசன் அம்முனிவர்க்கு எல்லாப்பணிவிடைகளும் இயற்றும்படி நுண்ணறிவுடைய கன்னிகையான குந்தியை நியமிக்க, அவளும் அங்ஙனமே தவறாமல் ஒருவருஷகாலம் உபசரித்துவர, பின்பு அம்முனிவர் அங்குநின்று செல்லுகையில், மிகமனமுவந்து குந்திக்குச் சிலமந்திரம்உபதேசித்து அதனால் தேவர்களை வரவழைக்கவும் அவர்களருளாற் புத்திரபாக்கியத்தைப் பெறவும் ஆகுமென்று கூறிப் போக, பெண்களுக்கு இயற்கையான பேதைமையுடைய குந்தி, அதைப்பரீக்ஷித்துப் பார்க்கவிரும்பித் தனியே மேல்மாடத்திற் சென்று ஒருமந்திரத்தைச்சொல்லிச் சூரியனைத் தியானிக்க, உடனே அவன் உக்கிரமானதன்வடிவத்தைவிட்டுச் சாந்தமானவடிவத்தோடு அருகில்வந்துசேர்ந்து அவளிடம் ஒருமகனுண்டாகும்படி அருள்செய்ய, தேவர்களனுக்கிரகத்தாலுளதான கருப்பம் காலதாமதமின்றி உடனே பிறந்திடுமாதலால், அப்பொழுதே குந்திதேவி ஒருபுத்திரனைப் பெற்று இச்செயல்வெளிப்பட்டால் வரும் அவமானத்துக்கு அஞ்சி உடனே அக்குழந்தையை ஒரு மிதக்கும்மரப்பெட்டியில் வைத்துப் பூட்டி நதியில் விட்டிட, அவ்யாற்றுவெள்ளத்தில் மிதந்துசென்றுகொண்டிருந்த

பெட்டியை எடுத்துப்பார்த்த திருதராட்டிரன்தேர்ப்பாகன் அதில் அக்குழந்தையைக்கண்டு மகிழ்ந்து வளர்க்க,அவன் பின்பு பரசுராமனிடம் வில்வித்தை கற்றுத்தேர்ந்து துரியோதனனுக்குச் சிநேகிதனாகி அவனருளால் அங்கதேசத்து அரசாட்சியைப் பெற்று அவனுக்குப் பகைவரான பாண்டவர்க்குத் தானும் பகைவனாய்ப் போரில் அவர்களை வெல்லவொட்டாது தடுக்க இருக்கின்றனன் என்பதாம்.

காதல் - ஆசை; அதற்குஇடமான மகனுக்கு, ஆகுபெயர்: காதலனென்று புத்திரனுக்கு ஒருபெயர். 'கின்னால்' என்பதில், 'ஆல்' என்னும் மூன்றனுருபு - கருத்தாப்பொருளதும், 'புனலால்' என்பதில் அவ்வுருபு - கருவிப்பொருளதுமாம். 'போக்குண்டான்' என்பதில், உண் - செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்தும் இடைநிலை. பார்த்தன் - பிருதையின் மகன்; வடமொழித் தத்திதாந்தநாமம்: பிருதை யென்பது - குந்தியின் இயற்பெயர். பார்த்தனென்னும் பெயர் - தருமன் வீமன் இவர்க்கும் பொருந்துமாயினும், பெரும்பாலும் அருச்சுனனுக்குச் சிறப்பாக வழங்கப்படும். 'தாய்க்கு இளையமகனிடத்தில் அன்பு மிகுதி' என்ற பொதுநியாயம் இதற்குக் காரணமாகலாம். (பெற்று என்பது பெற்றி எனத் திரிதல்போல), தெற்று என்பது தெற்றி என ஈறுதிரிந்தது. (கூஉ)

[என்பது:நீ கன்னியாயிருக்கின்றகாலத்து ஆதித்யபகவானால்தரப்பட்ட புத்திரனை வடுவென்று அஞ்சி அர்த்தராத்திரியில் பேராற்றிடை மிதவைப் பேழையி னிட்டு ஒழுக்கின இளங்குமாரனும் போய்க் கங்காசலம்புகுமளவில், திருதராஷ்டிரன்தேர்ப்பாகன் ப்ரீதிகாமயன் எடுத்து வளர்த்து நாமகரணந் தரிக்கையில், ஆதித்யபகவான் இட்ட புத்திரனாகையால் அசதியாகத்தோன்றிக் கூறியபடி கன்னனென்று நாமகரணந்தரித்து வளர்கின்ற நாளகத்து, பரசுராமனால் ஆயுதசிக்ஷைபயிற்றித் திவ்வியாஸ்திரங்கள்வல்லவாறும், அது கண்டு துரியோதனன் தனக்குத்தோழனாக்கிக்கொண்டு அபிஷேகம்பண்ணி அங்கவளநாடுகொடுத்து அங்கராசனென்று அபிஷேகமானவாறும், துரியோதனனுக்கு மிகவும்அந்தரங்கனாய்ப் பெருந்தேராட்களில் முன்தோன்றலாய்ப் பாண்டவர்க்குப் பழிபாவம்விளைக்கின்றான்கண்டா யென்றுஞ் சொல்லி, அவனை நீ அன்னியனென்றுகருதாது நின்புத்திரனென்னுமது மிகத்தெளிந்து, மற்று அவன்பாற் போய்ப் பேசித் தம்பிமாருடன் கூடித் தரணிதனை ஆள்வதற்கு வம்பவிழ்தார்மன்னா வா என்று அழைத்துக்கொண்டுபோது; வர்திலனாகில் இங்ஙனஞ்சொல்லுவாயாக என்று பின்னும் யாது அருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன் :]

கண்ணன் குந்தியைக் கர்ணனை வரங்கேட்குமாறு சொல்லல்.

193.—(இ - ள்.) ஆர்த்த-(எங்கும்) ஆரவாரித்துக்கூறப்படுகிற, புகழ்-சீர்த்தியையுடைய, அங்கர் கோன் - அங்கநாட்டார்க்குத் தலைவனான கர்ணன், தான் வளர்த்த - தான்வளர்த்துப் பாதுகாத்துவருகிற, மா நாகம் - பெரிய பாம்பு [நாகாஸ்திரம்], பார்த்தன்மேல் பட்டால் - அருச்சுனன்மீது படுமானால், பரிசு அழிக்கும் - (அவனது) பெருமையைக் கெடுக்கும்; (ஆதலால்), போய் - (நீ கர்ணனிடம்) சென்று, தனை - அந்தக்கர்ணனை, எச்சில் கணை என்று இரண்டாவது எய்யாமல் - எச்சிற்கணையாக (அந்நாகாஸ்திரத்தை அருச்சுனன்மேல்) இரண்டாம்முறை பிரயோகியாதபடி, ஏல் - வரம் வேண்டுவாய்; (அவ்வரத்தை அவன்கொடுப்பானோ வெனில்),—தான் - அக்கர்ணன்தான், இங்கு - இவ்வுலகத்தில், இச்சித்து - (தனது பொருள்களுள் ஒன்றை மற்றொருத்தர்) விரும்ப, வேண்டான் - (தான் அதனை மீண்டும்) விரும்பான்; (எ - று.)

கிருஷ்ணனும் அருச்சுனனும் ஒருநாள் பூம்பந்துவிளையாடிக்கொண்டிருக்கையில், அக்கினிபகவான் மிகப்பசித்து அந்தணவடிவத்தோடு வந்து 'இந்திரனதுகாவற்காடாய் யாவர்க்கும்அழிக்கவொண்ணாததாய் நிலவுலகத்திலிருக்கின்ற காண்டவவனமென்னும் பூந்தோப்பை அதிலுள்ள சராசரங்களுடனே எனக்கு விருந்திடவேண்டும்' என்று வேண்ட, கிருஷ்ணஅருச்சுனர்கள், அங்கே புக்கு ஒதுங்கியிருக்கின்ற அசுரர் முதலிய துஷ்டர்களை அழித்தருளவேண்டுமென்னும் நோக்கத்தால் 'நீ இதனைப் புசி' என்று இசைந்துஅளிக்க, உடனே நெருப்புப்பற்றியெரிக்கையில், அவ்வனத்தினின்று ஓடுகிற பிராணிகளை அருச்சுனன் அம்பெய்துகொன்று அத்தழலிலே விழுத்திவருகிறபொழுது, தக்ஷகனென்னும் நாகராசனது மனைவி தன்குழந்தையாகிய அசுவசேனனென்னுஞ் சிறுநாகத்தைத் தன்வாய்க்குள் மறைத்துவைத்துக்கொண்டு அங்கிருந்து ஆகாயமார்க்கத்தில் எழும்ப, அதுகண்டு பார்த்தன் தன்பாணத்தால் அந்தநாககன்னிகையின்தலையைத் துணிக்க, உடம்பு நெருப்பிலும் தலை வெளியிலுமாக விழுந்தது. அப்பொழுது அதன்வாயிலிருந்த நாககுமாரன் வால்மாத்திரம் அறுப்புண்டு பிழைத்துஎழுந்து தன்தாயைக் கொன்ற அவன்மீது கறுக்கொண்டு அவனுக்குப்பகைவன்யாரென்றுவிசாரித்து அஸ்திரவடிவமாகக் கன்னனை அடைந்தன னென்பது கதை. அதனை அருச்சுனன்மேல் அவன் ஒருமுறையே விடும்படியும், அப்பொழுது இவன் அதற்குத்தப்பிப் பிழைத்தால் மீண்டும் அதனை இவன்மேல் விடாதபடியும் கர்ணனிடம்வரங்கேட்டுப் பெறுமாறு கண்ணன் குந்தியைத் தூண்டினன். "எரியமுதருந்தக் கானம் எரித்தநா ளகன்றுபோன, அரவினை யங்கர் கோமான் ஆசுகமாகக் கொண்டான், வரிசிலை விசயன்தன்மேல் மறுகணை தொடுக்காவண்ணம், ஒருவரம் வேண்டு கென்றான் உற்றவர்க் குறுதி சூழ்வான்" என்றார் வில்லிபுத்தூராரும்.

பரிசுஅழிக்கும் - தோற்றுஅழியச்செய்யும் என்றபடி. தனை - தன்னை. ஏல் - ஏவலொருமை; இரப்பாய் என்று பொருள். ஒருதரம் உபயோகிக்கப்பட்டுத் தவறிப்போனதை 'எச்சிற்கணை' என்று இகழ்ச்சிதோன்றக் கூறியபடி. எஞ்சுதலையுடையது, எச்சில்; எஞ்சு - பகுதி, இல் - கருத்தாப்பொருள் விகுதி: எஞ்சுதல் - சேஷித்தல். இச்சித்து - இச்சிக்க வென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு. 'இச்சித்துவேண்டான்று னிங்கு' என்றதனால், வேண்டியதை மறுக்காத கர்ணனது தானகுணத்தைப் புகழ்ந்தபடி. இச்சித்து ஏல் என்றலும் ஒன்று. (கூங)

[என்பது: அவனையழைக்க வந்திலனாகில், நினக்கு ஒருவரந்தருவாயாகென்று வேண்டிக்கொள்வாய்; வரமாவது - அர்ச்சுனன் காண்டாவனத்தை எரிமூட்டியஞான்று தன்சரீரம் அறுப்புண்டு வல்லவாறு பிழைத்துப் போந்து கன்னன் தன்பக்கல் சென்று அடைந்து மற்றவனை ஆசிரயித்து அருச்சுனனுக்குப் பகையாக வாழ்கின்றது அசுவசேனனென்னும் மகாநாகத்தினை இமையவராலும் வெல்லவரிது; மற்று அதனை அருச்சுனன்மேல் இரண்டாவது எச்சிற்கணையாகத் தொடாநாக வேண்டிக்கொண்டு வருவாயாக என்று ஸ்ரீ வாசுதேவன் அருளிச்செய்ய, கேட்டு வேல்நெடுங்கண் அருவிசோர விம்மிவிம்மி வெய்துயிர்த்து யாதுசொல்லி யாதுசெய்தாள் குந்திதேவி :]

அதுகேட்டுக் குந்தி வருந்தல்.

194.—(இ - ள்.) சேய் ஆறு - செந்நிறமுடைய ஆற்றின்புதுவெள்ளம், தேக்கு உந்தி - (வேகத்தால்) தேக்குமரங்களைத் தள்ளிக்கொண்டும், சந்து இடறி-சந்தனமரங்களை முறித்துக்கொண்டும், சேய் அணைக்கும்- வெகுதூரம் தழுவிப் பாயப்பெற்ற, தண் பணை - குளிர்ந்த கழனிகள், சூழ் - சூழ்ந்த, மா

குந்தி - பெரிய குந்திபோசதேசத்துக்கு, கோமான் - அரசனான குந்தியென்பவனது, மகள் - பெண்ணாகிய குந்தி, (கண்ணனைநோக்கி), 'மாய - மாயையுடையவனே! நீ செய்திட்ட வஞ்சனையின் மாயத்தை - நீ செய்த வஞ்சனையினது சூழ்ச்சியை, ஏதோ அறியேன் - இன்னதென்று அறிகிறேனில்லை,' என - என்றுசொல்லி, குழைந்தாள் - மனம்வருந்தினாள்; (எ - று.)

கர்ணன் தான்பெற்ற மகனென்று தெரிந்திருந்தும் கண்ணன் அச்செய்தியை இவ்வளவுநாளாய்த் தனக்குச்சொல்லாமலே மறைத்துவைத்திருந்து இப்பொழுது பகைமைமுற்றிப் போர்மூண்டபின்பு தெரிவித்ததையே, 'நீ செய்திட்ட வஞ்சனையின் மாயம்' என்றாள். மாய என்றது, இச்சந்தருப்பத்துக்கு ஏற்ற விளி. மூன்றும் அடி - அந்நாட்டின் நிலவள நீர்வளங்களை விளக்கும்.

செம்மை + ஆறு = சேயாறு; பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு முன்னின்றமகரமெய் யகரமாத் திரிந்தது. தேக்கும், சந்தனமும் - மலைபடுபொருள்கள். மலையிலிருந்து உற்பத்தியாகுதலால், நதி, குறிஞ்சிநிலப்பொருள்களை அங்குநின்று கொழித்துக்கொண்டு வருவதாயிற்று. சந்து - வடசொல் திரிபு. 'சேயணைக்கும்' என்பதில், செய்மை யென்னும் பண்புப்பெயர் ஈறுபோயிற்று. 'சேயாறு' என்றது, சோணையென்னும் நதியாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது; சோணையென்பது, செந்நிறமுடைய தெனப்பொருள் படுதலால். இனி, சேய் ஆறு - நெடுந்தூரஞ்செல்லுந் தன்மையதான ஆறு, தேக்கு உந்தி சந்து இடறி - தேக்குமரங்களையும் சந்தனமரங்களையும் முறித்துத்தள்ளிக்கொண்டு, சேய் அணைக்கும் - கழனிகளில் தவழப்பெற்ற, (சேய் - செய் என்பதன் நீட்டல்), தண் பணை - குளிர்ந்த மருதநிலம் எனக்கொள்ளினுமாம். குந்தியென்பது வடசொல்லாதலின், அதன்முன் வலி இயல்பு; "இடை யுரி வடசொலி னியம்பிய கொளாதவும்." 'குந்திக்கோமான்' என்ற பாடமுங் கொள்ளலாம்.

குந்தியென்னும்அரசனதுபெயராலேயே அவனாண்ட போசதேசத்தின் பாகத்துக்கு 'குந்திபோசதேசம்' என்று பெயராயிற்று என்றும், பிருதைக்குக் குந்தியென்ற பெயர் தந்தைபெயர் பெண்ணுக்கு வழங்கிய தோர் ஆகுபெயரா மென்றும் அறிக. (கசச)

இதுவும் அது.

195.—[அன்றியும்], (இ - ள்.) மன்னும் -நிலைபெற்ற, கடலை - திருப்பாற்கடலை, வலம் ஆ கடைந்த - பலமாகக் கடைந்திட்ட, காரணனே - லோககாரணனாகவுள்ளவனே! என்னை அறிந்தாயே - என்னை (க் கர்ணனது தாயென்று நீ) அறிந்துள்ளாயே; (அறிந்திருந்தும்), என் மகன் ஆம் ஆறு - (அவன்) எனதுபுத்திரனாகும்விதத்தை, முன்னம் உணராதே - முன்னமே (நான்) அறிந்திடாதபடி, மூடினாய் - (எனக்குச் சொல்லாது) மறைத்துவைத்தாய்; (இப்பொழுது நீ), என் முன் - எனது முன்னிலையில், உடல் அவலம் சொல்லாது ஒழி - அவனுடம்புக்குத் துன்பமான இக்காரியத்தைச் சொல்லாமல் விடு; (எ - று.)

நீசொன்னபடி அருச்சுனன்மேல் நாகாஸ்திரத்தை இரண்டாம்முறை விடாதவாறு கர்ணனை நான் வரங்கேட்டுப் பெற்றால், அது, அவன் அருச்சுனனாற் போரிற்கொல்லப்பட்டு இறத்தற்குக் காரணமாய் முடியும்: ஆதலால், அதனை என்னுடன் சொல்லவேண்டா; எல்லாம்அறிந்த நீ முன்னமே கர்ணன் என்மகனென்று எனக்குத்தெரிவித்திருந்தால் நான் அவனைப் பாண்டவருடன் சந்திசெய்வித்திருப்பேன் என்பதாம்.

கடல்கடைந்த கதை:—முன் ஒருகாலத்தில் இவ்வண்டகோளத்துக்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்திற் சென்று திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒருபூமாலை பிரசாதிக்கப்பெற்ற ஒரு வித்தியாதரமகள் மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன்கைவீணையில் தரித்துக்கொண்டு பிரமலோகவழியாய் மீண்டுவருகையில், துருவாசமகாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித் துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்குஅளித்திட்டாள். அதன்பெருமையை யுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட முனிவன் ஆநந்தத்தோடு தேவலோகத்துக்கு வருகையில், மிகஉல்லாசமாக ஐராவதத்தின் மேற் பவனிவந்துகொண்டிருந்த இந்திரனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக் கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி யானையின் பிடரியின்மேல் வைத்தவளவிலே, அம்மதக்களிறு அதனைத் துதிக்கையாற் பிடித்திழுத்துக் கீழ்எறிந்து காலால் மிதித்துத் துவைத்தது. அதுகண்டு முனிவரன் கடுங்கோபங்கொண்டு 'இங்ஙனஞ்செல்வச்செருக்குற்ற நினது எல்லாஐசுவரியங்களும் கடலில் ஒளித்துவிடக்கடவன' என்று சாபங்கொடுக்க,உடனே தேவர் செல்வம்யாவும் ஒழிந்தன; ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர். பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான்அபயமளித்துக்கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாகநாட்டி வாசுகியென்னும் பாம்பைக் கடைகயிறுகப் பூட்டிப் பாற்கடலைக் கடைகையில், வாசுகியின் வாலைப் பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் என்னும் இருதிறத்தாரும் அதனை வலியப்பிடித்திழுத்துக் கடையவல்ல வலிமை யில்லாதவராய் நிற்க, அதுநோக்கி அவ்வெம்பெருமான் தான் ஒருதிருமேனியைத் தரித்துத் தேவர்கள்பக்கத்திலேயும் வேறொருதிருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று பாம்பின் வாலையுந் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தருளினன் என்பதாம். இவ்வரலாற்றால், தான்சிரமப்பட்டாயினும் தன்னைச் சரணமடைந்தாரைப் பரிபாலிக்கும் பகவானது கருணை வெளியாம். (கரு)

[என்று இவ்வகை சொல்லிப் பின்னும் யாதுசொல்லிப் பிரலாபித்தாள் குந்திதேவி:]

குந்தி கர்ணனை நினைத்துக்கொண்டு புலம்புதல்.

196.—(இ - ள்.) ஐயா - குழந்தாய்! மந்திரத்தின் வாய்ப்பு கண்டு - (துருவாசமுனிவன் உபதேசித்த)மந்திரத்ினது பலிக்கும்விதத்தைப் பரீக்ஷைபார்த்து, உனை பெற்ற அ பொழுதே - (நான்) உன்னைப் பெற்ற அப்பொழுதே, வாழும் குடி பழுது ஆம் என்று - (நான்பிறந்து) வாழ்கிற குலம் பழிப்படையுமே யென்று எண்ணி,(அதுபழிப்படையாமைக்காக), வையம் அறியாமே - பூலோகத்தார் அறியாதபடி, பையவே பேழையினுள் செறித்து - மெல்ல ஒருபெட்டியில் வைத்துப் பூட்டி, பேர் ஆற்றில் போக்கினேன் - பெரிய நதியிலே செலுத்தினேன் ! (எ - று.)

அறியாமே - மேவிகுதிபெற்ற எதிர்மறைவினையெச்சம். வாய்ப்பு -'பு' விகுதிபெற்ற தொழிற்பெயர். பைய - பசுமை யென்னும் பண்பினடியாப் பிறந்த குறிப்பு வினையெச்சம்; இது, மந்தக்குறிப்பாய் வழங்கும். பேழை - பேடக மென்னும் வடசொல்லின் சிதைவு.'பேராறு'என்றது, கங்காநதி யென்று தெரிகிறது. வாழுங் குடி - இனிவாழுங் குடி யெனப் புகுங்குலத்தைக் குறித்ததுமாம். மகனை 'ஐயா'என்றது, அன்புபற்றிய மரபுவழுவமைதி. (கசு)

இதுவும் அது.

197.—(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது [இளமையில்], யான்—, முலை பொங்கு பால் ஊட்டி - (எனது)கொங்கைகளினின்று சுரக்கிற பாலை

(உனக்கு) உண்பித்து, பூ தட கண் மை எழுதி - தாமரைமலர்போன்ற பெரிய (உனது)கண்களில் மைதீட்டி, மங்கையர் பாராட்ட வளராதே - மகளிர் கொண்டாட (உன்னை)வளர்க்காமலே,— நின் - உன்னுடைய, எங்கும் பால் நாறும் - எவ்விடத்தும் பால்மணம்வீசுகிற, இன் சொல் பவளம் வன்னம் வாய் - இனிமையான மழலைச்சொற்களையும் பவழம்போலச்சிவந்த நிறத்தையு முடைய வாயினது, முத்தை—, யான்—, ஆர பெற்றிலேன் - அனுபவிக்கப் பெற்றேனில்லை! (எ - று.)

இதுவும், கீழ்க்கவியும் - குந்தி கர்ணனிடங் கொண்ட அன்புமிகுதியால் அவனை எதிரிலிருக்கிறவாறுபோலப் பாவித்துக் கழிவிரக்கத்தோடு கூறியவை. பூ - அழகிய என்றுமாம். வளராது - பிறவினைப்பொருளது. ஏகாரம் - இரக்கம். பவளம், வன்னம் - ப்ரவாளம், வர்ணம் என்ற வடசொற்களின் திரிபு. முத்தை ஆரப்பெறுதல் - திருப்தியாக முத்தமிடப்பெறுதல்.

[என்று இவ்வகை சொல்லிப் பிரலாபித்துப் பின்னும் ஸ்ரீவாசுதேவனை நோக்கிச் சொல்லுவாள்: இந்நெடுநாளும் என்னையும் அவனையும் மாதா மகன் என்று அறிந்த நீ முன்னம் உரையாது இன்றுஉரைத்தாய்; எம்பெருமான்! இனி அவன்பால் யான்போய் அவனை வேண்டிக்கொண்டு அசுவசேனனை விலக்கினால் அவன்படு மாதலால், எனக்கு அவனும் மகனன்றோ? எனச் சொல்லி நின்றானை நோக்கி யாதுஅருளிச்செய்தான் ஸ்ரீவாசுதேவன் :]

கண்ணன் குந்திக்குச் சமாதானங்கூறுதல்.

198. — (இ - ள்.) திருமகள் சேர் மார்பன் -இலக்குமி வீற்றிருக்கப்பெற்ற திருமார்பையுடைய கண்ணன், சிறந்து - சிறப்பாக [தகுதியாக என்றபடி] ,—(குந்தியை நோக்கி), ஐவர்க்கும் - (பாண்டவர்) ஐந்துபேருக்கும், ஓர் உயிரே - உயிர் ஒன்றே; ஐந்து உறுப்பு ஆம் - உடம்புமாத்திரமே ஐந்தாம்; ஆதலால்—, ஐவரும் சாகை - அந்தஐந்துமக்களும் இறத்தல், அழகியதோ - அழகுடையதாமோ?வை வேல் ஒருவனுமே சாகை - கூர்மையான வேலாயுதத்தையுடைய (கர்ணனாகிய) மகனொருத்தன்மாத்திரமே இறத்தல், அழகு அன்றோ - அழகியதன்றோ? என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

கர்ணன் சமாதானத்திற் பாண்டவரோடுகூடாவிடின், உன்மக்கள் அறுவருள் கர்ணனாவது அருச்சுனனாவது இறத்தல் திண்ணம்; அவ்விருவருள் அருச்சுனன் இறப்பானாயின் அது மற்றைநால்வர்பாண்டவரும் அழிதற்குக் காரணமாய்முடியும்; ஏனெனின்,—பஞ்சபாண்டவர் உடல்வேறும் உயிரொன்றும் என்னும்படி அந்நியோந்நியமாயிருப்பவ ராதலால், ஒருவன் இறக்க, மற்றையோர் பிழைத்திரார்; ஆதலால், ஐவரும் இறத்தலினும் கர்ணன் ஒருவன் இறப்பதே மேல்: ஆனதுபற்றி, அவனைப் பாண்டவரோடு கூட்டுதற்கும் கூட்டமுடியாவிடின் நாகாஸ்திரத்தை இரண்டாம்முறை செலுத்தாதபடி வரங்கேட்டற்குமாக நீஅவனிடஞ்செல்வதே தகுதியானதொழில் எனக் கண்ணன் உறுதிகூறினான். "பைவருந் தலைக ளைந்து படைத்த பன்னகமே போல, ஐவரும் படுதல் நன்றோ அங்கர்கோன் படுதல் நன்றோ, உய்வருஞ் சமரி லாவி யொருவர்போ யொருவ ருய்யார், நைவருந் துயர மாறி நட்பதே கரும மென்றான்" என்பது, வில்லிபுத்தூரார்பாரதம்.

ஐவர்க்கும், ஐவரும், உம் - முற்று. ஒருவனும், உம் - இழிவுசிறப்பு. உயிரே, ஏ - தேற்றம். ஒருவனுமே, ஏ - பிரிநிலை. அழகியதோ, ஓ - எதிர்மறை. அன்றோ - தேற்றம். சிறந்து - சிறக்க வென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு; சிறந்து என்றான் என இயையும். இனி, சிறந்துசேர் என இயைத்தலுமாம்.

(கஅ)

[என்பது: அருச்சுனனைக் கொல்லில் ஐவருயிரும் நாசமாம் ஆதலால்; இவர்கட்குச் சத்துருவாகிச் சமைகின்ற கன்னனொருவனுமே சாகை நன்று என்று அருளிச்செய்யக் கேட்டும் நின்றவளை முகம்நோக்கி ஈண்டன் கன்னன் பாற் போவாயாக என்று தெருட்டி மற்று அவள்பால் விட்டுநீங்கி யாதுசெய்தான் ஸ்ரீவாசுதேவன்:]

கண்ணன் மீளவும் விதுரன்மாளிகை சேர்தல்.

199.—(இ - ள்.) கொண்டல் நிறம் கோமான் - நீர்கொண்ட காளமேகம்போன்ற நிறத்தையுடைய தலைவனான கண்ணன்,—குந்திக்கு உரைத்தருளி - (இவ்வாறு) குந்திக்கு அருளோடு சொல்லிவிட்டு,—ஒள் திறல் சேர்மிக்க பகைமை பொருந்திய, மை ஆரும் நெஞ்சத்து - குற்றம் நிறைந்த மனத்தையுடைய, வாள் அரவம் முன் உயர்த்தோன் - கொடிய பாம்புக்கொடியை முன்னிடத்தே உயரக்கட்டின துரியோதனன், பொய் ஆசனம் இட - வஞ்சனையான ஆசனத்தை (த் தனக்காக) அமைக்க, போந்து - சென்று, விண்டலரை வெல் விதுரன் வீடு அணைந்தான் - பகைவர்களை வெல்லுந்தன்மையுள்ள விதுரனது வீட்டைச் சேர்ந்தான்; (எ - று.)

'அரவமுயர்த்தோன் பொய்யாசனம் இடக் கண்ணன் விதுரன்வீடணைந்தான்' என்றது, துரியோதனன் கண்ணனைப் படுகுழிபாய்ச்சி விலங்கிட்டுச் சிறையில் வைக்குமாறு ஆலோசித்துப் பிலவறைதோண்டி அதனை மூங்கிற் பிளாவைகளால் மூடி அதன்மேல் வஞ்சனையாக ஓர்ஆசனமிட்டு வைத்தற்கு அவகாசங்கிடைக்குமாறு கண்ணன் விதுரன்வீட்டைச் சேர்ந்தனன் என்றபடி. கண்ணன் விதுரன்வீடுசேர்ந்தவுடனே சூரியன் அஸ்தமிக்க, அவ்விராத்திரியிலே இங்குத் துரியோதனன் சபையிற் பொய்யாசனமிட்டு வைப்பானானன் என்ற உண்மையைக் கவி சாதுரியந்தோன்ற வேறுவிதமாகக் கூறினார். துரியோதனனிடந் தூதுபோன காரியம் முடிந்துவிட்டதனால் கண்ணன் உடனே மீண்டு உபப்பிலாவியத்தை நோக்கி வந்திருந்தால் துரியோதனன் பொய்யாசனமிடுதற்குச் சந்தர்ப்பமில்லை யன்றோ? அங்ஙனம் உடனே மீளாமல் ஓரிரவுஅங்குத்தங்கினது, அவன் பொய்யாசனமிட்டுத் தன் கோபத்தை வளர்த்து அழியும்பொருட்டாகவே யென்றவாறு. எம்பெருமான் எதிர்காலவுணர்ச்சியு முடையனாதலால், இங்ஙனந் தங்கின னென்றார்.

கொண்டல் - தொழிற்பெயர்; கொள் - பகுதி, தல் - விகுதி, ளகரதகரங்கள் ணகரடகரங்களானது - சந்தி; இது - மேகத்துக்குத் தொழிலாகு பெயர். விண்டல் - விள்ளுதல், மனம்வேறுபடுதல்; இதுவும் - தொழிற்பெயர்: பகுபதவுறுப்புக் கீழ்க்கூறியதுபோலவே. விள்ளுதலையுடையவர், விண்டலர் எனப் பகைவர்க்குக் காரணக்குறி; இது - உடன்பாட்டுவினையாலணையும் பெயர்; கீழ் வந்த 'மருவலர்' முதலியன போல எதிர்மறைவினையாலணையும்பெய ரன்று. கண்ணபிரான் தானே நேரில்எழுந்தருளப்பெற்றும் மனந்திருந்தி அரசுசிறிதுந்தாராமையோடு அப்பெருமானுக்குத் தீங்குசெய்யவுந் துணிந்த துரியோதனனது கொடுமைமிகுதியைக் காட்டுதற்கு, 'ஒண்டிறல்சேர் மையாருநெஞ்சத்து' என்றார். ஆஸநம் - வடசொல்; தங்குமிடம்.

இனி, இப்பாட்டின் பின்னடிகளை அடுத்தபாட்டோடு இயைத்துக் குளகமாக்கி, கண்ணன் குந்தியோடு விதுரன்வீட்டையடைந்தபின் துரியோதனன் (அப்பெருமானுக்குப்) பொய்யாசனமிடும்பொருட்டுச் சென்று சபையில் வீற்றிருந்தா னெனினும் அமையும். (கசக)

[இவ்வகை தேவராசனும் குந்திதேவிகோயில்விட்டு விதுரன்கோயிற் புகுந்தான் ஸ்ரீவாசுதேவ னென்றவாறு. இப்பால்,]

துரியோதனன் நடுராத்திரியில் சதியாலோசனைசெய்தல்.

200.—(இ - ள்.) வையம் - பூமியிலே, இருள் பரந்து - இருட்டுப் பரவ, மா கதிரோன் - சிறந்த கிரணங்களையுடைய சூரியன், போய் வீழ்ந்து - சென்று (மேல்கடலில்) விழுந்துஅஸ்தமிக்க, வெய்ய ஒளி போய் - வெப்பமுடைய சூரியனொளி நீங்கி, விளங்கு ஒளி ஆய் - விளங்குகிற (நக்ஷத்திரம் தீபம் சந்திரன் என்னும் இவற்றின்) ஒளியே பொருந்த,—துய்ய வரை மின் ஆர்ந்த பைம் பூண் விறல் வேந்தர் தாம் சூழ - சுத்தமான மலைபோன்ற மார்பிலே மின்னலையொத்த பசும்பொனாபரணங்களையுடைய வலியஅரசர்கள் (தன்னைச்) சூழ்ந்திருக்க, இசைந்து - (அவர்களோடு) கூடி, (துரியோதனன்), இன்னாங்கு இருந்தான் - துன்பத்தோடு இருந்தான்; (எ-று.)—மனோவியாகுலத்தோடு சிந்தித்திருந்தான் என்பதாம்.

முன்னிரண்டடி - சூரியாஸ்தமனமும், உடனே இருள்பரவுதலும், பின்பு நக்ஷத்திரங்கள் முதலிய வேறுஒளிகள் விளங்குதலும் ஆகிய தன்மையைக் கூறியது. பரந்து, வீழ்ந்து, ஆய் - பரவ, வீழ, ஆக என்னுஞ் செயவெனெச்சங்களின் திரிபு. வெய்யஒளி - உஷ்ணகிரணம். துய்ய - தூய்மையென்னும் பண்பி னடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; பண்புப்பெயர் ஈறுபோய் முதல்குறுகிற்று. மார்புக்கு 'துய்ய' என்னும் அடைமொழி கொடுத்தது, உத்தமவிலக்கணமமைந்தது என்றற்கு. வரை - மார்புக்கு, உவமையாகுபெயர். இன்னாங்கு - 'கு' விகுதி பெற்ற எதிர்மறைப்பண்புப்பெயர்; 'பொல்லாங்கு' என்பதுபோல. வேந்தர் - கர்ணன் சகுனி துச்சாசனன் முதலியோர். சூரியனொளி 'வெய்யவொளி' எனப்பட்டதனால், 'விளங்கொளி' என்றது, பிறவொளியாயிற்று. (௬00)

[என்பது: அர்த்தராத்திரியின்கண் நிறையோலக்கமிருந்து சர்வக்ஷத்திரியர்க்கும் விடைகொடுத்துத் துரியோதனனும் துச்சாசனனும் கன்னனும் சகுனியும் தம்மிற் கூடியிருந்து யாதுசிந்தித்தாரோ வெனில்:—]

துரியோதனன் கண்ணனைப் படுகுழிபாய்ச்சி விலங்கிடுமாறு துணிதல்.

201.—(இ - ள்.) உள்ளால் - (தனது சபையின்) மத்தியில், பதித்த - தோண்டப்பட்ட, படு குழியில் - பெரும்பள்ளத்திலே, மதித்த அரக்கரையும் மல்லரையும் - கொழுத்த இராக்கதர்களையும் மற்போர்வீரர்களையும், பாய்ச்சி - இறங்கியிருக்கச்செய்து, (அவர்களைக்கொண்டு), கொதித்தார் குலம் கோடல் வல்லானை குங்குமம் தோள் பற்றி விலங்கு ஒடல் - கோடங்கொண்ட பகைவர்களது கூட்டத்தை உயிர்கொள்ளுதல்வல்ல கண்ணனைக் குங்குமப்பூங்குழம்பையணிந்த தோள்களைப் பிடித்து விலங்கிடுதலை, வேந்து - துரியோதனன், எண்ணினான் - ஆலோசித்து முடித்தான்; (எ - று.)

தனது சபாமண்டபத்தின் நடுவிலே பெரியதொரு நிலவறையைத் தோண்டி அதனுள்ளே பல பெரிய வலிய இராக்கதர்களையும் மல்லவீரர்களையும் நிறுத்திக் குழிதெரியாதபடி மூங்கிற்பிளவைகளால் மேலேமூடி அதன்மேல் ஆசனமிட்டு மறுநாள் கண்ணனைவரவழைத்து அதில் வீற்றிருக்கச்சொல்லி அப்பொழுது மூங்கிற்பிளவைகள்முறிந்து அவன் அப்பள்ளத்தினுள்விழுந்திடுகையில் உள்ளேயிருக்கிற இராக்கதரும் மல்லரும் அவனைப்பிடித்து விலங்கிடுமாறு செய்யச் சகுனிமுதலானாரோடு எண்ணித் துணிந்தனன் என்பதாம்.

மதித்த - மத மென்னும் வடமொழிப்பெயரடியாப் பிறந்த தெரிநிலைப் பெயரெச்சம்; இனி, மதித்த - தன்னால் நன்குமதிக்கப்பட்ட எனினுமாம். அரக்கர் - ரக்ஷஸ் என்னும் வடசொல்லின் சிதைவு. பதித்த படுகுழியில் - தோண்டப்பட்ட பெரும்பள்ளத்தில், உள்ளால் - உள்ளிடத்திலே, அரக்கரையும் மல்லரையும் பாய்ச்சி யென்றுங் கொள்ளலாம். இனி, முன்னிரண்

டடிக்கு - மதங்கொண்ட அரக்கரையும் மல்லரையும் உள்ளேநிறுத்திவைக்கப்பெற்ற பெருங்குழியிலே கண்ணனை இறக்கியென வுரைத்தலுமாம். உள்ளால் என்பதில், மூன்றனுருபு ஏழனுருபின்பொருளில் வந்ததனால், உருபுமயக்கம். படுகுழி - யானைமுதலியவற்றை அகப்படுத்தவல்ல குழி. பாய்ச்சி, பாய் என்பதன் பிறவினையான பாய்ச்சு - பகுதி; இதில், சு - பிறவினைவிகுதி. குலம், குங்குமம் - வடசொற்கள். கோடல் - கொள்ளுதல், தொழிற்பெயர்; கொள் - பகுதி, தல் - விகுதி, பகுதிமுதல்நீண்டது - விகாரம், தகரம் டகரமானவிடத்து ளகரம்கெட்டது - சந்தி. வல்லானைத் தோள்பற்றி - இரண்டுசெயப்படுபொருள்வந்த வினை; இனி, வல்லவனைத் தோளிற் பிடித்து என்றும், உருபுமயக்கமாக வல்லவனது தோளைப் பிடித்து என்றுங் கொண்டாலுங் குற்றமில்லை.

விலங்கு ஓடல் - விலங்கு விரைவிற் பொருந்தச் செய்தல்; ஓடல் - பிறவினைப்பொருளில்வந்த தன்வினை. இனி, விலம்+கோடல் எனப் பிரித்து, அந்தக் கீழறையிலே அகப்படுத்தல் என்றலும் ஒன்று; இவ்வுரைக்கு, விலம்-பிலம் என்ற வடசொல்லின் திரிபாம். (௧0௧)

[என்பது: ஸ்ரீவாசுதேவனை நிலவறையிலே வீழ்த்து வஞ்சனையால் வலைப்படுத்திப் பலகீனம்பண்ணிச் சிறையில் வைத்தால் பாண்டவர்க்கு வேறொரு களைகண் இல்லை யென்றும், இராச்சியம்நமதாகைக்குச் சந்தேகமில்லை யென்றும், பாண்டவரைக் கொன்றால் பின்பு ஸ்ரீவாசுதேவனை விடுத்துப்போக்குமது கருமமெண்ணுமிதுவே காரியமெனத் துணிந்து அத்தராத்திரியில் யாவரும் அறியாமல் சபாமண்டபத்திலொருநிலவறை பறித்துப் பதுமநாபனை வீழவிடுத்து விழுந்தபொழுதே எழுந்திராமல் வேண்டும் இராக்கதரையும் அதனுள் நிறுத்தி மண்டபமுழுதும் அழகுறச் செய்தனன் என்றவாறு.]

வெண்பா இலக்கணம்.

நேரிசைவெண்பாவாவது - நான்குஅடிகளாய், ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் மாச்சீர் விளச்சீர்களும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையுங் கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெறாமல், இரண்டாமடியின் இறுதிச்சீர் முதல் இரண்டு அடிகளின் எதுகைக்கு ஏற்ற தனிச்சொல்லாய்ப் பொருந்த, காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிந்து, ஒருவிகற்பத்தாலாயினும், இருவிகற்பத்தாலாயினும் வருவது. [வெண்சீர் வெண்டளையாவது - காய்முன் நேர் வருவது; இயற்சீர்வெண்டளையாவது - மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது: "காய்முன் நேரும் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது வெண்டளை." ஒருவிகற்பமாவது - நான்குஅடியும் ஒரு எதுகையாய் வருவது; இருவிகற்பமாவது - முன் இரண்டு அடி ஒரு எதுகையும், பின் இரண்டு அடி ஒரு எதுகையு மாய் வருவது.]

இன்னிசைவெண்பா - இவ்வாறே தனிச்சொல் இன்றி வருவது; தனிச்சொல் பெற்றாலும், மூன்றுவிகற்பத்தால் வரின், இன்னிசைவெண்பாவே.

பாரதத்தில் உள்ள பாடல்கள் - பெரும்பாலும் நேரிசைவெண்பாவாம்.

இரண்டுஅடியாக வருகிற வெண்பா - குறள்வெண்பாவும், மூன்று அடியாக வருகிற வெண்பா - சிந்தியல்வெண்பாவும், நான்கின் மிக்க பல அடியாக வருகிற வெண்பா-பஃறொடைவெண்பாவுமாம். இதற்குஅடிவரையறை-பன்னிரண்டளவும். அதற்குமேற்படின், கலிவெண்பாவின்பாற்படும்.

பன்னூற்றிரட்டு.

நூலின் இயல்பும், நூலாசிரியரைப்பற்றிய சிலகுறிப்பும்.

தோத்திரமும் புராணமும் இதிகாசமும் காவியமும் நீதிநூலும் இலக்கியமுமாக அமைந்த சிறந்தஐம்பத்துமூன்று நூல்களினின்று தேர்ந்தெடுத்த கசுசள - செய்யுளுடையது, இந்நீதிநூல். அறத்துப்பால் பொருட்பால் என்ற இரண்டுபிரிவுகளி லடங்கிய ருங - அதிகாரங்களும், கற்பனையென்ற ஓரதிகாரமு மாகப் பகுக்கப்பட்டுள்ளது. பலவகைநீதிகளையும் பலவகைவருணனைகளையுங் காட்டுவது.

இந்நூலைத் தொகுத்தவர் - பாலவனத்தம் ஜமீந்தாரவர்களாகிய இராமநாதபுரம் மகா-ரா-ரா-ஸ்ரீ-பாண்டித்துரைத்தேவரவர்கள். முன்பு யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுகநாவலரவர்களைக்கொண்டு திருக்குறள்பரிமேலழகருரை, திருக்கோவையார் பேராசிரியருரை, சேதுபுராணம், தர்க்கசங்கிரகம் அன்னம்பட்டீயம் முதலிய நூல்களை அச்சிடுவித்தும், சந்திரசேகர கவிராசபண்டிதரைக்கொண்டு தனிப்பாடற்றிரட்டை வெளியிடுவித்தும், வடமொழியிலும் தென்மொழியிலும் சங்கீதத்திலும் வல்ல பல வித்துவான்களுக்கு மிக்கபொருளுதவிசெய்தும் பாஷையைப் பரிபாலித்தவரும், கல்வி செல்வங்களிற் சிறந்த கொடைவள்ளலும், இராமநாதபுரஜமீன்மானேஜராயிருந்தவரும், சிவஞானத்தேவரது மூத்தபுதல்வரும் ஆகிய பொன்னுசாமித்தேவரவர்களது மூன்றுவதுபுத்திரர், இவர். "தொல்சிறப்பின், நாவின்கிழத்தியுறைதலாற் சேராளே, பூவின்கிழத்திபுலந்து", "இருவே றுலகத் தியற்கை திருவேறு, தெள்ளிய ராதலும் வேறு" என்ற பெரும்பான்மையான உலகவியல்புக்கு விலக்காக "நாவீற்றிருந்த புலமாமகளோடு நன்பொற், பூவீற்றிருந்த திருமாமகள் புல்ல நாளும், பாவீற்றிருந்த கலை பாரறச் சென்ற கேள்விக், கோ" என்றபடி செல்வப்பொருளோடு கல்விப்பொருளும் நிறைந்தவர். அஷ்டாவதானம் - முத்துசாமிஐயங்காரிடம் தமிழ்நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். திருவாவடுதுறையாதீனத்துப் பழனிகுமாரசாமித்தம்பிரானவர்களிடம் சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஓதி யுணர்ந்தவர். ஆங்கிலேயப்பயிற்சியு முடையவர். தமிழ்க்கல்வியையே பொழுதுபோக்காக வுடையவர். இவரால் ஆதரிக்கப்படுகிற ஸம்ஸ்கிருதபண்டிதர்களும், தமிழ்ப் புலவர்களும், சங்கீதவித்துவான்களும் பலர். இவரிடம் தமிழ்பயின்றவர், எமதுநண்பராகிய ஸ்ரீ. உ. வே. டி. ஸி. ஸ்ரீநிவாசையங்கார், பி. ஏ, மு. ராகவையங்கார், எட்டியாபுரம்-வீராசாமியையங்கார், எஸ். ரங்கசாமியையங்கார் முதலியோர். ம-ரா-ரா-ஸ்ரீ வீர. லெ. சின்னையச்செட்டியார், ஸ்ரீ. உ. வே. திரு-நாராயணையங்கார் முதலிய வித்துவான்கள் கூடிய இவரதுசபையில் அரங்கேற்றப்பட்ட நூல்களும் சில உண்டு.

இவரது வேறுபெயர், உக்கிரபாண்டிய ரென்பது. இராமநாதபுரத்திலுள்ள இவரது சிறந்த பெரிய அரண்மனை, சோமசுந்தரவிலாசமெனப்படும்.

பலநூல்களில் ஆங்காங்குஉள்ள பல சாரமான விஷயங்களை ஒருங்கே எளிதில் யாவரும் உணர்தற்பொருட்டும், ஒவ்வொருவிஷயத்தைக்குறித்துச் சொல்லும் பலநூலாசிரியர்களின் கருத்தை ஒருசேர எல்லோரும் இனிது அறிதற்பொருட்டும், இப்பன்னூல்திரட்டு இவரால் அமைக்கப்பட்டது.

வேறொருவரைக்கொண்டு தனிப்பாடல்திரட்டை வெளியிடுவித்த உதவியவரது புதல்வராகிய இவர் தாமே பன்னூற்றிரட்டை வெளியிட்டனரென்றால், "பிதுச் சதகுணம் புத்ர:" என்றபடி தந்தையினுஞ் சிறந்தவமைந்த

ரும் உளரென்னும் வழக்கிற்கு இவரை உதாரணமாகக் கூறல் தகுதியன்றோ?

இவர் இத்திரட்டில் எடுத்து ஆண்ட நூல்களின் வரலாறுகளையும், அந்நூல்களைச்செய்த ஆசிரியர்களின் வரலாறுகளையும் அடுத்தபதிப்பிற் சேர்த்து வெளியிடக்கருதியுள்ளன ரென்று இவர்தாமே வெளியிட்ட பன்னூற்றிரட்டு முழுப்பதிப்புப் புத்தகத்தின் முகவுரையால் தெரிகிறது.

இவர், மதுரை வித்துவான் இராமசாமிப்பிள்ளையவர்களைக்கொண்டு சிவஞானசுவாமிகள்பிரபந்தத்திரட்டை வெளியிட்டனர்.

அன்றியும், கும்பகோணம் கவர்ன்மென்ட்காலெஜ் தமிழ்ப்பண்டிதர் - மகாவித்துவான் ஸ்ரீமத். உ. வே. சாமிநாதையரவர்கள் புறப்பொருள்வெண்பாமாலையையும் மணிமேகலையையும் இனிதுவெளியிடுதற்குப் பொருளுதவி செய்த மகான் இவரே.

அந்நா ளந்தமிழை யாதரித்த பாண்டியர்போ
லிந்நா ளினிதுதித்த வேந்தலென—வெந்நாளும்
பாரோர் புகழ்ந்திடுமிப் பாண்டித் துரையையலா
லாரோ புலவர்க் கரண்.

இன்னூற் றிரட்டிதனுக் கேதுநிக ரின்றெனவே
பன்னூற் றிரட்டொன்று பாலித்தான்—நன்னூல்கட்
கீண்டித் துரையே யிடமெனயா வுந்தேர்ந்த
பாண்டித் துரையாம் பதி.

இன்னும் இந்நூற்றிரட்டின் சிறப்பையும், இந்நூல்தொகுத்தார்பெருமையையும், மேற்குறித்த சாமிநாதையரவர்களும் சிங்கயச்செட்டியாரவர்களும் பாடிய சிறப்புப்பாயிரங்களில் விளங்கக் காணலாம்.

பன்னூற்றிரட்டினின்று இவ்வருஷம் பாடமாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட பாகத்திற் காணப்படுகிற நூல்களின் தன்மையும், அந்நூலாசிரியர்களைப் பற்றிய குறிப்பும் இனிக் காட்டப்படுகின்றன.

(ஒவ்வொருநூலைப்பற்றியும், ஒவ்வொருஆசிரியரைப்பற்றியும் உள்ள விவரங்களையெல்லாம் எடுத்துக்காட்டப்புகின் மிகப்பெருகு மாதலானும், அத்துணைப்பெருக்கம் பிரவேசபரீக்ஷைமாணாக்கர்க்கு வேண்டா வாதலானும், வேண்டியவளவு சுருக்கமாகவே காட்டப்படும்.)

க. **தேவாரம்**:—சைவசமயாசாரியர் நால்வரில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்ற மூவரும் சிவபிரான்மேல் அப்பொழுதப்பொழுது பாடிய தோத்திரவடிவமான பதிகங்களின் தொகுப்புக்குத் தேவார மென்று பெயர்; தே - கடவுளுக்கு, ஆரம் - மாலைபோல்வது என்று பொருள்படுகிற காரணப்பெயரென்க: அன்போடுசாத்தப்பட்ட பூமாலைபோ லினிய பாமாலை யென்று கருத்தாம். இனி, 'தேவார்ஹம்' என்னும் வடமொழி தேவாரமெனத் திரிந்ததாகக் கொண்டு, கடவுளுக்கு உரிய தென்று பொருளுரைத்தலும் உண்டு; தேவஅர்ஹம் எனப்பிரியும். இவர்கள் முறையே திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எனப் பெயர்பெறுவர். சைவசமயத்தில் வகுக்கப்பட்ட பன்னிரண்டுதிருமுறைகளுள், திருநாவுக்கரசுநாயனார்திருப்பதிகங்கள் - முதல்மூன்றுதிருமுறைகளாகவும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்திருப்பதிகங்கள்-அடுத்தமூன்றுதிருமுறைகளாகவும்,சுந்

தரமூர்த்திநாயனார்திருப்பதிகங்கள்-ஏழாவது திருமுறையாகவும் அமைந்துள்ளன. தேவாரச்செய்யுளின் தொகை - அ000. அவற்றில், திருநாவுக்கரசுநாயனாருடைய பாடல்களே சில, இப்பகுதியில் எடுத்தாளப்பட்டுள்ளன. திருநாவுக்கரசுநாயனார்பாடிய செய்யுள்களின் தொகை - சற்றேறக்குறைய ௩௧௫-பதிகங்களின் வடிவமான ௩௧௫0 - பாடல்களாம்.

திருநாவுக்கரசுநாயனார் :—இவர், திருமுனைப்பாடிநாட்டில் திருவாமூரில் வேளாளர்குலத்தில் குறுக்கையர்குடியில் புகழனாரது புத்திரர். தாய்பெயர் - மாதினியார். தமக்கைபெயர் - திலகவதியார். இவரது இயற்பெயர் - மருணீக்கியார். இவர் தாம்பிறந்த சைவசமயத்தை விட்டுச் சமணசமயத்தை யடைந்து தருமசேன ரென்னும் பெயரோடு பிரசித்திபெற்றிருக்கையில், தமக்கையாரின் வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபிரானது திருவருளா லுண்டான சூலைநோய் வேறெவ்வகையாலுந் தீராமையால், மீண்டும் சைவசமயத்தையடைந்து திருப்பதிகம்பாடி அந்நோய்நீங்கப்பெற்று, சிவபிரானால் அசரீரிமூலமாக அருளப்பட்ட 'நாவுக்கரசு' என்னும் பெயரைப் பெற்றனர்; இப்பெயர்க்கு - நாக்குக்குத் தலைவ ரென்று பொருள்: நாவினால் இனியபாடல்கள்பாடுவதில் தலைமைபெற்றவ ரென்று கருத்து. இவர் பலதலங்களிலுஞ் சென்று சிவதரிசனஞ்செய்து பதிகங்கள்பாடிப் பின்பு எண்பத்தோராவதுபிராயத்தில் திருப்புகலூரில் சிவகதிசேர்ந்தனர். இவர் காலம், இன்னதென்று துணியக்கூடவில்லை; பலரும் பலவகையாகக் கூறுவர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், நெடுமாறனெனப்படுகிற கூன்பாண்டியனும், இவர்காலத்தவர்.

௨. **திருவாசகம்** :—மாணிக்கவாசக ரென்ற சைவசமயாசாரியர் சிவபிரான்விஷயமாக அப்பொழுதப்பொழுது பாடிய தோத்திரப்பாடல்களின் தொகுதிக்குத் திருவாசக மென்று பெயர். சிறந்த சொற்களை யுடைமையால், திருவாசக மெனப்பட்டது. ௫௧ - பதிகவடிவமான ௬௫௧ - செய்யுளுடையது. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழியால், இந்நூலின் இனிமைதரும் நடைச்சிறப்பு நன்கு விளங்கும்.

மாணிக்கவாசகர் :—பாண்டியநாட்டில் திருவாதவூரில் அமாத்தியப்பிராமணர்குலத்தில் பிறந்தவர்; இயற்பெயர் - வாதவூரர். இவர், அரிமர்த்தனபாண்டியனுக்கு முதல்மந்திரியாய் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டப்பெயரோடிருந்து, குதிரைவாங்குதற்கு அவ்வரசன்கொடுத்த பெரும்பொருளைக் கைக்கொண்டு செல்லுகையில், திருப்பெருந்துறையில் குருந்தமரத்தினடியில் சிவமூர்த்தியான குருமூர்த்தியைத் தரிசித்து ஞானோபதேசம்பெற்றுப் பக்திப்பெருக்காற் சிறந்தபாடல்கள்பாடி அதுகேட்டுக் களிப்புற்ற அப்பெருமானால் தரப்பட்ட 'மாணிக்கவாசகர்' என்னும் பெயரைப் பெற்றனர். இப்பெயர்க்கு - மாணிக்கம்போலச் சிறந்த சொற்களை யுடையவ ரென்று பொருள். இவர் செல்வத்தையெல்லாம் திருப்பெருந்துறையில் சைவத்திருப்பணிகளிற் செலவுசெய்துவிட்டபின் குதிரைகள்வாராமைகண்டு கோபங் கொண்ட அரசனது சேவகர் இவரை வருத்துகையில், சிவபிரான் நரிகளைக் குதிரைகளாக்கி அரசனிடத்தே செலுத்தி இவரைச் சிறைவிடுவித்தார்; அன்றிரவில் பரிகள் மீண்டும் நரிகளாயின: அதனையறிந்து அரசன் சேவகரால் இவரை மிகவும்வருத்த, கடவுள் வையையாற்றை மதுரையின் மேற் பெருகிவரச்செய்து இவர்மகிமையை அரசனுக்குத் தெரிவித்தார். பின்பு இவர் அமைச்சுத்தொழிலை விட்டுச் சிவதலங்களிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து பதிகம்பாடிக்கொண்டு சிதம்பரமடைந்து புத்தரை வாதில்

வென்று ஊமைப்பெண்ணைப் பேசுவித்து 'திருக்கோவையார்' என்னுஞ் சிறந்தொரு நூலுஞ் செய்து முப்பத்திரண்டாவதுபிராயத்தில் முத்தியடைந்தனர். சிவபிரான்தானே ஒருபிராமணவடிவங்கொண்டு வந்து இவரதுபாடல்களையெல்லாம் ஏட்டில்எழுதிவைத்தன ரென்றால், இவரது மகிமையையும், இவர்பாடல்களின் அருமையையும் பற்றி வேறுகூறவேண்டுவதும் உளதோ? இவர்காலமும் வரையறுக்கக்கூடவில்லை; பலரும் பலவாறு கூறுவர்.

௩. **கந்தபுராணம்**:—கந்தன் - முருகக்கடவுள்; அக்கடவுளைப்பற்றிய புராணம் - கந்தபுராணம். (புராணத்தின் இலக்கணம், பாரத வுரையிற் கூறப்பட்டது.) இது, வியாசமுனிவர் கூறிய பதினெட்டுப்புராணங்களுள் சைவபுராணம் பத்தில் ஒன்று. இது - சனத்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என ஆறு சங்கிதையுடையது; அவற்றில், சங்கரசங்கிதையின் பன்னிரண்டுகண்டங்களுள் முதலதான சிவரகசியகண்டத்தின் காண்டம் ஏழில் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம் என்ற ஆறையும் கச்சியப்பசிவாசாரியரும், (உபதேசகாண்டத்தைக் கோனேரியப்பமுதலியாரும்) வடமொழியினின்று தமிழிற் பாடினர். தமிழ்க்கந்தபுராணச்செய்யுளின் தொகை - ௧0௩௪௬. 'இந்தப்பொருள் கந்தத்திலு மில்லை' எனவழங்கும் பழமொழியால், எந்நூலிலுங் காணாத பொருள்களையெல்லாம் கந்தபுராணத்திலே காணலா மென்பது விளங்கும்.

கச்சியப்பசிவாசாரியர்:—தொண்டைநாட்டில் காஞ்சிபுரத்தில் ஆதிசைவர்குலத்தில காளத்தியப்பசிவாசாரியரென்னுங் குமரகோட்டத்து அருச்சகரது புத்திரர். இவர் ஞானபக்திகளிற் சிறந்து குமரகோட்டத்துமுருகக்கடவுளைப் பூசித்து வருகையில், அக்கடவுள் கனவில்தோன்றிக் கட்டளையிட்டு அடியெடுத்துக்கொடுத்தபடி இப்புராணம்பாடினர். இவர் நாள்தோறும் நூறுசெய்யுள்பாடி அவற்றைஎழுதியஏடுஎழுத்தாணிகளை இராத்திரி பூசைமுற்றியபின் குமரக்கடவுளது திருவடியின்கீழ் வைத்துவிட்டுப் போய் மறுநாளுதயத்திற் பூசைக்குவரும்பொழுது அவ்வேடுகளையெடுத்துப்பார்க்கையில் அவற்றிற் கடவுள்செயலாற் சில சிறந்த திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன வென்பர். இப்புராணம், குமரகோட்டத்தில் அரங்கேற்றப்பட்டது. இவர்காலம், ௧௧௨௨ - வருடங்களின்முன் என்று இந்நூற் சிறப்புப் பாயிரத்தால் தெரிகிறது.

௪. **காசிகாண்டம்**:—காசிக்ஷேத்திரத்தின் மகிமையைக் கூறும் பாடல்களின் கூட்ட மென்று பொருள்படும். இந்நூற் பெயர், வடமொழியில் 'காசீகண்டம்' என வழங்குகிறது. இது, காந்தபுராணத்தினுள் அடங்கியது. இத்தமிழ்நூல்-பூர்வகாண்டம்,உத்தரகாண்டம் என இரண்டுகாண்டங்களிலடங்கிய நூறுஅத்தியாயங்களாகப்பிரிந்த ௨௬௨௫-செய்யுளுள்ளது.இதுசெய்த

அதிவீரராமபாண்டியர்:—பாண்டியநாட்டில் தென்காசியிற் செங்கோல் செலுத்திய சந்திரவம்சத்துச் சிற்றரசர்களில் ஒருவர். (இவரது சகோதரர், வரதுங்கராமபாண்டியர்.) இவர்செய்த வேறுநூல்கள் - நைடதம், கூர்மபுராணம்,இலிங்கபுராணம்,திருக்கருவைக்கலித்துறையந்தாதி,திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவைவெண்பாவந்தாதி, நறுந்தொகை யெனப்படும் வெற்றிவேற்கை, முதலியன. மதம் - சைவம். காலம் - ஏறக்குறைய ௪00-வருஷங்களுக்கு முன் பென்பர்.

௫. **இராமாயணம்**:—ராம அயந என்ற இரண்டுமொழி வடநூல்விதிப்படி ராமாயணம் எனத் தொடர்ந்தது. இராமன்விஷயமான நூ லென்று பொருள். இராமாயணம் - பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணிய

காண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என ஏழுகாண்டங்களை யுடையது. அவற்றில், முதலாறுகாண்டங்களைக் கம்பரும், ஏழாவதுகாண்டத்தை ஒட்டக்கூத்தரும் பெரும்பாலும் வடமொழிவால்மீகிராமாயணத்தைத் தழுவித் தமிழிற் பாடியுள்ளார். கம்பர் பாடல் ஏறக்குறைய ௧0௫00; ஒட்டக்கூத்தர்பாடல் - ௧௫00: ஆக, ௧௨000.

கம்பர்:—சோழநாட்டில் திருவழுந்தூரில் நான்காம்வருணத்திற் பிறந்தவர். திருவெண்ணெய்நல்லூரில் சடையப்பவள்ளலை யடுத்து அவராதரவினால் அவர்பிள்ளைகளுடன் படித்துவருகையில், காளிகாதேவியின் அநுக்கிரகத்தால் சரசுவதீகடாக்ஷம்பெற்றனர். பின்பு சடையப்பவள்ளலும் குலோத்துங்கசோழனும் இவரையும் ஒட்டக்கூத்தரையும் தமிழில் இராமாயணம் பாடும்படி சொல்ல, ஒட்டக்கூத்தர் யுத்தகாண்டம் பாடுமளவும் இவர் சும்மாவிருந்து பின்பு தொடங்கி நாளொன்றுக்கு எழுநூறு பாடல் வீதமாகப் பதினைந்துநாளில் ஆறுகாண்டம் பாடினர். அதற்குள் ஏழுகாண்டமும் பாடிமுடித்த ஒட்டக்கூத்தர் கம்பராமாயணத்தின்முன் தமது இராமாயணம் தலையெடாதென்ற கருத்தால் தம்பாடலையெழுதிய ஏடுகளையெல்லாம் கிழித்துக்கொண்டிருக்கையில் கம்பர் கண்டு கிழிபட்டவையொழிய மிச்சமாய் நின்றஉத்தரகாண்டத்தைத் தம்இராமாயணத்தோடு சேர்த்துக்கொண்டார். இவர் இராமாயணம்அரங்கேற்றியது, ௧0௧௫-வருஷங்களின் முன் பென்று இந்நூற் சிறப்புப்பாயிரத்தால் தெரிகிறது. இவர்காலத்தி லிருந்தவர் - புகழேந்திப்புலவர், ஔவையார், நாதமுனிகள் முதலியோர். இவர்மகன் பெயர்- அம்பிகாபதி. இவர்செய்த வேறுநூல்கள் - சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம், சரசுவதியந்தாதி முதலியன. "விருத்தமென்னு மொண்பாவி லுயர்கம்பன் கோவை யுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்" என்ற பழம்பாடலினால், இவர் விருத்தம்பாடுதலிற் சிறந்தவ ரென்று விளங்கும். இவர்மதம் - வைஷ்ணவம்.

ஒட்டக்கூத்தர்:— சோழநாட்டில் கைக்கோளர்மரபிற் பிறந்தவர். குலோத்துங்கசோழனது ஸம்ஸ்தானவித்வான். இவர் அச்சம்ஸ்தானத்தில் கவிபாடிவருபவரையெல்லாம் ஜயித்துப் பிடித்துச் சிறைச்சாலையி லடைப்பித்துத் தேவிகொலுவிருக்கிற நவராத்திரிகாலத்துச் சிறைக்கூடத்திலிருந்து வெளிப்படுத்தி அவர்களை இருவர்இருவராகக் குடுமிகளை முடிபோட்டு இறங்கிநிற்கத் தேவிமுன்பாக நிறுத்தி அவர்களது தலைகளை வெட்டிப் பலிசெலுத்தும் வழக்கமுடையரா யிருந்தன ரென்பது "இரண்டொன்ரு முடிந்து தலை யிறங்கப் போட்டு, வெட்டுதற்கோ கவியொட்டக்கூத்த னில்லை" என்ற பழம்பாடலினால் தெரிகிறது. இவர் புகழேந்திப்புலவரோடு மாறுகொண்டு அவரைச் சிறைவைத்து அவர்மாணுக்கராலும் அவராலும் சிற்சிலசமயங்களில் கருவபங்கமடைந்தனர். இவர்காலம் - கம்பர்காலம். மதம் - சைவம். பாடிய வேறுநூல்கள் - ஈட்டியெழுபது, குலோத்துங்கசோழனுலா, குலோத்துங்கசோழன்கோவை, தக்கயாகப்பரணி, அண்டத்துப்பரணி முதலியன. "கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்" என்பதனால், இவர் கோவை உலா அந்தாதி பாடுதலிற் சிறந்தவ ரென்று தெரிகிறது.

௬. **சூளாமணி:**—சூளா மணி எனப்பிரிந்து, தலையிலணியும் இரத்தினமென்று பொருள்பட்டு, உவமையாகுபெயராய், கொண்டாடத்தக்கதொரு நூலைக் குறிக்கும். சூளாமணியென்பது ஒரு தேவமணி யென்பர், ஒருசாரார். இது, பழையஜைநகாவியங்களுள் ஒன்று. திவிட்ட னென்னும்அரசனது சரித்திரத்தை விரித்துக்கூறுவது. பன்னிரண்டுசருக்கங்களாகப் பகுக்கப்பட்ட ௨௧௩௧ - செய்யுளுடையது. இதற்கு முதனூல், ஜைநசமயத்து மகாபுராணம். இந்நூல்பாடிய

3724

தோலாமொழித்தேவர்:—ஒரு ஜைநமுனிவர். இடம் சரித்திரம் முதலிய விவரம் விளங்கவில்லை. சூளாமணியொன்று தவிர வேறுநூல் செய்ததாகவுந் தெரியவில்லை. இவரது நூல் சேந்தனென்பவனது சபையி லரங்கேறிய தென்பர். இவர்காலம், ௧௧௫௦ - வருடங்களின் முன்.

௭. **சீவகசிந்தாமணி:**—பழையகாப்பியங்களைந்தனுள்முந்தியது; [ஐந்து காப்பியங்களாவன - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன.] சங்கத்தில் அரங்கேறிய நூல். ஜைநமதத்தவனாகிய சீவகனென்னும் அரசனது சரித்திரத்தை முழுவதும் கூறுவது. இதற்கு முதனூல் இன்னதென்று உறுதியாக விளங்கவில்லை. வடமொழி மகாபுராணத்திலும், மணிப்பிரவாளநடையான ஸ்ரீபுராணத்திலும், வடமொழியிலுள்ள கத்தியசிந்தாமணி, க்ஷத்திரசூளாமணி, ஜீவந்தரசம்பு, ஜீவந்தரநாடகம் முதலியநூல்களிலும் ஜீவகன்சரித்திரம் கூறப்பட்டுள்ளது. இது, பதின்மூன்று இலம்பகங்களாகப் பகுக்கப்பட்ட ௩௧௪௫ - செய்யுளுடையது. இதில் திருத்தக்கதேவர் பாடியது - ௨௭௦௦; மற்றவை - கந்தியார் பாடியவை. இதற்கு நச்சினார்க்கினியர் உரைசெய்திருக்கின்றனர். சிந்தாமணி- கருதிய பொருளைத் தருவதொரு தேவரத்தினம். ஜீவகசரித்திரங் கூறும் சிந்தாமணி போலச் சிறந்ததொரு நூலாதலின், சீவகசிந்தாமணி யெனப் பெயர்பெற்றது.

திருத்தக்கதேவர்:—ஜைநமுனிவர்; கடைச்சங்கத்தார்காலத்தி லிருந்தவர்; கடைச்சங்கத்தார்காலம் இரண்டாயிரம்வருடங்களுக்கு முன் பென்பர்; ஆயிரத்திருநூறுவருடத்திற் குறையாது. சோழர்குலத்திற் பிறந்தவர். இவர்பாடிய வேறுநூல் - நரிவிருத்தம். ஜைநசமயத்துப் புலவர்கள் துறவறத்தைப் பற்றிப் பாடத்தெரிந்தவரே யன்றிக் காமச்சுவையைப்பாடத் தெரிந்தவரல்ல ரென்னுங் குறை தீர இவர் இந்நூலைப் பாடின ரென்பர்.

௮. **திருக்குறள்:**—கடைச்சங்கத்து மருவிய பதினெண்கீழ்க்கணக்குக்களுள் ஒன்று; (பதினெண்கீழ்க்கணக்குக்களாவன—நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பர்.) சிறந்த குறள்வெண்பாக்களை யுடைமையால், இதற்குத் திருக்குறளென்று பெயர். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களை யுடையது. ஒவ்வொருபொருளையும் வற்புறுத்திக்கூறும் பப்பத்துக் குறள் வெண்பாக்களைத் தனித்தனியே யுடைய ௧௩௩ - அதிகாரங்கள் அடங்கியது. இதற்குப் பத்துப்பேர் உரைசெய்திருக்கின்றனர்; அவற்றில், பரிமேலழகருரையே சிறந்தது. திருக்குறள் நூலாசிரியராகிய

திருவள்ளுவர்:—தொண்டைமண்டலத்தில் மயிலாப்பூரில் வள்ளுவர் மனையில் வளர்ந்தவர். தந்தை - பகவன். தாய்- ஆதி. உடன்பிறந்தவர் - ஔவை, உப்பை, உறுவை, வள்ளி என்னும் நால்வர் மகளிரும், அதிகமான், கபிலர் என்ற இருவர் ஆடவருமென்பர். மனைவி - வாசுகி யென்பவள். மாணாக்கர்- அழகானந்தர் முதலியோர். இவர்காலத்திருந்தவர்-நக்கீரர், கபிலர், பரணர் முதலிய கடைச்சங்கப்புலவர்களும், இடைக்காடரும், உக்கிரப்பெருவழுதியும் முதலியோர். மதம்- திரிமூர்த்திகளுக்கும் பொது; ஜைநமென்பர் ஒருசாரார். காலம் - கடைச்சங்கத்தார்காலம்.

௯. **விநாயகபுராணம்:**—விநாயகக்கடவுளைப் பற்றிய புராணம். வடமொழியிலுள்ள பதினெட்டு உபபுராணங்களுள் பார்க்கவபுராணத்தின் மொழிபெயர்ப்பு. உபாசனாகாண்டம், லீலாகாண்டம் எனப்பகுக்கப்பட்டது.

அவற்றில் இந்நூலி லெடுத்தாண்ட உபாசனுகாண்டத்துச் செய்யுளின் தொகை - ௩௦௪௭. இது செய்த

கச்சியப்பமுனிவர்:—தொண்டை மண்டலத்தில் திருத்தணிகையில் சைவவேளாளர்குலத்திற் பிறந்தவர். திருவாவடுதுறையாதீனத்துப் பின்வே லப்பதேசிகரிடம் அனுக்கிரகம்பெற்றவர். சிவஞானமுனிவரது மாணுக்கர். மதம் - சைவம். காலம்- ககo - வருஷத்துக்குமுன். இவர்பாடின வேறுநால்கள் - திருவானைக்காப்புராணம், பூவாளூர்ப்புராணம், திருப்பேரூர்ப்புராணம், திருத்தணிகைப்புராணம், திருத்தணிகையாற்றுப்படை, திருத்தணிகைப்பதிற்றுப்பத்தந்தாதி, சென்னைவிநாயகர்பிள்ளைத்தமிழ், காஞ்சிப்புராணத்தின் இரண்டாங்காண்டம், கச்சியானந்தருத்திரேசர்வண்டுவிடுதூது, கச்சியானந்தருத்திரேசர்பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கரவந்தாதி முதலியன. இவர் சென்னைநகரத்தில் வந்திருந்தபொழுது இந்நகரத்தவரது வேண்டுகோளாற் பாடியது விநாயகபுராணம். (விசாகப்பெருமாளையர் சரவணப்பெருமாளையர் என்பவர்களுக்குத் தந்தையாகிய) கந்தப்பையர் முதலியோர்,இவர் மாணுக்கர்.

கo. **சேதுபுராணம்:**—சேதுவின் சிறப்போடு இராமேச்சுரத்தின் மகிமையைக் கூறும் நூல். வடமொழி ஸ்காந்தபுராணத்தின் வழிப்பட்டது. ௩௧ - சருக்கங்களாக அமைந்த ௩௪௩௮-செய்யுட்களையுடையது. இதுபாடிய

நிரம்பவழகியதேசிகர்:—வேதாரணியத்திற் பிறந்தவர்; காலம் - ௪oo- வருஷத்துக்கு முன்பென்றும்,செய்த வேறுநூல்-சிவஞானசித்தியார் சுபக்ஷவுரையும், திருவருட்பயனுரையு மென்றுங் கூறுவர். மதம் - சைவம்.

கக. **சூதசங்கிதை :**—வடமொழியிலுள்ள ஸ்காந்தபுராணத்துச் சூதசங்கிதையின் மொழிபெயர்ப்பு. நான்குகாண்டங்களாகப் பிரிந்த ௩௦௦௩ - செய்யுளுடையது. இதுசெய்த

வல்லூர் தேவராசப்பிள்ளை:—தொண்டைநாட்டில் வல்லூரில் கணக்கர்குலத்திற் பிறந்தவர். தந்தைபெயர் - வீராச்சாமிபிள்ளை. திரிசிரபுரம்-மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையென்னும் மகாவித்துவானை யடுத்துக் கற்றுத்தேர்ந்து வல்லரானவர். இவர்செய்த நூல்களில் அவ்வாசிரியராற் செய்யப்பட்ட திருத்தங்களு முண்டு. மதம் - சைவம். இந்நூலரங்கேறியகாலம் - இப்பொழுதைக்கு ௪௮ - வருஷத்துக்கு முன். இவர்பாடிய வேறுநூல்கள் - குசேலோபாக்கியானம், சேடமலைமாலை, தணிகாசலமாலை, பஞ்சாக்கரதேசிகர் பதிகம், பஞ்சாக்கரதேசிகர் பஞ்சரத்தினம்.

க௨. **தாயுமானவர்பாடல்:**—தாயுமானவர் என்னும் அடியவர் பாடிய பாடல்களின் தொகுதி. சிவஸ்தோத்திரம். இப்பாடலின் தொகை - க௩oo.

தாயுமானவர்:—சோழநாட்டில் வேதாரணியத்தில் வேளாளவருணத்தில் கேடிலியப்பப்பிள்ளையென்பவரது புத்திரராய்ப் பிறந்தவர். திரிசிரபுரத்துத்தாயுமானேச்சுவரரது கருணையினாற் பிறந்தமைபற்றி இவர்க்குத் தாயுமானவரென்று பெயரிடப்பட்ட தென்பர்.இவர் திரிசிரபுரத்து அரசாண்டுகொண்டிருந்த விஜயரகுநாதசொக்கலிங்கநாயகரிடம் தமது தந்தை பார்த்துவந்த சம்பிரதிஉத்தியோகத்தைப் பெற்றுச் சிலகாலம் அதிலிருந்து பின்பு அதனைவிட்டு இராமநாதபுரஞ்சென்று சிலநாள் இல்லறம்பூண்டு ஓராண்மகவு பெற்று மனைவிஇறந்தவுடன் கௌபீநசந்நியாசியாய்ச் சிவஸ்தலயாத்திரைசெய்து பலபாடல்கள்பாடிப் பின்பு பரகதியடைந்தார். இவர்மாணுக்கர்பெயர்- அருளையர். மகன்பெயர்-கனகசபாபதிபிள்ளை. இவர்காலம்-ஏறக்குறைய ௨oo- வருடங்களுக்கு முன்.

கங. **நன்னெறி:**—நல்லநீதிகளை இனிமையாகத் தெரிவிக்கிற சய-வெண்பாக்களையுடைய நூல். கற்போர்க்கு நன்ருய் நீதிகள் மனத்திற்பதியும்படி அவர்களுக்கு எளிதில் தெரியும்படியான உபமானங்களைக் காட்டித் தெளிவாக விளக்குந் தன்மையுடையது. இந்நூல்செய்த

சிவப்பிரகாசசுவாமிகள்:—தொண்டை நாட்டில் காஞ்சீபுரத்தில் குமாரசாமிபண்டாரமென்பவரது புத்திரர். இவர் தம்பிமார் - வேலையர், கருணைப்பிரகாசர். இம்மூவரும் தமிழ்வித்துவான்கள். மதம் -வீரசைவம். காலம்- உ௲ வருஷங்களுக்கு முன். சிவப்பிரகாசர் செய்த வேறுநூல்கள் - சோணசைலமாலை, திருச்செந்தூர்நிரோட்டகயமகவந்தாதி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கையலங்காரம், சிவப்பிரகாசவிகாசம், தர்க்கபரிபாஷை, சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை, சிவஞானபாலையர்மேல் தாலாட்டு, நெஞ்சுவிடுதூது, திருப்பள்ளியெழுச்சி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், வேதாந்தசூடாமணி, சித்தாந்தசிகாமணி, பிரபுலிங்கலீலை, கூவப்புராணம், பழமலையந்தாதி, பிக்ஷாடநநவமணிமாலை, கொச்சகக்கலிப்பா, பெரியநாயகியம்மைமீது நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம், கட்டளைக்கலித்துறை, ஏசுமதநிராகரணம், சிவநாமமகிமை, இஷ்டலிங்கப்பெருமான்மீது அபிஷேகமாலை, நெடுங்கழிநெடில், குறுங்கழிநெடில், நிரஞ்சனமாலை, கைத்தலமாலை, சீகாளத்திபுராணத்தில் கண்ணப்பசருக்கம், நக்கீரச்சருக்கம் முதலியன. இவர், அண்ணாமலைரெட்டியாரால் ஆதரிக்கப்பெற்று அவரது ஊரான துறைமங்கலத்தில் சிலகாலம் வசித்தனர். தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலத்தம்பிரானது மாணுக்கர் இவர். துறவறம்பூண்டவர். இவர் ஒருநாள் கடற்கரையில் பொழுதுபோக்காகச் சொல்லிவர, கருணைப்பிரகாசர் அங்கு மணற்பரப்பில் எழுதிவந்த பாடல்களாகும், நன்னெறிவெண்பா நாற்பதும். இவர் வாழ்ந்தது, ஙஉ - பிராயம். சீகாளத்திபுராணம், கருணைப்பிரகாசரால் தொடங்கப்பட்டு, சிவப்பிரகாசரால் இடையிற்பாடப்பட்டு, வேலையரால் முடிக்கப்பட்டது.

கச. **நீதிநெறிவிளக்கம்:**—நியாயமான வழிகளை நன்குவிளங்கச்செய்யும் நூறுவெண்பாக்களை யுடைய தொரு நூல். பலவகைக்கற்பனையலங்காரங்களையுடையது. திருக்குறளை முதனூலாகக் கொண்டது. இதுசெய்த

குமரகுருபரசுவாமிகள்:—பாண்டியநாட்டில் ஸ்ரீவைகுண்டமென வழங்குகிற கைலாசபுரத்தில் வேளாளவருணத்திற் பிறந்தவர். தந்தை - சண்முகசிகாமணிக்கவிராயர். தாய் - சிவகாமசுந்தரி. மதம்- சைவம். காலம் - உஅரு - வருஷங்களுக்கு முன். வேறுநூல்கள் - திருச்செந்தூர்க்கந்தர்கலிவெண்பா, மீனுட்சியம்மைபிள்ளைத்தமிழ், ஷையார்குறம், ஷையார்இரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், திருவாரூர்நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ், சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச்செய்யுட்கோவை, சிவகாமியம்மைஇரட்டைமணிமாலை, பண்டாரமும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை முதலியன. இவர்தம்பி - குமாரகவி. நீதிநெறிவிளக்கமியற்றிய காரணம் - இவரையாதரித்துவந்த மதுரைத் திருமலைநாயகர் ஒருநாள் வெகுநேரம்வரையில் போசனஞ்செய்யாதிருந்தமை கண்டு இவர் "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி,தொகுத்தார்க்குந் துய்த்தலரிது" என்னுந் திருக்குறளை யெடுத்து ஓத,அதுகேட்டு அவ்வரசர் மகிழ்ந்து, திருக்குறளிலுள்ள நீதிகளை விளக்கிச் சுருக்கமாக ஒருநூல்செய்து தரவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வாறே செய்தன ரென்பதாம். இவர்- தருமபுரவாதினத்து மாசிலாமணித்தேசிகரது சிஷ்யர். துறவறம் பூண்டவர். இவர்க்கு ஹிந்துஸ்தானிபாஷையுந் தெரியும்.

கரு. **குசேலோபாக்கியானம்:**—பாகவதபுராணத்தில் கிருஷ்ண சரித்திரத்தில் கிளைக்கதையாகவருகிற குசேலமுனிவரதுசரித்திரத்தை விரித்துக்கூறும் நூல். காப்பிய இலக்கணம் பல அமைந்தது. குசேலர்மேல்கடலடைந்தஅத்தியாயம், குசேலர்துவாரகைகண்டுதம்நகர்ப்புறமடைந்தஅத்தியாயம், குசேலர்செல்வநுகர்ந்துவைகுந்தமடைந்தஅத்தியாயம் என்று மூன்று பகுப்பு உடைய எகூஉ - பாடல்களை யுடையது. இத்தமிழ்க்குசேலோபாக்கியானமும், கட்டுப்பிரபுவென்னுங் கவி இயற்றிய தெலுங்குகுசேலோபாக்கியானமும் பலவிஷயங்களில் ஒப்புமையுடையன. இந்நூல்செய்தவர்

வல்லூர்தேவராசப்பிள்ளை:—இவரைப்பற்றிச் சூதசங்கிதையின்கீழ்க் கூறப்பட்டது.

கசு. **புறப்பொருள்வெண்பாமாலை:**—தமிழிலக்கணமைந்தனுள் பொருளின் பகுதியான புறப்பொருளின் இலக்கணத்தைக் கூறும் நஎகூக - வெண்பாக்களை யுடைய நூல். ஒவ்வொருவெண்பாவின் முன்னும் அதன தன்துறையைத் தெரிவிக்குஞ் சூத்திரம்போன்ற சொல்தொடர்களும் அமைந்தது; அவை, கொளு வெனப்படும். அகத்தியமுனிவர்மாணாக்கர் பன்னிருவராலுஞ் செய்யப்பட்ட பன்னிருபடலத்தின் வழிநூலானது. வெட்சிப்படலம் முதல் பெருந்திணைப்படலம் ஈறாக கஉ - படலங்களை யுடையது. தொல்காப்பியத்திலுள்ள பொருளிலக்கணத்திற்கும், இந்நூற்கும் சிலவேறுபாடு உண்டு. நச்சினார்க்கினியர் பரிமேலழகர் அடியார்க்குநல்லார் முதலிய பழைய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்டது. இந்நூலுக்குப் பழைய உரை யொன்று உண்டு. இந்நூல்செய்த

ஐயனரிதனர்:—சேரர்குலத்தவர். மதம் - சைவ மென்றும், காலம்- ககருO - வருஷத்துக்கு முன் பென்றுங் கூறுவர்.

கஎ. **நாலடியார்:**—பதினெண்கீழ்க்கணக்கினுள் முதலாவது. சமணமுனிவர்களால் இயற்றப்பட்ட சிறந்த நானூறுவெண்பாக்களை யுடைய நீதிநூல். திருக்குறளோடொத்த சிறப்புடையது; "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்ற பழமொழியைக் காண்க. வெண்பாக்களுள் நான்குஅடிகளையுடைய நேரிசைஇன்னிசைவெண்பாக்களால் ஆகிய நூலாதல்பற்றி, நாலடியா ரென்று பெயர். இந்நூலைப் பதுமனரென்பவர் ஒவ்வொருபொருளைப்பற்றிய பப்பத்துப்பாடல்களைக் கொண்ட சுO - அதிகாரமாகப் பிரித்து, அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என மூன்றுபாலாக்கி ஒருரைவகுத்துள்ளார். இந்நூல்செய்த

சமணமுனிவர்கள்:—கொடியபஞ்சத்தால் தமதுநாடுவிட்டுப் பாண்டியநாட்டை யடைந்து அவ்வரசனது ஆதரவில் சிலகாலந்தங்கினவர். இப்படி வந்த எண்ணாயிரம்பேரும் பஞ்சம்நீங்கியபின் தமதுநாட்டுக்குச் செல்லப் பாண்டியன் விடைகொடாமையால் அவனுக்குத்தெரியாமல் ஓரிரவில் அந்நாடுநீங்கிச் செல்லுகையில் தம்தமது இருப்பிடத்தில் எழுதிவைத்துவிட்டுப் போன பாடல்களுள் சிறந்த சOO - பாடல்களே நாலடியா ரெனப்பட்டன. ஒன்றுக்கொன்று கருத்திற்பொருத்தமில்லாத அப்பாடல்க ளெழுதின ஏடுகளை அரசன் வையையாற்றில் எறிந்துவிட, அவற்றில் நீர்ப்பெருக்கில் எதிர்த்துச்சென்ற பாடல்களே இவை. இவர்காலம் கடைச்சங்கத்தார்காலம். மதம் - ஜைநம்.

கஅ. **பழமொழி:**—பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று. முற்காலத்து வழங்கிய பழமொழி யொவ்வொன்றை இறுதியிலமைத்து நீதியைக் கூறுகிற சOO - வெண்பாக்களை யுடைய நூல். இதற்குப் பழையவுரையொன்று உண்டு. இந்நூல்செய்த

முன்றுறையரையர் :—ஜைநமதத்தவர். முன்றுறை யென்னும் ஊரை யாண்ட சிற்றரச ராதலால், முன்றுறையரையரென்று இவர்க்குப் பெயர் வழங்கிய தென்று ஊகிக்கலாம். காலம், கடைச்சங்கத்தார் காலம்.

கக. **திரிகடுகம்**:—பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று. மும்மூன்று நீதிகளைக் கூறுகிற நூறுவெண்பாக்களை யுடையது. திரிகடுகம் - மூன்று காரமான வஸ்துக்கள். வைத்தியசாஸ்திரத்தில் திரிகடுகமெனப்படுகிற சுக்குத் திப்பிலி மிளகு என்பவை உடலுக்குஉறுதிதருவதுபோல உயிர்க்கு உறுதிதரும் மும்மூன்றுநீதிகளை இந்நூலின்பாடல் ஒவ்வொன்றும் உடைமையால், இதற்கு, திரிகடுக மென்பது - உவமையாகுபெயராகிய காரணக் குறி. இந்நூலின் முதற்செய்யுளில் "இம்மூன்றும், திரிகடுகம் போலு மருந்து" என்பதுங் காண்க. இந்நூல்செய்த

நல்லாதனர் :—கடைச்சங்கத்தார்காலத்தவர். மதம், வைஷ்ணவம்.

உ௦. **காஞ்சிப்புராணம்** :—காஞ்சீபுரத்திலுள்ள சிவதலங்களின் மகிமையைக் கூறுவது. இரண்டுகாண்ட முடையது. இதன் முதற்காண்டம்- உஎசுஙு - செய்யுளையும், இரண்டாங்காண்டம் - உகக௦- செய்யுளையும் உடையன. முதற்காண்டத்துக்கு முதனூல் - வடமொழி ஸ்காந்தபுராணத்துச் சநத்குமாரசங்கிதை; இரண்டாங்காண்டத்துக்கு முதனூல் - பிரமாண்டம் முதலிய வேறுசில புராணங்கள். இதன் முதற்காண்டஞ் செய்த

சிவஞானமுனிவர் :—பாண்டியநாட்டில் விக்கிரமசிங்கபுரத்தில் வேளாள வருணத்திற் பிறந்தவர். தந்தை - ஆநந்தக்கூத்தர்; தாய் - மயிலம்மை: இயற்பெயர் - முக்களாலிங்கர். திருவாவடுதுறையாதீனத்துப் பின்வேலப்ப தேசிகரது சிஷ்யர். தென்மொழியோடு வடமொழியிலும் மிக்கதேர்ச்சி பெற்றவர். துறவறம்பூண்டவர். மதம் - சைவம். காலம் - ககரு- வருஷத்துக்கு முன். இவர்மாணாக்கர் - கச்சியப்பமுனிவர் முதலியோர். இவர் செய்த வேறுநூல்கள் - தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, சித்தாந்தப்பிரகாசிகை மொழிபெயர்ப்பு, தமிழ்ச் சிவஞானபோதத்துக்குத் திரவிடமகாபாஷ்யம், சிவஞானபோதச்சிற்றுரை, சிவஞானசித்தியார் சுவபக்ஷத்துக்குப் பொழிப்புரை, சிவதத்துவவிவேகமொழிப்பெயர்ப்பு, தர்க்கசங்கிரகஅன்னம்பட்டீயமொழிபெயர்ப்பு, கம்பரந்தாதி, முல்லையந்தாதி, கலசைப்பதிற்றுப்பத்தந்தாதி, இளைசைப்பதிற்றுப்பத்தந்தாதி, குளத்தூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி, குளத்தூர்அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ், கலசைச்செங்கழுநீர்விநாயகர்பிள்ளைத்தமிழ், சோமேசர்முதுமொழிவெண்பா, திருவேகம்பராநந்தக்களிப்பு, செப்பறைப்பதிஅகிலாண்டேசுவரர்பதிகம், திருத்தொண்டர்திருநாமக்கோவை, பஞ்சாக்கரமாலை, மறுப்பின்மறுப்பு, எடுத்தஎன்னுஞ்சொல்லுக்கு இட்ட வயிரக்குப்பாயம், சிவசமவாதவுரைமறுப்பு, கம்பராமாயணசங்கோத்தரவிருத்தி, இலக்கணவிளக்கச்சூறாவளி, நன்னூல்விருத்தியுரைத்திருத்தம் முதலியன. (இரண்டாங்காண்டஞ்செய்தவர் - கச்சியப்பமுனிவர்.)

உக. **திருக்கூவப்புராணம்** :—திருவிற்கோல மென்று தேவாரம்பெற்ற கூவ மென்னுந் தொண்டைநாட்டுச் சிவஸ்தலத்தின் மகிமையைக் கூறுவது. கந்தபுராணத்துச் சநத்குமாரசங்கிதையின் வழிப்பட்டது.ஏழுசருக்கங்களாக வகுக்கப்பட்ட எ௦ஙு - செய்யுளுடையது. இந்நூல்செய்தவர்

சிவப்பிரகாசசுவாமிகள் :—இவரைப்பற்றி,நன்னெறியின்கீழ்க் காண்க.

உஉ. **பிரபுலிங்கலீலை** :—ப்ரபு - எல்லாமாய் அல்லவுமா யிருக்குந்தன்மை, லிங்கம் - ஆன்மா, லீலை - விளையாட்டு; ஆன்மாவின் திருவிளையாட்டை யுணர்த்தும் நூ லென்று பொருள்கூறுவர். இந்நூலில் அல்லமப்பிரபுதேவர்

சரித்திரம் விரித்துக்கூறப்படுகிறது. இந்நூலில் துதிகதி முதல் மான்மிய கதியீருக ௨௫ - கதிகளாக வகுக்கப்பட்ட ௧௦௫ள - செய்யுள்களுள்ளன. இந்நூல், **சிவப்பிரகாசசுவாமிகள்** செய்தது. வீரசைவமதக்கொள்கையை வெளியிடுவது. சிவம் சத்தி என்ற இரண்டனுள் சத்தியின் ஆற்றலை மறுத்துச் சிவத்தின் ஆற்றலைப் பெருமைப்படுத்துங் கருத்துடையது. இதற்கு முதனூல் - கன்னடபாஷையிலுள்ளது.

௨௩. **சிலப்பதிகாரம்:**—பழையகாப்பிய மைந்தனுள் ஒன்று. கணவனும்மனைவியுமாகிய கோவலன் கண்ணகி யென்பவர் சரித்திரத்தை விரித்துக் கூறுவது. தனது செல்வம்முழுதையும் விலைமகளுக்குக் கொடுத்து இழந்த கோவலன் வாணிகஞ்செய்துபொருள்தேடும்பொருட்டு மதுரைக்குச் சென்று தன்மனைவியின் சிலம்பென்னுங் காலணியை விற்கத்தொடங்குகையில் பாண்டியராசனால் அக்கிரமமாகக் கொல்விக்கப்பட்ட சரித்திரத்தை விவரித்துக் கூறி அதன்மூலமாய்ச் சிறந்தநீதிகளைத் தெரிவித்தலால், இந்நூல் சிலப்பதிகார மென்னும் பெயர் பெற்றது. புகார்காண்டம்,மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்ட மென மூன்று பகுப்புடையது. அவற்றில் அடங்கிய உட்பகுப்பின் தொகை - ௩௦. சங்கப்புலவர்களில் பிரசித்தரான நக்கீரராலும் இந்நூல் எடுத்தாளப்பட்டுள்ளது. இதற்கு அடியார்க்குநல்லாருரையும், அரும்பதவுரையும் என இரண்டு உரை உண்டு. இந்நூல்செய்த

இளங்கோவடிகள்:—சேரநாட்டில் வஞ்சிநகரத்தில் அரசாண்ட சேரலாதனது புத்திரர். செங்குட்டுவனுடைய தம்பி; அரசனது தம்பியாதலால் முதலில் இளங்கோவென்று சொல்லப்பட்டுப் பின்பு துறவறம் பூண்டதனால் இளங்கோவடிகளென்று பெயர் பெற்றனர். (அடிகள் - முனிவர்.) கண்ணகியாகிய பத்தினிக்கடவுளைத் துதிக்கவும், இக்கதைமுகமாகச் சில தருமங்களை உலகத்தார்க்குத் தெரிவிக்கவும், தமது முத்தமிழ்க்கல்வியையும் கவித்திறத்தையும் வெளியிடவும் கருதி இவர் இந்நூல் செய்தனர். இவர்காலம், கடைச்சங்கப்புலவர்காலம் ; ௧௭௬௮ - வருடங்களுக்கு முன்பென்பர். இவருடனிருந்த புலவர், மணிமேகலை நூலாசிரியராகிய சீத்தலைச்சாத்தனர்.

௨௪. **மணிமேகலை** :—பழைய காப்பிய மைந்தனுள் ஒன்று. சிலப்பதிகாரக்கதாநாயகனான கோவலனுக்கு மாதவியென்னும்வேசையினிடம் பிறந்த மணிமேகலையென்பவளது துறவு முதலிய சரித்திரங்களை விரித்துக் கூறுவது. சிலப்பதிகாரக்கதையின் தொடர்ச்சியாக அமைந்தது. ஒவ்வொருபெரிய[illegible]த முப்ப[illegible]காதைகளை யுடையது. இந்நூல், பௌத்தமதத்தைச் சிறப்பித்துக்கூறுவது. இந்நூல்செய்த

மதுரைக்கூலவாணிகன்சாத்தனர்:—கடைச்சங்கப்புலவருள் ஒருவர். மதுரையில் வைசியசாதியில் தோன்றினவர். பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின் மகிமையைச் சேரன்செங்குட்டுவனுக்கு அறிவித்து அவனைக்கொண்டு அவளுக்குக் கோயில் கட்டுவித்தவர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரஞ்செய்தற்குத் தூண்டுகோலாய் நின்றவர். இவர்க்குச் சீத்தலைச்சாத்தனரென்னும் பெயர் வழங்கும். சங்கத்தில் அரங்கேற்றுவித்தற்கு வரும் நூல்களிற் குற்றங்காணுந்தோறும் மனம்பொறுமல் இவர் அப்பிழையைக் கேட்கும்படி நேர்ந்த தம்தலைவிதியை மிகநொந்து தமது தலையி லறைந்துகொண்டே வருதலால் எப்பொழுதும் தலைபுண்பட்டுச் சீயோடிருந்தன ரென்றும்,யாதொருகுற்றமுமில்லாத திருவள்ளுவர்குறளைக் கேட்டபொழுதே இவர்க்கு அத்தலைவலி இல்லையாயிற் றென்றும் தெரிகிறது. காலம் - இளங்கோவடிகள்காலமே.

உ௫. **பேரூர்ப்புராணம்** :—கொங்குநாட்டிலுள்ள பேரூ ரென்னும் சிவஸ்தலத்தின் மகிமையைக் கூறும் நூல். பிரமாண்டபுராணத்தின் வழிப்பட்டது. முப்பத்தேழு படலங்க ளடங்கிய உ௨௨௦ - பாடல்க ளுள்ளது. இதுசெய்தவர்

கச்சியப்பமுனிவர் :—இவரைப்பற்றி முன்கூறப்பட்டது.

உ௬. **திருக்குற்றலப்புராணம்** :—திருக்குற்றால மென்னும் பாண்டிய நாட்டுச் சிவஸ்தலத்தின் மகிமையைக் கூறுவது. காந்தபுராணத்தின் வழிப்பட்டது. ௯௨ - சருக்கங்களை யுடைய இரண்டுகாண்டங்களாக வகுக்கப்பட்ட உ௭௦௦ - செய்யுள்க ளடங்கியது. இதுபாடிய

திரிகூடராசப்பக்கவிராயர் :—பாண்டியநாட்டில் மேலகரம் என்னும் ஊரில் இருந்தவர். வேளாளர். திருவாவடுதுறையாதீனத்துச் சுப்பிரமணிய தேசிகரது சிஷ்யர். மதம் - சைவம். காலம் - ௧௫௦ - வருஷத்துக்குமுன்னென்பர்.

உ௭. **நான்மணிக்கடிகை** :—பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று. நந்நான்கு நீதிப்பொருளைக் கூறும் ௧௦௧ - வெண்பாக்களை யுடையது. நான்கு இரத்தினத்துண்டுகள்போல நன்குமதிக்கத்தக்கனவாய்ச் சிறந்து விளங்குகிற நான்கு நீதிகளைக் கூறும் பாடல்களை யுடைமையால், நான்மணிக்கடிகை யென்று பெயர். இதுசெய்த

விளம்பிநாகனூர் :—கடைச்சங்கத்தார்காலத்தவர். மதம் - வைணவம்.

உ௮. **அறநெறிச்சாரம்** :—ஒரு நீதிநூல். தருமவழிகளுட் சாரமாய்ச் சிறந்தவற்றைக் கூறுதலால், அறநெறிச்சார மென்று பெயர். இது, உ௨௬- வெண்பாக் களுடையது. இதுசெய்த

முனைப்பாடியார் :—ஒரு தமிழ்ப்புலவர். இவர்பெயரால், இவர் திருமுனைப்பாடிநாட்டி லிருந்தவ ரென்று தெரிகிறது. மதம் - ஜைநம்.

உ௯. **உபதேசகாண்டம்** :—கந்தபுராணத்துச் சங்கரசங்கிதையின் சிவரகசியகண்டத்தினுடைய ஏழாவது காண்டம். உபதேசகாண்டம் என்ற பெயர் - பலநல்லவிஷயங்களை உபதேசிக்கிற பாகம் என்று பொருள்படும். ௬௧- சருக்கங்களாக அமைந்த ௬௩௬௭- செய்யுளுடையது. இதுசெய்த

கோனேரியப்பமுதலியார் :—தொண்டைநாட்டில் காஞ்சீபுரத்தில் கைக்கோளர்மரபிற் பிறந்தவர். தந்தை - சிவானந்தமுதலியார். தாய்- அமுதாம்பிகை. கச்சியப்பசிவாசாரியசுவாமிகளது மாணாக்கர். முதலாறு காண்டங்களைப்பாடிய தமதுஆசிரியரது கட்டளைப்படி இவ்வேழாவதுகாண்டத்தைப் பாடின ரென்பர். காலம், ௧௧௦௦ - வருஷங்களுக்கு முன். இவர் பெயர், குகனேரியப்பரென்றும் வழங்கும். மதம்- சைவம்.

௩௦. **கூர்மபுராணம்** :—வடமொழியில் வேதவியாசமுனிவர் அருளிச்செய்த பதினெட்டுப்புராணங்களுள் கூர்மபுராணத்தின் மொழிபெயர்ப்பு. பூர்வகாண்டம், உத்தரகாண்டம் என இரண்டுகாண்டங்களில் அடங்கிய ௯௭ - அத்தியாயங்களாக வகுக்கப்பட்ட ௩௭௧௭ - செய்யு ளுடையது. இதுசெய்தவர்

அதிவீரராமபாண்டியர் :—இவரைப்பற்றி, காசிகாண்டத்தின் கீழ்க் கூறப்பட்டது.

௩௧. **தனிப்பாடல்** :—புலவர் ஒருநூலாகவன்றித் தனியே சமயோசிதமாகப் பாடிய செய்யுள்.

௩௨. **திருவானைக்காப்புராணம்** :—சோழநாட்டிலுள்ளதும், சம்புகேசுரமென்ற மறுபெயருடையது மான திருவானைக்கா வென்னுஞ் சிவதலத்தின் மகிமையைக் கூறுவது. வடமொழிப்பாத்மபுராணத்தின் வழிப்பட்டது. ௨௩ - படலங்களாகப் பிரிந்த ௯௫௬-செய்யுளுடையது. இதுபாடியவர்

கச்சியப்பமுனிவர் :— இவரைப்பற்றி, விநாயகபுராணத்தின் கீழ்க் கூறப்பட்டது.

௩௩. **வில்லிபுத்தூரார்பாரதம்** :—வடமொழியிலுள்ள வியாசபாரதத்தையும் பாலபாரதத்தையும் தென்மொழியிலுள்ள பெருந்தேவனார்பாரதத்தையும் பெரும்பாலுந் தழுவிச் செய்யப்பட்ட நூல். பாரதகதையைப் பெரும்பாலுங் கிளைக்கதைகளையொழித்துச் சுருக்கமாகக் கூறுவது. இந்நூலிலடங்கியன, பாரதத்தின் முதற்பத்துப்பருவமே. மற்றையெட்டுப்பருவங்கள் இவராற் பாடப்படவில்லை; பிற்காலத்தில் நல்லாப்பிள்ளையென்பவராற் பாடப்பட்டன. இந்நூல், ௪௩௫-செய்யுளுடையது. இதுபாடிய

வில்லிபுத்தூரார் :—திருமுனைப்பாடிநாட்டில் சனியூரில் பிராமணசாதியிற் பிறந்தவர். தந்தை - வீரராகவாசாரியர். மைந்தன் - வரதாசாரியர். வக்கபாகை யென்னும் இராசதானியில் அரசாண்ட வரபதியாட்கொண்டா னென்னும் அரசனது வேண்டுகோளால் இவர் பாரதம்பாடினர்; வேறுவகையாகவுங் கூறுவது உண்டு. மதம், வைஷ்ணவம். காலம், ஐந்நூறுவருஷத்துக்குமுன். இவர், தம்மோடுவாதஞ்செய்து தோற்ற புலவர்களின் காதுகளைத் தமதுகையிலுள்ள தறட்டுக்கோலால் மாட்டியிழுத்து அறுத்து வந்தன ரென்பது, "குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி, யெட்டினமட்டறுப்பதற்கோ வில்லி யில்லை" என்றதனால் விளங்கும்.

இங்குக்காட்டப்பட்ட நூல்களின் மற்றை விவரங்களை அந்தந்த நூல்களிற் கண்டுகொள்க. நூலாசிரியர்களுடைய மற்றைவிவரங்களை அவரவரது சரித்திரப்பரப்பிற் காணலாம். இங்கே எழுதப்பட்ட அவரவரது காலம் உத்தேசமாகக் குறிக்கப்பட்ட தென்றும், அது சமயம்வாய்த்தவிடத்துக் காரணகாரியசந்தர்ப்பங்களோடு ஆதாரமூலமாக நிர்ணயித்து வெளியிடப்படுமென்றும் அறிக.

ஸ்ரீ

பன்னூற்றிரட்டு.

இத்தொடர்மொழி- பல நூல் திரட்டு எனப்பிரிந்து,பலநூல்களினின்று சாரமான செய்யுள்களை எடுத்து ஒருங்கே சேர்க்கப்பெற்றதொரு நூலென்று பொருள்படும். இதிலுள்ள திரட்டுதலை 'வெண்ணெய் திரட்டுதல்' என்றாற் போலக் கொள்க; எனவே, நூல்களை நன்றாக ஆராய்ந்து பலர்க்கும் இனிது பயன்படுமாறு எடுத்துச்சேர்த்ததென்பது போதரும். பன்னூல் - அல்வழிப் புணர்ச்சி, பண்புத்தொகை; பலவாகிய நூல் என விரியும். நூற்றிரட்டு - வேற்றுமைப்புணர்ச்சி, ஐந்தாம்வேற்றுமைத்தொகை. நூல்களை முழுவதும் எடுத்துச் சேர்க்காமையால், பலநூல்களினது திரட்டு என ஆறும்வேற்றுமைத்தொகையாகக் கொள்ள இடமில்லை. திரட்டு என்னும் பிறவினைப் பகுதியில், திரள் - தன்வினைப்பகுதி, டு - விகுதி; இதன் இறுதியில், செயப்படுபொருளுணர்த்தும்விகுதி புணர்ந்துகெட்டது.

பல+நூல்=பல்நூல்; பல என்பது, தன்முன் பிறிதுவர அகரம்கெட்டது; [நன் - உயிர் - ௨௦.] பல்+நூல்=பன்னூல்; நிலைமொழியீற்றுலகரமும் வருமொழிமுதல் நகரமும் னகரமாயின; [நன் - மெய் - ௨௪, ௬௪.] நூல்+திரட்டு=நூற்றிரட்டு; லகரதகரங்கள் றகரமாயின; [நன் - மெய் - ௨௪, ௬௪.]

பஞ்சைக்கொண்டு நூல் நூற்கப்படுதல்போலச் சொற்களைக்கொண்டு ஆக்கப்படுதலாலும், நூல் மரம் முதலியவற்றின் கோணலை அறிந்து தீர்த்தற்குக் கருவியாதல்போல மனிதர்களது மனத்தின் கோணலை அறிந்து போக்குதற்குக் கருவியாதலாலும், புத்தகங்களுக்கு 'நூல்' என்பது - உவமவாகுபெயர்; [நன் - பாயிரம் - ௨௪, ௨௫.] இனி, பலமணிகள் கோக்கப்படும் நூல்போலப் பலபொருள்களை ஒழுங்காகப் பொருத்தப்பெறுவது நூல் என்றும், நூல் பொம்மைகளை ஆட்டுவிப்பதுபோலப் பொருள்களை நடைபெறச்செய்வது நூல் என்றும் இங்ஙனம் ஏற்றபடி காரணங் கற்பித்துக் கூறலுமாம். (இது 'சூத்ரம்' என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பாக வந்த பெயர் போலும்; சூத்ரம் என்பது-வடமொழியில் நூலுக்கும், புத்தகத்தின் ஓர் உறுப்புக்கும் பெயராதல் காண்க. அன்றி, வடமொழியில் 'தந்து' என்று நூலுக்கும், 'தந்த்ரம்'என்று சாஸ்திரத்துக்கும் பெயருள்ள சம்பந்தத்தைக் கருதி, 'தந்த்ரம்' என்னும் வடமொழிப்பொருளை 'நூல்' என வழங்குதல் தமிழ்வழக்கென்பதும் ஒருசாரார் கொள்கை.)

இந்நூல் - அறத்துப்பால், பொருட்பால் என்னும் இரண்டுபிரிவுகளில் அடங்கிய ஐம்பத்துமூன்று அதிகாரங்களும், கற்பனை என்ற ஓரதிகாரமும் ஆகப் பகுக்கப்பட்ட ௬௬௪ - செய்யுளுடையது.

முதலாவது
அறத்துப்பால்.

தருமத்தை உணர்த்தும் பாகம்; இரண்டனுருபும்பயனுந் தொக்கதொகை. முதல் இருபத்தெட்டு அதிகாரங்கள், இப்பாலிற் சேர்ந்தன. அறமாவது - மனு முதலிய நூல்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும், விலக்கப்பட்டவற்றை யொழிதலுமாம். இது - இல்லறம், துறவறம் என இருவகைப்படும். தக்கதென்று நூல்களால் வரையறுக்கப்பட்டதுபற்றித் தருமத்துக்கு 'அறம்' என்றும், தகாததென்று நூல்களால் மறுக்கப்பட்டதுபற்றி அதருமத்துக்கு 'மறம்' என்றுங் காரணப்பெயர். இவற்றில், அறு மறு-பகுதி

*1

கள்; அம் - செயப்படுபொருள் விகுதி. அறம் + அத்து = அறத்து; நிலைமொழி யீற்று மகரம் கெடச் சாரியைமுதல் அகரமுங் கெட்டது; [நன் - மெய் - கசு, உருபு - கரு.] அறத்துப்பால் எனப் பகரம் மிக்கது, உயிரீற்றுப்பொது விதியால்; [நன் - உயிர் - கரு.]

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களுள், வீடு என்பது மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத நிலைமையை யுடையதாதலின் துறவறமாகிய காரணத்தின்வகையாற் கூறப்படுவதே யல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையால் நூல்களாற்கூறப்படுவன அதுவொழிந்த மூன்றுமே யென்றும், அறம் இம்மை மறுமை வீடு என்ற மூன்றையுந் தருவதும், பொருள் இம்மை மறுமை இரண்டையுந் தருவதும், இன்பம் இம்மையொன்றையே தருவது மாகிய சிறப்பின்தகுதிபற்றி அறம் பொருள் இன்பம் என முறையே நிறுத்தப்படு மென்றும், பொருள் அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமாதல்பற்றியும் இடையில்வைக்கத்தக்க தென்றும் அறிக. இத்திரட்டில் பொருட்பாலின் இறுதியிலேயே இன்பமுஞ் சேர்த்திடப்பட்டது.

முதலதிகாரம்

கடவுள் வாழ்த்து.

அதாவது - எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு வழிபடுகடவுளையாவது எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்புடைய கடவுளையாவது வாழ்த்துதல்; வேற்றுமைப்புணர்ச்சி, இரண்டாம்வேற்றுமைத்தொகை. பிராணிகளின் மனமொழிமெய்களுக்கு எட்டாமல் அவற்றைக்கடந்துள்ளமைபற்றி, கடவுள் என்பது - தொழிலாகுபெயராகவந்த காரணக்குறியாம். கடவுள் என்பதில், உள் - தொழிற்பெயர்விகுதி; விக்குள், விளையுள் என்பவற்றிற்போல. வாழ்த்து - முதனிலைத்தொழிற்பெயர்; இங்கே 'வாழ்த்துதல்' என்பது - உபலக்ஷணத்தால், தியானித்தல் வணங்குதல் என்பவற்றையுங் குறிக்கும்.

வழிபடுகடவுள் வாழ்த்தாவது - தாம்தாம் குலதெய்வமாகக்கொண்டு ஆராதிக்கிற கடவுளை வாழ்த்துதல்; இதற்கு உதாரணம் - வைஷ்ணவசமயத்தார் விஷ்ணுவையும், சைவமதத்தவர் சிவனையும், ஜைநர் ஜிநனையும், பௌத்தர் புத்தனையும் வாழ்த்துதல் போல்வன. ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாவது - தாம்தாம்செய்ய எடுத்துக்கொண்ட காரியத்துக்குத் தகுதியையுடைய கடவுளை வாழ்த்துதல்; இதற்கு உதாரணம் - இராமாயணங்கூறுபவர் இராமனையும், பாகவதஞ்சொல்பவர் கண்ணனையும், கந்தபுராணமுரைப்பவர் சுப்பிரமணியமூர்த்தியையும் வாழ்த்துதல் போல்வன.

இந்நூல்தொகுத்தவர் சைவசமயத்தவ ராயினும், இவ்வதிகாரச்செய்யுள்கள் மற்றையதிகாரச்செய்யுள்கள் போலவே பலநூல்களினின்றும் எடுக்கப்பட்டன வாதலால், அவை அந்தந்நூலுக்கு ஏற்ப வழிபடுகடவுளும் ஏற்புடைக்கடவுளு மாகிய சிவபிரான் திருமால் அருகன் சித்தன் என்னும் கடவுளைப் பற்றியனவாம்.

பலநூல்களினின்று வேறுபலபொருள்களைக்கூறுஞ்செய்யுட்களை எடுத்துக்கொண்டார்க்கு அந்நூல்களின் கடவுள்வாழ்த்துக்களைக் கொள்ளுதலும் இயல்பே. இவ்வதிகாரத்தின் முதல்ஆறுசெய்யுட்கள் சிவபெருமானைப் பற்றியனவாதலால், இந்நூல் தொகுத்தாரது சைவமதாபிமானம் வெளியாம். ஆயினும், இவ்வதிகாரத்தி லெடுத்த செய்யுள்களெல்லாம் ஒரு கடவுளையும் வெளிப்படையாகக் குறியாமல் பொதுத்தன்மைதோன்ற நிற்றலுங் காண்க.

1.—(இ - ள்.) பரிதியானை - சூரியனது சொரூபமாக வுள்ளவனும், பல் வேறு சமயங்கள் - பல வேறுவகைப்பட்ட மதங்களை, கருதியானை - (உண்டாகுமாறு) சங்கற்பித்தவனும், கண்டார் மனம் மேவிய - தரிசித்தவர்களது மனத்திற் பொருந்திய, பிரிதியானை - அன்புக்கு இடமாகுபவனும், பிறர் அறியாதது ஓர் சுருதியானை - வேறு எவராலும் உண்மைப்பொருளறியப் படாத ஒப்பற்ற வேதங்களின் வடிவமாகவுள்ளவனும் ஆகிய சிவபெருமானை, தொழல் - வணங்குதல், பாலதே - தகுதியையுடையதே; கண்டீர் - அறியுங்கள்; (எ - று.)— [திருநாவுக்கரசுநாயனார்தேவாரம் - இரண்டாந்திருமுறை - தொழற்பாலனந் திருக்குறுந்தொகை- ௫; அடுத்தபாடல், இதற்கு அடுத்தது.]

"நிலம் நீர் நெருப்பு உயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்,புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்" என்ற திருவாசகத்தின்படி பஞ்ச பூதங்களும் சூரியசந்திரரும் யஜமாகனும் ஆகிய சிவபிரானது அஷ்டமூர்த்திகளுள் 'பரிதியானை' எனச் சூரியசொரூபத்தைக் கூறினது, மற்றையேழுக்கும் உபலக்ஷணம். ஆதித்தியஹ்ருதயம் முதலியவற்றில் சூரியனை எல்லாப்பொருள்களுக்குந் தலைமையாகக் கூறியுள்ளதுபற்றி, இங்கும் சூரியனையே பிரதானமாகக் குறித்தது. இதனால், சகலப்பிரபஞ்சவடிவமாகவுள்ளவன் கடவுள் என்றபடி. இனி, 'பரிதியானை' என்பதற்கு - சூரியனை (வலக்கண்ணாக) உடையவனையென்றும் பொருள்கொள்ளலாம்.

பல்சமயங்கள் - வைஷ்ணவம் சைவம் சௌரம் உலோகாயதம் புத்தம் சமணம் முதலியன. 'வேறுசமயங்கள்' என்றது,"ஒன்றே பொருளெனின் வேறெனப வேறெனின், அன்றெனப ஆறு சமயத்தார்" என்றபடி உள்ள வேறுபாட்டைக் கருதி. ஒப்புயர்வற்றமுழுமுதற்கடவுளே அவரவரதுஊழ்வினைக்கு ஏற்பவும் தனக்குஒருதிருவிளையாட்டாகவும் அநேகமதங்களையும் அம்மதங்களின் வழிபடுமுறைமைகளையும் அவற்றின் வழிபடுதெய்வங்களையும் உண்டாக்கி அத்தெய்வங்களின் வடிவமாகத் தான் நின்று அவற்றைக்குறித்து அந்தந்தச்சமயத்தார் செய்யும் வந்தனைவழிபாடுகளை ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு ஏற்றபலன்களை அளித்தருளுவனென்பது நூற்கொள்கை யாதலால், 'பல்வேறுசமயங்கள் கருதியான்' என்றார். இனி, இத்தொடர்க்கு - பல வேறுமதங்களால் [மதத்தவரால்] தியானிக்கப்படுபவனென்றும் பொருள் கொள்ளலாம்; இவ்வுரைக்கு, சமயம் - ஆகுபெயர்: 'கருதியான்' என்பது - செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை. "அறிவினால் மிக்க அறுவகைச்சமயத்து அவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து" என்ற சுந்தரமூர்த்திநாயனார்தேவாரத்தையும், "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர்பொருளாய் வேறாங், குறியது வுடைத்தாய்", "யாதொருதெய்வங் கொண்டீ ரத்தெய்வமாகி யங்கே, மாதொருபாகனார்தாம் வருவர்" என்ற சிவஞானசித்தியாரையும் இங்கே அறிக.

'கண்டார் மன மேவிய பிரிதியான்' என்றது, தனது திருவுருவத்தைப் புறக்கண்ணாலேனும் அகக்கண்ணாலேனும் கண்டவர் யாவராலும் அன்புசெய்யப்படுபவனென்றபடி. இனி, தன்னைத்தரிசித்தாரது உள்ளக்கமலத்தில் அவர்நினைந்தவடிவத்தோடு திருவுள்ளமுகந்து பொருந்தி வீற்றிருக்கும் அன்புடையானென்றும் பொருள் கொள்ளலாம்.

வேதங்களின்மெய்ப்பொருள் அவ்வேதவடிவமான கடவுளுக்குப்போலப் பிறர்க்கு அவனருளாலன்றிப் பிறவாறு புலப்படாதென்னும் மெய்ம்மை, 'பிறரறியாததோர் சுருதி' என்றதனால் விளங்கும். இனி, 'பிறர்' என்றது, வேதத்துக்கு வெளிப்பட்ட சமயத்தவர்களையெனினுமாம். 'அறியாதது' என்பது, சுருதிக்கு அடைமொழி; சுருதியானுக்கு அடைமொழியாக்கொள்

ளின், அறியாதது- பிறர் அறியமாட்டாத தன்மையையுடைய எனக. "மூசத் திலொன்றதா அவ்வெழுத்துடையதோர் முருகன்", "அன்னதோர் குமரன்" என்றாற்போல 'அறியாததோர் சுருதியான்' என்றதை ஒருவகைத் திணைவழு வமைதி என்னலுமாம்.

கண்டீர் -காண்பீர் என்னும் பொருளில் வந்தது; இயல்புபற்றி, எதிர்கா லம் இறந்தகாலமான வழுவமைதி. இது, உலகத்தாரைநோக்கிக் கூறியது. இனி, 'கண்டீர்' என்பதை முன்னிலையசை யென்றும், தேற்றப்பொருள்தருவ தென்றும் உரைத்தலும், அறிந்தீர்களா எனக் சொள்ளுதலும் பொருந்தும். பாலது - பான்மை யென்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற்குறிப்பு வினைமுற்று; அ-சாரியை. ஏற்று ஏகாரம் - தேற்றம். சுருதியானைத்தொழலே பாலது எனப் பிரித்துக்கூட்டின், பிரிநிலையாம்.

'பரிதியானை' முதலிய நான்கும் - ஒருபொருள்மேல்வந்த பலபெயர்கள். பரிதி, ஸமயம், மநஸ், ப்ரீதி, ச்ருதி என்னும் வடசொற்கள் திரிந்தன.

"சீர் மணி பரிதி யானை" என்ற நிகண்டின்படி பரிதியென்பது மங்கலச் சொற்களுளொன்றாதலால், அச்சொல்லால்தொடங்கியசெய்யுள் இந்நூற்றிரட்டின் முதலில் நாடிநிறுத்தப்பட்டதெனக. (க)

2.—(இ - ள்.) ஆதியானை-(எல்லாப்பொருள்களுக்கும்) முதலானவனும், அமரர் தொழப்படும் - தேவர்களால் வணங்கப்படுகின்ற, நீதியானை - முறைமைதவறாதவனும், நியமம் நெறிகளை - (தன்னைவழிபடுதல் முதலிய) நல்லொழுக்கவழிகளை, ஓதியானை- (ஆகமங்களிற்) கூறியுள்ளவனும், உணர்தற்கு அரியது - (யாவராலும்) அறியமுடியாததான, ஓர் - ஒப்பற்ற, சோதியானை- ஒளிவடிவமாகவுள்ளவனும் ஆகிய சிவபெருமானை, தொழல் - வணங்குதல், பாலதே - தகுதியையுடையதே; கண்டீர் - அறியுங்கள்; (எ - று.)

ஆதியான் - எல்லாப்பொருள்களுக்கும் முதல்வரான திரிமூர்த்திகளுக்கும் முதலானவன். அமரர் - (அமிருதமுண்டதனால்) மரணமில்லாதவர். தேவாதிதேவனைத் தேவர் தொழுதல் நியாயமே யென்பது, 'அமரர்தொழப்படும் நீதியான்' என்பதனால் விளங்கும். இனி, 'நீதியான்' என்றதனால், அந்தந்த உயிர்களின் கருமமுயற்சிகளுக்கு எற்றபடி இம்மை மறுமை வீட்டு அனுபவங்களைத் தந்தருளித் தான் நடுவுநிலைமைதவறாமல் நிற்பவன் என்றவாறுமாம். பதிபசுபாசங்களின் தன்மை சிவயோகம் சிவபூசை சிவத்தியானம் முதலிய சைவசமயசம்பந்தமான ஒழுக்கங்களையெல்லாம் வகுத்துக்கூறுகிற காமியம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும் சதாசிவமூர்த்தியினுடைய ஐந்துமுகங்களினின்று தோன்றினமையை உணர்த்துவார், 'நியம நெறிகளை யோதியான்' என்றார். இனி, கைலாசகிரியின் தென்சிகரத்திலே கல்லாலமரத்தின் நிழலில் சிவபிரான் தக்ஷிணாமூர்த்திவடிவமாய் எழுந்தருளியிருந்து சநகர்முதலிய முனிவர்நால்வர்க்கும் சரியைமுதலிய சைவநெறிகளைப் போதித்தருளியதைக் கருதி, 'நியமநெறிகளை யோதியான்' என்றதுமாம். 'உணர்தற்கரியதோர் சோதி' - சூரியன் சந்திரன் அக்கினி முதலிய சுடர்களெல்லாவற்றின் ஒளியினும் மேம்பட்ட பரஞ்சோதி. இனி, 'உணர்தற்கரியதோர் சோதியான்' என்றது, தாம்தாம் கடவுளென்னுங் கருத்துக் கொண்டு ஒருவர்க்கொருவர் பகைமைபூண்ட பிரமவிஷ்ணுக்களின் மாறுபாட்டை யொழிக்கும்பொருட்டுப் பரமசிவன் அவ்விருவர்க்கும் நடுவில் ஓர் அனற்பிழம்பினுருவமாய்த் தோன்றி நின்று 'இதன் அடியையும் முடியையுந் தேடுமின்' என்ன, 'அதனை முன்னங் கண்டவரே முதல்வர்' என்றுசொல்லிப் பிரமன் ஹம்ஸரூபியாய் முடியினைக் காண விண்பறந்தும், விஷ்ணு வராகரூபியாய் அடியினைக்காண மண் இடந்தும் சென்று பலநாள்தேடியும் முடிவுகண்டிலராய்ப் போயின ரென்பதோர் கதை

யை உட்கொண்டதுமாம்; இதற்கு எற்ப, கீழ்ப்பாட்டில் 'பிறர்' என்றதற்கும், தன்னையொழிந்த பிரமவிஷ்ணுக்களெனவே பொருள்கொள்ளுதலுமாம்.

| ஆதி, அமரர், நீதி, நியமம், ஜ்யோதி-வடசொற்கள். (உ)

3.—(இ - ள்.) வான் ஆகி-ஆகாயத்தின்வடிவமாய், மண் ஆகி-பூமியின் வடிவமாய், வளி ஆகி-காற்றின் வடிவமாய், ஒளி ஆகி-அக்கினியின் வடிவமாய், ஊன் ஆகி - (பிராணிகளின்) உடம்பின் வடிவமாய், உயிர் ஆகி - உயிரின் வடிவமாய், உண்மையும் ஆய் இன்மையும் ஆய் - உண்மை யின்மைகளின் வடிவமாய், கோன் ஆகி-(எல்லாப்பொருள்களுக்குந்) தலைவனாய், அவர் அவரை யான் எனது என்று கூத்து ஆட்டுவான் ஆகி-அவரவர்களை யானென்றும் எனதென்றும் அபிமானங்கொண்டு கூத்தாடும்படி செய்பவனாய், நின்றாயை-நின்ற உன்னை, என் சொல்லி வாழ்த்துவன் - (யான்) என்னவென்று சொல்லித் துதிப்பேன்? (எ - று.)—[திருவாசகம், திருச்சதகம், அறிவுறுத்தல் - ரு.]

ஏககாலத்தில் அளவிறந்தபலபொருள்களின் வடிவமாய் நின்ற உன்னை நான் எந்த வடிவமும் பெயரும் குணமுங் குறித்துத் துதிப்பேன் என்றபடி. கடவுள் சகலப்பிரபஞ்சத்தின் உள்ளும் புறமும் நிற்குந் தன்மை, இதனால் வெளியாகிறது. வானம் காற்று நெருப்பு நீர் நிலம் என்ற பஞ்சபூதங்களுள் இப்பாட்டின் முதலடியில் நான்கைக் குறித்தது, குறிக்கப்படாத நீருக்கும் உபலக்ஷணம். காரணமாகிய நெருப்பையும் காரியமாகிய நிலத்தையுங் கூறவே, இடைப்பட்டதான நீருங் கூறியவாறும். செய்யுளாதலின், பூதங்கள் முறை பிறழவைக்கப்பட்டன. 'உயிராகி' என்றது, உடம்பினுள் உயிர்போல உயிரினுள் உயிராய் நின்று அவ்வவ்வுயிரைக்கொண்டு தொழில்நடப்பிக்குந் தன்மையைக் கருதி. 'திரவியம் குணம் கருமம் சாமானியம் விசேடம் சமவாயம் அபாவம் எனப் பதார்த்தங்கள் ஏழு' என்ற தருக்கநூலார் கொள்கையின்படி, உண்மைக்குமாறாகிய இன்மையும் பொருளாகக் கொள்ளப்பட்டது; சம்பவம், அபாவம் என்பன - எட்டுவகைப்பிரமாணங்களின்பாற்படுதலுங் காண்க. உண்மை-உள்ளதன்மை. இன்மை-இல்லாததன்மை. 'உண்மையுமாய் இன்மையுமாய்' என்றது, உன்னையன்றி ஒருபொருளும் இல்லை யென்றதாம். தானல்லாத உடம்பை யானென்றும், தன்னோடு இயைபில்லாத பொருளை எனதென்றும் கருதி அவற்றின் நிலையாமையை யுணராமல் அவ்வவ்வுயிர்கள் அவற்றினிடத்தில் வீணபிமானம் வைத்துக் கருமவசமாக மயங்கிநடக்கும்படி செய்பவனென்பார், 'யானெனதென் றவரவரைக் கூத்தாட்டுவானாகி' என்றார். யான் எனது என்னும் பற்றுக்கள், அகங்கார மமகார மென்றும், அகப்பற்று புறப்பற்று என்றுங் கூறப்படும். ஊன், ன் - சாரியை; 'ஊன்' என்னும் தசையின் பெயர் -சினையாகுபெயராய், அதனையுடைய உடம்பைக் குறித்தது. கூத்து - தொழிலுணர்த்தும் பகாப்பதமாகிய பெயர். நின்றாய் - முன்னிலை யொருமை வினையாலணையும்பெயர். (௩)

4.—(இ - ள்.) திரு வந்த - செல்வம் பொருந்தின, தொல்லை - பழமையான, புவனத்தொடு - மண்ணுலகத்தவரும், தேவர் - விண்ணுலகத்தவரும், போற்றி - துதித்து, பெரு வந்தனை செய்து - சிறந்த நமஸ்காரத்தைச் செய்து, அறிதற்கு - அறிவதற்கு, அரு - அருமையான, பெற்றி - தன்மையை, எய்தி - அடைந்து, அருவந்தனையும் உருவத்தையும் அன்றி நின்றான் - அருபமும் ரூபமு மாகிய தன்மைகளை ஒழிந்துநின்றவனான, ஒருவன்தனது - ஒப்பற்ற சிவபிரானது, பதந்தன்னை - திருவடிகளை, உளத்துள் வைப்பாம் - மனத்துட் சிந்தித்துத் தியானிப்போம்; (எ-று.)—[கந்தபுராணம் - கடவுள்வாழ்த்து - க.]

'திருவந்த புவனம்' என்றது, பூமி செல்வத்தைத் தன்னிடத்துப் பொதியவைத்துள்ளதனால்; வடமொழியில் பூமிக்கு 'வஸுமதி', 'வஸுந்தரா', 'வ

ஸுந்தரா' என வழங்கும் பெயர்கள் செல்வமுடைய தென்னும் பொருள் படு தலுங் காண்க. திருவந்த, தொல்லை என்ற அடைமொழிகளைத் தேவர்க்குங் கூட்டலாம். பெருவந்தனை - தீர்க்கநமஸ்காரம்; எட்டு உறுப்புக்களும் நில த்திற்பட வணங்குதல். சிவம் சத்தி நாதம் விந்து என நான்கு அருவாகியும், மகேசுவரன் உருத்திரன் திருமால் அயன் என நான்கு உருவாகியும், சதா சிவம் என அருவுருவாகியும் நின்று இந்நவவிபேதமும் தோற்றுவித்தல்முதலிய வற்றிற்கு ஏதுவாய் நாடகமாத்திரையால் நடிக்கும் இறைவ னாகலின், 'அரு வந்தனையும் உருவத்தையும் அன்றி நின்றான்' என்றது. 'உளத்துள் வைப்பாம்' எனப் பன்மையாற் கூறினது, தனது வம்சத்தாரையும், தனது நூல் கற்போ ரையும், மற்றும் உலகத்தவரையும் உளப்படுத்தி; கவிகளுக்கு உரிய இயல்பு பற்றிய தனித்தன்மைப்பன்மையுமாம்.

தொல்லை - பண்புப்பெயர்; ஐ -ீவிகுதி. இதில் பகுதியாகிய தொல் என்பது-மை று விகுதிகளைப் பெற்றுத் தொன்மை தொன்று என்றும் வழங் கும். புவநம், தேவர், பதம் - வடசொற்கள். வந்தநம், அரூபம், ரூபம் என் னும் வடசொற்கள், திரிந்தன. புவனம் - இடவாகுபெயர். தேவர் என்பது- வானுலகத்தில் வாழ்பவ ரெனக் காரணப்பொருள்படும். (௪)

5.—(இ - ள்.) பூ மலர்மிசை வரு புனிதன் ஆதியோர் - (திருமாவின து) அழகிய (நாபித்) தாமரைமலரின்மேல் தோன்றிய பரிசுத்தனான பிரமன் முதலியோர், தாம் உணர்வு அரியது - தாம் தாம் அறியமுடியாததான, ஓர் தலைமை - ஒருமுதன்மையை, எய்தி - அடைந்து, மா மறை முதற்கு ஒரு வடி வம் ஆகியோன் - சிறந்த வேதங்களின் முதலான பிரணவமகாமந்திரத்தின் ஒப்பற்ற சொருபமாகவுள்ள சிவபிரானது, காமரு - விரும்பத்தக்க [அழகிய], செய்ய பூ கழல்கள் - செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை, ஏத்துவாம் - துதிப்போம்; (எ-று.)—[கந்தபுராணம் - கடவுள்வாழ்த்து - ச.]

எல்லாமலர்களுள்ளுந் தாமரை சிறத்தலால், 'பூமலர்' எனப்பட்டது. வே தங்கள் அநந்தமாதலால், மாமறை என்பதற்கு - பெரிய வேத மெனினுமாம். புநீதம் - வடசொல். 'தகைமையெய்தி' என்றும் பாடம். மா - மஹா என்னும் வடசொல்லின் திரிபு. தலைமை - பெருமை, உயர்வு. முதற்கு - நான்கனுருபு ஆறனுருபின் பொருளில் வந்ததனால், உருபுமயக்கம் ; [நன் - பெயர் - கூ0.] காமரு - காமமருவு என்பதன் விகாரம்; அன்புவைக்கத்தக்க வென்க. செய்ய என்னுங் குறிப்புப்பெயரெச்சத்தில், பகுதியாகிய செம்மையென்னும் பண்பு, ஈறுபோய் முன்நின்ற மெய் திரிந்தது. (ரு)

6.—(இ - ள்.) நோக்கு இன்றி - கண்களில்லாமலே, நனி-மிகுதியாக [நன்றாக], கண்டும் - (எல்லாவற்றையும்) பார்த்தும், கை இன்றி-கைகளில்லா மலே, கொடுத்தும் - (அடியார்க்கு வேண்டுவனவற்றைக்) கொடுத்தருளியும், மறை நுவல்வது ஆய நாக்கு இன்றி-வேதங்களைக்கூறுவதான நாக்கு இல்லா மலே, அறு சுவையும் இனிது உணர்ந்தும் - ஆறுவகையுருசிகளையும் நன்றாக அறிந்தும், கால் இன்றி-கால்களில்லாமலே, நடத்தல் செய்தும் - நடந்தும், மூக்கு இன்றி-மூக்கு இல்லாமலே, மணம் கவர்ந்தும் - வாசனைகளைக் கிரகித் தும், செவி இன்றி-காதுகளில்லாமலே, கேட்டும் - (ஒலிகளைக்) கேட்டும், மறை முதல்வர் யார்க்கும் வாக்கு அன்றி மனத்தினுக்கும் எட்டா - வேதங்க ளுக்குத்தலைவரான முனிவர்களெல்லோர்க்கும் வாக்குக்கேயன்றி மனத்துக் கும் எட்டாத, நின் - உன்னுடைய, தாமரை தாள் - செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை, வணங்கல் செய்வாம் - நமஸ்கரிப்போம்;(என்று, காசியில் வீரேச லிங்கத்தில் சிவபிரான் தரிசனந்தந்தபொழுது, விசுவாநரனென்னும் அந்த

ணன் துதிக்கிருன்); (எ-று.)—[காசிகாண்டம் - சிவசன்மா தெய்வலோகங் கண்ட அத்தியாயம் - சக.]

நோக்கின்றிக்காணுதல் முதலியவற்றிற்குக் கருத்து - பிராணிகள் கண் முதலிய உறுப்புக்களால் காணுதல்முதலிய தொழில்களை எவ்வளவு நடத்தக் கூடுமோ, அவ்வளவினும் மிக அதிகமாகக் காட்சிமுதலியவற்றை இயல்பிலே யுடையவன் கடவுள் என்றும், நினைத்தமாத்திரத்தால் எல்லாத்தொழில்களையும் நடத்தவல்ல கடவுளின் காட்சிமுதலியவற்றிற்குக் கண்முதலிய கருவிகள் இன்றியமையாத காரண மாகா என்றும், இதனுல் கடவுளின் இயற்கையுணர்வு முற்றுமுணர்வு வரம்பிலாற்றல் என்றவற்றை வெளியிட்டவாறும் என்றும், ரூபமில்லாதநிலையிலும் பரப்பிரஹ்மத்துக்கு உணர்வு செயல்களை யுடைமை உளதாம் என்றும், மற்றும் பலவாறும் கூறப்படும். நனி, இனிது என்றவற்றைப் பிறவற்றிற்குங் கூட்டலாம். 'மறைநுவல்வதாய நாக்கு' என்றது, சிவபிரான் வேதங்களை ஆதியில் வெளியிட்டதனுல்; இனி, வேதங்களிற் புகழ்ந்து கூறப்படுவதான நாக்கு என்றுங் கொள்ளலாம். அறுசுவை - கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு. மறைமுதல்வர் - வேதங்களை முழுவதும் ஓதி அவற்றின் பொருளையும் ஐயந்திரிபற அறிந்தவர். திரிகரணங்களுள் மனத்தினுல் எண்ணுதற்கும் வாயினுற் சொல்லுதற்கும் எட்டாதவன் எனவே, மெய்யினுற் காணுதல் முதலியவற்றிற்கு எட்டாதவன் கடவுளென்பது, தானே பெறப்படும், வாயினுற் கூறமுடியாததையும் மனத்தினுற் சிந்திக்கக்கூடு மாதலால், வாக்கின்பின் மனத்தை வைத்தார்.

நோக்கு-பார்த்தற்குக் கருவியான கண்ணுக்குக் காரணப்பெயர்; கருவிப்பொருள்விகுதி புணர்ந்துகெட்டது: கெடாவிட்டால், நோக்கம் என நிற்கும். நனி - மிகுதியுணர்த்தும் விசேடித்த உரிச்சொல். அறுசுவை - பண்புத்தொகை. இனிது-ஒன்றன்பாற் குறிப்புமுற்றெச்ச வினையுரி. வாக்-வடசொல்.

7.—(இ - ள்.) உலகம் யாவையும் - எல்லாவுலகங்களையும், தாம் உள ஆக்கலும் - தாம் உள்ளனவாகச் செய்தலும் [படைத்தலும்], நிலை பெறுத்தலும் - (அவற்றை) நிலைபெறும்படி செய்தலும் [காத்தலும்], நீக்கலும் - (அவற்றை) நீங்கச்செய்தலும் [அழித்தலும்], (என்னும் முத்தொழிலையும்), நீங்கலா அலகு இலா விளையாட்டு உடையார் அவர் - நீங்காததும் அளவில்லாததுமான திருவிளையாடலாக வுடையவர் (எவரோ) அவரே, தலைவர் - (எல்லாப்பொருள்களுக்குந்) தலைவராவர்; அன்னவர்க்கே - அந்த நாராயணமூர்த்திக்கே, சரணங்கள் - (அப்பொருள்களெல்லாம்) அடிமையாம்; (எ - று.)—[கம்பராமாயணம் - பாலகாண்டம் - சிறப்புப்பாயிரப்படலம் - கடவுள்வாழ்த்து - க.]

உலகம் என்னும் பலபொருளொருசொல்-இங்கே, இரட்டுறமொழிதலால், இடத்தையும் உயிர்களையும் ஒருங்கே உணர்த்திநிற்கும். இது - லோகமென்னும் வடசொல்லின் திரிபு; தனியே தமிழ்ச்சொல்லென்பாரும் உளர். இது, இடத்தை யுணர்த்தும்பொழுதிற்போல உயிர்களை யுணர்த்தும்பொழுதும் இடவாகுபெயரன்று, இயற்பெயரே என்பது, நூற்கொள்கை. உலகங்களைப் படைத்தல் முதலியன சிறிதும் சிரமமில்லாமல் கடவுள் சங்கல்பித்தமாத்திரத்தால் எளிதில் நிகழ்வன என்பது, விளையாட்டு என்றதனுல் விளங்கும். இதனுல், கடவுளின் ஆற்றல் கூறியவாறு. பிரமரூபியாய் நின்று படைத்தலும், தானுனநிலையில் நின்று காத்தலும், உருத்திரரூபியாய்நின்று அழித்தலுஞ் செய்தருளுவ னென்க. இப்பாட்டிற் குறிக்கப்பட்ட கடவுள் திருமாலென்பது, இராமாயணத்தில் இதற்கு அடுத்த கவிகளில் "முற்குணத்தவரே முதலோர்", "நன்மையன்" என்றவற்றுலும், கம்பர் வைணவசமயத்தவராத

லாலும், பிறவாற்றாலும் விளங்கும். விசிஷ்டாத்வைதமதஸ்தாபநாசாரியரான ஸ்ரீபாஷ்யகாரரும் [ராமாநுஜாசாரியரும்] தமது ஸ்ரீபாஷ்யத்தின் தொடக்கத்தில் கடவுள்வாழ்த்தில் "அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே" என்று இங்ஙனமே முத்தொழிலையும் முழுமுதற்கடவுளுக்கு விளையாட்டாகக் குறித்தமையுங் காண்க. படைத்தல் முதலிய தொழில்கள் இடைவிடாமல் ஒன்றுமாறியொன்று செய்யப்படுதலால், 'நீங்கலா அலகிலா விளையாட்டு' எனப்பட்டன. 'அவர் தலைவர் அன்னவர்க்கே சரணங்கள்' என்றதனால், இயல்பாகவுள்ள பரமாத்மாவின் தலைமையையும், சீவாத்மாக்களின் அடிமையையும் விளக்கியபடி. முதலில் 'உலகம் யாவையும்' என்றதனால், 'சரணங்கள்' என்பதற்கு- அதுவே எழுவாயாம். 'நாங்கள்' எனத் தோன்றாஎழுவாய் கொள்ளலுமாம். 'சரணாங்கள்' என்ற பாடத்துக்கு, நாங்கள் சரண் - அடைக்கலப்பொருளாவோம் என்க. 'அன்னவர்க்கே', ஏ - பிரிநிலை; இதனால், மற்றையோர்க்கு உயிர்கள் அடிமையல்லவென்பது விளங்கும். இப்பிரிநிலை ஏகாரத்தை, அவரேதலைவர் என ஆங்கும் எடுத்துக்கூட்டுதலுமாம். ஈற்று ஏகாரம் - தேற்றம். சரணம் - வடசொல்.

ஆக்கல், நிலைபெறுத்தல், நீக்கல் - ஆகல், நிலைபெறுதல், நீங்கல் என்றவற்றின் பிறவினை. 'நீங்கலா', 'அலகிலா' என்னும் இரண்டு எதிர்மறைப் பெயரெச்சங்கள், அடுக்கி 'விளையாட்டு' என்னும் ஒருபெயரைக் கொண்டன; "மூவா முதலா வுலகம்" எனவருஞ் சிந்தாமணியிற் போல. விளையாட்டு - விளையாடு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். தலைவர் - தலைமையென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர்; வ் - பெயரிடைநிலை. (எ)

8.—(இ - ள்.) வினையின் தொகை - கருமங்களின் தொகுதியை, வென்றான் ஆகி-சயித்தவனாய், ஒன்று ஆய் - ஒப்பில்லாமல் தனிப்பட்டதாகி, தன்கண் விரிந்து கிடந்த - தன்னிடத்து மிகுதியாய் இயல்பிற் பொருந்திய, உணர்வின் - தன்னறிவினால், ஒழியாது முற்றும் சென்றான் - குறைவில்லாமல் முழுவதும் அறிந்தவனும், திகழும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி- விளங்குகிற ஒளி மண்டலத்தாற் சூழப்பட்ட ஒளிமயமான வடிவமுடையவனும், ஆகி - ஆய், நின்றான் - (அழியாது) நின்ற அருகக்கடவுளினது, அடிக்கீழ் - திருவடிகளிலே, பணிந்தார் - வணங்கினவர், வினை நீங்கி நின்றார் - (இருவகை) வினையும் ஒழிந்து (முத்தியுலகத்து அழியாது) நிலைநின்றவராவர்; (எ - று.)—[சூளாமணி - கடவுள்வாழ்த்து.]

வினையின் தொகை வென்றானாகிச் சென்றானும் மூர்த்தியுமாகி நின்றானது அடி யென்க.

இது - அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணம் என்ற ஜைநசமய வணக்கம் நான்கனுள், அருகசரணம். 'வினைவென்றான்' என்றும், 'முற்றுமறிந்த மூர்த்தி' என்றும், 'திகழொளி' 'விளங்கொளி' 'பரத்திலொளியோன்' என்றும் அருகக்கடவுளுக்குத் திருநாமங்கள் நூல்களிற் கூறப்படுதலால், இச்செய்யுள் அருகக்கடவுளைப்பற்றிய தென்று அறியப்படும்.

வினையின்தொகை வென்றானாகி - வினைத்தொடர்பில்லாதவனாய் என்றபடி. வினை - நல்வினை தீவினை இரண்டுக்கும் பொது. உணர்வின், இன் - ஐந்தனுருபு ஏதுப்பொருளது; ஒழியாது - மிச்சமில்லாயல். 'அடைதலென்னும் பொருளுள்ள சொற்கள், அறிதலென்னும் பொருளையுந் தரும்' என்ற வடமொழி நியாயத்தால், 'சென்றான்' என்பதற்கு - அறிந்தவனெனப்பட்டது. இயற்கையறிவும், முற்றுணர்வும், இங்குக் கூறப்பட்டுள்ளன. ஜைநசமயத்திற் கூறப்படுகிற கடவுளின் எட்டுக்குணங்களுள் 'அநந்தஞானம்' எனப்படுகிற கடையிலா அறிவை விளக்கியபடி. கடவுளின் வடிவம் ஒளி

மண்டலத்தாற் சூழப்பட்டிருத்தல், சூளாமணியின் துறவுச்சருக்கத்திலுங் கூறப்பட்டுள்ளது. நிற்பார் என்னாது 'நின்றார்' என்றது - தெளிவும் விரைவும் பற்றிய காலவழுவமைதி; [நன் - பொது - ௬௬.] கடவுளின் அடியை வணங்கினவர் இப்பிறப்பு ஒழிந்தபின் முத்திபெறுவது மாத்திரமேயன்றி வணங்ினமாத்திரத்தில் இவ்வுடம்போடு இவ்வுலகத்தில் வாழ்ந்திருக்கும் பொழுதே முத்திபெற்றவரோடு ஒப்பரென்னுங் கருத்தால், 'வினைநீங்கிநின்றார்' எனக் கூறியதுமாம். 'நீங்க நின்றார்' என்றும் பாடமுண்டு. தீவினைபோல நல்வினையும் பிறப்புக்குக் காரணமாதலால், பொதுப்பட 'வினைநீங்கி நின்றார்' என்றார்; "இருள்சே ரிருவினையுஞ் சேரா" என்றார் திருவள்ளுவரும். அழியுந் தன்மையனவாகிய சுவர்க்க இன்பம் முதலிய காமியங்களைத் தருவனவான தானதருமம் முதலியவற்றின் பயனாகிய நல்வினை, முத்திக்கு நேரேகாரணமாகிய தத்துவஞானத்தை உண்டாக்காமைமாத்திரமேயன்றித் தீவினைபோல் அது நிகழவொட்டாமல் தடைசெய்து நிற்றலுமுடையதென்றும், ஆதலால் இந் நல்வினை தீவினை யிரண்டும் ஒருவனுக்கு ஞானத்தைத்தடுத்துப் பந்தப்படுத்துவதில் பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவாமென்றும் அறிக. தொகை - தொழிலாகு பெயர்; தொகு- பகுதி, ஐ - விகுதி. உணர்வின்றொழியாது, னகரவொற்று-விரித்தல்.

அருகசரணம் - அருகனை வணங்குதல். அருகன்-ஜிநன். 'அருகனாவான் மூவுலகத்துச்சியிலுள்ள சித்தனைத் தியானித்து முத்தியடைந்தவன்' என்றும், 'அகமிந்திரலோகத்தினவதரித்து மத்திமலோகத்தில் சுவாமி, ஜீவன், கருமம், வேதம், உலகம், காலம் என்னும் அறுபொருளின் குணங்களை விளக்கினவன்' என்றுங் கூறுவர், திருக்கலம்பகவுரையாசிரியர். (அ)

9.—(இ - ள்.) தே ஆதி தேவன் - தேவர்களுக்கு முதல்வனான தேவனாகுபவன்,—தலை ஆயது - ஒப்பில்லாமல் மேம்பட்டதான, தாவாத இன்பம் - அழியாத இன்பத்தை, மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்த - அந்தமும் ஆதியும் இல்லாத மூன்று உலகத்தவரும் புகழும்படி, தன்னின் எய்தி - (வேறொருபொருளினாலன்றித்) தன்னாலே தான் (இயல்பிற்) பெறுதலாலே, ஓவாது நின்ற குணத்து - (தன்னைவிட்டு) நீங்காது நிலைபெற்ற குணங்களையுடையவனான, ஒள் நிதி செல்வன் - (முத்தியாகிய) விளங்குகிற நிதியையுடைய செல்வம்நிறைந்தவன், என்ப - என்று (சாதுக்கள்) சொல்வார்கள்; (ஆதலால், நாமும்), அவன் சே அடி சேர்தும் - அக்கடவுளுடைய சிவந்த திருவடிகளை (இந்நூல் இனிது முடியும்பொருட்டு) வணங்குவோம்; (எ-று.)—[சீவகசிந்தாமணி - கடவுள்வாழ்த்து - க.]

தேவனாவான் செல்வன் என்ப ரெனக் கூட்டுக.

இது, கீழ்க்கூறிய அருகசரணம் முதலிய நான்கனுள், சித்தசரணம்.

உலகம் அநாதியாய் நிலைபெற்றதென்றும், ஒருகாலத்திலும் அழியாத நிலைமையையுடையதென்றும், கடவுள் முதலியோரால் உண்டாக்கப்பட்டதன்றென்றும், இங்ஙனம்நித்தியமாகிய உலகம் மேலுலகம் நடுவுலகம் கீழுலகம் என மூன்றுவகையாயுள்ளதென்றும், அவை மேலுலகம் மத்திமலோகம் பவணலோகமென்றும், உலகத்துஉயிர்களெல்லாம் நித்தியமென்றும், அவை கடவுளுக்கு அடிமையென்றும் ஜைநசமயக்கொள்கை யாதலால், 'மூவாமுதலா வுலகம் மொருமூன்று மேத்த' என்றது. உலகமென்பது - பலபொருளொருசொல்லாய் நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உணர்த்திநிற்குமாயினும், இங்கே 'ஏத்த' என்றதனால், உலகத்தில் வாழுஞ் சீவான்மாக்களை உணர்த்திற்று; "உலகமுவப்ப" என்றதிற்போல. ஏத்தஎய்தி என்றும், எய்திநின்ற

என்றும், நின்ற குணத்துச் செல்வ னென்றும் இயையும். அநந்தஞானம், அநந்தவீரியம், அநந்ததரிசனம், அநந்தசுகம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்று சைநசமயத்திற் கூறப்படுகிற கடவுளின் குணங்கள் எட்டினுள், 'தாவாத இன்பம்' என்றதனால், 'அநந்தசுகம்' என்னுங் கடையிலா இன்பம் குறிக்கப்பட்டதுபற்றி, பின்பு 'குணம்' என்றது-மற்றையேழையு மென்க. இரண்டாம் அடியால், கடவுளுக்கு இன்பம் இயற்கையேயன்றிச் செயற்கையன் றென்பது விளங்கும். தன்னின், இன் - ஐந்தனுருபு, ஏது. 'தன்னிலெய்தி' என்று பாடமாயின், மணியில் ஒளியும் மலரில் மணமும் போலத் தன்னுள்ளே அழிவிலாவின்பத்தைப் பெற்று என்க. சிறந்த இன்பத்தைத் தருதலால் முத்தியை 'ஒள்நிதி' என்றும், அழியாத இன்பத்தை அனுபவித்தலால் சித்தமூர்த்தியை 'செல்வன்' என்றுங் கூறினர். சேர்தல் - இடைவிடாது நினைத்தலுமாம்.

மூவா முதலா என்பன - மூத்த முதலின என்னுந் தெரிநிலைப்பெயரெச்சங்களின் எதிர்மறையடுக்கு. இவை, உலகத்துக்கு அடைமொழி: மூவா - முதிராத, அழியாத வென்றபடி. முதலா - தனக்குமுதலாக வேறொன்றைப் பெறாத; அநாதியான என்றபடி. "ஆவோடல்லது யகர முதலாது", "முதலா வேன தம்பெயர் முதலும்" என்றவற்றால், முதலுதலென்பது ஒருவினை தெரிநிலையுடன்பாட்டில் உளதாதல் அறிக. தாவாத - "தாவே வலியும் வருத்தமு மாகும்" என்றபடி வருத்தமுணர்த்தும் 'தா' என்னும் உரிச்சொல்லினடியாப் பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம். ஓவாது - ஓ என்னும் வினைப்பகுதியடியாப் பிறந்த தெரிநிலை யெதிர்மறை வினையெச்சம். என்ப - பலர்பால் முற்று; என் - இடைச்சொல், பகுதி; 'ப' என்னும் பலர்பால்விகுதியே எதிர்காலங்காட்டும்; [நன் - பத - கஅ.] (இச்சொல் என்பன என்னும்பொருளில் வரும்பொழுது, ப் - எதிர்கால இடைநிலையும், அ - பாலுணர்த்தும் விகுதியுமாம்.) என்ப என்பதற்கு - 'சாதுக்கள்' என்பதும், 'சேர்தும்' என்பதற்கு - 'நாம்' என்பதும் தோன்றா எழுவாய்கள். தே என்று தெய்வத்துக்கு ஒருபெயர்; இந்த ஓரெழுத்தொருமொழியாகிய பெயர்ச்சொல் ஏகாரத்தின் முன் உயிர்வருகையில், வகரம் - உடம்படுமெய்: இங்ஙனம் பிரித்தல், சீவகசிந்தாமணி யுரையாசிரியராகிய நச்சினார்க்கினியரது கொள்கை; தேவ ஆதி தேவன் எனப் பிரித்து, தீர்க்கசந்திபெற்ற வடமொழித்தொடராகக் கொள்ளுதலும் அமையும். சேர்தும் - தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று. அன்று - அசை, ஏ - ஈற்றசை. உலகம்மொரு, ம் - விரித்தல்.

சித்தசரணம் - சித்தனை வணங்குதல். சித்தன் - பலவகைக்கருமங்களையும் வென்று அக்கினி யிந்திரனால் உடம்பைத்துறந்து பரிநிர்வாணம் பெற்று மூவுலகத்துச்சியி லிருப்பவன்; சித்திபெற்றவன்: இவன் 'அசரீரி' என்றுங் கூறப்படுவன். (கூ)

10.—(இ - ள்.) தனக்கு உவமை இல்லாதான் - (ஒருவகையாலும்) தனக்கு ஒப்பில்லாத கடவுளினது, தாள் - திருவடிகளை, சேர்ந்தார்க்கு அல்லால் - சரணமடைந்தவர்களுக்கே யல்லாமல் (பிறர்க்கு), மனம் கவலை மாற்றல் அரிது-மனத்திலுண்டாகுந் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது; (எ-று.) —[திருக்குறள் - கடவுள்வாழ்த்து - எ.]

கடவுளின் திருவடியை யடைந்தவர்களே எல்லாக்கவலையையும் ஒழிந்து முத்திபெறுவர் என்பது கருத்து. ஒப்பில்லாதவ னெனவே, உயர்வில்லாதவனென்பது பெறப்படும். தாள்சேராதார், பிறப்புக்குக் காரணமான காம வெகுளிமயக்கங்களை மாற்றமாட்டாமையால், மறுபடியும் பிறப்பெடுத்து அவற்றால் வருந் துன்பங்களுள் அழுந்துவர் என்பதாம். இங்கே, அருமை - இன்மைமேல் நின்றது.

உவமை - உபமா என்னும் வடசொல்லின் திரிபு. அல்லால் - எதிர்மறைக்குறிப்புவினையெச்சம். கவலை - ஐ விகுதி பெற்ற தொழிற்பெயர். மாற்றல் - மாறல் என்பதன் பிறவினை.

இதனால், கடவுளைச் சரணமடையாவிடி னுளதாங் குற்றம் கூறப்பட்டது.

11.—(இ - ள்.) வேண்டுதல் - (ஒருபொருளையும்) விரும்புதலும், வேண்டாமை - விரும்பாமல் வெறுத்தலும், இலான் - இல்லாத கடவுளினது, அடி - திருவடிகளை, சேர்ந்தார்க்கு - சரணமடைந்தவர்களுக்கு, யாண்டும் - எக்காலத்திலும், இடும்பை - பிறப்புத்துன்பங்கள், இல - உள்ளனவாகா; (எ-று.)—[திருக்குறள் - கடவுள்வாழ்த்து - ௪.] இப்பாட்டும் முன்பாட்டும் முன்பின்னாக மாறியிருத்தல் நலம்.

வேண்டுதல் வேண்டாமை யிலான் - பக்ஷபாதமில்லாதவன். இப்பெயரால் கடவுளின் நடுவுநிலைமை விளங்கும். அவ்வவ்வுயிர்களின் வினைகளை வியாசமாகக்கொண்டு பயன்தருபவ னென்க. சீவகசிந்தாமணியில் "பகை நண்பொடில்லான்" என்ற இடத்து நச்சினார்க்கினியர் 'இறைவன் அன்பிலனாயினும் அருஞ்சுரத்தின் மரம்போல அடைந்தார்க்கு அளித்தல் அவற்கு இயல்பு' என உரைத்ததையும் இங்கே அறிக. பிறப்புத் துன்பங்களாவன - தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப் பற்றி வருவனவும் என மூவகையால் வருந் துன்பங்கள். தன்னைப்பற்றி வருவன - சரீரத்தைப்பற்றிவருந் தலைநோய் முதலியனவும், மனத்தைப்பற்றிய காமம் கோபம் முதலியனவும்; இவை 'ஆத்யாத்மிகம்' எனப்படும். பிறவுயிர்களைப்பற்றி வருவன - மனிதர் விலங்கு பிசாசு முதலியவற்றால் நேர்பவை; இவை 'ஆதிபௌதிகம்' எனப்படும். தெய்வத்தைப்பற்றி வருவன - காற்று மழை இடி வெயில் முதலியவற்றால் நேர்பவை; இவை 'ஆதிதைவிகம்' எனப்படும். இம்மூவகையையும் வடநூலார் 'தாபத்ரயம்' என்பர். விருப்பு வெறுப்பில்லாத கடவுளி னடியைச் சேர்ந்தவர்களுக்கும் பொருள்களினிடத்து விருப்புவெறுப்புக்களில்லையா மாதலால், அவைகாரணமாகவரும் மூவகைத்துன்பமும் இல்லையாம். 'யாண்டும் இல' என்றதனால், கடவுளைத்தியானித்து மனம் சலிப்பின்றி நல்லொழுக்கத்தில் நிற்பவர் இம்மையில் தமக்கு நேருந் துன்பங்களை மனந்தளராமற்பொறுப்ப ரென்பதும், மறுமையில் வீடுபெறுதலால் அத்துன்பம்விட்டகலு மென்பதும் பெற்றாம்.

இடும்பை என்பது - பால்பகா அஃறிணைப்பெயராதலால், 'இல' என்னும் பலவின்பால் வினைமுற்றைக் கொண்டது. யாண்டு - யா என்னும் வினாவடியாப் பிறந்து ஏழாம்வேற்றுமையிடப்பொரு ளுணர்த்திநிற்கும் இடைச்சொல்; உம்மை - முற்று.

திருக்குறளின் கடவுள்வாழ்த்து-ஏற்புடைக்கடவுள்வாழ்த்து என்றும், திரிமூர்த்திகளுக்கும் பொது வென்றும், சத்துவராஜஸ்தமோகுணங்களால் அறம் பொருளின்பமென மூன்றாகிய உறுதிப்பொருளுக்கு அக்குணங்களால் திரிமூர்த்தசொரூபமாய் நிற்கிற முதற்கடவுளோடு இயைபு உண்டாதலால் அறம் பொருள் இன்பம் என்னும் அம்மூன்றுபொருளையுங் கூறத்தொடங்கின திருவள்ளுவர் அம்மூவரையும் பொதுப்பட வாழ்த்தினா ரென்றும் கூறுவர், திருக்குறளுரையாசிரியராகிய பரிமேலழகர். (கக)

உ - ஆம் அதிகாரம்.—பெரியோரியல்பு.

பெரியவர்களது தன்மை. இங்கே 'பெரியோர்' என்றது, அறிவினாலும் ஒழுக்கத்தாலுஞ் சிறந்தோரைக் குறிக்கும். தருமத்தைத் தாம் அறிந்து நடத்தி உலகத்தார்க்கு உள்ளபடி உணர்த்தவல்லவர் பெரியோ ராதலால், அவ

ரது இயல்பு, அறத்துப்பாலின் முதலில் வைக்கப்பட்டது. திருக்குறளிலும் நீத்தார்பெருமை முதலில் வைக்கப்பட்டவாறு காண்க.

12.—(இ - ள்.) அன்பு - (பிராணிகளிடத்துப்) பிரீதியும், ஒப்புரவு - உபகாரஞ்செய்தலும், கண்ணோட்டம் - தாக்ஷிணியமும், அழியா வாய்மை - தவறுதசத்தியமும், நாண் - இலச்சையும், ஆதி - முதலான, இன்பம் பெருக்கும் நல் குணங்கள் எல்லாம் - இன்பத்தை மிகுதியாகத்தருகிற நல்லகுணங்கள் யாவும், நிறைந்த - நிரம்பப்பெற்ற, சான்றோர்கள் - பெரியோர்கள்,— துன்பு உற்றவர்க்கும் இனியனவே சூழ்வர் - (தமக்குத்) துன்பஞ்செய்தலைப் பொருந்தினவர்களுக்கும் (தாம்) இன்பந்தருவனவற்றையே மிகுதியாகச்செய்வார்கள்; துணையின் வினை முடிப்பர் - (தாம் பலர்க்கும்) துணைவராயிருந்து (அவரவர்)தொழிலை நிறைவேற்றுவார்கள்: வன்பின் தளரார் - (அந்நற்காரியங்களைச் செய்யும்) உறுதியினின்று சோர்வடையமாட்டார்; நட்டார்க்கு மடங்கி தோற்றல் நாணார் - சிநேகிதர்களுக்குத் தாம் கீழ்ப்படிந்து அடங்கி நடத்தற்கு வெட்கப்படார்; (எ-று.)—எ - ஈற்றசை; தேற்றமுமாம். [விநாயக புராணம் - அரசியற்கைப்படலம் - கசசு. (சான்றாண்மை.)]

அன்பாவது - மனைவியும் தாய் தந்தை புதல்வரும் முதலிய உறவினரிடத்து உண்டாகும் நேயமென்றும், தொடர்புபற்றிச் செல்வதாகிய அன்பு முதிர்ந்தவிடத்தே தொடர்புபற்றாது இயல்பாக வருத்தமுறும் உயிர்களெல்லாவற்றின்மேலுஞ் செல்வதாகிய அருள் உளதாவதென்றும் அறிக. ஒப்புரவாவது - உலகநடையை அறிந்து அதற்கேற்ப உதவிசெய்தல். இதனை ஒப்பு உரவு எனப்பிரிக்க; உலகத்தாரோடு ஒத்துச்செய்யுஞ் சிறந்ததொழிலென்றபடி. ஒப்பு - ஒத்தல்: தொழிற்பெயர். உரவு - வலிமை; பண்புணர்த்தும் பெயர். கண்ணோட்டமாவது - தன்னோடுபழகினவரைக் கண்டால் அவர்கூறியன மறுக்கமாட்டாமை; இது, அவர்மேற் கண்பார்வை சென்றவிடத்து நிகழ்வதாதலால், கண்ணோட்டமென்னும் பெயரதாயிற்று. வாய்மை - மெய்ம்மை. 'அழியா' என்ற அடைமொழி, வாய்மையின் மிக்கசிறப்பை உணர்த்தும்; அன்றி, அவ்வடைமொழியால், "வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந், தீமை யிலாத சொலல்", "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்ற திருக்குறள்களின் கருத்துக் குறிப்பிக்கப்படு மென்றலுமாம். நாணுவது - குணங்களால் உயர்ந்தவர் தமக்குத்தகாதகாரியத்தைச் செய்தற்கு வெள்குதல். இன்ப மென்ற சொல்லில், இம்மை மறுமைகளில் அனுபவிக்குஞ் சிற்றின்பமே யன்றி வீட்டுலகத்தில் அனுபவிக்கும் பேரின்பமும் அடங்கும். சான்றோர் - பலகுணங்களாலும் நிறைந்தவர். "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு, ஐந்து சால்பூன்றிய தூண்," "இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு", "இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண, நன்னயஞ் செய்து விடல்", "தோல்வி, துலையல்லார் கண்ணுங் கொளல்", "ஊழி பெயரினுந் தாம்பெயரார்" என்ற திருக்குறள்களை இங்கே அறிக. 'துன்புற்றவர்க்கும் இனியனவே சூழ்வர்' எனவே, பிறர்க்கு இனியன செய்தல் சொல்லவேண்டாதாயிற்று. 'துணையின் வினைமுடிப்பர்' என்பதற்கு - (தாம்செய்து முடிக்கவேண்டிய காரியத்திற்குத் துணையாகுபவரைத் தாழ்ந்து கூட்டிக்கொண்டு அத்துணைவர்களால் தொழிலை முடிப்பர் என்று பொருள்கொள்ளுதல் பொருத்தம்; "ஆற்றுவாராற்றல் பணிதல்" என்ற திருக்குறளில் பரிமேலழகர் இங்ஙனம் உரைத்தல் காண்க. துணையின்-துணைசெய்தலால் எனினுமாம். நட்டார்க்குஇணங்கிநடத்தல் பெருமைக்குக்குறைவாகாமை, பிரசித்தம்.

கண்ணோட்டம் - கண் ஓடுதல்; இது - தாக்ஷிணியத்துக்குக் காரணவாகு பெயர். ஓட்டம் - தொழிற்பெயர்; ஓடு - பகுதி, அம் - விகுதி, ட் - விரித்

தல். நாண் முதனிலைத்தொழிற்பெயர். சான்றோர்கள் என்பதில், மிகுதி யுணர்த்தும் சால் என்னும் உரிச்சொல் - பகுதி, கள் - விகுதிமேல் விகுதி. உற்றவர்க்கும், உம் - இழிவுசிறப்பு. இனியனவே, ஏ - பிரிநிலை. நட்டார், நள் - பகுதி; ட் - இறந்தகால இடைநிலை. (புதைத்தவ ரென்ற பொருளில், நடு - பகுதி; அதுவே ஒற்று இரட்டி இறந்தகாலங்காட்டும்.) தோற்றல்-தொழிற்பெயர்; தோல் - பகுதி. (தோன்றுதல் அல்லது தோன்றுவித்த லென்னும் பொருளில், தோற்று-பகுதியாம்.) நட்டார்க்கும் அடங்கி எனப் பிரித்து உரைத்தல், மோனைக்குப் பொருந்தாது.

இப்பாட்டு - திருக்குறளிலுள்ள சான்றாண்மை என்னும் அதிகாரத்துப் பாடல்களையும், அவற்றின் பரிமேலழகருரைநடையையும் பெரும்பாலும் அனுசரித்தது. இது-சோமகாந்தராசன் தன்மகனை ஏமகண்டனுக்கு முடி சூட்டத்துணிந்து அவனுக்கு இராசநீதி போதித்தது.

13.—(இ - ள்.) பிறர்க்கு இடர் எண்ணிலார்- அயலார்க்குத் துன்பஞ் செய்யக் கருதாதவர்கள், அரிய நால் மறை அந்தணர்தங்களில் பெரியர் ஆவர்- அறிதற்கு அருமையான நான்குவேதங்களையும் அறிந்த பிராமணர்களுள்ளுஞ் சிறந்தவராவர்; பொருள் உண்மை உணர்ந்துளோர் - (ஒவ்வொரு) பொருளின் தன்மையையும் (உள்ளபடி) அறிந்தவர்கள், தரியலார் தமர் என்ற இரு சார்பினுக்கு உரியரோ - பகைவர் நண்பர் என்ற இரண்டுகொள்கைகளுக்கும் உரியவர்களாவர்களோ? [ஆகார் என்றபடி]; (எ-று.)—[சேதுபுராணம் - இராம தீர்த்தச்சருக்கம் - சச.]

அந்தணரது பெருமை, பிரசித்தம். தத்துவஞானமுடையோர் அம்மெய் யுணர்வால் பகைநண்பு இலராய் நடுவுநிலையில் நிற்பராதலின், சிலரைப் பகைவராகக் கொண்டு வெறுத்தலும் சிலரை நண்பராகக்கொண்டு விரும்புதலுஞ் செய்யார் என்பதாம். நான்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். தரியலார் - (பிறரது ஆக்கத்தைப்) பொறாதவர்; எதிர்மறை வினையாலணையும்பெயர்: தரி - பகுதி, அல் - எதிர்மறையிடைநிலை. தமர் - தம்மவர்; இச்சொல், உறவினரையுங் குறிக்கும். என்றிரு-பெயரெச்சவீறு தொகுத்தல். ஓ-எதிர்மறை.

பிறர்க்குஇடரெண்ணாமையும், காய்தலுவத்தலகற்றலும் பெரியோரியல்பு என்க. இப்பாட்டு- போரில் துரோணனைநோக்கி வீமன்கூறிய வார்த்தை.(கங)

14.—(இ - ள்.) நடந்தாலும் - (தான் ஓரிடத்தில்) நடந்துசென்றாலும், இருந்தாலும் - (ஓரிடத்தில்) உட்கார்ந்திருந்தாலும், நவின்றாலும்- (ஒன்றைப்) பேசினாலும், துயில் கொண்டு கிடந்தாலும் - தூக்கங்கொண்டு படுத்திருந்தாலும், விழித்தாலும் - (துயிலுணர்ந்து) கண்விழித்தாலும், கிளர் முடி மன்னவர் முதலோர் - விளங்குகிற கிரீடத்தையுடைய அரசராதியோர், தொடர்ந்தாலும்- (தன்னை நன்குமதித்துப்) பின்தொடர்ந்தாலும், தொழுதாலும்-(தன்னை) வணங்கினாலும், துதித்தாலும் - (தன்னைத்) தோத்திரஞ்செய்தாலும், அவமதித்து கடந்தாலும் - அவமானஞ்செய்து வரம்புகடந்தொழுகினாலும், மெய்ஞானி - தத்துவஞானமுடையவன், கமலம் இலை புனல் போல்வான் - தாமரையிலையில் தண்ணீரை ஒப்பான் [அவற்றிற்பற்றின்றி நிற்பானென்றபடி]; (எ-று.)—[சூதசங்கிதை - ஞானயோககாண்டம் - சமாதிவிதியுரைத்த அத்தியாயம் - உ௫.]—கடத்தல்- காலால் தாண்டுதலுமாம்.

தத்துவஞானத்தால் பரப்பிரமத்தோடு பேதமறக் கலக்கும் நிலைமையை யடைந்தவன் இவ்வுலகத்தில் சீவித்திருக்கும்பொழுதும் எத்தொழிலிலும் பற்றில்லாமல் ஒழுகுவன் என்பதாம். இது, சூதமுனிவன் முனிவர்களுக்கு உபதேசித்தது. தாமரையிலையில் நீர் அதனோடு ஒட்டாமலே பொருந்தியிருத்தல்போல, தத்துவஞானி பிரபஞ்சவாழ்க்கையிற் சம்பந்தப்படாமலே தான் உயிர்வாழ்வ னென்க. மான அவமானங்களைப் பாராட்டாமற் சமமாகவே கரு

துவ னென்றவாறு. மெய்ஞ்ஞானமாவது - பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையால் அறிதல்.

துதி, ஞானி - ஸ்துதி, ஜ்ஞாநீ என்னும் வடசொற்களின் திரிபுகள். கமலம் - தற்சம வடசொல். துயில் - முதனிலைத்தொழிற்பெயர். கிளர்முடி - வினைத்தொகை. உம்மைகள் - எண்ணுப்பொருளன; அதனோடு சில உயர்வு சிறப்பையும், சில இழிவு சிறப்பையும் உணர்த்துதலுங் காண்க. (கச)

15.—(இ - ள்.) பராபரமே- மேலான கடவுளே! இல்லாத காரியத்தை இச்சித்து- (தான்செய்து முடித்தற்கு உரிமை) இல்லாத தொழிலை (ச்செய்ய) விரும்பி, சிந்தை வழி செல்லாமை - மனம்போனவழியில் தாம் போகாமை, நல்லோர் திறம் காண் - நற்குணமுடையவரது தன்மையன்றோ? (எ-று.)—காண் - தேற்றம். [தாயுமானவர்பாடல் - பராபரக்கண்ணி - ககரு.]

கண்டபொருளையும் விரும்புதலும், மனத்தையடக்கி நல்வழியிற் போக விடாமல் அதுபோனவழியெல்லாம் போதலும் நல்லோர்தன்மையல்ல என்பதாம். காரியம், சிந்தா - வடசொற்கள். பராபரம் என்பதற்கு - மேலானபொருள்களினும் மேலான தென்பது காரணப்பொருள்; பராத்பரம் அல்லது பராவரம் என்னும் வடசொல்லின் திரிபு. (கரு)

16.—(இ - ள்.) மூது அறிஞர் - பேரறிவுடையவர், முனிவினும் - கோபமுள்ளகாலத்திலும், நல்குவர் - கொடுப்பர்; கயவர் - மூடர், உள்ளம் கனிவினும் - மனமகிழ்ச்சியுள்ளகாலத்திலும், நல்கார் - கொடார்; (இவை எவைபோல வெனின்),—கதலி - வாழைமரம், நனி விளைவு இல் காயினும்- மிக முற்றுத லில்லாத காயிலானாலும், ஆகும் - பயன்படும்; எட்டி - எட்டி மரமானது, பழுத்தாயினும் - பழுத்தாலும், ஆமோ - பயன்படுமோ? [பயன் படாதன்றோ?] அறை - (நீ) சொல்லு; (எ-று.)—தான் - அசை. [நன்னெறி- உஅ.]

வாழை பழத்தில்மாத்திரமேயன்றிக் காயிலும் பயன்படுதல்போல, பெரியோர் மனமுவந்தகாலத்தில் மாத்திரமே யன்றிச் சினந்தகாலத்திலும் பிறர்க்கு உதவிசெய்வர்; எட்டி காயில்மாத்திரமேயன்றிப் பழத்திலும் பயன்படாமைபோல, சிறியோர் சினந்தகாலத்திலன்றி உவந்தகாலத்திலும் உதவிசெய்யார் என்பதாம். எப்பொழுதும் உதவுதல் பெரியோர்க்கும், எப்பொழுதும் உதவாமை சிறியோர்க்கும் இயல் பென்க. உவமவுருபில்லாமல் உபமேய உபமான வாக்கியங்கள் தனிதனி வந்ததனால், எடுத்துக்காட்டுவமையணி; வடநூலார் திருஷ்டாந்தாலங்காரமென்பர். இப்பாட்டிலுள்ள நான்குவாக்கியங்களுள் முதல்வாக்கியத்தின் உபமேயம் மூன்றும் வாக்கியத்தின் உபமானத்துக்கும், இரண்டாம் வாக்கியத்தின் உபமேயம் நான்காம் வாக்கியத்தின் உபமானத்துக்கு மாக முறையே சென்று இயைதல் முறைநிரனிறைப்பொருள்கோள்; இது - நிரனிறையணியெனவும் படும்; வடநூலார் கிரமாலங்காரமென்பர். 'அறை' என்றது, தேற்றப்பொருளை விளக்கும்.

முனிவு, கனிவு என்பவை- தொழிலாகுபெயராய், அந்தந்தக்காலத்தைக் குறிக்கும். மூதறிஞர் - முதுமை யென்னும் பண்புப்பெபர், ஈறுபோய் ஆதி நீண்டது; இதில் முதுமை - முதிர்ச்சியின்மேலது. அறிஞர், ஞ் - பெயரிடைநிலை; [நன் - பத - கச.] கயவர்-கீழோர்; கயமை யென்னும் பண்படியாப் பிறந்த பெயர்: 'கயமையாவது - குணங்கள்யாவும் இலராய கீழோரது தன்மை' என்பது, பரிமேலழகருரை. இல்காய் - பண்புத்தொகை. கதலி - ஈயீறு இகரமான வடசொல். முனிவினும், காயினும் என்ற உம்மைகள்-இழிவு சிறப்பு. கனிவினும், பழுத்தாயினும் என்ற உம்மைகள் - உயர்வுசிறப்பு. 'பழத்தாயினும்' என்றும் பாடம். (கசு)

17.—(இ - ள்.) பண்ணின் - சங்கீதம்போல் (இனிமையாக), புகலும் - பேசுகிற, பனி மொழியாய் - குளிர்ந்த சொற்களையுடையவளே! நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர் - (தம்முடைய) மனம் உயர்ந்தகடவுளினிடத்தே பொருந்தப்பெற்ற ஞானிகள்,—உடற்கு வரும் இடர் - (தமது) உடம்புக்கு வருந் துன்பங்கள், அடுக்கும் ஒரு கோடி ஆக - அடுக்கிச்சொல்லப்படும் கோடிக்கணக்கினவாக இருந்தாலும், நடுக்கம் உறார் - (அவற்றிற்கு) அச்சமடையார்; (அது எதுபோலவெனின்),—மதி மான் - சந்திரனிடத்திலுள்ள மானானது, மண்ணில் புலியை அஞ்சுமோ - பூமியிலுள்ள புலிகளைப் பார்த்துப் பயப்படுமோ? [பயப்படாதன்றோ]? (எ-று.)—[நன்னெறி - உகூ.]

சந்திரனையடுத்துள்ள மான் அச்சேர்க்கைவலிமையால் புலிக்கு அஞ்சாமைபோல, முதற்கடவுளிடத்து மனமழுந்தப்பெற்றவர் அந்தப்புகலிடத்தின் வலிமையால் எவ்வளவு பெருந்துன்பங்களுக்கும் அஞ்சார் என்பதாம். இதுவும் எடுத்துக்காட்டுவமையணி. முன்னது - உபமேயவாக்கியம், பின்னது - உபமானவாக்கியம். இடையில் 'பண்ணிற்புகலும் பனிமொழியாய்' என்றது, மகடூஉமுன்னிலை; அதாவது - பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுதல்: இவ்வாறு ஆடூஉமுன்னிலையும் உண்டு; அது, புருஷனை முன்னிலைப்படுத்துவது. பரத்துக்கு மதியும், உற்றோர்க்கு மானும், இடர்க்குப் புலியும் உவமையெனக் காண்க. இடர்க்குப் புலியொப்புமைகூறினதனால், அதன்கொடுமைவிளங்கும்.

ஓங்குபரம் - வினைத்தொகை. பரம் - மேலானபொருள்; பரப்ரஹ்மம்; வடசொல். 'ஆகவும்' என்ற உம்மை விகாரத்தால் தொக்கது. நடுக்கம்-தொழிற்பெயர்; உள்ளமும் உடம்பும் நடுங்குதல், அச்சத்தின் செயல். மதி - (யாவராலும்) நன்குமதிக்கப்படுவதெனக் காரணப்பெயர். சந்திரனிடத்திலுள்ள மறுவை மானென்றல், ஒருவகைக் கவிசமயம்; முயலென்றும், பூமியினது சாயையென்றும் பிறவாறுங் கூறுதலும் உண்டு. பண்ணின், இன் - ஐந்தனுருபு, ஒப்பு, சோடி என்றது, பல என்னுமாத்திரமாய் நின்றது. "மெலியோர் வலிய விரவலரை யஞ்சார், வலியோர்தமைத் தாம் மருவின்- பலியேல், கடவு ளவிர்சடைமேற் கட்செவி யஞ்சாதே, படர்சிறை யப்புள்ளரசைப் பார்த்து" என்றதுங் காண்க. (கஎ)

18.—(இ - ள்.) நல் ஆறு ஒழுக்கின்தலை நின்றோர் - நல்லவழியில் நடத்தலில் நிலைபெற்ற பெரியோர், நல்கூர்ந்தும் - வறுமையடைந்தாலும், அல்லன செய்தற்கு ஒருப்படார் - (தமது வருணாச்சிரமங்களுக்குத் தகுதி) அல்லாத செயல்களைச் செய்தற்கு உடன்படார்; (அது எதுபோலவெனின்),—பல் பொறிய செம் கண் புலி ஏறு - பல உடற்புள்ளிகளையுடையதும் சிவந்த கண்களையுடையது மான சிறந்த புலிகள், அற பசித்தும் - மிகப்பசித்தாலும், பைங் கண் புனத்த பைங் கூழ் - குளிர்ந்த இடத்தையுடைய வயல்களி லுள்ள பசுமையான பயிரை, தின்னாஆம் - தின்னமாட்டாவாம்; (எ-று.)—[நீதிநெறிவிளக்கம் - கூக.]

'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்ற பழமொழியையும், "உடுக்கையுலறி யுடம்பழிந்தக் கண்ணும், குடிப்பிறப்பாளர் தங்கொள்கையிற் குன்றார், இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா, கொடிப்புற் கறிக்குமோ மற்று" என்ற நாலடியாரையுங் காண்க. புலிக்குப் புல்லைத்தின்னாமை போல, பெரியோர்க்கு ஒழுக்கங் குன்றாமை எப்பொழுதும் இயல்பென்பதாம். இதுவும் - எடுத்துக்காட்டுவமை. இரண்டு வாக்கியங்களிலுமுள்ள இழிவுசிறப்பு உம்மைகளால், பிறகாலங்களில் நிலை வேறுபடாமை வெளியாம். வறுமையடைந்த காலத்தில் அவ்வறுமையை யொழித்தற்பொருட்டுப் பாவத்தொ

ழில்களைச் செய்தல் பெரும்பாலும் உலகவியல் பாதலால், நல்கூர்தலை எடுத்துக் கூறினர். முன்னே 'நல்லாறு' என வந்ததனால், பின்னே 'அல்லன' என்றது, நல்வினையல்லாத தீவினையைக் குறித்தது.

நல்லாறு - சன்மார்க்கம். ஒழுக்கு - ஒழுகு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். ஒழுக்கின்தலை, தலை - ஏழனுருபு; இன் - சாரியை. ஒழுக்கின்தலை நின்றார் - ஒழுக்கத்தில் தலைமையாக நின்றவ ரென்றுமாம்; ஒழுக்கத்தை மேற்கொண்டு நின்றவ ரென்றவாறு. நல்கூர்ந்து, நல்கூர் - பகுதி. நல்கு ஊர் என்ற இரண்டு வினைப்பகுதிகள் தொடர்ந்து ஒருசொல் தன்மைப்பட்டு, கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளுத லென்ற காரணப்பொருளால் வறுமையைக் குறிக்கு மென்பர். அல்லன - எதிர்மறைப் பலவின்பால் வினையாலணையும்பெயர். ஒருப்படுதல் - ஒருமைப்படுதல்: மனஞ் சம்மதித்தல். பொறிய - குறிப்புப் பெயரெச்சம்; இது, புலிக்கு அடைமொழி. ஏறு - ஆண்பாற்பெயர்; சிறப்பைக் குறித்தது. புலி ஏறு - ஏறுகிய புலி; முன்பின்னாகத்தொக்க இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஆம் - அசை; தேற்றமுமாம். 'பைங்கண்' என்பதில், பசுமை - குளிர்ச்சியின் மேலது. புனத்த - குறிப்புப்பெயரெச்சம். 'பைங்கூழ்' என்பதில், கூழ் என்னும் உணவின்பெயர்-காரியவாகுபெயராய், உணவுக்குக்காரணமானபயிரைக்குறிக்கும்.

19.—(இ - ள்.) தீர்வு அரும் - நீக்குதற்கு அருமையான, இன்னல் - துன்பங்களை, தம்மை செய்யினும் - தமக்கு (ஒருவன்) செய்தாலும், செய்ய சிந்தை பேர் அருளாளர் - நல்ல (தமது) மனத்திலே மிக்ககருணையுடைய பெரியோர், தத்தம் செய்கையின் பிழைப்பது உண்டோ - தம்தமது இயல்பின்படி (அவனுக்கு நன்மை) செய்தலினின்றுந் தவறுத லுண்டோ? [இல்லை யென்றபடி]; (அதுபோல வெனின்),—கார் வரை நிறுத்தி - கரிய மந்தரமலையை (மத்தாகத் தன்னிடம்) நாட்டி, கனல் எழ - நெருப்புப்பொறி பறக்கும்படி, (உக்கிரமாக), தன்னை கலக்க - தன்னை(த் தேவர்கள்) கடைந்து வருத்த, கண்டும் - பார்த்தும், ஆர்கலி - நிறைந்த ஓசையையுடையதான திருப்பாற்கடல், அமரர் உய்ய - அத்தேவர்கள் மரணமில்லாதவராய்ப் பிழைத்துவாழும்படி, பண்டு - முன்பு, அமிழ்து அளித்தது அன்றே - அமிருதத்தைக் கொடுத்ததன்றோ? (எ-று.)—[கம்பராமாயணம் - யுத்தகாண்டம் - விபீடணனடைக்கலப் படலம் - கஉஅ.]

விபீஷணன் சரணமடையவந்தபொழுது இராமபிரான் அவனை யேற்றுக்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு அவனையழைத்துவரும்படி சுக்கிரீவனையனுப்ப, அவ்வானரராசன் எதிர்கொண்டுவந்து அழைத்தபொழுது, விபீஷணாழ்வான், மிகமகிழ்ந்து, பெருந்தீங்குவிளைத்த இராவணனது தம்பியான தன்னை வரும்படி திருவுள்ளம்பற்றிய ஸ்ரீராமமூர்த்தியினது பெருங்கருணையைப் பாராட்டிக் கூறினது, இது.

அருமை + இன்னல் = அருமின்னல்; பண்புப்பெயர், ஈற்று ஐகாரம்மாத்திரம் கெட்டது. தம்மை - உருபுமயக்கம்; இன்னல்தம்மை - துன்பங்களையென்றலும் ஒன்று: தம் - சாரியை. தத்தம் - தாம்தாம் என்பதன் விகாரமான தந்தம் என்பதன் வலித்தல். செய்கையின், இன் - ஐந்தனுருபு, நீக்கம். கார்வரை - பெரியமலை யென்றும், மேகந்தவழும்மலை யென்றுங் கொள்ளலாம். ஆர்கலி - கடலுக்கு, வினைத்தொகையன்மொழி. உய்ய - செயவெனெச்சம் காரியப்பொருளதாதலால், எதிர்காலம். அமிழ்து - வடசொற்சிதைவு; மரணத்தைத் தவிர்ப்பது [சாவாமருந்து] என்று பொருள். பண்டு - இறந்தகாலங் குறிக்கும் இடைச்சொல். ஆழ்ந்த தன்மையையுடைய பெரியோரியல்பிற்குப் பாற்கடலின் தன்மையைத் திருஷ்டாந்தங்காட்டியவாறு. எடுத்துக்காட்

டுவமையணி. கடல்கடைந்தகதை:—பாரதம் - 195 - ஆம் பாட்டி னுரையிற் காண்க. (கக)

20.—(இ - ள்.) விண்ணிடை ஏகுதல் - ஆகாயமார்க்கத்திற் பறந்துசெல்லுதலும், மீள பாதலத்தில் புகல் - மறுபடி பாதாளலோகத்திற் பிரவேசித்தலும், மீட்டு புவியில் மேவல் - மறுபடி பூலோகத்திற்கு வருதலும், அண்ணிய பல் பர காயப் பிரவேசம் செயல் - சமீபித்த பல வேறு உடம்புகளில் நுழைந்து தொழில்செய்தலும், உறையும் அ இடத்தே எண்ணிய எலாம் வர செய்திடல் - (தாம்) தங்கும் இடத்திலேயே தாம்நினைத்தபொருள்களெல்லாம் வரும்படி செய்தலும், முதல் - முதலாக, செய் - செய்யப்படுகிற, சித்திகளை - யோகசித்திகளை, என்றும் வேண்டார் - (தத்துவஞானிகள்) எப்பொழுதும் விரும்பார்; (இன்னும் அவர்), புண்ணிய பாதகம் இலார் - (கடவுளருளால்) நல்வினையுந் தீவினையு மொழிந்தவர்; பெருமை இலார் சிறுமை இலார்- (இவ்வுலகத்துப்) பெருமை சிறுமைகளைப் பொருளாகப் பாராட்டார்; பொய் மெய் இல்லார் - (எப்பொழுதும் மெய்ம்மையே யுடைமையால்) பொய் மெய் என்ற பகுப்புக்களை யுடையரல்லர்; (எ - று.)—[இதுவும், அடுத்தபாடலும் - குசேலோபாக்கியானம் - குசேலர் துவாரகை கண்டு தம்நகர்ப்புறம் அடைந்த அத்தியாயம் - கஉ௩, கஉ௪ - ஆம் பாடல்கள்.]

குசேலர் கண்ணனைத்தரிசித்துச் செல்வமடையும்பொருட்டுத் துவாரகை சேர்ந்து கண்ணபிரானது அரண்மனைவாயிலை அடைகையில், அம்முனிவனை இகழ்ந்துபேசிய சிலபேதையரை நோக்கித் துவாரபாலகர்சொன்ன வார்த்தைகள் இவை.

மெய்யுணர்வுடையோர் முத்திநிலையையொழிய வேறொன்றையும் விரும்பார் என்பதாம். விண்ணிடையேகுதல் - ஆகாசகமநம். பாதலத்திற்புகல்- பாதாளப்பிரவேசம். பரகாயப்பிரவேசம் - கூடுவிட்டுக் கூடுபாய்தல்; தன் உயிர் தன் உடம்பினின்று வேறு உடம்பினுட் புகச்செய்தல். இவையெல்லாம், 'அணிமா' முதலிய எண்வகை யோகசித்திகளின்பாற்படும். உறையுமவ்விடத்தே எண்ணியவெலாம் வரச் செய்திடல்-பிராப்தி யென்னுஞ் சித்தி. பொய் மெய் இல்லார் - "உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்" என்றாற்போலக் கொள்க.

பாதாலம், புவி, பரகாயப்ரவேசம், ஸித்தி, புண்யபாதகம் - வடசொற்கள். அண்ணிய - அண் என்னும் வினைப்பகுதியடியாப் பிறந்த தெரிநிலையிறந்தகாலப்பெயரெச்சம்; அண்மையென்னும் பண்படியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்ச மெனினுமாம். எண்ணிய - பெயரெச்சமென்றாவது, பலவின்பால் வினையாலணையும்பெய ரென்றாவது கொள்ளத்தக்கது. எலாம், இலார் - தொகுத்தல். (உ௦)

21.—(இ - ள்.) (இன்னும் அத்தத்துவஞானியர்), ஆடுவார் - (பரம்பொருளை அனுபவித்தலா லுண்டான ஆநந்தத்தால்) கூத்தாடுவார்கள்; உன்மத்தர் போல் திரிவார் - பைத்தியம்பிடித்தவர்போல அலைவார்கள்; நகைத்திடுவார் - சிரித்திடுவார்கள்; அம கை கொட்டி பாடுவார் - அகங்கைகளைத் தாளமாகத் தட்டிக்கொண்டு பாடுவார்கள்; இன்று இருந்த இடம் நாளை இருக்க மனம் பற்றார் - இன்றைக்கு இருந்த இடத்தில் நாளைக்கு இருப்பதற்கு மனம்பொருந்தார்; சுற்றி கூடுவார்தமில் கூடார் - (தம்மைச்) சுற்றிலும் வந்து கூடுகிறவர்களோடு (தாம்) கலந்திடார்; கந்தை அன்றி வேறு உடுக்கை கொள்ளார் - கந்தைத்துணியையேயன்றி வேறு (நல்ல) ஆடையைத் தேடித்தரித்திடார்; அன்னார் - அம்மெய்யுணர்வுடையோரது, நீடு வார் புகழ் பெருமை - நெடுங்காலம்நிலைபெறும் மிக்க கீர்த்தியின் மகிமையை, இற்று என்று மதிப்

பவர்- இவ்வளவினதென்று அளவிடவல்லவர், ஆர்-யாவர் (உளர்)? நிகழ்த்து வார் - (அதனை) எடுத்துக்கூறவல்லவர்தாம், ஆர் - யாவர் (உளர்)? [எவரு மில்லை யென்றபடி]; (எ-று.)

உலகப்பற்றையொழித்துப் பரம்பொருளையே நாடிப் பரவசப்பட்டுள்ள பெரியோரது பெருமை யார்க்கும் எண்ணவும் சொல்லவும் இயலாது என்ப தாம். 'உன்மத்தர்போல்' என்பதை, ஆடுவார், நகைத்திடுவார் முதலியவற்றி ற்குங் கூட்டலாம்.

உன்மத்தர் - வடசொல். அகம் + கை = அங்கை; "அகமுனர்ச் செவி கை வரின் இடையன கெடும்" என்பது விதி. உடுக்கை - உடுக்கப்படுவ தென்ற காரணம்பற்றிய பெயர்; உடு - பகுதி, க் - சந்தி, கு - சாரியை, ஐ - செயப்படுபொருள் விகுதி: தொழிலாகுபெயராயின்,கை-விகுதியாம். இற்று-குறிப்புமுற்று; இகரச்சுட்டு - பகுதி: று - ஒன்றன்பால் விகுதி, ற் - சந்தி. ஆர்- யார் என்பதன் மரூஉ. (உக)

22.—(இ - ள்.) இ மூ உலகின் - (பூமி அந்தரம் சுவர்க்க மென்னும்) இந்த மூன்றுலோகத்திலும் உள்ள, இருள் - இருட்டை, கடியும் - போக்குகின்ற, ஆய் கதிர் போல் - சிறந்த கிரணங்களையுடைய சூரியன்போல, அ மூன்றும் - (இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும்) அந்த மூன்று காலத்து வரலாறுகளையும், முற்ற அறிதலால்-(பெரியோர்) முழுவதும் அறிந்திருத்தலால், பெரியோர் வாய் சொல் - அப்பெரியோரது வாயிலிருந்து வரும் வார்த்தைகள்,—தம்மின் உறழா மயங்கி உறழினும்-தம்மில்தாம் மாறுபடாத பொருள்கள் மாறுபட்டு நிலை தடுமாறினாலும், என்றும் பிறழா - எப்பொழுதும் தவற மாட்டா; (எ-று.)—[புறப்பொருள்வெண்பாமாலை - வாகைப்படலம் - கரு. (அறிவன்வாகை.)]

உலகத்தில் நிகழுந் தொழில்களெல்லாவற்றையும் பிரதியக்ஷமாகப்பார்த்து அறிந்துகொண்டு கருமசாக்ஷியாயும் உலகத்துக்குக் கண்ணாயும் உயர்ந்த வானத்தில் விளங்குகிற சூரியன்போல, பெரியோர் திரிகாலவர்த்தமானங் களையும் அறிந்துள்ளதனால், அவர்சொற்கள் எப்பொழுதும் தவறா என்ப தாம். 'தம்மினுறழா மயங்கியுறழினும் பிறழா' என்றது, பால் இயல்பில் தன் இனிமை யொழிந்து புளித்தல், சூரியன் தன்விளக்கமொழிந்து இருளு தல், வேதநெறிபிறழ்தல், வேலைகரையிழத்தல், சூரியசந்திரர் திசைமாறித் தோன்றுதல் என்னும் இவை போன்ற அசம்பாவிதமான செய்கைகள் நேர்ந் தாலும் பெரியோர்வாய்மொழி தவறா என வற்புறுத்தியவாறு. 'பெரியோர் சொல்' என்றவிடத்து 'வாய்' என வேண்டாதுகூறினது, அவர்வாய் எப் பொழுதும் தவறாதசொற்களையே பயின்றதென அதன்சிறப்பை யுணர்த்து தற்கு. முற்ற அறிதல் - ஒன்றையும்விடாமல் ஐயந்திரிபுஅற அறிதல்.

உலகின், இன் - சாரியை. ஆய்கதிர்- வினைத்தொகையன்மொழி. மூன்று என்பது - எண்ணலளவையாகுபெயராய்க் காலத்தையும், அது பின்பு கால வாகுபெயராய்க் காலச்செய்தியையுங் குறித்தலால், இருமடியாகுபெயர். தம்மின், இன் - ஏழனுருபு. உறழா - எதிர்மறைப் பலவின்பால் வினையா லணையும்பெயர்; பிறழா - முற்று. உறழினும் என்ற உம்மை - உறழாமைபற்றி னது. இனி, 'அம்மூன்றும் முற்ற அறிதலால்' என்பதற்கு- அந்த மூன்று உல கங்களின் தன்மைகளையெல்லாம் அறிவதனா லென்றும், அறப்பொருளின்ப மென்னுந் திரிவர்க்கத்தையும் அறிதலா லென்றும் உரையிடலாம். (உஉ)

23.—(இ - ள்.) பாவமும்-(மறுமைக்குத்) தீவினையும், ஏனை பழியும் - மற்றை (இம்மைக்கு) உலகநிந்தனையும், பட - உண்டாகும்படி, வருவ - நேர் கிற காரியங்களை, சான்றவர் - (நற்குண நற்செய்கைகளால்) நிறைந்த பெரி

யோர், சாவினும் - (அவற்றைச் செய்யாவிட்டால் தமக்கு) மரணம் நேர்வதாயிருக்கிற நிலையிலும், செய்கலார் - செய்யமாட்டார்கள்; (ஏனெனில்),—சாதல் - இறத்தல், ஒரு நாள் ஒரு பொழுதை துன்பம் - (இறக்கிற) ஒருநாளிலே (இறக்கிற) அவ்வொருபொழுதில் மாத்திரமே (அனுபவித்துக்கழிகிற) துன்பமாகும்; அவை போல் - அந்த இழிதொழில்கள்போல, அரு நவை ஆற்றுதல் இன்று - (உயிருள்ளவளவும்) அழிதற்கு அருமையான மிகுந்த துன்பங்களைச் செய்தலில்லை; (எ-று.)—[நாலடியார் - மானம் - ரு.]

சான்றோர் தம் உயிர்நீங்குவதாயினும் பழிபாவங்களைத் தருங் காரியங்களைச் செய்யார் என்பதாம். நெடுநாள் நீங்காத நரகத் துன்பங்களைத் தருவனவான தீச்செயல்கள் சிறிதுபொழுதிற் கழிவதான மரணவேதனையினுங் கொடியன வென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து. சாவினும், உம் - இழிவுசிறப்பு; அது "சாதலி னின்னாத தில்லை" எனக் கூறப்படுகிற மரணவேதனையின் மிக்க கொடுமையை விளக்கும்.

பாபம் - வடசொல். ஏனை - இடைச்சொல். வருவ - பெயர். செய்கலார், கு - சாரியை, அல் - எதிர்மறையிடைநிலை. பொழுதை, ஐ - சாரியை; ஐயீற்றுடைக் குற்றுகரம். (உரு)

24.—(இ - ள்.) புடை பரந்த - பக்கங்களிலே பரவின, வில் புருவம் - விற்போல் வளைந்த புருவங்களையும், வேல் நெடு கண்ணாய் - வேலாயுதம்போலக் கூரிய நீண்ட கண்களையும் உடையவளே! கடை எலாம் - அதமர்களெல்லோரும், காய் பசி அஞ்சும் - வருத்துகிற பசிக்குப் பயப்படுவார்கள்; ஏனை - (அவர்களினும்) வேறுபட்ட, இடை எலாம் - மத்திமர்களெல்லோரும், இன்னாமை அஞ்சும் - துன்பந்தருஞ் செயல்களுக்குப் பயப்படுவார்கள்; தலை எலாம் - உத்தமர்களோ எனில், சொல் பழி அஞ்சிவிடும் - (உலகத்தாருடைய) பழிச்சொல்லுக்குப் பயப்படுவார்கள்; (எ-று.)—[நாலடியார் - மானம் - எ.]

லோகாபவாதத்தால் மானக்கேடு உளதாமென்று அஞ்சுவார் மேன்மக்களென்று கருத்து. "நெல்லி னரிசியா ளின்புறூஉங் கீழெல்லாந் தத்தம், வரிசையா னின்புறூஉம் மேல்" என்றபடி கீழ்மக்கள் மான அவமானங்களைக் கருதாமல் கிடைத்த உணவு மாத்திரத்தால் உவப்பவரும், மேன்மக்கள் அங்ஙனமன்றி அவமானஞ் சிறிதுமில்லாமல் மானமே முழுதுமுண்டாக மகிழ்பவருமாதலால், 'கடையெலாங் காய் பசி யஞ்சும்' என்றும், 'தலையெலாஞ் சொற்பழியஞ்சிவிடும்' என்றுங் கூறப்பட்டது. தற்காலத்துப்பயனாகிய பசி நீங்குதலையும் எக்காலத்தும் பயனாகிற புகழ் விளைதலையும் நோக்கியல்லாமல் அரசர்முதலியோரால் நேரக்கூடிய தண்டனை முதலிய துன்பங்களுக்குப் பயந்து தீச்செயலொழிந்து நற்செயல்புரியும் இயல்பினர் இடைப்பட்டவராதலால், 'இடையெலா மின்னாமை யஞ்சும்' என்றார். கடை இடை தலை என்பன - பொருளால் உயர்திணைப் பலர்பாலாயினும் சொல்லால் பால்பகா அஃறிணைப்பெயராதலால், 'அஞ்சும்' என்னும் செய்யுமென்முற்றைக் கொண்டன; இங்ஙனமன்றி, செய்யுமென்முற்று பலர்பாலுக்கு உரியதாகாமை யுணர்க.

எலாம் - இடைக்குறை. காய்பசி - பிறவினை வினைத்தொகை. மற்று - அசை: அல்லது, வினைமாற்று. இன்னாமை - பண்பாகுபெயர். 'புடைபரந்த' என்றதைக் கண்ணுக்குங் கூட்டலாம். புருவம் - ப்ரூः என்னும் வடசொல்லின் சிதைவு என்பர்; வடமொழியில் இதன் இரண்டாம்வேற்றுமை ப்ருவம் எனநிற்றலுங் காண்க. கண்ணாய் - மகடூஉ முன்னிலை. வில்லும் வேலும், வடிவத்தினால்மாத்திரமேயன்றி ஆடவரை வருத்துதலாலும், கண்ணுக்கு உவமையாம். (உசா)

25.—(இ-ள்.) மடம் கொண்ட - பேதைமைக்குணத்தை (இயல்பாக)க்கொண்ட, சாயல் மயில் அன்னாய் - சாயலில் மயிலையொத்தவளே! சான்றோர் - பெரியோர்,—அடர்ந்து வறியர் ஆய் - மிகவறுமையுடையவராய், ஆற்றாத போழ்தும் - செல்வமுடையரல்லாத காலத்திலும், இடம் கண்டு அறிவாம் என்று எண்ணி இரார் - செல்வம்வருஞ் சமயத்தை எதிர்பார்த்து (அப்பொழுது தருமஞ்செய்தலை)க் கருதுவோமென்று நினைத்துச் சும்மாஇராமல், கடன கொண்டும் - கடன்வாங்கியாயினும், கடன் செய்வார் - (கடமையாகச்) செய்யத்தக்க செயல்களைச் செய்வார்கள்; (எ-று.)—[பழமொழி.]

பெரியோர், தமக்குச் செல்வமில்லாத சமயமாயினும், பின்பு செல்வம் வருங்காற் பார்த்துக்கொள்வோ மென்று சும்மா இராமல் கடன்வாங்கியாயினும் முக்கியமான தானதருமங்களைச் செய்வர் என்பதாம். "கடனகொண்டுஞ் செய்வன செய்த லினிதே" என்றதுங் காண்க.

அடர்ந்து - அடர என்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு. வறியார் - வறுமையுடையவர்; வறுமையாவது - அனுபவிக்கப்படும்பொருள் யாவும் இல்லாமை; ஏழைமை. போழ்து - மரூஉ. உம்மைகள் - இழிவுசிறப்பு. இடம் என்பது - செல்வமென்னும் பொருளதாதலை, "இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார், கடனறி காட்சியவர்" என்ற திருக்குறளிலுங் காண்க. இரார் - பலர்பால் முற்றெச்சம்; அளபெடை, செய்யுளோசைநிறைக்க வந்தது. கடன் - கடம் என்பதன் இறுதிப்போலி.

மயிலன்னாய் - மகடூஉ முன்னிலை. "பேதைமையென்பது மாதர்க்கு அணிகலன்", "நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்றபடி மகளிர்க்குப் பேதைமைக்குணம் இயல்பாதலால், 'மடங்கொண்ட' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. மடமையாவது - எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாதுபோலிருக்குந் தன்மை; இது, நாணம் அச்சம் பயிர்ப்பு முதலிய மற்றைப் பெண்குணங்களுக்கும் உபலக்ஷணம். இனி, மடங்கொண்ட - இளமையைக்கொண்ட எனினுமாம். சாயல் மயில் அன்னாய்=மயிலன்னசாயலாய்; சாயல்- மென்மையுணர்த்தும் உரிச்சொல். மயில் - மயூர மென்னும் வடசொல்லின் சிதைவு என்பர். அன்னாய்- அன்னா ளென்பதன் விளி. (உரு)

26.—(இ-ள்.) ஒல்வது - (தனக்கு உபசாரம்) கிடைக்கக்கூடிய இடத்தை, அறியும் - அறிந்து அங்குச்செல்கிற, விருந்தினனும்-விருந்தாளியும், ஆர் உயிரை கொல்வது - அருமையான பிராணிகளை வதைத்தலை, இடை நீக்கி - முழுவதும் ஒழித்து, வாழ்வானும் - வாழ்பவனும், வல்லிதின் - வலிமையாக [கைவிடாமல் உறுதியாக], இனிது சீலம் உடைய - நல்லொழுக்கத்தையுடைய, ஆசானும் - ஆசிரியனும், இ மூவர்-(ஆகிய) இந்தமூன்றுபேரும், ஞாலம் எனப்படுவார்-உலகத்து உயர்ந்தவரென்று சொல்லப்படுவார்; (எ-று.) —[திரிகடுகம்-உசு.]

தனக்கு நல்லஉபசாரங்கள் தவறாமற்கிடைக்கக்கூடிய இடத்தை அறிந்து அடையும் விருந்தாளி, தானும் வருந்தாமல் தான்செல்லும் இல்லத்துக்கு உரியவனையும் விருந்தோம்பாமையாலாகுந்தீவினைக்குஉள்ளாக்காமல் இனிது செல்லுதலால், உயர்ந்தவனாவன்; எல்லாத்தருமங்களுள்ளும் மிகச்சிறந்ததென்று நூல்களிற் கூறப்பட்டது கொல்லாமையாதலால், அவ்விரதத்தைக் கைவிடாதொழுகியவன் சிறந்தவனாவன்; தவறாத நல்லொழுக்கமுடைய ஆசாரியன், தனது சீடர்பலரையும் அந்நல்லொழுக்கவழியிற் செலுத்தி யீடேற்றுதலால், உயர்ந்தவனாவன்: பிறர்க்கு உபதேசித்துத் தான் நல்லொழுக்கந் தவறுபவன்வார்த்தையை எவருங் கொள்ளார். "உலக மென்பது உயர்ந்தோர் மாட்

டே" ஆதலால், அதன் பரியாயமொழியாகிய ஞாலமென்பது - உயர்ந்தோரை உணர்த்திற்று. இடை நீக்கி - தன் ஆயுள்நாளிடையிலே செய்யாது ஒழித்து; இனி, (பிராணிகளைத் தாமாக இறப்பதன்முன்) இடையிலே கொல்வதை ஒழித்து என்று பொருள் கொள்ளுதலும் ஒன்று: ஒருயிரைப் பிறர்சொல்வதைத் தான் இடையிலே நின்று தடுத்து என்றும் பொருள்படும். 'ஒல்வதறியும்' என்பதற்கு - (ஒருவனுக்கு) இயல்வதைத் தான் அறிந்து பெற்ற அதனால் இன்பத்தையடையு மென்று உரைப்பாரு முளர்; கிடைத்தமட்டில் திருப்திப்படவேண்டு மென்க.

ஒல்வது - வினையாலணையும்பெயர். விருந்து - புதுமை; விருந்தினன் - புதியனாய் வருபவ னெனக் காரணப்பெயர். உயிர் - இங்கே, பிராணிக்கு, ஆகுபெயர். வல்லிதின் - வினையுரி. சீலம் - வடசொல். ஆசான் - ஆசார்யனென்னும் வடசொல்லின் சிதைவு. இப்பாட்டில், எண்ணும்மை தொகைபெற்றது.

27.—(இ - ள்.) இல்லார்க்கு - (ஒருபொருளும்) இல்லாதவர்களுக்கு, ஒன்று ஈயும் - (அவர்வேண்டிய) ஒருபொருளைக் கொடுக்கும், உடைமையும் - செல்வமும், இ உலகின் - இவ்வுலகத்துப்பொருளினது, நில்லாமை - நிலையில்லாமையை, கண்ட - ஆராய்ந்தறிந்த, நெறி பாடும் - நல்லொழுக்க இயல்பும், எ உயிர்க்கும் - எல்லாவுயிர்களுக்கும், துன்பு உறுவ செய்யாத - துன்பம் விளைதற்குக்காரணமான செயல்களைச் செய்யாத, தூய்மையும் - பரிசுத்த குணமும், இ மூன்றும் - (ஆகிய) இந்த மூன்றும், நன்று அறியும் மாந்தர்க்கு உள - (தம் உயிர்க்கு) நல்லதாகிய அறத்தை அறியும் இயல்புடைய மனிதர்களுக்கு உள்ளன; (எ-று.)—[திரிகடுகம் - கூஅ.]

"வறியார்க்கொன்றீவதேயீகை" என்ற திருக்குறளினாலும், தரித்திரர்க்குக் கொடுத்தலே தானத்தின் இலக்கணமாத லறிக. ஒன்று - ஒருபொருளுக்கு எண்ணலளவாகுபெயர். நில்லாமை - செல்வம் உடம்பு முதலாக இப்பிரபஞ்சத்திற் காணப்படும் பொருள்கள் பலவும் நிலைத்தலில்லாதனவாந் தன்மை.

உறுவ, நன்று - பெயர்கள். மாந்தர் - ஒருமையில்லாமல் எப்பொழுதும்பன்மையிலேயேவரும் பெயர்; இதனை வடநூலார் 'நித்யபஹுவசநம்' என்பர். ()

28.—(இ - ள்.) இருமை - (பிறப்பு முத்தி என்னும்) இரண்டினது, வகை - (துன்ப இன்பக்) கூறுபாடுகளை, தெரிந்து - ஆராய்ந்தறிந்து, (அப்பிறப்பை ஒழித்தற்கு), ஈண்டு - இப்பிறப்பில், அறம் - துறவறத்தை, பூண்டார் - ஏற்றுக்கொண்ட முனிவர்களது, பெருமை - மகிமையே, உலகு - உலகத்தில், பிறங்கிற்று - சிறந்துவிளங்கிற்று; (எ-று.)—[திருக்குறள் - நீத்தார்பெருமை - ௩.]

தத்துவஞானத்தாற் பொருட்பற்று அற்ற பெரியோரது மகிமையே லோகப்பிரசித்தமானது என்பதாம். இருமை என்பது - இங்கே இரண்டின் தன்மையைக் குறியாமல் இரண்டு என்னும் எண்ணையே குறித்தது; இதில், மைவிகுதி - தன்மையை யுணர்த்தாமல் தன்மையையுடைய பொருளையே உணர்த்தியதனால், பகுதிப்பொருள்விகுதி யெனப்படும். ஈண்டு - சுட்டு நீண்டது. பெருமை என்பத னிறுதியில் பிரிநிலையேகாரம் விகாரத்தால் தொக்கது; இதனால், அரசர்முதலாயினார் பெருமை பிரிக்கப்படும்: படவே, அரசர்முதலிய அனைவர் பெருமையினுந் துறந்தவர்பெருமையே உலகத்திற் சிறந்து விளங்கிற் றென்க. உலகு - ஏழனுருபுத்தொகை. (உஅ)

29.—(இ - ள்.) (பிறப்பு ஒத்த மனிதர்களுள்), செயற்கு அரிய செய்வார் - செய்தற்கு (எளிமையானவற்றைச் செய்யாமல்) அருமையானவற்றைச் செய்பவர், பெரியர் - பெரியவராவர்; செயற்கு அரிய செய்கலாதார் - (அவ்

வெளிமையானவற்றைச் செய்து) அருமையானவற்றைச் செய்யமாட்டாதவர், சிறியர் - சிறியவராவர்; (எ-று.)—[திருக்குறள் - நீத்தார்பெருமை- ௬.]

பின்தினவாக்கியத்தால், நீத்தார்பெருமையை எதிர்மறைமுகத்தாலும் விளக்கினர். செய்தற்கு எளியனவாவன - மனம்வேண்டியவாறே அதனை இந்திரியவழிகளால் விஷயங்களிற் செலுத்துதலும், ஆசையும், கோபமும் முதலியன. செய்தற்கு அரியனவாவன - இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டுவகை யோக உறுப்புக்கள்.

அரிய - பெயர். செய்கலாதார் என்பதில், அல் ஆ என்ற இரண்டனுள் ஒன்றைச் சாரியையும், மற்றொன்றை எதிர்மறையிடைநிலையு மாகக் கொள்ளுதல் மரபு; கு-சாரியை: இனி, இல் என்பதுபோல 'கல்' என்பது-ஆற்றலுணர்த்துவதோர் இடைநிலை யெனக் கொள்ளலும் ஒன்று. (௨௯)

30.—(இ - ள்.) எ உயிர்க்கும் - எல்லாவுயிர்களின்மேலும், செம் தண்மை- நல்ல குளிர்ந்த கருணைசெய்தலை, பூண்டு ஒழுகலான் - விரதமாகக் கொண்டு நடத்தலால்,—அந்தணர் என்போர் - அந்தணரென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர், அறவோர் - துறவறத்தில் நின்றவர்களே; (எ - று.)—[திருக்குறள் - நீத்தார்பெருமை - ௧௦.]

முனிவர் உயிர்களிடத்து மிக அருளுடையரென்பது, இதனாற் கூறப்பட்டது. துறவறத்துக்கு அருளுடைமை சிறந்தவிரதமாம். அந்தணர் என்பது - அழகியதண்மையையுடையா ரெனக் காரணப்பெய ராதலால், அது அவ்வருளுடையார்மே லன்றிப் பிறர்மேற் செல்லா தென்பது கருத்து. அந்தணர் என்பதில், 'தண்' என்னும் பண்படி - ஆகுபெயராய் அருளை யுணர்த்திற்று; 'தண்மை' என்பதும் இது. மற்று - அசை. (௩௦)

௩ - ஆம் அதிகாரம்.—அறச்சிறப்பு.

அப்பெரியோர்களாற் கூறப்பட்ட அறம் பொருள் இன்ப மென்னும் மூன்றனுள், தருமத்தின் சிறப்பைக் கூறுவது. அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும். தருமத்துக்குச் சிறப்பாவது- மற்றைப் பொருளும் இன்பமும் போ லன்றி இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையுந் தருதலால், அவற்றினும் மேம்பட்டிருத்தல். திருக்குறளில் 'நீத்தார்பெருமை' என்ற அதிகாரத்தின்பின் 'அறன்வலியுறுத்தல்' என்ற அதிகாரம் வைக்கப்பட்டவாறு காண்க. இங்கே, அறம் என்றது, இல்லறம் துறவறம் என்ற இரண்டுக்கும் பொது.

31.—(இ - ள்.) தருமம் என்று ஒரு பொருள் உளது - தருமமென்று ஒருபதார்த்தம் இருக்கின்றது; (அது), தா இலா - குற்றமில்லாத, இருமையின் இன்பமும் - இம்மை மறுமை யென்னும் இரண்டி னின்பங்களையும், எளிதின் ஆக்கும் - எளிதில் உண்டாகச்செய்யும்; (அன்றியும் அது), அருமையில் வரும் பொருள் ஆகும் - அருமையாகக் கிடைக்கத்தக்க பொருளாம்; அன்னதும் - அந்த அறத்தினது இயல்பும், ஒருமையினோர்க்கு அலால் உணர்தற்கு ஒண்ணுமோ - மனத்தை ஒருநிலையிற்செலுத்தும் உறுதியுடையவர்களுக்கல்லாமல் பிறர்க்கு அறியக்கூடியதோ? [அன்று என்றபடி]; (எ-று.)—[கந்தபுராணம் - அசுரகாண்டம் - காசிபனுபதேசப்படலம் - ௧௨.]

தருமம் இம்மைமறுமையின்பங்களைத் தருந் தன்மையை இதிற்கூறி, அது வீட்டின்பந்தருந்தன்மையை அடுத்தபாடலிற் கூறுவர். தருமம் புண்ணியத்துக்குக் காரணமாதலால், சுவர்க்கம் முதலிய மறுமையின்பத்தை

எளிதிற்பெறச்செய்யும். ஒண்ணும் - ஒன்றும் என்பதன் மரூஉ. ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம். (௩௧)

32.—(இ - ள்.) தருமமே போற்றிடின் - அறத்தையே விரும்பிச் செய்யத்தொடங்கினால், அன்பு சார்ந்திடும் - (உயிர்களிடத்து) அன்பு பொருந்தும்: (அந்த அன்பினின்று), அருள் எனும் குழவியும் அணையும் - கருணையென்கிற குழந்தையும் உண்டாகும்; ஆங்கு - அவ்வாறு, அவை வரு வழி - அன்பும் அருளும் ஆகிய அவ்விரண்டும் உண்டாமபொழுது, தவம் எனும் மாட்சி எய்து மேல் - தவமென்கிற சிறந்த ஒழுக்கம் உண்டாகுமானால், தெருள் உறும் அ உயிர் சிவனை சேரும் - ஞானத்தெளிவுபெற்ற அந்த உயிர் கடவுளையடையும்; (எ - று.)—[கந்தபுராணம் - காசிபனுபதேசப்படலம் - கரு.]

வேண்டினபயன்களை வேண்டினபடியே அடைவிக்கவல்லதும் முத்திக்குக் காரணமாவதுமான தவம் உயிர்கள்மேல் அருள்முதிர்ந்தவிடத்துச் செய்யப்படுவதாதலும், அத்தவத்திற்குச் சிறந்த அருள் அன்பின் பயனாதலும், அந்த அன்பு இல்லறத்திற்குச் சிறத்தலும் என்னும் இவை வெளியாம். போற்றுதல் - கைவிடாது பாதுகாத்தலும் வளர்த்தலுமாம். "அருளென்னுமன்பீன் குழவி பொருளென்னுஞ், செல்வச் செவிலியா லுண்டு" என்ற திருக்குறளில் அருளை அன்பினாற் பெறப்பட்ட குழந்தை யென்றதையும், அதனுரையிற் பரிமேலழகர் 'தொடர்புபற்றாதே வருத்தமுற்றார்மேற் செல்வதாய அருள் தொடர்புபற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்தவிடத்து உளதாவதாகலின், அதனை 'அன்பீன்குழவி' என்று கூறினார்' எனவுரைத்ததையும் இங்கே யறிக. அருளைக் குழந்தையென்றதற்கு ஏற்க, அன்பைத் தாயென்னுமையால், ஏகதேசவுருவகம். தவமாவது - மனம் பஞ்ச இந்திரியங்களின் வழியிலே போகாமல் நிற்கும்பொருட்டு வனத்திற்சென்று நீர்பருகியும் காற்றுநுகர்ந்தும் காய்கனிகிழங்குசருகுவர்க்கங்களை யுண்டும் விரதங்களால் உணவைச்சுருக்குதலும், கோடைக்காலத்தில் வெயிலிலும் பஞ்சாக்கினிமத்தியிலும் நிற்றலும், மாரிக்காலத்திலும் பனிக்காலத்திலும் நீர்நிலையில் நிற்றலும், சுவாசத்தையடக்குதலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தன் உயிர்க்குவருந் துன்பங்களைப் பொறுத்து இஷ்டதெய்வத்தைத் தியானித்தல். சிவன் என்பதற்கு - அடியார்களுக்கு எல்லாமங்களங்களையுஞ் செய்பவனென்று காரணப்பொருள்; சிவம் - சுபம். 'சிவனைச்சேரும்' எனவே, கருமமொழிந்து பிறப்பு அற்று முத்திபெற்றுப் பேரின்பமடையும் என்பதாம்.

குழவி - இளமையையுடைய தெனக் காரணப்பெயர்; குழ - பகுதி, உரிச்சொல், இளமை; இ - பெயர்விகுதி, வ் - சந்தி. தபஸ் - வடசொல். மாட்சி - பண்புப்பெயர்; மாண் - பகுதி, சி - விகுதி. ஆல் - ஈற்றசை.

கீழ்க்கவியும், இக்கவியும் - சூரபதுமன்முதலிய தன்புதல்வர்க்குக் காசியபமுனிவன் உபதேசித்தவை. (௩௨)

33.—(இ - ள்.) அறமே - தருமமே, மறங்கள் முழுது அழிக்கும் - (செய்தவனது) பாவங்களையெல்லாந் தீர்க்கும்; அறமே—, கடவுள் உலகு ஏற்றும் - (செய்தவனைத்) தேவலோகத்துச் செலுத்தும்; அறமே—, சிவனுக்கு ஒரு வடிவம் ஆகும் - கடவுளுக்கு ஒருசொரூபமாம்; சிவனை வழிபடுவோர்க்கு - கடவுளைப் பூசிப்பவர்க்கு, அறமே—, எல்லாம் பெரு பயனும் அளிக்கும் - சிறந்தபலன்களையெல்லாங் கொடுக்கும்; அறமே—, யார்க்கும் - எல்லோர்க்கும், எ இடத்தும் - எல்லாவிடத்திலும், அச்சம் தவிர்ப்பது - பயத்தைப் போக்குவது, என - என்று, சாதாதபமுனிவன் - சாதாதபனென்னும் இருடி, அறைந்தான் - கூறினன்; (எ - று.)—[காஞ்சிப்புராணம் - புராணவரலாற்றுப்படலம் - ௧௪.]

நைமிசாரணியத்தில் முனிவர்கள்பலர் ஒருங்குகூடிச் சிவபிரானைக் காணு முபாயம் யாதென்று ஆராய்ந்தபொழுது, சாதாதபனென்னும்முனிவன் தன் கருத்தாகக் கூறினது, இது.

சாதாதபமுனிவன் - சாதாதபனாகிய முனிவ னென இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (௩௩)

34.—(இ - ள்.) தேங்கு விண் போகமும் - நிறைந்த சுவர்க்கலோ கத்து இன்பத்தையும், சிறந்த முத்தியும் - (எல்லாப்பதவிகளினும்) மேம் பட்ட மோக்ஷத்தையும், ஈங்கு உறும் ஆக்கமும் - இம்மையில் அடையப் படுஞ் செல்வம் முதலிய நற்பயனையும், இனிது நல்கலால்- (தன்னைச்செய்த வர்க்குச்) சிரமமில்லாமல் இனிமையாய் உண்டாக்குதலால், ஓங்கிய - சிறப் புப்பெற்றுள்ள, அறத்தினை - தருமத்தை, உளம் முன் மூன்றினும் - மனம் முதலிய திரிகரணங்களாலும், பாங்கு உற - செவ்வையாக, நித்தலும் - நாள் தோறும், பரிந்து - அன்புகொண்டு, செய்தி - செய்வாய்; (எ-று.)—[இது முதல் மூன்றுகவிகள்- விநாயகபுராணம்-அரசியற்கைப்படலம் ௧௬, ௧௭, ௧௮. (அறன்வலியுறுத்தல்.)] இவை, சோமகாந்தன் ஏமகண்டனுக்குப் போதித்த வை; திருக்குறளின் 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தின் கருத்தைக் கொண்டவை.

உளம்முன் மூன்று - மனமொழிமெய்கள். இம்மூன்றாலும் பாங்குறச் செய்தல் - எண்ணமும் சொல்லும் செயலும் மாறுபடாமல் ஒன்றுபட்டிருப் பச் செய்தல். அவற்றாற் செய்யும் அறங்களாவன - முறையே, நற்சிந்தை யும், நற்சொல்லும், நற்செயலும் என இவை. 'மூன்றினும்' என்ற முற் றும்மையால், திரிகரணங்களுள் ஒன்று மாசுபட்டவிடத்தும் மற்றவற்றாற் செய்வன பயனிலவா மென்பது பெறப்படும். ஆல் - ஈற்றசை.

போகம் - வடசொல். முத்தி- முக்தி யென்னும் வடசொல்லின் திரிபு; (பற்றுக்களை) விட்டு அடையு மிடமெனக் காரணப்பெயர்: வீடு என்னுந் தமிழ்ப்பெயரும் இப்பொருள்கொண்டதே. நித்யம் என்னும் வடசொல், நித் தல் எனத் திரிந்தது; நித்தம், நிச்சம், நிச்சல் எனவும் வரும். (௩௪)

35.—(இ - ள்.) வழுக்கு அறும் அறத்தினை - (பயன்தருதலில்) தவ றுதலில்லாததான தருமத்தை, மற்று செய்தும் என்று - பின்பு செய்வோம் என்று, ஒழுக்கிடாது - காலங்கழியவிடாமல், ஒல்லுறும் வகை - (தனக்கு) இயலும்விதத்தால், இன்னா சொலும் - (வாய்க்குற்றமாகிய) கடுஞ்சொல்லும், உளத்து அழுக்கு எனும்- மனத்தின் குற்ற மெனப்படுகிற, அழுக்காறு அவா முதல் இழுக்கொடு வெகுளியும் இன்றி - பொறாமையும் ஆசையும் முதலிய தீக்குணங்களும் கோபமும் இல்லாமல், செய்க - செய்யவேண்டும்; (எ-று.)

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே, செல்லும்வா யெல்லாஞ் செயல்", "அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்", "அன்றறிவா மென்னாது அறஞ்செய்க" என்ற திருக் குறள்களை இங்கே அறிக. 'அறத்தினை' என்பது - 'செய்தும்' என்பதற்கும், 'செய்க' என்பதற்குஞ் செயப்படுபொருள். மற்று என்னும் இடைச்சொல் - இங்கே பின் என்னும் பொருளது; மற்றுச் செய்தும் என்று ஒழுக்கிடாது செய்தல் - நாம் இப்பொழுது இளம்பிராயமுடையோ மாதலால் முதுமைப் பிராயத்தே செய்வோ மென்று எண்ணாமல் இளமை உடம்பு செல்வம் என் பவற்றின் நிலையாமையைச் சிந்தித்து அவைகூடிய சமயத்தை வீண்படுத்தா மல் நாள்தோறும் தருமஞ்செய்தல்: "மற்றறிவாம் நல்வினை யாமிளைய மென் னாது, கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்" என்னும் நாலடி யாரையுங் காண்க. ஒல்லும் வகையாற் செய்தல் - இல்லறம் பொருளள வுக்கு ஏற்பவும், துறவறம் உடம்புநிலைக்கு ஏற்பவுஞ் செய்தல்.

அழுக்காறு - அழுக்கறு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அழுக்கா றெனினும், அழுக்கறுத்த லெனினும் ஒக்கும்: இதில், பகுதியாகிய அழுக்கறு என்பது ஒருசொல். இனி, குற்றம்நீங்கு என்னும்பொருளைத் தரும் அழுக்கு அறு என்னும் இரண்டுசொற்கள் ஒருசொல் தன்மைப்பட்டு எதிர்மறை யிலக்கணையால் பொறாமையாகிய குற்றத்தைக் குறிக்குமென்றலும் ஒன்று. வெகுளி - தொழிற்பெயர்; வெகுள் - பகுதி, இ - தொழிற்பெயர்விகுதி. ()

36.—(இ - ள்.) அன்பு உறும்-அன்போடு பொருந்திச் செய்கிற, அறத்தினல் - இல்லறத்தோடு, அடுக்கும் - பொருந்திவருகிற, இன்பமே—, இன்பு எனத்தக்கது - இன்பமென்று சிறப்பித்துச் சொல்லத்தக்கது; வினை இன்பு எலாம் - அவ்வில்லறத்தோடு பொருந்தாமல் பாவத்தால்வரும் இன்பங்களெல்லாம், துன்பமும் பழியையும் தோற்றும் - துன்பங்களையும் பழியையும் உண்டாக்கும்; ஆதலால்—, வன்பு உறும் அறத்தினை - (இப்படி இம்மை மறுமை வீட்டு இன்பங்களை ஒருங்கேதருகிற) வல்லமை பொருந்திய தருமத்தை, மறப்பின்- செய்யாது மறந்து ஒழிந்தால், கேடு உறும்-தீங்கு உண்டாகும்; (எ-று.)

"அறத்தான் வருவதே யின்பம் மற்றெல்லாம், புறத்த புகழுமில," "அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை, மறத்தலி னூங்கில்லை கேடு" என்ற திருக்குறள்களை இங்கே அறிக. துறவறத்துக்கு அருளுடைமைபோல இல்லறத்திற்கு அன்புடைமை சிறத்தலால், இல்லறம் 'அன்புறும் அறம்' எனப்பட்டது. 'அறத்தினல்' என்பதில், ஆல் என்னும் மூன்றனுருபு - உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. வினை யின்பம் - பிறன்மனைவியை விரும்புதல், விலைமகளிரை விரும்புதல் முதலியன. துன்பம் என்றது - இம்மையில் பிறரால் வரும் இடர்களோடு மறுமையில் உளதாகும் நரகவேதனையையுங் குறிக்கும். 'வினையின்பம் பழியையுண்டாக்கும்' எனவே, இல்லறத்தோடு பொருந்தி வரும் இன்பம் 'புகழையுமுடையது' என்பது பெறப்படும்.

தோற்றும் - தோன்றும் என்பதன் பிறவினை; மெலி வலியாதல் - பிறவினைக்குறி. கேடு - கெடு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். இன்பமே, ஏ - பிரிநிலை. ஆல் - அசை. (கசு)

37.—(இ - ள்.) திருவும் - செல்வமும், இன்பும் - சுகமும், சிறப்பும் - மேன்மையும், புகழும் - கீர்த்தியும், (என்னும் இவையெல்லாம்), மற்று ஒருவர் ஆக்கலும் நீக்கலும் உள்ளவோ - வேறொருத்தரால் உண்டாக்கப்படுதலையும் ஒழிக்கப்படுதலையும் உடையனவோ? [அல்ல என்றபடி]; அவை எலாம் - கீழ்க்கூறியவையெல்லாம், மாந்தர்க்கு - மனிதர்க்கு, புண்ணியம் - (அவரவர் செய்த) நல்வினையால், மருவும் - உண்டாகும்; தருமம் இன்று எனின் - அந்நல்வினை இல்லையானல், தாமே சிதையும் - தாமே அழிந்திடும்; (எ - று.)— ஆல் - அசை. [சேதுபுராணம் - அக்கினிதீர்த்தச் சருக்கம் - கூஅ]

சிறப்பு - மற்றையோரினும் சிறத்தல்; தொழிற்பெயர். புகழ் - அறம்வழுவாதவர்க்கு இவ்வுலகில் என்றும் பெயர் அழியாதுநிற்றல். புண்யம் - வடசொல். தருமமென்ற காரணத்தின் பெயரால் அதன்காரியமான நல்வினையைக் குறித்தது, உபசாரவழக்கு.

பாடலிபுத்திர நகரத்தில் பசுமானென்னும் வணிகனது இறுதிப் புத்திரனை துட்பண்ணியனென்பவன் பலநாளாய் அவ்வூர்ப்புத்திரரையெல்லாம் நீரிலமிழ்த்திக் கொன்றுகொண்டிருக்க, அதனையறிந்த அந்நகரரசன் பசுமானை வரவழைத்துச் செய்திகூறுகையில், பசுமான் தன்மகனைக் கொல்லுதலே தக்க தண்டனையென்று கூறுகிற சந்தர்ப்பத்தில் உள்ளது, இச்செய்யுள். (கஎ)

38.—(இ - ள்.) தருமமே - தருமந்தானே, இணை இல் - ஒப்பில்லாத, பொருள் - செல்வத்தையும், தலையிடை - இந்நிலவுலகத்தில், தகை சால் -

தகுதி பொருந்தின, ஒருமை இன்பினை - ஒப்பில்லாத இன்பத்தையும், உதவி - தந்து, விண் உலகினும் உடன் போய் - தேவலோகத்திலும் கூடச் சென்று, அருமை இன்பம் உய்த்து - (பெறுதற்கு) அருமையான இன்பத்தை அடையச்செய்து, அந்தகன் செறும் - யமனையும் அஞ்சுவிக்கும், எனில் - என்றால், அறமே - அத்தருமமே, இருமையும் - இம்மைமறுமை யிரண்டிலும், துணை ஆகுவது அன்றி - துணையாவ தல்லாமல், மற்று இல்லை - வேறு (துணையாவது) இல்லை; (எ - று.)—[திருக்கூவப்புராணம் - நைமிசாரணியச் சருக்கம் - ௩௦.]

தருமஞ்செய்ததனால் ஒருவனுக்கு இம்மையிற் செல்வமும் இவ்வுலக இன்பமும், மறுமையில் சுவர்க்கசுகானுபவமும் உண்டாகும்; அவன் பாவ மின்மையால் யமனுக்கும் அஞ்சான் என்பதாம். செல்வம் அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமாகுஞ் சிறப்புடைமையால், 'இணையில்பொருள்' எனப்பட்டது. இல்பொருள் - பண்புத்தொகை. தரை - தரா என்னும் வடசொல்லின் திரிபு; (பொருள்களைத்) தரிப்பது எனக் காரணப்பொருள். இடை - ஏழனுருபு. தகை சால் ஒருமையின்பு - பாவவழியாலன்றித் தருமவழியா லனுபவிக்கும் போகம். ஒருமையின்பு என்பதற்கு - ஆடவரும் மகளிரும் மனம் ஒற்றுமைப்பட்டு வாழும் இன்ப மென்றும் உரைக்கலாம். உலகினும் என்ற உம்மை - உயர்வுசிறப்போடு இறந்தது தழுவிய எச்சமும் உடையது. உடன் போய் - தருமப்பயன் விடாமல் தன்னைச்செய்த உயிருடன்சென்று. அந்தகன் என்ற வடசொல்லுக்கு-(பிராணிகளுக்கு) அந்தத்தைச் செய்பவ னென்று பொருள்; அந்தம் - முடிவு, அழிவு. அந்தகற் செறும் - உயர்திணையில் ஐயுருபுதொக உயர்திணையீறு விகாரமாயிற்று.

தருமமே இணையில்பொருள் - தருமமே ஒப்பில்லாதபொருளாம் எனினுமாம். நைமிசாரணியத்தில் முனிவர்கள் பலர் கூடி முத்திபெறுதற்குரிய நெறியாது வென்று ஆராய்கையில், சாதாதப னென்னும் முனிவன் தருமமே சிறந்ததென்று தன்கருத்தை வெளியிட்டது, இது. (௩அ)

39.—(இ - ள்.) எய்தற்கு அரிய - கிடைப்பதற்கு அருமையான, யாக்கை - மனிதசரீரம், தனக்கு எய்திற்று என்றால்-தனக்குக் கிடைத்ததானால், அதுகொண்டு - அவ்வுடம்பைக்கொண்டு, செய்தற்கு அரிய அறங்கள் பல செய்து - செய்வதற்கு அருமையான அநேக தருமங்களைச் செய்து, துயர் கூர் பிறவியினின்று உய்தற்கு - துன்பம் மிக்க பிறப்பினின்று நீங்கி ஈடேறுதற்பொருட்டு, ஒருமை பெற எண்ணாது - ஒருமுடிவாக [துணிவாக]க் கருதாமல், உழல்வோன் - (பிறப்புத்துன்பங்களிலேயே) அலைபவனது, உடம்பு - அந்தமனிதசரீரம், பொன் கலத்தில் பெய்தற்கு உரிய பால் கமரில் பெய்தது ஒக்கும் - பொன்மயமான பாத்திரத்திலே பெய்துவைத்தற்கு உரியபால் நிலவெடிப்பிலே சொரிந்ததுபோலும், என்பர் - என்று கூறுவர் (அறிந்தோர்); (எ-று.)—ஆல் - அசை. [இதுவும், அடுத்த செய்யுளும் - பிரபுலிங்கலீலை-கொக்கிதேவர்கதி - கஉ, கங.]

அல்லமாப்பிரபுதேவர் மிகச்சிறந்ததொரு நந்தனவனத்தின் காவலனான கொக்கிதேவனை ஆட்கொள்ளவெண்ணி அவனை அடுத்துச் சம்பாஷிக்கத் தொடங்கியபொழுது அக் கொக்கிதேவன் சொன்னவார்த்தை, இவை.

எல்லாப்பிறப்புக்களுள்ளும் அறஞ்செய்து கருமம் ஒழிந்து நற்கதிபெறுதற்குக் காரணமான மனிதசன்மத்தைப் பெறுதல் முற்பிறப்பின் மிக்கநல்வினையாலன்றிக் கூடாதாதலால், 'எய்தற்கரிய யாக்கை' என்றான்; "அரிதரிது மானிடராத லரிது" என்றார் ஔவையாரும். "அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற், பெரும்பயனு மாற்றவே கொள்க" என்ற நாலடியாரையும்,

"மக்களுடம்பு பெறற்கரிது" என்ற அறநெறிச்சாரத்தையும், "மனிதரி னரியதாகுந் தோன்றுதல்" என்ற வினாயாபதியையுங் காண்க. இம்மைமறுமைவீடுகளுள் வேண்டியதை வேண்டியவாறே பெறவல்லதாய்ச் சிறந்த மனிதசன்மத்தைப் பெற்றவன் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்றபடி அவ்வுடம்பு நீங்குதற்குமுன்னமே விரைந்து தருமங்களைச் செய்து பிறப்புநீங்கி நற்கதிபெறுமாறு துணிந்து முயலானாயின் அவ்வுடம்பு அவனுக்கு வீணும் என்பதாம். தக்க இடத்திற் சேர்ந்திருந்தாற் பயன்படுவது தகாத இடத்திற் சேர்ந்து வீண்படுதலை உவமை விளக்கும். நன்முயற்சிசெய்யும் உயிரோடு கூடினுற் பயன்படும மனித உடம்பு அம்முயற்சிசெய்யாத உயிரோடு கூடி வீணயிற்றெனக. கொண்டு- மூன்றும்வேற்றுமைச் சொல்லுருபு. கூர்- உரிச்சொல். பிறவி-வி விகுதி பெற்ற தொழிற்பெயர். ஒருமை பெற எண்ணாது- என்பதற்கு - ஐக்கியநிலை யடைதற்குக் கூடாது என்று பதவுரையும், உய்தற் கொருமை பெறல் - அன்னியமில்லாமல் அனைத்துந்தானுகப் பெறல் என்று விசேடவுரையுங் கூறுதலும் உண்டு. யாக்கை - (எலும்பு நரம்பு முதலியவற்றால்) யாக்கப்பட்டது எனக் காரணப்பெயர்; யாத்தல் - கட்டுதல்: யா - பகுதி, கு - சாரியை, ஐ - செயப்படுபொருள்விகுதி: தொழிலாகுபெயராக்கொள்ளின், கை - விகுதியாம். உவமையணி. (௩௯)

40.—(இ - ள்.) மின் போல் - மின்னல்போல, அழியும் - (மிகவிரைவில்) அழியுந்தன்மையுள்ள, உடல் கொடு-உடம்பைக் கொண்டு, நல் வினை செய்து - சற்கருமங்களைச் செய்து, அழியா உடம்பு எய்தி - அழிவில்லாத உடம்பை யடைந்து, இன்போடு அமர்தல் ஆய் இருப்ப-பேரின்பத்தோடு பொருந்திவாழ்தல் கூடியதாயிருக்க, யாக்கை வருந்தும் என்று எண்ணி - உடம்பு வருத்தமடையு மென்று கருதி, அன்போடு அறம் செய்து இளையாமல் - அன்புடனே தருமங்களைச்செய்து உடம்புவருந்தாமல், அருந்தி - நிரம்பப்புசித்து, வாளா இருக்குமவன்தன் போல் - வீணாக இருக்கும் மனிதனைப்போல, மருளர் - அஜ்ஞானமுடையவர், இலை - (உலகத்தில் எவரும்) இல்லை, என்றான் - என்றுகூறினான்: தண் பூ பொழில் வைத்து அளிக்கின்றான் - குளிர்ந்த பூஞ்சோலையை வைத்துப் பாதுகாத்துவருகிறவனான கொக்கிதேவன்; (எ-று.)—

"மின்னின் நிலையில மன்னுயி ராக்கைகள்" என்றார் பெரியாரும். நிலையில்லாத உடம்பைக்கொண்டு நிலையான நற்கதியைப் பெற முயல்பவனே அறிவுடையா னென்பதாம். இங்கே, 'நல்வினை', 'அறம்' என்றது, அழியுந் தன்மையனவான சுவர்க்க இன்பம் முதலியவற்றைத் தருகிற தானம் முதலியவற்றை யன்றென்றும், அழிவில்லாத முத்தியின்பத்தைத் தரவல்ல தவம் முதலியவற்றை யென்றுங் கொள்ளுதல் பொருத்தம்; கீழ்ப்பாட்டிலும் இப்படியே. அழியாவுடம்பு - முத்தியிற்பெறும் சரீரம்; புகழுடம்பு என்றலும் ஒன்று. அன்பின்றிச் செய்யும் அறம் பயன்படாமையால், 'அன்போடு அறஞ்செய்து' என்றார்; (அடுத்தபாட்டில், 'உள்ளங்கனிந்து அறஞ்செய்து' என்பதும் இது.) மருள்-மயக்கம், பேதைமை. கொடு, இலை - கொண்டு, இல்லை என்பவற்றின் விகாரம். வாளா - பயனின்மை யுணர்த்துவதோர் இடைச்சொல்.

41.—(இ - ள்.) கொள்ளும் - (உயிரைக்) கொண்டு செல்லுந்தன்மையுள்ள, கொடு கூற்றம் - கொடிய யமன், கொல்வான் குறுகுதல் முன் - கொல்லவருதற்குமுன்னமே, உள்ளம் கனிந்து அறம் செய்து - மனம் நெகிழ்ந்து தருமங்களைச் செய்து, உய்க - நற்கதிபெறுவாயாக; வெள்ளம் வருவதற்கு முன்னர் - வெள்ளம் வருமுன்னமே, அணை கோலி வையார் - (அதனைத்தடுத்திடுதற்கு ஆற்றில்) அணைகட்டியமைத்து வைத்திடாதவர், பெருகு

தற்கண் - (அவ்வெள்ளம்) பெருகிவந்தபொழுது, என் செய்வார் - யாது செய்திடுவார்? பேசு - சொல்லு; (எ-று.)—ஏ - ஈற்றசை. [நன்னெறி - ௩௦.]

மரணம் வருவதற்குமுன்னமே தருமத்தை விரைந்துசெய்யவேண்டும் என்பதாம். பின்னிரண்டடியிலுள்ள உபமானம் யமன்வருதற்கு முன்னமே அவனைத் தடுத்தற்கு நல்வினை செய்துவைத்துக்கொள்ளாதவர் அவ்யமன் வந்தபொழுது என்னசெய்யமாட்டுவர் என்னும் உபமேயத்தைப் பெறுவித்தலால், பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்; இது முன்னிரண்டடியின் பொருளைச் சாதித்தலால், செய்யுட்குறியணிக்கு அங்கமாம். கொல்வான் - எதிர்காலவினையெச்சம்; 'வான்' விகுதியே காலங்காட்டும். (௪௧)

42.—(இ - ள்.) பேர் அறம் - சிறந்த தருமம், முன்பு - முன்னே [இம்மையிலே], நின்ற இசை நிறீஇ - நிலைபெற்ற கீர்த்தியை(த் தன்னைச் செய்தவனுக்கு) நிலைநிறுத்தி, முடிவு முற்றிய பின்பு - (அவனுக்கு மரணம் நேர்ந்தபின்பு, நின்ற உறுதியை பயக்கும் - நிலைபெற்ற மறுமைக்கதியைத் தரும்; (அப்படிப்பட்ட தருமத்தைச் செய்யும்பொழுது), இன்பம் வந்து உறும் எனின் - இன்பம் வந்து நேருமானால், இனியது ஆய் - இனிய மகிழ்ச்சியைக் கொண்டிருந்து, இடை துன்பம் வந்து உறும் எனின் - இடையிலே துன்பம்வந்துநேருமானால், துறக்கல் ஆகுமோ - (வெறுத்து அவ்வறத்தைக்) கைவிடுதல் தகுமோ? [தகாது என்றபடி]; (எ-று.)—[கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம் - தைலமாட்டுபடலம் - உக.]

இம்மைக்குப் புகழையும் மறுமைக்கு உயர்கதியையுந் தரவல்ல தருமம் இடையிலே துன்பம்நேர்ந்த காரணத்தால் விடத்தக்கதன்று என்பதாம்.

நின்றிசை, நின்றுறுதி என்பவற்றில் பெயரெச்சவீறு தொகுத்தல்; இனி, முதலடியிலுள்ள 'நின்று' என்பதை அசையாகக்கொள்ளுதலும், இரண்டாம் அடியிலுள்ள 'நின்று' என்பதற்கு - செய்த உடம்பு அழியினும் தான் அழியாது நின்று என்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும். நிறீஇ - நிறுவி என்னும் பிறவினைவினையெச்சம் விகாரப்பட்ட சொல்லிசையளபெடை. முடிவுமுற்றியபின்பு- தொடங்கிய தருமம் தான் பூர்த்தியடைந்தபின்பு எனினுமாம். 'பயக்கும்' என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு, பயக்கிற பேரறத்தைத் துறக்கலாமோ என ஒருவாக்கியமாக்கினும் அமையும். துறக்கல், கு-சாரியை.

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால், அல்லற்படுவ தெவன்" என்ற திருக்குறளோடு இந்தப்பாட்டின் பின்னிரண்டடியை ஒப்பிடுக. இன்பத்தைப்போலவே முற்பிறப்பிற்செய்த வினைப்பயனால் வருவதான துன்பத்தையும் இயைந்து அனுபவித்தலே அறிவு என்பதாம்.

ஸ்ரீராமபிரான், வனத்திற்சென்றபொழுது, உடன்சென்ற சுமந்திரனை நோக்கி 'நீ மீண்டு அயோத்திசெல்வாய்' என்றுகூற, அன்பிற்சிறந்த சுமந்திரன் அதுகேட்டு மிகவருந்த, அவனைச் சமாதானப்படுத்தும்பொருட்டு இராமபிரான் கூறியது, இது. (௪௨)

43.—(இ - ள்.) 'நல் வினை - தருமகாரியத்தை, மற்று அறிவாம் - பின்னால் அறிந்துசெய்வோம்: யாம் இளையம் - (இப்பொழுது) யாம் இளம் பிராயமுடையோம்,' என்னாது- என்று எண்ணாமல், கைத்து உண்டாம் போழ்தே - கையிற் பொருள் கிடைக்கும் பொழுதே, கரவாது - ஒளித்துவைக்காமல், அறம் செய்ம்மின்- தருமஞ்செய்யுங்கள்; (ஏனென்றால்),—முற்றி இருந்த கனி ஒழிய-முதிர்ந்துள்ள பழங்கள்மாத்திரமே யல்லாமல், தீ வளியால்- கடுங்காற்றினால், நல் காய்- நல்ல காய்கள், உதிர்தலும்- விழுந்துபோதலும், உண்டு- உளது; (எ - று.)—[நாலடியார் - இளமைநிலையாமை - ௯.]

இளமையை நம்பவேண்டா என்றபடி. பருவம்முதிர்ந்த கிழவர்மாத்திரமேயன்றி உடம்புவலிய இளையவர்கள் இரக்கமில்லாத யமனால் இறத்தலும் உண்டு என்னும் உபமேயம் தோன்ற நின்றதனால், பின்னிரண்டடி - பிறிதுமொழிதலணி; இது, முன்வாக்கியத்தைச் சாதித்தலால், செய்யுட்குறியணிக்கு அங்கம். 'கனியொழிய' என்பதற்கு - 'பெருங்காற்று அடிக்கையில் பழங்கள் உதிராமலிருக்க' என்று பொருள்கொண்டு, அவ்வுபமானத்தால் 'வயதுசென்றவர் பிழைத்திருக்க' என்ற உபமேயத்தைக் சொல்வாரும் உளர். உதிர்தலும் என்ற உம்மை—முந்தின வுரைக்கு இறந்ததுதழுவிய எச்சமும், பிந்தின வுரைக்கு இழிவுசிறப்புமாம். நற்காய் - முதிராத காய்; வலிய காய் 'மற்று அறிவாம் நல்வினை' என்பதில், விரைந்து அறிவாம் என்கிற வினையை யொழித்து, விரையாமலறிவாம் என்கிற வினையைத் தருதலால், மற்று-வினைமாற்று.

இளையம் - இளமை யென்னும் பண்பினடியாப் பிறந்த தன்மைப்பன்மைக் குறிப்புமுற்று. கைத்து - கையிலுள்ள பொருள்; ஒன்றன்பாற்குறிப்பு வினையாலணையும்பெயர். கொரம் - விரைவுவிளக்கும். (சுங)

44.—(இ - ள்.) (யமன்வருவது), இன்று கொல் - இன்றைக்கேயோ? அன்று கொல் - அன்றைக்கோ? என்று கொல் - என்றைக்கோ? என்னாது-என்று நினையாமல், கூற்றம் - யமன், பின்றையே நின்றது - (உயிரைக் கொண்டுபோம்பொருட்டுப்) பின்புறத்திலேயே (வந்து மறைந்து) நின்றுள்ளது, என்று எண்ணி - என்று நினைத்து, தீயவை- கெட்ட பாவச்செய்கைகளை, ஒருவுமின் - (செய்யாமல்) நீக்குங்கள்; மாண்டார் - மாட்சிமைப்பட்ட முனிவர்முதலியோர் (நூல்களிற்கூறிய), அறம் - தருமத்தை, ஒல்லும் வகையால் - (உங்களாற்) கூடியமட்டில், மருவுமின் - செய்யுங்கள்; (எ - று.)—[நாலடியார் - அறன்வலியுறுத்தல் - சு.]

உடல்வாழ்க்கை நிலையன்றென்று அறிந்து பாவங்களைச் செய்யாமற் புண்ணியங்களைச் செய்யவேண்டும் என்பதாம்.

குறிப்பால், 'இன்று' என்றது-இளமையையும், 'அன்று' என்றது-முதுமையையும் உணர்த்தும். கொல்- இடைச்சொல், ஐயப்பொருளது. பின்றை-இதில், பின் என்னும் இடைச்சொல் இடத்தைக்குறித்தது; று, ஐ - சாரியைகள். எ - பிரிநிலையோடு தேற்றம். 'மாண்டாரறம' என்றதில், தொக்குநின்ற ஆறும்வேற்றுமையுருபு - செய்யுட்கிழமைப்பொருளது; "பற்றற்றான்பற்று" என்ற குறளிற்போல. மாண்டாரறம் - பெரியோர் அனுஷ்டித்த தருமமுமாம்.

45.—(இ - ள்.) (உலகத்தில் புல்லறிவாளர்கள்), இ உடம்பு பெற்றும்-(தருமங்களைச்செய்தற்கு ஏற்ற) இந்த மனிதவுடலைப் பெற்றிருந்தும்,—அளவு இறந்த காதல் - வரம்பு கடந்த அன்பையுடைய, தம் ஆர் உயிர் அன்னார் - தமது அருமையான உயிரை யொத்த உறவினரை, கொள இழைக்கும்-தான் எடுத்துக்கொண்டுபோதற்கு (வேண்டிய முயற்சியை)ச் செய்கிற, கூற்றம் - யமனது செயலை, கண்டும் - (தாம்) பார்த்திருந்தும்,—அன்னோ. ஐயோ! அறம் நினையார் - தருமத்தை(ச்செய்ய)க் கருதாதவராய், தம் வாழ்நாளை கொன்னே கழிப்பர் - தமது ஆயுளை வீணாகக்கழிப்பார்கள்; என்னே - (இது) என்ன அநீதி! (எ - று.)—மற்று - அசை; வினைமாற்றுமாம். [நாலடியார் - புல்லறிவாண்மை- சo.]

கிடைத்தற்கு அரியதாய் நற்கதிகளை நேரிற்பெறுதற்குத் தக்கதாயுள்ள மனிதசரீரம் தமக்கு முற்பிறப்பின் நல்வினையாற் கிடைத்திருந்தும் பலர் தருமஞ்செய்யாமல் வீணே காலங்கழித்தற்கு என்னகாரணமோ? தமது மனைவி மக்கள் முதலிய மிகுந்த அன்புவைத்தற்கு இடமான சுற்றத்தார்க்கென்று

சேர்க்கப்பட்ட செல்வத்தைச் செல்வுசெய்யக்கூடா தெனக் கருதுவராயின், அவர்கள்வாழ்க்கை நிலையில்லாத தென்பதை உலகத்தில் அனுபவசித்தமாகப் பிரதியக்ஷப்பிரமாணத்தாற் காணக்கூடுமே யென்பதாம். யாருக்காகப்பொருள் சேர்க்கப்படுகிறதோ, அவர்களும் நிலையில்லாதவ ராதலால், செல்வத்தைச் செலவுசெய்து தானப்பயனால் நற்கதியைப்பெறுமை அறிவீன மென்பதாம். கொள - உயிர்கொள்ள. ஆருயிரன்னார் - உயிர்போல் இன்றியமையாதவ ரென்று பாவிக்கப்பட்டவர்.

என்னே, அன்னோ என்பன - கழிவிரக்கப்பொருளை விளக்கும். பெற்றும், உம் - உயர்வுசிறப்பு. கொல் - பயனில்லாமைப்பொரு ளுணர்த்துவ தோர் இடைச்சொல். கூற்றமுங்கண்டு என்ற உம்மையைக் கூற்றங்கண்டும் என மாறுக. பெற்றும் நினையார், கண்டும் நினையார் என இயையும். நினையார் - முற்றெச்சம். (சரு)

46.—(இ - ள்.) 'இல் செய் குறைவினை நீக்கி- குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய காரியக்குறைகளையெல்லாந் தீர்த்து, மற்று அறம் வினை அறிவாம் - பின்பு தருமகாரியஞ்செய்ய ஆலோசிப்போம்,' என்று இருப்பார் - என்றுகருதி வீணேகாலங்கழிப்பவரது, மாண்பு - தன்மை,—பெரு கடல் ஆடிய சென்றார் - பெரிய சமுத்திரத்தில் நீராடுதற்குப் போனவர், ஓசை ஒருங்கு உடன் அவிந்த பின் ஆடுதும் என்று அற்று - (இக்கடலின்) ஒலிமுழுவதும் ஒருசேர அடங்கினபின்பு நீராடுவோ மென்று காத்திருந்தாற்போலும்; (எ . று.)—[நாலடியார் - பேதைமை - உ.] ஆல் - ஈற்றசை.

கடலின் ஒலி ஓயாதவாறுபோலச் சமுசாரகாரியமும் என்றுங் குறைதீர முடியா தாதலால், அதன்பின்பு செய்வோ மென்பது பேதைமை யென்பதாம். "திரையவித்து நீராட லாகா..... உளவரையாற், செய்தவர்க்கே யாருந் திரு" என்பதனோடு இதை ஒப்பிடுக. உவமையணி. மாண்பு - மாட்சிமை; அறிவில்லாதவர்கள் தன்மையை 'மாண்பு' என்றது, பிறகுறிப்புவகையால், அவர்கருத்தை யெடுத்துக்காட்டிப் பரிகாசஞ்செய்தபடியாம். மற்று - வினைமாற்று; விரையாமல் என்றவாறு.

ஆடிய - செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்; இதில், இய - விகுதி: இதுவே எதிர்காலங்காட்டும். ஒருங்கு, உடன் - ஒருபொருட் பன்மொழியுமாம்; இரண்டும், எஞ்சாமைப்பொருளுணர்த்தும் இடைச்சொற்கள். என்று - என்றால் என்னும் எச்சந் திரிந்தது. (சசு)

47.—(இ - ள்.) கரும்பு என திரண்ட தோள் - கரும்புபோலத் திரண்டவடிவமாகவுள்ள தோள்களையும், காலம் வேல் கணீர் - (பிராணிகளுக்கு) அழிவுகாலத்தைச் செய்யவல்ல வேலாயுதம்போன்ற கண்களையும் உடையவர்களே! திருந்திய - சுத்தமாகவுள்ள, நல் அறம் - சிறந்த தருமமாகிய, செம் பொன் கற்பகம் - சிவந்தபொன்மயமான கற்பகவிருக்ஷம், பொருந்திய பொருளொடு போகம் பூத்தலால் - (இன்றியமையாததாய்) பொருந்தின செல்வமும் இன்பமும் ஆகிய மலர்களை உண்டாக்குதலால், வருந்தினும் அறம் திறம் மறத்தல் ஓம்புமின் - வருத்தமுண்டானாலும் தருமவழியை மறத்தலை யொழிவீராக; (எ-று.)—[சீவகசிந்தாமணி - முத்தியிலம்பகம் - ருகூ. (துறவுணர்த்தல்.)]

சீவகராசன் தான் துறக்க இருப்பதைத் தன்மனைவிமார்க்குத் தெரிவித்து அவர்களையும் துறவையடையத் தூண்டியது, இது.

கற்பகம் - கல்பக மென்னும் வடசொல்லின் திரிபு; இதற்கு - (வேண்டினார்க்கு வேண்டினபொருள்களை நினைத்தமாத்திரத்தில்) உண்டாக்குவ தென்று காரணப்பொருள். இது, தேவவிருக்ஷம். பொன்னுலகமாகிய தேவ

லோகத்திலுள்ள பொருள்களெல்லாம் பொன்மயமானவை யாதலால், 'செம்பொற் கற்பகம்' எனப்பட்டது. கற்பகமென்பது, தேவதருக்கள் ஐந்தனுள் ஒன்றற்குச் சிறப்புப்பெயராதலன்றி அவ்வைந்தற்கும் பொதுப்பெயருமாம். வேண்டியவற்றை வேண்டியவாறே தரும் வன்மையுடைமையால் அறம் கற்பகமாகவும், விரும்பப்படுந்தன்மையுடைமையால் பொருளும் இன்பமும் மலர்களாகவும் உருவகப்படுத்தப்பட்டன. மலர்கள் மரத்தின் பயனாதல்போல, பொருளின்பங்கள் அறத்தின் பயனும். காலவேல் - காலன் வேல் எனப் பிரிப்பின், யமனது வேலென்றாகும். தோளுக்குக் கரும்புவமை, திரட்சிக்கேயன்றி நுகர்ந்தார்க்கு இனிமைதருதற்கு மெனக். (சஎ)

48.—(இ - ள்.) அறம் - தருமத்தை, நாளை - நாளைக்கு, செய்குவம் எனில் - செய்வோமென்று எண்ணினால், (அங்ஙனஞ்செய்ய இயலாதபடி), இன்றே - இன்றைக்கே, கேள்வி நல் உயிர் - நூற்கேள்விகளையுடைய சிறந்த உயிர், நீங்கினும் நீங்கும் - (உடம்பைவிட்டு) நீங்கினாலும் நீங்கக்கூடும்; வாழும் நாள் - (உடம்போடு உயிர் கூடி) வாழும் நாளை, இது என - இவ்வளவினதென்று, வரைந்து - அளவிட்டு, உணர்ந்தோர் - அறிந்தவர், முது நீர் உலகில் முழுவதும் இல்லை - பழையநீராகிய கடலாற் சூழப்பட்ட உலகமுழுவதிலும் இல்லை; (எ-று.)—[சிலப்பதிகாரம்-நடுகற்காதை - களக - சஅஉ.]

எவ்வளவு நூற்கேள்வி யிருந்தாலும் உயிர் உடம்பைவிட்டு ஒழிதலைத் தடுக்கவொண்ணாதென்பது தோன்ற, 'கேள்வி உயிர்' எனப்பட்டது; இனி, 'கேள்வி உயிர்' என்பதற்கு - கட்புலனாகாமல் நூற்கேள்விகளால் உண்டென்று உணரப்படுகிற உயிரென்றும் உரைக்கலாம். நல் உயிர் - இம்மைமறுமைகளையேயன்றி வீட்டையும் பெறவல்ல உயிர். நீங்கினும் நீங்கும், உம்மை- விகற்பம்; நீங்காது நிற்பினும் நிற்குமாதலால். நீர், நிலத்தினும் முந்தியதாதலால், 'முதுநீர்' எனப்பட்டது.

செங்குட்டுவனென்னுஞ் சேரராசன் தன்னைச் சோழபாண்டியர் இகழ்ந்தன ரென்று கேள்விப்பட்டு அவர்கள்மேல் மிக்ககோபங்கொண்டபொழுது, அங்குவந்திருந்த மாடலனென்னும் அந்தணன் 'நீ கோபந்தணிக' என்றுகூறி இளமை உடம்பு செல்வம் முதலியவற்றின் நிலையில்லாமையைத் தெரிவித்தது.

49.—(இ - ள்.) தவத்து உறை மாக்கள் - தவவொழுக்கத்திற் பொருந்திய மனிதர் (இவர்), மிக பெரு செல்வர் - மிக்க பெருஞ்செல்வமுடையவர் (இவர்), ஈற்று இள பெண்டிர் - ஈன்றணிமையையுடைய இளம்பருவமுள்ள மகளிர் (இவர்), ஆற்றா பாலகர்- வலிமையில்லாத சிறுகுழந்தைகள் (இவர்), முதியோர் - முதுமைப்பருவமுடையவர் (இவர்), என்னான் - என்று (வேறுபாடு) கருதாதவனாகியும், இளையோர் என்னான் - இளம்பருவமுடையவரிவரென்று கருதாதவனாகியும் [தாக்ஷிணியமில்லாமல்], கொடு தொழிலாளன் - கொடியதொழிலைச் செய்பவனான யமன், கொன்றனன் குவிப்ப - (கீழ்க் கூறிய தவத்துறைமாக்கள் முதலியோரைக்)கொன்று குவிக்க, இ அழல் வாய் சுடலை - நெருப்புப் பொருந்துதலையுடைய இந்தமயானம், தின்ன - (அவ் விறந்த உடம்புகளைத்) தன்னுள்ளேகொண்டு அழிக்க, கண்டும்- பிரதியக்ஷமாகப் பார்த்திருந்தும், கழி பெரு செல்வம் கள்ளாட்டு அயர்ந்து - மிக அதிகமான செல்வமாகிய கள்ளைக் குடித்து விளையாடுதலைச் செய்து, மிக்க நல் அறம் விரும்பாது வாழும்-மிக்க நன்மையையுடைய தருமத்தை விரும்பாமல் வாழ்கிற, மக்களின் - மனிதரினும், சிறந்த மடவோர் - மிக்க பேதைமையுடையவர், உண்டோ - (உலகத்தில்) உளரோ? [இல்லை யென்றபடி]; இளமையும் நில்லா - இளமைப்பருவங்களும் நிலையுடையனவல்ல; யாக்கையும் நில்லா - உடம்புகளும் நிலையுடையனவல்ல; புதல்வரும் - (அருமையாகப் பெற்றுவள

ர்க்கப்படும்) புத்திரரும், புத்தேள் உலகம் தாரார் - தேவலோகத்தின்பத்தை (ப்பெற்றோர்க்கு)த் தரவல்லரல்லர்; மிக்க அறமே விழு துணை ஆவது - சிறந்த தரும மொன்றே (பிராணிகளின் உயிர்க்கு மறுமையிலும் உடன்வருகிற) சிறந்த துணையாகுவது; (எ - று.)

'தவத்துறைமாக்கள்'என்றது முதல் 'உண்டோ' என்பதுவரையில் எட்டு வரிகள் - [மணிமேகலை - சக்கரவாளக்கோட்டமுரைத்த காதை - ௬௭-௭௪.] சுதமதியென்பவளுக்கு மணிமேகலாதெய்வம் சக்கரவாளக்கோட்டமென்னும் மயானத்தின் இயல்பைத் தெரிவித்தபோது சொன்னது, இது. 'இளமையு நில்லா' என்ற வரி - [மணிமேகலை - சிறைசெய்காதை - ௧௩௫.] 'புத்தேளு லகம்' என்பதுமுதலிய இரண்டுவரிகளும் - [ஷை காதை - ௧௩௭ - ௧௩௮.] "வளவிய வான்பெருஞ்செல்வமு நில்லா" என்பது, 'இளமையு நில்லாயாக் கையு நில்லா' என்பதற்கு அடுத்த அடி. இது, தருமசத்தனென்னும் வணிக னுக்கு அவனது மாமன்மகளாகிய விசாகையென்பவள் இளமைமுதலிய வற்றின் நிலையில்லாமையை எடுத்துக்காட்டியது.

தவம் துறை மாக்கள் எனப் பிரித்து, தவவொழுக்கவழியையுடைய மனித ரெனினுமாம். ஈன்றணிமை - பிரசவித்து நெடுநாளாகாமை. ஈற்று - ஈன் என்னும் பகுதியினடியாப் பிறந்த தொழிற்பெயர்; று அல்லது து - விகுதி. பெண்டு - பெண்தன்மை: அதனையுடையவர், பெண்டிர்; இர் - பலர்பால்விகுதி. ஆற்றா - நினைத்ததொழில்களைச் செய்ய இயலாத ரெனினு மாம். பாலகர் என்ற வடசொல்லில், ககரம் - சிறுமையைக் காட்டும். 'என் னுன்' என்பதை, மாக்கள், செல்வர், பெண்டிர், பாலகர் என்பவற்றோடுங் கூட்டுக. பலராலும் விரும்பப்படும் இளமைப்பருவத்தின் சிறப்பை யுணர் த்துவார், அதனைத் தனியே கூறினர். தவத்துக்கும் செல்வத்துக்கும் அஞ்சு தலும், மகளிர்பாலும் மக்கள்பாலும் அன்புடைமையும், முதுமை இளமை யென்னும் பருவ இயல்புகளை நோக்குதலும் இல்லாமல் அவ்வவ்வுயிர்க்கு விதிவசத்தாலமைந்த காலமொன்றையே ஆராய்ந்து அவற்றைக் கண்ணோட் டமின்றிக் கூற்றுவன் அழித்திடுவ னென்க. 'இச்சுடலை' எனச் சுட்டினது, சக்கரவாளக்கோட்டத்தைக் காட்டி. சுடலை - இறந்தவரைச் சுட்டெரிக்கு மிடம். சுடலை தின்ன - செய்யாதது செய்வதுபோலச் சொல்லப்பட்டது; மரபு வழுவமைதி; [நன் - பொது - ௩௮.] கழி பெரு - ஒருபொருட்பன்மொழி. ஆட்டு- ஆடு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். மடவோர்- மடமை யென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர்.

'நில்லாது' என்றும் பாடம். புதல்வரும், உம் - உயர்வுசிறப்பு. இங்கே, 'புத்தேளுலகம்' என்பதற்கு - சுவர்க்கமென்று பொருள்கொள்ளுதலினும முத்தியென்று பொருள்கொள்ளுதல் சிறப்பு; இறந்த பெற்றோரைக் குறித்துச் செய்யுங் கடமைகளால் புதல்வர் அவர்களை மறுமைக்கதியடைவிப்பர் என் பது நூற்றுணிபாதலால். தாரார், ர் - விரித்தல். விழுத்துணை- சிறப்பென் னும் பொருளைத் தரும் 'விழுமம்' என்னும் உரிச்சொல் 'விழு' என விகாரப் பட்டது. (௪௯)

50.—(இ - ள்.) சிறப்பு ஈனும்-(தருமம் தன்னைச்செய்தார்க்கு) முத்தி யையுந் தரும்; செல்வமும் ஈனும் - (சுவர்க்கம் முதலிய) செல்வத்தையும் தரும்; (ஆதலால்), உயிர்க்கு - மக்களுயிருக்கு, அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் - தருமத்தினும் மேலான உயர்ச்சிதருவது எது? [எதுவுமில்லை யென்ற படி]; (எ-று.)—[திருக்குறள் - அறன்வலியுறுத்தல் - ௧.]

அறத்தினும் மிக்க உறுதிதருவது இல்லை என்பதாம். எல்லாப்பேற்றி னுஞ் சிறத்தலால், வீடுபேறு 'சிறப்பு' எனப்பட்டது; சிறத்தலுடையதெனத்

தொழிலாகுபெயர். செல்வமும், உம் - இறந்தது தழுவிய எச்சம். 'சிறப் பீனும் செல்வமு மீனும்' என்ற வாக்கியங்களுக்கு—'அறம்' என்பது - தோன் றா எழுவாய். இனி, 'ஈனும்' என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு ஒரு வாக்கியமாக முடிப்பினும் இழுக்காகாது. 'ஊஉங்கு' என்பதில், அளபெடை- இன்னிசை நிறைத்தற்பொருட்டு வந்தது; (அளபெடையில்லாவிடினும் வெண் டளை சிதையாமையால் செய்யுளோசைநிறைக்க வந்ததன்று.) ஊங்கு - உய ர்வு இழிவு எல்லைப்பொருளை விளக்கும் இடைச்சொல். ஆக்கந்தருவது, ஆக்க மெனப்பட்டது; காரியவாகுபெயர். ஆக்கம் - மேன்மேல் உயர்தல். எவன் என்ற வினுவினைக்குறிப்புமுற்று, இன்மைகுறித்தது. ஓ - அசை. இங்கே, 'உயிர்' என்றது, மனிதருயிரை; சிறப்புஞ் செல்வமும் அடைதற்கு உரிய அதுவே யாதலால். (௫௰)

51.—(இ - ள்.) (ஒருவனுக்கு), அறத்தின் ஊங்கு - தருமஞ்செய்த லினும் மேற்பட்ட, ஆக்கமும் - உயர்ச்சிதருவதும், இல்லை—; அதனை மறத்த லின் ஊங்கு - அத்தருமத்தை(ப் பேதைமையால் செய்யாது) மறத்தலினும் மேற்பட்ட, கேடு- தீங்குதருவதும், இல்லை—; (எ-று.)—[திருக்குறள்- அறன் வலியுறுத்தல் - ௨.]

தருமஞ் செய்யாவிடின் பெருங்கேடு உளதாம் என்பதாம். கீழ்ப்பாட் டில் 'அறத்தினூஉங் காக்க மெவனோ வுயிர்க்கு' என்றதனாற் கூறிய விஷயத் தையே, அதனை மறத்தலாற் கேடுவருதலைக் கூறுதற்பொருட்டு, 'அறத்தி னூஉங் காக்கமு மில்லை' என மீண்டுங் கூறினர்; ஆதலால், இது, கூறியது கூற லென்னுங் குற்ற மாகாது, அநுவாதமெனனுங் குணமாம். (கூறியதுகூற லாவது - முன் தான் ஒருகால் சொன்னதொரு பொருளையே யாதொருபயனை யுங் கருதாது பின்னுஞ் சொல்லுதல். அநுவாதமாவது- முன்சொல்லப்பட்ட தொன்றையே வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னுஞ்சொல்லுதல்; இது குற்றமாகாமையை "கூறிய கூறினுங் குற்றமொன்றில்லை யருத்தம், வேறுளதாயி னென்று விதித்தலின்" என்றதனுலும் அறிக.) உம்- உயர்வு சிறப்பு. (௫௧)

52.—(இ - ள்) ஒல்லும் வகையான் - (தம்தமக்கு) இயலும் வகையால், அறம் வினை - தருமமாகிய நல்வினையை, ஓவாதே - ஒழியாமலே, செல்லும் வாய் எல்லாம்- அதுசெல்லு மிடங்களா லெல்லாம், செயல்- செய்க; (எ-று.)—[திருக்குறள் - அறன்வலியுறுத்தல் - ௩.]

ஒல்லும்வகை செய்தலாவது - இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும், துறவறம் உடம்புநிலைக்கு ஏற்பவுஞ் செய்தல். அறவினை - தருமகாரியம். ஓவாமை - இடைவிடாமை; ஏ - ஈற்றசை. தருமம் பொருந்து மிடங்களா வன - மனம் வாக்குக் காய மென்பன. அவற்றுற் செய்யம் அறங்களாவன- முறையே நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலும் என இவை. செயல் - அல்விகுதிபெற்ற உடன்பாட்டு வியங்கோள். (௫௨)

53.—(இ . ள்.) அன்று அறிவாம் என்னுது - (நாம் இப்பொழுது இளம் பிராயமுடையோமாதலால்) இறக்கும்பொழுது செய்வோமென்று எண்ணு மல், அறம் - தருமத்தை, செய்க - (இளமை தொடங்கியே நாள்தோறும்) செய்யக்கடவர்; அது - அவ்வாறு செய்யப்பட்ட அறம், பொன்றும் கால் - (இவ்வுடம்பினின்று) உயிர் போங் காலத்து, பொன்றுத் துணை-(அவ்வுயிருக்கு) அழிவில்லாத துணையாம்; (எ -று.)—[திருக்குறள் - அறன்வலியுறுத்தல் - ௬.]

மற்று என்பது - அசைநிலை. 'பொன்றுத்துணை' என்றார், செய்த உட ம்பு அழியவும் அறப்பயன் தான் அழியாமல் உயிரோடுபொருந்தி அடுத்த சன் மத்து உடம்பிலும் செல்லுதலால். இப்படிப்பட்ட தருமத்தை நிலையில்லா

ததாகிய உடம்பு உள்ளபொழுதே செய்யவேண்டும் என்பதாம். வயது முதிர்ந்தவர்மாத்திரமேயன்றி இளையவரும் இறத்த லுள்ளதாதலாலும், மரணம் நேரிடுங்காலம் இன்னதென்று எவர்க்கும் நிச்சயமாக அறிதல் கூடாமையாலும், 'அன்றறிவா மென்னா தறஞ்செய்க' என்றார். 'அன்று' எனச் சேய்மைப் பொருளைக் குறிக்கும் அகரச்சுட்டாற் குறித்ததனால், இவன் தான் வெகுகாலம் வாழ்வதாகக் கருதுந்தன்மை விளங்கும். (ருங)

54.—(இ - ள்.) அறத்தான் வருவதே - இல்லறத்தோடு பொருந்தி வருவதே, இன்பம் - இன்பமாவது; மற்று எல்லாம் - அதனோடு பொருந்தாமல் வருவனவெல்லாம், புறத்த - இன்பமாயினும் துன்பத்தினிடத்தன; புகழும் இல - (அதுவேயுமன்றிப்) புகழுமுடையனவல்ல; (எ - று.)—[திருக்குறள் - அறன்வலியுத்தல் - க.]

'அறத்தான்' என்பதில், ஆன் உருபு - உடனிகழ்ச்சிப் பொருளது; "தூங்குசையானோங்கு நடைய" என்ற இடத்திற்போல. இன்பத்திற் புறமெனவே, துன்பமாயிற்று: பாவத்தால் வரும் பிறன்மனைவிரும்புதல் முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலால், 'புறத்த' என்றார். துன்பம் - பழிபாவங்களும், இராசதண்டனையும், 'அறத்தோடு வாராதன புகழுமில' எனவே, அறத்தோடு வருவது 'புகழுமுடைத்து' என்பது பெற்றாம். இதனால், அறஞ்செய்பவரே இம்மையின்பமும் புகழும் அடைவர் என்பது கூறப்பட்டது. ஏ - பிரிநிலை. மற்று - சுட்டியதற்கு இனம். புறத்த-புறம் என்னும் பெயர்ச்சொல்லினடியாப் பிறந்த பலவின்பாற் குறிப்பு முற்று. 'புகழுமில'—உம் - இறந்தது தழுவிய எச்சம். (ருச)

௬ - ஆம் அதிகாரம்.—இல்லறம்.

இல்லறமாவது - இல்வொழுக்கைநிலைக்குச் சொல்லப்படுகிற முறைமையிலே நின்று அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுந் தருமம். வேற்றுமைப் புணர்ச்சி, ஏழாம்வேற்றுமை யுருபும்பயனு முடன்தொக்க தொகை. பிரமசரியம், கிருகஸ்தம், வாநப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நால்வகை ஆச்சிரமங்களுள் இரண்டாவது, இது. அறஞ்செய்தற்கு உரிய இல்லறம் துறவறம் என்ற இருவகை நிலையுள் முதலதாதலால், இது இங்கே வைக்கப்பட்டது. "இல்லறமல்லது நல்லற மன்று" என்று ஔவையார் கூறியபடி இருவகையறத்துள் இல்லறம் தலைமையான தாதலால், அது முதலில் வைக்கப்பட்ட தென்றுங் கொள்ளலாம்.

55.—(இ - ள்.) துறந்தவர்கள் - (கதியாகவுள்ளவரால்) கைவிடப்பட்டவர்களுக்கு, வேண்டியது ஓர் துப்புரவு நல்கி-வேண்டியதோர் அனுபவப் பொருளைக் கொடுத்து, இறந்தவர்கள் - (ஒருவருமில்லாமல் தன்னிடம் வந்து) மரணமடைந்தவர்க்கு, காமுறும் இரு கடன் இயற்றி - விரும்பத்தக்க [இன்றியமையாத] பெரிய அந்திமக்கிரியைகளைச் செய்து, அறம் பலவும ஆற்றி-(மற்றும்) பலதருமங்களையுஞ் செய்து,விருந்து ஓம்பும் முறை அல்லால்-விருந்தாளிகளை உபசரிக்கும் விதமாகிய இல்லறமே யல்லாமல், பிறந்த நெறியால் உளது ஓர் பேர் உதவி - (மனிதராகப்) பிறந்த மாத்திரத்தால் உள்ளதொரு பெரிய உபகாரஞ்செய்யுந்தன்மை, யாதோ - (வேறு) எந்தவழி உள்ளதோ? [எதுவும் இல்லை யென்றபடி]; (எ-று.)—[கந்தபுராணம் - மார்க்கண்டேயப்படலம் - சக.]

நால்வகை யாச்சிரமங்களுள் மற்றை மூன்றும்போலத் தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ளுதற்கு மாத்திரமே உதவுவதல்லாமல் தன்னோடு மற்றும்

பல்ரையும் பாதுகாத்தற்கு உதவுகின்ற கிருகஸ்தாச்சிரமதருமமே சிறந்த தென்பதாம்; "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும், இல்வாழ்வா னென்பான் றுணை" என்ற திருக்குறளை இங்கே அறிக. இங்கே, துறந்தவர்கள் - அகதிகள். அறம்பலவும் ஆற்றுதல் - பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்யாசி என்னும் மூன்று ஆச்சிரமிகளுக்கும் அவரவர் கொண்ட ஒழுக்கநெறிகளில் முடியச் செல்லுமளவும் பசி நோய் குளிர் முதலியவற்றால் இடையூறடையாதபடி உணவு மருந்து தங்குமிடம் முதலியவற்றைத் தருதல், வறியோர்க்கு உணவு முதலியன கொடுத்தல், பிதிருக்கள் தேவர் விருந்தாளிகள் சுற்றத்தார் தான் என்று சொல்லப்பட்ட ஐவரையும் ஓம்புதல் முதலியன; இவற்றில் விருந்தோம்புதலைத் தனியேயெடுத்துக் கூறியதனால், அதன் சிறப்பு விளங்கும். துறந்தவர்கள் என்பதற்கு - இங்கே, பற்றைத்துறந்த முனிவரென்று உரைத்தல், சிறப்பன்று. காமுறும் - காம முறும் என்பதன் விகாரம்.

குச்சகனென்னும் முனிவன் தனது குமாரனான மிருககண்டேயனுக்கு இல்லற வொழுக்கத்தை யேற்றுக்கொள்ளும்படி சொல்வது, இது. (ருரு)

56.—(இ - ள்.) வருவாய்க்கு இயைய வாழ்தல் உறும் - (தன்கணவனுக்கு) வரும் பொருளுக்குத் தக்கபடி (செலவுசெய்து) வாழ்தலைப் பொருந்திய, மறு இல் கற்பின் மனையாள் போல் - குற்றமில்லாத பதிவிரதாதருமத்தையுடைய மனைவிபோல, பொருள் - சிறந்தபொருள், யா உள ஆம் - (வேறு) எவை உள்ளனவாம்? [எவையும் இல்லை யென்றபடி]; அது அன்றி - அதுவுமல்லாமல், புகழும் பயனும் மிக உண்டாம் - (இப்படிப்பட்ட நற்குணமுடையவளால் கணவனுக்குக்) கீர்த்தியும் புண்ணியப்பயனும் மிகுதியாக உண்டாகும்; (மற்றும் அவள் கணவனுக்கு), கருதார் எதிரே - (தன்னை) நன்கு மதியாதவரான பகைவரது முன்னிலையில், இமில் ஏறு காமர் நடையும் உறும் - முசுப்பையுடைய காளைபோலக் (சம்பீரமாக நடக்கும்) அழகிய நடையும் உண்டாகும்; அதனால் - ஆதலால், ஒருவாது அவளோடு உவப்பு உற உற்று வாழ்தல் ஏ - நீங்காமல் அவளோடு மகிழ்ச்சிபொருந்தக் கூடிவாழ்தலே, அறன் ஆகும் - (சிறந்த) தருமமாம்; (எ-று.)—[விநாயகபுராணம்-உபாசனகாண்டம் - அரசியற்கைப்படலம் - ௨0. (வாழ்க்கைத்துணைநலம்.)]

இது, சோமகாந்தராசன் தன்மகனான ஏமகண்டனுக்கு அரசளித்தற்கு முன் நீதிபோதித்தது. திருக்குறள் 'வாழ்க்கைத்துணைநலம்' என்னும் அதிகாரத்தின் வழிப்பட்டது. "மனைத்தக்கமாண்புடைய ளாகித் தற்கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத் துணை", "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந், திண்மை யுண்டாகப்பெறின்", "புகழ்புரிந் தில்லிலோர்க்கில்லை யிகழ்வார்முன், ஏறுபோற் பீடு நடை" என்ற திருக்குறள்களை அறிக.

கற்பு - கணவனைத் தெய்வமென்றுகருதி அதற்கு ஏற்ப ஒழுகும் ஒழுக்கம்; பாதிவிரத்யம். கொண்டானிற்சிறந்த தெய்வ மில்லை யென்றும், அவனுக்கு இன்னவாறு நீ குற்றேவல்செய்தொழுகு என்றும் தாய்தந்தையராலும் பிறராலும் கற்பிக்கப்படுதலால், கற்பு என்பது - காரணப்பெயர். மனை - வீடு; அதிலிருந்து சமுசாரகாரியங்களை நடத்துபவள் மனையாளெனக் காரணக்குறியாம். யா - அஃறிணைப்பன்மை வினாப்பெயர்; வை விகுதி புணர்ந்துகெட்டதென்க. கற்புடைமனையாள்போல அறம்முதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற இன்மையின், 'யாவுள' என்றார். கருதார் - எதிர்மறை வினையாலணையும் பெயர். ஏறு - ஆண்பெயர்; இங்கே, பசுவின் ஆண். பெருமிதமுடையானுக்குக் காளை நடையால் உவமமாதலால், 'ஏற்றுக் காமர்நடை' என்றார். 'இமில்' என்ற அடைமொழியால், 'ஏறு' என்றது, சிங்கமாகாது. 'உவப்புறவே' என்ற ஏகாரம், பிரித்து 'வாழ்தல்' என்பதனோடு கூட்டப்பட்டது.

57.—(இ - ள்.) உரம் பெறு - மனவலிமை பெற்ற, பிரமசரி - பிரம சாரிகளும், வனத்து உறைவோர் - வானப்பிரஸ்தரும், உலகு அனைத்தையும் அற நீத்தோர் - உலகப்பற்றுக்களெல்லாவற்றையும் ஒழியவிட்ட சந்யாசி களும், பரம்பரன் - மேலானபொருள்க ளெல்லாவற்றினும் மேலான கடவு ளும், தெனாது புலத்தவர் - தென்புலத்திலுள்ளாரான பிதிருதேவதைகளும், விருந்து - விருந்தாளிகளும், பசை உடை ஒக்கல் - அன்புடைய உறவின ரும், மன் துரந்தோர் - தலைவனால் துரத்தப்பட்ட அநாதர்களும், அரம்பு செய் இலம்பாட்டினர் - வருத்தத்தைச் செய்கின்ற வறுமையையுடையோ ரும், இறந்தார் - (ஒருவருமில்லாமல் தன்னிடத்துவந்து) இறந்தவர்களும், என்ற ஐயிருவரையும்- என்ற பத்துவகையாரையும், நன்கு ஓம்பி - (அவரவர் க்கு ஆவனசெய்து) நன்றாக உபசரித்து, வரம் பெறு தமை பின் ஓம்புநர் அல்லாதவர் - மேன்மைபெற்ற தம்மைப் பின்பு காத்துக்கொள்ளுந் தன்மை யுடையவ ரல்லாதவர், அவண் - அவ்விடத்தில் [திருப்பேரூரில்], மனை அறத்து இலர் - இல்வாழ்க்கையில் இல்லை; (எ-று.)—[பேரூர்ப்புராணம் - திருநகரப்படலம் - ௬௩.]

அவ்வூரிலுள்ள இல்லறத்தவர் எல்லோரும் பிரமசாரி முதலிய பத்து வகையாரையும் தம்மையும் தவறாமல் ஓம்புபவ ரென்று அந்நகரத்தின் சிறப் புக் கூறியவாறு. "இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும், நல் லாற்றி னின்ற துணை", "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும், இல்வாழ்வா னென்பான் துணை", "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக் கல் தான் என்றாங்கு, ஐம்புலத்தா றோம்பல் தலை" என்ற திருக்குறள்களை இங்கே அறிக. 'துறந்தார்' என்ற பாடமும் பொருள்படும்.

பிரமசாரி - உபநயநஞ் செய்யப்பெற்று ஆசாரியனிடத்தில் நின்று ஓது தலும் விரதங்காத்தலு மாகிய ஒழுக்கத்தான்; விவாகத்துக்கு முந்தினநிலை யுடையான். வனத்து உறைவோர் - வீட்டைவிட்டு வைதிகாக்கினியோடு வனத்திற்சென்று மனையாள்வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தார்; இவர் மனையாளோடன்றித் தனித்து வனத்திற்சென்று தவஞ்செய்தலும் உண்டு. உலகனைத்தையும் அற நீத்தோர் - முற்றத்துறந்த யோகஒழுக்கத்தார். பரம் பரன் - மேலானபொருள்களினும் மேலானவன். தேவர்களைக்குறித்துச் செய் யும் வேள்விமுதலியவற்றை அந்தந்தத் தேவர்க்கு அதிஷ்டாநமாய் நின்று பெறுபவன் முழுமுதற்கடவுளே யாதலால், 'தேவர்' என்னவேண்டுமிடத்து 'பரம்பரன்' என்றார். பிதிரராவார்-படைப்புக்காலத்து அயனாற் படைக்கப் பட்டதோர் தேவசாதியார்; அவர்க்கு இடம் தென்திசையாதலின், 'தெனாது புலத்தவர்' என்றார். தான் உளனாய்நின்று எல்லா அறங்களுஞ் செய்யவேண் டுதலின், தன்னை யோம்புதலும் தருமமாயிற்று. அத்தன்மைதோன்றவே, 'தம்மை' என்பதற்கு, 'வரம்பெறு' என்ற அடைமொழி கொடுத்தது.

பிரமசரி - ப்ரஹ்மசாரீ என்னும் வடசொல்லின் திரிபு; இது - இங்கே சாதிப்பெயராய், பன்மைகுறிக்கும். உலகு - உலகப்பற்றுக்கு ஆகுபெயர். தெனாது - தெற்கு என்பதனடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையா லணையும்பெயர்; தெற்கு என்னுந் திசைப்பெயர் ஈறுபோய் றகரம் னகர மாயிற்று; [நன் - உயிர் - ௬௬.] து - விகுதி, ஆ - சாரியை. இனி, தெற்கி னுள்ளது, தெனாது என மரூஉமொழி யென்பாரும் உளர். புலம் - இடம். ஒக்கல் - மணமொத்து உரியசமயங்களில் வந்துகூடுதல்; இது - தொழிலாகு பெயராய், அத்தன்மையுடையாரைக் குறிக்கும்: ஒக்கல் என்ற தொழிற்பெய ரில், ஒ - பகுதி, க் - சந்தி, கு - சாரியை, அல் - விகுதி. அரம்பு என்பது இப்பொருளதாதலை, "அரம்பா வுன்னை யறிந்துகொண்டேன்" எனப் பெரி

யாழ்வார்திருமொழியிலுங் காண்க. அங்கு 'அரம்பன்' என்பதற்கு - தீம்ப னென்று வியாக்கியானஞ் செய்யப்பட்டுள்ளது. இலம்பாடு - வறுமையுணர்த்துவதோர் உரிச்சொல்; "இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை" என்பது, தொல்காப்பியம்: இதற்கு - இலம் பாடு எனப் பிரித்து இல்லாமையுண்டாதலெனப் பொருள்கூறிக் கொள்க. இன்மை யென்னும் பண்புப்பெயர் மைவிகுதிகெட்டு அம்விகுதிசேர்ந்து இலம் என வந்ததென்னலாம்; நன்மை யென்பது நலம் என நிற்றல்போல. 'என்ற' என்பது, விகாரமாயிற்று. நன்கு-கு விகுதி பெற்ற பண்புப்பெயர்; 'நன்றேம்பி' என்றும் பாடம். ஓம்புநர், ந்-பெயரிடைநிலை. (ருஎ)

58.—(இ - ள்.) இ தகைய - இப்படிப்பட்ட தன்மையையுடைய, நால்வர்களில் - (பிரமசாரி க்ருகஸ்தன் வாநப்பிரஸ்தன் சந்யாசி என்னும்) நான்கு ஆச்சிரமத்தாருள், மூவருக்கும் - (கிரகஸ்தனொழிய தான் ஒழிய மற்றை) மூன்று ஆச்சிரமத்தார்க்கும், இறந்தார்க்கும் - (ஒருவருமில்லாமல் தன்னிடத்துவந்து) மரணமடைந்தவர்களுக்கும், அத்தம் முதல் அற்றார்க்கும்- செல்வம் அடியோடு இல்லாத தரித்திரர்க்கும், ஆதாரம் ஆதலினால்- (ஆவனசெய்து தாங்கி) ஆதாரமாகுதலால், உத்தமம் ஆம்- மிகமேலானதாகிற, இல்லறமே- கிருகஸ்தாச்சிரம தருமமே, வாழ்வினுக்கும்- இவ்வுலகவாழ்க்கைக்கும், உயர் கதிக்கும் - சிறந்த மறுவுலகத்து நற்கதிக்கும், வித்தும் ஆம் - காரணமு மாகும்; துறவறத்தின் வேரும் ஆம் - துறவறத்துக்கு முதலு மாகும்; எனும் வேதம் - என்று வேதம் சொல்லும்; (எ-று.)—[இதுவும், அடுத்த செய்யுளும்- திருக்குற்றாலப்புராணம்- தருமசாமிச்சருக்கம் - கo, கக.]

பாண்டியநாட்டிற்பிறந்த சிவசாமியென்னும் அந்தணன் பிரமசரியம் முடிந்தபின் தனது குருவை வணங்கி நால்வகையாச்சிரமங்களின் இயல்பு பயன் முதலியவற்றை வினவ, அவ்வாசிரியன், அவனுக்கு உரைத்தவை, இவை.

'இத்தகைய' என்றது, கீழ்க்கூறியதை நோக்கிய சுட்டு. தகைய - குறிப்புப்பெயரெச்சம். அத்தம் - அர்த்தம் என்னும் வடசொல்லின் திரிபு. ஆதாரம், உத்தமம், வேதம் - வடசொற்கள். வித்து - விதை. வித்து, வேர் என்பன - இங்கே, காரணமென்னும் பொருளன. இல்லறத்திலிருந்தபின்பே துறவறமடைதல் பெரும்பாலும் இயல்பாதலால், 'துறவறத்தின்வேர்' என்றது.()

59.—(இ - ள்.) தருமம் எனும் பண்டம் இடும் -தருமமென்னும் பொருளை நிரம்பப் பெய்துள்ள, மனை வாழ்க்கை ஆம் சகடம்-இல்லறவாழ்வாகிய பண்டி,—கருமம் நுகம் பிணித்து - செய்தொழிலாகிய நுகத்தடியில் கட்டுண்டு, மனை காதலியும் தானும் என இருவர் ஆய் - மனையாளும் (கணவனாகிய) தானும் என்று இருவரும் இரண்டு எருதுகளாய், முறை செலுத்தின் - ஒழுங்காக நடத்தினால், எ தூணை தூரமும் செல்லும் - எவ்வளவுதூரம் செல்லவேண்டுமானாலும் இனிதுசெல்லும் ; (அன்றி), ஒருவர் ஆய் பூண்டு இழுப்பின்- (மனையாள் கணவன் என்ற இருவருள்) ஒருத்தர்மாத்திரமாய் ஏற்றுக்கொண்டு இழுத்தால், ஓர் இறையும் செல்லாது - ஒரு சிறிதும் செல்லமாட்டாது; (எ - று.)—ஆல்-ஈற்றசை.

கணவனுக்கும் மனைவிக்கும் ஒற்றுமையிருந்தாலன்றிச் சமுசாரவாழ்க்கை செவ்வையாக நடவாது என்பதாம். மனையாளுக்கு 'வாழ்க்கைத்துணை' என்று ஒருபெயருங் காண்க. இப்பாட்டை, சூடு - ஆம் பாட்டோடு ஒப்பிடுக. தருமத்தைப் பண்டமாகவும், இல்வாழ்வைப் பண்டியாகவும், அதற்கு உரிய தொழிலை நுகத்தடியாகவும் உருவகப்படுத்தினதற்கு ஏற்ப, அவ்வில்லறத்தை நடத்துங் கணவன் மனைவிகளை அவ்வண்டியிழுக்கும் எருதுகளாக உருவகப்

படுத்தாமையால், ஏகதேசவுருவகவணி. இல்வாழ்க்கை பலதருமங்களைச் செய்தற்கு இடமாதலால், 'தருமமெனும் பண்டமிகுஞ் சகடம்' எனப்பட்டது. உபமானமாகிய வண்டிக்குத் தூரம்-இடத்தின் நீட்சியும், உபமேயமாகிய இல்வாழ்க்கைக்குத் தூரம்-காலத்தின் நீட்சியுமாம்; 'இறை' என்பதும் இவ்வாறே. காதல் - ஆசை; அதனை உடையவள், அல்லது அதற்கு இடமானவள் - காதலி; இ - பெண்பால்விகுதி: இதன் ஆண்பால்-காதலன்; இப்பெயர்கள், பெண்பிள்ளைகளுக்கும் வழங்கும். தர்மம், சகடம், கர்மம், நுகம், தூரம் - வடசொற்கள். இறையும், உம் - இழிவுசிறப்பு. (ருக)

60.—(இ - ள்.) ஓது - புகழ்ந்து கூறப்படுகிற, கலை எண்ணிரண்டும் ஒன்றும் மதி - பதினாறுகலைகளும் பொருந்திய பூர்ணசந்திரன், என் - என்று உவமைசொல்லப்படுகிற, முகத்தாய் - முகத்தையுடையவளே! காதல்-அன்பையுடைய, மனையாளும் காதலனும் - மனைவியும் கணவனும், மாறு இன்றி- (தமக்குள்) மாறுபடுதலில்லாமல் ஒற்றுமைகொண்டு, தீது இல் ஒரு கருமம் ஏ- குற்றமில்லாத ஒரு காரியத்தையே, செய்ப - செய்வார்கள்; (அது எதுபோலவெனின்),—கண் இரண்டும் ஒன்றையே நோக்கல் காண் - (நமது) இரண்டு கண்களும் (தம்முள் மாறுபடாமல் ஒத்து) ஒருபொருளையே பார்த்தலை நீ பார்; (எ-று.)—தான் - அசை. [நன்னெறி - கூ.]

கண்களிரண்டாயினும் பார்வை ஒன்றுபட்டு ஒருசமயத்தில் ஒருபொருளையே நோக்குதல்போல, ஒருவரோடொருவர் அன்புள்ள கணவன் மனைவியர் தாம் இருவராயினும் கருத்தொத்து ஒருதொழிலையே செய்வர் என்று, தம்பதிகளின் ஒற்றுமையை எடுத்து உரைத்தவாறு. திருஷ்டாந்தாலங்காரம்; உவமையணியுமாம். மாறு - முதனிலைத்தொழிற்பெயர். முகத்திற்குச் சந்திரனுவமை - தண்மை ஒளி மகிழ்ச்சிதருதல் என்னும் இவற்றிற் கென்க. (சுo)

61.—(இ - ள்.) விழைதக்க- விரும்பத்தக்க, மாண்ட மனையாளை- (நற்குணநற்செய்கைகளால்) மாட்சிமைப்பட்ட மனைவியை, இல்லாதான்- உடையவனல்லாதவனது, இல் அகம் - வீட்டின் இடம், மழை திளைக்கும் மாடம் ஆய் - மேகம் (தன்மேற்) பொருந்தும்படியான [மிகஉயர்ந்த] உபரிகையுள்ளதாய், மாண்பு அமைந்த காப்பு ஆய் - சிறப்புப்பொருந்திய காவலையுடையதாய், இழை விளக்கு நின்று இமைப்பின் - ஆபரணங்கள் விளக்குப்போலப் பொருந்தி விளங்கப்பெற்றாலும், என் ஆம் - யாது பயன்படும்? (அவ்வீடு), காண்டற்கு அரியது ஓர் காடு-பார்ப்பதற்குங்கூடாத ஒருகாடேயாம்; (எ-று.) —[நாலடியார் - பன்னெறி - க.]

எவ்வளவு செல்வமிருந்தாலும் நல்லமனையாளில்லாத வீடு பயனற்ற தென்பதாம். 'மாண்ட' என்றதனால், நற்குணநற்செய்கையில்லாத மனைவி யிருந்தும் பயனில்லை யென்க; "இல்லாள், வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில், புலிகிடந்த தூறாய் விடும்" என்பதனோடு ஒப்பிடுக. 'மழைதிளைக்கும் மாடம்' என்ற விடத்து, மேகத்துக்கும் மாடத்துக்கும் சம்பந்தமில்லா திருக்கவும் சம்பந்தங்கற்பித்துக்கூறினது, தொடர்புயர்வுநவிற்சியணி; வடநூலார் சம்பந்தாதிசயோக்தி என்பர்; இது, மாடத்தின் உயர்வை விளக்கும். விளக்கு-(பொருள்களை) விளங்கச்செய்வ தெனக் காரணப்பெயர்; 'அம்' என்னுங் கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்து கெட்டது: கெடாவிடின், விளக்கம் எனநிற்கும். விழை என்னும் முதனிலைத்தொழிற்பெயர், நான்காம் வேற்றுமைத் தொகையாய், விழைதற்கு என விரியும். (சுக)

62.—(இ - ள்.) மழை இன்றி-மழையில்லாமல், மா நிலத்தார்க்கு- பெரிய பூமியிலுள்ளவர்களுக்கு, இல்லை- (யாதொரு நன்மையும் உண்டாவது) இல்லை; மழையும்- (அப்படிப்பட்ட) மழையும், தவம் இலார் இல் வழி- தவஞ்செய்யா

தவர்களது இருப்பிடங்களில், இல்லை - (பெய்தல்) இல்லை; தவமும் - (அப்படிப்பட்ட) தவமும், அரசு இலார் இல் வழி - அரசாட்சிமுறைமையில்லாத அரச ரிருப்பிடங்களில், இல்லை - (உண்டாதல்) இல்லை; அரசனும் - (அப்படிப்பட்ட) அரசனும், இல் வாழ்வான் இல் வழி - இல்லறத்தில் வாழ்பவன் இல்லாதவிடத்தில், இல் - இல்லை; (எ-று.)—[நான்மணிக்கடிகை - சக.]

மழையில்லாமல் உலகத்தில் ஒருநன்மையும் உண்டாகாது; நல்லமுனிவர்கள் இருந்து தவஞ்செய்யாவிடத்து, மழை யுண்டாவதில்லை; அரசர் ஒழுங்காய் இராச்சியம் ஆண்டு இடையூறுகளை விலக்காவிடின், தவம் நன்றாக நிறைவேறாது; இல்லறத்தவரான குடிகள் நாட்டிற் செவ்வையாக வாழ்ந்திராவிடின், அரசனுக்குச் செல்வம் முதலியன பெருகிச் செங்கோல் இனிது செல்லாது என எல்லா இன்பங்களுக்கும் முறையே காரணமாகிற இல்வாழ்வாரது சிறப்பை யெடுத்துக்காட்டியபடி. எனவே, அரசன் நாட்டில் குடிகளைச் செழிக்கச்செய்து தான் முறையே அரசாட்சிசெலுத்தித் தவம்முதலிய நல்லறங்களைப் பாதுகாப்பானாயின், கடவுள் அங்கு மழைபொழிவித்து எல்லோர்க்கும் இன்பம் அளிப்பர் என்பதாம். இங்கு ஒன்றுக்கொன்று காரணமாக முறையேகூறியதனால், காரணமாலை என்னும் அலங்காரம். 'நிலத்தார்க்கு' எனச் சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினாராயினும், இனம் பற்றி அஃறிணையுயிர்களையுங் கொள்க. "வானோக்கி வாழு முலகெல்லாம்", "நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்டா, லெல்லார்க்கும் பெய்யு மழை", "மாதவர்நோன்பு மடவார்கற்பும், காவலன்காவ லின்றெனி னின்றால்", "சீர்சான்ற, தாவாக் குடி யுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல், ஓவா துலைக்கு மூலகு" என்றவற்றை முறையே இங்கு அறிக.

இரண்டாம் அடியிலும் மூன்றும் அடியிலும் உள்ள 'இல்வழி' என்பதில், இல் - இருப்பிடம்; வழி - ஏழனுருபு. நான்காம் அடியிலுள்ள 'இல்வழி' என்பது - பண்புத்தொகை; வழி - இடம். இனி, 'தவமிலார்' என்பதற்கு - தவத்துக்கு இடமானவரென்றும், 'அரசிலார்' என்பதற்கு - அரசாட்சிக்கு இடமானவரென்றும் பொருளுரைத்தால், இரண்டாவது மூன்றாவது அடிகளிலுள்ள 'இல்வழி' என்பதற்கும் பண்புத்தொகையாக, இல்லாதவிடத்தில் என்றே பொருள்கொள்ளலாம். 'இல்வாழ்வான்' என்பது - சாதிப்பெயராய், பன்மைகுறிக்கும்; 'இல்வாழ்வார்' என்றபாடம் பொருத்தம். உம்மைகள் மூன்றும் - இறந்ததுதழுவிய எச்சத்தோடு உயர்வுசிறப்பு. இல் - இல்லை யென்பதன் விகாரம். (சுஉ)

63.—(இ - ள்.) நிச்சலும் - நாள்தோறும், பிச்சையும் ஐயமும் இட்டு - பிச்சையையும் ஐயத்தையுங் கொடுத்து, பிறன் தாரம் நோக்காது - அயலான் மனைவியை விரும்பிக் கண்ணெடுத்துப் பார்த்தலுஞ் செய்யாமல், பொய் ஒரீஇ - பொய்யைக் கூறாமல் ஒழிந்து, நிச்சலும் - நாள்தோறும், கொல்லாமை - (உயிர்களைக்) கொல்லாமையாகிய விரதத்தை, காத்து - பாதுகாத்து, கொடுத்து உண்டு - (விருந்தினர் முதலியோர்க்கு உணவைப் பங்கிட்டுக்) கொடுத்து (மிகுதியைத் தான்) புசித்து, வாழ்வதே - வாழ்ந்திருத்தலே, இல்வாழ்க்கை என்னும் இயல்பு - இல்வாழ்கையின் தன்மையாம்; (எ - று.)—[அறநெறிச்சாரம் - எஉ.]

ஒருபொருட்பன்மொழிகளாக வழங்குகிற பிச்சை ஐயம் என்றவற்றிற்குப் பொருள்வேறுபாடு:—திருப்பாவையில் "ஐயமும் பிச்சையும் ஆந்தனையுங் கைகாட்டி" என்றவிடத்து, ஆறாயிரப்படி வியாக்கியானத்தால், ஐயம் - உரியகாலங்களில் வறியோர்க்கு ஈதல், பிச்சை - உரியகாலங்களில் தக்கார்க்கு அளித்தல் என்றும்; அவ்விடத்து மூவாயிரப்படிவியாக்கியானத்தால், ஐயம் -

தக்கவிடத்தில் மிகுதியாகச் செலவு செய்வது, பிச்சை - பிரமசாரிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் இடுவது என்றும் தெரிகிறது. ஔவையில், "ஐயமே பிச்சை யருந்தவர்க் கூணுடை" என்றவிடத்து உரைகாரர் ஐயம் - கூன் குருடு முதலியோர்க்குக் கொடுத்தல், பிச்சை - தவசி முதலியோர்க்குக் கொடுத்தல் எனக் கூறியுள்ளதையும் அறிக.

பிச்சை, தாரம், நிச்சல் - பிக்ஷா, தாரா:, நித்யம் என்னும்வடசொற்களின் திரிபு. நிச்சலும், உம் - தொறுப்பொருளது. ஒரீஇ - ஒருவி யென்பதுவிகாரப்பட்ட சொல்லிசையளபெடை. நோக்காது - சேராது என்ற கருத்தில் வந்தது; இடக்கரடக்கல். (௬௩)

64.—(இ - ள்.) விருந்து - விருந்தாளிகளை, புறந்தரான் - பாதுகாவாமலும், வேளாண்மை செய்யான் - (பிறனுக்கு) உபகாரஞ்செய்யாமலும், பெருந் தக்கவரையும் பேணான் - சிறந்ததக்ககுணமுடையோரையும் விரும்பி ஆதரியாமலும், பிரிந்து போய் கல்லான் - (தன்குடும்பத்தை) நீங்கிச்சென்று (நூல்களைக்) கற்காமலும், கடு வினை மேற்கொண்டு ஒழுகும் ஏல் - கடுமையானதொழில்களை (ஒருவன்) செய்ய உடன்பட்டு நடப்பானானால், (அவனுக்கு), இல்வாழ்க்கை என்பது இருள் - இல்லறவாழ்க்கையானது இருளாகும்; (எ-று.) —[அறநெறிச்சாரம். ௭௩.]

இருளாகும் என்றது, இருள்மயமாய்த் தன்னிடத்துப் புக்கவரை அஞ்சுவித்து வருத்துகிற தாமிஸ்ரம் அந்ததாமிஸ்ரம் முதலிய நரகத்துக்குக் காரணமாம் என்றவாறு. இல்வாழ்க்கை யென்பது இருள் - காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. தாய் தந்தை முதலியோரை விட்டுத் தனியேசென்று நல்லாசிரியனை யடுத்து வழிபட்டுக் கற்றல், இயல்பு; இனி, 'பிரிந்து போய்' என்பதற்கு - மனையாளை விட்டுப் பிரிந்து சென்று என்றுங் கொள்ளலாம்: அங்ஙனம் கற்றற்குப் பிரிதல், ஆறுவகைப்பிரிவினுள் 'ஓதற்பிரிவு' எனப் படும். 'புரிந்து' என்ற பாடத்துக்கு, விரும்பி யென்க.

புறந்தரான், செய்யான், பேணான், கல்லான் - எதிர்மறை முற்றெச்சங்கள். வேளாண்மை - பண்புப்பெயர். தக்கவரையும், உம் - உயர்வுசிறப்பு. கடுவினை - பண்புத்தொகை. என்பது - முதல் வேற்றுமைச் சொல்லுருபு. (௬௪)

65.—(இ - ள்.) மருவிய - நீங்காது பொருந்திய, காதல் - ஆசையையுடைய, மனையாளும் தானும் - மனைவியும் (கணவனான) தானும், இருவரும் - இந்த இரண்டுபேரும், பூண்டு - ஏற்றுக்கொண்டு, ஈர்ப்பின் அல்லால் - (மனமொத்து) இழுத்தா லல்லாமல், ஒருவரால் - (இவ்விருவரில் தனியே) ஒருவரால், இல்வாழ்க்கை என்னும் இயல்பு உடைய வான் சகடம் - இல்வாழ்க்கை யென்கிற நல்லியல்பு அமைந்த பெரிய வண்டி, தெற்றிற்று நின்று - தடைப்பட்டதாய் நின்று, செல்லாது - செல்லமாட்டாது; (எ-று.) —[அறநெறிச்சாரம் - ௮௬.]

கணவனும் மனைவியும் மனமொருமித்து நடத்தினாலல்லது இல்லறம் இனிது நடவாது என்பதாம். ஏகதேசவுருவகவணி. கீழ் ௩௬ - ஆம் பாட்டோடு இப்பாட்டை ஒப்பிடுக. தெற்றிற்று - இறந்தகால வினையெச்சம்; தெற்று - பகுதி, இன் - சாரியை, ற் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி. (௬௫)

66.—(இ - ள்.) வினை காத்து - (இல்லறத்துக்கு உரிய) தொழில்களைத் தவறாமற்செய்து பரிபாலித்து, வந்த விருந்து ஓம்பி நின்றான் - வந்த விருந்தினரை உபசரித்து ஒழுகுகிறவனது, மனை வாழ்க்கை - இல்லறவாழ்வு, தவத்தில் - தவஞ்செய்தலைக்காட்டிலும், நன்று - சிறந்தது; புனை கோதை - தரித்த பூமாலையையும், மெல் இயல் - மென்மையான தன்மையையும் உடைய, நல்லாளும் - அழகியமனையாளும், விருந்து ஓம்பி - விருந்தினரை உபசரித்து, சொல்

எதிர் சொல்லாள் எனின் - மாறுபட்ட சொற்களைக் கணவனெதிரிலேசொல்லாதிருப்பளானல், நல்லள்-சிறந்தவளாவள்; (எ-று.)—[அறநெறிச்சாரம்-கூ௦.]

விருந்தோம்பி இல்லறந்தவருது நடத்துபவன், வருந்தித்தவஞ்செய்து பெறும் பயனைத் தான் காயக்கிலேசமில்லாமலே பெறுதலால், அவ்வில்வாழ்க்கை தவத்தினும் சிறந்ததாம்; "ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை, நோற்பாரின் நோன்மை யுடைத்து" என்ற திருக்குறளையுங் காண்க. இவ்வில்லற வொழுக்கம் இனிது நடத்தற்கு நற்குண நற்செய்கைகளோடு கூடிய மனையாளின் உடன்பாடு இன்றியமையாதாதலால், அதனையும் உடன் கூறினர். இல்லறமோ துறவறமோ சிறந்தது என்று அறியக் கருதி வந்தடைந்தார்க்கு, திருவள்ளுவர், குறிப்பால், 'எதிர்சொல்லாத மனையாள் வாய்ப்பின் இல்லறம் சிறந்தது, இல்லையேல் துறவறமேசிறந்தது' என்று தெரிவித்ததும் அறிக. 'வினைகாத்து' என்பதற்கு-தீவினை நிகழவொட்டாமல் தடுத்து என்றும் பொருள்கொள்ளலாம். முன் பரிசயமுண்மையால் குறித்து வந்தவரும், அது இல்லாமையால் குறியாது வந்தவரும் என விருந்தினர் இருவகையர். நின்ருல் எனப்பிரித்து உரைத்தலுமாம். சொல்லெதிர்சொல்லுதல் - கணவன் சொற்களுக்குக் குறுக்குப்பேசுதல்.

தவத்தின், இன் உருபு - எல்லைப்பொருளது. நல்லாளும், உம்- இறந்தது தழுவிய எச்சம். (சுசு)

67.—(இ - ள்.) இல்வாழ்க்கை - (ஒருவனது) இல்லறவாழ்வு, அன்பும்- (தன்மனைவிமேற் செய்யத்தக்க) அன்பையும், அறனும் - (பிறர்க்குப் பகுத்துக்கொடுத்து உண்ணுதலாகிய) தருமத்தையும், உடைத்து ஆயின் - உடையதானல், அது- அவ்வுடைமை, பண்பும் பயனும்- (அவ்வில்வாழ்க்கைக்குக்) குணமும் பயனுமாம்; (எ-று.)—[திருக்குறள் - இல்வாழ்க்கை - ரு.]

அன்பு பண்பும், அறம் பயனுமா மென முறையே சென்று இயைதலால், முறைநிரல்நிறைப்பொருள்கோள். மனைவிக்குங் கணவனுக்கும் மனம் ஒற்றுமைப்படாவிடின் இல்லறம் நிறைவேருதாதலால், அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனுயிற்று. உடைத்து - உடைமை யென்னும் பண்பி னடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். அறன், பயன் - போலிகள். (சுஎ)

68.—(இ - ள்.) (ஒருவன்), இல்வாழ்க்கை - இல்வாழ்வை, அறத்து ஆற்றின் - தருமவழியிலே, ஆற்றின் - நடத்துவனுயின், (அவன்), புறத்து ஆற்றில் பொய் - (அவ்வில்லறத்துக்குப்) புறமாகிய துறவறவழியிற் சென்று, பெறுவது - பெறும்பயன், எவன் - யாது? [எதுவும் இல்லை யென்றபடி]; (எ-று.)—[திருக்குறள் - இல்வாழ்க்கை - சு.]

இங்கே, தருமவழி என்றது, பழிபாவங்களுக்கு அஞ்சிப் பொருளீட்டுதலும், பிறர்க்குப் பகுத்துக்கொடுத்துத் தான் உண்ணுதலும், அன்புடைமையும் என்று முன்புசொன்ன வழி. புறத்தாறு - இல்லைவிட்டு வனத்துச் செல்லும் நிலை. அந்நிலையினும் இல்வாழ்க்கை சிறந்தபயனுடையது என்பார், 'புறத்தாற்றிற் போய்ப் பெறுவ தெவன்' என்ருர். இல்வாழ்க்கையே பயனுடைய தென இதன்சிறப்புக் கூறியவாறு. ஆற்றின் என்ற சொல் இரண்டனுள், முன்னது - ஆறு என்னும் பெயரின்மேல் வந்த ஏழாம்வேற்றுமைவிரி; பின்னது - ஆற்று என்னும் வினைப்பகுதியின்மேற் பிறந்த எதிர்காலவினையெச்சம். போஒய், அளபெடை - செய்யுளோசை நிறைப்பது. ()

69.—(இ - ள்.) அறன் எனப்பட்டது - (இருவகையறத்திலும் நூல்களால்) அறமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது, இல் வாழ்க்கையே - இல்லறமே; அஃதும் - (மற்றைத்துறவறமோ எனின்) அதுவும், பிறன் பழிப்

பது இல் ஆயின் - அபலானுற்பழிக்கப்படுவது இல்லையாயின், நன்று- (அவ்வில்லறத்தோடு ஒருதன்மைத்தாக) நல்லது; (எ-று.)—[திருக்குறள் - இல்வாழ்க்கை - கூ.]

பிரிநிலை ஏகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது; இவ்வேகாரத்தாற் பிரிக்கப்பட்டது துறவறமாதலால், 'அஃது' என்னுஞ் சுட்டுப்பெயர் அத்துறவத்தின் மேல் நின்றது. 'பிறன்பழிப்பது' என்றது, கூடாவொழுக்கத்தை; அதாவது - தாம்விட்ட காம இன்பத்தை மனவுறுதியில்லாமையாற் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாகிய தீயவொழுக்கம். துறவறம் மனத்தையும் இந்திரியங்களையும் வருத்தியடக்க வல்ல அருமையுடைத்தானபொழுதே, அவற்றை வருத்தவேண்டாமல் ஐம்புலவின்பங்களை நிரம்ப அனுபவிக்கும் மேன்மையுடைய இல்வாழ்க்கையோடு அறமென்று ஒருங்கு எண்ணப்படும் என்றவாறாயிற்று. இனி, இக்குறளுக்கு, அறமென்று சிறப்பித்துக்கூறப்பட்டது இல்வாழ்க்கையே; அவ்வில்வாழ்க்கைதானும் பிறனாற் பழிக்கப்படுவனவாகிய பிறன்மனைவியைவிரும்புதல் பொறாமை, பேராசை, புறங்கூறுதல் முதலிய தீக்குணங்கள் இல்லாததாயின் நன்று என்று உரைகொள்ளுதலும் ஒன்று. (கூகூ)

எ - ஆம் அதிகாரம்.—பெற்றோர்ப்பேணல்.

மக்கள் தம்மை அன்போடு பெற்றுவளர்த்த தாய்தந்தையரைத் தெய்வமாகக் கருதி அவர்கள்பால் மிக்கஅன்புகொண்டு அவர்களை விரும்பி உபசரித்தல். இல்லறம் இனிது நடத்தற்கு ஏற்ற துணையாகிய மனையாளுக்குக் கற்பு இன்றியமையாத நற்குண மாதலால் இல்லறத்தின்பின் கற்பும், அக்கற்புடைமனையாளோடு கூடிவாழும் வாழ்க்கைக்குப் பயன் புதல்வரைப்பெறுதலே யாதலால் அதன்பின் மக்கட்பேறும், அங்ஙனம்பெற்ற மக்களுக்குத் தந்தைதாய்ப்பேணுதல் கடமை யாதலால் அதன்பின் பெற்றோர்ப்பேணலும் நிறுத்தப்பட்டன வென அதிகாரமுறைமை காண்க. [ஐந்தாம் அதிகாரமாகிய கற்பும், ஆறும் அதிகாரமாகிய மக்கட்பேறும், இங்கு எடுத்துக்கொள்ளப்படாதன.]

70.—(இ - ள்.) மைந்தனை - புத்திரனை, பெறுகின்றதும் - பெறுதலும், மாசு இலா - களங்கமில்லாத, புந்தி அன்பொடு - மனத்திற்பொருந்திய அன்புடனே, போற்றி வளர்ப்பதும்- (அம்மைந்தனை) ஆதரித்துவளர்த்தலும், —தந்தை மாண்டுழி - தகப்பன் இறந்தபொழுது, தம் முறைக்கு ஏற்றிட - புத்திரனாகிய தனக்கும் அத்தந்தைக்குமுள்ள உறவுமுறைமைக்கு ஏற்றபடி, அந்தம் இல் கடன் - அழிவில்லாத நற்கடமைகளை, ஆற்றுதற்கே அன்றோ - (அப்புத்திரன்) செய்தற்கேயல்லவோ? (எ-று.)—[கந்தபுராணம் - இரணியன் யுத்தப்படலம் - கஉசு.]

சூரபதுமனது குமாரனான இரணியன் வீரவாகுதேவரோடு போர்செய்து வலியொடுங்கிய சமயத்தில், இனி இக்களத்தில் நின்றால் தான் அவரால் இறந்திடக்கூடுமென்று நிச்சயித்து, அங்ஙனம் தான் இறந்திடின் தன்தந்தை பின்பு இறக்கும்பொழுது அவனுக்கு அந்திமக்கிரியைசெய்பவர் எவருமில்லையேயென்று ஆலோசித்து அதன்பொருட்டாகத் தான் உயிர்தப்பியோடிப் பிழைக்கத்தொடங்குமளவில் அவ்விரணியன் கருதியது இது.

மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கும் அந்தக்கரண மாதலால், ஒற்றுமைநயம்பற்றி மனம் புந்தி யெனப்பட்டது. மாண்டுழி - மாண்டவுழி யென்பதன் தொகுத்தல். ஏற்றிட, ஏல் - பகுதி, இடு - துணைவினை; அ - விகுதி, து - சாரியை, மற்றவை - சந்தி. அந்தம் - வடசொல். ஏ- பிரிநிலை. அன்று ஓ - தேற்றம். (எ0)

71.—(இ - ள்.) ஈன்ற தாயினை- (தம்மைப்) பெற்ற தாயையும், ஈன்று எடுத்து இரு புயத்து அணைக்கும் ஆன்ற தந்தையை - பெற்றபின் தம்மை யெடுத்து (அன்போடு) இரண்டுகைகளாலும் தழுவிவளர்க்குந் தன்மையுள்ள சிறந்ததந்தையையும், அரந்தை செய்து - (பாதுகாவாமல்) துன்பமடையச் செய்து, அகன்று போய் - (தாம் அவர்களை) விட்டு நீங்கிச்சென்று, அடவி தோன்றி - காட்டிற் புக்கு, மா தவம் தொடங்கினோர் இவர்களை - பெரிய தவத்தைச் செய்யத்தொடங்கின இவர்களை, தொல்லை மூன்று தேவரும் முனிவுற- பழமையான திரிமூர்த்திகளும் வெறுத்தலால், (இவர்கள்), நிரயம் உற்று இழிவார் - நரகமடைந்து கீழ்ப்படுவர்; (எ-று.)—[உபதேசகாண்டம் - பஞ்சாக்கரமான்மியச்சருக்கம் - சரு.]

தாய்தந்தையரை உபசரியாதுவிட்டு அவர்கள் வருந்த வனஞ்சென்று அரிதிற்செய்யுந் தவம் தீவினைக்கு இடமே யன்றி நல்வினைக்கு இடமாகா தென்பது கருத்து. இதனால், தந்தைதாய்ப்பேணல் தவத்தினுஞ் சிறந்த தென்பது விளங்கும். 'நிரயமுறுவார்' என்றுமாத்திரங் கூறாமல் 'நிரயமுற் றிழிவார்' என்றதனால், ஆழ்வயிற்றடக்கி மீட்டுமிழ்கலா எரிவாய் வெம்மைகூர் நரகடைந்து அதில் நெடுநாள் வருந்தியேகிடப்ப ரென்க.

'ஈன்றெடுத்து' என்பதை ஈன எடுத்து என எச்சத்திரிபாக்கி, தாய் பெறத் தான் எடுத்து எனவுரைத்தலும் ஒன்று. அன்றியும், கருப்பம் முதலில் தந்தைவயிற்றில் இரண்டுமாசகாலந் தங்கிப் பின்பே தாய்வயிற்றிற் சேர்கிற தென்னும் நூற்கொள்கைபற்றி,'ஈன்றெடுத்த' என்றதாகவுங் கொள்ளலாம். 'ஆன்ற தந்தை' என்றதற்கு - அடுத்தகவியில் 'உயர்தந்தை' என்பதற்கு உரைப்பதை உரைக்க. மூன்றுதேவர் - அயன் அரி அரன். புஜம், அடவி, மஹா, தபஸ், நிரயம் - வடசொற்கள். அணைக்கும் என்ற பெயரெச்சத்தில் உம்விகுதி - எதிர்காலங்காட்டாமல் தன்மைமாத்திரத்தை உணர்த்திற்று.

ஆடவதேயத்தில் மாலியநகரத்தில் சுபுத்தனென்னும்அந்தணனது ஏகபுத்திரனான தருமன் வித்தியாநந்த குருவினிடம் உபதேசம்பெற்றபின் துறவறமடையக்கருதி அக்கருத்தைத் தந்தைக்குக் கூற, அத்தந்தை அதனைமறுத்து மைந்தனுக்குக் கூறியது, இது. (எக)

72.—(இ - ள்.) தாயினில் - தாயைக்காட்டிலும், சிறந்த - மேற்பட்ட, தெய்வம் - கடவுள், இலை - இல்லை; உயர் தந்தைதன்னின் - சிறந்த தந்தையைக்காட்டிலும், ஏய - பொருந்திய, நல் குருவும் - சிறந்த ஆசிரியனும், இல்லை—; என்னின் - என்றால் [ஆதலால் என்றபடி.], இவர்கள் தாளில் - இவர்களது பாதங்களில், தூய் மலர் தூவி - பரிசுத்தமான பூக்களை இட்டு அருச்சித்து, நாளும் - தினந்தோறும், தொழுதிடும் - வணங்குகிற, அறிஞர்தாமே- அறிவுடையவர்களே, ஆய் கதிர் பரப்பும் பொன் நாடு - சிறந்த ஒளியைப் பரவச்செய்கிற பொன்மயமான தேவலோகத்தில், அமரர் ஆய் - தேவர்களாய், இனிது வாழ்வார் - சுகமாக வாழ்வார்கள்; (எ-று.)—மற்று - அசை. [கூர்ம புராணம் - வியாசர் கருமமுரைத்த வத்தியாயம் - கரு.]

வியாசர், சூதர் சவுனகர் முதலிய முனிவர்களுக்கு ஒழுக்க முரைத்தது.

"தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை", "ஈன்றாளின் என்னகடவுளு மில்", "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தந்தைதாய்ப் பேண்" என்பன காண்க. தந்தைக்கு 'உயர்' என்ற அடைமொழி கொடுத்தது, "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே", "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்" என்றபடி மகனது கல்விகேள்வி உயர்ச்சிகளுக்குத் தந்தையே காரண மாதலால்; சீவகசிந்தாமணியில் "தாயுயர் மீக்க தந்தை" என்றதையும், 'பிள்ளையுயர்ச்சி மிகுதிக்குக் காரணமான தந்தை'

என்ற அதன் உரையையும் உணர்க. எய என்ற இறந்தகாலப் பெயரெச்சத்தில், எய்-பகுதி, அ-விகுதி, ய் - காலங்காட்டும் இடைநிலை, இடைநிலையகரம் வந்தபொழுது பகுதியீற்றுத் தனிக்குறிலணையாத யகரங் கெட்டது - சந்தி. நேயம் எனப் பதம் பிரித்து, அன்புடைய என்று உரைத்தல், மோனைக்கு வழுவாம். நற்குரு- ஞானோபதேசத்தால் நன்மையைச் செய்யும ஆசாரியன். குரு என்னும் வடசொல்லுக்கு - (அஜ்ஞாந மன) இருளையொழிப்பவனென்று காரணப்பொருள்; கு-இருள், ரு-ஒழிப்பவன். தூய் - தூய்மையென்னும் பண்பினடி. 'தாமே' என்றதனால், இவர்கள் தேவலோகத்து இன்பமடைவதற்கு வேறுமுயற்சி எதுவும் வேண்டா என்பது பெறப்படும். (௭௨)

73.—(இ - ள்.) தந்தை - தந்தையையும், தாய் - தாயையும், பணிதல் செய்யும் - வணங்குதலாகிய, தவம் அலால்- தவமே யல்லாமல், மைந்தருக்கு- புத்திரருக்கு, வேறு தவம் இல்லை - வேறு சிறந்த செய்தவம் கிடையாது; எதிகளேனும் - (புத்திரர்) சந்யாசிக ளாய்விட்டாலும், தாயை வணங்குவர் - தாயாரை நமஸ்கரிக்கக்கடவர்; தந்தை - தந்தையோ எனின், அந்த மைந்தனையே போற்றல் வேண்டும் - (தனதுபுத்திரன் சந்யாசியாச்சிரமத்தை யடைந்துவிட்டால் பின்பு தான்) அப்புத்திரனையே நமஸ்கரிக்கவேண்டும்; அற்று ஆதல் தன்னால் - (நூற்கொள்கை) அத்தன்மைத்தாகுதலால், சிந்தை உற்று உணரின் - மனத்திற் பொருந்தி ஆலோசித்தால், தாயே தந்தையின் சிறந்தாள் - தாயே தந்தையினும் சிறப்புற்றவள்; (எ-று.)—மன், ஓ- ஈற்றசைகள். [காசிகாண்டம் - சிவசன்மா அக்கினிலோகங்கண்ட அத்தியாயம்- ௧௩.]

புத்திரனைப்பெற்று மகிழ்ச்சியடைந்துள்ள விச்சுவாநரனென்னும் அந்தணனுக்கு நாரதமுனிவன் வந்து புத்திரபாக்கியச்சிறப்பு முதலியவற்றைக் கூறும்பொழுது சொன்னது, இது. இப்பாட்டின் முதலடி - தந்தை தாய் என்னும் இருவரது சிறப்பையும், மற்றையடிகள் - அவ்விருவருள் தாய்க்கு உள்ள மேம்பாட்டையும் விளக்குவன. தம்மை எல்லாரும் கண்டமாத்திரத்தில் வணங்கத்தக்க மகிமையுடைய துறவறத்தை யடைந்தோரும் தமதுதாயை வணங்க வேண்டுதலையும், அப்படிப்பட்டசிறப்புத் தந்தைக்குஇல்லாமையையுங் காட்டி விளக்கியபடி.

தந்தைதாய் - பொதுத்திணையும்மைத்தொகை யாதலால், பன்மையீறு பெறுதும் நின்றது. எதி - யதி என்னும் வடசொல்லின் திரிபு; ஐம்பொறியை யடக்கியவ னென்பது, இதன் அவயவப்பொருள். ஏனும் - எனினும் என்பதன் மரூஉ. உம் - உயர்வுசிறப்பு. ஏ - இழிவுசிறப்பு. அற்று - சுட்டடியாப்பிறந்த வொன்றன்பாற்குறிப்புமுற்று; அ, று - பகுதிவிகுதிகள், ற் - சந்தி. மற்று எனக் கொள்ளுதல், மோனைத்தொடைக்குச் சிறவாது. ஆதல்தன்னால் - ஆதலால்; தன் - சாரியை. 'தந்தை தாய் பணித்தல் செய்யும்' என்ற பாடத்துக்கு, தந்தையும் தாயும் கட்டளையிட்ட காரியங்களைத் தவறாமற் செய்து முடித்தலாகிய வென்க; அப்பொழுது, பணித்தல் என்பது - தொழிலாகுபெயர். (௭௩)

74.—(இ - ள்.) நைந்து - வலிமை தளர்ந்து, அடி அற்ற - வேர் அறப்பெற்ற, ஆலம் - ஆல்மரம், நடுங்கி வீழ்கின்றது என்று - அசைந்து கீழ்விழுகிற தென்று அறிந்து, வந்த வீழ் - (அம்மரத்தினின்று முன்னமே) வந்து இறங்கியுள்ள விழுது, ஊன்றி - (தான் தூணாய் நின்று அம்மரத்தைத்) தாங்கி, வீழா வகை - (அது) விழாதபடி, நிலை விளக்கும் ஆ போல் - (அதற்கு) உறுதிநிலைமையை உண்டாக்கும் விதம்போல,—மைந்தர்கள் - புத்திரர்கள், தமக்கு உள் நல்ல அறிவினால் - தங்களுக்கு உள்ள நல்லறிவால், மகிழ்ந்து சேர்ந்து- மகிழ்ச்சியோடு அடைந்து, தந்தையை - (தமது) தந்தையை, தளரா வண்ணம் - தளர்ச்சியடையாதபடி, தவத்தின்- (தாம்செய்யும்) தவத்தினால், தாங்

குவர் - நிலை நிறுத்துவர், என்றான் - என்று (யயாதி யதுவுக்குச்) சொன்னான்; (எ - று.)—[இராமாயணம் - (ஒட்டக்கூத்தர்) உத்தரகாண்டம் - இலவணன்வதைப்படலம் - சஙு.]

சந்திரகுலத்தில் யயாதி யென்னும் அரசன் மூப்படைந்த பின்பும் உலகவின்பத்தில் திருப்தியடையாமல் தன்மைந்தரை நோக்கி 'சிலகாலம் உமது இளமையை எனக்குத் தந்து என்முதுமையை நீங்கள் கொள்ளுங்கள்' என்று கூறுகிற சந்தர்ப்பத்தி லுள்ளது, இப்பாடல். "சிதலை தினப்பட்ட ஆலமரத்தை, மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக், குதலைமை தந்தைகட் டோன்றின் தான்பெற்ற, புதல்வன் மறைப்பக் கெடும்" என்ற நாலடியாரோடு இப்பாட்டை ஒப்பிடுக. ஆலமரத்தை விழவொட்டாதபடி அதன் விழுது தான் வேரூன்றித் தாங்குதல்போல, மைந்தன் தான் சோராது செய்யும் நல்முயற்சியால் இம்மைமறுமைகளில் தந்தையைத் துன்பமடையாதபடி தாங்கக்கடவன் என்பதாம்.

ஆலம், அம்-சாரியை. என்று- நினையாததை நினைப்பதுபோலச் சொன்ன மரபு வழுவமைதி. வீழ்ந்துள்ளது வீழ் எனக் காரணப்பெயர்; வீழ்தல் - இங்கே, இறங்குதல். விளக்குதல்-விளங்கச்செய்தல்: எனவே, உண்டாகச்செய்தலாம். 'விளைக்குமா' என்றும் பாடம்: உண்டாக்கும் விதமென்றே பொருள். ஆ - ஆறு என்பதன் விகாரம். தமக்குள் நல்லறிவினால் மகிழ்ந்து சேர்ந்து என்பதற்கு-நல்லறிவால் தங்களுள் மகிழ்ச்சியோடு ஒற்றுமைப்பட்டு என்றும் உரைக்கலாம். (எசா)

75.—(இ - ள்.) கண்ணின் சிறந்த உறுப்பு - (பிராணிகளுக்குக்) கண்போலச் சிறந்த அவயவம், இல்லை - வேறு இல்லை; (மகளிர்க்கு), கொண்டானில் - (தம்மை) மணஞ்செய்துகொண்ட கணவன்போல, துன்னிய கேளிர்- நெருங்கிய உறவினர், பிறர் இல்லை - வேறு எவரும் இல்லை; மக்களின் - (தாம்பெற்ற) பிள்ளைகள்போல, ஒண்மைய ஆய பொருள் - சிறப்புடையனவான செல்வங்கள், இல்லை - (தாய்தந்தையர்க்கு வேறு) இல்லை; (பெற்ற மக்களுக்கு), ஈன்றாளில் - பெற்றதாய்போல, என்ன கடவுளும் இல் - எப்படிப்பட்டதெய்வமும் இல்லை; (எ-று.)—[நான்மணிக்கடிகை - ருஎ.]

"ஸர்வேந்த்ரியாணாம் நயநம் ப்ரதாநம்" என்ற வடநூல்மேற்கோளையுங் காண்க. கண்ணின் - கண்ணைக்காட்டிலும் என்றும் பொருள்கொள்ளலாம்; கொண்டானில், மக்களின், ஈன்றாளில் என்பவற்றிற்கும், இவ்வாறே: ஆயினும், போலவென்று கொள்ளுதலே சிறப்பு; காட்டிலும் எனக்கொண்டால், கண்முதலியன போன்ற உறுப்புமுதலியன உண்டென்று கருத்தமைந்து அவற்றின்சிறப்பைக் குறைவுபடுத்துதல் காண்க. இன், இல் இரண்டும் - ஐந்தனுருபு. போல என்றால் ஒப்புப்பொருளும், காட்டில் என்றால் எல்லைப் பொருளுமாம். கேளிர்-கேண்மையென்னும் பண்பினடியாப் பிறந்த பலர்பாற் பெயர்; இர் - விகுதி; (ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களைக்) கேட்குந் தன்மையரென்று காரணப்பொருள்படும். ஒண்மைய- பலவின்பாற்பெயர். "தம்பொரு ளென்ப தம்மக்கள்", "மக்கட்பேற்றிற் பெரும்பே றில்லை" என்பன, இங்கு அறியத்தக்கன. கடவுளை வழிபடுவதுபோலவே தாயை வழிபட வேண்டு மென்பது, நான்காம்வாக்கியத்தின் தாற்பரியம். உம்-உயர்வுசிறப்பு. "மக்களி னொண்மையவாய்ச் சான்றபொரு ளில்லை யீன்றாளோ, டென்ன கடவுளு மில்" என்றும் பாடமுண்டு. "கண்ணிற்சிறந்த வுறுப்பில்லை கல்வியின், நுண்ணியவாய பொருளில்லை கொண்டானின், துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளின், என்ன கடவுளு மில்" என்ற பாடத்துக்கு—கல்விபோல் நுட்பமானகாரியங்களை அறிவிப்பது வேறு இல்லையென்பது, இரண்டாம் அடியின் பொருளாம். (எரு)

76.—(இ - ள்.) ஈன்று வளர்த்த - (தம்மைப்) பெற்று வளர்த்து, தாய் தந்தைக்கு-தாய்தந்தையருக்கு, கைம்மாறு இயற்றிடுவார் - (ஏற்ற) பிரதியுபகாரத்தைச் செய்திடவல்லவர், எவரே - (உலகத்தில்) யார்தாம் உளர்? [எவரும் இலர் என்றபடி]; ஆன்ற மதலை - (நற்குணநற்செய்கைகளாற்) சிறந்த புத்திரன், நூறு வயது அளவும் - நூறு பிராயம் வரையிலும், அடிமை திறம் பூண்டு- (அத்தந்தை தாயர்க்கு) அடிமைத்தொழில்செய்தலை ஏற்றுக்கொண்டு, மூன்று புவனத்து உள்ள பொருள் முற்றும் அளித்து - மூன்றுலோகங்களினுமுள்ள பொருள்களையெல்லாம் (அவர்களுக்குக் கொணர்ந்து) கொடுத்து, முறை முறையே - நீதிநூல்களிற் கூறிய முறைப்படியே [முறைமைதவறாமலே], ஏன்று - மனமிணங்கி, வழிபாடு இயற்றிடினும்-உபசாரஞ்செய்தாலும், (அது), ஒருநாள் வளர்த்தற்கு இணையாமே - (தந்தை தாயர் இப்பிள்ளையை) ஒருநாள் வளர்த்ததற்கும் ஈடாகாதன்றோ? (எ-று.)—ஈற்று ஏகாரம்-தேற்றம். [தனிப்பாடல்.]

எவரே, ஏ-அசை. மனிதர்க்கு வேதநூற்பிராயம் நூறாதலால், 'நூறுவயதளவும்' என்றது: தானுள்ளவளவும் என்றபடி. அவர்களுள்ளஅளவும் எனக்கொள்ளுதல் சிறப்பன்று; அவர்கள் இறந்தபின்பும் தானுள்ளவரையிலும் அவர்களைக் குறித்துச் செய்யும் கடமைகள் யாவும் வழிபாட்டின்பாற்படுமென அறிக. புவகம் - வடசொல். ஏன்று, ஏல் - பகுதி. வழிபாடு - வழிபடு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். உம் - உயர்வுசிறப்பு. வளர்த்தற்கு என்பதன் இறுதியில் இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. (எசு)

77.—(இ - ள்.) தந்தைக்கு - (தன்னைக்கல்வியுடையவனாக்கிய) பிதாவுக்கு, மகன் ஆற்றும் உதவி- புத்திரன் செய்யும் பிரதியுபகாரமாவது, இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல் - (தன் அறிவும் ஒழுக்கமுங் கண்டவர்) இவனது தந்தை (இவனைப் பெறுதற்கு) என்னதவஞ் செய்தானோவென்று சொல்லுஞ் சொல்லை உண்டாகச்செய்தலாம்; (எ-று.)—[திருக்குறள்-புதல்வரைப்பெறுதல் - ௰.]

சொல் என்பது-அதனையுண்டாக்குதலாகிய காரணந் தோன்ற நின்றது. உண்டாக்குதல் - அவ்வாறு சொல்லும்படி தான் நல்லறிவும் நல்லொழுக்கமும் உடையவனாய் ஒழுகுதல். இதனால், புத்திரனது கடமை கூறப்பட்டது. நோற்றான், நோல் - பகுதி. கொல் - ஐயவினா. (எஎ)

அ - ஆம் அதிகாரம்.—அன்பு.

இதற்குப் பொருள் முன்கூறப்பட்டது. மனைவிமக்களோடுகூடிச் செய்யும் இல்லறம் அன்பில்லாவிடின் இனிதுநடவா தாதலால், இது இன்றியமையாததாம். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

78.—(இ - ள்.) வந்த உடலின் பயன் ஆகிய அன்பை - (நல்வினைப் பயனால் தனக்குக்) கிடைத்துள்ள மனிதசரீரத்துக்குப் பிரயோசனமாகிற அன்பை, உறுத இடத்து - (ஒருவன்) அடையாவிடின், (அவனுக்கு), இடனும் - (வீடுமுதலிய) இடங்களும், பொருளும் - செல்வமும், ஏவலரும்-ஏவியதொழிலைச் செய்பவர்களும், இருந்தும் - இருந்தாலும், பயன் என்னே - பிரயோசனம் என்ன? [ஒருபயனும் இல்லையென்றபடி]; (அன்றியும்), மனை மைந்தர் தொடர்பின் வளர்க்கும் அன்பு - மனைவியும் புத்திரரும் முதலிய சம்பந்தமுள்ளவரிடத்து மிகுதியாகச் செய்யப்படும் அன்பானது, பற்றும் அளிக்கும் - (அத்தன்மையால் பிறரிடத்தும்) விருப்பமுடைமையைத் தரும்; (அதனால்), நொதுமலரும் - (பகையும் நண்பு மல்லாத) அயலாரையும், படர் செய் பகையும் - துன்பஞ்செய்யவருகிற பகைவரையும், உறவு

ஆக்கும் - உறவினராகச் செய்துவிடும்; அதனால் - ஆதலால், சோர்ந்தும் அன்பின் வழுவற்க - மறந்தும் அன்புடைமையினின்றும் தவறாதிருப்பாயாக; (எ-று.)—[விநாயகபுராணம் - உபாசனகாண்டம் - அரசியற்கைப் படலம் - உஉ - (அன்புடைமை.)]

சோமகாந்தராசன் ஏமகண்டனுக்குத் தருமோபதேசஞ்செய்தது. "அன்போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு, என்போ டியைந்த தொடர்பு", "புறத்துறுப்பெல்லாம் எவன்செய்யும் யாக்கை, யகத்துறுப் பன் பிலவர்க்கு", "அன்பீனும் ஆர்வமுடைமை அதுவீனும், நண்பென்னு நாடாச் சிறப்பு" என்னுந் திருக்குறள்களையும், அவற்றின் பரிமேலழகருரையையுந் தழுவியது, இச்செய்யுள். ஆதலால், அவற்றிற்கு ஏற்ப இங்ஙனம் உரைக்கப் பட்டது. உடம்பின் அகத்தில் நின்று இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்பையுடையரல்லாதார்க்கு மற்று வெளியில் நின்று உறுப்பாகிற இடம் பொருள் ஏவல் முதலியன எல்லாம் அறஞ்செய்தலில் என்ன உதவியைச் செய்யமாட்டும் என்றும், உடம்போடியைந்தல்லது அன்பு செய்யலாகாமையால் அது செய்தற்பொருட்டே உயிர்க்கு உடம்போடு தொடர்ச்சி உளதாயிற்றாதலால் இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையே யென்றும், ஒருவன் உறவினரிடத்து அன்புசெய்தபழக்கத்தால் பிறரிடத்தும்விருப்பமுடையனாகவே அவனுக்குப் பகையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பராகும் மேன்மை யுண்டா மென்றும், ஆதலால் அன்பு எச்சமயத்தும் நீங்கத்தக்கதன் றென்றும் கருத்து. நொதுமலர் - உதாஸீநரெனப்படுவர். "இல்லானுக் கன்பிங் கிடம் பொரு ளேவல் மற், றெல்லாமிருந்து மவற் கென்செய்யும்" என்ற நன்னெறியையும் உணர்க. (எஅ)

79.—(இ - ள்.) அன்பு வாய்ந்த - அன்பு பொருந்தின உடம்புகளே, உயிர் நிலை - உயிர் நின்ற உடம்புகள்; அஃது இலார்க்கு - அந்த அன்பு இல்லாதவர்களுக்கு, உடல் - உள்ள உடம்பு, என்பு தோல் போர்த்தது - எலும்பைத் தோலாற்போர்த்ததாம் [உயிர் நின்ற தாகாது], என்று - என்று அறிந்தும்,—அன்பு உறை- அன்போடு பொருந்துதல், இன்பு தோய்ந்த நிலை- (இம்மைமறுமைகளில் அனுபவிக்கும்) இன்பங்களெல்லாம் நிறைந்த நிலைமையாம், என - என்று அறிந்தும்,— தான்—, இவண் - இவ்விடத்து, துன்பு காய்ந்த உயிர் துணை ஆயினன் - துன்பத்தால் தவிக்கிற உயிருக்கு (அன்போடு உதவும்) துணைவனானன்; (எ-று.)—[இது, திருவானைக்காப்புராணத்தி லில்லை.]

"அன்பின்வழிய துயிர்நிலை அன்பிலார்க்கு, என்பு தோல் போர்த்த உடம்பு," "அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து, இன்புற்றா ரெய்துஞ் சிறப்பு" என்ற திருக்குறள்களை அடியொற்றியது, இச்செய்யுள். உடம்பு எடுத்தற்குப் பயன் அன்புடைமையே யென்றும், அந்த அன்பு இல்லாதவரது உடம்பு இல்லறம் பயவாது என்றும் முதலிரண்டடிகளின் கருத்து. வாய்ந்த - பெயர். 'போர்த்தது' என்பதற்கு ஏற்ப 'வாய்ந்தது' என்றாவது, 'வாய்ந்த' என்றதற்கு ஏற்ப 'போர்த்த' என்றாவது பாடங்கொள்ளலாம். 'அன்பு வாய்ந்த துயிர்நிலை யஃதிலார்க், கென்புதோல் போர்த்த' என்று பாடமிருத்தல், திருக்குறளோடு ஒத்தது; 'இலார்க்கு' என்ற பன்மைக்கு ஏற்ப, போர்த்த எனப் பன்மைகொள்ளுதல் பொருத்தம். அன்புடையராய் இல்வாழ்க்கையில் நின்று மனைவியோடும் மக்களோடும் உறவினரோடுங் கூடி இன்பமடைந்தவர் தாம் செய்த வேள்வித்தொழிலால் தேவராய் அங்கும் இன்புறுவ ராதலாலும், தவத்தால் துன்பமடைந்து பெறும் சுவர்க்க வின்பத்தை இங்கும் இன்பமடைந்து பெறுதல் அன்பினாலே யாதலாலும் 'அன்புறை யின்பு தோய்ந்த நிலை' எனப் பட்டது. உறை - முதனிலைத்தொழிற்பெயர். (எகூ)

80.—(இ - ள்.) ஆதரவு இல்லை ஆயின் - அன்பு இல்லாவிட்டால், துறவு அறம் - துறவறமும், மனை அறம் - இல்லறமும், சீர் - புகழ் அல்லது சிறப்பும், தூய்மை - பரிசுத்தியும், நல் கல்வி- சிறந்த படிப்பும், நல்லோர் உறவொடு - நல்லோர்களுடைய சேர்க்கையும், மகங்கள் - யாகங்களும், தானம் - தானங்களும், ஒள் தவம் - சிறந்த தவமும், விரதம் - விரதங்களும், பூசை - கடவுளைப்பூசித்தலும், அறிவு-அறிவும், இவை அனைத்தும்- இவை யெல்லாம், இல்லை- உண்டாகமாட்டா; பெறுவன- (அன்பு இல்லாவிடின்) அடையப்படுவன, மெய் வருத்தம் - தேகபரிசிரமமும், பெரு பொருள் அழிவும் - மிக்க செல்வம் வீணாய் அழிந்துவிடுதலுமே யாம்; (எ-று.)—மாது, ஓ - ஈற்றசை. [பிரபுலிங்கலீலை - வசவண்ணர்கதி - ௬௫.]

இல்லறத்திற்கு அன்புபோலத் துறவறத்திற்கு அருள் சிறந்தது; அவ்வருள்தானும் இந்த அன்பின் காரியமே: ஆதலால், அன்பில்லாதார்க்கு இல்லறம் துறவறம் என்னும் இரண்டும் சித்திக்கமாட்டா; ஆகவே, இவற்றினலாகும் புகழும் இவற்றுக்கு அங்கமாகிய தூய்மை முதல் பூசை யீறுகச் சொல்லப்பட்டனவும் அமையா என்றும், அன்பில்லாதவர் மெய்வருந்தி மிக்க பொருள் தேடிச்சேர்த்தாலும் அது தானதருமங்களுக்கு உதவாமல் வீண்படுதலால் மெய்வருத்தமாத்திரத்தையே தந்திடு மென்றும் கருத்து. "அறம் பொருளின்பமும் வீடும்பயக்கும்,புறங்கடை நல்லிசையும்நாட்டும்—உறுங்கவலொன்று, உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லை, சிற்றுயிர்க் குற்ற துணை" என்றபடி கல்வி எல்லாநற்பயன்களையும் அளித்தலால் அதற்கு 'நல்' என்ற அடைமொழியும், "வேண்டிய வேண்டியாங்செய்தலால்" என்றபடி தவம் இம்மைமறுமைவீடுகளில் வேண்டியவற்றை வேண்டியவாறே பெறுவிக்குஞ் சிறப்புடைமையால் அதற்கு 'ஒள்' என்ற அடைமொழியும் கொடுக்கப்பட்டன. விரதங்களாவன- இன்ன நல்வினை செய்வேனென்றும் இன்னதீவினை யொழிவேனென்றும் தமது சக்திக்கு ஏற்றபடி ஏற்படுத்திக்கொண்டு அவ்வாறே நடத்துபவை. பூசை, ஆதரவு - பூஜா, ஆதரம் என்னும் வடசொற்களின் திரிபுகள். 'ஆதரவில்லை யாயின்' என்றது, மத்திமதீபமாய்ப் பின்வாக்கியத்தோடுங் கூடும். நல்லோருறவு - சற்சகவாசம்.

இதுவும், அடுத்தகவியும் - தன்பிழையைப்பொறுத்துத் தன்னையடிமைகொள்ளவேண்டு மென்று வேண்டிய வசவதேவனையும் அவனையடிமைகொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்த சென்னவசவேசன மாச்சிதேவன் கின்னரப்பிரமன் முதலியோரையும் நோக்கி அல்லமப்பிரபுதேவன் சொன்னவை. அன்பில்லாத வறுஞ்சொற்கள் மனமகிழ்ச்சிதரமாட்டா வென்பதை விளக்குதற்குக் கூறியன. (அ௦)

81.—(இ - ள்.) ஆதரவு உடையான்- அன்புள்ளவன், செய்யும் - செய்கிற, அல்லவும் - தீயகாரியங்களும், நல்ல ஆகும் - நல்லவைகளாம்; ஆதரவு இலாதான் - அன்பில்லாதவன், செய்யும் - செய்கிற, நல்லவும் - நல்லகாரியங்களும், அல்ல ஆகும் - தீயவைகளாம்; ஆதரவு அதனால் - அன்புடைமையால், ஆவிக்கு - உயிருக்கு, அரு துணை - (மறுமையிற்செல்லுகையில் பெறுதற்கு) அரிய துணையாய் உதவும் நல்வினையும், இன்பம் - இம்மை மறுமையின்பங்களும், முத்தி - வீடுபேறும், (உண்டாகும்); (இப்பயன்களை), ஆதரவு அலாது வேறு ஒன்று அளித்திட கண்டது உண்டோ - அன்பேயன்றி வேறொரு நற்குணம் பெறுவிக்க(எங்கேனும்) பார்த்ததுண்டோ? [இல்லையென்றபடி]; (எ-று.)—[பிரபுலிங்கலீலை - வசவண்ணர்கதி - ௬௬.]

"மாசற்ற நெஞ்சுடையார் வன்சொ லினிதேனையவர், பேசுற்ற வின்சொற் பிறிதென்க—ஈசற்கு, நல்லோ னெறிசிலையோ கன்னுதால் ஒண்கருப்பு, வில்லோன் மலரோ விருப்பு" என்றதனாலும், அன்புடையான் செய்யும் அல்

லவை நல்லவையும், அன்பிலான்செய்யும் நல்லவை அல்லவையு மாதல் காண்க. வழக்கிலும், கருத்தின்நோக்கம் செய்தொழிலினும் முக்கியமாகப் பாவிக்கப்படுகிறது. மூன்றும் அடியினிறுதியில் 'உண்டாம்' என்னும் வினை முற்று வருவிக்கப்பட்டது. அன்பு அருளையுண்டாக்கித் துறவறத்துக்கு மூலமாகவே, அதனாற் பெறப்படும் முத்திக்குங் காரணமாகும். அல்ல, நல்ல- பெயர்கள். (அக)

82.—(இ - ள்.) அன்பு இலார் - அன்பில்லாதவர், எல்லாம் தமக்கு உரியர் - (பிறர்க்குப்பயன்படாமையால்) எல்லாப்பொருளாலும் தமக்கே உரியராவர்; அன்பு உடையார் - அன்புள்ளவர், என்பும் பிறர்க்கு உரியர் - (அப்பொருள்களால் மாத்திரமேயன்றித் தம்)உடம்பாலும் பிறர்க்கு உரியவராவர்; (எ-று.)—[திருக்குறள் - அன்புடைமை - உ.]

'எல்லாம்', 'என்பு' என்றவற்றில் 'ஆல்' உருபுகளும், 'தமக்கு' என்றதில் பிரிநிலையேகாரமும் விகாரத்தால் தொக்கன. என்பு - அதனையுடைய உடம்புக்குச் சினையாகுபெயர். உம்மை - உயர்வு சிறப்போடு இறந்தது தழுவிய எச்சப்பொருளும் உடையது. அன்புடையார் உடம்பாலும் பிறர்க்கு உரியவராதலைச் சிபிசக்கரவர்த்திவரலாற்றாலும் அறிக; அவ்வரலாறு வருமாறு:— சூரிய குலத்திற் பிறந்த சிபியென்னுஞ் சக்கரவர்த்தி அரசாளுகையில், அவனது மேன்மைக்குணத்தைப் பரிசோதிக்கும்படி இந்திரன் பெரும் பருந்தாகவும் யமன் சிறுபுறாவாகவும் வடிவமெடுத்துப் புறாவைப் பருந்து துரத்திவர, அது சக்கரவர்த்தியைச் சரணமடைய, அரசன் அதற்கு அபயமளிக்க, பின்னே வந்த பருந்து 'என் இரையைக் கொடுத்து விடு' என்று கேட்க, மன்னவன் 'அடைக்கலம் புகுந்தவரை ஆதரியாது விடுதல் அதிபாதக மாதலால், இதையன்றி எதுகேட்டாலுங் கொடுப்பேன்' என்ன, பருந்து 'இந்தப்புறாவின் எடையளவு தசை உன் உடம்பில் அரிந்துகொடு' என்ன, வேந்தன் சம்மதித்து உடனே உடம்பிலுள்ள உறுப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றாக அறுத்துவைத்தும் எடைகுறைந்ததனால், தானே தராசுத்தட்டிலேறி எடையை நிறைக்க, உடனே அத்தேவர்கள் பிரத்யக்ஷமாகி மிகவியந்து, அவனது உடம்பு முன்போல நிறைவுறும்படி வரமளித்துப்போயின ரென்பது, கதை. (யமன் வேடனாகியும், இந்திரன் புறாவாகியும் வந்ததாகவுங் கதை கூறப்படுவதுண்டு.) தமது முதுகெலும்பை இந்திரனுக்கு வச்சிராயுதமாகக்கொடுத்த ததீசிமுனிவனும், தன்னுடன் பிறந்த கவசகுண்டலங்களை இந்திரனுக்குத்தானஞ்செய்த கர்ணனும் முதலியோரது வரலாறுகளும் இங்கு அறியத்தக்கன. (அஉ)

83.—(இ - ள்.) என்பு இலதனை - எலும்பில்லாத உடம்பை, வெயில் போல - வெயில் காய்ந்து அழித்தல்போல,—அன்பு இலதனை- அன்பில்லாத உயிரை, அறம் - தருமதேவதை, காயும் - மிகவருத்தும்; (எ-று.)—ஏ - தேற்றம். [திருக்குறள் - அன்புடைமை - எ.]

'என்பிலது' என்றதனால் உடம்பு என்பதும், 'அன்பிலது' என்றதனால் உயிர் என்பதும் பெறப்பட்டன. வேறுபாடில்லாமல் எங்கும் ஒருதன்மையதான வெயிலின்முன் என்பில்லாத உடம்பு தன்இயல்பாற் சென்றுகெடுவது போல, வேறுபாடில்லாமல் எங்கும் ஒருதன்மையதான அறத்தின்முன் அன்பில்லாத உயிர் தன்இயல்பாற் கெடு மென்பதாம். அதனை 'காயும்' என வெயிலறங்களின்மேல் ஏற்றினார், அவற்றிற்கும் அக்காய்தல்தன்மை உள்ளதனால். இவ்வாறு "அல்லவை செய்வார்க்கு அறங் கூற்றம்" எனப் பிறருங் கூறுதல் காண்க. என்பில்லாத உடம்பு - புழுவுடம்பு; 'என்பிலி' என்று புழுவுக்கு ஒருபெயர். ஏகாரம் - கருணையோடுகூடிய இரக்கத்தையுங் காட்டும். உவமையணி. அன்பில்லாதவுயிர்க்கு நல்வினை யில்லை யென்பது கருத்து.

வெயில் - வெம்மையுடைய தெனக் காரணப்பெயர்; வெம்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் முன்னின்றமெய்திரிந்த வெய் - பகுதி; இல் - பெயர்விகுதி. (அரு)

84.—(இ - ள்.) அகத்து - மனத்தில், அன்பு இல்லா - அன்பில்லாத, உயிர்—, வாழ்க்கை - (இல்லறத்தோடு கூடி) வாழ்தல்,—வன்பாற்கண் - கொடிய பாலைநிலத்தில், வற்றல் மரம் - உலர்ந்த மரம், தளிர்த்து அற்று - தளிர்த்தாற் போலும்; (எ-று.)—[கூடாது என்பதாம்.] [திருக்குறள் - அன்புடைமை - அ.]

நீரில்லாத பாலைநிலத்தில் பட்டுப்போன மரம் தளிர்த்தலில்லாமைபோல, அன்பில்லாத உயிர் விருந்தோம்பல் முதலிய இல்லறத்தோடு கூடி வாழ்தலும் இயலாது என்றபடி. பாற்கண், 'பால்' என்றதன்மேல் 'கண்' - ஏழனுருபு. 'வன்பார்க்கண்' என்றும் பாட முண்டு; பொருள் இதுவே; பார்-பூமி. வற்றல், அல் - கருத்தாப்பொருள்விகுதி; வற்றியுள்ளதாகிய மர மென இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக விரிக்க. வற்றுதலையுடைய மர மென இரண்டனுருபும் பயனு முடன்தொக்கதொகையாகக் கொள்ளின், வற்றல் - தொழிற்பெயராம். தளிர்த்தற்று - தளிர்த்தாலற்று: தளிர்த்து - எச்சத்திரிபு.

85.—(இ - ள்.) யாக்கையகத்து உறப்பு - உடம்பினுள்ளே (இருந்து) இல்லறத்துக்கு உறப்பாகிய, அன்பு - அன்பை, இலவர்க்கு- உடையரல்லாதவர்களுக்கு, புறத்து உறுப்பு எல்லாம் - (மற்றைப்) புறத்தின்கண்நின்று உறுப்பாவன எல்லாம், எவன் செய்யும் - (அவ்வறஞ்செய்தலில்) என்ன உதவியைச் செய்யும்? [யாதொன்றையுஞ் செய்யா என்றபடி]; (எ-று.)—[திருக்குறள் - அன்புடைமை - கூ.]

புறத்துறுப்பாவன - இடமும் பொருளும் ஏவல்செய்வோரும் முதலியன. அன்போடுகூடாதவிடத்து இடம்பொருளேவல் முதலியவற்றாற் பயனில்லாமையின், 'எவன்செய்யும்' என்றார். உறுப்பு - அங்கம், அவயவம்; அதுபோலுதலால், இடம்முதலியன, 'உறுப்பு' எனப்பட்டன. முதலடியில் 'உறுப்பு' - உவமவாகுபெயர். இனி, இப்பாட்டுக்கு - மனத்தில் உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பிற் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்னபயனைச் செய்யும்? என்று உரைப்பாரும் உளர்; அவ்வுரைக்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக.

எவன் - அஃறிணையிருபாற்கும் பொதுவாகிய வினாவினைப்பெயர். (அரு)

86.—(இ - ள்.) அன்பின் வழியது - அன்புமுதலாக அதன்வழிநின்ற உடம்பே, உயிர் நிலை - உயிர்நின்ற உடம்பாவது; அஃது இலார்க்கு - அந்த அன்புஇல்லாதவர்க்கு (உள்ளனவான), உடம்பு - உடம்புகள், என்பு தோல் போர்த்த - எலும்பைத் தோலாற் போர்த்த மாத்திரமாவனவாம் [உயிர்நின்றனவாகா என்றபடி]; (எ-று.)—[திருக்குறள் - அன்புடைமை - ௧௦.]

அன்பில்லாத உடம்பு இல்லறததுக்கு உதவாமையால் வீண்படும் என்பது கருத்து. பிராணிகளுக்கு அன்பு உயிர்போன்ற தென்பது, இதனாற் பெறப்படும். போர்த்த- அன்சாரியைபெறாத பலவின்பால் வினையாலணையும் பெயர்.

இவை நான்குபாட்டாலும், அன்பு இல்லாவிடின் உண்டாகுங் குற்றம் கூறப்பட்டது. (அசு)

கூ - ஆம் அதிகாரம்.—செய்ந்நன்றியறிதல்.

அதாவது - தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமல் என்றும் உள்ளத்திற் கொண்டிருத்தல். இது, வடமொழியில் 'கிருதஜ்ஞதை' எனப்படும். அன்புடையராய் இல்லறத்தை வழுவாது நடத்துபவர்க்குப் பெருந்

குற்றம் செய்ந்நன்றிமறத்தலே யாதலால், அதனைத் தடுத்தற்பொருட்டு இது அன்பென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது. செய்ந்நன்றி - வினைத்தொகை.

87.—(இ - ள்.) நோற்றிடு - (நீ) விரதங்களை யனுட்டித்துச்செய்த, தவத்தினை - தவத்தை, நோக்கி - பார்த்து, (அதற்குத் திருவுள்ளமுவந்து), எண் இலா பேற்றினை - அளவில்லாத பாக்கியங்களை, உதவிய- (உனக்குக்) கொடுத்தருளிய, பிரான் - தலைவனாகிய பரமசிவன், ஓர் தீமையால்- (நீ செய்த) ஒரு தீங்கு காரணமாக, மாற்றிட உன்னும் எல் - (உனது பாக்கியங்களை) இல்லையாக்கக் கருதுவானானால், வணங்கி மாறு ஒரீஇ போற்றுதல் அன்றியே - (நீ) கீழ்ப்படிந்து மாறுபாடு ஒழிந்து வணங்கி (அக்கடவுளைத்) துதித்த லல்லாமல், பொரவும் செய்யுமோ - எதிர்த்துப் போர்செய்தலும் தகுமோ? [தகாது என்றபடி]; (எ-று.)—[கந்தபுராணம் - யுத்தகாண்டம் - இரணியன்யுத்தப்படலம் - கூ; அடுத்தபாடலும், இதற்கு அடுத்த பாட்டாம்.]

முன்னர்ச் சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்து அப்பரமனருளாற் பல வரங்களைப் பெற்றுச் சிறப்புற்ற சூரபதுமனென்னும் அசுரராசன் பின்பு செருக்குக்கொண்டு தேவர்கள் முதலியோரை வருத்தியதனால், அத்தேவர்கள் வேண்டுகோளின்படி பரமசிவன் அவனையழித்தற்குச் சுப்பிரமணியமூர்த்தியை யுண்டாக்க, அக்குமாரசுவாமி சேனைகளோடுசென்று அவன்நகரத்தை முற்றுகைசெய்தபொழுது, அவனும் போருக்குச் சித்தனானவளவில், அவனது குமாரனான இரணியனென்பவன் அவனுக்கு நல்மதிகூறியவை, இவை. முன்பு உனக்குச் சிவபிரான்செய்த அளவிறந்த நன்மைகளை நீ மறந்து இப்பொழுது அவன்குமாரனுடன் போர்செய்யத்தொடங்குதல் தகுதியன்று என்பதாம். மேலும், "இன்னமொன்றுரைப்பன் நீமுன் இருந்தவ மியற்ற இந்த, மன்னிலைபுரிந்த மேலோன் மாற்றவும் வல்லனுமால், அன்னவன் குமரன்தன்னோடு அமர்செய்வது இயல்போ ஐய" என்பன். பொர என்னும் வினையெச்சம், தொழிற்பெயர்த்தன்மைப்பட்டது; உம்- இழிவுசிறப்பு. செய்யுமோ - செய்யப்படுமோ எனச் செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினையாகக் கொள்க. (அஎ)

88.—(இ - ள்.) ஒன்று ஒரு பயன்தனை உதவினோர் - (தமக்கு) யாதாயினும் ஒருபயனைச் செய்து உதவின நல்லோரது, மனம்—, கன்றிட - வருந்தும்படி, ஒரு வினை - (அவர்களுக்கு யாதாயினும்) ஒரு தீச்செயலை, கருதி செய்வர் ஏல் - (தாம்) நினைத்தலும் செய்தலும் புரிவாராயின்,—புன்தொழிலவர்க்கு முன் புரிந்த நன்றியே - அவ்விழிதொழிலையுடையவர்க்கு முன்பு (அந்நல்லோர்) செய்த உபகாரமே, கொன்றிடும் - (அத்தீயோரை) அழித்துவிடும்; அல்லது - அல்லாமல், கூற்றும் வேண்டுமோ - (அவர்களை அழித்தற்கு வேறு) யமனும் வேண்டுமோ? [வேண்டுவதில்லை யென்றபடி].

தமக்குப் பிறர்செய்த உதவியை மறந்து தாம் அவர்க்குத் தீங்குசெய்யுமவர் பிறர் அழிக்கவேண்டாமல் தமதுதீவினையால் தாமே அழிவர் என்பதாம். 'ஒன்றொரு' என்றது, ஒருசொல்விழுக்காடு. ஒப்பதொரு என்றும், பொருந்தியதொரு என்றும் கொள்ளுதலும் ஒன்று. 'கருதிச்செய்வரேல்' என்பதற்கு - மனத்தில் எண்ணிச் செய்வார்களாயின் என்றும் பொருள்கொள்ளலாம்; அபுத்திபூர்வமாகச் செய்தது கொடியதீவினையாகா தென்பது நூற்கொள்கை. (அஅ)

89.—(இ - ள்.) பயன் காரணத்தை குறியாமல் - பயனையுங் காரணத்தையும் கருதாமல், பரிந்து - அன்புகொண்டு, காலத்தால் செய்த - (ஏற்ற) காலத்தில் (ஒருவனுக்கு மற்றொருவன்) செய்த, நயம் சேர் நன்றி - இனிமை

பொருந்திய உபகாரம், சிறிதேனும் - சிறியதாயிருந்தாலும், நாடின் - ஆலோசிக்குமிடத்து, அதற்கு ஓர் அளவு இல்லை - அவ்வுதவியின்பெருமைக்கு ஒரு வரையறை யில்லையாம்; (அன்றியும்), பயன் காரணத்தை குறித்து - பயனையுங் காரணத்தையுங் கருதி, இனையும் பதத்தில் - (ஒருவன்) வருத்தமடையுங் காலத்தில், புரிந்த - (தனக்குப் பிறன்) செய்த, நன்றியையும் - உபகாரத்தையும், வியன் பூதலத்தின் பெரிது ஆக - பெரிய நிலவுலகத்தினும் பெரியதாக, விரும்பி மதித்தல் வேண்டும் - அன்போடுகருதவேண்டும்; (எ-று.)—ஆல்-ஈற்றசை. [விநாயகபுராணம்-உபாசனாகாண்டம் - அரசியற்கைப்படலம் - உ௬; (செய்ந்நன்றியறிதல்).அடுத்தபாடல், இதற்கு அடுத்ததாம்]. சோமகாந்தராசன் தன்மகன் ஏமகண்டனுக்கு அறநெறிகூறியவை.

“செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமு மாற்ற லரிது”, “காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது”, “பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின், நன்மை கடலிற் பெரிது”, “தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன் தெரிவார்” என்ற திருக்குறள்களின் கருத்தைக் கொண்டது, இப்பாடல்.

பயனைக்குறித்தல் - இவர்க்கு இவ்வுபகாரத்தை இப்பொழுது நாம் செய்தால் அதனால் நமக்கு இன்னபயன் உண்டாகுமென்று ஆராய்தல். காரணத்தைக் குறித்தல் - முன்பு தமக்கு அவராற் செய்யப்பட்ட உதவியை மனத்திற் கொண்டு அதற்குப் பிரதியுபகாரமாக நன்மைசெய்யக் கருதுதல். காலத்தாற் செய்தல் - ஒருவனுக்கு அபாயம் நேர்ந்தசமயத்திற் செய்தல். காலம் - இன்றியமையாதபொழுது. ‘உதவிநயன்’ என்றதற்கு-பரிமேலழகர் ‘உதவியாகிய ஈரமுடைமை’ என்று உரைத்தது, ‘நயஞ்சேர்நன்றி’ என்ற விடத்து அறியத்தக்கது. ‘சிறிதேனும் நாடின் அதற்கு ஓரளவில்லை’ என்பதனால், பொருளாற் சிறியதாயினும் காலத்தை நோக்க மிகப்பெரியதா மாதலால், காலம் நோக்குவதல்லது பொருள் நோக்கலாகாது என்றதாம். ‘காலத்தால்’ என்பதில் மூன்றனுருபு ஏழனுருபின் பொருளில் வந்ததனால்,உருபுமயக்கம். வியல்-விசாலமென்னும் பொருளுணர்த்தும் உரிச்சொல்; “வியலென் கிளவி யகலப் பொருட்டே” என்பது தொல்காப்பியம்; அது வியன் என ஈறுதிரிந்த தென்க. (இதனை “குறில் செறியா லள” என்ற சூத்திரத்து ‘பிற’ என்றதனாற் கொள்ளலாம்.) காரணம், காலம், பதம், பூதலம் - வடசொற்கள்.

பயன்காரணங்களைக் குறியாது செய்த உதவியின் சிறப்பை யுணர்த்துதற்கு, பயன்காரணத்தைக் குறித்துச் செய்த வுதவியின் பெருமையையும் உடன்கூறினார். நன்றியையும் என்ற உம்மை - இழிவுசிறப்போடு இறந்தது தழுவிய எச்சம். (அ௯)

90.—(இ - ள்.) நன்றி புரிந்தோர் - (தமக்குமுன் ஒருகால் ஒரு) நன்மையைச் செய்தவர், மற்று ஒரு கால் நவைகள் புரிந்தார் ஆயிடினும் - பின்பு ஒருகாலத்தில் தமக்குப் பலதீங்குகளைச் செய்தாரானாலும், உதவி ஒன்றுமே மதித்திட்டு - (அவர்செய்த) அவ்வுபகாரம் ஒன்றைமாத்திரமே மறவாது சிந்தித்து, நவையை மறந்து - (அவர்செய்த) தீங்குகளை மறந்து, அவரை - அவர்களை, ஓம்பா - பாதுகாத்து, என்றும் மறவாது இருந்திடுக - எப்பொழுதும் மறவாமலிருத்தல்வேண்டும்; இகப்பின் - இத்தன்மையொழிந்தால் [நன்றி மறந்தால்], கரு ஆன் மறையோரை கொன்று திரிவோர் பிழை சிறுக - கருப்பத்தையும் பசுவையும் பிராமணரையுங் கொன்று திரியுங் கொடும்பாவிகளது பாவங்களும் சிறியதாம்படி, குன்றம் எனவே பிழை பெருகும் - மலைபோலப் பாவம் வளரும்; (எ-று.)

“கொன்றன்ன வின்னா செயினும் அவர்செய்த, ஒன்று நன்று உள்ளக் கெடும்”, “நன்றிமறப்பது நன்றன்று நன்றல்லது, அன்றே மறப்பது நன்று”,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறள்களைத் தழுவியது, இச்செய்யுள். சிசுஹத்தி, கோஹத்தி, பிரமஹத்தி முதலிய மகாபாதகங்களினும் கொடியது செய்ந்நன்றி கொல்லுதல் என்பதாம். ஓம்பா - உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம்; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாக் கொள்ளின், ஓம்பாதவை - விரும்பத்தகாத தீங்குகளென்க. இசைப்பின் பெருகும் என இயையும். கரு - கர்ப்பம் என்னும் வடசொல்லின் திரிபு. கரு வான் மறையோர் எனப் பிரித்து, உற்பத்தி மேன்மையையுடைய அந்தணரென்றலும் ஒன்று. (கூo)

91.—(இ - ள்.) சிதைவு அகல் காதல் - கெடுதலில்லாத அன்பையுடைய, தாயை-தாயையும், தந்தையை - தந்தையையும், குருவை - குருவையும், தெய்வம் பதவி அந்தணரை - தெய்வத்தன்மையுடைய பிராமணர்களையும், ஆவை - பசுக்களையும், பாலரை - சிசுக்களையும், பாவைமாரை - மகளிரையும், வதை புரிகுநர்க்கும்-கொலைசெய்தவர்களுக்கும், மாற்றல் ஆம் ஆற்றல் - (அந்தப்பாவங்களைப்) பரிகரிக்கத்தக்க உபாயம், உண்டு - உளது; மாயா உதவி கொன்றார்க்கு - அழியாத உபகாரத்தை மறந்தவர்களுக்கு, ஒழிக்கல் ஆம் உபாயம் ஒன்றேனும் உண்டோ - (அப்பாவத்தை) ஒழிக்கும் வழி ஒன்றாயினும் உள்ளதோ? [இல்லை யென்றபடி]; (எ-று.)—[கம்பராமாயணம்-கிட்கிந்தாகாண்டம் - கிட்கிந்தைப்படலம்-கூஉ.]

மாத்ருஹத்தி, பிதிருஹத்தி, குருஹத்தி, பிரமஹத்தி, பசுஹத்தி, சிசுஹத்தி, ஸ்திரீஹத்தி என்னும் கொடும் பாதகங்களுக்கெல்லாம் அப்பாவம் நீங்கும் பரிகாரமாகிய பிராயச்சித்தம் உண்டு; செய்ந்நன்றி மறத்தலுக்கோ அது இல்லை யென்பதாம். இதனால், செய்ந்நன்றிகொல்லுதலின் கொடுமை கூறப்பட்டது. தெய்வப்பதவியந்தணர்-தெய்வம்போலக் கொண்டாடத் தக்க சிறப்புநிலைமையையுடையராகிய பிராமணர்; "கரிய மாலினுங் கண்ணுதலானினும், உரியதாமரைமே லுறைவானினும், விரியும் பூத மொரைந்தினும் மெய்யினும், பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்" என்றதுங் காண்க. தெய்வப்பதவி - சாபாநுக்கிரகசக்தியுமாம். பாவைமார் - சித்திரப்பதுமைபோல் அழகியவர். 'என்றேனும்' என்றும், 'எங்கேனும்' என்றும் பாட முண்டு. மாயாவுதவி-பயனழியாத உபகாரம்;மறக்கத்தகாத நன்றி. பதவி,வதம் என்னும் வடசொற்கள் திரிந்தன. பாலர் - வடசொல். புரிகுநர், கு - சாரியை: ந் - பெயரிடைநிலை. ஆம் - அசை.

இராமபிரான் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு அரசளித்தபின் கார்காலங்கழிந்தவுடனே வந்து சீதையை மீட்க வழிதேடுவதாக வாக்குதத்தஞ் செய்த சுக்கிரீவன் அக்காலங்கழிந்தபின்பும் வாராமைபற்றிக் கோபங் கொண்டு கிட்கிந்தாபட்டணத்தினுள் வருகிற இலக்குமணனைச் சமாதானப்படுத்தும்பொருட்டு அவனைநோக்கி அநுமான் சொன்னது, இது; அடுத்த பாடலும் இவ்வாறே. (கூக)

92.—(இ - ள்.) மத யானை அனைய ஐமைந்த - மதம்பிடித்த யானையையொத்த இளையவீரனே! உதவாமல் ஒருவன் செய்த உதவிக்கு கைம்மாறு ஆக- (தான் ஒருவனுக்கு)ஓர்உதவியுஞ்செய்யாமலிருக்கையில் தனக்கு அவன் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக,—சிதையாத செருவில் - கெடுதலில்லாத போரில், அன்னான் முன் சென்று - அவனுக்குமுன் (தான் துணையாகச்) சென்று, செறுநர் மார்பில் - (அவனது) பகைவரது மார்பிலே, உதையானேல் - உதைத்திடானாயினும்,—உதையுண்டு - (அப்பகைவரால் தான்) உதைபட்டு, ஆவி உலையானேல் - உயிரொழிந்திடானாயினும், உலகில் - உலகத்தில், மற்றும் உண்டாக வற்றோ - வேறுங் கைம்மாறு உள்ளதாகவல்ல

தோ? [இல்லை யென்றபடி]; (எ-று.)—மன், ஓ- ஈற்றசை. [கிஷ் கிந்தைப் படலம் - கூகூ.]

ஒருவன் செய்யாமற் செய்த உதவிக்குக் கைம்மாறு அவனுக்குமுன்னே அவனுக்காகத் தான் போர்க்களத்திற் சென்று பகையழித்தலும், அதுமுடியா விடின் அப்பகைவன்கையால் தான் உயிர்மாய்தலுமே யொழிய வேறு இல்லை என்பதாம். போரிற்புண்படுதற்கு ஏற்ற இலக்காதலால், மார்பு கூறப்பட்டது. மதயானை உவமை - கோபம் வலிமை மேன்மையானதோற்றம் பார்வை நடை என்னும் இவற்றிற்காம்.

உதவி - தொழிற்பெயர்; இ - விகுதி. வற்று - வன்மை யென்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; று - விகுதி. செறுநர் - பகைப்பவர், ந் - பெயரிடைநிலை. உதையுண்டு - உதைக்கப்பட்டு: உண்- செயப்பாட்டுவினைப்பொரு ளிடைநிலை. (கூ௨)

93.—(இ - ள்.) அரவம் மல்கிய பதாகையாய்-பாம்பின்வடிவம் பொருந்தின பெருங்கொடியையுடையவனே [துரியோதனா!] மதி அமைச்சர் ஆய் அரசு அழிப்பினும்- நல்லறிவுடைய [அல்லது அரசனுக்கு அறிவு உறுத்தற்கு உரிய] மந்திரிகளாயிருந்து அரசாட்சியை (வேண்டுமென்று) கெடுத்தாலும், குரவர் நல் உரை மறுப்பினும்- பெரியோர்களது நல்ல உபதேசமொழிகளை (க் கேட்டு ஒழுகாது) விலகிநடந்தாலும், பிறர் புரிந்த நன்றியது கொல்லினும் - அயலார் (தமக்குச்) செய்த உபகாரத்தை மறந்தாலும், ஒருவர் வாழ் மனையில் உண்டு பின்னும் அவருடன் அழன்று பொர உன்னினும் - ஒருத்தர்வசிக்கிற வீட்டிலே அவருணவைப் புசித்துப் பின்பு அவருடன் கோபித்துப் போர் செய்யக் கருதினாலும், இவர்களே - இந்த நான்கு அக்கிரமத்தொழில்களைச் செய்தவர்களே, இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும் நரகில் எய்துவார் - சூரியனுள்ளவரையிலும் சந்திரனுள்ளவரையிலும் நரகலோகத்திற் சேர்ந்து துன்பங்கள் அனுபவிப்பார்கள்; (எ-று.)—[வில்லிபுத்தூரார்பாரதம் - உத்தியோகபருவம் - கிருட்டிணன் தூதுசருக்கம் - ௧௦௧.]

பாண்டவர்க்காகத் தூதுசென்ற கண்ணபிரான் நேரிற்சென்று துரியோதனன்வீட்டில் இறங்காமல் விதுரனது திருமாளிகையில் தங்கி அங்குவிருந்துண்டு மறுநாள் துரியோதனனைச் சேர்கையில், அவன் 'நேற்று நீ என்வீட்டுக்கு வந்து உண்ணுதொழிந்தது என்ன?' என்றுகேட்க, அதற்குக் கண்ணன் கூறிய உத்தரம், இது. துரியோதனன்வீட்டில் தான் இறங்காமைக்கு ஏற்ற காரணங் கூறுதற்கு 'ஒருவர்வாழ்மனையிலுண்டு பின்னு மவருட னழன்று பொரவுன்னின்' என்றதுமாத்திரமே போதுமாயினும், மற்றை மூன்று கொடுவினைகளையும் முன்னே இனமாக உடனெடுத்துக்கூறினது, நீயும் சகுனி முதலிய உன்னைச்சேர்ந்தவர்களுமே இப்படிப்பட்ட பெரும்பாவங்களைச் செய்து பயில்பவர்; நான் அப்படிப்பட்டவனல்லன் என அவனுக்கு உறைக்கும்படி சுட்டிக்காட்டுதற்பொருட் டென்க. உன் அமைச்சர்கள் உனக்கு இதங் கூறாது உனது அரசை யழிப்பவ ரென்றும், நீ பீஷ்மர் துரோணர் கிருபர் விதுரர் முதலிய பெரியோரது உறுதிமொழிகளைக் கேளாது மறுப்பவனென்றும், சித்திரசேனன் உன்னைக்கட்டியது முதலிய காலங்களில் பாண்டவர் உனக்குச்செய்த உபகாரங்களை யெல்லாம் மறந்திட்டவன் நீ யென்றும், பீஷ்மர் முதலியவர் உன்கட்டளைப்படி நடப்பது உனதுவார்த்தை சரியென்கிற காரணத்தா லன்று சோற்றுக்கடன்கழிக்கவேண்டு மென்கிற கருத்தினாலே யென்றுங் குறிப்பாக உணர்த்தினபடியாம். குரவர் - தந்தை தாய் தமையன் குரு அரசன் என இவர்; ஐங்குரவ ரெனப்படுவர். நல் உரை - இம்மைமறுமைகளுக்கு நன்மையை விளக்கும் வார்த்தை, மறுக்கத்தக்க தீயவுரையை அவர்கூறா ரென்பது தோன்ற, 'குரவர் நல்லுரை' எனப்பட்டது.

'மறப்பினும்' என்பதற்கு - தடுத்துப்பேசினாலும் என்றும், 'பிறர்புரிந்த நன்றி யது கொல்லினும்' என்பதற்கு - ஒருவர் மற்றொருவர்க்குச் செய்யும் உபகாரத்தைக் கெடுத்தாலும் என்றும் பொருள்கொள்ளலாம். இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும் - உலகம் அழியுமளவும் என்றபடி. மற்றைத் தீவினைசெய்தவர் நரகமடைந்தாலும் அவர்களுக்கு அதினின்று மீளுதற்கு உரிய எல்லையொன்று உண்டு; இவர்களுக்கோ, அது இல்லை, நரகலோகமழிந்தாலுண்டு என்பதாம்.

அரவம், மதியம் என்றவற்றில், அம் - சாரியை. நன்றியது, அது - பகுதிப்பொருள்விகுதி. அமைச்சர் - அமாத்யர் என்னும் வடசொல்லின் சிதைவு; (அரசனுக்கு) அருகிலுள்ளவரென்று பொருள். அழன்று, அழல்-பகுதி. பதாகா, மதி, ரவி - வடசொற்கள். (கூ௩)

94.—(இ - ள்.) பெரியோர்—, ஒன்று உதவி செய்யினும் - (பிறர் தமக்கு) ஒருபகாரத்தைச் செய்திருந்தாலும், அ உதவி மறவாமல் - அந்த உபகாரத்தை மறந்திடாமல், பின்னை அவர் செய் பிழை பொறுத்திடுவர் - பின்பு அவர்கள் செய்த பலகுற்றங்களையும் பொறுத்திடுவார்கள்; முது கயவர் - முதிர்ந்த கீழ்மைக்குணத்தையுடையோர், நன்றி பல ஆக - (தமக்கு ஒருத்தர் செய்த) உபகாரங்கள் அநேகமாக இருக்கவும், ஒரு நவை புரிவர் எனும் - (அவர் பின்பு தமக்கு) ஒரு தீங்கு செய்வாராயினும், கன்றிடுவது அன்றி - (அவ்வபகாரத்துக்காக அவரைக்) கோபித்திடுவதல்லாமல், நினையார் - (அவ்வுபகாரங்களை) நினைத்திடார்; (எ-று.)—எ - தேற்றம். [வில்லிபுத்தூரார் பாரதம் - விராடபருவம் - வெளிப்பாட்டுச்சருக்கம் - கூ.]

பாண்டவர் அஜ்ஞாதவாசத்தினின்று வெளிப்பட்டபொழுது அருச்சுனன் உதிட்டிரனது நெற்றியிற் பதிந்த வடுவை நோக்கி 'இது எவ்வாறு நேர்ந்தது?' என்று கேட்க, 'விராடன் சினங்கொண்டு சூதாடுகருவியால் எறிந்ததனால் நேர்ந்தது' என்று திரௌபதி அதன்காரணத்தை யெடுத்துச்சொல்ல, அதுகேட்டவுடனே மிகக்கோபங்கொண்டு 'இப்பொழுதே இவ்வூரை எரித்து விராடனையுந் தலைதுணிப்பேன்' என்று வில்லெடுத்த அருச்சுனனுக்கும், வீமனுக்கும் தருமன் சமாதானங்கூறியது, இது.

கயவர் - கயமை யென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர்; 'கயமையாவது- குணங்கள்யாவும் இலராய கீழோரது தன்மை' என்பர் பரிமேலழகர். ()

95.— (இ - ள்.) இலங்கு- விளங்குகிற, அருவி-மலையருவிகளையுடைய, நல் - சிறந்த, நாட - பாண்டியநாட்டையுடைய அரசனே! தினை அனைத்தே ஆயினும் - தினையென்னுஞ் சிறியதானியத்தின் அளவேயானாலும், செய்த நன்று - (ஒருவர்) செய்த உபகாரத்தை, உண்டால்- (தாம்) அனுபவித்தால், (அதனை), சான்றோர் - பெரியோர், பனை அனைத்து ஆ - பனைமரத்தவ்வளவு பெரியதாக, உள்ளுவர் - நினைப்பார்கள்; என்றும் - எப்பொழுதும், பனை அனைத்து - பனைமரத்தவ்வளவு பெரிதான உபகாரத்தை, செயினும் - செய்தாலும், நன்று அறியார்மாட்டு- செய்ந்நன்றியறியாதவர்களிடத்தில், நன்று இல- அவ்வுபகாரங்கள் சிறப்பில்லாதனவாம்; (எ-று.)—[நாலடியார்-கீழ்மை -௪.]

தமக்குப் பிறர்செய்த சிறியஉபகாரமொன்றையும் பெரியதாக நினைப்பது சான்றோரியல்பு; பெரிய உபகாரங்கள் பலவற்றையும் ஒருபொருளாக நினையாமலிருப்பது கீழ்மக்களது தன்மை என்பதாம்; "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன் றெரிவார்" என்ற திருக்குறளையும், அதன் உரையில் பரிமேலழகர் 'தினை பனை என்பன-சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை' என்று கூறியதையும் அறிக. பனை என்பது - மரப்பெயராய், பெருமைகுறிக்கும்; அன்றி, ஓரளவுகருவிப் பெயரெனினும் அமையும்.

ஏ - தேற்றம். ஆயினும், உம் - இழிவுசிறப்பு; செயினும், உம் - உயர்வு சிறப்பு. 'உண்டால்' என்பதை உண்டு ஆல் எனப்பிரித்து, ஆல் என்பதை ஆயில் என்பதன் விகாரமெனக்கொண்டால், உள்ளதானால் என்று பொருள் படும். மாட்டு - ஏழனுருபு. உள்ளுவர், உ - சாரியை.

'இலங்கருவி நன்னாட' என்பது, ஆடூஉமுன்னிலை; நாலடியாரின் பாடல்கள் சமணமுனிவர்களாற் பாண்டியநாட்டில் இயற்றப்பட்டனவாதலால், அந்தநூலில் வருகிற ஆடூஉமுன்னிலைகளைப் பாண்டியராசனைக் குறித்தன என்னலாம். நாட்டுவளத்துக்கு இன்றியமையாததான நீர்வளச்சிறப்பின் அமைதியைக் கூறி விளித்தபடி. (௯௫)

96.—(இ - ள்.) தன்னை ஆக்கிய - (ஆவனசெய்து) தன்னை அபிவிருத்தியடைவித்த, தார் பொலி வேந்தனை - மாலைவிளங்கப்பெற்ற அரசனை, பின்னை வெளவின் - (ஒருவன்) பின்பு உயிர்கவர்வனாயின் [கொல்வானானால்], (தன்) - அவனது, (குலம்) - குலமும், பூ மகள் - செல்வமும், (இ மண்மிசை) - இந்த நிலவுலகத்தினின்றும், பிறழ்ந்திடும் - தவறிவிடும்; அன்னவன் வழி செல்லின் - (ஒருவன் தன்னைச் செழிப்பித்த அவ்வரசனைத் தழுவி) அவன்வழியிலே நடப்பனானால், பின்னை - பின்பு, தன் குலம் - அவனது குலத்தையும், (பூமகள்) - செல்வத்தையும், இமண்மிசை பேர்க்குநர் - இந்நிலவுலகத்தினின்று ஒழிக்க வல்லவர், இல்லை - (எவரும்) இல்லை; (எ-று.)—[சீவகசிந்தாமணி - நாமகளிலம்பகம் - ௨௧௯.] 'தங்குலம்' என்பதைத் தன்குலமுமெனத் திருத்துக.

செய்ந்நன்றிகொன்றால் குலமும் செல்வமும் கெடும்; செய்ந்நன்றிமறவாது கைம்மாறுசெய்து ஒழுகினால், குலமும் செல்வமும் என்றும் அழியா என்பதாம். சச்சந்தனென்னும் அரசனது மந்திரிகளுள் அவனது விசேஷ அபிமானத்தைப் பெற்ற கட்டியங்காரனென்பவன் தன்னிடம் அவ்வரசன் ஒப்பித்த இராச்சியத்தை நம்பிக்கைத்துரோகமாக அவனைக்கொன்று கவர்ந்து கொள்ளத் தொடங்கியபொழுது, தருமதத்தனென்னும் மந்திரி அவனுக்கு அறிவுகூறியது, இது; அடுத்தகவியும் இவ்வாறே.

'தார்' எனவே, அடையாளப்பூமாலையும், போர்ப்பூமாலையும் என இரண்டும் அடங்கும். 'தார்கெழுவேந்தன்' என்றும் பாடம்; பொருள் இதுவே. பூமகள் - செந்தாமரைமலரில் வாழுந் திருமகள். ஈற்று ஏகாரம் - தேற்றம். 'பூமகள்' என்பது - பின்வாக்கியத்திலும், 'இம்மண்மிசை', 'குலம்' என்பன - முன்வாக்கியத்திலும் எடுத்துக்கூட்டப்பட்டன. (…)

97.—(இ - ள்.) பிறை வளர - பிறையானது வளர்ந்துவர, குறு முய[ல்] - (அதனிடத்து உள்ள) சிறிய முயல், தானும் உடன் வளர்ந்து - தானும்கூடவே வளர்ந்துவந்து, பெருகி - (அப்பிறை பூர்ணமாகையில் தானும்) பெருத்து, பின் நாள் - பின்பு, குறை படு மதியம் தேய - கலைகுறைதல் பொருந்திய சந்திரமண்டலம் தேய்வடைய, அது தேய்வதே போல் - அம்முயலும் தேயும் விதம்போல, இறைவன் ஆ தன்னை ஆக்கியவன் வழி ஒழுகின் - (ஒருவன்) தன்னைத் தலைவனாக ஆக்கினவன்வழியிலே [அவனோடுமே பெருகி அவனோடுந் தேய்ந்து] நடப்பனானால், (அவ்வொழுக்கம்), என்றும் - எப்பொழுதும், நிறை மதி - (இருளை ஓட்டுகிற) கலைநிறைந்த பூர்ணசந்திரன்போல, இருளை போழும் - பழியை ஒழிக்கும்; நெடு புகழ் விளைக்கும் - மிக்க கீர்த்தியை உண்டாக்கும், என்றான் - என்று (தருமதத்தன் கட்டியங்காரனை நோக்கிச் சபையிற்) கூறினான்; (எ-று.)—[சீவகசிந்தாமணி - நாமகளிலம்பகம் - ௨௨௫.]

உவமையணி. அரசன்செழிக்கத் தாமும் செழித்துவாழ்தலும், அவன் மெலியத் தாமும் மெலிவுபடுதலும், அவனுக்கு அங்கமாகும் அமைச்சர் முதலி

யோர்க்கு நல்லிலக்கணம் என்பதாம். பிறை- கலைகுறைந்த சந்திரன். மதி- கலைநிறைந்த சந்திரன். செய்யுளாதலால், அது எனச் சுட்டுப்பெயர் முன் வந்தது. இனி, பிறையது என எடுத்து, அது என்பதைப் பகுதிப்பொருள்விகுதியாக் கொள்ளுதலும் ஒன்று. 'பின்னாள்' என்றது, பௌர்ணமிக்குப் பின்னை நாள்களாகிய கிருஷ்ணபக்ஷத்தை. சந்திரனிடத்து உள்ள களங்கத்தை முயலென்றல், கவிமரபு; மானென்றலும் உண்டு. நான்காமடியிலுள்ள மதி- உவமத்தொகை. பழியைக் கருநிறமுடைய தென்றல் கவிமரபாதலாலும், பழி ஒருவனது விளக்கத்தைக் கெடுத்தலாலும், 'இருள்' எனப்பட்டது. (கஎ)

98.—(இ - ள்.) நன்றி மறப்பது - (ஒருவன் தனக்கு முன்செய்த) நன்மையை மறந்திடுவது, நன்று அன்று - (ஒருவனுக்குத்) தருமமாகாது; நன்று அல்லது - (அவன்செய்த) தீமையை, அன்றே மறப்பது - செய்தபொழுதே மறந்திடுவது, நன்று - தருமமாம்; (எ - று.)—[திருக்குறள் - செய்ந்நன்றியறிதல் - அ.]

உபகாரம் அபகாரம் இரண்டும் ஒருவனாற் செய்யப்பட்டவிடத்து மறக்கத்தக்கதும் மறக்கத்தகாததும் இன்னின்னதென்று வகுத்துக் கூறியவாறு.()

99.—(இ - ள்.) கொன்று அன்ன இன்னா செயினும் - (தமக்கு முன்பு ஒருநன்மைசெய்தவர் பின்பு) கொன்றாலொத்ததீமைகளைச் செய்தாராயினும், (அவையெல்லாம்), அவர் செய்த நன்று ஒன்று உள்ள - அவர்செய்த நன்மையொன்றையும் நினைக்க, கெடும் - இல்லையாம்; (எ - று.)—[திருக்குறள் - செய்ந்நன்றியறிதல் - கூ.]

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன் தெரிவார்" என்றபடி சிறிய உபகாரம் பெரியதாகக் கொள்ளப்படுதலால், அவ்வுபகாரமொன்றுமே அவ்வபகாரங்களையெல்லாம் கெடுக்கும் என்பதாம்; இதனால், நன்றல்லது அன்றே மறத்தற்கு உபாயங் கூறப்பட்டது.

கொன்று - எச்சத்திரிபு. இன்னா - பலவின்பாற்பெயர். உள்ள - காரணப்பொருட் செயவெனெச்சம்; நினைத்தலால் என்க. (கூகூ)

100.—(இ - ள்.) எ நன்றி கொன்றார்க்கும் - எவ்வளவு பெரிய தருமங்களைக் கெடுத்தவர்க்கும், உய்வு உண்டு ஆம் - (அப்பாவத்தினின்று நீங்கும்) உபாயம் உள்ளதாம்; செய் நன்றி கொன்ற மகற்கு - ஒருவன் செய்த உபகாரத்தைக் கெடுத்தவனுக்கோ, உய்வு இல்லை - (அப்பாவத்தினின்று) நீங்கும் வழி இல்லை; (எ - று.)—[திருக்குறள் - செய்ந்நன்றியறிதல் - க0.]

இதனால், செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை கூறப்பட்டது. பெரிய அறங்களைக் கெடுத்தலாவது - ஆன்முலையறுத்தலும், மகளிர்கருச்சிதைத்தலும், பார்ப்பார்த்தப்புதலும் முதலிய மகாபாதகங்களைச் செய்தல். உய்வு - பிராயச்சித்தம்.

முதலடியிலுள்ள 'நன்றி' என்பது - நல்லதாகிய தருமத்தைக் குறித்தலால், பண்பாகுபெயர். உம் - இழிவுசிறப்பு. உய்வு - உய்யுமாற்றைக் குறித்தலால், தொழிலாகுபெயர்.

"ஆன்முலை யறுத்த அறனிலோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென, நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென, அறம் பாடிற்றே யாயிழை கணவ" என்றபுறநானூற்றுச்செய்யுளும் இக்கருத்துப்பற்றியதே. (க00)

இராமாயண வசனம்.

இது-ஏட்டுப்பிரதிகளில் பழமையாகஎழுதப்பட்டுத் தமிழில்வழங்கிவருவதொரு வசனநூல். இராமசரித்திரததை ஒழுங்காகக்கூறுவது. வடமொழி வால்மீகிராமாயணத்துக்கும் தமிழ்க்கம்பராமாயணத்துக்கும் பெரும்பாலும்ஒத்துச் சிறுபான்மை இடையிடையே வேறுபடுவது. அவ்விடங்களில் வேறுமுதநூல்கண்டதாதல்வேண்டும். இந்தப் பழைய வசனகாவியத்தைச் செய்தவர் இன்னாரென்று தெரியவில்லை. இதிலெடுத்தாளப்பட்டுள்ள 'இராமர்கொலுவிருக்கை' முதலிய நான்குபகுப்புக்கள், 1847 - ஆம் வருஷத்தில் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்ட இலக்கியசங்கிரக மென்ற செய்யுள்வசனத்திரட்டிலும் எடுத்தாளப்பட்டுள்ளன.

ராமாயணம் என்ற வடமொழிப்பெயர், ராம + அயந என்ற இரண்டுமொழி சேர்ந்தது;இது நூற்பெயராதலால், வடநூல்விதிப்படி, ராமாயணம் என நிலைமொழியில் ரகரம் வர வருமொழியில் நகரம் ணகரமாயிற்று. தனது நற்குணங்களாலும் நற்செய்கைகளாலும் யாவரையும் மனமகிழச்செய்பவன் என்பது, 'ராம' என்னுஞ் சொல்லுக்குப் பொருள். அயநம் - அடைய அல்லது அறியக் கருவியாயுள்ளது; ஆகவே, இராமனுடையவரலாற்றைத் தெரிவிக்கிற நூ லென்பது, திரண்டபொருள். இனி, அயநம் - ஸ்தாநம்; விஷயம் எனப் பொருள்கொண்டு, இராமனை விஷயமாகவுடைய நூ லெனக் கூறுதலும் ஒன்று. ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொட ரென்றுவது, அன்மொழித்தொகை யென்றுவது இலக்கணங் காண்க. இனி, ராமா அயநம் எனப் பிரித்து, சீதையை அறிவிக்கிற நூலென்றும் சிலர் பொருளுரைத்திருக்கின்றனர். இராமாயணம் என ரகரத்திற்குமுன் இகரம் வந்தது; "ரவ்விற் கம்முதலா முக்குறிலும்" என்ற விதியால்.

இந்நூல், முதலில் வடமொழியில் ஆதிகவியாகிய வால்மீகிமுனிவராற் செய்யப்பட்டது: இதனைத் தமிழில் கம்பரும் ஒட்டக்கூத்தரும் பாடியுள்ளார். இந்நூல் - பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என ஏழுபிரிவுள்ளது. அதில், முதலாறுகாண்டங்களும் கம்பராலும்,ஏழாவது காண்டம் ஒட்டக்கூத்தராலும் பாடப்பட்டுப் பிரசித்தமாய்வழங்குகின்றன.

இராமர் கொலுவிருக்கை.

இராமர் - தசரதசக்கரவர்த்தியின் மூத்த திருக்குமாரர் ; விஷ்ணுவின் ஏழாம்அவதாரம்.

கொலுவிருக்கை -சபையில் பலரும் தடையின்றி வந்து தம்மைக் காணும்படி சிறப்பாக அரசுவீற்றிருத்தல். இது, உத்தரகாண்டத் தொடக்கத்திற் சொல்லப்பட்ட விஷயம். இருக்கை - 'கை' விகுதி பெற்ற தொழிற்பெயர்.

சுவர்க்கம் - ஸ்வர்க்க மென்ற வடசொல்லின் திரிபு ; புண்ணியஞ்செய்தவர் சென்று இன்பமடையும் மேலுலகம் : இந்திரனது உலகம்.

அயோத்தியா என்ற வடசொல் - போர்செய்ய முடியாத தென்று பொருள்படும் ; எவராலும் எதிர்த்துப் பொருது வெல்லமாட்டாத கோட்டை மதில் அகழி சேனை முதலிய காவ லுள்ள தென்று கருத்து.

பட்டணம் - பத்தநம் என்ற வடசொல்லின் திரிபு.

விசித்திரம்-ஆச்சரியப்படத்தக்கது.

தேவேந்திரன் - தேவ + இந்திரன், தேவர்களுக்கு அரசன்.

இந்திரனுடைய சபை, சுதர்மையெனப் பெயர்பெறும்.

சிங்காரம் - ச்ருங்காரம் என்ற வடசொல்லின் திரிபு ; அழகிய காட்சி.

கொலுமண்டபம் - உல்லாசமாக வீற்றிருத்தற்கு உரிய மண்டபம்.

தயங்கியது - விளங்கிற்று.

நாப்பண் - நடுவில்.

ராவணன் என்ற வடமொழிப்பெயர் - கூச்சலிடுபவனென்றும், கூச்சலிடச்செய்பவனென்றும் பொருள்படும். சிவபிரானது கைலாசமலையைப் பெயர்க்கத்தொடங்கி அதன்கீழ்த் தன் கைகள் அகப்பட்டு நசுக்குண்டபோது பேரிரைச்சலிட்டதனாலும், தனதுகொடியசெய்கைகளால் உலகத்தைக் கதறச்செய்ததனாலும், இவனுக்கு இப்பெயர். இவன், பிரமபுத்திரரான புலஸ்தியப்பிரஜாபதியினது குமாரராகிய விச்சிரவசுமகாமுனிவர்க்குக் கேகசி யென்னும் ராக்ஷசஸ்திரீயினிடத்திற் பிறந்தவன்; (விச்சிரவமுனிவருக்குமூத்தமனைவியினிடம்பிறந்தவன் - குபேரன்.) இலங்காநகரத்தரசன்; திக்குவிசயஞ்செய்தவன்; இராமன் வனவாசஞ்செய்கையில், அவர் மனைவியான சீதையை யெடுத்துக் கொண்டுபோனவன்.

கும்பகர்ணன் என்ற வடமொழிப் பெயர் - குடம்போன்ற காதுள்ளவனென்று பொருள்படும். இவன், இராவணனது தம்பி.

சங்கரித்து=ஸம்ஹரித்து, அழித்து.

செயம்=ஜயம்: வடசொல் திரிபு.

ஸ்ரீ - சிறப்பையுணர்த்தும் வடமொழியடைமொழி.

சோதி - ஜ்யோதி: ஒளி.

மாணிக்கம் - நவரத்தினங்களுள் ஒன்று; செந்நிறமுள்ளது.

மகரகுண்டலம் - மகரமென்னுஞ் சுறுமீனின்வடிவந்தோன்ற வேலைசெய்யப்பட்டுள்ள ஒருவகைக்காதணி.

வாகுவலயம் - பாஹுவலயம்: வடமொழி; தோள்வளை.

வச்சிரகடகம் - வஜ்ர மென்னும் இரத்தினத்தாற் செய்த ஒருவகைக் கைவளை.

கங்கணம் - ஒருவகைக்கைவளை.

கொத்துச்சரப்பணி - பலமணிவடங்களை ஒருங்குசேர்த்து அமைத்ததோர் ஆபரணம்.

முத்துமாலை - முக்தாஹாரம்.

மோகனமாலை - ஓராபரணம், பார்ப்பவர்க்கு அழகுமிகுதியால் ஆசைப்பெருக்கையுண்டாக்குவதோர் ஆரம்.

பொற்பூணூல் - பூணூல்வடிவமாகப் பொன்னாற்செய்தது; பூணூல் - பூண்நூல்: பூணப்படுகிற நூல்; யஜ்ஞோபவீதம்.

அரைஞாண் - அரைநாண் என்பதன் போலி; இடையில்தரிக்கப்படுங் கயிறு. பட்டையரைஞாண் - அகலமாகச்செய்யப்படுவதோர் இடையணி.

வீரகண்டாமணி- வீரத்தன்மைக்கு அடையாளமாக அணியப்படுவதொரு மணிவடிவமான ஆபரணம்; இது, பெரும்பாலும் வலக்காலில் அணிவது.

திவ்வியஆபரணங்கள் - சிறந்த நகைகள்; தீர்க்கசந்தி.

சித்திரப்பூம்பட்டாடை - சித்திரவேலைசெய்யப்பட்ட மெல்லிய அழகிய பட்டுவஸ்திரம்.

உத்தரீயம் - மேலாடை. (உள் ஆடை, அந்தரீயமெனப்படும்.)

பீதாம்பரம் - பொற்பட்டாடை; பீத அம்பரம் எனப் பிரிந்து, மஞ்சள் நிறமான வஸ்திர மென்று பொருள் படும்.

சீதளகளபசந்தனகஸ்தூரி - குளிர்ந்த கலவைச்சந்தனமும் கஸ்தூரிப் புழுகும்.

சுகந்தபரிமளபுஷ்பமாலை - நல்ல வாசனைவீசுகிற பூமாலை.

ஸர்வாபரணாலங்கார - எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட.

அதிரூபசௌந்தரியவதி -மிக்க வடிவழகுடையவள்.

மகாலட்சுமி - சிறப்புடைய இலக்குமி. விஷ்ணு இராமனாகத் திருவவதரித்தபொழுது விஷ்ணுவின் மனைவியான இலக்குமி சீதையாகவும், விஷ்ணு கிருஷ்ணனாகத் திருவவதரித்தபொழுது இலக்குமி ருக்குமிணியாகவுந் தோன்றினளென்க.

சீதாதேவிசமேதர்-சீதையென்னும் மனைவியோடு கூடியவர். ஸீதா என்ற வடசொல்லுக்கு - கலப்பையுழுபடைச்சா லென்று முதலிற் பொருள்;

ஜநகமகாராசர் யாகஞ் செய்தற்குச் சாலையமைத்தற்பொருட்டு நிலத்தை யுழுதபொழுது அப்படைச்சாலினின்று தோன்றியவ ளாதலால், இவளுக்குச் சீதையென்றுபெயராயிற்று; இடவாகு பெயராகிய காரணக்குறி.

நவரத்தின சிங்காசனம் - ஒன்பது வகையிரத்தினங்களையும் பதித்துச்செய்யப்பட்ட சிம்மாசனம். சிங்காசனம்- சிங்கந்தாங்குவதுபோல அதன்வடிவந் தோன்றச் சித்திரித்துச்செய்யப்பட்ட பீடம். நவரத்திநம் - கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன.

மேவி - பொருந்தி.

வீற்றிருத்தல் - சிறப்பாக உட்காருதல்; வீறு - மிக்கசிறப்பு.

வசிஷ்டர் - பிரமபுத்திரர், தேவருஷி, சூரியகுலத்தரசர்க்குப்புரோகிதர். வசிஷ்ட ரென்ற சொல் - இந்திரியங்களை வென்றவ ரென்று காரணப் பொருள்படும்.

மகர்ஷிகள் - மகா + ருஷிகள்: சிறந்த முனிவர்.

காஸ்மீரம் = காச்மீரம்.

கேரளம் - மலையாளம்.

தேசாதிபத்தியம் - தேசங்களின் அரசாட்சியையுடைய.

மகுடவர்த்தனர் - கிரீடந் தரித்து அரசாளுபவர்.

பக்கம்—33.

பதினெண்வகை வாத்தியங்கள்:— வீணை, வேய்ங்குழல், மிருதங்கம், தாளம், கின்னரம், ஊதுகொம்பு, சின்னம், குடமுழா, தண்ணுமை, சங்கம், உடுக்கை, பம்பை, டமரு, எக்காளம், சல்லரி, முரசம், கோமுகம், படகம் என்பன; இவற்றிற்சிலநீக்கி வேறுசில சேர்த்து வெவ்வேறுவகையாக உரைப்பது முண்டு.

யக்ஷ கந்தருவர் - யக்ஷரும் கந்தருவரும்; இவர்கள், பதினெட்டுத்தேவ கணங்களிற் சேர்ந்தவர்.

தேவகானம் - தேவர்களுக்கு உரிய சங்கீதம்.

பரத மோகந நாட்டிய மாதர்கள் - பரதசாஸ்திரப்படி பார்ப்பவர் ஆசை மயக்கமடையுமாறுஅழகாகச்செய்யும் நாட்டியத்தையுடைய மகளிர்.

நாட்டியம், நடநம் - கூத்து.

சம்பிரமம் - சிறப்பு.

பட்டாபிஷேகம் - புண்ணியதீர்த்தத்தால் மங்களஸ்நாநஞ்செய்வித்து அரசாட்சிக்கு உரிய பட்டத்தை நெற்றியிற் கட்டப் பெறுதல்.

சொலு - உல்லாசம்.

காசிபர் - காச்யபர்; கச்யபரது புத்திரர்.

பகவாந் என்ற வடசொல் - நிறைந்த மகிமை, தைரியம், புகழ், சம்பத்து, ஞானம், வைராக்கியம் இந்த ஆறையும் உடையவனென்று பொருள்படும்; இந்த ஆறுக்கும் 'பகம்' என்று பெயர்.

ஆஸ்தாநமண்டபம் - அரசுவீற்றிருக்கும்மண்டபம்.

திருக் கோலம் - அழகிய காட்சி.

அபேக்ஷித்து - விரும்பி. (இதன் எதிர்மொழி - உபேக்ஷித்து.)

விளம்ப - சொல்ல.

உபசாரம் - மரியாதை (வார்த்தை); (எதிர்மொழி - அபசாரம்.)

அடுத்தமாத்திரத்தில் - நெருங்கிய வளவில்.

துணுக்குற்று - விரைந்து.

தீர்க்கதண்டன் - தடிவிழுதல்போல நீளச் சாஷ்டாங்கமாகத் தரையில் விழுதல்.

வந்தநஞ்செய்து - கைகூப்பித்தொழுது.

அநேகம் - ந + ஏகம்; ஏகம் - ஒன்று, அது அல்லாதது - அநேகம்: பல.

ஆசீர்வாதம் - வாழ்த்துக்கூறுதல்.

மகாயோகிகள் - சிறந்தயோகம் வல்லவர். யோகம் - சிலநியமங்களோடு செய்யுந் தவம்.

ஆச்சிரமம் - முனிவரிருப்பிடம்.

யாகசாலை - யாகஞ்செய்யுமிடம்.

வேதங்கள் - இருக்கு முதலியன; இவை, பலமதங்களுக்குப் பொது.

ஆகமம்-அந்தந்த மதத்துக்கு உரிய சிறப்புநூல்.

புராண இதிகாசங்களின் தன்மை, பாரதவுரையிற் கூறப்பட்டது.

புத்திரர் - பிள்ளைகள்; புத்+த்ரர் எனப் பிரியும்: தம்மைப்பெற்றோரைப் புத் என்னும் நரகத்தினின்று காப்பவரென்று பொருள்: புத் - பிள்ளையில்லாதவர் அடைவதோர் நரகம்.

வித்தியார்த்திகள் - கல்வியைவிரும்பிக்கற்கும் மாணாக்கர்.

நித்தியகர்மாநுஷ்டாநம் - நாள்தோறுந் தவறாமற் செய்யவேண்டிய வைதிகச்சடங்குகளை நடத்துதல்.

காலநியமம் - இன்னஇன்னகாலத்தில் இன்னஇன்னதொழிலைச் செய்துமுடிப்பதென்ற முறைமை.

பக்கம்—34.

அந்தரங்கவிநயபயபக்தி - மனப்பூர்வமான வணக்கமும், அச்சமும், பக்தியும்.

மாதுரியவசநம் - இனிமையான வார்த்தை.

சுக விருத்தி - க்ஷேம வரலாறு; விருத்தி - வளர்ச்சியுமாம்.

மதுரவசந அமிருத பாநம் - இனிய சொல்லாகிய அமிருதத்தைக் குடித்தல்; அமிருதம்போலினிய சொல்லைக் கேட்டல்.

ராகவர் - ரகு வென்னும் பிரசித்திபெற்ற அரசனது குலத்திற் பிறந்தவர்; தத்திதாந்தநாமம்.

நசித்தல் - அழிதல்.

கண்டகர் - முள்ளைப்போன்றவர்; கொடியவர்.

விராதன்என்னும் வடசொல்லுக்கு-மிகுதியாய் அபராதஞ் செய்பவனென்று பொருள்; இவன், முன்னே தும்புரு வென்னும் பெயருள்ள கந்தருவனாயிருந்து குபேரனது சாபத்தால் பின்பு ராக்ஷசனாகி வனத்தில் திரிந்து வந்தவன்; இராமலக்ஷ்மணர் சீதையுடன் தண்டகாரணியத்திற் செல்லுகையில் இவ்வரக்கன் வந்து சாநகியைத் தூக்கிக்கொள்ளக் கண்டு இராமலக்ஷ்மணர் எதிர்க்க, இவன் அவளைவிட்டு அவர்களைத் தூக்கிக்கொண்டு செல்ல, இராகவவீரர் இவனைத்தோள்களைவெட்டிக் கொல்லும்பொழுது இவன் தனதுபிறப்பையுணர்த்தி வேண்டியபடி பள்ளந்தோண்டி இவனுடம்பைப் புதைத்துச் சென்றனர்.

கவந்தன் - தநு என்னும் யக்ஷனது மகன்; ஸ்தூலசிரஸ் என்னும் முனிவர் சாபத்தால் அரக்கனாய்ப் பிரமனருளால் தீர்க்காயுசுபெற்றுத் தேவேந்திரனோடெதிர்த்து அவனதுவச்சிராயுதத்தாற் புடைபட்டுத் தனதுதலை வயிற்றில் அழுந்தியதனால் கபந்தனென்று பெயர் பெற்றான். கபந்தம் என்பதற்கு - தலையில்லாத உடம்பென்று பொருள். இவன், தண்டகாரணியத்தில் ஓர்பக்கத்திலிருந்து,தனதுநீண்ட கைகளிரண்டையும் எட்டினமட்டில் பரப்பித் துழாவி அகப்பட்ட சீவராசிகளையெல்லாம் வாரி வாய்ப்பெய்து விழுங்கிக்கொண்டிருக்க, அங்குச் சென்று இவன்தோள்களினிடையேஅகப்பட்டுக்கொண்ட இராமலக்ஷ்மணர் அத்தோள்களை வாள்களால் வெட்டினவளவில், முன்னையசாபமும் முற்பிறப்பின்தீவினையுந் தீர்ந்து ராக்ஷசசரீரத்தைவிட்டுத் தேவசரீரம்பெற்றுப் பெருமானைப் பலவாறு பிரார்த்தித்து நற்கதிபெற்றான்.

கரன்என்ற பெயர் - கொடியவனென்று பொருள்படும்; இவன், இராவணனுக்குஉடன்பிறந்தமுறையாகுபவன்; தண்டகாரணியத்தில் ஜநஸ்தாநத்தில் வசிக்கும்படி அனுப்பப்பட்ட தன்தங்கையான சூர்ப்பணகைக்குப் பாதுகாவலாக இராவணனால் உடனனுப்பப்பட்டவன்; ராக்ஷசசேனாதிபதி; தன்னை விவாகஞ்செய்துகொள்ளும்படிஇராமலக்ஷ்மணரை நிர்ப்பந்தித்த விதவையான சூர்ப்பணகையை அவர்கள் அங்கபங்கப்படுத்தி வெருட்டித் துரத்தியதையறிந்துபெருங்கோபங்கொண்டு கரன் தூஷணன் திரிசிரசு என்னும் இராக்கதத் தலைவர்களும், பதினாலாயிரம் ரதாதிபதிகளும் சேனைகளோடு வந்து எதிர்க்க, லக்ஷ்மணனைச் சீதைக்குக்காவலாகவைத்துவிட்டுஇராமன் தனியாய் நின்று பலஅம்புதொடுத்துப் போர்செய்து அளவில்லாத அரக்கர்சேனைகளையும், சேனாதிபதிகளையும்,கரன்

முதலிய தலைவர் மூவரையும் கொன்றி ட்டனன் என்பதாம்.

கும்பன் முதலியோர் - பிரதான ராக்ஷசவீரர்.

அகம்பன்=அகம்பநன் : (போரிற்) சலியாதவன்.

மகோதரன் - பெரு வயி றுடைய வன்; மகா+உதரன்.

மகாபார்ச்வன் - பருத்த விலாப்பக் கங்களையுடையவன்.

தூம்ராக்ஷன் - புகைநிறக் கண்ணு டையவன்; தூம்ர+அக்ஷ.

விரூபாக்ஷன் - விகாரமான கண் ணுள்ளவன்; இராவணன்மந்திரி.

சோணிதாக்ஷன் - குருதிக் கண் ணன், இரத்தவர்ணமானகண்ணுள்ள வன்: ச்ரோணிதம்- இரத்தம், அக்ஷம்- கண்.

மகராக்ஷன் - சுறாமீன் போன்ற கண்ணுடையவன்; கரன்பிள்ளை.

அதிகாயன் - பெரிய உடம்புடை யவன்.

பிரகஸ்தன் - பெரியகையுடைய வன்; இராவணனது பிரதானமந்திரி.

தேவாந்தகன் - தேவர்களுக்கு யமன் போன்றவன்; அவர்களைக் கொ ல்பவன். அந்தகன் - யமன்; அந்தத் தைச் செய்பவன்.

நராந்தகன் - மனிதர்களுக்கு யமன் போன்றவன்.

சேனாதிபதிகள் - சேனைத் தலைவர் கள்; ஸேநா+அதிபதி.

மூலபலம் - தொன்றுதொட்டுப்பர ம்பரையாகவந்த சேனை; இது, மற் றைச் சேனைகளினும் அரசனிடத்து மிக்கஅன்பும் பகைவருடன் ஊக்கத் தோடு பொருதலும் உடையது. இரா வணன் தனதுசேனைகள்பலவும் அழி ந்தபின் மூலபலத்தைச் செலுத்த, அத னையும் இராமன் எளிதில்அழித்தனன்.

தசக்கிரீவன் - பத்துக்கழுத் துடை யவன்; இராவணன்.

சின்னபின்னம்=சிந்நபிந்நம், பல கண்டதுண்டம்.

மடிந்து - அழிந்து.

குவை - குவியல்.

ராசி - கூட்டம்.

சாமரம் - சமரமென்னும் மானின் வெள்ளைமயிராற் செய்யப்பட்டதோர் இராசசின்னம்; தந்திதாந்தநாமம்.

மயிற்பிச்சம் - மயிற்றோகையாற் செய்யப்பட்டதொருவகையலங்காரத் தூக்கு; பிச்சம் - பிஞ்ச மென்னும் வட சொல்லின் திரிபு.

ஆலவட்டம் - பெருவிசிறி.

தண்டம் - கதை.

முசலம் - உலக்கை.

சூலம் - முத்தலைவேல்.

எழு - வளைதடி.

அஸ்திரம் - கைவிடுபடை, சஸ்தி ரம் - கைவிடாப்படை. அஸ்திரம் - மந்திரத்தோடு உபயோகிக்கிற ஆயு தம், சஸ்திரம் - மந்திரமின்றி உப யோகிக்கிற ஆயுதம்.

பிரவாகம் - வெள்ளம்.

நிணம் - கொழுப்பில் சாரமானது.

தசை - சதை; எழுத்துநிலைமாறு தல், இலக்கணப்போலி.

ஆர்ப்பரிக்க - பெருஞ்சத்தஞ் செ ய்ய.

பிரேதம் - பிணத்துக்குஉரிய தே வதை.

மண்டை - தலையோடு.

கலம் - பாத்திரம்.

பகுந்திட்டு - பங்கிட்டுக்கொண்டு.

தேக்கிடுதல் - வயிறுநிறைந்துஏப்ப மிடுதல்.

கொக்கரித்தல் - கர்ச்சித்தல்.

விசய லக்ஷுமி - சயத்துக்கு உரிய பெண்தெய்வம்.

உக்கிராசம் - உக்கிரமென்றபொ ருளில் பிரயோகிக்கப்பட்டது.

அட்டகாசம் - பெருஞ்சிரிப்பு.

விசயகோதண்டம் - மிக்கவெற்றி யைப் பெறவல்ல வில்: கோதண்ட மென்றுஇராமன்வில்லு நப்பெயர்.

நாணேறிட்டு - நாணேற்றி.

குணத்தொனி முழக்கி - நாணியின் ஒலியை மிகுதியாகஉண்டாக்கி; நாணி யைக் கைவிரலால் தெறித்து ஆரவார முண்டாம்படி செய்து.

சக்கிரஆகாரமாக - வட்டவடிவமாக என்க.

வாங்கி - வளைத்து.

அர்த்தசந்திர பாணம் - பாதிச்சந்திரன்போல வடிவமமைந்த பாணம்.

வச்சிர சூசிகா பாணம் - வச்சிராயுதம்போலக்கூர்மையமைந்த பாணம்; வயிரவூசிபோன்ற பாணமுமாம்.

அக்கினிபாணம் - நெருப்பைக்கக்குகிற அம்பு.

புங்காநுபுங்கமாக - ஒன்றையடுத்து ஒன்றாக.

சரவர்ஷம் - அம்புமழை.

பக்கம்—35.

கண்டதுண்டம் - பலவகைத்துண்டுகள்.

சித்திரவதைசெய்தல் - பலவகையாக வருத்திக் கொல்லுதல்.

நிர்ப்பயமாக - பயமில்லாமல்.

வாகைமாலை - வாகை யென்னும் மரத்தின் மலர்களாலாகியமாலை; இது, வெற்றிக்கு அடையாளமாகத் தரிக்கப்படுவது.

போர்க்குச்செல்லும்பொழுது வஞ்சிமாலையையும், போர்செய்யும் பொழுது தும்பைமாலையையும், போரில் வென்றபொழுது வாகைமாலையையும் தரித்தல் இயல்பு.

விசயகோதண்டபாணி - மிக்கவெற்றியைத்தருகிற கோதண்டமென்னும் வில்லை யேந்திய கையையுடையவர்.

தேவரீர் - தேவர்போலச் சிறந்தநீர்; முன்னிலையுபசாரப்பெயர்.

மகாதபோமகிமை - மிக்கதவப்பெருமை.

திரிலோகாதிபதிகள் - மூவுலகத்துத்தலைவர்கள்.

மாயோபாயம் - மாயா + உபாயம்: மாயையோடுகூடிய தந்திரம்; குணசந்திபெற்ற வடமொழித்தொடர்.

பராக்கிரமம் - பர + ஆக்கிரமம்: பகைவரை வெல்லுந் திறம்.

சௌரியம் - சூரத்தனம்.

மதோந்மத்தன் - கொழுப்பினாற் களித்தவன்.

துவாதசாதித்தியர் - பன்னிரண்டு சூரியர்; தாதா, சக்கரன், அரியமா, மித்ரன், வருணன், அம்சுமான், இரணியன், பகவான், விவச்சுவான், பூஷா, சவிதா, துவஷ்டா என்பவர்; இவர், சித்திரை முதலாக முறையே பன்னிரண்டுமாதங்களுக்கு உரியவர்.

ஏகாதசருத்திரர் - பதினொருருத்திரர்; மகாதேவன், அரன், ருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோத்பவன், கபாலி, சௌமியன் என்பவர்.

அஷ்டவசுக்கள் - எட்டுவசுக்கள்; அத்வரன், அநலன், அநிலன், ஆபன், சோமன், துருவன், பிரத்யூஷன், பிரபாசன் என இவர்.

மருத்துவர் இருவர் - அசுவிநீதேவர் இரண்டுபேர்; இவர் இரட்டையராகிய தேவவைத்தியர்; மருத்துவர் என்பது - மருந்து அர் எனப் பகுதி விகுதிகளாகப் பிரிந்து, மருந்துகொடுப்பவரென்ற காரணத்தால் வைத்தியரைக் குறிக்கும்; நிலைமொழிமென்றொடர் வன்றொடராயிற்று.

கணம் - கூட்டம்.

மாயாபாசம் - மாயையோடு சம்பந்தப்பட்ட கயிறு.

இந்திரஜித் - இந்திரனைச் சயித்தவன்; இது, ராவணன்மகனான மேகநாதனுக்கு இந்திரனைச் சிறைமீட்க வந்த பிரமன் அளித்த பெயர்.

லக்ஷ்மணர் - உத்தமபுருஷலக்ஷணங்கள்பலவற்றையும் உடையவரென்றும், (பகவத்கைங்கரிய) லக்ஷ்மியோடு கூடியவரென்றும் பொருள்படும்; இராமன் தம்பி.

அரசியற்றுமுறைமை.

அரசுஇயற்றுமுறைமை - அரசாட்சியை நடத்தும் விதம்.

உயிர்த்துணைவன் - உயிரோடொத்த தம்பி.

இராசரீகம் - அரசாட்சி.

கோபசித்தன் - கோபமுள்ள மனமுடையவன்.

க்ரூரதண்டம் - கொடியதண்டனை.

இறை - வரிப்பொருள்.

கொடுங்கோல் - நீதிதவறிய அரசாட்சி: கோணலான கோல் போல்வதென்று உவமவாகுபெயர்; இதன்எதிர்மொழி - செங்கோல்: கோல் - தண்டம்.

சன்மார்க்கர் - நல்லவழியில் நடப்பவர்.

துர்மார்க்கம் - கெட்டவழி.

மூர்க்கர்-விடாப்பிடியுடைய தீயோர்.

திரவியமூல்யத்திலே - பொருள் மூலமாக.

விவாதம் - சச்சரவு.

வ்யவகாரம் - வழக்கு.

பக்கம்—36.

நட்பு - சிநேகம்; நள் என்ற பகுதியின் தொழிற்பெயர்: பு - விகுதி.

குரோதம் - கோபம்.

கொடுங்கோல்மன்னவனை உறில்-நீதிதவறிய ஆளுகையையுடைய அரசனைப் பொருந்தினால்.

அபகீர்த்தி - பழிப்பு; கீர்த்திக்கு எதிரானது.

மறுமை - இறந்தபின்வரும் நிலை.

யமதருமராசன் - யமனாகிய தருமத்தை நடத்தும் அரசன்; யமன் - (பிராணிகளைத்) தண்டிப்பவன்; பாவிகளைத்தண்டிப்பதில் பக்ஷபாதமில்லாமலிருத்தலால், யமன் 'தருமராசன்' எனப்பட்டான்.

கரையேற்றம் - கரையேறுதல்; மீளுதல்.

நரகவாசம் - நரகத்தில் வசித்தல்.

பாத்தியன் - உரிமையுள்ளவன்.

கஜ ரத துரக பதாதி - யானை தேர் குதிரை காலாள்; அஃறிணையும்மைத்தொகை யாதலால், பன்மைவிகுதி பெறவேண்டுமென்னும் நியதி யில்லை; [நன் - பொது - உக.]

சதுரங்கசேனைப்பெருக்கம் - நால்வகையுறுப்புக்களையுடைய சேனைகளின் மிகுதி.

தயாளம் - தயையையுடைமை.

வறுமையாளர் - ஏழைமையுடையவர்.

தரித்திரதுன்பம் - நிலைமொழி வடமொழி யாதலின், வலியியல்பு: [நன் - மெய் - ௬௬.]

கொடை - ஈகை; தானம்.

பிரகாரம் - விதம்.

பார்க்கன் - இப்பெயர் வடமொழி உத்தரராமாயணத்திலும், ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டத்திலும், பாகவதத்திலும் நிருகன் என்று காணப்படுகிறது.

அன்னதானம் - உணவளித்தல்.

ஷோடசமாதானங்கள் - பதினறுவகைச் சிறந்தகொடைகள்; அன்னம், பூமி, கன்னிகை, பசு, ருஷபம், பொன், வெள்ளி, ஆடை, படுக்கை, வாகனம், தீபம், எள், தானியம், வீடு, வித்தை, அபயம் என்பவற்றைஅளித்தல்; வேறுவகையாகவுங் கூறுவர்.

வேதோத்தமர் - வேதங்களையறிந்ததனால் மிகமேலானவர்; அன்றி, வேதங்களில் மிகச்சிறந்தவரென்று கூறப்பட்டவர்.

கிரகம் = கிருகம்- வீடு. (கிரகம் - சூரியன்முதலிய நவக்கிரகங்கள்.)

பக்கம்—37.

ஆஸ்தானவாயில் - அரண்மனைவாசல்: வாயில் - இல்வாய் என்பது முன்பின்னாக மாறிய இலக்கணப்போலி; இருப்பிடத்தின் முன்னிடமென்று பொருள். இது, வாசல் என்று மருவி வழங்கும்.

சலித்து - கலங்கி.

ஒந்தி - ஓணன்.

பாழ்ங்கிணறு - பாழாகிய கிணறு என விரியும்; "யரழமுன்னர்" என்ற சூத்திரத்து 'மேல்' என்ற மிகையால், அல்வழியிலும் ழகரத்தின்முன் வலிவர இனமெலி மிக்கது.

தூங்கி - தொங்கி.

ஓகோ - கழிவிரக்கப் பொருளில் வந்த இடைச்சொல்.

துவாபரயுகாந்தம் - துவாபரயுகத்தின் முடிவு.

அவதாரம் - மேன்மையான பிறப்பு.

விஷ்டுணு = விஷ்ணு.

கிருஷ்ணன் - விஷ்ணுவின் ஒன்பதாம் அவதாரம்.

கிருபாகடாக்ஷவீக்ஷணம்-அருளொடுகூடிய கடைக்கண்பார்வை.

நிவர்த்தி = நிவ்ருத்தி - நீங்குதல்.

இப்படிபிராமணனுக்குக் கொடுத்த பொருளை மீண்டுந் தனதாக்கிக்கொண்ட பாவத்தாற்சாபம்பெற்ற அரசன் இறந்தபின், யமன் அவனைநோக்கி 'நீசெ

ய்த புண்ணியம் பெரியதும் பாவம் சிறியதுமாம்; இவற்றில் எதன்பயனை முன்னே யனுபவிக்க விருப்பம்?' என்று கேட்க, இவன் 'பாவப்பயனை முன்பு அனுபவிப்பேன்' என்று சொல்லி அப்படியே ஓணாய் விழுந்து வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தனன்; பின்பு கிருஷ்ணன் பாணாசுரனை வென்று அநிருத்தனுக்கு மணம்முடித்து மீண்டுவருகையில், கிருஷ்ணபுத்திரர் அவ்வழியிடையிலுள்ள காட்டில் ஓர்கிணற்றில் இருந்த ஓணானைக் கண்டு எடுத்துக் கரைமேல்விடத்தொடங்கி எடுக்கமாட்டாமையால் கண்ணனிடம் செய்திகூற, அப்பெருமான் சென்று அதனை எடுத்தமாத்திரத்தில் சாபவடிவம் நீங்கி நல்வடிவம் பெற்றுப் புண்ணியப்பயனை யனுபவிக்கச்சென்றனன் என அறிக.

அனுக்கிரகித்து - அருள்செய்து.

உத்தமமான = உத்தமனான.

பக்கம்—38.

அற்புதம் - அத்புதம்: வடசொல் திரிபு; ஆச்சரியம்.

உற்பவித்த - பிறந்த; உத்பவமென்னும் வடமொழிப்பெயரி னடியாகப் பிறந்த வினை.

சக்கரவர்த்தி - ஆஜ்ஞாசக்கரத்தை உலகமெங்குஞ் செலுத்தி அரசாளுபவன்.

நிமியென்பவன் - சூரியனது புத்திரனாகிய மனுவினுடைய குமாரனான இக்ஷ்வாகுவுக்குப் பன்னிரண்டாந் தலைமுறையான்.

மனுநீதி - மனுதருமசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட நியாயம்.

மன் உயிர் - உலகத்தில் நிலைபெற்ற பிராணிகள்.

இராச்சியபரிபாலனம் - அரசாளுதல்.

இகப்பிரயோசனங்கள் - இம்மையிலனுபவிக்கும் பயன்கள்.

பரப்பிரயோசனம் - மறுமையிலனுபவிக்குஞ் சிறந்தபயன்.

மோக்ஷபதம் - முக்திநிலை; மோக்ஷம் - கர்மம்விடப்பெறுதல்.

மகாவனம் - பெருங்காடு.

க்ஷத்திரயாகம் - க்ஷத்திரியர் செய்தற்குரிய யாகமெனப் பொருள்படும்; வடமொழி தென்மொழி ராமாயணங்களிலும், மற்றைநூல்களிலும் 'திர்க்கஸத்ரம்'என்னும் யாகமென்று பெயர்கூறப்பட்டுள்ளது.

அங்கிரா - அங்கிரஸ் என்னும் முனிவர்.

வரித்தல் - ஏற்படுத்திவைத்தல்.

ருஷி - முனிவன்.

முன்னிலையாக - புரோகிதராய் முன்னின்று நடத்த.

பொருட்டு - பொருள்; இதில், டு - பகுதிப்பொருள் விகுதி யென்னவேண்டும்.

பிரதி - ஈடு, மாறு.

அதிதீவிரம் - வெகுவிரைவு.

பக்கம்—39.

சிலாக்கியம் - கொண்டாடத்தக்க தன்மை.

தபோமகிமை - தவப்பெருமை.

ஜாநமரணம் - பிறப்பு இறப்பு.

சிருஷ்டிபேதம் - படைப்புவகை.

ஊர்வசியென்னுந்தேவமகளை ஒருங்கே கண்டுகாதல்கொண்ட மித்ரன் வருணன் என்னும் இருவர்க்கும் பிறந்த மகனாய் மீண்டுந்தோன்றினர் வசிஷ்டரென அறிக.

இந்தவரலாறுகளை இராமன் லக்ஷ்மணனுக்குச் சொன்னது, சீதையை இரண்டாமமுறை காட்டுக்கு அனுப்பியபின் நிகழ்ந்ததாம்.

இராமராவணயுத்தம்

இராமராவணயுத்தம் - ராமன் ராவணன் என்பவர்களது போர்; மூன்றுசொற்கள்தொடர்ந்த இரண்டுசந்தியில், முன்னது - உம்மைத்தொகையும், பின்னது - ஆறும்வேற்றுமைத்தொகையுமாம்.

மந்திரம் - ஆலோசனை; அதனையுடையவன் மந்த்ரீ என வடமொழிக் காரணப்பெயர்.

போர்க்கோலம் - யுத்தத்துக்கு உரிய அலங்காரம்; கவசந்தரித்தல், ஆயுதமேந்தல் முதலியன.

சுக்கிரீவன் - வாநரராசன்; இராம னது உயிர்நண்பன்; சு - அழகிய, கிரீவன் - கழுத்துடையவனென்று காரணப்பொருள்.

பேரணிப்படை - பெரிய மத்திய சேனை.

சுஷேணன் - ஒருவாநரவீரன்.

அங்கதன் - வாலிபுத்திரன்; இந்திரனம்சத்தாற் பிறந்தவன்.

முன்உற - முன்னுக.

பக்கம்—40.

உருத்திராஸ்திரம் - ருத்திரனைத் தெய்வமாகவுடைய அஸ்திரம்.

திவ்வியாஸ்திரம் - தேவரைத் தலைவராகவுடைய அஸ்திரம்.

ஆசுராஸ்திரம் - அசுரரைத் தலைவராகவுடைய அஸ்திரம்.

மகாகுரூரம் - மிக்ககொடுமை.

முனைந்து - யுத்தாவேசங்கொண்டு

நரசிரக்கொடி - மனிதனது தலையின் வடிவத்தை யெழுதிய துவசம்.

சாரதி - தேர்ப்பாகன்.

விபீஷணன் - இராவணனது இறுதித்தம்பி; மிக்க நற்குணமுடையான். வலியக்கவர்ந்துவந்த சீதையை விட்டுவிடும்படி பலவாறு நல்லறிவுகூறியும் இராவணன் கேளாமையால், விபீஷணன் அவனைத்துறந்து இராமபிரானைச் சரணமடைந்து இராவணவதத்தின் பொருட்டு இராமனுக்குத் துணையானன். விபீஷணன் என்ற சொல் - பகைவர்க்குப் பலவாறு பயங்கரனுகவுள்ளவனென்று பொருள்படும்; இனி, பயங்கரனல்லாதவனென்று உரைத்தலுமொன்று. இவன், ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவன்; மற்றையோர் - அசுவத்தாமா, பலிசக்கரவர்த்தி, வியாசன், அனுமான், கிருபன், பரசுராமன் என்பவர்.

மயன் - அசுரசிற்பி; இவன் தன்மகளான மண்டோதரியை இராவணனுக்கு மணஞ்செய்துகொடுக்கும்பொழுது, மிக்கதவப்பேருய்த் தனக்குக்கிடைத்திருந்ததொரு வேலாயுதத்தை அவனுக்குப் பரிசுகொடுத்தனனென்று அறிக.

வெட்டுமணி - ஒருவகைமணி; எட்டுமணியென்றும் பிரித்து உரைக்கலாம்.

மிருதசஞ்சீவினி - இறந்தவரைப் பிழைப்புமூட்டுவது.

மருத்துமாமலை-மருந்துகளையுடைய பெரியமலை; ஸஞ்சீவிபருவதம்.

'முன்போல' என்றது,இந்திரசித்து பிரமாஸ்திரத்தைப்பிரயோகித்து அதனல் யாவரையும் வீழ்த்தியபொழுது, சாம்பவான் சொன்னபடி அனுமான் சஞ்சீவியைக் கொண்டுவர, அம்மருந்தின் மகிமையால் அனைவரும் பிழைத்தெழுந்தனராதலின்.

நஸ்யம் பண்ணுதல் - மூக்குவழியாய் உபயோகித்தல்.

தாழ்த்து - தாமசித்து.

துரிதம் பண்ணுதல் - விரைவுபடுத்தல்.

பக்கம்—41.

சேர்ந்ததே - சேர்ந்தவுடனே.

மகாகோரம் - மிக்கபயங்கரம்.

இறுத்து - ஒடித்து.

அகஸ்த்யர் என்ற வடசொல் - (விந்திய) மலையை (வளரவொண்ணுமல்) தடுத்து அடக்கியவரென்று பொருள்படும்; அகம் - மலை, சலியாதது.

ஆதித்யஹ்ருதயம் என்ற வடமொழித்தொடர்க்கு - சூரியனுடைய மனமென்று பொருள்; இது - இலக்கணையாய், அவன்மனத்தை மகிழ்விக்கிற ஸ்தோத்திரவிசேஷத்தைக்குறிக்கும்; இந்தச் சூரியஸ்தோத்திரத்தை வால்மீகி ராமாயணத்து யுத்தகாண்டத்தின் கoஎ-ஆவது சருக்கத்திற் காண்க.

அவமானமானகாரியம் - தேரைத் திருப்பிக்கொண்டுபோனது.

விட்டில் - விளக்குப்பூச்சி.

பறப்பது, பறவை; ஐ - கருத்தாப் பொருள்விகுதி.

அண்டம் - உலகவுருண்டை.

பிரமிக்க - திகைக்க.

திக்கு - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு.

கோணம் - தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்னும் நான்குமூலைகள்.

எங்கும் - எல்லாவிடமும்.

அடர்ந்து - நெருங்கி.

கொடுங்கை - தேரின் உள்வளைந்த வெளிபுறப்பு.

உருள் - சக்கரம்; உருள்வது: கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்டது: கெடாவிட்டால், உருளி அல்லது உருளை யென நிற்கும்.

கவசம்- இரும்பு முதலியவற்றாலாகிய உடம்பின்மேற்சட்டை.

தனு - வில்; தநுஸ் - வடசொல்.

உபமேயத்தையே உபமானமாகக் கூறியது, இயைபின்மையணி; அநந்வயாலங்காரம்.

எல்லவரும் - எல்லாரும்.

அதிசயிக்க - ஆச்சரியப்பட.

பக்கம்—42.

பிரமாஸ்திரம் - பிரமனைத் தெய்வமாகக்கொண்ட அஸ்திரம்.

அக்ஷயதூணீரம் - அம்புகள் எடுக்க எடுக்கக் குறையாத (தெய்வத்தன்மையுள்ள) அம்பறாத்தூணி. தூணீரம் - அம்புப்புட்டில்.

அனுமவரலாறு.

அனுமன் வரலாறு எனப்பிரிந்து, ஆறும்வேற்றுமைத் தொகையாய், அனுமானுடைய சரித்திர மென்று பொருள்படும்; நிலைமொழியீற்று மெய் கெட்டது, "சிலவிகாரமா முயர்திணை" என்றதனால். அனுமன் - ஹநுமாந் என்ற வடசொல்லின் திரிபு. பிறந்தவுடனே இளஞ்சூரியனைக் கனிந்தபழமென்று கருதிப் பிடிக்கப் பாய்ந்தபொழுது, அதனையறிந்து கோபங்கொண்ட இந்திரனது வச்சிராயுதத்தால் அடிக்கப்பட்டுச் சிதைந்த கன்னமுடைமையால், அநுமா னென்று பெயர்; இது, இந்திரன் இட்டது. அநு - கன்னம்; மாந் - வடமொழிப் பெயர்விகுதி. இவ்வானர வீரன், சுக்கிரீவனுக்குமந்திரியும் சிநேகிதனு மாவன்; இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்புச்செய்வித்தவன்; இராமதூதன்.

வாலி - வாலீ என்ற வடசொல் ஈயீறு இகரமாயிற்று; இவன், கிஷ்கிந்தாநகரத்தை யாண்ட வானரராசன்; இந்திரன்மகன்; சுக்கிரீவனது தமையன்; அங்கதனுடைய தந்தை. தன்னையெதிர்ந்தாரதுவலிமையிற் பாதி தன்னிடங்கூடும்படி வரம்பெற்றவன். யாவரையும் வென்ற இராவணனைப் பிடித்துக்கொண்டுவந்து பின்பு அவன் வேண்டுகோளால் அவனோடு நட்புக்கொண்டவன். வாலி யென்ற பெயர்- வாலில்வலிமையுடையவ னென்றும், வாலினின்று பிறந்தவ னென்றும் காரணப்பொருளுரைக்கப்படும்.

இராவணன் ஒருகாலத்தில் வாலியோடு போர்செய்யும்பொருட்டுக் கிட்கிந்தாபட்டணஞ்சேர்ந்து, அப்பொழுது அவன் அங்கு இல்லை யென்றும் வழக்கப்படி நாற்கடலிலும் நீராடி நித்தியகருமம்முடிக்கச் சென்றுள்ளானென்றும் அறிந்து,தென்கடற்கரைக்குச் சென்று, அங்கு மந்திரஜபஞ் செய்துகொண்டிருக்கிற வாலியைப் பார்த்து,அவனைத் தந்திரமாக எளிதிற் பிடித்துக்கொள்ளும்பொருட்டு, அடியோசைப்படாமல் மெதுவாய்நடந்து அவன்பின்னே சேர, அதனைக் கீழ்க்கண்ணாற்கண்ட வாலி, சாக்கிரதைப்பட்டு, கிட்டவந்து தன்னைக் கட்டத் தொடங்கியவுடனே இராவணனைக் கைகளால் இடுக்கி வாலினாற்சுற்றிக் கொண்டபடியே ஆகாயமார்க்கமாய்ச் சென்று மற்றைக்கடல்களிலுஞ் சேர்ந்து நியமங்களை நிறைவேற்றிக்கொண்டு தனதுநகரமடைந்து இவனைக் கீழேஉதற, இவன் தன்வரலாறுகூறித் தன்குற்றம்பொறுக்கவும் தன்னை நட்பாகக்கொள்ளவும் வேண்டினனென வரலாறு அறிக.

சுக்கிரீவன் - சூரியனது மகன்; வாலியினதுதம்பி; ஸ்ரீராமபிரானோடு உயிர் நட்புக்கொண்டவன்; வாநரராசன். சுக்ரீவன்என்ற பெயர்க்கு - அழகிய கழுத்துடையவ னென்றும், கழுத்தினின்றுபிறந்தவனென்றுங் காரணப்பொருளுரைப்பர். சாபத்தாற் பெண்வடிவமான ருக்ஷரஜஸ் என்ற வானரராசனது வாலின் அழகைக் கண்டு காதல் கொண்ட இந்திரனுக்கு அப் பெண்

குரங்கினிடம் பிறந்தவன் வாலியென்றும், அவ்வாறே அதன் கழுத்தழகைக் கண்டு காமுற்ற சூரியனுக்கு அதனிடத்தில் தோன்றியவன் சுக்கிரீவனென்றும் உணர்க. இதற்குப் பிறவாறு கதைகூறுவாரும் உளர்.

சாயாக்கிரகிணீ யென்ற வடமொழிப்பெயர் - நிழலைக்கவர்பவளென்று பொருள்படும். இவள் ஒருபொருளின் நிழலைத் தான் பிடித்தமாத்திரத்தில் அப்பிராணிபிடிக்கப்படும்படியாகும் ஆற்ற லுடையவள். அநுமான் சீதையைத் தேடும்பொருட்டு இலங்கைக்குச் செல்லுதற்காக கடலைத் தாண்டுகையில், ஸிம்ஹிகையென்னும் அரக்கி அநுமானுடைய பெரியநிழலைக் கடலிலே கண்டு,நெடுநாளாகவுள்ள தன்பசியைத் தீர்க்கப் பெரியஇரை இன்று கிடைத்த தென்று மகிழ்ந்து அந்நிழலைப்பிடித்தமாத்திரத்தில், அநுமான் தடைப்பட்டு, கடலினின்று வெளிக்கிளம்பிய பெரியஅவ்வரக்கியைப் பார்த்தவளவில் தான்மிகப்பெரிய வடிவங்கொண்டு அதனினும்பெரிதாக அவள் வாயைத்திறந்தபொழுது தன்வடிவத்தைச் சுருக்கித் தான் அவள்வாயினுள்ளே நுழைந்து அங்குப்பெரியருபங்கொண்டு அவளுடலைக் கீண்டு அவளைத்தொலைத்து வெளிப்பட்டு அப்பாற்சென்றனனென்பது, வரலாறு.

இராமதூதனை அநுமான் இலங்கையிற்சென்று சீதையைக்கண்டுபேசியபின், இராவணனுக்குத் தன்வரவைத்தெரிவித்து அவனைத் தான் நேரிற்கண்டுபேசக் கருதி அசோகவனத்தையழித்து, அதற்காகவந்து எதிர்த்த காவலாளரையும் சம்புமாலி முதல் அக்ஷகுமாரன்ஈறான பலபிரதான இராக்கதவீரரையும் நாசப்படுத்தியகாரணத்தால், இந்திரஜித்துவந்து எதிர்த்துப் பிரமாஸ்திரத்தாற் கட்டிச்சென்றபொழுது, கொல்லக்கருதிய இராவணனை விபீஷணன் மறுக்க,பின்பு இராவணனேவலால் அரக்கர் அநுமான் வாலிற் கிழிசுற்றி நெய்யாலும் எண்ணெயாலும் நனைத்து நெருப்புமூட்ட, அதுகொண்டு அவ்வனுமான் இலங்கையை யெரித்தமை, பிரசித்தம்.

அசோகவனம் - இலங்கையிலுள்ளதொரு பெரிய அழகிய சிங்காரப்பூந்தோட்டம்; இராவணன் சீதையைச் சிறைவைத்திருந்த இடம். காண்பவரது சோகத்தைத் தீர்க்கவல்ல மிக்க அழகையும் இனிமையையும் உடைமையால், அசோகவனமென்று பெயர். அசோகமரங்களை மிகுதியாகவுடைமைபற்றி வந்த பெயரென்றலும் ஒன்று.

சூறையாடி - கொள்ளையடித்து; சுழல்காற்றுஅடித்தாற்போலப் பலவாறு முறித்துத்தள்ளி.

கர்ச்சித்து - உக்கிரமாய் ஆரவாரித்து.

இராமனைப் பிரிந்த வருத்தத்தாற் சீதை தற்கொலை செய்துகொண்டு உயிர்விடத் துணிந்து தொடங்குமளவில் அநுமான் சென்று செய்திகூறி இராமன்கைம்மோதிரங்கொடுத்துநம்பிக்கையுண்டாக்கி இரண்டுமாசகாலமளவும் பொறுத்திருக்கச் செய்ததனால், 'சீதையினுடைய பிராணனை ரக்ஷித்து' என்றது.

தீவு - த்வீபம் என்ற வடசொல்லின் சிதைவு: கடல்சூழ்ந்தஇடம்.

சீதையுள்ளஇடத்தை நாடிக்கண்டு வந்து செய்திகூறித் தன்னைமகிழ்வித்ததனால், இராமன் அநுமானைப்பற்றி 'எனதுசோகத்தைத்தீர்த்து' என்றான்.

பக்கம்—43.

யுத்தமுகம் - போர்க்களம்.

அவசமாய் - தன்வசமில்லாமல்.

உத்தரம் - வடக்கு.

வெகு - பஹு என்னும் வடசொல்லின் திரிபு.

சஞ்சீவிமலை - உயிர்பிழைப்பிக்கும் மூலிகையுடைய மலை.

விகாதம் - விரோதம்.

அணு - மிகநுட்பமான பொருள்.

சித்திவல்லமை - யோகசித்தியின் திறம். மிகச்சிறிதாதல் - அணிமா என்னும் சித்தி; மிகப்பெரிதாதல் - மகிமா என்னும் சித்தி.

வித்தை - கல்வி; வித்யா - வடசொல்.

சுந்தரம் - அழகு.

விசுவாசம் - அன்பு, நம்பிக்கை.

தசரதநந்தநு - தசரதனது மகனே! தசரதன் - பத்துத்திக்கிலுஞ் செல்லவல்ல தேருடைமை பற்றிய பெயர்; நந்தனன் - மகிழ்விப்பவன்.

கேசரி யென்னும் வானரவீரனது மனைவியாகிய அஞ்சனையென்பவளைக் கண்டு காமுற்ற வாயுபகவானது அநுக்கிரகத்தால் அவள்வயிற்றிற் பிறந்தவன், அநுமான். அஞ்சனைமகனாதலால் ஆஞ்சநேயனென்றும், வாயுபுத்திரனாதலால் மாருதியென்றும் இவனுக்குப் பெயர் வழங்கும்.

இராவணன்முதலிய இராக்கதர்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து பிரார்த்திக்க, அப்பெருமான் தசரதன்மகனாய்த் தோன்றித் துயர் தீர்ப்பதாக அருளிச்செய்தது மன்றி, நீங்கள் பலவானரங்களாகப் பூமியிற் சென்று பிறந்து அப்பொழுதைக்கு உதவிசெய்யுங்க ளென்றும் கட்டளையிட, அங்ஙனமே தேவர்கள் பலரும் பலவாறு பிறக்கையில், வாயுவினது அம்சமும் ருத்திரனது அம்சமு மாய் அநுமான் தோன்றின னென்ற செய்தி, இங்கு 'காரணமகிமையினால்' என்று குறிக்கப்பட்டது.

விம்பம் - பிம்ப மென்ற வடசொல்லின் திரிபு; வட்டம், மண்டலம், வடிவம்.

பிதா - இங்கே, வாயு.

கருடகதி- பக்ஷிராஜனை கருடன் போல வேகங்கொண்ட நடை.

பங்கம்—44.

பிரபலம் - மிக்கவலிமை.

'குளிர்ந்திருக்கக்கடவது' என்பது, ஒன்றன்பால்முற்றன்றி வியங்கோள் முற்றின் தன்மைய தாதலால், 'சூரியகிரணங்கள்' என்ற பன்மையெழுவாய்க்கு முடிக்குஞ்சொல்லாயிற்று. 'கடவன' என்று இருப்பது நலம்.

கிரணம் - ஒளி.

தகியாது - எரிக்காமல்.

தயவு - தயா என்னும் வடசொல்லின் திரிபு; குறியதன்கீழ்ஆக் குறுகி உகரமேற்றது; [நன் - உயிர் - உ௨.] தயவு என்றசொல் பிழைபாடுடையதென்றும், "குறியதன்கீழா" என்ற விதி நிலா அரா முதலிய தமிழ்ச்சொற்களுக்கே யன்றி வடசொல்லுக்கு உரியதன்றென்றும், தயைஎன வடமொழிக்கு உரியபடி ஆகீறு ஐயாய் வருவதே வழாநிலை யென்றும் சாதிப்பாரும் உளர். பெரும்பாலும் வழக்கிற்பயிலுதலால், புதியனபுகுதலாக அமைத்துக்கொள்ளுதல் பொருந்தும்; அன்றியும், வசனநடையில் உபயோகித்தல் செய்யுள்நடையிற் போல வழுவாகாது.

பூண்டு - கொண்டு.

கிரகணகாலம் - கிரகணம்பிடிக்குங் காலம்.

பற்ற - பிடிக்க.

இராகு - நவக்கிரகங்களில் எட்டாமவன், சாயாகிரகம்.

துருவாசமுனிசாபத்தாற் கடலிற் புக்கொளித்த தேவலோகத்துச்செல்வங்களை மீண்டும் பெறும்பொருட்டுத் திருமாலின்கட்டளையால் தேவர்கள் அசுரர்களைத் துணைக்கொண்டு பாற்கடலைக்கடைகையில் உண்டான அமிருதத்தை அத்திருமால் தானெடுத்து மிகஅழகிய மோகினியென்னும் பெண்வடிவத்தால் அசுரர்களை மயக்கித் தேவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தருளுகையில், ராகுஎன்னும் அசுரன் தான் இருத்தற்குரிய அசுரர்கூட்டத்தைவிட்டு அமரர்கூட்டத்தினிடையிலே புக்குக் கையேற்று அமிருதத்தை வாங்கியுண்ண, அதனைச் சூரியசந்திரர் குறிப்பித்தமாத்திரத்தில், எம்பெருமான் அவனை அகப்பையாலடித்துத் தலைவேறு உடல்வேறாக்க, அமிருதமுண்டதனால் உயிர்நீங்காத அந்தத் தலையும் உடம்பும் விஷ்ணுவின் அநுக்கிரகத்தால் இராகுகேதுக்களென இரண்டுகிரகங்களாகிச் சூரியன்முதலிய ஏழுகிரகங்களோடு சேர்ந்து, தம்மேல் கோள்சொன்ன சூரியசந்திரர்க்குப் பகையாய்ச் சிற்சிலகாலத்தில் அவர்

கனைப்பிடித்துக்கொள்கின்றன வென்பது, கதை. இப்படி திருமால் வரங் கொடுத்ததையே, திரிலோகாதிபதியாய் அவ்வரத்தை நடத்துகிற தேவராசன்மேல் உபசாரமாகவேற்றி, இராகு இந்திரனை நோக்கி 'சந்திரசூரிய மண்டலங்களைப் பற்ற எனக்கு வரங் கொடுத்திருக்கிறீர்' என்றான்.

ஐராவதம் - வெள்ளையானை: நான்கு தந்தமுடையது; இந்திரனுக்கு உரியது; திருப்பாற்கடலினின்று தோன்றியது.

மகாபிரசண்டவேகம் - மிகக்கொடிய அதிகவேகம்.

கடுக - விரைவாக.

சிந்தூரம் = ஸிந்தூரம்: செம்பொடி.

வட்டம் - மண்டலமானது; வ்ருத்த மென்னும் வடசொல்லின் திரிபு.

மத்தகம் - மஸ்தகம்: வடசொல் திரிபு; தலை.

வச்சிரம்-இந்திரனுக்கு உரிய படைக்கலம்; நூறு நுனியுள்ளது.

பக்கம்—45.

வாயு இயக்கம் - காற்றின்சஞ்சாரம்; இயக்கம் - இயங்கு என்ற பகுதியின் தொழிற்பெயர்; அம் - விகுதி, வலித்தல் - விகாரம்.

விசனம் = வ்யஸநம்: வடசொல்.

இமயகிரி - பனிமலை; ஹிமம் - பனி.

எண்பத்துநான்குநூறாயிரம்சிருஷ்டிபேதங்கள்—நூறாயிரம் - லக்ஷம். சிருஷ்டிபேதம்- படைப்புவகை. மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற எழுவகைப் பிறப்பில், தேவர் - கச லக்ஷம், மனிதர்-கூ லக்ஷம், மிருகமும் பறவையும் நீர்வாழ்வனவும்- தனித்தனி க0 லக்ஷம், ஊர்வன - கக லக்ஷம், தாவரம் - உ0 லக்ஷம் ஆக அச லக்ஷம் யோனி பேதமாம்;"ஊர்வ பதினொன்றொன்பது மானிடம், நீர் பறவை நாற்காலோர்பப்பத்தாம்—சீரிய, பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த, அந்தமில்சீர்த் தாவர நாலைந்து" என்ற பழம்பாடல் அறியத்தக்கது.

விம்மி - பருத்து.

மரணயாதனை - இறக்குங்காலத்து உண்டாந்துன்பம்.

தீக்ஷ்ணபுத்தி - நுண்ணறிவு.

பாசம் - கயிற்றுவடிவமான ஓராயுதம்.

காலதண்டம் - பிராணிகளின் ஆயுட்காலத்தை முடித்து ஒழிக்கவல்லதாயுதம்.

விசுவகர்மா - தேவசிற்பி.

அபசயம் - தோல்வி.

பக்கம்—46.

பிரமதண்டம் - பிரமனுக்கு உரியதொரு மந்திரபலமுள்ள கோல்.

பீடித்து - வருத்தி.

பிரம பதம் - பிரமனாகும் நிலைமை.

ஆசீர்வதித்தார் - வாழ்த்தினார்.

நிகர் - ஒப்பு.

அகங்காரம் - நானென்னுஞ் செருக்கு.

இதாஹிதம் = ஹிதாஹிதம் - வடமொழித்தொடர்; ஹித + அஹித: உம்மைத்தொகை; இதம் - நன்மையும், அஹிதம் - தீமையும்.

தபோதனர் - தவத்தையே செல்வமாக வுடையவர்; செல்வம்போலத் தவத்தைக் கருத்தோடு காப்பவர்.

ஓமத் திரவியம் - ஓமத்துக்கு உரிய பொருள்.

கந்தமூலபலாதிகள்—கந்தம் - கிழங்கும், மூலம் - வேரும், பலம் - பழமும், ஆதி - முதலியவை.

எச்சில் - எஞ்சுதலுடைய தெனக் காரணப்பெயர்; தின்றுசேடித்ததெ ன்று பொருள்படும்; எஞ்சு - பகுதி, இல் - பெயர்விகுதி, வலித்தல் - விகாரம்.

கமண்டலம் - ஒருவகைச்சலபாத்திரம்.

பாலியசேஷ்டை - பிள்ளைவிளையாட்டு.

சாந்தம் - பொறுமை.

பக்கம்—47.

அல்ல என்பது - இருதிணையைம்பால் மூவிடத்துக்கும் பொதுவான குறிப்புமுற்று; (இல்லையென்பதுபோல.) ஆதலால், 'பெரிதல்ல' என்ற முடிபு வழுவும் வழுவமைதியு மாகாது வழா

நிலையேயாம். 44 - ஆம் பக்கம்முதலில் 'பாய்ந்தானல்லவோ' என உயர்திணை யாண்பாலுக்கு வந்ததுங் காண்க.

சிருஷ்டி - படைத்தல்.
ஸ்திதி - காத்தல்.
சங்காரம் - அழித்தல்.
அதிகாரிகள் - தலைவர்: அதிகாரமுடையவர்.

சிருஷ்டி ஸ்திதி சங்கார மென்ற முறைக்கு ஏற்ப,'பிரமா விஷ்ணு உருத்திரர்' என்றது, முறைநிரனிறைப் பொருள்கோள்; படைப்புக்கு உரிய பிரமனும்,காப்புக்குஉரிய விஷ்ணுவும், அழிப்புக்குஉரிய உருத்திரனு மென்க.

திரிமூர்த்திகள் - மூன்று பெரியோர்கள்.

ஒறுத்து - வெறுத்து.

ருக்ஷரஜஸ் என்னும் வானரராசன் இறந்தபின் அவனது மூத்தமகனான வாலி பட்டாபிஷேகஞ்செய்யப்பெற்றுச் சுக்கிரீவனை இளவரசனாகக்கொண்டு கிஷ்கிந்தையை யாளுகையில், மாயாவியென்னும் அசுரவீரன் வந்து வலியப் போருக்குஅழைக்க,வாலி தம்பியுடன்சென்று அவனை யெதிர்த்துப் பொருகையில், அவன் அஞ்சி ஒரு பிலத்தினுள்ளே செல்ல, வாலி சுக்கிரீவனைப் பிலவாயிலிற் காவல்வைத்துவிட்டு உள்ளேசென்று அவனைத் தொடர்ந்து போர்செய்கையில், பலமாசங்கள் கழிந்தபின் இரத்தவெள்ளம் வெளிப்பட்டது கண்டு சுக்கிரீவன் அவ்வசுரனால் வாலிகொல்லப்பட்டா னென்று மாறுகக் கருதி அவ்வசுரன் வெளிவராதபடி அப்பிலவாயிலைப் பெருங்கல்லால் மூடிவிட்டு வருத்தத்தோடு நகரஞ்சேர்ந்து அமைச்சர்கள்வேண்டுகோளின்படி தான் அரசுபெற்று வாழ, அங்கு அசுரனைக் கொன்ற வாலி மீண்டுவந்து பிலவழியை யடைத்த கல்லைக் காலா லுதைத்துத் தள்ளிவிட்டுப் பட்டணஞ் சேர்ந்து செய்தியறிந்து, அரசாட்சிவிருப்பத்தாலும் தன்மனைவியான தாரையைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பத்தாலும் இது செய்தானென்று சினங்கொண்டு தம்பியை அவன் எவ்வளவு வேண்டியுங் கேளாமல் இராச்சியத்தையும் அவன் மனைவியான ருமையையுங் கவர்ந்துகொண்டு அடித்துத்துரத்தித் தொடர்ந்துசென்று பலவிடங்களிலும் பொருது தாக்கின னென்க.

ஆற்றாமல் - பொறுக்கமாட்டாமல்.
அடைக்கலமாக - சரணமாக.
அபயங்கொடுத்து - பயப்படவேண்டாமென்று வாக்களித்து.

முன்னொருகாலத்தில் எருது வடிவங் கொண்ட துந்துபியென்னும் அசுரன் வாலியையெதிர்க்க,அவன் உக்கிரமாகப் போர்செய்து துந்துபியைக் கொன்று அவனுடம்பை அப்பாலெடுத்து எறிய, அவ்வுடம்பு மதங்கரென்னும் முனிவரது ஆச்சிரமத்தில் விழுந்து இரத்தப்பெருக்கால் அவ்வாச்சிரமத்தை அபரிசுத்தமாக்க, அதுகண்டு கோபங்கொண்ட அம்முனிவர் 'இது செய்தவன் இங்குவருவானாயின் இறந்திடுக' என்றும், 'அவனைச்சேர்ந்தவர் இங்குவரின் கல்லாய்விடுக' என்றும் சபிக்க, அதற்கு அஞ்சி வாலியும் அவனைச்சேர்ந்தவரும் அங்குச் சேராதொழிதலால், வாலிக்கு விரோதியான சுக்கிரீவனுக்கும் அவனைச் சேர்ந்தவர்க்கும் அந்த மதங்காச்சிரமம் அஞ்சியொளித்து உயிர்வாழ்தற்கு இடமாயிற்று.

பிராணசிநேகிதன் - உயிரோடொத்த நண்பன்.

தோழமை - நட்பு.
அநுமதி - உத்தரவு.
வித்தியார்த்தி - கல்விபயில்பவன்.
வேதாங்கம் - சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம்,ஜ்யோதிஷம், கல்பம் என்னும் ஆறுசாஸ்திரங்கள். வேதத்துக்கு அங்கமானவை.

ஐந்திரவியாகரணம் - நவவியாகரணங்களுள் ஒன்று; இந்திரனாற்செய்யப்பட்ட வடமொழி இலக்கண நூல்.

போதித்தல் - அறிவித்தல்.
மேவி - பொருந்தி.
சுவாசகாலம் -மூச்சுவிடும்பொழுது.
யோசனை - காதம்; நாற்காதம் என்பர் ஒருசாரார்; இதன் அளவு மற்றும் பலவாறுகூறப்படும்.

சதாகாலமும் - எப்பொழுதும்.

பக்கம்—48.

எல்லாவியாகரணங்களையுஞ் சூரியனிடம் அனுமான் படித்ததாகவே பிரசித்தம்.

நிகர்வ குணம் - செருக்கில்லாத தன்மை.

மனோதிடம் = மனோத்ருடம் - வடமொழித்தொடர்; நெஞ்சுறுதி.

பணிவிடை - அடிமை.

கடமைபூண்டு ஒழுகும்படி - தவறுமல் ஏற்றுக்கொண்டு அனுஷ்டிக்கும்படி.

இருக்கப்பட்ட = இருக்கப்பெற்ற.

நித்தியநியமாதிகாரியங்கள் - நித்தியகருமம் முதலிய இன்றியமையாத் தொழில்கள்.

ஆசீர்வாத அநுக்கிரகம் - வாழ்த்தி அருள்செய்தல்.

இராசரிக்கம் - அரசாட்சி.

உலோகபரிபாலனம் - உலகத்தை யாளுதல்.

காலநியமங்கள்-காலவரையறைகள்.

அதிக்கிரமியாமல் - கடவாமல்.

நித்திய நைமித்திய சற்கருமஅனுஷ்டானங்கள் - நாள்தோறும் செய்வனவும் யாதாயினுமொருநிமித்தம்பற்றி விசேஷகாலங்களிற் செய்வனவுமான நல்ல வைதிக காரியங்களை நடத்துதல்.

பின்சென்று - வழிவிட்டு.

சந்தனசைலவாச - சந்தனமரங்கள் மிக்க மலயமலையில் வசிக்கிற. அகஸ்தியமுனிவர் வடக்கிலிருந்து தெற்கில் வந்து பொதிய மென்னும் மலய மலையில் வாழ்கின்றன ரென்பது பிரசித்தம்; "சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப் பரமாசாரியன்" என்பதுங் காண்க.

ஆசீர்வதித்து - ஆசீஸ் என்னும் வடசொல்லைக் கூறி; அவ்வடசொல் வாழ்த்துக்கு உரியது.

தத்தம - தங்கள் தங்களுடைய;அ-ஆறனுருபு. தாம் தாம் என்பது தந்தமெனக் குறுகி வலித்தல் பெற்றது.

சூளாமணி வசனம்.

தோலாமொழித்தேவர்செய்த சூளாமணியென்ற ஜைநத்தமிழ்க்காப்பியத்தை முதனூலாகக் கொண்டு சுருக்கமாக எழுதப்பட்டது, இது; தொல்காப்பியநச்சினார்க்கினியம், தொல்காப்பியச்சேனாவரையம், இலக்கணவிளக்கம், இறையனாரகப்பொருள், வீரசோழியம், கலித்தொகை, சூளாமணி, தணிகைப் புராணம் முதலிய பல அரியபெரியதமிழ்நூல்களை அநேகம்பிரதிருபங்களைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பித்து வெளியிட்டுத் தமிழைப்பரிபாலித்துத் தமிழுலகத்துக்கு அழியாப்பெருநன்மை புரிந்து வருகிற **யாழ்ப்பாணம் - ராவ்பஹதூர்-சி-வை-தாமோதரம்பிள்ளை (பி - ஏ, பி - எல்)** அவர்களால் **தாவடி அம்பிகைபாக** வுபாத்தியாயரைக்கொண்டு எழுதுவிக்கப்பட்டது. **திவான்பஹதூர் - வி - கிருஷ்ணமாசாரியர**வர்களுடைய 'மகாராணி' என்ற மாதாந்தரப்பத்திரிகைவழியாய் முதலில் வெளியானது. முதனூலுக்கும் இதற்கும் சிறுபான்மை காணப்படும் மாறுபாடு வழிநூலிலக்கணவிதிபற்றி வந்ததாதல்வேண்டும். இவ்வசனநூலைக் கடினநடையாக மாற்றி விரித்தெழுதிய வசனசூளாமணியென்ற புத்தகம் 1900, 1901 இவ்வருஷங்களின் யப்-ஏ-பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பட்டுள்ளது. இங்குப் பாடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் என்னும் பகுதி, சூளாமணியின் ௬ - ஆவது பகுதியான அரசியற்சருக்கத்தின் வசனச்சுருக்கமாம்.

சூளாமணி - சூடாமணி; இது - வடநூல்முறைப்படி வந்த டகரளகரப் போலி. இது - சூளா மணி என்னும் இரண்டு வடமொழிகள் கூடிநின்ற தொகைநிலைத்தொடர்மொழி. இதனை ஏழாம்வேற்றுமை யுருபும் பயனு முடன்தொக்கதொகை யென்றால், தலையிலணியும்இரத்தினமென்றும்; ஆறும் வேற்றுமைத்தொகையென்றால், தலையினது சம்பந்தமான மணி யென்றும் விரிந்து பொருள்படும். சூளாமணியென்னும் ஒருவகைத்தலையணியின்பெயர், (சிந்தாமணி யென்பதுபோல) இங்கு உவமவாகுபெயராய், யாவருந் தலைமேற் கொண்டு கொண்டாடத்தகுவதொரு சிறந்த நூலுக்குக் காரணக்குறியா யிற்று. சூடாமணி யென்னும் வடசொல்தொடர் சூளாமணியெனத் திரிந்து வழங்குவதைக் கம்பராமாயணத்துச் சுந்தரகாண்டத்து 'சூளாமணிப்படலம்' என்னுமிடத்தும், இது நூலுக்குப் பெயராகிவருதலை 'சத்திரசூளாமணி,' 'சூடாமணிநிகண்டு' என்னுமிடங்களிலுங் காண்க. சூடா - தலைமயிர்முடி. மணி - இரத்தினம். சூளாமணி - சிரோரத்தினம். (கருதியபொருள்கொடுக்கும்)சிந்தாமணி,(திருமால் மார்பிலணிந்துள்ள) கௌத்துபமணி, (சூரியன்கழுத்தில் அணியும்)சியமந்தகமணி என்பனபோல,சூளாமணி என்பதும் ஒருதேவ மணி யென்று பிங்கலந்தையென்னுந்தமிழ்நிகண்டிற் கூறப்பட்டிருக்கிறது.

இதனைச் செய்யுள்நடையில் இயற்றியவர், தோலாமொழித்தேவர் என்னும் ஜைநமுனிவர். [தேவர் என்பது,பெரும்பான்மையாய்ச்சமணமுனிவர்களுக்குப் பெயராக வழங்கும்;சிந்தாமணிநூலாசிரியர் பெயர் திருத்தக்கதேவரென்பதுங் காண்க. தேவரென்றபெயரால் திருவள்ளுவரையும் சமணர் தம் மதத்தவரென்பர்.] அந்நூல்,செந்தமிழ்மொழியிற் சிறந்துவிளங்கும் பழைய காப்பியமைந்தனுள் முந்தியதாகிய சீவகசிந்தாமணி யென்பதுபோலச் சிறந்தநடையுடையதொரு தமிழ்ப்பெருங்காப்பியமாம். சொற்பொலிவு பொருளமைதி கதைமுடிவு முதலிய மற்றும்பலவிஷயங்களிலும், அந்நூல், அந்தச் சிந்தாமணியென்னுஞ் சமணமகாகாவியத்தைப் பெரும்பாலும் ஒத்துள்ளது. சிந்தாமணியில்பிரதான அரசனைச் சிற்சில இடங்களில்'சிந்தாமணி'எனக்கூறியிருத்தல்போல,சூளாமணியில் பிரதான அரசனைச் சிற்சிலவிடங்களில் 'சூளாமணி' எனக் கூறுதலும் பிறவுங் காண்க. அந்நூலின் காலம் இன்னதென்று நிச்சயமாகத் தெரியவில்லை. யாப்பருங்கலவிருத்தியிலும், யாப்பருங்கலக்காரிகைவிருத்தியுரையிலும், சிலப்பதிகாரத்து அடியார்க்குநல்லாருரையிலும் அந்நூலிலிருந்து செய்யுட்கள் எடுத்துக்காட்டப்பட்டிருத்தலால், அது அவற்றிற்கு முந்திய தென்பதுமாத்திரம் விளங்குகிறது. அதன்செய்யுள்தொகை, சற்றேறக்குறைய இரண்டாயிரத்தொருநூறு. அதற்கு முதனூல் - சைனசமயத்துச்சிறந்ததொருபுராணமென்று தெரிகிறது:மகாபுராணத்தில்இச்சரித்திரம் காணப்படுகிறது.

சூளாமணி, கடவுள்வாழ்த்தும் பாயிரமும் நாட்டுச்சருக்க நகரச்சருக்கங்களுந் தவிரப் பத்துச்சருக்கங்களை யுடையது.

இந்நூல், சுரமையென்னும் நாட்டில் போதனமென்னும் நகரத்தில் பாகுபலியென்பவனது குலத்திலே பயாபதியென்னும் அரசனது மனைவிமார் பலருள் பட்டத்துத்தேவிமாராய்ச் சிறந்த மிகாபதியென்றும் சசியென்றும் பெயர்கூறப்படுகிற மகளிர்இருவரிடத்து முறையே விஜயன் திவிட்டன் என்ற இரண்டுகுமாரர் பிறந்துவளர்ந்ததும், இவர்களுள் திவிட்டனுக்கு வித்தியாதரலோகத்து இரதநூபுரநகரத்து அரசனாகிய சுவலனசடியென்பவன் தனது மனைவிமார்பலருள் தலைவியான வாயுவேகையென்பவளிடம் பிறந்த சுயம்பிரபையென்னும்மகளை மணஞ்செய்வித்ததும், இரத்தினபல்லவநகரத்துஅரசனும் வித்தியாதரசக்கரவர்த்தியு மாகிய அசுவகண்டனென்பவனுக்குத் தனதுதந்தைகொடுத்த திறைப்பொருள்களைத் திவிட்டன் தடுத்துவிட்டதும்,

அதுகேட்டு அவன்மந்திரிமார்களுள்ஒருவனான அரிமஞ்சுளன்பவனால் தன்னைக் கொல்லும்படியேவியனுப்பப்பட்ட மாயச்சிங்கத்தைத் திவிட்டன் சென்று எதிர்த்து மெய்ச்சிங்கத்தைக் கொன்றதும், பின்பு அதிககோடங்கொண்டு சேனைகளோடெதிர்த்துவந்த அச்சுவகண்டனைத் திவிட்டன் தானும் பலசேனைகளோடு சென்று பொருது கொன்று அவனது வித்தியாதரலோகத்துஅரசாட்சியைத் தனதுமாமனானசுவலனசடிக்குத்தந்ததும், பயாபதியரசன் தன்புதல்வர்க்குப் பட்டாபிஷேகஞ்செய்து அவர்களிடம் அரசாட்சியை வைத்ததும், திவிட்டன் சிலபுலவர்கள்விருப்பத்தின்படி கோடிக்குன்றமென்னும்மலையை வேரோடுபறித்துஏந்தியதும், இவன் மற்றும்பலமகளிரை மணந்து அவர்களோடும் இன்பமனுபவித்துவருகையில் பட்டமகிஷியான சுயம்பிரபைக்கு அமிருதசேனனென்னும் புத்திரனொருவனும் சோதிமாலையென்னும்புத்திரியொருத்தியும் பிறந்ததும்,இவர்களுக்கு முறையே சடியரசனது குமாரனான அருக்ககீர்த்தியின்மகளையும்மகனையும் மணஞ்செய்வித்ததும், இறுதியில் பயாபதியரசன் முனிவருபதேசத்தால் துறவறத்தையடைந்து தவஞ்செய்து கடவுளருளைப் பெற்று முத்தியடைந்தது மாகிய சரித்திரத்தைப் பிரதானமாக விரித்தெடுத்துக்கூறுவது.

இந்நூற்கதைப்போக்காற்சிலசிலநீதிகள்புலப்படுதலையுங்கண்டுகொள்க.

இந்நூற்கதைத்தலைவனான திவிட்டன் சமணசமயத்துக் கூறப்படுகிற நவவாசுதேவர்களுள் முதல்வனான திப்பிரட்டவாசுதேவ னென்றும், இவனுக்குஅண்ணனான விசயன் பலதேவரொன்பதின்மருள் முதல்வ னென்றும், திவிட்டனுக்குப் பகைவனான அச்சுவகண்டன் நவப்பிரதிவாசுதேவருள் முதல்வனான அயக்கிரீவப்பிரதிவாசுதேவ னென்றும் கூறப்படுவர். திவிட்டனும் விசயனும் நிறம் குணம் செயல்களால் முறையே விஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ணனையும் அவனது தமையனான பலராமனையும் ஒப்பர். கிருஷ்ணபலராமருள் இளையவனாகிய கிருஷ்ணனுக்குச் சிறப்புமிகுதல்போல, இவ்விருவருள்ளும் இளையவனாகிய திவிட்டனுக்கே சிறப்புமிகும். இவன் திருமாலின் அம்சமானவன். இவன் கோடிக்குன்றத்தை யெடுத்தது - கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாக ஏந்தியதையும், இவன் விசயன்முதலியோரோடு சென்று திருமாலுக்குஉரிய கருடவாகனம் சங்கம் சக்கரம் சார்ங்கவில் என்னும் இவற்றைப் பெற்று வித்தியாதரராசனான அசுவகண்டனால் ஏவியனுப்பப்பட்ட உக்கிரமான சண்டவேகையென்னும் மாயாதேவதையையும் அவனது பரிவாரங்களையும் அவனையும் உயிர்தொலைத்தது - கண்ணன் பலராமர் முதலியோருடனே கருடன்தோள்மேல் ஏறிச்சென்று பாணாசுரனையெதிர்த்து அவ்வசுரராசனது பரிவாரங்களுள் ஒன்றான ஜ்வரதேவதையைச் சங்கநாதத்தால் துரத்தியோட்டி மற்றையபரிவாரங்களைச் சார்ங்கவில்லால் வென்று பாணாசுரனைச் சக்கராயுதத்தால் தோள்துணித்த வரலாற்றையும், இவன் பதினாறுயிரம்மகளிரை மணஞ்செய்துகொண்டது - கண்ணன் பதினாறுயிரம் கோபஸ்திரீகளைக் கூடினதையும் போலும்; அன்றியும், இக்கதாநாயகனான திவிட்டன் கோடிக்குன்றத்தையெடுத்தது - சீவகசிந்தாமணியிற் கதாநாயகனான சீவகன் ஆயிரம்மனிதராலும் சிலயானைகளாலும் எடுக்கமுடியாத பெருங்கல்லைத் தனதுகையிலேந்தி ஆடினதையும், இவன் சுயம்பிரபையென்னும் வித்தியாதரமகளை மணந்தது - சீவகன் காந்தருவதத்தை யென்னும் வித்தியாதரமகளை மணந்ததையும் போலும்.

அரசியலுக்கு முன்கதைத்தொடர்ச்சி.

பரதகண்டத்தில் சுரமைநாட்டில் போதனமாநகரத்தில் பாகுபலியென்னும்அரசனது குலத்தில் தோன்றிய பிரஜாபதியென்னும் அரசன், தனது பிரதானமனைவிமாரிருவருள் மூத்தவளான மிகாபதியினிடம் விசய னென்ற

மகனையும், இளையவளான சசியென்பவளிடம் திவிட்டனென்ற மகனையும் பெற்றான். முறையே வெண்ணிறமும் கருநிறமும் உடைய இக்குமாரர், பலராமகிருஷ்ணசொரூபிகளெனப்படுவர். இவர்கள் பலவகையிலும் சிறப்புற்றுவளர்ந்துவருகையில் ஒருநிமித்திகன் அரசனிடம்வந்து 'வித்தியாதரனொருவன் தன்மகளைக் கொணர்ந்து திவிட்டனுக்கு மணஞ்செய்விப்பான்' என்றும், 'ஒருவாரத்தில் அதன்பொருட்டு ஒருவித்தியாதரதூதன் திருமுகமொன்றுகொண்டுவந்து உனதுசோலையில் இறங்குவான்' என்றுஞ் சொன்னான். அப்படியே, வெள்ளிமலையில் தென்றிசையிலுள்ள இரதநூபுரநகரத்தை யாண்டுவருகிற சுவலநசடியென்பவன் விவாகத்துக்குரியபருவம்வாய்த்த சுயம்பிரபையென்னுந் தன்மகளுக்குக் கணவனாதற்குஉரியவன் யாவனென்று மந்திராலோசனைசெய்கையில் அமைச்சர்பலரும் பலவாறு கூற, பின்பு சதவிந்துவென்னும்நிமித்திகனை யடைந்து அவனால் திவிட்டனது தெய்வத்தன்மை முதலியசிறப்புக்களை யுணர்ந்து அத்திவிட்டனுக்கே அக்கன்னிகையை மணஞ்செய்விப்பதென்று நிச்சயித்து மரீசியென்பவனைத் தூதனுப்பினான். அவன் வந்துசொன்ன செய்தியைக் கேட்டுப் பிரசாபதியரசன் மிகமகிழ்ந்து அவ்விவாகஞ்செய்வித்தற்கு இணங்கினான். இதுநிற்க, அவ்வெள்ளிமலையில் வடதிசையிலுள்ள இரத்தினபல்லவநகரத்தை யாள்பவனும், மயூரகண்டனது புத்திரனும், பூலோகம் வித்தியாதரலோகமென்னும் இரண்டு உலகத்திலுமுள்ள அரசரனைவரிடத்துந் திறைவாங்குகிற ஏகசக்கரவர்த்தியு மான அசுவகண்டனென்னும் வித்தியாதரராசன் சதவிந்துவென்றநிமித்திகனால் திவிட்டனைத் தனக்குஅரும்பகையாகுபவனென்று அறிந்து அங்ஙனம் அவனுக்குத் தன்னிடம்பகைமையுளதோ வென்பதைப் பரிசோதித்தற்கு ஒருவியாஜமாகப் பிரசாபதியரசனிடத்தினின்று திறைவாங்கிவரும்படி சிலரை யேவினான். அவ்வாறே வந்து திறைகேட்ட வித்தியாதரர்க்குப் பிரசாபதியரசன் பல திறைப்பொருள்களைக் கொடுத்தான். அதனையறிந்த திவிட்டன் கோபங்கொண்டு அப்பொருள்களையெல்லாம் வலிய மீட்டுக்கொண்டு சிலகடுஞ்சொற்களைக்கூறியனுப்பினான். அச்செய்தியையுணர்ந்த அரிமஞ்சுவென்னும் அசுவகண்டன்மந்திரி அதனைத் தன்அரசனுக்கு உணர்த்தாமலே தானே மாயையால் திவிட்டனை வெல்லக் கருதி அரிகேதுவென்ற வித்தியாதரனை அனுப்ப, அவன் மாயச்சிங்கவடிவங்கொண்டு சுரமைநாட்டையடுத்து உபத்திரவிக்க, அதனை அறிந்த திவிட்டன் அச்சிங்கத்தை யெதிர்த்து ஆரவாரிக்கையில், அது அஞ்சியோடி ஒருகுகையில் ஒளித்தது. திவிட்டன் அதனைத்தொடர்ந்துவந்து அக்குகைவாயிலில் நின்று கர்ச்சிக்க, அதனுள்இருந்த உண்மைச்சிங்கமொன்று அதிகோபத்தோடு எழுந்து மேல்வந்தது. அதனோடுபொருது திவிட்டன் அதனை வாய்கிழித்து அழித்திட்டான். அச்செய்தியையறிந்து சுவலனசடி மிகமகிழ்ந்து விவாகம்நடத்தும்பொருட்டுப் பந்துமித்திரருடன் சேனைசூழப் போதனமாநகரத்துக்கு வந்துசேர்ந்தான். அங்குத் திவிட்டனுக்கும் சுயம்பிரபைக்கும் விவாகமகோற்சவம் வெகுசம்பிரமமாக நடந்தேறிற்று.

அரசுஇயல் - (திவிட்டனது) அரசாட்சிமுறைமை; பட்டாபிஷேகம்.

இவர்கள் - சுவலநசடி; பிரசாபதி, திவிட்டன், விசயன் முதலியோர்.

இவ்வாறு - இப்படி; பிரசாபதியரசனது இளையகுமாரன் திவிட்டனுக்கும் சுவலநசடியரசன்மகள் சுயம்பிரபைக்கும் கலியாணத்தைச் சம்பிரமமாக நடப்பித்து.

இங்கே - இவ்விடத்திலே: பிரசாபதியரசனது இராசதானியான சுரமைநாட்டுப் போதனமாநகரத்திலே.

விஞ்சையரூர்-வித்தியாதரலோகம்; வெள்ளிமலை.

விஞ்சையர் - மாயவித்தையையுடையவர்; விஞ்சை - வித்யா என்ற வடசொல்லின் சிதைவு.

சுவலநசடி - இரதநூபுரநகரத்து அரசன்; அருக்ககீர்த்தியென்பவனுக்கும் சுயம்பிரபையென்பவளுக்குந் தந்தை; திவிட்டனுக்குப் பெண்ணைக் கொடுத்த மாமன்.

செல்வக்கடல் - மகிழ்ச்சிச்சிறப்பாகிய பாற்கடலென்றபடி. செல்வத்தினாலாகும் மகிழ்ச்சி, செல்வமெனப்பட்டது; அன்றியும், கல்பகவிருக்ஷம், காமதேநு, சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி முதலிய தேவலோகத்துச் செல்வங்களையெல்லாம் வெளியிட்ட பாற்கடல், செல்வக்கடலாம்.

நச்சுத்துளி - விஷத்தினது துளி; நஞ்சு + அம் துளி; வேற்றுமையில் மென்றொடர் வன்றொடராயிற்று; [நன் - உயிர் - ருசு.] அம் - சாரியை.

அசுவகண்டன் - இரத்தினபல்லவநகரத்து அரசன். மயூரகண்டனது மகன். பூலோக வித்தியாதரலோகங்கள் முழுவதும் கப்பம்வாங்கி அரசுசெலுத்தியவன். நவப் பிரதிவாசுதேவரில் ஒருவன். அசுவக்கிரீவனென்றும் இவன்பெயர் வழங்கும். இவ்விருபெயரும், குதிரைக்கழுத்துப்போலுங் கழுத்துடையவனென்று பொருள்படும்.

ஆயத்தப்படுதல் - சித்தமாதல்.

அரசன் - சுவலநசடி.

மருமகன் - மகளின்கணவன்.

திவிட்டன் - பிரசாபதியரசனுக்குச் சசியென்னும் இளையராணியிடம் பிறந்தமகன். நவவாசுதேவஅவதாரத்தில் ஒருவன்.

சிங்கம் - ஸிம்ஹ மென்ற வடசொல்லின் சிதைவு; யானை முதலிய பெரியமிருகங்களையும் இம்சிக்கவல்லதாதலால் வந்த ஹிம்ஸ மென்ற பெயர் ஸிம்ஹமென எழுத்துநிலைமாறியதென்க. இங்கே, சிங்கம் - மாயச்சிங்கம். இதனை வதைத்த வரலாற்றைக் கதைத்தொடர்ச்சியிலே காண்க.

அச்சுவகண்டனூர் - இரத்தினபல்லவநகரம்.

கூறுதி - சொல்வாய்; ஏவலொருமை: இ - விகுதி, த் - எழுத்துப்பேறு.

என்ன - என்றுசொல்ல.

தூதுவன் = தூதன்; தூது + அன்: சிறுபான்மை குற்றியலுகரம் உயிர்வரக் கெடவில்லை.

மாயச்சீயம் - மாயையாலாகிய சிங்கம். சீயம் - ஸிம்ஹ மென்ற வடசொல்லின் திரிபு.

அரிகேது - ஒருவித்தியாதரன்; அசுவகண்டனது மந்திரியாகிய அரிமஞ்சுவால் மாயாசிம்மமாகத் திவிட்டனிடம் அனுப்பப்பட்டவன்.

சின்னாள் - சிலநாள்; சிலவென்பதன்முன் பிறிதுவர அகரம்கெடப் பின்பு லகரநகரங்கள் ணகரங்களாயின; [நன் - உயிர் ௨௦; மெய் - ௨௬, ருசு.]

சரி - ஸத்ருசஃ என்னும் வடசொல் பிராகிருதபாஷையில் ஸரிஸோ எனத்திரிந்து தமிழிற் சரியென நிற்கும்; நேரென்று பொருள்.

என்னை - என்ன? எவன் என்னும் வினைக்குறிப்பு முற்று, என்என விகாரப்பட்டது; ஐ - சாரியை.

திறை - கப்பம்.

இராசகுமாரன் - திவிட்டன்.

அவர்களை - தூதர்களை.

பக்கம்—50.

உரப்பியது - அதட்டியது.

சம்பவம் - நிகழ்ச்சி; நடந்தசெய்தி.

அழற்பொறி - நெருப்புப்பொறி.

துகள் - பொடி; தூளி யென்னும் வடசொல்லின் சிதைவு.

தூணை யடித்தது, கோபாவேசத்தால்.

ஆர்த்த - ஆரவாரித்த.

தெளிவானுக - தெரிந்துகொள்க.

கரம் - கை.

கூப்பி - குவித்து; கூம்புஎன்பதன் பிறவினையான கூப்பு - பகுதி.

இரண்டு கரத்தையுந் தலைமேற்கூப்புதல், திரியங்கநமஸ்காரமெனப்படும்.

தாங்கள் என்ற படர்க்கைச்சொல் நீங்கள் என்ற முன்னிலைப்பொருளில் வந்தது, மரியாதைபற்றிய இடவழுமைதி; [நன் - பொது - ௨௧.]

இராசகுமாரத்தி - சுயம்பிரபை; குமாரத்தி - குமாரனென்பதன் பெண்பால்.

நடுக்கம்- தமது அரசனிடத்து அச்சத்தால் உடம்பும்மனமும் நடுங்குதல்.

சுவாலிக்கும் - பற்றியெரியும்.

வெகுளி-கோபம்; 'இ' விகுதிபெற்ற தொழிற்பெயர்.

சடிதி = ஜடிதி என்ற வடசொல்லின் திரிபு; விரைவென்று பொருள்.

அக்ஷணம் = அக்கணம் ; அந்த க்ஷணம்.

யுத்தசந்நத்தராக - போருக்குச் சித்தராக.

பறைசாற்றுவித்தல் - முரசறைந்து தெரிவிக்கச்செய்தல்.

விஞ்சைவேந்தர்கள் - மாயவித்தைக்குத்தலைவர்கள் ; வித்யாதரர். அல்லது, வித்தியாதரநகரத்து அரசர்கள்; விஞ்சையென்பது - மாயவித்தையையுடையவித்யாதரரை யுணர்த்துதலை, 'குணப்பண்பு பண்புடைப் பொருள்மேல் நின்ற ஆகுபெயர்' என்க.

சேனாசமுத்திரங்கள் - சேனைகளாகிய கடல்கள் ; கடல்போற் பரந்த சேனைகளென்க.

பக்கம்—51.

இலக்கு-லக்ஷ்ய மென்ற வடசொல்லின் சிதைவு; குறி.

நன்றாயிருந்தது - இகழ்ச்சிதோன்றக் கூறும் எதிர்மறையிலக்கணையாகியபிறகுறிப்பு.

ஒருங்கு-ஒருசேர.

ஒல்லென்று - ஒலிக்குறிப்பு; சப்தாநுகரணம்.

ஒருமிக்க - ஒருசேர.

விருது - வெற்றி.

வானுலகு - தேவலோகம் ; போரிலிறந்தவர் வீரசுவர்க்கஞ்சேர்வரென்பது நூல்துணிபு.

பகர்ந்தனர் - சொன்னார்கள்.

வடு - துன்பம்; பழிப்பு; தழும்பு.

அறன் - தருமம்; இறுதிப்போலி.

அக்கன்னி - சுயம்பிரபை; கன்னி-கந்யா என்ற வடசொல்லின் திரிபு; கலியாணமாகாத பெண்.

காளை - இளவெருதுபோற் கொழுத்தஇளவீரன்; திவிட்டன்: உவமையாகுபெயர்.

கிளை - பந்துவர்க்கம்; மரத்தைக் கிளைபோலத் தழுவிநிற்கும் உறவினத்துக்கு, இது-உவமையாகுபெயராம்.

படும் பாடு-அனுபவிக்குந் துன்பம்.

கனகசித்திரன் - அசுவபுரமென்னும் வித்தியாதரநகரத்து அரசனது குமாரன்.

அமைத்து - அடக்கி.

இருந்த உழி-(தாம்) இருந்தஇடத்திலே (இருந்து கொண்டு), சொல்லல் ஆம் -(செய்தற்கரியகாரியத்தையும் செய்துமுடிப்போமென்று வாயாற்) சொல்லுதல் (யாவர்க்கும்) எளியதாம்;சொன்ன சொல் படி வெல்லல் ஆம் என்பது- தாம் சொன்ன அச்சொல்லின்படி (பகைவரைப்போரிற்) சயித்துவிடலாமென்பது, விதிக்கும் கூடுமோ - தெய்வத்துக்கும் நிச்சயமாகக் கைகூடுவதொரு காரியமோ? [அன்று என்றபடி].

இருந்துழி-இருந்தஉழி யென்பதன் தொகுத்தல்.

விதிக்கும் என்ற உம்மை- அவ்விதியினது செய்தற்கரிய செயல்களையுஞ் செய்து முடிக்கவல்ல சர்வசக்தியை விளக்குதலால், உயர்வுசிறப்பு. விதி-பிரமனும், ஊழ்வினைப் பயனுமாம். ஓ - எதிர்மறை. அரியவற்றை எண்ணிச் சொல்லுதல் வலிமையில்லாதவர்களுக்கும் இயலுதலால் 'சொல்லலாம்' என்றும், அவற்றை அவ்வாறு செய்தல் வலிமையுள்ளவர்க்கும் இயலாது போதலால் 'விதிக்குங் கூடுமோ' என்றுங் கூறப்பட்டது.

இந்த அடிகள்-வில்லிபுத்தூரார்பாரதத்து நிரைமீட்சிச்சருக்கத்து அ௩-ஆம் பாட்டின் முற்பகுதியாம். அருச்சுனனை எளிதில்வெல்லலாமென்று முன்பு செருக்குமொழி கூறிப் பின்பு அவனையெதிர்த்து மும்முறைதோற்ற கர்ணனை இகழ்ந்து அசுவத்தாமன் கூறும் வார்த்தை;தகுதிபற்றி,இங்கே எடுத்தாளப்பட்டது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ், சொல்லியவண்ணஞ் செயல்" என்பது, திருக்குறள் - வினைத்திட்பம் - ௩ - ஆம் பாட்டு.

பக்கம்—52.

அமரர் - (அமிருத முண்டதனால்) மரணமில்லாதவர்; தேவர்.

ஊழிக்காலம் - கற்பாந்தகாலம்.

தலைவாயில் - அரண்மனையின் வெளிவாசல்.

அஷ்டாங்கநமஸ்காரம் - எட்டு உறுப்புக்கள் தரையிற்பட வணங்குதல்; எட்டுஉறுப்பு - இருகால், இருகை, இருதோள், நெற்றி, மார்பு; வேறும் கூறப்படும்.

அவன் தம்பி-அசுவகண்டனது தம்பி.

வச்சிரகண்டன் - வச்சிர ரத்தினம் போல் வலிமையும் ஒளியுமுடைய கழுத்துடையவ னெனப் பொருள்படும்.

படை - சேனை.

தோணி - மரக்கலம்; த்ரோணீ என்ற வடசொல்லின் திரிபு.

மனுடர் - மநுஷ்யர்; காசியபமுனிவர்மனைவிமார்களுள் மநுஎன்பவளிடம் ஆதியிற் பிறந்தவர்.

செறல் - சேறலெனத் திருத்துக: செல்லுதலென்று பொருள்; செல்+தல்: நீட்டல் - விகாரம், மற்றவை - சந்தி. செறல் என்பது - பகைத்தல் அல்லது கோபித்தலென்று பொருள் படும்.

தம்பிமார் - இரத்தினகண்டன், நீலகண்டன், சுகண்டன்.

மக்கள் - புத்திரர்; இரத்தினகண்டன் முதலியோர் ஐந்நூறுபேர்.

அயர்வு - தளர்ச்சி. அயர்வில்லாத-சோர்ந்து உபேக்ஷிக்கத்தகாத.

மந்திரசாலை - ஆலோசனைசெய்யும் இடம்.

போதலோடும் - சென்றவுடனே.

தூமகேது - மேககூடநகரரசன்.

வெள்ளிமலை - வித்தியாதர நகரமிருக்கும் இடம்.

பக்கம்—53.

அருங்கலம் - பெறுதற்கரிய ஆபரணம்; என்றது, இங்கே, சுயம்பிரபையை.

பெறுவார் - அடைதற்குஉரியவர்.

சடி=சுவலநசடி.

விஞ்சையருலக மெனப்படுகிற வெள்ளிமலையின் வடதிசைநகரத்தை யாள்பவன் அசுவகண்டனும், அம்மலையின் தென்திசை நகரத்தை யாள்பவன் சுவலநசடியு மாதலால், நம்மலையிற்பிறந்த மகளை நம்அரசனையன்றிப் பெறுதற்குஉரியவர்இல்லையென்றுன்.

பெரிதும் - மிகவும்.

காதல் - அன்பு.

அரசநூல் - அரசர்க்கு உரிய நீதி நூல்.

அரசர்க்குஉரிய உபாயம் - சாமம் பேதம் தானம் தண்டம் என நால்வகைப்படும். சாமம் - நல்வார்த்தைசொல்லிச் சமாதானப்படுத்தல், பேதம் - பகைவர்பலருள் ஒருத்தருக்கொருத்தர் மனம் வேறுபடச் செய்தல், தானம் - பகைவர்க்குப் பொருள் கொடுத்தல், தண்டம் - பகைவரைப்போர் செய்து அழித்தேவிடுதல்; இவற்றில் தண்டமேசிறந்ததென்கிறுன் இவன்.

'முதலிய' என்றது, தானத்தை உளப்படுத்தும்.

வசை - பழிப்பு; இசைக்கு எதிர் மொழி.

மனிதப் போர் - மனிதர்க்கு உரிய போர்.

தெய்வப் போர் - தேவர்க்கு உரிய போர்.

ஸ்ரீ பாலன் - செல்வத்தைக் காப்பவ னென்று பொருள்படும்.

திருநிலையகம் - ஸ்ரீநிலயமென்னும் வித்தியாதரநகரம்; திருமகள் தங்குமிட மெனப் பொருள்படும்.

படை - ஆயுதம்.

சங்கீர்ணப்படை - மனிதர் தேவரென்ற இருதிறத்தார்க்கும் பொதுப்பட உரியது.

இயற்றுதல் - இங்கே, உபயோகித்தல்.

விரிவு - பரந்தஇலக்கணம்.

ஈண்டு உரைப்பின் பெருகும் - இவ்விடத்திற்சொன்னால் நூல் வளரும்.

அவ்விடத்து - எதிர்ப்பக்கத்தில்.

பக்கம்—54.

கோயில் - அரண்மனை; கோ இல் எனப்பிரிந்து, சிறந்தஇட மென்றும், அரசனதுஇட மென்றும் பொருள் படும். கோவில் என வகரம்பெற்றுவருதற்கு.

உரியது கோயில் என யகரம்பெற்று வந்தது, இலக்கணப்போலி.

தக்ஷிணசேடி - தெற்குப்பக்கத்து வித்தியாதரநகரம்; இரதநூபுரம்.

ஆக்குதும் - ஆக்குவோம்; தும் - தன்மைப்பன்மைவிகுதி, எதிர்காலங்காட்டிற்று.

எச்சரித்து - சாக்கிரதைப்படுத்தி.

'மருகராகியதிவிட்டவிசயர்கள்'என்று எழுதியிருப்பினும், மருமகனாகிய திவிட்டனும் அவன்தமையனான விசயனுமென்றே பொருள்கொள்ளவேண்டும். திவிட்டன்மாத்திரமே சடியரசனது மருமகன்.

கூறுதிர் - சொல்வீர்.

உதர வெள்ளம்=உதிர வெள்ளம்; இரத்தப்பெருக்கு; ருதிர மென்னும் வடமொழி உதிரமெனத் திரியும்.

சங்கவண்ணன்-விசயன்;சங்குபோல் வெண்மையான வர்ணமுடையவன்.

வரை - மலை.

புழுக்கனென்றது, இகழ்ச்சியால்.

பக்கம்—55.

மிஞ்சினல் - விஞ்சினல் என்பதன் முதற்போலி.

வருவது- தொழிற்பெயர், வினைமுற்றுத்தன்மைப்பட்டது; ஆதலால், 'சேனைகள்வருவது' என்றமுடிபு பன்மையொருமைவழுவாகாது.

அப்பியாசப்படுத்துதல் -பயிலுதல்.

வழிபாடு - பூசை.

தன்அடிப்பட இயக்கும் - தனது அடியிற்பொருந்தும்படி செய்யவல்ல.

கற்பகதரு - வேண்டுவார் வேண்டுவனவற்றை யுண்டாக்குந் தெய்வவிருக்ஷம்.

நேர்ந்து - எதிரில்வந்து.

தமர்கள் - உறவினர்; தம்மவர்: தாம் - பகுதி, அர் - விகுதி,கள் - விகுதிமேல்விகுதி.

'அவர்' என்றது, அசுவகண்டனை.

திவ்விட்டன்=திவிட்டன்.

உண்டாயது - உண்டாயிற்று; ய் - இறந்தகாலஇடைநிலை.

'தூதரைக் கொல்லலாகாது' என்பதுநூற்கொள்கையாதலால்,'தூதுவராதலிற் பிழைத்தார்கள்' என்றான்.

பேதைகள் - அறிவில்லாதவர்; பேதையின் எதிர்மொழி - மேதை.

பக்கம்—56.

குத்திரம் - க்ஷுத்ர மென்ற வடசொல்லின் திரிபு; அற்பம், எளிமை.

ஆணுகையைச்சக்கரமென்றல்மரபு.

'அவ்வேழை' என்றது, அசுவகண்டனை. ஏழை - அறிவில்லாதவன்.

ஏசி - இகழ்ந்துபேசி.

நீவிர் =நீங்கள்;முன்னிலைப் பன்மைப்பெயர்.

இவன்பணியில்நிற்க - இவனதுகட்டளையின்கீழ்அடங்கிநிற்க.

வல்லை - விரைவில்.

புளிக்க - வருந்த.

அசரீரி - உடம்பில்லாமல் ஒலிமாத்திரத்தாற்புலப்படுந் தெய்வத்தன்மையுள்ள வார்த்தை; ஆகாயவாணி.

துந்துபி - பேரிகைவாத்தியம்; துந்து என்ற ஒலியால் விளங்குவதென்று காரணப்பொருள் கூறுவர்.

ஓகை - உவகைஎன்பதன்மரூஉ;மகிழ்ச்சி.

மலிந்தது - நிறைந்தது.

மாதர்க்கு இடத்தோள் துடித்தல் சுபநிமித்தம்.

பொலிவு - விளக்கம்.

சகுனம்=நிமித்தம்.

மாற்றலர் - பகைவர்; (மனத்தை) மாற்றுதலுடையவர்; உடன்பாட்டுக் குறிப்புவினையாலணையும்பெயர்.

முரசம் - பேரிகை.

பறை - வாத்தியம்.

ஸர்ப்பம்- வடசொல்; ஓடுவதெனக் காரணப்பொருள்படும்.

கூம்பு - சிகரம்.

கவந்தம் - கபந்த மென்ற வடசொல்லின் திரிபு; தலையற்ற உடம்பு.

இயல்புதிரிந்து - கணவர்க்கு அடங்கிநடக்கிற இயற்கைக்குணம் மாறி.

பிணங்கினார்கள் - மனஸ்தாபப்பட்டார்கள்.

முடி - கிரீடம்.

தூங்கின - தொங்கின.

விண்மீன்கள்-நக்ஷத்திரங்கள்; வானத்தில் மின்னுவன என்றுவது,ஆகாயமாகிய கரியபெரியகடலில் சஞ்சரிக்

கும் மீன்போன்றன என்றுவது காரணங் காண்க.

பொருள் - பிரதானம்.

பக்கம்—57.

அழன்று - கோபித்து.

சிறியான் - திவிட்டகுமாரன்.

அணிகள் - அலங்காரங்கள்.

மணவணி - கலியாணத்துக்குஉரிய அலங்காரம்.

பதினெண்ணாயுதங்கள் - வில், வாள், வேல், கலப்பை, உலக்கை, சூலம், ஈட்டி, சக்கரம், உடைவாள், அம்பு, கதை, வச்சிரம், கேடயம், மழு, கோடாலி, பிண்டிபாலம், கப்பணம், வளைதடி என்பன; வேறுவகையாகவுங் கூறலாம்.

குற்றி=குத்தி.

சமர் - போர்; ஸமரம் - வடசொல்.

உரத்த - அதிகப்பட்ட.

அருக்ககீர்த்தி - சுவலநசடியின் மகன்; சுயம்பிரபையின் உடன்பிறந்தவன்; திவிட்டன்மைத்துனன்.

முனைவோர் - முற்படுபவர்.

தரணி- பூமி;(பொருள்களைத்) தரிப்பது.

இரணியவரை - பொன்மலை; மேரு. ஹிரண்யம் - பொன்.

தரணியில் இரணிய முரணிய என எதுகைத்தொடைக்கு உரிய சொற்கள் அடுத்துவந்தது, பிராச மென்னுஞ் சொல்லணியாம்; அது - எழுத்து ஒன்றாயினும் பலவாயினும் இடையிட்டுப் பலமுறைவருவது.

முரணியது- பகைத்து எதிர்த்தது.

மனோவீரம் - மனோதைரியம்.

கொதித்து - கோபித்து.

மலைந்தனர் - போர்செய்தார்கள்.

புறமிட்டனர் - முதுகுகொடுத்தார்கள்.

ஒருங்கு மயங்க -ஏககாலத்திற் கலக்க.

கோல் - அம்பு. ஆயிரம் - பல.

பக்கம்—58.

இயலாது - முடியாது.

புதைதர - புதைய; தா - துணைவினை.

பறந்தன - சிதறியழிந்தன.

வறந்தன - வற்றின; குதிரைகளைக் கடலென்று உருவகப்படுத்தினதற்கு ஏற்ப, 'வறந்தன' என்றார்.

தேர் அங்கம் - தேரின் உறுப்பு.

எஞ்சிய - மிச்சமான, சேடித்த.

புண்ணிலே வேல் படுதல் - சுயம்பிரபையைத் தனக்குமணஞ்செய்வித்திடாமல் திவிட்டனுக்குக் கொடுத்ததனாலாகிய துன்பத்தின்மேல் தன் படைவீரர் அருக்ககீர்த்தியால் வெல்லப்பட்ட செய்தி கேட்ட வருத்தத்துக்கு உவமை.

அருங்கலம் என்னும் - பெறுதற்கு அரிய ஆபரணம்போலச் சிறந்ததென்றுசொல்லத்தக்க. அம்மலைக்கு அருங்கலமென்று ஒருபெயருமாம்.

மானுடர் - மாநுஷர்: வடசொல்.

பக்கம்—59.

பெயர் - புகழ்.

நிறுத்தல் - ஸ்தாபித்தல்.

குணித்தல் - கணக்கிடுதல்.

திடர் - மேடு, த்வீபம்.

கேடகம் - பகைவரெறியும் ஆயுதங்களைத் தடுப்பதொரு போர்க்கருவி: மேலே மயிர் நிறைந்த தோல் அமைந்தது.

பொருங்கள் - போர்செய்யுங்கள்.

இறக்கவேண்டியவர்கள் பொருங்கள், பிழைக்கவேண்டியவர்கள் ஓடுங்கள் - முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி; [நன்- பொது-உக.]

வியாக்கிரரதன்-அரிபுரத்து அரசன்; இப்பெயர் - புலியை வாகனமாகக் கொண்டவனென்று பொருள்படும்.

அருக்ககீர்த்தியை அருக்கனென்றது - வீமசேனனை வீமனென்றும், கிருதவர்மாவைக் கிருதனென்றும், கூறுதல்போல, ஒருபெயரை அப்பெயரின் ஒருபகுதியாற் குறித்தலாம்; இதனை வடநூலார் 'நாமைகதேசே நாமக்கிரகணம்' என்பர்.

பொருவன் - போர்செய்வேன்; இதில், அன்-தன்மை யொருமை விகுதி.

பொர - போர்செய்ய.

விஞ்சையர்+பெண்=விஞ்சையப் பெண் ; "சில விகாரமா முயர்திணை" என்றதனால், உயர்திணைப்பெயர் ஈறு

கெட்டு வருமொழிமுதல் வலி இரட்டிற்று.

ஆர - நிரம்ப.

அறிவல் - அறிவேன்; அல் - தன்மையொருமைவிகுதி: இது, எதிர்கால இடைநிலையோடுமாத்திரம் வரும்.

ஊழ்வழி - முற்பிறப்பிற்செய்த வினைப்பயன்படியே.

நூலோர்துணிபு- சாஸ்திரம்வல்லவரது தேர்ந்த கொள்கை. துணிபு - தொழிலாகுபெயர்.

அயக்கிரீவன் = அசுவகண்டன்; ஹயம் - வடசொல்: குதிரை.

மாற்றி - தடுத்து.

பக்கம்—60.

இந்திரகாமன் - இந்திரன்போலழகியவனெனப் பொருள்படும்.

வரசேனன் - சிறந்த சேனையையுடையானெனப் பொருள்படும்.

பக்ஷத்தான் - பக்கத்தான்.

காமுகன் - வேட்கையுடையானெனப் பொருள்படும்.

அரிகேதனன் = அரிகேது; சிங்கக்கொடியுடையானெனப் பொருள்படும்.

சுவலனரதன் - அமராபுரத்தரசன்; இப்பெயர் - விளங்குந் தேருடையானென்று பொருள்படும்.

தூமகேதனன் = தூமகேது; இப்பெயர்கள் - புகைக்கொடியுடையானென்று பொருள்படும்.

பிழையா வேல் - தவறாத வேலாயுதம்.

குரவீர் - பெரியீர்; குரவர் என்பதன் முன்னிலை.

பக்கம்—61.

நிற்க - வியங்கோள்முற்று.

இஃது - உபசாரம்.

முரண்டு - மாறுபட்டு: இறந்தகால வினையெச்சம்; முரண் என்ற பகுதியின் இறந்தகாலவினையெச்சம்,முரணியெனவும் வரும்.

விட்டேறு - எறியீட்டி, வேல்.

பரிசை - கேடகம்.

உரம் - மார்பு; உரஸ் - வடசொல்.

புகலிடம் - சென்றொளிக்குமிடம்; சரணம்புகு மிடமுமாம்.

சிறிபாலன் - இதனை 'ஸ்ரீசேனன்' எனத் திருத்துக."வென்று வேற்றவர் நின்றனர்,என்ற மாற்றமிசைத்தலும், நன்று நன்றென நக்கு மேற், சென்றனன் சிறீசேனனே" என முதனூலில் வருதலும், வசன சூளாமணிமுழுப்புத்தகத்தில் 'ஸ்ரீசேனன்' என்றேயிருத்தலும், அடுத்த பக்கத்தில்'முன் தன் பட்சத்தானாகிய சிறீசேனன் சொன்னதுபோல' என வருதலும் காண்க.

கவரிமான்- கவரி யென்னும் மான்; "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்", "மானநோக்கிற் கவரிமா வனைய நீரார்", "மயிர்தான் பலன்படா மாவிற்குக் கூற்றமாம்" என்பன காண்க.

சிறீசேனன் = ஸ்ரீசேனன்: அசுவகண்டன் சேனாவீரரில் ஒருவன்.

ஆண்மையாகிய சுடரைத் தூண்டி - பௌருஷமாகியநெருப்பை வளர்த்து.

வீரப்பிரதாபம் - பராக்கிரமமிகுதி.

ஆர்முகம் - ஆரின் இடம்; தேர்ச்சக்கரத்தின் அகவாய்க்கும், அஞ்சுருவாணிக்கும், சக்கரத்தின் இடையிலேயுள்ள இலைகளுக்கும் 'ஆர்'என்று நூல்களிற் பெயர் வழங்குகிறது.

செந்நீர்முகம் ஆழ - இரத்தத்திலே அழுந்த; முகம் - ஏழனுருபு.

தேர்முகம் -தேரின்முனிடங்கள்.

காலாந்தகன் - பிராணிகளின்ஆயுட்காலத்தை முடிவுசெய்பவன்; யமன்.

இந்தஸ்ரீபாலன் - பிரசாபதியரசன் தம்பி.

எதிருன்றுதல் - எதிரிற் போருக்கு நிலைநிற்றல்.

பக்கம்—62.

நாந்தகம் - வாள்.

விஞ்சையன் - இங்கே,ஸ்ரீசேனன். இவனை 'விஞ்சையன்' என்றது, ஸ்ரீபாலனை மனிதனென்று காட்ட.

'திருநிலையநகர்க்கு அதிபனான சிறீசேனன்' என்றதனால், 53 - ஆம்பக்கத்தில் வந்த ஸ்ரீபாலன் போலவே இவனும் ஸ்ரீநிலயநகரத்தரசனென்க.

முன்சொன்னது, 61 - ஆம் பக்கத்திற் காண்க.

பாதசாரி - கால்களால்நடப்பவன்.

இவர்ந்து - ஏறி.

இரத்தச் சேற்றினுள் பெரும்பாலும் மறைந்த நீண்ட தசை பாம்பினுடல் போலவும், அதன்மேல் விழுந்துகாணப்படுகிற கேடகம் பாம்பின் படம்போலவும் இருத்தலால், அப்போர்க்களத்தினிடம், பாம்புப் புற்றெடுத்ததுபோ லிருந்த தெனப்பட்டது.

"பெருகிய குருதியுட் பிறங்கு செந்தடி, யருகுடை யளற்றினு ளழுந்திப் பாகமே, சொரிகதிர்க் கேடக முடிகள் தோன்றலால், பொருகளம் புற்றெடுக்கின்ற போலுமே" என்ற முதனூலைக் காண்க.

தரியலர் - பகைவர்; (தமதுஆக்கத்தைப்) பொருதவர்; எதிர்மறைவினையாலணையும்பெயர்.

தானை - சேனை.

கனிஷ்டர் - தம்பிமார்.

கோபாதீதர் - கோபம்மிக்கவர்.

பக்கம்—63.

சகோதரர் - ஒருதாயின்வயிற்றிற் பிறந்தவர் ; ஸஹ+உதர+அர்: ஸஹ - கூட, உதரம்-வயிறு.

சத்தம் - ஒலி; சப்தம் - வடசொல்.

அலாயுதம் - கலப்பைப்படை; ஹல ஆயுதம் எனப் பிரியும்.

தெய்வீகம்- தெய்வத்தன்மை: தைவிகம் - வடசொல்.

நாஞ்சில் - கலப்பை.

'பேரையும்' என்றவிடத்து 'போரையும்' என்றிருத்தல் நலம்; "பொடித்தலை நிலத்தவர் போரு மாண்மையும்" என்று முதனூலில் உள்ளது.

இன்னே - இப்பொழுதே.

தாடி-மோவாய்மயிர்.

ஆவிநாழிகை - ஆவநாழிகையெனத் திருத்துக; அம்பறாத்தூணி.

வச்சிரபல்லவம் - வச்சிரபல்லமெனத் திருத்துக: வைரம்போ லுறுதியான அம்பு.

வழிபட்டு-பூசித்து.

ஏவினன் - பிரயோகித்தான்.

ஏ - அம்பு; ஓரெழுத்தொருமொழியாகிய பெயர்; இதன்முன் உயிர்வர வகரவுடம்படுமெய் வந்தது.

எதிரி,இ-கருத்தாப்பொருள்விகுதி.

பூதரம் - மலை; பூமியின் மேலுங் கீழும் நின்று அதனைத் தாங்குவது.

ஒற்றர் - வேவுகாரர் ; ஆங்காங்கு நிகழும்சமாசாரங்களைஒற்றிக்கொண்டு வருபவர்.

உருமேறு - பேரிடி; ஏறு - ஆண்பாற்பெயர்; சிறந்ததையும் பெரியதையும் ஆணென்றல், மரபு: ஆணைலையென்பதுங் காண்க.

அரவம் - பாம்பு; அரா என்பது குறுகி உகரமேற்று அம்சாரியை பெற்றது.

வாளா - சும்மா: இடைச்சொல்.

புறவாழி - பெரும்புறக்கடல்; உலகத்துக்கு வெளியி லுள்ளது.

சண்டவேகை-கொடிய வேகமுள்ள தெனப் பொருள்படும்.

பக்கம்—64.

கூற்றுவன் - யமன்.

இற்றைப்பொழுது- இப்பொழுது.

ஊன் - மாமிசம்; ன் - சாரியை.

துணங்கை-பேய்க்கூத்து; இரண்டு கைகளையும் முடக்கி விலாப்புறத்திலே வைத்துக்கொண்டும், அவற்றால் விலாப்புறத்தைத் தட்டிக்கொண்டும் ஆடுவது.

பிரசாபதி - சனங்களுக்குத் தலைவனென்று பொருள்படும்.

தெற்றி - தடைப்பட்டு.

தாள் - கால்.

பரடு - காலின் ஒருறுப்பு.

பீலி - மயில்தோகை.

ஆய - ஆகிய.

கழற்காய் - மகளிராடும் ஒருவகை விளையாட்டுக்காய். கழலென்னுங்கொடியின்காய்.

எடுபட்டு - நிலைபெயர்ந்து.

பிரசண்டவாயு - மிக்கவேகமான காற்று.

திரை - அலை.

நிமிர - எழும்ப.

தன் அகடு அடக்கவும் - தன் உள்ளே அடக்கிக்கொள்ளவும்;அகடு-வயிறு.

ஊழியிருள் - கல்பாந்த காலத்து மிக்குத்தோன்றும் இருள்.

உரிஞ்சுண்டும் - உராயப்பெற்றும்.
உலைதல் - அழிதல்.
'சேனைகள்' என்றது சேனைவீரரைக் குறித்தலால், 'உலைந்தார்கள்' என்ற உயர்திணைப் பன்மை வினைமுற்றைக் கொண்டது.
இளையநம்பி - திவிட்டன்.
மைத்துனன் - அருக்ககீர்த்தி.
ஆகாயவுலகம் - மேலுலகம்.
உற்றஇடத்து உதவும் - ஆபத்து நேர்ந்தவிடத்து உதவிசெய்யும்.

பக்கம்—65

பாஞ்சஜந்யம் - திருமாலுக்குஉரிய சங்கு: அப்பெருமானது ஐம்படைகளி லொன்று. (மற்றவை - சக்கரம், வில், வாள், கதை என்பன.) இந்தச் சங்கு மற்றையெல்லாச்சங்குகளினும் பலமடங்கு சிறந்த தாதலை, "இப்பியாயிரமே சூழ்ந்த திடம்புரி யென்று கூறும், ஒப்பில் சங்காயிரஞ் சூழும் வலம்புரி யென் றோதும், அப்படியதுவுஞ் சூழ்ந்த சலஞ்சல மாகு மற்றைத், தப்பிலாச் சலஞ்சலங்கள் சார்ந்தது பாஞ்சசந்யம்" என்ற நிகண்டினாலும் அறிக. இது பஞ்சசநனென்னும் அசுரனது எலும்பினாலாகியதுபற்றி, இதற்கு 'பாஞ்சசந்யம்' என்பது வடமொழித்தத்திதாந்த நாமமாகிய காரணப் பெயர். சங்கினுருவந்தரித்துச் சமுத்திரத்திற் சஞ்சரித்துக்கொண்டிருந்த பஞ்சசனனென்ற அசுரன், மேல்கடலிற் பிரபாசதீர்த்தகட்டத்தில் ஒருகால் நீராடப்புக்க சாந்தீபினிமுனிபுத்திரனைக் கவர்ந்து கொண்டு போய்விட, பின்பு சாந்திபினிமுனிவனிடம் சகலசாஸ்திரங்களையுங் கற்ற கண்ணன் குருதக்ஷிணையாக அம்மகனை மீட்டுக்கொடுக்கப் புக்கபொழுது கடலிற் பிரவேசித்து அப்பஞ்சசனனைக் கொன்று அவனதுஎலும்பாகிய சங்கத்தைக் கைக்கொண்டன னென்பது வரலாறு.

சங்கு - சங்கம்; வடசொல்.
சார்ங்கம் என்ற வில்லும், திருமாலுக்கு உரியதே.
வலம்புரி - வலப்பக்கமாக உட்சுழிந்திருக்குஞ் சங்கு.

ஊங்காரம் = ஹுங்காரம்: ஹும் என்று அதட்டும் ஒலி.
சுயம் - ஸ்வயம் என்ற வடசொல்லின் திரிபு; தனக்குரிய.
திரைய - அலைய, சுருங்க.
அதரம் - உதடு; வடசொல்.
உழையர் - பக்கத்திலுள்ளவர், பரிவாரசனங்கள்: இப்பெயர், மந்திரிகளுக்கும் வழங்கும்.
அரசுவா - சிறந்தயானை, பட்டத்துயானை. யுவா என்ற வடசொல் - யௌவனபருவமுடையயானைக் குறிப்பது; அது, உவா என விகாரப்பட்டு, கொழுத்தயானைக்கு வழங்கும். இதன் இலக்கணம் - நான்கு காலும் துதிக்கையும் கோசமும் வாலும் ஆகிய ஏழுறுப்பு நிலத்தில் தோய்ந்து, பாலையுஞ் சங்கையு மொத்த வெண்ணிறம் வாய்ந்த கால்நகமுடையதாய், காலாலும் துதிக்கையாலும் உடம்பாலும் வாலாலும் கொம்பாலுங் கொல்லவல்லதாய், ஏழுமுழம் உயர்ந்து, ஒன்பதுமுழம் நீண்டு, பதின்மூன்றுமுழச்சுற்றளவுடையதாய், சிறிய கண்களையும் சிவந்த புள்ளிகளையுமுடையதாய், முன்பக்கம் உயர்ந்து பின் பக்கந்தாழ்ந்தது, அரசயானை யெனப்படும்.

ஆரோகணித்து - ஏறி.
வரி சிலை - கட்டமைந்த வில்.
கிளர்ந்து எறிக்கும் - விளங்கி ஒளி வீசுகிற.
கருடன் - திருமாலுக்குஉரிய வாகனம், பக்ஷிராசன்.
வலங்கொண்டு - பிரதக்ஷிணஞ்செய்து: வலங்கொள்ளல் - வலப்புறத்தாற் சுற்றுதல்.
அசுரர் - பாற்கடலில்தோன்றிய சுரையை [மதுவை]ப் பானஞ்செய்யாதவர்: தேவர்க்குஎதிரானவர்; பகைவருயிரைக் கவர்பவர்.
ஏனையோர் - மற்றையோர்; ஏனை - இடைச்சொற்பகுதி.
காறும் - வரையிலும்.
பற்று - ஆசை.
அனல்விக்கின்றாய் - கோபிக்கச் செய்கிறாய்.

திவிட்டநம்பி - திவிட்டனாகிய ஆண்மகன்; நம்பி - ஆடவரிற்சிறந்தவன்: ஆண்பாற்சிறப்புப்பெயர்; நம்முடைய தலைவனென்றாவது, நம் பத்தக்கவனென்றாவது காரணப்பொருள் காண்க.

வரை - எல்லை.

முன்னிலை - எதிரிடம்.

ஆற்றகில்லேன் - பொறுக்கமாட்டேன்; கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை: எதிர்மறைஆகாரம்புணர்ந்துகெட்டது: அ - சாரியை.

பக்கம்—66.

கோட்டி - வளைத்து; கோடு என்பதன் பிறவினையான கோட்டு - பகுதி.

சர மழை, அம்பு மாரி - பாண வர்ஷம்.

சிறகர் - சிறகு என்பதன் ஈற்றுப்போலி; இங்கு உயிர்த்தொடர்க்குற்றியலுகரத்துங்கு அர் - போலியாயிற்று.

குதறுதல் - சிதறுதல்.

புடை - பக்கம்.

தேவப்படைக்கலங்கள் - தெய்வத்தன்மையுள்ள ஆயுதங்கள்; அஸ்திரங்கள்.

அந்தரமார்க்கம் - ஆகாயவழி.

உரகம் - பாம்பு; மார்பினால் நகர்வது என்று காரணப் பொருள்; உரம் - மார்பு.

துண்டித்து - துணித்து.

வாருணாஸ்திரம் - வருணனைத்தெய்வமாகக்கொண்டது; நீர்மயமானது.

துயிற்றும் - தூங்கச்செய்யும்; று - பிறவினைவிகுதி.

சாக்கிரதாஸ்திரம் - விழிப்பையுண்டாக்கும் அஸ்திரம்.

தாழ்க்காது - காலதாமதஞ்செய்யாமல்.

எய்த - பிரயோகித்த; எய் - பகுதி.

கீழ்விழுந்தவன் வெட்கத்துக்கு அஞ்சிச் சிரித்தனன் என மாறுக.

பாவனைகாட்டுதல்- வேறொருவகையாகக் காண்பித்தல்; இங்கே, தனது இகழ்ச்சிபற்றிய சிரிப்பைப் பிறரது இகழ்ச்சியை நோக்கிய சிரிப்பாகக் காட்டினனென்க.

ஆழி - சக்கரம்; வட்டவடிவானது: அல்லது, (பகைவரை) அழிப்பது என்று காரணப்பொருள்.

வெருட்டுதல் - அஞ்சுவித்தல்; வெருள்என்பதன் பிறவினை, டு - விகுதி.

திகிரிப்படை - சக்கராயுதம்.

திருகி - சுழற்றி.

கான்ற - வெளியுமிழ்ந்த; கால் - பகுதி.

பக்கம்—67.

நீதிமாந் - நீதியையுடையவன்; மாந் - வடமொழிப்பெயர்விகுதி.

அறிவீனன் - அறிவில்லாதவன்; ஈனன் - ஹீநன்: வடசொல் திரிபு.

செருக்கும் ஆறு - அழிக்கும்விதம்.

நேமி - சக்கரம்.

தடிந்தது - அழித்தது.

மித்ருக்கள் = மித்ரர் - சிநேகிதர்.

யாக்கை - உடம்பு.

ஆற்றல் - வல்லமை.

ஊழ்முறை - விதிமுறைமை.

அவன்பட்டத்துத்தேவி - கனகசித்திரையென்பவள்.

காதலன் - கணவன்; காதல் - அன்பு, அதனையுடையான் - காதலன்: பெண்பால் - காதலி; இப்பெயர்கள், பிள்ளைபெண்களுக்கும் வழங்கும்.

வெற்றுடலம் - உயிர்நீங்கிய உடம்பு; அம் - சாரியை.

வரைந்துகொண்ட - மணஞ்செய்துகொண்ட; உரிமையாக்கிக்கொண்ட.

மஞ்ஞை - மயில்; பெயர்த்திரிசொல்.

திருமங்கலியம் - மங்கலநாண்; தாலி.

காமன்பவனிவரும் - மன்மதன் உலாவிவரப்பெற்ற; வேட்கை வளரப்பெற்ற என்றபடி; காமன் - ஸ்திரீ புருஷர்க்குக் காமத்தை யுண்டாக்குபவன்.

கற்பு - பதிவிரதாதருமம்.

நிறை- (மனத்தை நல்வழியில்) நிறுத்துதல்; ஆசையை அடங்கியிற்கச்செய்தல்: தொழிற்பெயர்; நில் என்பதன் பிறவினையான நிறு-பகுதி, ஐ - விகுதி.

தாள் = தாழ்.

பொறிகள் - பஞ்ச இந்திரியங்கள்; மெய் வாய் கண் மூக்கு செவி.

கபாடம் = கவாடம் - கதவு: வடசொல்.

இங்கே உருவகவணியிருத்தல் காண்க.

இங்கனம் = இங்ஙனம் - இப்படி.

சக்கரதாரி - சக்கரந்தரித்தவன்.

பூமாரி - புஷ்பவர்ஷம்.

தேவதுந்துபி - தேவர்களுக்கு உரிய பேரிகைவாத்தியம்.

சித்திரம் - ஆச்சரியகரமான செய்கை.

வியந்து-அதிசயித்து, கொண்டாடி.

சாற்றுவித்தல் - ஒலிப்பித்தல்.

பக்கம்—68.

பாடி - படைவீடு; சேனைதங்குமிடம்.

சுரமையதிபன் - சுரமையென்ற நகரத்தரசன், பிரஜாபதி.

காளையர் - இளவீரர்.

பேறு - பாக்கியம், பெறப்படுவது.

அரசகோலம் - அரசாளுங்காட்சி.

உவந்து - மகிழ்ந்து.

தூர்யம் - வாத்தியம்: வடசொல்.

மறையவர் - வேதம்வல்லவர், பிராமணர்.

மஞ்சனமாட்டுதல் - ஸ்நானஞ்செய்வித்தல்; மஞ்சனம் - மஜ்ஜந மென்ற வடசொல்லின் திரிபு.

தேவ கணங்கள் - தேவர்களின் கூட்டங்கள்; கணம் -பகுப்புமாம்.

உருவினான் - வடிவழகினால்.

திருவினான் - செல்வத்தினால்.

காப்பு இட்டு - ரக்ஷாபந்தனஞ்செய்து.

தண்டு - கதை.

சக்கரம் முதலிய ஐந்தும் - சக்கரம் சுதர்சந மென்றும், தண்டு கௌமோதகி யென்றும், சங்கு பாஞ்சசந்ய மென்றும், தநு சார்ங்க மென்றும், வாள் நந்தக மென்றும் பெயர் பெறும்.

சாக்ஷாத் - நேரான,ஒன்றான.

ரக்ஷணைக்கடவுள் - காத்தல் தொழிற்கு உரிய தெய்வம்; திருமால்.

சங்கநிதி - சங்கினுருவமாயிருப்பதொரு தெய்வத்தன்மையுள்ள பொருள்வைப்பு.

பதுமநிதி - தாமரைமலரின் வடிவமாயிருப்பதொரு தெய்வத்தன்மையுள்ள பொருள்வைப்பு.

சிந்தாமணி - மனத்தில் நினைத்தவற்றைத் தரவல்ல தெய்வரத்தினம்.

பக்கம்—69.

நிதி - செல்வம்.

தேவநிதிகள் - 'தேவமணிகள்' என்றிருத்தல் நலம்.

சக்கரதெய்வம் - சக்கராயுதத்துக்கு உரிய தேவதை.

புராணநூல் - புராணமாகிய நூல்.

புலம் அல்லது புலமை - அறிவு; அதனையுடையவர் - புலவர்.

புரவலர் - அரசர்; புரத்தல் - காத்தல்: அதில்வல்லவர் - புரவலர்.

மகாபுராணம் - சைனசமயத்தாரது புராணங்களுள் ஒன்று; பெரியபுராணமென்று பொருள்படும்.

ஸ்ரீதேவி - லக்ஷ்மி.

கன்னிகை - கந்யகா என்ற வடசொல்லின் திரிபு.

அருங்கலம் - கிடைத்தற்கரிய பொருள்.

பலதேவன் - பலராமன்: என்றது, விசயனை.

ஆம் - தகுதி. ஆகும் - அசை.

தருக்கு - வரம்புகடந்தமகிழ்ச்சி.

அகற்றி - நீக்கி.

கோடிமாசிலை - கோடிக்குன்றமென்னும் பெரிய மலை.

அத்தகடகம்- ஹஸ்தகடகம்; கையிலணியுங் கடகமென்னும் வளை.

வாசுதேவன் - தத்திதாந்தநாமம்.

அரசவாகனம் - அரசனுக்கு உரிய வாகனம்.

போற்று - வாழ்த்து; துதியுமாம்.

இரட்ட - வீச.

இலக்குமி - லக்ஷ்மீ.

முகப்பு - முன்னிடம்.

முத்துவேய்ந்து -முத்துமாலைகளைத் தொங்கவிட்டு அலங்கரித்து.

நாட்டி - தாபித்து, அலங்கரித்து.

முற்று - முழுவதும்.

பூர்ணகும்பம் - நிறைகுடம்.
ஏற்றி - சிறப்பாகவைத்து.

பக்கம்—70.

கமுகு - பாக்குமரம்; க்ரமுக மென்ற வடசொல்லின் திரிபு.
தூக்கி - தொங்கவிட்டு.
சிலம்பு - ஒருவகைக்காலணி.
பவனி - உற்சவம், ஊர்கோலம்.
மீதூரப்பட்டு-அதிகப்படப்பெற்று.
பரவினர்கள் - துதித்தார்கள்.
பொற்சுண்ணம் - பொற்பொடி; சுண்ணம் - சூர்ண மென்ற வடசொல்லின் சிதைவு.
அஸ்தகிரி - மேற்குத்திக்கிலுள்ள அஸ்தமனமலை.
இளையநம்பி-திவிட்டன். (விசயன்-மூத்தநம்பி.)
கோயில் - இங்கே, அந்தப்புரம்.
காப்பணி - ரக்ஷாபந்தனம்.
பட்டத்தரசியாதிக்கம் - பட்டத்து ராணியாகும் மேன்மை; ஆதிக்கம் = ஆதிக்யம்.
திசாமுகம் - திக்குக்களினிடம்.
அருகசினகரஉற்சவம் - அருகக்கடவுளின் ஆலயத்தில் நடக்குந் திருவிழா; சினகரம் - ஜிநக்ருஹ மென்ற வடசொல்லின் திரிபு: இது, ஜிநாலயத்தின் பெயர்: முன்னே 'அருக' என வந்ததனால், கோயிலென்ற மாத்திரமாய் நின்றது.

அநுபந்தம்.

பாரதம்பாடிய பெருந்தேவனார் காலநிர்ணயம்.

பெருந்தேவனார் தமதுபாரதத்தின் முதலில் காவலன்வாழ்த்தாகப் பாடியுள்ள "வண்மையாற் கல்வியால்" என்ற செய்யுளினால், இவர் தெள்ளாற்றிற் போர்வென்ற பல்லவராயனொருவனது காலத்தி லிருந்தவ ரென்று தெரிகிறது. தெள்ளாறு என்ற ஊரில் பகைவென்ற பல்லவராயன் நந்திபோதவர்ம னென்னும் பெயருடையவ னென்றும், அவன்பெயர் நந்திவர்மன் நந்திபோதராசன் எனவும் வழங்கப்படு மென்றும், அவன் 'பல்லவமல்லன்' என்னும் அடைமொழியுடையா னென்றும், அவன் இரணியவர்மராசனது குமார னென்றும், அவனொருவன்தவிர வேறெவரும் தெள்ளாற்றிற் போர் செய்ததாகத் தெரியவில்லை யென்றும், அவன் (கி - பி.) 710 - ஆம் வருஷம் முதல் 760 - ஆம் வருஷம் வரையில் அரசாண்டன னென்றும் சிலாசாதன பரிசோதகர் ஆராய்ந்து தேர்ந்து வெளியிட்டுள்ளார். ஆகவே, அவன்காலம் இப்பொழுதைக்கு 1140 - வருஷங்களின்முன் பென்று விளங்குகிறது. இதனினும் பலமான ஆதாரம் வேறு ஏற்படுமாயின், அது மற்றொருசமயத்திற் காட்டப்படும்.

மற்றுஞ் சில குறிப்பு.

பாரதவெண்பா 158 - ஆம் பாட்டில் "தாளிக் கறுகம்புல்" என்றதில் கு-சாரியை யெனக் கொண்டு, தாளியறுகம்புல் என்று உரைப்பினும் அமையும். தாளியறு கென்பது - அறுகம்புல்லில் சிறந்த தொரு வகையாம். திருவாசகத்தில் போற்றித்திருவகவலில் "தாளி யறுகின் தாராய் போற்றி" என்றும், அன்னைப்பத்தில் "தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்" என்றும் வருதல் காண்க.

பன்னூற்றிரட்டில் 25 - ஆம் பாட்டு, பழமொழியின் உகசு - ஆம் பாட்டாம். அதன்பழையவுரையால், 'அடர்ந்து' என்பதற்கு- (வறுமையால்) அடரப்பட்டு என்றும், 'ஆற்றுதபோழ்து' என்பதற்கு - ஒருவர்க்குஒன்றைச் செய்யவே மாட்டாத காலத்து என்றும் பொருளென்று தெரிகிறது.

யாப்பிலக்கணச்சுருக்கம்.

யாப்பாவது—பலசொற்களாலும் பொருளுக்கு இடமாகக் கற்று வல்ல புலவர்களால் அணிபெறப் பாடப்படுவது.

இதற்கு - எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என உறுப்பு ஆறும்.

எழுத்தாவன—கீழ் எழுத்ததிகாரத்திற் கூறப்பட்ட அக்ஷரங்கள்.

அசையாவது—எழுத்தினாலாக்கப்பட்டுச் சீருக்குஉறுப்பாய் வருவது.

அது - நேரசை, நிரையசை என இருவகையாம்.

நேரசையாவது—ஒரு குறிலாவது நெடிலாவது தனித்தாயினும் ஒற்றடுத்தாயினும் வருவது.

(உதாரணம்.) 'ஆழி'என்பதில் முறையே நெடிலுங் குறிலுந் தனித்தும், 'சொல்வான்'என்பதில் முறையே குறிலும் நெடிலும் ஒற்றடுத்தும் நேரசையாயின.

நிரையசையாவது—குறிலிணையாவது குறில்நெடிலாவது தனித்தாயினும் ஒற்றடுத்தாயினும் வருவது.

(உ-ம்.) '**அணி**'- குறிலிணை தனித்தும், '**கலம்**' - குறிலிணை ஒற்றடுத்தும், '**நிலா**' - குறில்நெடில் தனித்தும், '**படாம்**'-குறில்நெடில் ஒற்றடுத்தும் நிரையசையாயின.

அ ஆ என்பதுபோல விட்டு இசைத்தா லல்லது தனிக்குறில் முதலில் நேரசையாகாது.

சீராவது—அந்தஅசைகள் சிறுபான்மை தனித்தும், பெரும்பான்மை இரண்டுமுதலாகத் தொடர்ந்தும் வருவது.

அது - ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்காம்.

ஓரசைச்சீராவது—நேரசையாயினும் நிரையசையாயினுந் தனித்து நின்று சீராய்வருவது. உதாரணவாய்பாடு: நேர்—நாள்; நிரை—மலர்.

இவை பெரும்பாலும்வெண்பாவினீற்றில்வரும். இவற்றை, அசைச்சீரென்பர்.

ஈரசைச்சீராவது—நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என இரண்டசை கூடிவரும் இந்நான்குமாம்.

(உ-ம்.) நேர்நேர்—தேமா	இவை மாச்சீர்.	நிரைநிரை—கருவிளம்	இவை விளச்சீர்.
நிரைநேர்—புளிமா		நேர்நிரை—கூவிளம்	

இவை - இயற்சீர்எனவும், அகவற்சீர்எனவும், ஆசிரியவுரிச்சீர் எனவும் படும்.

மூவசைச்சீராவது—மேற்சொல்லப்பட்ட ஈரசைச்சீர் நான்கின் இறுதியிலும் நேரசையும் நிரையசையுந் தனித்தனிகூடிவருதலா லாகிய எட்டாம்.

நேர்நேர்நேர் - தேமாங்காய்	காய்ச்சீர்.	நேர்நேர்நிரை - தேமாங்கனி	கனிச்சீர்.
நிரைநேர்நேர்- புளிமாங்காய்		நிரைநேர்நிரை- புளிமாங்கனி	
நிரைநிரைநேர்-கருவிளங்காய்		நிரைநிரைநிரை-கருவிளங்கனி	
நேர்நிரைநேர் -கூவிளங்காய்		நேர்நிரைநிரை -கூவிளங்கனி	

இவை - உரிச்சீர்எனவும், இவற்றுள் காய்ச்சீர்கள் - வெண்சீர்எனவும், கனிச்சீர்கள் - வஞ்சிச்சீர் எனவும் படும்.

நாலசைச்சீராவது—அம்மூவசைச்சீர் எட்டின் இறுதியிலும் நேரும் நிரையுந் தனித்தனி அடுத்து வருதலா லாகிய பதினாறுமாம். (உ-ம்.)

நேர்நேர்நேர்நேர் - தேமாந்தண்பூ	நேர்நேர்நேர்நிரை-தேமாந்தண்ணிழல்
நிரைநேர்நேர்நேர் - புளிமாந்தண்பூ	நிரைநேர்நேர்நிரை-புளிமாதண்ணிழல்
நிரைநிரைநேர்நேர்-கருவிளந்தண்பூ	நிரைநிரைநேர்நிரை-கருவிளநன்னிழல்
நேர்நிரைநேர்நேர் - கூவிளந்தண்பூ	நேர்நிரைநேர்நிரை-கூவிளநன்னிழல்
நேர்நேர்நிரைநேர் - தேமாநறும்பூ	நேர்நேர்நிரைநிரை -தேமாநறுநிழல்
நிரைநேர்நிரைநேர்- புளிமாநறும்பூ	நிரைநேர்நிரைநிரை-புளிமாநறுநிழல்
நிரைநிரைநிரைநேர் - கருவிளநறும்பூ	நிரைநிரைநிரைநிரை-கருவிளநறுநிழல்
நேர்நிரைநிரைநேர்- கூவிளநறும்பூ	நேர்நிரைநிரைநிரை-கூவிளநறுநிழல்

இவை, வெண்பாவில் வாரா. கலிப்பாவிலும், ஆசிரியப்பாவிலும் சிறுபான்மை குற்றியலிகரவுகரங்கள் வந்தவிடத்து வரும்; வஞ்சிப்பாவில் வருதல் பெரும்பான்மை.

தளையாவது—நின்றசீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியாயினும் ஒன்றாமலாயினுங் கூடிநிற்பது. ஒன்றுதலாவது - நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வருவது. ஒன்றாமையாவது - நேர்முன் நிரையும், நிரைமுன் நேரும் வருவது.

அத்தளை - நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை, கலித்தளை என ஏழுவகைப்படும்.

நேரொன்றாசிரியத்தளை-மாமுன்நேர்வருவது; நாள்முன்நேர்வருவதுமது.

நிரையொன்றாசிரியத்தளை - விளமுன் நிரை வருவது; மலர்முன் நிரை வருவதும் அது.

வெண்சீர்வெண்டளை-காய்முன் நேர்வருவது; பூமுன்நேர்வருவதும்அது.

இயற்சீர்வெண்டளை - மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவன; நாள்முன் நிரை வருவதும், மலர்முன் நேர்வருவதும் அது.

ஒன்றியவஞ்சித்தளை - கனிமுன் நிரைவருவது; நிழல்முன் நிரைவருவதும் அது.

ஒன்றாவஞ்சித்தளை-கனிமுன் நேர்வருவது; நிழல்முன்நேர்வருவதுமது.

கலித்தளை - காய்முன் நிரைவருவது; பூமுன் நிரைவருவதும் அது.

அடியாவது—மேற்சொல்லிய தளைகள் ஒன்றும்பலவும் அடுத்துவருவது.

அவ்வடி - குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும். குறளடி - இருசீராலும், சிந்தடி - முச்சீராலும், அளவடி - நாற்சீராலும், நெடிலடி-ஐஞ்சீராலும், கழிநெடிலடி - ஆறு முதலிய சீர்களாலும் வருவன. அளவடி, நேரடி யெனவும் படும்.

தொடையாவது—பலஅடிகளிலாயினும், பலசீர்களிலாயினும் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது.

அது - எதுகை, மோனை, முரண், அளபெடை, இயைபு என்பவற்றால் ஐந்துவகைப்படும். அந்தாதித்தொடை யென்றும் ஒன்று உண்டு.

எதுகைத்தொடையாவது—அடிதோறும் முதலெழுத்து அளவொத்துநிற்க இரண்டு முதலிய எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது. சிறுபான்மை இனவெழுத்துக்களும் எதுகையாம்.

மோனைத்தொடையாவது—பலஅடிகளிலாவது, ஓரடியின் பலசீர்களிலாவது முதலெழுத்து ஒற்றுமைப்பட்டுவரத் தொடுப்பது. அ ஆ ஐ ஔ, இ ஈ எ ஏ யா, உ ஊ ஒ ஓ, ஞ ந, ச த, ம வ இவை ஒன்றற்கொன்று மோனையாய் வருதலும் உண்டு. சிறுபான்மை இனவெழுத்துக்களும் மோனையாம். எல்லாச்சீர்களிலும் மோனை வந்தால், முற்றுமோனையெனப்படும்.

முரண்தொடையாவது—சொல்லாலும் பொருளாலும் மறுதலைப்படத் தொடுப்பது.

அளபுத்தொடையாவது—உயிரளபெடையாயினும் ஒற்றளபெடையாயினும் ஒன்றிவரத் தொடுப்பது.

இயைபுத்தொடையாவது—ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

அந்தாதித்தொடையாவது—முன்நின்றபாட்டின் இறுதி எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் பின்வரும்பாட்டின்முதலாகப் பாடுவது. இங்ஙனம் பாடும் நூலின் இறுதிச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமைவது, மண்டலித்தல் எனப்படும்.

இவ்வுறுப்புக்களைப்பெற்றுவருகிற பா-வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நால்வகைப்படும். 'மருட்பா' என்றும் ஒன்று உண்டு. இப்பா நான்கிற்கும்- துறை, தாழிசை, விருத்தம் என இனம் மூன்று. இவற்றுள்,

வெண்பாவின் இலக்கணம், பாரதவுரையின்முடிவிற் காட்டப்பட்டது.

ஆசிரியப்பாவெனினும், அகவற்பாவெனினும் ஒக்கும். இதில் பெரும்பாலும் ஈரசைச்சீர்கள் பயிலும்.

நேரிசையாசிரியப்பா - ஈற்றயலடி முச்சீரடியும், மற்றையடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாக வருவது.

நிலைமண்டிலவாசிரியப்பா-எல்லாவடிகளும் நாற்சீரடிகளாய் வருவது.

ஆசிரியவிருத்தம்- அளவொத்த கழிநெடிலடிநான்கினுல் வருவது. அளவொத்தலாவது - ஓரடியில் ஒருசீர் எந்தச்சீராக அமைந்துள்ளதோ, அச்சீர் அந்தச்சீராகவே எல்லாவடிகளிலும் அமைவது.

கலிப்பா - காய்ச்சீர்கள் மிகப்பெற்று நாற்சீரடிகளால் வரும்.

தரவுகொச்சகக்கலிப்பா - நாற்சீரடிகளால் தனித்துவருவது.

கலிவிருத்தம் - அளவொத்த அளவடி நான்கினுல் வருவது.

கலித்துறை - அளவொத்த நெடிலடி நான்கினுல் வருவது; இவை கலிநிலைத்துறையென்றும், காப்பியக்கலித்துறையென்றும், விருத்தக்கலித்துறையென்றும் வழங்கப்படும்.

கட்டளைக்கலித்துறை - பெரும்பாலும் முதல் நான்கு சீர்கள் ஈரசைச்சீர்களும் ஐந்தாஞ்சீர்விளங்காய்ச்சீருமான நெடிலடிநான்கு கொண்டு, அடிதோறும் வெண்டளைபிறழாமல் நேரசைமுதலாயின் ஓரடிக்கு ஒற்றொழிந்த எழுத்துப் பதினாறும், நிரையசைமுதலாயின் அவ்வெழுத்துப் பதினேழுமாய் ஏகாரவீற்றதாய் வருவது.

வஞ்சிப்பா - இருசீரடிகளாலும், முச்சீரடிகளாலும் வரும்.

வஞ்சிவிருத்தம் - முச்சீரடி நான்கு கொண்டு வரும்.

வஞ்சித்துறை - இருசீரடி நான்கு கொண்டு தனித்துவரும்.

இதுவே ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்தால், **வஞ்சித்தாழிசை** யெனப்படும்.

மருட்பா - வெண்பாவாகத் தொடங்கி ஆசிரியப்பாவாக முடிவது.

குற்றியலிகரம் குற்றியலுகரம் அளபெடை என்பவை, இடத்துக்கு ஏற்ப அலகுபெறுமலும் நிற்கும்; ஆய்தவெழுத்து-சிலவிடத்து உயிராகவும், சிலவிடத்து மெய்யாகவும் இடத்துக்குஏற்பக் கருதப்படும். ஐகாரஔகாரக் குறுக்கங்கள் இடத்துக்குஏற்பக் குற்றெழுத்தேபோலக் கொண்டு அலகிடப்படும். சிறுபான்மை மெய்யெழுத்துக்களை ஒழித்து அலகிடுதலும் உண்டு. அளபெடைகள், மாத்திரைக்கு ஏற்ப அலகிடப்படும்.

மற்றவை சிறுபான்மையன. அவற்றின் இலக்கணங்களையெல்லாம் தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் முதலிய பரந்தநூல்களிற் கண்டுகொள்க.

அணியிலக்கணச் சுருக்கம்.

அணியாவது - செய்யுட்கு அழகுசெய்துநிற்பது; [அலங்காரம்.] அது-சொல்லணியும், பொருளணியுமென இருவகைப்படும்.

யமகம், திரிபு,பிராசம் முதலாகச் சொற்பற்றி நிகழ்வன- **சொல்லணிகளாம்**; [சப்தாலங்காரம்.] யமகமெனினும், மடக்கெனினும் ஒக்கும்.

யமகமாவது - பலஅடிகளிலேனும் ஒருஅடியிற் பலஇடங்களிலேனும் வந்த எழுத்துத்தொடர்களே மீண்டும்வந்து பொருள் வேறுபடுவது.

திரிபாவது -ஒவ்வோரடியிலும்முதலெழுத்துவேறுபட்டிருக்க, இரண்டு முதலிய பலஎழுத்துக்கள் ஒன்றிநின்று பொருள்வேறுபடுவது.

பிராசமாவது - வந்த எழுத்துக்களே மீண்டும் வருவது.

பொருளணி - உவமையணிமுதலாகப் பலவாறு பொருள்பற்றி நிகழ்வனவாம்; [அர்த்தாலங்காரம்.]

உவமையணி -இரண்டுபொருள்களுக்கு ஒப்புமைவிளங்கச் சொல்வது; [உபமாலங்காரம்.] உபமானம் உபமேயம் பொதுத்தன்மை உவமவுருபு என்னும் நான்கும் விரிந்துநிற்பது - விரியுவமை: (உ-ம்.) 'அமுதம்போலு மின்சொல்'. பொதுத்தன்மையும் உவமவுருபும் தொக்குவரின், **தொகை யுவமை**யாம்: அமுதம்போலுஞ் சொல், அமுத வின்சொல், அமுதச் சொல் என்றாற்போலக் காண்க.

உலகத்தில் இல்லாத பொருளை உவமைகூறின் **இல்பொருளுவமையணி** யெனப்படும்; [அபூதோபமாலங்காரம்.] (உ-ம்.) சிங்கத்தை யானைகள் வளைந்தாற்போல, இராமனை அரக்கர் சூழ்ந்தனர்.

எடுத்துக்காட்டுவமையணி - உபமானத்தையும் உபமேயத்தையும் தனிவாக்கியங்களாக நிறுத்தி இடையில் உவமவுருபுகொடாமற் கூறுவது; [த்ருஷ்டாந்தாலங்காரம்.] (உ - ம்.) "அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே யுலகு".

இயைபின்மையணி - ஒருபொருளையே உபமானமும் உபமேயமுமாகச் சொல்வது; [அநந்வயாலங்காரம்.] (உ-ம்.) "தானே யுவமை தனக்கு".

எதிர்நிலையணி - பிரசித்தமான உபமான உபமேயங்களை மாற்றிச்சொல்வது ; [ப்ரதீபாலங்காரம்.] (உ - ம்.) முகம்போல மதி தோன்றிற்று.

உருவகவணி-உபமேயத்தினிடத்து உபமானத்தின் தன்மையை ஏற்றிக்கூறுவது; [ரூபகம்.] (உ-ம்.)சேனையாகிய கடலை வீமனாகிய மந்தரம் கலக்கியது. ஒருபகுதியை உருவகப்படுத்தி, மற்றொருபகுதியை உருவகப்படுத்தாது விடின், **ஏகதேசவுருவகமாம்**; (உ-ம்.) இவன் பகைவர்க்குச் சிங்கம்: இங்குப் பகைவரை யானையென்னாமை காண்க.

தற்குறிப்பேற்றவணி-இயற்கையாகவுள்ள ஒருபொருளினிடத்துக் கவிதனதுகற்பனையை ஏற்றிக் கூறுவது; [உத்ப்ரேக்ஷாலங்காரம்.](உ-ம்.) சீதையின்முகத்தினழகுக்குத் தோற்றுச் சந்திரன் மறைந்தான்.

உயர்வுநவிற்சியணி - ஒருபொருளினிடத்து மிகுதியான தன்மையைக் கூறுவது; [அதிசயோக்தி.] (உ-ம்.) 'இம்மாடம் சூரியனைத் தடுக்கின்றது' என்றாற்போலச் சம்பந்தமில்லாதிருக்கச் சம்பந்தங்கற்பித்துக் கூறின், **தொடர்புயர்வுநவிற்சியணி**யும் [சம்பந்தாதிசயோக்தி]; 'இராமனம்பும் அரக்கர் முடியும் ஒருங்குகீழ்விழுந்தன' என்றாற்போலக் காரணகாரியநிகழ்ச்சியை ஒருங்கேகூறினால் **முறையிலுயர்வுநவிற்சியணி**யும் [அக்ரமாதிசயோக்தி]; 'அம்புபடுமுன் தலை துணிந்தது' என்றாற்போலக் காரியத்தை முன்னும் காரணத்தைப் பின்னும் நிகழ்ந்தனவாகக் கூறினால் **மிகையுயர்வுநவிற்சியணி**யும் [அத்யந்தாதிசயோக்தி] ஆம்.

ஒப்புமைக்கூட்டவணி - பலபொருள்களைப் பொதுவாகிய ஒருதன்மையில் முடித்தல்; [துல்யயோகிதாலங்காரம்.] (உ-ம்.) சூரியனுதிக்கையில் அந்தணர்கைகளும் ஆம்பலும் குவிந்தன.

விளக்கணி - உபமானஉபமேயங்களை ஒருதன்மையில் முடித்தல்; [தீபகாலங்காரம்.] (உ-ம்.) நிலவால் சந்திரனும், புகழால் அரசனும் விளங்கும்.

"கையானு மொருசாபம் [சாபம்-வில்] காலானு மொருசாபம்" [சாபம்-அகலிகையின் சபிப்பு] என்றாற்போல, வந்தசொல்லே மீண்டும் வேறுபொருளில் வந்தால் **சொற்பின்வருநிலையும்** [சப்தாவ்ருத்திதீபகம்]; "பாண்டியனுமுதுகிட்டான் பாஞ்சாலர் புறமிட்டார்" என்றாற்போலச் சொல்வேறுபட்டு வந்தபொருளே மீண்டும்வந்தால் **பொருட்பின்வருநிலையும்** [அர்த்தாவ்ருத்திதீபகம்]; "மகிழ்ந்தனர் தேவர் மகிழ்ந்தனர் மாந்தர்" என்றாற்போல ஒருசொல் வந்தபொருளிலேயே மீண்டும்வந்தால் **சொற்பொருட்பின்வருநிலையும்** [உபயாவ்ருத்திதீபகம்] ஆம்.

காட்சியணி - உபமானஉபமேயங்களுக்கு ஐக்கியத்தைச் சொல்லுதல்; [நிதர்சநாலங்காரம்.] (உ-ம்.) கற்றதைமறந்து மேலுங்கற்றல், கைப்பொருளையிழந்து மேலும் ஈட்டுதல்; முகம் சந்திரனழகைக் கொண்டது என்றாற்போல உபமானஉபமேயங்களுள் ஒன்றில் மற்றொன்றின்தன்மையையேற்றிக்கூறுதலும், சூரியன்முன் இருள் அழிதல் வலியார்முன் எளியார்அழிவரென்பதைக் காட்டும் என்றாற்போலத் தன்செய்கையால் ஒருபொருளைத் தெரிவித்ததாக் கூறுதலும் இவ்வணியே.

பிறிதுமொழிதலணி - உபமானங் கூறியமாத்திரத்தால் உபமேயம் பெறவைத்தல் ; [அப்ரஸ்துதப்ரசம்ஸாலங்காரம்]. (உ - ம்.) "எலிப்பகை நாகமுயிர்ப்பக் கெடும்" இவ்வுபமானத்தால், வீரனொருவனெழுந்தமாத்திரத்தில் வீரரல்லாதார் பலர் அழிவரென்ற உபமேயந் தோன்றுதல் காண்க.

ஐயவணி - ஒப்புமையினால் ஒருப[illegible]தத்தைப் பலபொருளாகச் சந்தேகித்தல்; [சந்தேகாலங்காரம்.] (உ-ம்.) "காவியோ கயலோ வெனுங் கண்."

மயக்கவணி - ஒப்புமையினால் ஒருபொருளை மற்றொருபொருளாக அறிதல் ; [பிராந்திமதலங்காரம்]; (உ - ம்.) 'மகளிர்விழியை வண்டு பெடையென மருவும்'.

நினைப்பணி - ஒன்றைக்கண்டு ஒப்புமையினால் மற்றொருபொருளை நினைத்தல் ; [ஸ்மிருதிமதலங்காரம்.] (உ - ம்.) கமலமலர் கண்ட மனம் காதலிமுகங் கருதிற்று.

வேற்றுமையணி - உபமான உபமேயங்களுள் ஒன்றுக்கு விசேஷங் கூறுதல் [வ்யதிரேகாலங்காரம்]; (உ-ம்.) "திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்; திங்கள் மறுத்தாங்கும், சான்றோர் அதுதாங்கார்."

சிலேடையணி-ஒருதொடரில் பலபொருள்கள் விளங்க அமைத்துக் கூறுதல். 'செங்கரங்களால் இரவுநீக்கும்' இது - சிவந்தகிரணங்களால் (சூரியன்) இருளையொழித்தலையும், அழகியகைகளால் (அரசன்) தானஞ்செய்து ஏழைமையை ஒழித்தலையுங் குறிக்கும். செம்மை- ஒருநிறம், அழகு; கரம்-கிரணம், கை; இரவு - இராத்திரி, இரத்தல். இது-சொல் வெவ்வேறுவகையாய்ப் பிரியாததால், **செம்மொழிச்சிலேடை.** 'கண்ணும் மொழியும் கரும்பிணை யாம்' என்பதில், கரும்பிணை யென்பது- கரு பிணை எனப் பிரிந்து கரிய பெண்மான்விழியையும், கரும்பு இணை யெனப் பிரிந்து கருப்பஞ்சாற்றோடு ஒத்ததென்பதையுங் குறித்தலால், **பிரிமொழிச்சிலேடையாம்.**

பிறிதினவிற்சியணி - ஒன்றை இயல்பாகக் கூறாமல் வேறுவகையாற் கூறுவது; [பர்யாயோக்தாலங்காரம்.] (உ-ம்.) 'மகப்பெற்றான்' என்ற பொருளை 'புத் என்னும் நரகின் கொடுமையைக் கடந்தான்' என்றாற்போலச் சொல்வது.

வஞ்சப்புகழ்ச்சியணி - பழிப்பினாற் புகழ்ச்சியாவது, புகழ்ச்சியாற் பழிப்பாவது தோன்றக் கூறல்;[வ்யாஜஸ்துதி.](உ-ம்.) 'கங்காநதி மகாபாவிகளுக்கும் நற்கதிதருவது' என்றதில் பழிப்பாற் புகழ்ச்சியும், 'பெற்றகல்வியைக்

குருவுக்கே ஒப்பித்திட்டான்' என்றதில் புகழ்ச்சியாற் பழிப்புந் தோன்று மாறு அறிக.

முரண்விளைந்தழிவணி - மேல்நோக்கில் ஒன்றுக்கொன்று மாறுபா டாகவும், உள்நோக்கில் அம்மாறுபாடில்லாமலும் அமையக் கூறுதல்; [விரோதாபாஸாலங்காரம்.] (உ-ம்.) "செய்யாள் பலநலமுஞ் செய்வள்" என்பதில், 'செய்யாள்', 'செய்வள்' என்பன ஒன்றோடொன்று சொல்லால் முரண்படுதலும்; செய்யாள் என்பது இலக்குமியெனப் பொருள்பட்டு, அவள் எல்லாநன்மையுஞ் செய்வளெனக் கருத்தால் முரண்படாமையுங் காண்க.

நிரனிறையணி - வரிசையாகச்சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவைகளையும் அம்முறையே சொல்லுதல்; [யதாஸங்க்யாலங்காரம்: க்ரமாலங்காரம் எனவும்படும்.] (உ-ம்.) 'பகைவர்க்கும் நண்பர்க்குந் துன்பமும் இன்பமும் செய்வான்.'

ஒழித்துக்காட்டணி - ஒருபொருளை ஓரிடத்தில் இல்லை யென ஒழித்துக் காட்டுதல்; [பரிஸங்க்யாலங்காரம்.] (உ-ம்.) 'அயோத்தியில் மகளிர்சிலம்புகளே கால்களிற் பட்டு முறையிடுவன' என்றது, அவ்வூரில் ஒருவர்கால்களில் விழுந்து தம்குறையைக் கூறி முறையிடவேண்டியவர் இல்லை யென்ற பொருளைத் தருதல் காண்க.

தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி - ஒருபொருளைக்கூறியதனால் மற்றொருபொருள் எளிதிற் சித்திக்கக் கூறுவது; [காவ்யார்த்தாபத்தியலங்காரம்.] (உ-ம்.) இராவணனை வென்றிட்ட வாலியை வதைத்தவனுக்கு இராவணன் எவ்வளவு?

வேற்றுப்பொருள்வைப்பணி - பொதுப்பொருளால் சிறப்புப்பொருளையும் சிறப்புப்பொருளால் பொதுப்பொருளையும் சாதித்தல்; [அர்த்தாந்தரந்யாஸாலங்காரம்.] (உ-ம்.) 'அனுமன் கடல்கடந்தான், பெரியோர்க்கு அரியது யாது?'

தன்மைநவிற்சியணி - ஒருபொருளின் இயல்பைச் சமத்காரந்தோன்ற உள்ளபடி கூறுதல்; [ஸ்வபாவோக்தி.] (உ-ம்.) "தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும், ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும், தேயு நுண்ணிடை சென்று வணங்கவும், ஆய மங்கையர் அங்கை வருந்துவார்."

வீறுகோளணி - செல்வம்முதலியவற்றின் மிகுதியைக் கூறுவது; [உதாத்தாலங்காரம்.] (உ - ம்.) 'குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்'; இது, செல்வமிகுதிகூறியது.

பிறிநிலைநவிற்சியணி - ஒருபெயருக்கு இயல்பானபொருளொழிய மற்றொருபொருளைத் தந்துரைப்பது; [நிருக்தியலங்காரம்.] (உ - ம்.) 'வீமன் போரில் தோல்கள் தோல்களாயின' இதில் 'தோல்' என்ற யானைப்பெயரைக் கற்பனைப்பொருள்படக் கூறியவாறு காண்க.

வேறுபாடுவிளங்கும்படி பலஅணிகள் ஒருசெய்யுளிற் சேர்ந்துவருவது **சேர்வையணி** [ஸம்ஸ்ருஷ்டியலங்காரம்] எனவும், வேறுபாடுவிளங்காதபடி ஒன்றுக்கு மற்றது உறுப்பாகுமாறு பல அணிகள் ஒருசெய்யுளிற் கலந்து வருவது **கலவையணி** [ஸங்கராலங்காரம்] எனவும் படும். அவற்றை இடம் நோக்கி அறிக.

மற்றும் அணியிலக்கணப்பரப்பையெல்லாம் தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், வீரசோழியம், தண்டியலங்காரம் முதலிய விரிந்தநூல்களிற் கண்டுகொள்க.

RAMAYANA.

RAMA SITTING IN STATE.

